ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
தஞ்சம் அடைந்த நம் இராமானுசன் திருவடிகளே தஞ்சம்



**(எம்பெருமானார் – திருவரங்கம் பெரியகோயில்)**

**ஸ்ரீ பகவத் ராமானுஜர் அருளிச் செய்த**

# வேதாந்த ஸாரம்

**இதன்**

# தமிழ் மொழிபெயர்ப்பு

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
**ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்**
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே தஞ்சம்

# வேதாந்த ஸாரம் – ஓர் அறிமுகம்

ப்ரஹ்மஸூத்ரத்திற்கு இராமாநுசர் ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம் மற்றும் வேதாந்த ஸாரம் ஆகிய உரைகளை இயற்றியுள்ளார். இவற்றுள் ஸ்ரீபாஷ்யமானது மிகவும் விரிவான உரையாக அமைந்துள்ளது. வேதாந்தஸாரம் என்பது ஸ்ரீபாஷ்யத்தை மிகவும் சுருக்கமாகக் கொண்டதாகும். வேதாந்ததீபம் என்பது வேதாந்தஸாரம் மற்றும் ஸ்ரீபாஷ்யம் ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட விரிவைக் கொண்டதாகும். ஆகவே இங்கு ஸ்ரீபாஷ்யம் குறித்து முதலில் சுருக்கமாக உரைக்கப்படுகிறது.

## 1.1 ஸ்ரீபாஷ்யத்தின் அமைப்பு

ஸ்ரீபகவத் இராமானுசர் அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யம் என்பது ஸ்ரீவ்யாஸபகவான் என்று கொண்டாடப்படும் பாதராயண மஹரிஷி அருளிச்செய்த ப்ரஹ்மஸூத்ரத்திற்கான உரையாகும். எனவே முதலில் ப்ரஹ்மஸூத்ரம் என்றால் என்ன என்று அறிந்து கொள்வது அவசியமாகும்.

**ப்ரஹ்மம்** - "ப்ரஹ்மம்" என்னும் சொல் நான்முகனைக் குறிக்கவில்லை என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். ப்ரஹ்மம் என்பதற்கு "ஒப்புயர்வற்ற பொருள்" அல்லது "மற்ற அனைத்தையும் வளர்க்கின்ற பொருள்" என்று பொருளாகும். இத்தகைய ப்ரஹ்மம் என்பது உற்பத்தி மற்றும் அழிதல் இல்லாததும், மாற்றங்கள் அடையாததும், எந்தவிதமான களங்கங்களும் இல்லாததும், தானாகவே தன்னை வெளிப்படுத்தவல்லதும் ஆகும். இத்தகைய ப்ரஹ்மம் யார் என்பதை இராமானுசர் ஸ்ரீபாஷ்யத்தில், ப்ரஹ்ம சப்தேந ச ஸ்வபாவதோ நிரஸ்த நிகிலதோஷ: அநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுணகண: புருஷோத்தம: அபி கீயதே – இயல்பாகவே தோஷங்கள் ஏதும் அற்றவனும், அளவிட இயலாத உயர்ந்த எண்ணற்ற இனிமையான மங்களகரமான குணங்களைக் கூட்டமாக உடையவனும் ஆகிய புருஷோத்தமனே ப்ரஹ்மம் என்ற பதத்தால் கூறப்படுகிறான் – என்கிறார். இராமானுசருடைய ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம்

ஆகியவற்றின் மூலம், ப்ரஹ்மம் என்னும் சொல்லானது ஸ்ரீமந்நாராயணனைக் குறிக்கும் என்று அறியலாம்.

**அடிப்படை விஷயங்கள்** - நமது இந்து மதத்தில் ஆறு அடிப்படை அம்சங்கள் என்று உண்டு; அவையாவன ச்ருதி, ஸ்ம்ருதி, இதிகாசம், புராணம், ஆகமம் மற்றும் தரிசனம் என்பது ஆகும். நான்கு வேதங்களும், 108 உபநிஷத்துகளும் இணைந்து ச்ருதி என வழங்கப்படுகின்றன. ரிக் (ருக்), யஜுர், ஸாமம் மற்றும் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும் ஒவ்வொன்றும் ஸம்ஹிதை, ப்ராஹ்மணம், ஆரண்யகம், உபநிஷத் என்று நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சேர்த்து ச்ருதி எனப்படும். வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் கூறப்பட்டவைகளுக்கு மேலும் விளக்கம் அளிப்பதற்காகவும், அவற்றில் உள்ள கூற்றுகளை மெய்ப்பிப்பதற்காகவும், பல ரிஷிகளால் இயற்றப்பட்டவையே ஸ்ம்ருதிகள் ஆகும். உதாரணமாக – ஸ்ரீமத்பகவத்கீதை, மநு ஸ்ம்ருதி போன்றவை.

வேதங்களில் உள்ளவற்றைக் கண்டு அறியும் வழிமுறையே தரிசனம் எனப்படுகின்றது. இவை நாஸ்திக தரிசனம் மற்றும் ஆஸ்திக தர்சினம் எனப்படும். நாஸ்திக தரிசனங்கள் ஸர்வேச்வரனையும் வேதங்களையும் ஒப்புக் கொள்வதில்லை. இவை சார்வாகம், பௌத்தம், ஜைனம் போன்றவை ஆகும். இவற்றை பாஹ்யமதங்கள் அல்லது வேதபாஹ்ய மதங்கள் என்றும் கூறுவர். ஆஸ்திக தரிசனங்கள் ஸர்வேச்வரனையும் வேதங்களையும் ஒப்புக் கொள்கின்றன. இவை ஷட்தரிசனம் என்னும் பெயருக்கு ஏற்றாப்போல், ஆறுவிதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும், ஒவ்வொரு மஹரிஷியால் உருவாக்கப்பட்டது. அவையாவன : நியாயம் - கௌதம மஹரிஷி, வைசேஷிகம் - கணாத மஹரிஷி, ஸாங்க்யம் - கபில மஹரிஷி, யோகம் - பதஞ்ஜலி மஹரிஷி, மீமாம்ஸம் - ஜைமினி மஹரிஷி, வேதாந்தம் - பாதராயண மகரிஷி – என்பதாகும். இந்த ஆறுவிதமான தர்சனங்களில் முதல் ஐந்தும், ப்ரஹ்மமே அனைத்திற்கும் காரணம் (அதாவது படைத்தல், காத்தல், அழித்தல் முதலான செயல்பாடுகளுக்குக் காரணம்) என்று ஒப்புக்கொள்ளவில்லை. ஒவ்வொரு தத்துவமும், தாங்கள் கூறியவையே அனைத்தையும் இயக்குவதாக வாதம் புரிந்தன. ஆறாவது தத்துவமான வேதாந்தத்தின் மூலம் வேதவ்யாஸர் என்று கொண்டாடப்படும் பாதராயணர், வேதங்கள் அனைத்தாலும் போற்றப்படுவதும் அனைத்தையும் இயங்கச் செய்வதும் ப்ரஹ்மமே ஆகும் என்று நிரூபித்தார்.

இப்படிப்பட்ட ப்ரஹ்மத்தைக் குறித்து வேதங்கள் மூலமே மட்டுமே அறிய இயலும், அதிலும் குறிப்பாக வேதங்களுடைய தலைப்பாகம் என்று கொண்டாடப்படும் உபநிஷத்துக்கள் மூலமே அறிய இயலும். ஆனால் உபநிஷத்துக்கள் என்பவை ஸமுத்திரம் போன்று விரிந்து கிடப்பவை ஆகும். அவற்றை முழுவதுமாகக் கற்றறிந்து, அதன் பின்னர் ப்ரஹ்மத்தை அறிதல் என்பது மிகவும் அரிய செயலாகும். இதனை நன்குணர்ந்த பாதராயணர், உபநிஷத் என்னும் ஸமுத்திரத்தினைக் கடைந்து, ப்ரஹ்மஸூத்ரங்கள் என்னும் அமிர்தத்தை வெளிப்படுத்தினார். எனவே எந்தெந்த வேத வாக்கியங்களைக் கொண்டு ப்ரஹ்மத்தை அறிய இயலுமோ, அந்த வாக்கியங்களை அவற்றின் பொருளுடன் சுருக்கமாக உபதேசிப்பதே ப்ரஹ்மஸூத்ரங்கள் எனப்படுகின்றன.

இந்த ஸூத்ரங்களை நாம் புரிந்து கொள்வது என்பது மிகவும் சிரமமான செயலாகும் - காரணம், ஓரிரண்டு வரிகளாக உள்ள ஸூத்ரத்தில் மிகவும் ஆழமான பொருள்கள் பலவும் புதைந்து காணப்படும். எனவே இவற்றை உணர, நமக்கு உரைகள் தேவைப்படுகின்றன. இத்தகைய பெருமை மிக்க ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ஸ்ரீஆதிசங்கர பகவத்பாதர், ஸ்ரீபகவத் இராமானுசர், ஸ்ரீமத்வாசார்யர் போன்ற பலரும் உரை எழுதியுள்ளனர். இந்த உரையை பாஷ்யம் என்பர். இவற்றில் இராமானுசர் எழுதிய பாஷ்யத்தினை ஸ்ரீபாஷ்யம் என்று கூறுவர். சங்கரபாஷ்யம், மத்வபாஷ்யம் என்று அவரவர்களுடைய பெயர்களாலேயே அந்தந்த பாஷ்யங்கள் கூறப்படும்போது, இராமாநுஜருடைய பாஷ்யம் மட்டும், காஷ்மீரில் உள்ள சாரதாபீடத்தில் எழுந்தருளியுள்ள சரஸ்வதியால் ஸ்ரீபாஷ்யம் என்று பெயர் சூட்டப்பட்டதிலிருந்து இதன் பெருமை விளங்குகிறது.

- இரண்டு த்விகங்கள் – பூர்வ த்விகம், உத்தர த்விகம்
- நான்கு அத்யாயங்கள் – ஸமன்வயம், அவிரோதம், உபாஸனம், பல அத்யாயம்
- பாதங்கள் – ஒவ்வொரு அத்யாயமும் நான்கு பாதங்களாக உள்ளன. ஆக மொத்தம் 16 பாதங்கள்
- அதிகரணங்கள் – 156
- ஸூத்ரங்கள் – 545

### 1.2 ஸ்ரீபாஷ்யத்தில் உள்ள த்விகங்கள்

ஒரு த்விகம் என்பது இரண்டு அத்யாயங்கள் கொண்டதாக உள்ளது. நான்கு அத்யாயங்கள் கொண்ட ஸ்ரீபாஷ்யமானது இரண்டு த்விகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

- பூர்வத்விகம் - முதல் இரண்டு அத்யாயங்கள் மூலம் சேதந அசேதநங்களைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், ஜகத்காரணமாக உள்ளதும் ஆகிய ப்ரஹ்ம ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறது. முதல் இரண்டு அத்யாயங்கள் ஸித்தமாகவும், ஞானத்திற்கு விஷயமாக உள்ளதாகவும் இருக்கின்ற ப்ரஹ்மம் குறித்து உரைப்பதால் அவை ஸித்த த்விகம் அல்லது விஷய த்விகம் எனப்படும்.

- உத்தர த்விகம் – இறுதி இரண்டு அத்யாயங்கள் மூலம் ப்ரஹ்ம உபாஸனை மற்றும் பலன் ஆகியவை கூறபடுகின்றன. இவை ப்ரஹ்மத்தை அடைய ஸாத்யமாகவும், ஞானரூபமாகவும் உள்ள பக்தி உள்ளிட்டவை குறித்து உரைப்பதால் அவை ஸாத்ய த்விகம் அல்லது விஷயி த்விகம் எனப்படும்.

## 1.3 ஶ்ரீபாஷ்யத்தில் உள்ள அத்யாயங்கள்

ஶ்ரீபாஷ்யத்தில் நான்கு அத்யாயங்கள் உள்ளன. அவையாவன:

### 1.3.1 ஸமந்வய அத்யாயம்

ப்ரஹ்மமானது அனைத்து சித் மற்றும் அசித் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டது, ஞானம் மற்றும் ஆனந்த ஸ்வரூபமாக உள்ளது, எல்லையற்ற எண்ணற்ற குணங்களின் இருப்பிடமாக உள்ளது, அனைத்து ஜகத்திற்கும் ஒரே காரணமாக (உபாதான, நிமித்த, ஸஹகாரி) உள்ளது, அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளது என்றும்; இத்தகைய ப்ரஹ்மத்தை வேதாந்தங்கள் மூலம் மட்டுமே அறிய இயலும் என்றும் நிரூபிக்கப்படுகிறது.

வேதாந்தத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து காரண வாக்கியங்களும் ப்ரஹ்மத்திடம் சரியாகச் சென்று ஒடுகுவதால் இந்த அத்யாயம் “ஸமந்வய அத்யாயம்” எனப் பெயர் பெற்றது.

### 1.3.2 அவிரோத அத்யாயம்

முதல் அத்யாயத்தில் கூறப்பட்ட கருத்தான “ப்ரஹ்மமே அனைத்திற்கும் காரணப்பொருளாக உள்ளது, இந்த ஜகத்தானது கார்யப்பொருளாக உள்ளது” என்னும் ஸித்தாந்தங்கள் எந்தவிதத்திலும், எந்த ப்ரமாணங்களாலும், எந்த யுக்திகளாலும், எந்த

ந்யாயத்தாலும் தள்ளப்பட இயலாதது என்று நிரூபிக்கப்படுகிறது. மேலும் இந்தக் கருத்துக்களில் எழுகின்ற அனைத்து ஐயங்களும் நீக்கப்படுகின்றன. இதில் வேதாந்தத்திற்கு முரணாக உள்ள அனைத்து மதங்களும் தள்ளப்படுகின்றன.

கடந்த அத்யாயத்தில் கூறப்பட்ட கருத்துக்களில் ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸம் போன்ற ப்ரமாணங்களுக்குள் எந்தவிதமான முரண்பாடுகளும் (விரோதம்) உண்டாகவில்லை என்று கூறுவதால், இப்பெயர் பெற்றது.

### 1.3.3 உபாஸன அத்யாயம்

ப்ரஹ்மத்தை அடைவதற்கான உபாயம் ஆராயப்படுகிறது. ஜீவாத்மா தோஷம் உள்ளவன், ப்ரஹ்மம் தோஷம் அற்றது, ப்ரஹ்ம உபாஸனை, உபாஸனையின் அங்கங்கள் போன்ற பலவும் கூறப்படுகின்றன.

### 1.3.4 பல அத்யாயம்

உபாஸனம் செய்யும் முறை, அர்ச்சிராதி மார்க்கம் குறித்த விளக்கம், மோக்ஷத்தின் பலன் ஆகியவை கூறப்படுகின்றன. ப்ரஹ்மத்தை அடைதல் என்பது நான்கு நிலைகளில் உண்டாவதை இந்த அத்யாயத்தில் உள்ள நான்கு பாதங்கள் கூறுகின்றன. அவையாவன முறையே கர்மங்கள் விலகுதல், ஸ்தூல சரீரம் நீங்குதல், ஸூக்ஷ்ம சரீரம் நீங்குதல், ப்ரஹ்மத்தை அடைதல் என்பதாகும்.

## 1.4 ஸ்ரீபாஷ்யத்தில் உள்ள பாதங்களும் அதிகரணங்களும்

ஸ்ரீபாஷ்யத்தில் பதினாறு பாதங்கள் உள்ளன. அவை பல்வேறு அதிகரணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான விளக்கங்கள் அடுத்து தரப்பட்டுள்ளன. முதலில் அதிகரணம் என்னும் சொல்லுக்கான பொருளை அறியவேண்டும். அதிகரணம் என்ற சொல்லுக்கு “இடம்” என்று பொருள் கொள்வர்; குறிப்பாக “நீதிமன்றம்” என்றே பொருள் கொள்வர். ப்ரஹ்மஸூத்ரமானது உபநிஷத்துக்களில் உள்ள வாக்கியங்களுடைய ஆழ்பொருள் இன்னது என பலவிதமான ந்யாயங்கள் மூலம் உணத்துவதாக உள்ளது. அந்த உபநிஷத் வாக்கியங்களையும், அவற்றுக்கான ஆழ்பொருளையும் கூறும் இடமாக உள்ளது. இது ஐந்து பகுதிகள் கொண்டதாக இருக்கும். அவையாவன:

1. விஷயம் – உபநிஷத்தின் எந்த வாக்கியத்தின் ஆழ்பொருள் நிர்ணயம் செய்யப்படுகிறதோ அந்த வாக்கியம்
2. ஸம்சயம் (சந்தேகம்) – அந்த வாக்கியத்தின் ஆழ்பொருள் இன்னது என்று நிர்ணயிக்கும் முன்பாக உண்டாகும் சந்தேகம்
3. ஸங்கதி – உபநிஷத் வாக்கியத்தின் ஆழ்பொருள் இன்னது என்று நிர்ணயிக்கும்போது, உபநிஷத் மற்றும் அந்த ஸூத்ரம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள ஸம்பந்தம்
4. பூர்வபக்ஷம் - உபநிஷத் வாக்கியத்தின் ஆழ்பொருள் இன்னது என்று நிர்ணயிக்கும்போது, அதன் உண்மையான ஆழ்பொருளை ஆராயாமல், மேலோட்டமாக முதன்முதலாகத் தோன்றுகின்ற கருத்து
5. ஸித்தாந்தம் – பின்வரும் ஆறு தாத்பர்யங்கள் மூலமாக இறுதியான முடிவை நிர்ணயித்தல் ஆகும்:
   - ஆராயப்படும் உபநிஷத் வாக்கியத்தின் தொடக்கம் (உபக்ரமம்) மற்றும் முடிவு (உபஸம்ஹாரம்)
   - மீண்டும் மீண்டும் உரைத்தல் (அப்யாஸம்)
   - இந்த முடிவானது சாஸ்த்ரத்தால் மட்டுமே உண்டாகும் என்னும் உறுதி (அபூர்வதை)
   - இதன் மூலம் உண்டாகும் பலன்
   - தீர்மானிக்கப்பட்ட விஷயத்தைக் குறித்துப் புகழ்தல் (அர்த்தவாதம்)
   - இதற்கான காரணம், ப்ரமாணம் போன்றவை (உபபத்தி)

### 1.4.1 முதல் அத்யாயம்

#### 1.4.1.1 முதல் பாதம் – அயோக வ்யவச்சேத பாதம் (அஸ்பஷ்டதர ஜீவாதி லிங்க வாக்ய விசாரம்)

“ஓர் இடத்தில் ஒரு பொருள் அல்லது ஒரு தன்மை இல்லை” என்று கூறுபவர்களை நோக்கி, “அங்கு அந்தப் பொருள் அல்லது தன்மை உள்ளது” என்று நிரூபிப்பதாகும். உதாரணமாக “ப்ரஹ்மம் ஜகத்காரணம் இல்லை” என்று கூறுபவர்களிடம் “ப்ரஹ்மமே ஜகத்காரணம் ஆகும்” என்று நிரூபிப்பதாகும். “அயோகம்” என்றால் “ஸம்பந்தம் அற்ற நிலை”; அதாவது, “ப்ரஹ்மத்திற்கு ஜகத்காரணத்துடன் ஸம்பந்தம் அற்ற நிலை” என்று

கருத்து. “வ்யவச்சேதம்” என்றால் இந்தக் கருத்தைத் தள்ளுதல் அல்லது தவிர்த்தல்; அதாவது, “ப்ரஹ்மத்திற்கு ஜகத்காரணத்துடன் ஸம்பந்தம் அற்ற நிலை” என்பது இல்லை; ஆகவே, ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்று இந்தப் பாதத்தில் நிரூபிக்கப்படுகிறது.

இந்தப் பாதத்தில் எடுக்கப்பட்ட வேதாந்த வாக்கியங்கள், “ப்ரக்ருதியும் ஜீவாத்மாவும் ஜகத்காரணம்” என்று கூறுவது போன்று அமைந்துள்ளதும், ஆனால் இந்தக் கருத்தும் மிகவும் தெளிவில்லாமல் காணப்படுவதாகவும் உள்ள வாக்கியங்கள் ஆகும். இந்தப் பாதத்தில் பதினோரு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **ஜிஜ்ஞாஸா அதிகரணம் (1 ஸூத்ரம்):** வேதாந்தவரிகள் அனைத்தும் ப்ரஹ்மத்தைக் கூறுவதால், ப்ரஹ்மத்தைக் குறித்த இந்தச் சாஸ்திரம் தொடங்குவதற்கு ஏற்றதே என்று நிரூபிக்கப்படுகிறது
2. **ஜந்மாதி அதிகரணம் (1 ஸூத்ரம்):** இந்த ஜகத்தை படைத்தல், காத்தல், அழித்தல் என்ற செயல்களைச் செய்யும் தன்மைகள் மூலமாக ப்ரஹ்மத்தை அறியவேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
3. **சாஸ்த்ர யோநித்வ அதிகரணம் (1 ஸூத்ரம்):** வேத வேதாந்தங்கள் மூலம் மட்டுமே ப்ரஹ்மமானது அறியத்தக்கதாகும் என்று நிரூபிக்கப்படுகிறது
4. **ஸமந்வய அதிகரணம் (1 ஸூத்ரம்):** சாஸ்த்ரமானது ப்ரஹ்மத்தை புருஷார்த்தமாகவே உணர்த்துகிறது என்று நிரூபிக்கப்படுகிறது
5. **ஈக்ஷதி அதிகரணம் (8 ஸூத்ரங்கள்):** ஸத் என்று கூறப்படுகின்ற ஜகத்காரணம் மூலப்ரக்ருதி அல்ல; அது பரம்பொருளான நாராயணனையே குறிக்கும் என்று நிரூபிக்கப்படுகிறது
6. **ஆநந்தமய அதிகரணம் (8 ஸூத்ரங்கள்):** தைத்திரீய ஆனந்தவல்லியில் “ஆனந்தமயன்” என்று கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
7. **அந்த: அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** சூர்யமண்டலத்தின் உள்ளேயும், கண்களின் உள்ளேயும் இருப்பவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
8. **ஆகாஶ அதிகரணம் (1 ஸூத்ரம்):** சாந்தோக்ய உபநிஷத் வாக்கியத்தில் ஆகாசம் என்று கூறப்படுவது பரப்ரஹ்மமே ஆகும் என்று நிரூபிக்கப்படுகிறது

9. **ப்ராண அதிகரணம் (1 ஸூத்ரம்):** சாந்தோக்ய உபநிஷத் வாக்கியத்தில் ப்ராணன் என்று கூறப்படுவதும் பரப்ரஹ்மமே என்று நிரூபிக்கப்படுகிறது
10. **ஜ்யோதி: அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** சாந்தோக்ய உபநிஷத் வாக்கியத்தில் உள்ள ஜ்யோதி என்ற பதமும் ப்ரஹ்மத்தையே குறிக்கும் என்று நிரூபிக்கப்படுகிறது
11. **இந்த்ரப்ராண அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** ப்ராணன், இந்த்ரன் என்று கௌஷீதகீ உபநிஷத்தில் கூறப்படுவது ஜீவன் மட்டும் அல்ல; அவற்றைச் சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மமே ஆகும் என்று நிரூபிக்கப்படுகிறது

**1.4.1.2 இரண்டாம் பாதம் – அந்யயோக வ்யவச்சேத பாதம் (அஸ்பஷ்ட ஜீவாதி லிங்க வாக்ய விசாரம்)**

“ஒரு பொருள் அல்லது ஒரு தன்மை பல இடங்களிலும் உள்ளது” என்று கூறுபவர்களை நோக்கி, “அந்தப் பொருள் அல்லது தன்மை ஓர் இடத்தில் மட்டுமே உள்ளது” என்று நிரூபிப்பதாகும். உதாரணமாக “ஜகத்திற்கு பலவும் காரணம்” என்று கூறுபவர்களிடம் “ஜகத்திற்கு ப்ரஹ்மம் மட்டுமே காரணம்” என்று நிரூபிப்பதாகும். அதாவது “ப்ரஹ்மத்தைத் தவிர உள்ள மற்றவை ஜகத்காரணம் ஆகலாமோ என்றால், அது இயலாது” என்று கூறுவதே இந்தப் பாதமும் அடுத்த இரண்டு பாதங்களும் ஆகும்.

“அந்யயோகம்” என்றால் “மற்றவற்றில் ஸம்பந்தம் உள்ள நிலை”; அதாவது, “ப்ரஹ்மம் நீங்கலாக உள்ள மற்றவற்றுக்கு ஜகத்காரணத்துடன் ஸம்பந்தம் உள்ள நிலை” என்று கருத்து. “வ்யவச்சேதம்” என்றால் இந்தக் கருத்தைத் தள்ளுதல் அல்லது தவிர்த்தல்; அதாவது, “ப்ரஹ்மம் நீங்கலாக உள்ள மற்றவற்றுக்கு ஜகத்காரணத்துடன் ஸம்பந்தம் உள்ள நிலை” என்பது இல்லை; ஆகவே, ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்று இந்தப் பாதத்தில் நிரூபிக்கப்படுகிறது.

இந்தப் பாதத்தில் எடுக்கப்பட்ட வேதாந்த வாக்கியங்கள், “ப்ரக்ருதியும் ஜீவாத்மாவும் ஜகத்காரணம்” என்று கூறுவது போன்று அமைந்துள்ளதும், ஆனால் இந்தக் கருத்தும் தெளிவில்லாமல் காணப்படுவதாகவும் உள்ள வாக்கியங்கள் ஆகும்.

இந்தப் பாதத்தில் ஆறு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **ஸர்வத்ர ப்ரஸித்தி அதிகரணம் (8 ஸூத்ரங்கள்):** சாந்தோக்ய உபநிஷத் (3-14-1) – ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம – இவை அனைத்தும் ப்ரஹ்மம் - என்பதில் கூறப்படும் ப்ரஹ்மம் என்பது பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
2. **அத்தா அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** கட. (2-24) - யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் சேபே பவத ஓதந: | ம்ருத்யுர் யஸ்ய உபஸேசநம் க இத்தா வேத யத்ர ஸ: - யாருக்கு அந்தணர் மற்றும் க்ஷத்ரியர் ஆகிய இருவரும் உணவாகிறார்களோ, யாருக்கு யமன் ஊறுகாய் ஆகிறானோ, அவன் எங்கு உள்ளான் என்று யார் அறிவார் – என்று கூறுவதற்கு ஏற்ப, அனைத்து சராசரங்களையும் உண்பவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
3. **அந்தர அதிகரணம் (6 ஸூத்ரங்கள்):** சாந். (4-15-1) - ய ஏஷோ அக்ஷிணி புருஷோ த்ருச்யதே ஏஷ ஆத்மேதி ஹோவாச ஏதத் அம்ருதம் அபயமேதத் ப்ரஹ்ம – கண்ணில் எந்த ஒரு புருஷன் காணப்படுகிறானோ அவனே ஆத்மா என்று, அம்ருதம் என்றும், அபயம் என்றும், ப்ரஹ்மம் என்றும் கூறினார் – என்பதில், கண்ணின் உள்ளே இருப்பவனாகக் கூறப்படுவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
4. **அந்தர்யாமி அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** ப்ரு. (3-7-23) - ஏஷ த ஆத்மா அந்தர்யாமி அம்ருத: - உனக்கு ஆத்மாவாகவும், மரணம் அற்றவனாகவும் உள்ள அவனே அந்தர்யாமி ஆவான் – என்ற வாக்கியத்தில் அந்தர்யாமியாக ஓதப்படுபவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
5. **அத்ருச்யத்வாதி குணக அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** முண். (1-1-5, 6) – அத பரா யயா தத் அக்ஷரம் அதிகம்யதே | யத் தத் அத்ரேச்யம் அக்ராஹ்யம் அகோத்ரம் அவர்ணம் அசக்ஷு: ச்ரோத்ரம் தத் அபாணிபாதம் | நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் தத் அவ்யயம் யத் பூதயோநி பரிபச்யந்தி தீரா: - பரவித்யை (உயர்ந்த வித்யை) மூலம் அடுத்தபடியாக அக்ஷரம் என்ற அழிவற்ற அந்தப் பொருள் அடையப்படுகிறது. அது காணப்படாதது, அறியப்படாதது, கோத்ரம் அற்றது, வர்ணம் அற்றது, கண் மற்றும் காது அற்றது, தலைமையாக உள்ளது, எங்கும் பரவி உள்ளது, மிகவும் நுண்ணியது, அழிவற்றது, பூதங்களுக்குக் காரணமாக உள்ளது, இதனை அனைத்தும் அறிந்தவர்கள் காண்கிறார்கள் – என்பதில் அக்ஷரம் எனப்படுபவன் பரமாத்மாவே என்று ஆராயப்படுகிறது

6. **வைச்வாநர அதிகரணம் (9 ஸூத்ரங்கள்):** சாந். (5-11-6) – ஆத்மாநம் ஏவ இமம் வைச்வாநரம் ஸம்ப்ரத்யத்யேஷி தமேவ நோ ப்ரூஹி - இப்போது நீவிர் இந்த வைச்வாநராத்மாவை உபாஸிக்கிறீர். அவனைக் குறித்து எங்களுக்கு உரைப்பீராக - என்று தொடங்கி, சாந். (5-18-1) - யஸ்த்வேதமேவம் ப்ராதேச மாத்ரமபி விமாநமாத்மாநம் வைச்வாநரம் அபாஸ்தே - எங்கும் இருப்பதன் காரணமாக அளவற்றவனாக உள்ள வைச்வாநராத்மாவை, ஓரிடத்தில் உள்ளவன் என்று யார் ஒருவன் உபாஸிக்கிறானோ – என்று முடியும் பகுதியில் கூறப்படும் வைச்வாநரன் என்பவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது

**1.4.1.3 மூன்றாம் பாதம் – அந்யயோக வ்யவச்சேத பாதம் (ஸ்பஷ்ட ஜீவாதி லிங்க வாக்ய விசாரம்)**

இரண்டாவது பாதம் போன்றே “ப்ரஹ்மம் நீங்கலாக உள்ள மற்றவற்றுக்கு ஜகத்காரணத்துடன் ஸம்பந்தம் உள்ள நிலை” என்பது இல்லை; ஆகவே, ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்று இந்தப் பாதத்தில் நிரூபிக்கப்படுகிறது. இந்தப் பாதத்தில் எடுக்கப்பட்ட வேதாந்த வாக்கியங்கள், “ப்ரக்ருதியும் ஜீவாத்மாவும் ஜகத்காரணம்” என்று கூறுவது போன்று அமைந்துள்ளதும், இந்தக் கருத்து தெளிவாகக் காணப்படுவதாகவும் உள்ள வாக்கியங்கள் ஆகும்.

இந்தப் பாதத்தில் பத்து அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **த்யுப்வாதி அதிகரணம் (6 ஸூத்ரங்கள்):** முண். (2-2-5) – யஸ்மிந் த்யௌ: ப்ருதிவீ ச அந்தரிக்ஷமோதம் மந: ஸஹ ப்ராணைச்ச ஸர்வை: | தமேவைகம் ஜாநதாத்மாநம் அந்யா வாசோ விமுஞ்சத அம்ருதஸ்யைஷ ஸேது: - யாரிடம் தேவலோகம், பூமி, அந்தரிக்ஷம், மனம், அனைத்து இந்த்ரியங்கள் ஆகியவை சேர்ந்துள்ளனவோ, அந்த ஆத்மா ஒருவனையே அறிவீர்களாக; மற்ற சொற்களைக் கைவிடுவீர்களாக; அவனே மோக்ஷத்திற்கு வழி ஆவான் – என்பதில் கூறப்பட்ட த்யுலோகம் (ஸ்வர்கம்), பூமி போன்றவற்றுக்கு இருப்பிடமாகக் கூறப்பட்டவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது

2. **பூமா அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** சாந். (7-24-1) – யத்ர நாந்யத் பஶ்யதி நாந்யத் ச்ருணோதி நாந்யத் விஜாநாதி ஸ பூமா | அத யத்ர அந்யத் பஶ்யதி அந்யத் ச்ருணோதி அந்யத் விஜாநாதி ததல்பம் - எந்த ஒன்றை அறியும்போது வேறு ஒன்றைக் காண்பதும், கேட்பதும், அறிவதும் இல்லையோ அதுவே பெரியதாகும் (பூமா); எதனை அறியும்போது மற்றொன்றையும் காண்பதும், கேட்பதும், அறிவதும் உண்டோ அது சிறியதாகும் – என்பதில் உள்ள "பூமா" என்ற பதம் பரமாத்மாவையே குறிக்கிறது என்று நிரூபிக்கப்படுகிறது
3. **அக்ஷர அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** ப்ரு. (3-8-8) - ஸ ஹோவாச ஏதத்வை தத் அக்ஷரம் கார்க்கி! ப்ராஹ்மணா அபிவதந்தி அஸ்தூலம் அநணு அஹ்ரஸ்வம் அதீர்க்கம் அலோஹிதம் அஸ்நேஹம் அமச்சாயம் - (யாஜ்ஞவல்க்யர் கார்க்கியிடம்) இதனையே ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் அக்ஷரம் என்று கூறுகிறார்கள். அது ஸ்தூலமானதும் அல்ல, ஸூக்ஷ்மமானதும் அல்ல, குட்டையானதும் அல்ல, நீளமானதும் அல்ல, சிவப்பானதும் அல்ல, பசையானதும் அல்ல, நிழலுடன் கூடியதும் அல்ல – என்பதில் மூலப்ரக்ருதிக்கு ஆதாரமாகக் கூறப்படும் அக்ஷரம் என்பது பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
4. **ஈக்ஷதி கர்ம அதிகரணம் (1 ஸூத்ரம்):** ப்ர. (5-5) – ய: புநரேதம் த்ரிமாத்ரேண ஓம் இதி ஏதேந ஏவ அக்ஷரேண பரம் புருஷம் அபித்யாயீத ஸ தேஜஸி ஸூர்யே ஸம்பந்நோ யதா பாதோதர: த்வச்சா விநிர்முச்யதே ஏவம் ஹ வை ஸ பாப்மநா விநிர்முக்த: ஸ ஸாமபி: உந்நீயதே ப்ரஹ்மலோகம் ஸ ஏதஸ்மாத் ஜீவநாத் பராத்பரம் புரிசயம் புருஷம் ஈக்ஷதே - மூன்று மாத்திரைகள் கொண்டதான இந்த "ஓம்" என்ற அக்ஷரத்தை மட்டுமே கொண்டு யார் ஒருவன் இந்தப் பரமபுருஷனை த்யானம் செய்கிறானோ, அவன் மிகுந்த தேஜஸ் கொண்ட சூரியனை அடைந்தவனாக, பாம்பு தனது சட்டையை உரிப்பது போன்று பாபத்திலிருந்து நீங்கப் பெற்றவனாக, ஸாமகானம் செய்பவர்களால் ப்ரஹ்மலோகத்தில் சேர்க்கப்பட்டவனாக உள்ளான். இந்த்ரியங்களைக் காட்டிலும் உயர்ந்த ஜீவாத்மாவைக் காட்டிலும் உயர்ந்தவனும், இதயத்தில் உள்ளவனும் ஆகிய புருஷனைக் காண்கிறான் – என்பதில் ஞானிகளால் காணப்படுவனாகக் கூறப்படும் புருஷன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
5. **தஹர அதிகரணம் (10 ஸூத்ரங்கள்):** சாந். (8-1-1) – அத யதிதம் அஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம தஹர: அஸ்மிந் அந்தர ஆகாச: தஸ்மிந்

யதந்தஸ் தத் அந்வேஷ்டவ்யம் தத்வாவ விஜிஜ்ஞாஸிதவ்யம் - ப்ரஹ்மத்தின் இருப்பிடமான இந்தச் சரீரத்தில், தாமரை போன்று சிறியதான (இதயம்) இடம் உள்ளது. அதற்குள் ஸூக்ஷ்மமான ஆகாசம் உள்ளது. அதற்குள் இருப்பதே தேடப்பட்டு, புரிந்து கொள்ள வேண்டியதாகும் – என்பதில் தஹரம் என்னும் இடத்தில் (ஆகாசத்தில்) உள்ளவன் பரமாத்மாவே என்று நிரூபிக்கப்படுகிறது

6. **ப்ரமித அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** கட. (4-12) - அங்குஷ்டமாத்ர: புருஷோ மத்ய ஆத்மநி திஷ்டதி | ஈசோநோ பூதபவ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே || ஏதத்வை தத் – எந்தப் புருஷன், கட்டைவிரல் அளவு கொண்டவனாக ஆத்மாவின் நடுவில் உள்ளானோ, இறந்தகாலம் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றை நியமித்தபடி உள்ளானோ, அவ்விதம் அமர்வதில் எந்த ஒரு வெறுப்பும் இன்றி உள்ளானோ, அவனே அடையப்பட வேண்டியவன்; கட. 4-13, 6-17) – ஆகியவற்றில் இதயத்தினுள் கட்டைவிரல் அளவுள்ளவனாகக் கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
7. **தேவதா அதிகரணம் (5 ஸூத்ரங்கள்):** தேவர்களுக்கும் ப்ரஹ்ம உபாஸனத்தில் அதிகாரம் உண்டு என்று நிரூபிக்கப்படுகிறது
8. **மது அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** ஆதித்யன் போன்றவர்களுக்கு சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்படும் மதுவித்யை முதலான ப்ரஹ்மவித்யைகளில் அதிகாரம் உண்டு என்று நிரூபிக்கப்படுகிறது
9. **அபசூத்ர அதிகரணம் (7 ஸூத்ரங்கள்):** சூத்ரர்களுக்கு ப்ரஹ்மவித்யைகளில் அதிகாரம் இல்லை என்று நிரூபிக்கப்படுகிறது
10. **அர்தாந்தரத்வ அதி வ்யபதேஸ அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** சாந். (8-14-1) - ஆகாசோ ஹ வை நாம ரூபயோர் நிர்வஹிதா தே யதந்தரா தத் ப்ரஹ்ம தத் அம்ருதம் ஸ ஆத்மா - ஆகாசம் என்பது பெயர் மற்றும் ரூபங்களை ஏற்படுத்துகிறது. இவை இன்றி உள்ளது எதுவோ அதுவே ப்ரஹ்மமாகவும், அமிர்தமாகவும், ஆத்மாவாகவும் உள்ளது – என்பதில் பெயர் மற்றும் உருவங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தியவன் பரமாத்மா என்பதால், ஆகாசம் என்று கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது

## 1.4.1.4 நான்காம் பாதம் – அந்யயோக வ்யவச்சேத பாதம் (ஸ்பஷ்டதர ஜீவாதி லிங்க வாக்ய விசாரம்)

இரண்டாவது பாதம் போன்றே “ப்ரஹ்மம் நீங்கலாக உள்ள மற்றவற்றுக்கு ஜகத்காரணத்துடன் ஸம்பந்தம் உள்ள நிலை” என்பது இல்லை; ஆகவே, ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்று இந்தப் பாதத்தில் நிரூபிக்கப்படுகிறது. இந்தப் பாதத்தில் எடுக்கப்பட்ட வேதாந்த வாக்கியங்கள், “ப்ரக்ருதியும் ஜீவாத்மாவும் ஜகத்காரணம்” என்று கூறுவது போன்று அமைந்துள்ளதும், இந்தக் கருத்து மிகவும் தெளிவாகக் காணப்படுவதாகவும் உள்ள வாக்கியங்கள் ஆகும். இந்தப் பாதத்தில் எட்டு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **ஆநுமாநிக அதிகரணம் (7 ஸூத்ரங்கள்):** கட. (3-10, 11) – இந்த்ரியேப்ய: பரா ஹி அர்த்தா: அர்தேப்யச்ச பரம் மந: | மநஸஸ்து பரா புத்திர்புத்தே: ஆத்மா மஹாந் பர: || மஹத: பரம் அவ்யக்தம் அவ்யக்தாத் புருஷ: பர: | புருஷாந் ந பரம் கிஞ்சித் ஸா காஷ்டா ஸா பரா கதி: - இந்த்ரியங்களைக் காட்டிலும் உயர்ந்தவை அவற்றால் அறியப்படும் விஷயங்கள், அந்த விஷயங்களைக் காட்டிலும் உயர்ந்தது மனம், மனதைக் காட்டிலும் உயர்ந்தது புத்தி (அறிவு), புத்தியைக் காட்டிலும் உயர்ந்தது ஆத்மாவாகிய மஹாந் (மஹத்), மஹானைக் காட்டிலும் பெரியது அவ்யக்தம், அவ்யக்தத்தைக் காட்டிலும் உயர்ந்தவன் புருஷன், புருஷனைக் காட்டிலும் உயர்ந்தது ஏதும் இல்லை; புருஷனே உயர்ந்த எல்லையாகவும், மேலான கதியாகவும் உள்ளான் – என்பதில் ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொள்ளாத மூலப்ரக்ருதியானது (ஜகத்தின்) காரணப்பொருள் என்று கூறப்படவில்லை என்று நிரூபிக்கப்படுகிறது
2. **சமஸ அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** ச்வே. (4-5) – அஜாம் ஏகம் லோஹித சுக்ல க்ருஷ்ணாம் பஹ்வீ: ப்ரஜா: ஸ்ருஜமாநாம் ஸரூபா: | அஜோ ஹி ஏகோ ஜுஷமாண: அநுசேதே ஜஹாதி யேநாம் புக்த போகாம் அஜ: அந்ய: - சிவப்பு (ரஜஸ்), வெளுப்பு (ஸத்வம்) மற்றும் கறுப்பு (தமஸ்) ஆகிய மூன்று நிறங்களை (குணங்கள்) கொண்டதாகவும், தன்னைப் போன்றே மேலும் பல ப்ரஜைகளை உண்டாக்குவதாகவும், பிறப்பற்றதாகவும் உள்ள ஒன்றுடன் (ப்ரக்ருதி), பிறப்பற்ற ஒருவன் (ஜீவாத்மா) மகிழ்ச்சியுடன் கூடியுள்ளான். தன்னால் அனுபவிக்கப்பட்ட

இந்த ப்ரக்ருதியை, மற்றொருவன் (முக்தாத்மா) விட்டுச் செல்கிறான் – என்பதில் உள்ள “அஜா” என்ற சொல்லால், ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொண்ட மூலப்ரக்ருதியே கூறப்பட்டது என்று நிரூபிக்கப்படுகிறது

3. **ஸங்க்ய உபஸங்க்ரஹ அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** ப்ரு. (4-4-17) - யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா ஆகாசச்ச ப்ரதிஷ்டித: - எந்த ஆத்மாவிடம் ஐந்து “ஐந்து பேர்கள்” மற்றும் ஆகாசம் ஆகியவை நிலைநிற்கின்றனவோ – என்னும் வாக்கியத்தை ஆராயும்போது இந்த்ரியங்கள், ஆகாசம் போன்ற அனைத்தும் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொண்டவையே ஆகும் என்று நிரூபிக்கப்பட்ட உள்ளது
4. **காரணத்வ அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** வேதங்கள் அனைத்தும், ப்ரஹ்மம் ஒன்றை மட்டுமே ஜகத்காரணமாகக் கூறுகின்றன என்று உரைக்கமுடியும் என்று நிரூபிக்கப்படுகிறது
5. **ஜகத்வாசித்வ அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** கௌஷீ. (4-18) - யோவை பாலாகே ஏதேஷாம் புருஷாணாம் கர்த்தா யஸ்ய ச ஏதத் கர்ம ஸ வை வேதிதவ்ய: - பாலாகி! யார் இந்த புருஷர்களுக்குக் கர்த்தாவாக உள்ளானோ, யாருக்கு இந்த புண்யபாப ரூபமான கர்மம் உள்ளதோ, அவனே அறியத்தக்கவன் – என்பதில் அறியத்தக்கவனாக உபதேசிக்கப்படுபவன், பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
6. **வாக்ய அந்வய அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** ப்ரு. (4-5-6) – ஆத்மநி கல்வரே த்ருஷ்டே ச்ருதே மதே விஜ்ஞாதே இதம் ஸர்வம் விதிதம் – அந்த ஆத்மாவே காணப்படவேண்டியது, கேட்கப்படவேண்டியது, நினைக்கப்படவேண்டியது மற்றும் த்யானிக்கப்பட வேண்டியதாகும். ஆத்மாவைக் காணவும், கேட்கவும், நினைக்கவும், த்யானிக்கவும், அறியவும் செய்தால், இவை அனைத்தையும் அறிந்ததாகிறது – என்பதில் காணத்தக்கவனாகக் கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது
7. **ப்ரக்ருதி அதிகரணம் (6 ஸூத்ரங்கள்):** ப்ரஹ்மம் ஜகத்திற்கு நிமித்தகாரணமாக மட்டுமே அல்லாமல், உபாதானக் காரணமாகவும் உள்ளது என்று நிரூபிக்கப்படுகிறது
8. **ஸர்வ வ்யாக்யாந அதிகரணம் (1 ஸூத்ரம்):** பரமாத்மாவுக்கே உரிய தன்மைகள் படிக்கப்படுவதால் ஹிரண்யகர்ப்பன் முதலான சொற்களால் படிக்கப்படுபவன்

பரமாத்மாவே ஆவான் என்று அனைத்து வித்யைகளும் கூறுகின்றன என்று உரைக்கப்படுகிறது

**1.4.2 இரண்டாம் அத்யாயம்**

**1.4.2.1 முதல் பாதம் – ஸ்ம்ருதி பாதம்**

ஸாங்க்ய தத்வம் என்பது பகவத் அவதாரமாகவே உள்ள ஸ்ரீகபிலமஹரிஷியால் வெளிப்படுத்தப்பட்டது. ஆயினும் அது, மநு ஸ்ம்ருதி முதலானவற்றுக்கு முரணாகவே உள்ளது. எனவே கபிலதந்த்ரத்தில் கூறப்பட்ட ப்ரக்ருதியானது ஜகத்காரணம் அல்ல என்றும், மநு ஸ்ம்ருதி முதலானற்றில் கூறப்பட்டதான அனைத்து சேதந அசேதநங்களைக் காட்டிலும் மேன்மையால் வேறுபட்ட ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்றும் இந்தப் பாதத்தில் நிரூபிக்கப்படுகிறது. மேலும் இந்தப் பாதத்தில் தன்னுடைய ஸித்தாந்தத்தில் மற்றவர்கள் கூறுகின்ற தோஷங்களை நீக்கி, தனது ஸித்தாந்தத்தை நிலைநாட்டுகிறார்; ஆகவே இது "ஸ்வபக்ஷ ஸ்தாபநம்" ஆகிறது. இந்தப் பாதத்தில் பத்து அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **ஸ்ம்ருதி அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** கபில மஹரிஷியால் இயற்றப்பட்ட ஸாங்க்ய ஸ்ம்ருதி என்பது மயக்கத்தால் இயற்றப்பட்டது என்று நிரூபிக்கப்படுகிறது.
2. **யோக ப்ரத்யுக்தி அதிகரணம் (1 ஸூத்ரம்):** நான்முகனால் இயற்றப்பட்ட யோகஸ்ம்ருதியை நிராகரிக்கப்படுகிறது
3. **விலக்ஷணத்வ அதிகரணம் (9 ஸூத்ரங்கள்):** வேறுபட்ட பலவற்றையும் கொண்டுள்ள ஜகத்திற்கு ப்ரஹ்மம் காரணமாக இருப்பதில் குறையில்லை என்று நிரூபிக்கப்படுகிறது
4. **சிஷ்ட அபரிக்ரஹ அதிகரணம் (1 ஸூத்ரம்):** பரமாணுவே ஜகத்காரணம் என்று கூறும் நையாயிக மதம், கணாதருடைய வைசேஷிக மதம், சமணமதம் போன்ற அனைத்தும் தள்ளப்படுகின்றன
5. **போக்த்ரு ஆபத்தி அதிகரணம் (1 ஸூத்ரம்):** ஜீவாத்மாவுடைய ஸுகதுக்கங்கள் அனைத்தும் கர்மம் காரணமாகவே உண்டாவதால், ப்ரஹ்மத்திற்கு ஸுகதுக்கங்கள் இல்லை என்று நிரூபிக்கப்படுகிறது

6. **ஆரம்பண அதிகரணம் (6 ஸூத்ரங்கள்):** காரணப்பொருளாக உள்ள ப்ரஹ்மத்தைக் காட்டிலும், அதன் கார்யப்பொருளான ஜகத் வேறுபடாததே ஆகும் என்பது நிரூபிக்கப்பட உள்ளது
7. **இதர வ்யபதேச அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** ஜீவனும் ப்ரஹ்மமும் வெவ்வேறு என்றே ச்ருதி கூறுவதால், "ப்ரஹ்மத்தை ஜீவனாகக் கூறுவதால் தோஷங்கள் ஏற்படும்" என்பது தள்ளப்படுகிறது
8. **உப ஸம்ஹார தர்சந அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** பொருள்களைச் செய்வதற்கு அவசியமான உபகரணங்கள் ப்ரஹ்மத்திற்கு இல்லை; ஆயினும் ப்ரஹ்மம் ஜகத் ஸ்ருஷ்டி செய்வதில் குறையில்லை என்று நிரூபிக்கப்படுகிறது
9. **க்ருத்ஸ்ந ப்ரஸக்தி அதிகரணம் (6 ஸூத்ரங்கள்):** அவயவங்கள் இல்லாத ப்ரஹ்மத்திடமிருந்தே இந்த ஜகத் உண்டானது; ஆயினும் அந்த ப்ரஹ்மமே உபாதானக் காரணம் என்று கூறுவதில் தடையில்லை என்று நிரூபிக்கப்படுகிறது
10. **ப்ரயோஜநத்வ அதிகரணம் (5 ஸூத்ரங்கள்):** ப்ரஹ்மம் தன்னுடைய அனைத்து விருப்பங்களும் நிறைவேறப்பெற்றது என்றாலும், விளையாட்டு ருபமாக உள்ள பலன் காரணமாக, ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்று கூறலாம் என நிரூபிக்கப்படுகிறது

### 1.4.2.2 இரண்டாம் பாதம் – தர்க்க பாதம்

இந்தப் பாதத்தில் ஜகத்காரணத்தைக் குறித்துள்ளதான ப்ரதான தாரண வாதம் மற்றும் பரமாணுவே காரணம் என்னும் வாதம் ஆகிய இரண்டையும் தள்ளி, ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்று நிரூபிக்கிறார். இது "பரபக்ஷ ப்ரதிக்ஷேபம்" ஆகிறது. இந்தப் பாதத்தில் ஸாங்க்ய, வைசேஷிக, பௌத்த, ஜைந, சைவ ஸித்தாந்தங்களைத் தள்ளுகிறார். இறுதியாக பாஞ்சராத்ரம் ப்ரமாணம் அல்ல என்னும் கருத்தையும் தள்ளுகிறார். இந்தப் பாதத்தில் எட்டு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **ரசநா அநுபபத்தி அதிகரணம் (9 ஸூத்ரங்கள்):** இந்த அதிகரணத்தில் ஸாங்க்யர்களின் கருத்துக்கள் அனைத்தும் தள்ளப்படுகின்றன
2. **மஹத் தீர்க அதிகரணம் (7 ஸூத்ரங்கள்):** இந்த அதிகரணத்தில் வைசேஷிகர்களின் கருத்துக்கள் அனைத்தும் தள்ளப்படுகின்றன

3. **ஸமுதாய அதிகரணம் (10 ஸூத்ரங்கள்):** இந்த அதிகரணத்தில் பௌத்த மதத்தின் பிரிவான வைபாஷிகர் மற்றும் ஸௌத்ராந்திகர் மதங்கள் தள்ளப்படுகின்றன
4. **உபலப்தி அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** இந்த அதிகரணத்தில் பௌத்த மதத்தின் பிரிவான யோகாசார மதம் தள்ளப்படுகிறது
5. **ஸர்வதா அநுபபத்தி அதிகரணம் (1 ஸூத்ரங்கள்):** இந்த அதிகரணத்தில் பௌத்த மதத்தின் பிரிவான மாத்யமிக மதம் தள்ளப்படுகிறது
6. **ஏகஸ்மிந் அஸம்பவ அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** இந்த அதிகரணத்தில் ஜைனர்களுடைய மதம் தள்ளப்படுகிறது
7. **பசுபதி அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** இந்த அதிகரணத்தில் பாசுபத மதம் தள்ளப்படுகிறது
8. **உத்பத்தி அஸம்பவ அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** ஜீவாத்மாவின் உற்பத்தி கூறுவது போன்று உள்ளதால், பாஞ்சராத்ர ஆகமம் ப்ரமாணம் அல்ல என்னும் வாதம் தள்ளப்படுகிறது

### 1.4.2.3 மூன்றாம் பாதம் – வியத் பாதம்

இந்தப் பாதத்தில் ஆகாசத்திற்கு, அதனுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்றபடியாக ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவம் ஆகியவற்றில் விகாரங்கள் உள்ளன என்று நிரூபிக்கிறார். மேலும் ஆகாசமும் ப்ரஹ்ம கார்யமே ஆகும் என்கிறார். இந்தப் பாதத்தில் ஏழு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **வியத் அதிகரணம் (9 ஸூத்ரங்கள்):** வியத் எனப்படும் ஆகாசம் போன்றவையும் ப்ரஹ்மத்தின் கார்யமே என்று நிரூபிக்கப்படுகிறது
2. **தேஜ: அதிகரணம் (8 ஸூத்ரங்கள்):** ஆகாசம் போன்றவற்றைத் தனது சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மத்திடமிருந்தே தேஜஸ் போன்றவை உண்டாகின்றன என்பது நிரூபிக்கப்படுகிறது
3. **ஆத்மா அதிகரணம் (1 ஸூத்ரம்):** ஆத்மாக்களுக்கு உற்பத்தி இல்லை என்பது நிரூபிக்கப்படுகிறது

4. **ஜ்ஞ: அதிகரணம் (14 ஸூத்ரங்கள்):** ஞானஸ்வரூபமாக உள்ள ஜீவாத்மா, ஞானத்தைத் தனது குணமாகக் கொண்டபடியும், அறிபவனாகவும் உள்ளான் என்பது நிரூபிக்கப்படுகிறது
5. **கர்த்ரு அதிகரணம் (5 ஸூத்ரங்கள்):** ஜீவனுக்கு செயல்களைச் செய்பவனாக உள்ள தன்மை (கர்த்ருத்வம்) உண்டு என்பது நிரூபிக்கப்படுகிறது
6. **பர ஆயத்த அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** ஜீவாத்மாவின் கர்த்ருத்வம் என்பது பரமாத்மாவின் கட்டளைக்கு உட்பட்டதாகும் என்று நிரூபிக்கப்படுகிறது
7. **அம்ச அதிகரணம் (11 ஸூத்ரங்கள்):** ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமாகவே உள்ளான் என்று என்று நிரூபிக்கப்படுகிறது

### 1.4.2.4 நான்காம் பாதம் – ப்ராண பாதம்

இந்தப் பாதத்தில் ஜீவனுடைய உபகரணங்களாக உள்ள ப்ராணன்கள் (இந்த்ரியங்கள்), அவற்றுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்றபடியாக ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவம் ஆகியவற்றில் விகாரங்கள் உள்ளன என்று நிரூபிக்கிறார். மேலும் அவற்றுக்கும் ப்ரஹ்ம கார்யத்வம் உள்ளது என்கிறார். இந்தப் பாதத்தில் எட்டு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **ப்ராண உத்பத்தி அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** சதபத ப்ராஹ்மணம் (6-1-1) வரியானது ஆராயப்படுகிறது; இந்த்ரியங்கள் ப்ரஹ்மத்திடமிருந்தே உண்டாகின்றன என்று நிரூபிக்கப்படுகிறது
2. **ஸப்தகதி அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** இந்த்ரியங்கள் ஏழு அல்ல, அவை பதினொன்று ஆகும் என நிரூபிக்கப்பட்ட உள்ளது
3. **ப்ராண அணுத்வ அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** இந்த்ரியங்களும் அணு அளவே ஆகும் என்று நிரூபிக்கப்படுகிறது
4. **வாயு க்ரியா அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** முக்யப்ராணன் வாயுவோ அல்லது செயல்பாடோ அல்ல என்று நிரூபிக்கப்படுகிறது
5. **ச்ரேஷ்ட அணுத்வ அதிகரணம் (1 ஸூத்ரம்):** முக்யப்ராணனும் அணு அளவே ஆகும் என்று நிரூபிக்கப்பட்ட உள்ளது

6. **ஜ்யோதி: ஆதி அதிஷ்டாந அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** ஜீவன், அக்னி முதலான தேவதைகள் ப்ராணனை அண்டி நிற்பது பரமாத்மாவின் ஆணையால் ஆகும் என்று நிரூபிக்கப்படுகிறது
7. **இந்த்ரிய அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** இந்த்ரியங்கள் அனைத்தும் முக்யப்ராணனைக் காட்டிலும் வேறுபட்டவை என்று நிரூபிக்கப்படுகிறது
8. **ஸம்ஜ்ஞா மூர்த்தி க்லுப்தி அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** த்ரிவ்ருத்கரணம் மற்றும் நாம ரூபங்கள் ஆகியவற்றைச் செய்பவன் ஒருவனே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது

## 1.4.3 மூன்றாம் அத்யாயம்

### 1.4.3.1 முதல் பாதம் – வைராக்ய பாதம்

ஜீவாத்மா ஒரு சரீரத்திலிருந்து அடுத்த சரீரத்திற்குச் செல்லும்போதும், ஸ்வர்க்க நரகங்களிலிருந்து அடுத்த சரீரம் எடுப்பதற்காகப் பூமிக்கு வரும்போதும் பூதஸூக்ஷ்மங்கள் மற்றும் எஞ்சிய கர்மங்களுடன் வருகிறான்; இதன் காரணமாக அவன் பல தாழ்வுகளை அனுபவிக்கவேண்டியதாக உள்ளது என்பதைக் கூறுகிறார். இதன் மூலம், கர்மங்கள் காரணமாக ஏற்படும் இந்தச் சரீரத்துடன் சேர்ந்துள்ள ஸம்ஸாரத்தில் வைராக்யத்தை உண்டாக்குகிறார். மேலும் ஜீவாத்மாவின் பலவிதமான தோஷங்கள் இந்தப் பாதத்தில் காண்பிக்கப்படுகின்றன. இந்தப் பாதத்தில் ஆறு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **தத் அந்தர ப்ரதிபத்தி அதிகரணம் (7 ஸூத்ரங்கள்):** சாந்தோக்ய உபநிஷத் கூறும் கருத்தான - ஜீவன் ஓர் உடலை விட்டு வெளியே கிளப்பும்போது, பஞ்ச பூதங்களுடன் கூடியவனாக, ஸூக்ஷ்ம ரூபத்துடன் செல்கிறான் - என்று நிரூபிக்கப்படுகிறது
2. **க்ருத அத்யய அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** சாந். (5-10-5) - யாவத் ஸம்பாதம் உஷித்வா அத ஏதமேவ அத்வாநம் புந: நிவர்த்தந்தே - கர்மபலன் உள்ளவரையில் ஸ்வர்கத்தில் வாழ்ந்து, அதன் பின்னர் உலகிற்குத் திரும்புகின்றனர் – என்பதற்கு ஏற்ப திரும்பும் ஜீவாத்மா, தான் அனுபவிக்கவேண்டிய எஞ்சிய கர்மபலன்களுடனேயே வருகிறான் என்று நிரூபிக்கப்படுகிறது

3. **அநிஷ்டாதி கார்ய அதிகரணம் (10 ஸூத்ரங்கள்):** பாபம் செய்தவர்கள் சந்த்ரமண்டலம் செல்வதில்லை என்று நிரூபிக்கப்படுகிறது
4. **தத் ஸ்வாபாவ்ய ஆபத்தி அதிகரணம் (1 ஸூத்ரம்):** மேலே கிளம்பும் ஜீவன், ஆகாசம் போன்றவற்றுடன் தொடர்பு மட்டுமே அடைகிறான் என்று நிரூபிக்கப்படுகிறது
5. **ந அதிசிர அதிகரணம் (1 ஸூத்ரம்):** ஆகாசம் போன்றவற்றில் ஜீவன் சிறிது காலம் மட்டுமே தங்கிவிட்டுக் கிளம்புகிறான் என்று நிரூபிக்கப்படுகிறது
6. **அந்ய அதிஷ்டித அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** சாந். (5-10-6) - மேகோ பூத்வா ப்ரவர்ஷதி | த இஹ வ்ரீஹியவா ஓஷதி வநஸ்பதய: திலமாஷா இதி ஜாயந்தே - மேகமாகி பின்னர் மழையாகிறான், அதன் பின்னர் நெல், கோதுமை, மூலிகைகள், செடிகள், எள், உளுந்து போன்றவையாகப் பிறக்கிறான் – என்னும் வாக்கியம் ஆராயப்பட்டு, இறங்கும் ஜீவாத்மா, தானியம் போன்றவற்றைத் தனது சரீரமாகக் கொண்டுள்ள மற்ற ஜீவன்களுடன் நெருங்கிய தொடர்பு மட்டுமே கொள்கிறான் என்று நிரூபிக்கப்படுகிறது

### 1.4.3.2 இரண்டாம் பாதம் – உபயலிங்க பாதம்

கடந்த பாதத்தில் கூறப்பட்ட விஷயங்களின் காரணமாக ஒருவனுக்கு வைராக்யம் உண்டாகிறது. அப்படிப்பட்டவனுக்கு ப்ரஹ்மத்தைக் குறித்து ஆசை உண்டாவதற்காக அனைத்துவிதமான தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாக இருத்தல் (அதாவது தோஷம் அற்றிருத்தல்) மற்றும் அனைத்து திருக்கல்யாண குணங்களையும் கொண்டிருத்தல் என்னும் இரண்டு அடையாளங்களைக் கொண்டதாக ப்ரஹ்மம் உள்ளது என்பதை இந்தப் பாதத்தில் நிரூபிக்கிறார். இந்தப் பாதத்தில் எட்டு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **ஸந்த்யா அதிகரணம் (6 ஸூத்ரங்கள்):** ஜீவன் தனது கனவில் காணும் பொருள்கள் அனைத்தும் பரமாத்மாவால் படைக்கப்படுகின்றன என்று நிரூபிக்கப்படுகிறது
2. **தத் அபாவ அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** ஜீவாத்மா உறங்கும் இடங்களாக ஹிதா, ப்ரீதத் மற்றும் ப்ரஹ்மம் ஆகியவை கூறப்பட்டு, இந்த ஸித்தாந்தம் நிரூபிக்கப்படுகிறது

3. **கர்ம அநுஸ்ம்ருதி ஶப்த விதி அதிகரணம் (1 ஸூத்ரம்):** உறங்கிய ஜீவனே மீண்டும் விழித்து எழுகிறான், அவன் வேறு ஜீவன் அல்லன் என்று நிரூபிக்கப்படுகிறது
4. **முக்த அதிகரணம் (1 ஸூத்ரம்):** மூர்ச்சை என்னும் மயக்க நிலை என்பது விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகியவற்றைக் காட்டிலும் மாறுபட்டது என்று நிரூபிக்கப்படுகிறது
5. **உபய லிங்க அதிகரணம் (15 ஸூத்ரங்கள்):** சரீரங்களில் அந்தர்யாமியாக ப்ரஹ்மம் உள்ளபோதிலும், சரீரங்களின் தோஷங்கள் ப்ரஹ்மத்தைத் தீண்டுவதில்லை என்று நிரூபிக்கப்படுகிறது
6. **அஹிகுண்டல அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** ப்ரஹ்மமானது அசேதனப் பொருள்களைத் தனது ரூபமாகக் கொண்டாலும், அந்த அசேதனங்களிடம் உள்ள தோஷங்கள் ப்ரஹ்மத்திற்கு ஏற்படுவதில்லை என்று நிரூபிக்கப்படுகிறது
7. **பர அதிகரணம் (7 ஸூத்ரங்கள்):** ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து வேறு ஏதும் இல்லை என்றும், இதனைத் தவிர அடையவேண்டிய இலக்கு வேறு ஏதும் இல்லை என்றும் நிரூபிக்கப்படுகிறது
8. **பல அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** அனைத்துக் கர்மங்களின் பலனையும் பரமாத்மாவே அளிக்கிறான் என்று நிரூபிக்கப்படுகிறது

### 1.4.3.3 மூன்றாம் பாதம் – குண உபஸம்ஹார பாதம்

ப்ரஹ்மத்தை அடைவதற்கான ஸாதனங்களாக சாஸ்த்ரங்களில் காணப்படுகின்ற பல ப்ரஹ்மவித்யைகள் கூறப்படுகின்றன. இத்தகைய ப்ரஹ்மவித்யைகளில் கூறப்பட்டுள்ள பல்வேறு குணங்களை ஒன்றாகத் திரட்டிப் பொருள் கொள்ளவேண்டும் என்றும் கூறுகிறார். இந்தப் பாதத்தில் ப்ரஹ்மம் ஸகுணம் என்றும் கூறப்பட உள்ளது. இந்தப் பாதத்தில் இருபத்து ஆறு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **ஸர்வ வேதாந்த ப்ரத்யய அதிகரணம் (5 ஸூத்ரங்கள்):** வைச்வாநர வித்யை, தஹரா வித்யை போன்ற பல வித்யைகள் பல்வேறு வேதசாகைகளில் ஓதப்படுகின்றன. இவை அனைத்தும் ஒன்றே என நிரூபிக்கப்படுகிறது

2. **அந்யதாத்வ அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** சாந்தோக்யம் மற்றும் ப்ருஹத் உபநிஷத்தில் உள்ள உத்கீத வித்யைகள் வெவ்வேறு என்று நிரூபிக்கப்படுகிறது
3. **ஸர்வ அபேத அதிகரணம் (1 ஸூத்ரம்):** சாந்தோக்ய உபநிஷத் மற்றும் கௌஷீதகீ உபநிஷத் ஆகியவற்றில் காணப்படும் ப்ராணவித்யை என்பது ஒன்றே என்று நிரூபிக்கப்படுகிறது
4. **ஆநந்தாதி அதிகரணம் (7 ஸூத்ரங்கள்):** ப்ரஹ்மம் ஆனந்தமயமானது, மாற்றம் அடையாமல் உள்ளது, ஞானமயமானது, அளவுபடுத்த இயலாதது, தோஷங்கள் இல்லாமல் உள்ளது என்று கூறப்பட்டது. இந்த ஐந்து குணங்களும் அனைத்து ப்ரஹ்ம வித்யைகளிலும் படிக்கப்பட வேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
5. **கார்ய ஆக்யாந அதிகரணம் (1 ஸூத்ரம்):** ஆசமனம் செய்யப்படும் நீரானது ப்ராணனுக்கு வஸ்திரமாக எண்ணப்படவேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
6. **ஸமாந அதிகரணம் (1 ஸூத்ரம்):** அக்னிரஹஸ்யம் மற்றும் ப்ருஹத் ஆரண்யகத்தில் கூறப்பட்ட சாண்டில்ய வித்யை ஒன்றே என்று நிரூபிக்கப்படுகிறது
7. **ஸம்பந்த அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** ஆதித்யனை இருப்பிடமாகக் கொண்ட ப்ரஹ்மம் என்பதன் மூலம் அந்தராதித்ய வித்யை என்பதும், கண்களை இருப்பிடமாகக் கொண்ட ப்ரஹ்மம் என்பதன் மூலம் அக்ஷி வித்யை என்பதும் எண்ணப்படவேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
8. **ஸம்ப்ருதி அதிகரணம் (1 ஸூத்ரம்):** கட உபநிஷத்தில் உள்ள தரித்தல் என்னும் தன்மை மற்றும் வ்யாபித்தல் என்னும் தன்மைகள் அனைத்து வித்யைகளிலும் உபாஸிக்க வேண்டியவை அல்ல என்று நிரூபிக்கப்படுகிறது
9. **புருஷவித்ய அதிகரணம் (1 ஸூத்ரம்):** சாந்தோக்யத்திலும், தைத்திரீயத்திலும் கூறப்படுகின்ற புருஷ வித்யைகள் வெவ்வேறு என்று நிரூபிக்கப்படுகிறது
10. **வேதாதி அதிகரணம் (1 ஸூத்ரம்):** தைத்திரீய சீக்ஷாவல்லியில் உள்ள சில மந்த்ரங்கள் ப்ரஹ்ம வித்யைக்கு அங்கமல்ல என்று நிரூபிக்கப்படுகிறது
11. **ஹாநி அதிகரணம் (1 ஸூத்ரம்):** புண்ணியம் மற்றும் பாப கர்மங்கள், மோக்ஷம் பெறுபவனிடமிருந்து விலகி, மற்றவர்களிடம் சேர்கின்றன என அனைத்து வித்யைகளிலும் கொள்ளவேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
12. **ஸாம்பராய அதிகரணம் (5 ஸூத்ரங்கள்):** உபாஸகனின் கர்மம் முழுவதும் அவன் தனது உடலை விட்டுக் கிளம்பும் காலத்தில் அழிந்து விடுகின்றன என்று நிரூபிக்கப்படுகிறது
13. **அநியம அதிகரணம் (1 ஸூத்ரம்):** அனைத்து வித்யைகளுக்கும் அர்ச்சிராதி மார்க்கம் பொதுவானது என்று நிரூபிக்கப்படுகிறது

14. **அக்ஷரதி அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** தாழ்வுகளால் தீண்டப்படாமல் உள்ள ப்ரஹ்மத்தின் மேன்மை என்பது அனைத்து வித்யைகளிலும் எண்ணப்படவேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
15. **அந்தரத்வ அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** ப்ருஹத் உபநிஷத்தில் உஷஸ்தர் மற்றும் கஹோலர் ஆகியவர்கள் இரண்டு வெவ்வேறு பகுதிகளில் கேட்கப்பட்ட வித்யைகள் ஒன்றே என்று நிரூபிக்கப்படுகிறது
16. **காமாதி அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** சாந்தோக்ய உபநிஷத் மற்றும் ப்ருஹத் உபநிஷத் ஆகிய இரண்டிலும் காணப்படும் தஹரவித்யை என்பது ஒன்றே என நிரூபிக்கப்பட உள்ளது
17. **தந் நிர்தாரண அதிகரணம் (1 ஸூத்ரம்):** சாந்தோக்யத்தில் உள்ள உத்கீத உபாஸனங்கள், ப்ரஹ்ம வித்யைக்கு அங்கமாக உள்ள யாகங்களில் சேர்த்தாலும், விடுத்தாலும் தவறில்லை என்று நிரூபிக்கப்படுகிறது
18. **ப்ரதாந அதிகரணம் (1 ஸூத்ரம்):** அபஹத பாப்மத்வம் போன்ற குணங்களை உபாஸிக்கும்போது, தஹர ஆகாசம் என்னும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமும் உபாஸிக்கப்பட வேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
19. **லிங்க பூயஸ்த்வ அதிகரணம் (5 ஸூத்ரம்):** நாராயணாநுவாகம் என்பது, ப்ரஹ்ம வித்யைகளின் மூலம் உபாஸிக்கப்படும் பரம்பொருளை உணர்த்துவதற்காகவே உள்ளது என்று நிரூபிக்கப்பட்ட உள்ளது
20. **பூர்வ விகல்ப அதிகரணம் (7 ஸூத்ரங்கள்):** "மனச்சித் அக்னி" போன்றவை, க்ரியாமயமான யாகத்திற்கு (கற்களை அடுக்கி, உண்மையான அக்னி உண்டாக்கிச் செய்யப்படும் யாகம்) அங்கம் அல்ல, அவை வித்யாமயமான யாகத்திற்கே (அதாவது எண்ணத்தின் மூலமாக அக்னி எழுப்பிச் செய்யப்படும் யாகம்) அங்கமாக உள்ளன என்று நிரூபிக்கப்படுகிறது
21. **சரீரே பாவாத் அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** ஸாதன தசையில், அனைத்து வித்யைகளிலும், தன்னைப் பாபங்கள் அற்றவன் முதலான ஸ்வரூபம் உள்ளதாகவே ஜீவன் உபாஸித்துக் கொள்ளவேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
22. **அங்காவபத்த அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** சாந்தோக்யத்தின் உத்கீத உபாஸனங்கள் அனைத்து சாகைகளிலும் தொடர்புடையவை ஆகும் என்று நிரூபிக்கப்படுகிறது
23. **பூம ஜ்யாயஸ்த்வ அதிகரணம் (1 ஸூத்ரம்):** சாந்தோக்யத்தில் கூறப்பட்ட வைச்வாநர உபாஸனமே சரியானது என்று நிரூபிக்கப்படுகிறது

24. **ஶப்தாதி பேத அதிகரணம் (1 ஸூத்ரம்):** ஸத்வித்யை, தஹரவித்யை போன்ற ப்ரஹ்மவித்யைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையே என்று நிரூபிக்கப்படுகிறது
25. **விகல்ப அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** ப்ரஹ்ம வித்யைகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றினாலே பலன் கிட்டிவிடும் என்று நிரூபிக்கப்படுகிறது
26. **யதா ஆச்ரய பாவ அதிகரணம் (6 ஸூத்ரங்கள்):** முன்பு நிரூபிக்கப்பட்ட "உத்கீத உபாஸனமானது அனைத்து யாகங்களிலும், எப்போதும் அங்கம் அல்ல" என்பதைச் சிலர் மறுக்க, அதற்குச் சமாதானம் கூறப்படுகிறது

### 1.4.2.4 நான்காம் பாதம் – அங்க பாதம்

ஒரு சிலர் கூறுவதான "கர்மங்கள் அனைத்துமே கைவிடத்தக்கது" என்னும் கருத்து இந்தப் பாதத்தில் தள்ளப்படுகிறது. ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாக உள்ள பலவற்றைக் குறித்தும், அவற்றைக் கைக்கொள்வது குறித்து கூறப்பட வேண்டிய விஷயங்கள் குறித்தும் இங்கு கூறப்படுகிறது. இந்தப் பாதத்தில் பதினைந்து அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **புருஷார்த்த அதிகரணம் (20 ஸூத்ரங்கள்):** கர்மத்தை அங்கமாகக் கொண்டுள்ள ப்ரஹ்ம உபாஸனம் மூலம் மோக்ஷம் என்ற புருஷார்த்தம் கிட்டுகிறது என நிரூபிக்கப்படுகிறது
2. **ஸ்துதிமாத்ர அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** சாந்தோக்ய உபநிஷத் (1-1-3) – ஸ ஏஷ ரஸாநாம் ரஸதம: - என்பதன் மூலம் உத்கீதம் புகழப்படுவதற்கு மட்டுமே இது போன்று கூறப்படுகிறது என்ற வாதம் தள்ளப்படுகிறது. இது விதி வாக்கியம் என நிரூபிக்கப்படுகிறது
3. **பாரிப்லவ அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** கௌஷீதகீ உபநிஷத் (3-10), சாந்தோக்ய உபநிஷத் (6-1-1) போன்றவற்றில் காணப்படும் சிறு கதைகள், அங்கு விதிக்கப்படும் வித்யைகளைப் புகழ்வதற்காகவே ஆகும் என நிரூபிக்கப்படுகிறது
4. **அக்நி இந்தநாதி அதிகரணம் (1 ஸூத்ரம்):** ஸந்யாஸிகளுக்கு ப்ரஹ்ம உபாஸனம் செய்யும்போது அக்னிஹோத்ரம் போன்றவை எதிர்பார்க்கப்படுவதில்லை என நிரூபிக்கப்படுகிறது

5. **ஸர்வ அபேக்ஷ அதிகரணம் (1 ஸூத்ரம்):** க்ருஹஸ்தாச்ரமத்தில் உள்ளவர்களுக்கு அந்த ஆச்ரமத்திற்கு உரிய யஜ்ஞம் போன்றவற்றை ப்ரஹ்ம உபாஸனம் எதிர்பார்க்கிறது என நிரூபிக்கப்படுகிறது
6. **ஶம தமாதி அதிகரணம் (1 ஸூத்ரம்):** க்ருஹஸ்தாச்ரமத்தில் உள்ள ப்ரஹ்மஞானிகளுக்கும் மனதைச் சமநிலையில் வைத்தல், புலன்களை அடக்குதல் போன்ற ஆத்ம குணங்கள் கைக்கொள்ளத்தக்கவையே ஆகும் என்று நிரூபிக்கப்படுகிறது
7. **ஸர்வ அந்ந அநுமதி அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** ப்ராணவித்யை கூடிய ஒருவனுக்கு, உயிர்போகும் நேரத்தில் மட்டுமே அனைத்துவிதமான உணவும் அனுமதிக்கப்படுகின்றன என்று நிரூபிக்கப்படுகிறது
8. **விஹிதத்வ அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** யஜ்ஞம் போன்ற கர்மங்கள், ப்ரஹ்மவித்யை மற்றும் க்ருஹஸ்தாச்ரமத்தின் அங்கமாகவே விதிக்கப்படுகின்றன. எனவே இவற்றை ப்ரஹ்மநிஷ்டர்கள், க்ருஹஸ்தர்கள் அனுஷ்டிக்கவேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
9. **விதுர அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** எந்த ஆச்ரமத்திலும் இல்லாத விதுரர்களுக்கு (மனைவியை இழந்தவர்கள்) ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டு என்று நிரூபிக்கப்படுகிறது
10. **தத்பூத அதிகரணம் (4 ஸூத்ரங்கள்):** ப்ரஹ்மச்சாரி, வாநப்ரஸ்தன், ஸந்ந்யாஸி ஆகியவர்கள் தங்கள் ஆச்ரமங்களைக் கைவிட நேர்ந்தால், அவர்களுக்கு அதன் பின்னர் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் இல்லை என்று நிரூபிக்கப்படுகிறது
11. **ஸ்வாமி அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** ருத்விக்கால் (யாகமோ அல்லது யஜ்ஞமோ போன்றவற்றைத் தலைமை தாங்கி நடத்தி வைப்பவர் எனலாம்) உத்கீத உபாஸனம் செய்யப்படவேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
12. **ஸஹகாரி அந்தர விதி அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** பால்யம், பாண்டித்யம் மற்றும் மௌனம் ஆகியவை யஜ்ஞம் போன்றே, ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாக உள்ளன என்று நிரூபிக்கப்படுகிறது
13. **அநாவிஷ்கர அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** பால்யம் என்பது ப்ரஹ்மஞானிகளைப் பொறுத்தவரையில் தங்களது மேன்மைகளை வெளிக்காட்டாமல் உள்ளதே ஆகும் என நிரூபிக்கப்படுகிறது

14. **ஐஹிக அதிகரணம் (1 ஸூத்ரம்):** இந்தப் பிறவியில் பலன்கள் அளிக்கவல்ல வித்யைகள், தடை இல்லாமல் இருந்தால் மட்டுமே கைகூடும் என்று நிரூபிக்கப்படுகிறது
15. **முக்தி பல அதிகரணம் (1 ஸூத்ரம்):** மோக்ஷ பலன் அளிக்கவல்ல உபாஸனங்களுக்கும் தடை ஏற்படாவிட்டால் பலன் உடனே கிட்டும்; தடை ஏற்படும் என்றால் தாமதமாகவே கிட்டும் என்று நிரூபிக்கப்படுகிறது

### 1.4.4 நான்காம் அத்யாயம்

#### 1.4.4.1 முதல் பாதம் – ஆவ்ருத்தி பாதம்

இந்தப் பாதத்தில் உபாஸனத்தைக் கைக்கொள்ளவேண்டிய முறை, புண்ணிய பாபங்கள் நீங்கும் விதங்கள், நித்ய மற்றும் நைமித்திக கர்மங்களை இயற்றியே தீரவேண்டும் என்னும் கருத்து போன்ற பலவும் கூறப்படுகின்றன. மேலும், உபாஸகனுடைய இறுதியான பிறவியில் புண்ணிய பாபங்கள் அனைத்தும் விலகுகின்றன என்றும், தொடர்ந்து வரும் புண்ணிய பாபங்கள் ஒட்டுவதில்லை என்றும் கூறப்பட உள்ளன. இந்தப் பாதத்தில் பதினொரு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **ஆவ்ருத்தி அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** ஆயுள் முடியும்வரை உபாஸனத்தைப் பலமுறை அனுஷ்டிக்க வேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
2. **ஆத்மத்வ உபஸந அதிகரணம் (1 ஸூத்ரம்):** தன்னுடைய ஆத்மாவாகவே ப்ரஹ்மத்தை உபாஸகன் உபாஸிக்கவேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது
3. **ப்ரதீக அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** மனம் முதலானவற்றை உயர்ந்த தேவதை என்று எண்ணி உபாஸனம் செய்யவேண்டும் என நிரூபிக்கப்படுகிறது
4. **ஆதித்யாதி மதி அதிகரணம் (1 ஸூத்ரம்):** - உத்கீதம் போன்றவற்றில் உயர்ந்தவர்களான ஆதித்யன் முதலானவர்களை உபாஸனம் செய்யவேண்டும் என நிரூபிக்கப்படுகிறது
5. **ஆஸீந அதிகரணம் (5 ஸூத்ரங்கள்):** அமர்ந்து கொண்டுதான் உபாஸனை செய்ய வேண்டும் என நிரூபிக்கப்படுகிறது
6. **ஆப்ராயண அதிகரணம் (1 ஸூத்ரம்):** மரணம் அடையும் காலம் வரையில் உபாஸனை செய்யவேண்டும் என்று நிரூபிக்கப்படுகிறது

7. **தத் அதிகம அதிகரணம் (1 ஸூத்ரம்):** ப்ரஹ்மவித்யைக்கு முன்னர் செய்த பாபங்கள், வரப்போகும் பாபங்கள் ஆகியவை அழிகின்றன என நிரூபிக்கப்படுகிறது
8. **இதர அதிகரணம் (1 ஸூத்ரம்):** முன்னர் செய்த புண்ணியங்கள் அழிந்துவிடும், இனி செய்யப்படும் புண்ணியங்கள் ஒட்டுவதில்லை என நிரூபிக்கப்படுகிறது
9. **அநாரப்த கார்ய அதிகரணம் (1 ஸூத்ரம்):** பலன் அளிக்கத் தொடங்காத புண்ணிய பாப பலன்கள் மட்டுமே அழிகின்றன என நிரூபிக்கப்படுகிறது
10. **அக்நிஹோத்ராதி அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** பலனை விரும்பாதவர்கள் கூட அக்னிஹோத்ரம் போன்ற நித்ய கர்மங்களை இயற்றியே தீர வேண்டும் என நிரூபிக்கப்படுகிறது
11. **இதர க்ஷபண அதிகரணம் (1 ஸூத்ரம்):** ப்ராரப்த கர்மம் (பலன் தரத் தொடங்கிவிட்ட கர்மங்கள்) ஒரே சரீரத்தில் முடிந்துவிடும் என்னும் விதி கிடையாது என நிரூபிக்கப்படுகிறது

### 1.4.4.2 இரண்டாம் பாதம் – உத்க்ராதி பாதம்

இந்தப் பாதத்தில் மோக்ஷத்திற்கான உபாயத்தைக் கைக்கொண்ட உபாஸகன் தனது சரீரத்திலிருந்து வெளியேறும் முறை கூறப்படுகிறது. இந்தப் பாதத்தில் பதினொரு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **வாக் அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** மரணம் அடைபவனுடைய வாக்கு இந்த்ரியம், மனதுடன் இணைகிறது என நிரூபிக்கப்படுகிறது
2. **மந: அதிகரணம் (1 ஸூத்ரம்):** மரணம் அடைபவனுடைய மனம், ப்ராணனுடன் சேர்த்தியை அடைகிறது என நிரூபிக்கப்படுகிறது
3. **அத்யக்ஷ அதிகரணம் (1 ஸூத்ரம்):** ப்ராணன் ஜீவனுடன் சேர்கிறது என நிரூபிக்கப்படுகிறது
4. **பூத அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** ஜீவனோடு சேர்ந்த ப்ராணன் மற்ற பூதங்களுடன் இணைந்த தேஜஸ்ஸில் சென்று சேர்கிறது என நிரூபிக்கப்படுகிறது
5. **ஆ ஸ்ருதி உபக்ரம அதிகரணம் (7 ஸூத்ரங்கள்):** வெளிக்கிளம்புதல் (உத்க்ராந்தி) என்பது மோக்ஷம் பெறுபவன், மற்றவர்கள் ஆகிய இருவருக்கும் மூர்த்தந்ய நாடியில் புகுவதற்கு முன்பு, பொதுவானதே ஆகும் என நிரூபிக்கப்படுகிறது

6. **பர ஸம்பத்தி அதிகரணம் (1 ஸூத்ரம்):** தேஜஸ் போன்றவை பரமாத்மாவுடன் இணைகின்றன என நிரூபிக்கப்படுகிறது
7. **அவிபாக அதிகரணம் (1 ஸூத்ரம்):** மேலே கூறப்பட்டவை அனைத்தும் பரமாத்மாவுடன் சேர்கின்றன அல்லாமல் லயம் அடைவதில்லை என நிரூபிக்கப்படுகிறது
8. **தத் ஓக: அதிகரணம் (1 ஸூத்ரம்):** மூர்த்தந்ய நாடியின் மூலம் மட்டுமே முக்தி அடைபவன் தனது சரீரத்தை விட்டு வெளியே கிளம்புகிறான் என நிரூபிக்கப்படுகிறது
9. **ரச்மி அநுஸார அதிகரணம் (1 ஸூத்ரம்):** சூரியனின் கிரணங்கள் மூலமாகவே ப்ரஹ்மஞானி மேலே செல்கிறான் என நிரூபிக்கப்படுகிறது
10. **நிச அதிகரணம் (1 ஸூத்ரம்):** இரவில் மரணம் அடையும் ப்ரஹ்மஞானியும், ப்ரஹ்மத்தை அடைவான் என நிரூபிக்கப்படுகிறது
11. **தக்ஷிணாயந அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** ப்ரஹ்மஞானி தக்ஷிணாயனத்தில் மரணம் அடைந்தாலும் ப்ரஹ்மப்ராப்தி உண்டு என நிரூபிக்கப்படுகிறது

### 1.4.4.3 மூன்றாம் பாதம் – கதி பாதம்

இந்தப் பாதத்தில் மூர்த்தந்ய நாடி வழியாக வெளிக்கிளம்பிய ப்ரஹ்மஞானியை ஸர்வேச்வரன், ஆதிவாஹிகர்கள் மூலமாக ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் செல்வது குறித்துக் கூறப்படுகிறது. இதன் மூலம் வித்யையின் பலன் கூறப்படுகிறது. இந்தப் பாதத்தில் ஐந்து அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **அர்ச்சிராதி அதிகரணம் (1 ஸூத்ரம்):** அனைத்து ப்ரஹ்மவித்யை நிஷ்டர்களும் அர்ச்சிராதி மார்க்கம் என்னும் ஒரே வழி மூலமே மோக்ஷம் அடைகின்றனர் என நிரூபிக்கப்படுகிறது
2. **வாயு அதிகரணம் (1 ஸூத்ரம்):** ஸம்வத்ஸரத்தை அர்ச்சிராதி மார்க்கமாக அடையும் முக்தன், அதன் பின்னர் ஆதித்யனை அடைவதற்கு முன்பாக வாயுவை அடைகிறான் என நிரூபிக்கப்படுகிறது
3. **வருண அதிகரணம் (1 ஸூத்ரம்):** அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்லும் முக்தனால் முதலில் தடித் என்று கூறப்படும் மின்னல் அடையப்படுகிறது; அதன் பின்னர் வருணனும், இந்த்ரனும் அடையப்படுகின்றனர் என நிரூபிக்கப்படுகிறது

4. **ஆதிவாஹிக அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** அர்ச்சிஸ் போன்றவர்கள் ப்ரஹ்மஞானியை ப்ரஹ்மத்திடம் அழைத்துச் செல்லும் தேவதைகள் என நிரூபிக்கப்படுகிறது
5. **கார்ய அதிகரணம் (10 ஸூத்ரங்கள்):** ஆதிவாஹிகர்கள் யாரை ப்ரஹ்மத்திடம் அர்ச்சிராதி மார்க்கமாக அழைத்துச் செல்கின்றனர் என நிரூபிக்கப்படுகிறது

### 1.4.4.4 நான்காம் பாதம் – முக்தி பாதம்

இந்தப் பாதத்தில் பரப்ரஹ்மத்தை அடைந்த பின்னர் முக்தாத்மா பெறுகின்ற செல்வம் (கைங்கர்யம்) என்னும் பலன் நிரூபிக்கப்படுகிறது. இந்தப் பாதத்தில் ஆறு அதிகரணங்கள் உள்ளன. அவையாவன:

1. **ஸம்பத்ய ஆவிர்பாவ அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** முக்தி பெற்ற நிலையில் முக்தாத்மா தனது இயல்பான ஸ்வரூபத்தை அடைகிறான் என நிரூபிக்கப்படுகிறது
2. **அவிபாகேந த்ருஷ்டத்வ அதிகரணம் (1 ஸூத்ரம்):** முக்தி பெற்ற ஜீவன் தனது ஆத்மாவானது பரமாத்மாவை விட்டுப் பிரியாதது என்று எண்ணியபடியே அனுபவிக்கிறான் என நிரூபிக்கப்படுகிறது
3. **ப்ரஹ்ம அதிகரணம் (3 ஸூத்ரங்கள்):** முக்தி பெறுகின்ற நிலையில் தனது ஞானஸ்வரூபம் விளக்கம் பெறுவது மட்டும் அல்லாமல், ப்ரஹ்மத்தின் தன்மைகளான பாபங்கள் அற்ற தன்மை போன்றவற்றையும் முக்தாத்மா அடைகிறான் என நிரூபிக்கப்படுகிறது
4. **ஸங்கல்ப அதிகரணம் (2 ஸூத்ரங்கள்):** தனது ஸங்கல்பத்தால் மட்டுமே முக்தி நிலையில் ஜீவன் தனது விருப்பங்களை அடைகிறான் என நிரூபிக்கப்படுகிறது
5. **அபாவ அதிகரணம் (7 ஸூத்ரங்கள்):** முக்தாத்மா ஒரு சில கட்டங்களில் சரீரம் உள்ளவனாகவும், சில கட்டங்களில் சரீரம் அற்றவனாகவும் உள்ளான் என நிரூபிக்கப்படுகிறது
6. **ஜகத்வ்யாபார வர்ஜ அதிகரணம் (6 ஸூத்ரங்கள்):** ஸ்ருஷ்டித்தல் என்பது போன்ற ப்ரஹ்மத்தின் செயல்பாடுகள் முக்தாத்மாவுக்கு இல்லை. இன்பத்தில் மட்டுமே ஒற்றுமை காணப்படுகிறது. முக்தாத்மா ஸம்ஸாரத்திற்குத் திரும்புவதில்லை. இது போன்ற பலவும் நிரூபிக்கப்படுகிறது

# வேதாந்த ஸாரம் தொடக்கம்

**மங்கல ச்லோகம்**

ஸமஸ்த சித் அசித் வஸ்து சரீராய அகிலாத்மநே
ஸ்ரீமதே நிர்மல ஆநந்த உதந்வதே விஷ்ணவே நம:

**பொருள் –** அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்டவனும், அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளவனும், மஹாலக்ஷ்மியை விட்டு எப்போதும் அகலாதவனும், எந்தவிதமான தோஷமும் அற்றவனும், ஆனந்த ஸமுத்ரமாக உள்ளவனும் ஆகிய ஸ்ரீவிஷ்ணுவை நமஸ்கரிக்கிறேன்.

(ராமாநுஜரின் தொடக்கக் கூற்று) "வேதாந்தங்களுடைய ஸாரமானது, பரமபுருஷனுடைய க்ருபையால் இங்கு வெளிப்படுத்தப்படுகிறது".

## அத்யாயம் – 1 – ஸமந்வய அத்யாயம்

### முதல் பாதம்

#### அதிகரணம் – 1 – ஜிஜ்ஞாஸா அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** (இந்தப் பகுதி ஸ்ரீபாஷ்யத்தைச் சேர்ந்தது அல்ல. விளக்குவதற்காகத் தரப்பட்டுள்ளது) **–** வேதாந்தவரிகள் அனைத்தும் ப்ரஹ்மத்தைக் கூறுவதால், ப்ரஹ்மத்தைக் குறித்த இந்தச் சாஸ்திரம் தொடங்குவதற்கு ஏற்றதே என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-1-1 அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா [அத: அத: ப்ரஹ்மஜிஜ்ஞாஸா]**

**பொருள் –** (கர்மங்களைக் குறித்து அறிந்ததால்) அதன் பின்னர், அதன் காரணமாக, ப்ரஹ்மத்தைக் குறித்து அறிவதில் ஆர்வம் (உண்டாகவேண்டும்).

**வேதாந்தஸாரம் -** இங்கு, முதலில் உள்ள "அத: – பிறகு" என்னும் சொல்லைத் தொடர்ந்து, "அத: - ஆகவே" என்னும் சொல் வருவதால், முதலில் உள்ள "அத: - பிறகு" என்ற சொல்லானது, "அதன் பிறகு" என்னும் பொருளைத் தருகிறது. எனவே இரண்டாவதாக உள்ள "அத: - ஆகவே" என்னும் சொல்லானது முதலில் நடைபெற்ற ஒரு நிகழ்வை, (அடுத்து நடக்கவுள்ள நிகழ்விற்கான) காரணமாகக் காட்டுகிறது. "இப்போது தொடங்கப்படவேண்டும்" என்று விருப்பப்படுவதான "ப்ரஹ்மத்தைக் குறித்த ஆய்வு அல்லது அறிதல்" என்பது, வேதங்களுடைய ஆழ்பொருளை அறிதல் என்பதின் ஒரு பகுதியாகவே உள்ளது; ஆகவே முதல் நிகழ்வாக, "கர்மங்களைக் குறித்த ஆய்வு (அல்லது அறிதல்)" என்பது நடந்தது. வேத அத்யயனம் செய்த ஒருவன் (அதாவது வேதங்களை அறிந்த ஒருவன்), வேதங்களுடைய முதற்பாகமாகிய கர்மங்களைக் குறித்தே முதலில் அறியவேண்டும். இதனை பூர்வமீமாம்ஸை (1-1-1) – அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா – அதன் பிறகு, ஆகவே, தர்மத்தைக் குறித்த ஆய்வு" என்று கூறியது. பூர்வமீமாம்ஸையில் (12-4-35) – ப்ரபுத்வாத் ஆர்த்விஜ்யம் – அவர்களால் இயலும் என்பதால் ருத்விக்காக இருத்தல் – என்றுள்ள ஸூத்ரம் அமைந்துள்ள பகுதியுடன் முடிக்கப்படும் மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் (இந்தப் பகுதியானது ஸூத்ரங்கள் 12-4-35 முதல் 12-4-40 முடிய உள்ளது. இதுவே மீமாம்ஸா சாஸ்த்ரத்தின் இறுதிப் பகுதியாகும்), ப்ரக்ருதி மற்றும் விக்ருதி என்றுள்ள இரண்டுவிதமான கர்மங்கள் மட்டுமே "தர்மம் – அர்த்தம் – காமம்" என்னும் வடிவில் உள்ள புருஷார்த்தங்களுக்கான உபாயமாகும் என்று ஸங்கர்ஷண ரிஷி கூறுகிறார்.

இவ்விதமாக வேதங்கள் அர்த்தங்களை உபதேசிப்பதையே நோக்கமாக உள்ளவை ஆகும். அத்தகைய அர்த்தங்களானவை கர்மங்களாக உள்ளன. மேலும் கர்மங்களானவை மேலே கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களை மட்டுமே அளிக்கக்கூடியவை ஆகும். வேதங்களுடைய ஒரு பகுதியாகவே உள்ள வேதாந்தம் மூலமாக, "வெறும் கர்மங்கள் என்பவை அற்பமானதும், நிலையற்றதும் ஆகிய பலன்களை மட்டுமே தரக்கூடியவை ஆகும். ப்ரஹ்மத்தைக் குறித்த ஞானம் மட்டுமே எல்லையற்ற, நிலையான பலனை அளிக்கவல்லது ஆகும்", என்று (முதலில்) கண்டறியப்படுகிறது. அதன் பின்னர், மோக்ஷத்தில் விருப்பம் கொண்டவனும், "இந்தச் சொல்லிற்கு இவ்விதம் பொருள் கொள்ளவேண்டும்" என்று அறிந்தவனும் ஆகிய ஒருவனுக்கு, ப்ரஹ்மத்தைக் குறித்து அறியவேண்டும் என்னும் ஆசை பிறக்கிறது. இதனால்தான், "ப்ர. ஸூ. (1-1-1) – அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா" என்ற ஸூத்ரம் மூலமாக, "கர்மங்களைக் குறித்து

ஆராய்ந்து அறிந்த பின்னர், அதே காரணத்தால், ப்ரஹ்மத்தைக் குறித்த ஆய்வும் தொடங்கப்படவேண்டும்” என்று கூறப்படுகிறது.

இந்த விஷயத்தையே ச்ருதியானது, முண். (1-2-12, 13) – பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத் நாஸ்தி அக்ருத: க்ருதேந | தத் விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபி கச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் | தஸ்மை ஸ வித்வான் உபாஸந்நாய ஸம்யக் ப்ரசாந்த சித்தாய சமாந்விதாய | யேந அக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்ம வித்யாம் – கர்மங்கள் மூலம் அடையவல்ல லோகங்கள் குறித்து அறியும் அந்தணன் ஒருவன், அத்தகைய ஆசைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவேண்டும்; நித்யமாக (அழியாததாக) உள்ள ப்ரஹ்மம், நித்யம் அல்லாத (அழியக்கூடிய) கர்மங்களால் அடையக்கூடியது அல்ல; இத்தகைய ப்ரஹ்ம ஞானத்தை அடையும் பொருட்டு வேதங்களை அத்யயனம் செய்த அவன், தனது கையில் ஸமித் (ஆலமரத்தின் சுள்ளிகள்) போன்றவற்றை எடுத்தவனாக, வேத அத்யயனம் செய்தவரும் ப்ரஹ்மத்தைக் குறித்து நன்கு அறிந்தவரும் ஆகிய ஆசார்யனை அடையவேண்டும்; தன்னிடம் வந்தவனும், தன்னிடம் வணக்கம் நிறைந்தவனும், தனது மனதை வசப்படுத்தியவனும் ஆகிய அந்த சிஷ்யனுக்கு ஆசார்யன் செய்யவேண்டியது என்னவெனில், தான் எந்த ஒரு வித்யை மூலமாக ஸ்வரூபம் மற்றும் குணங்களால் மாறுபாடு இல்லாத பரமபுருஷனை அறிகின்றாரோ, அத்தகைய ப்ரஹ்மவித்யையை அந்தச் சிஷ்யனுக்கு நேர்மையாக உபதேசிக்கவேண்டும் – என்று கூறுகிறது. (இந்த உபநிஷத் வாக்கியத்தில் உள்ள சொற்களை அடுத்து விளக்குகிறார்) இங்குள்ள “ப்ராஹ்மண: - வேத அப்யாஸத்தில் இழிந்தவன்”; “கர்மசிதாந் - கர்மங்களால் ஸம்பாதிக்கப்பட்ட”; “பரீக்ஷ்ய – கர்மங்கள் மூலம் ஆராதிக்கப்படுபவர்களும், அந்த லோகங்களும் அழியக்கூடியவை என்று கர்ம மீமாம்ஸையால் அறிந்து”; “அக்ருத: - நித்யமாக உள்ள பரமபுருஷன்”; “க்ருதேந – கர்மங்கள் மூலமாக பெறப்படுபவன் அல்லன்” என்று அறிந்து; “நிர்வேதமாயாத் – ஒருவன் ஆசைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறான்; “ஸ – அப்படிப்பட்டவன்”; “தத் விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபி கச்சேத் ஸமித்பாணி: - அந்தப் பரமபுருஷனை அறியும்பொருட்டு, தனது கையில் ஸமித் (ஆலமரத்தின் சுள்ளிகள்) போன்றவற்றை எடுத்தவனாக ஆசார்யனை அடையவேண்டும்”; “ச்ரோத்ரியம் – வேதாந்தங்களை நன்கு அறிந்த ஆசார்யன்”; “ப்ரஹ்மநிஷ்டம் – பரமபுருஷ ஸ்வரூபத்தை நேரடியாக அறிந்தவராக இருக்கவேண்டும்”; “ஸ குரு: ஸம்யக் உபஸந்நாய தஸ்மை – இவ்விதமாக உள்ள ஆசார்யன், சரியான முறையில் தன்னை நாடி வந்த சிஷ்யனுக்கு”; எந்த ஒரு வித்யையின் சிறப்பைக் கொண்டு அழிவற்றவனும், ஸத்யமும்

ஆகிய பரமபுருஷனை அந்த சிஷ்யன் அறிந்து கொள்வானோ; "தாம் ப்ரஹ்ம வித்யாம் ப்ரோவாச – அத்தகைய ப்ரஹ்மவித்யையை தான் உபதேசிக்கவேண்டும்"; இதுவே இந்த வாக்கியத்தின் அர்த்தமாகும். இங்குள்ள "ப்ரோவாச – உபதேசிக்கக் கடவன்" என்பது இறந்தகால வினையாக உள்ளபோதிலும், இதனை (எப்போதும் நிலைக்கின்ற) விதிமுறை என்றே கொள்ளவேண்டும்; காரணம், "ஸ குருமேவாபி கச்சேத், தஸ்மை ஸ வித்வாந், ப்ரோவாச – அவன் ஆசார்யனையே அண்டவேண்டும், அந்த வித்வான் அவனுக்கு உபதேசிக்கக் கடவன்" என்று விதிமுறையாகவே வாக்கிய அமைப்பு உள்ளதால் ஆகும். அது மட்டும் அல்லாமல், "ஆசார்யன் உபதேசிக்கக் கடவன்" என்று விதிக்கப்படுவதை வேறு எவ்விதத்திலும் அறிய இயலாது என்பதாலும், "ப்ரோவாச" என்பதை இறந்த காலமாக எடுக்காமல், (எப்போதும் நிலைக்கின்ற) விதிமுறை என்றே கொள்ளவேண்டும். "வேதங்களில் உள்ள விதி வாக்கியத்தில் லிட் (இறந்த காலம்) வரலாம்" என்று பாணினி ஸூத்ரம் (3-4-6) – சந்தஸி லுட் லட் லிட: - என்று கூறியுள்ளது காணலாம்.

## அதிகரணம் – 2 - ஜந்மாத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – இந்த ஜகத்தை படைத்தல், காத்தல், அழித்தல் என்ற செயல்களைச் செய்யும் தன்மைகள் மூலமாக ப்ரஹ்மத்தை அறியவேண்டும் என்று கூறப்பட உள்ளது.

**1-1-2 ஜந்மாதி அஸ்ய யத:**

**பொருள்** - இந்த ஜகத்திற்கு ஸ்ருஷ்டி போன்ற செயல்கள் எதனிடமிருந்து ஏற்பட்டதோ (அதுவே ப்ரஹ்மம்).

**வேதாந்தஸாரம்** "விசித்ரமான சேதநம் மற்றும் அசேதநம் ஆகியவை கலந்து காணப்படுவதும், சுகம் மற்றும் துக்கம் ஆகியவற்றை அனுபவிக்கும்விதமாக உண்டானதும் ஆகிய இந்த ஜகத்தின் உற்பத்தி, இருப்பு மற்றும் லயம் ஆகியவை எந்த ஒன்றிடமிருந்து நிகழ்கிறதோ, அதுவே ப்ரஹ்மம் ஆகும் என்பதை ச்ருதி நிரூபணம் செய்கிறது" என்பதே இந்த ஸூத்ரத்தின் பொருளாகும். அந்த ச்ருதி வாக்கியமானது, "தை. (3-1-1) - யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே | யேந ஜாதாநி ஜீவந்தி | யத் ப்ரயந்த்யபி

ஸம்விசந்தி | தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம - யாரிடமிருந்து அனைத்தும் பிறந்தனவோ, பிறந்த பின்னர் யாரிடம் வசிக்கின்றனவோ, யாரிடம் சென்று லயிக்கின்றனவோ, அவனையே அறிய விரும்புவாயாக, அதுவே ப்ரஹ்மம்" என்பதாகும்.

ஸூத்ரத்தில் உள்ள "யத:" என்பதில் காணப்படும் ஐந்தாம் வேற்றுமையானது (உதாரணமாக, "ராமாத் – இராமனிடமிருந்து"), காரணத்தைக் காண்பிக்கிறது. ஏனென்றால், இங்கு "ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம்" ஆகிய மூன்றுக்குமே இந்தப் பதமானது பொதுவாக அமைந்துள்ளதால், இவ்விதமே பொருள் கொள்ளவேண்டும். ஜன்மத்திற்கான காரணம் என்னும்போது நிமித்தகாரணம் மற்றும் உபாதானக்காரணம் ஆகிய இரண்டையுமே கொள்ளவேண்டும் (ஒரு மண்பானைக்கு உபாதானக்காரணம் என்பது மண் ஆகும், நிமித்த காரணம் என்பது குயவன் ஆவான்); இது ஏனென்றால், "யத: - எதனிடமிருந்து" என்றுள்ள ச்ருதி வாக்கியமானது, இந்த இரண்டிற்குமே பொதுவானது ஆகும். இது எப்படி? அவனுக்கு இந்த விஷயத்தில் ப்ரஸித்தி உள்ளதை, தை. (3-1-1) - யதோ வா இமாநி – எந்த ஒன்றிடமிருந்து – என்னும் வாக்கியம் உறுதியாக்குகிறது; இந்த இரண்டு காரணங்களாகவும் உள்ள விஷயத்தில் ப்ரஸித்தி உள்ளது. சாந். (6-2-1) – ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் – தொடக்கத்தில் இந்த ஸத் என்பது மட்டுமே இருந்தது – என்றும், சாந். (6-2-3) - தத் ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி தத் தேஜோ அஸ்ருஜத – "நான் பலவாகக் கடவேன்" என்று ஸங்கல்பம் செய்தது. தொடர்ந்து தேஜஸ்ஸைப் படைத்தது – என்றும் கூறப்படுகிறது; இங்குள்ள "ஸத் ஏவ இதம் அக்ர - தொடக்கத்தில் இந்த ஸத் என்பது மட்டுமே, ஏகம் ஏவ ஆஸித் – அந்த ஒன்று மட்டுமே இருந்தது" என்பதன் மூலம் ப்ரஹ்மத்தின் உபாதானக்காரணமாக உள்ள தன்மை நிர்ணயம் செய்யப்பட்டது. இங்குள்ள "அத்விதீயம் – இரண்டாவது ஏதும் அற்றது" என்பதன் மூலம், ஜகத்திற்கு வேறு ஒரு ஆதாரமான வஸ்து தள்ளப்பட்டது; ஆகவே "ஸத்" என்னும் பதத்தால் கூறப்பட்ட ப்ரஹ்மமே நிமித்த மற்றும் உபாதானக் காரணமாக உள்ளது என்று அறியப்படுகிறது. மேலும், சாந். (6-2-3) - தத் ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய – "நான் பலவாகக் கடவேன்" என்று ஸங்கல்பம் செய்தது – என்பதன் மூலம், பலவிதமான சித் மற்றும் அசித் வஸ்துக்களாக மாறுவதாக ஸங்கல்பம் செய்து, ஸ்ருஷ்டி செய்ததை உணரலாம். ஆகவே, ஸூத்ரத்தில் உள்ள "யத:" என்பதில் காணப்படும் ஐந்தாம் வேற்றுமையானது, காரணத்தைக் காண்பிப்பதாக உள்ளது.

ப்ரஹ்மஸூத்ரத்திலும் கூட, ச்வே. (4-9) - அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விச்வம் ஏதத் - மாயையை உடையவன் (ஈச்வரன்) இந்த ப்ரக்ருதி மூலம் விச்வத்தை ஸ்ருஷ்டிக்கிறான் – என்ற வாக்கியத்தின் மூலமும், அர்த்தங்களில் காணப்படும் முரண்பாடுகள் மூலமும், "ஜகத்தின் நிமித்த மற்றும் உபாதானக் காரணம் ஆகிய இரண்டாகவும் ப்ரஹ்மமே உள்ளது" என்பது (பூர்வபக்ஷியால்) மறுக்கப்படுகிறது. ஆனால் இந்த ஆக்ஷேபங்கள், ப்ர. ஸூ. (1-4-23) - ப்ரக்ருதி: ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்த அநுபரோதாத் - ப்ரஹ்மமே உபாதானக் காரணம் என்றால் மட்டுமே, உறுதிபட உரைக்கும் வாக்கியங்களும் உதாரணங்களும் முரண்படாமல் இருக்கும் – என்றும், ப்ர. ஸூ. (1-4-24) - அபித்யோப்தேசாத் ச - ப்ரஹ்மம் தானே ஸங்கல்பிப்பதாகக் கூறுவதால் – என்றும், ப்ர. ஸூ. (1-4-25) - ஸாக்ஷாத் ச உபயாம்நாநாத் – இந்த இரண்டுவிதமாகவும் (நிமித்தகாரணம் மற்றும் உபாதானக் காரணம்) உள்ளதாக ச்ருதிகள் நேரடியாகவே கூறுவதால் – என்றும், ப்ர. ஸூ. (1-4-26) - ஆத்மக்ருதே: - தன்னைத்தானே ஸ்ருஷ்டிப்பதாகக் கூறுவதால் – என்றும் உள்ள ஸூத்ரங்களால் தள்ளப்படுகின்றன.

**ஆக்ஷேபம்** – அனைத்தையும் எப்போதும் அறியவல்லதும், அனைத்தையும் எப்போதும் செய்யவல்லதும், ஸத்யஸங்கல்பம் கொண்டதும், எந்தவிதமான தோஷங்களும் இல்லாததாக உள்ளதால் அனைத்துவிதமான அபுருஷார்த்தங்களும் அற்றதும் ஆகிய ப்ரஹ்மமே, விசித்ரமான சேதந அசேதங்கள் நிரம்பியதான இந்த ஜகத்ரூபமாகத் தன்னை ஸ்ருஷ்டித்துக் கொண்டது என்பது எவ்விதம் பொருந்தும்? இத்தகைய ஓர் ஆக்ஷேபத்தை ஸூத்ரகாரர் தனக்குத்தானே எழுப்பிக் கொண்டு, அதற்கான சமாதானத்தையும் உரைக்கிறார். அதாவது, ப்ர. ஸூ. (2-1-8) - அபீதௌ தத்வத் ப்ரஸங்காத் அஸமஞ்ஜஸம் - ப்ரளயத்தின்போது உலகத்தைப் போன்றே (ப்ரஹ்மத்திற்கும் மாற்றம் அடைதல் என்னும் தோஷங்கள்) உண்டாகும் என்பதால், (வேதாந்த வாக்கியங்கள்) பொருந்தாமல் போகும் – என்றும், ப்ர. ஸூ. (2-1-20) – இதர வ்யபதேசாத் ஹிதா கரணாதி தோஷ ப்ரஸக்தி: - ப்ரஹ்மத்தை ஜீவனாகக் கூறுவதால், ப்ரஹ்மம் தனக்கு நன்மையைச் செய்து கொள்ளவில்லை, தோஷத்தையே ஏற்படுத்திக் கொள்கிறது – என்றும் உள்ள ஸூத்ரங்களால் ஆக்ஷேபத்தை எழுப்பிக் கொள்கிறார்; இவற்றுக்கான சமாதானங்களை முறையே, ப்ர. ஸூ. (2-1-9) - ந து த்ருஷ்டாந்தபாவாத் - (ப்ரஹ்மத்திடம் தோஷங்கள் ஏற்படாது என்பதால்) வேதாந்த வாக்கியங்கள் பொருந்தாத வாக்கியங்கள் ஆகாது;

உதாரணங்கள் உள்ளதால் – என்றும், ப்ர. ஸூ. (2-1-22) - அதிகம் து பேத நிர்தேசாத் - ப்ரஹ்மம் வேறானது என்று கூறுவதால் – என்றும் உள்ள ஸூத்ரங்களில் உரைக்கிறார்.

**சமாதானம்** - (பல ச்ருதி வாக்கியங்களில் பரமாத்மா மற்றும் ஜீவாத்மா ஆகிய இரண்டும் வெவ்வேறு வஸ்துக்களாகக் கூறப்பட்டதை உரைக்கிறார். இதன் விளைவாக மேலே எழுப்பப்பட்ட ஆக்ஷேபத்தைத் தள்ளுகிறார்) ச்வே. (5-1) – க்ஷரம் து அவித்யா ஹி அம்ருதம் து வித்யா வித்யா அவித்யே ஈசதே யஸ்து ஸ: அந்ய: - அழியக்கூடியது அவித்யை (கர்மம்), அழியாதது வித்யை (ப்ரஹ்மஞானம்), அவித்யை மற்றும் வித்யை ஆகிய இரண்டையும் நியமிப்பவன் ஜீவாத்மாவைக் காட்டிலும் வேறுபட்ட ஈச்வரன் – என்றும், ச்வே. (6-9) - ஸ காரணம் காரணாதிபாதிபோ ந ச அஸ்ய கச்சித் ஜநிதா ந சாதிப: - பரமபுருஷனே அனைத்திற்கும் காரணம்; இந்த்ரியங்களின் அதிபதியாக உள்ள ஜீவாத்மாவின் அதிபதியாக உள்ளான்; அவனை உண்டாக்கியவர்களும், தலைவனும் யாரும் இல்லை – என்றும், ச்வே. (1-10) - க்ஷரம் ப்ரதாநம் அம்ருத அக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவிசதே தேவ ஏக: - ப்ரதானம் என்பது க்ஷரம் (அழியக்கூடியது) எனப்படும். இதனைத் தனது இன்பத்திற்காக கொள்பவன் அக்ஷரம் (ஜீவாத்மா, அழிவற்றவன்) ஆவான். ஒரே தேவன் இந்த இரண்டையும் நியமித்தபடி உள்ளான் – என்றும் கூறப்பட்டது. மேலே உள்ள வாக்கியத்தில் (ச்வே. 1-10), அசேதநக் கூட்டங்களைத் தனது அனுபவத்திற்காகப் பயன்படுத்துவதால், ஜீவாத்மா "ஹர:" என்று கூறப்பட்டான்.

மேலும், கீதை. (15-16) – த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரச்ச அக்ஷர ஏவ ச | க்ஷர: ஸர்வாணி பூதாநி கூடஸ்த: அக்ஷர உச்யதே – க்ஷரம், அக்ஷரம் என்னும் இருவிதமான புருஷர்கள் இந்த லோகத்தில் உள்ளனர். அனைத்து சரீரங்களும் அழியக் கூடியவை, இதில் உள்ள ஜீவாத்மா அழியாதவன் – என்றும், கீதை. (15-17) - உத்தம: புருஷ: த்வந்ய: பரமாத்மா இதி உதாஹ்ருத: | யோ லோக த்ரயம் அவிச்ய பிபர்தி அவ்யய ஈச்வர: - இரண்டுவகையான புருஷர்களைக் காட்டிலும் உயர்ந்தவன், அழிவற்றவன், அனைத்தையும் நியமிப்பவன், அனைத்து லோகங்களையும் வ்யாபித்து நிற்பவன் பரமாத்மா ஆவான் – என்றும், கீதை. (15-18) - யஸ்மாத் க்ஷரம் அதீத: அஹம் அக்ஷராத் அபி ச உத்தம: | அத: அஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: - நான் அழியக்கூடிய ஜட வஸ்துக்களைக் காட்டிலும் மேம்பட்டும், அழியாத ஜீவாத்மாவைக்

காட்டிலும் உயர்ந்தும் நிற்கிறேன். இதனால் ச்ருதி ஸ்ம்ருதிகளில் நான் புருஷோத்தமன் எனப்படுகிறேன் – என்றும் கூறப்பட்டது.

இது போன்ற பல ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி வாக்கியங்களில், பரமாத்மாவை ப்ரத்யகாத்மாவிடமிருந்து (ஜீவாத்மா) வேறுபடுத்திக் கூறப்பட்டதைக் காணலாம்; ஆகவே அபுருஷார்த்தங்களில் உழன்றபடி உள்ள ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும், அவனுடைய அந்தர்யாமியான ப்ரஹ்மம் வேறுபட்டதே ஆகும். இவ்விதமாக உள்ள ப்ரத்யகாத்மா, பரமாத்மாவின் சரீரமாகவும், பரமாத்மா ப்ரத்யகாத்மாவின் ஆத்மாவாகவும் உள்ளான். ப்ரத்யகாத்மா ப்ரஹ்மத்தின் சரீரமாக உள்ளான் என்பதையும், ப்ரஹ்மமே ப்ரத்யகாத்மாவின் ஆத்மாவாக உள்ளது என்பதையும் ப்ரு. (3-7-22) - ய ஆத்மநி திஷ்டந் … யஸ்ய ஆத்மா சரீரம் – யார் ஆத்மாவில் வசிக்கிறானோ … யாருக்கு ஆத்மா சரீரமோ – என்றும், ஸுபால. (7-1) - ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்ய ஏகோ நாராயண: - அனைத்து பூதங்களுடைய ஆத்மா ஆவான்; பாபங்கள் ஏதும் அற்றவனாகவும், தேவர்களுக்கும் தேவனாகவும் உள்ள அவன் நாராயணனே ஆவான் – என்றும் உள்ள நூற்றுக்கணக்கான ச்ருதி வாக்கியங்கள் கூறுகின்றன.

சரீரத்துடன் கூடிய ஆத்மாவிற்கு கார்யமாக உள்ள நிலை ஏற்பட்டபோதிலும், அவன் கார்யப் பொருளாக உள்ள சரீரத்தின் தோஷங்களால் பாதிக்கப்படுவதில்லை; காரணம் குணங்களும் தோஷங்களும் சரீர அளவில் நிற்கின்றன; இதற்கான உதாரணங்களையும் நாம் காணலாம். ஆகவே ப்ரஹ்மத்திற்கு தோஷம் ஏற்படுவதற்கான வாய்ப்பே இல்லை; எனவே, வேதாந்த வாக்கியத்தில் பொருத்தம் இன்மையும் உண்டாகவில்லை; இதனையே ப்ர. ஸூ. (2-1-9) - ந து த்ருஷ்டாந்தபாவாத் - (ப்ரஹ்மத்திடம் தோஷங்கள் ஏற்படாது என்பதால்) வேதாந்த வாக்கியங்கள் பொருந்தாத வாக்கியங்கள் ஆகாது; உதாரணங்கள் உள்ளதால் – என்னும் ஸூத்ரம் கூறுகிறது.

மேலே கூறப்பட்ட ஸூத்ரத்தில் உள்ள “உதாரணம்” என்பது என்ன? சரீரத்துடன் கூடிய ஜீவாத்மா, “தேவன், மனிதன்” என்பது போன்ற சொற்களால் கூறப்படுகிறான். அவனுக்கு “மனிதன், குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், வயோதிகம்” என்பது போன்ற பலவிதமான நிலைகள் ஏற்படுகின்றன. ஆனால், “குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், வயோதிகம்” என்பது போன்ற தோஷங்கள் அனைத்தும் சரீரத்தையே பாதிக்கின்றன

அல்லாமல், ஆத்மாவைத் தீண்டுவது கிடையாது. இதனைப் போன்றே ஆத்மாவிற்கு உரியதான ஞானம், சுகம் போன்றவை சரீரத்தைத் தொடுவதில்லை. ஆகவே காரண நிலை மற்றும் கார்ய நிலை ஆகிய இரண்டிலுமே ப்ரஹ்மமானது ப்ரத்யகாத்மாவைத் தனது சரீரமாகக் கொண்டதாகவும், தான் ப்ரத்யகாத்மாவுடைய ஆத்மாவாகவும் உள்ளது; இந்தக் காரணத்தால் ப்ரஹ்மமானது ப்ரத்யகாத்மாவைக் குறிக்கும் பதத்தால் கூறப்படுகிறது. ப்ரஹ்மமும் ப்ரத்யகாத்மாவும் ஸாமாநாதிகரண்யத்தில் வைக்கப்படுவதால் (பல பொருள்களைக் குறிக்கக்கூடிய சொற்கள், ஒரே வேற்றுமையில் நின்று ஒரே பொருளை உணர்த்துவதே ஸாமாநாதிகரண்யம் ஆகும். உதாரணமாக, "கறுத்த பருத்த யானை"), ப்ரஹ்மத்தை அந்தச் சொல்லால் (அதாவது ப்ரத்யகாத்மா என்னும் சொல்லால்) கூறுவது பிழையில்லை. இந்தக் காரணத்தை உணர்த்துவதற்காகவே (அதாவது ஜீவாத்மா மற்றும் பரமாத்மா ஆகிய இருவரும் ஒன்றே என்பதாகச் சிலர் கூறும் கருத்தை மறுப்பதற்காக), ப்ர. ஸூ. (1-4-20) - ப்ரதிஜ்ஞா ஸித்தேர் லிங்கம் ஆச்மரத்ய: - ஒன்றை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததாகும் என்பது உறுதியாகும் பொருட்டு, ஜீவாத்மாவைக் கூறும் பதத்தால் பரமாத்மாவை கூறுவது அடையாளமாகும் என்று ஆச்மரத்யர் கூறுகிறார் (இந்தக் கருத்தை யாதவப்ரகாசர் ஏற்கிறார்) – என்றும், ப்ர. ஸூ. (1-4-21) - உத்க்ரமிஷ்யத ஏவம் பாவாத் இதி ஔடுலோமி: - சரீரத்திலிருந்து புறப்பட்டு மோக்ஷம் அடையும்போது இவன் ப்ரஹ்மமாகவே ஆவதால் (இங்கு ஜீவனைக் குறிக்கும் பதங்கள் பரமாத்மாவைக் குறிக்கும்) என்று ஔடுலோமி கருதுகிறார் (இது கடந்த ஸூத்ரத்தில் கூறப்பட்ட கருத்திற்கான மறுப்பாக உள்ளது. இதனை பாஸ்கரரும், ஆதிசங்கரரும் ஏற்கிறார்கள்) – என்றும் உள்ள ஸூத்ரங்கள் மூலம், இந்த விஷயத்தில் இரண்டு மதங்களுடைய கருத்தைக் கூறி, இவற்றை ப்ர. ஸூ. (1-4-22) - அவஸ்திதே: இதி காசக்ருத்ஸ்ந: - "பரமாத்மா ஜீவாத்மாவிற்குள் நிற்பதால்", என்று காசக்ருத்ஸ்நர் கருதுகிறார் – என்பதால் மறுத்தார். தை. (2-6-1) - தத் ஸ்ருஷ்ட்வா தத் ஏவ அநுப்ராவிசத் | தத் அநுப்ரவிச்ய ஸத் ச த்யத் ச அபவத் – இந்த அனைத்தையும் படைத்து அதற்குள் புகுந்தான். அதற்குள் புகுந்த இவன், ஸத் என்றும், த்யத் என்றும் (ஜீவாத்மா, அசித்) நின்றான் – என்னும் வாக்கியத்தின் காரணமாக, ப்ரஹ்மமானது ப்ரத்யகாத்மாவின் ஆத்மா ஆகிறது; ஆகவே ப்ரஹ்மத்தை ப்ரத்யகாத்மாவைக் குறிக்கும் சொல்லால் கூறுதலும், ப்ரஹ்மத்தை ப்ரத்யகாத்மாவுடன் ஒரே வேற்றுமையில் (அதாவது ஸாமாநாதிகரண்யத்தில்) படிப்பதும் சரியானதே ஆகும் என்றாகிறது.

ப்ர. ஸூ. (2-1-34) - வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் - பாரபக்ஷம் (ஒருதலையாக நடத்தல்) மற்றும் கருணை இன்மை ஏற்படாது; கர்மம் காரணமாகவே ஆகும் – என்றும், ப்ர. ஸூ. (2-1-35) - ந கர்மா அவிபாகாத் இதி சேத் ந அநாதித்வாத் உபபத்யதே ச அபி உபலப்யதே ச - ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மம் தவிர்த்து ஏதும் இல்லை என்பதால், ஜீவாத்மா இல்லையாகையால், கர்மமும் இல்லை என்று கூறினால், சரியல்ல; ஜீவாத்மா அநாதி என்பதால் பொருந்தும் – என்றும் உள்ள ஸூத்ரங்கள் மூலம், “ஸ்ருஷ்டியில் காணப்படுகின்ற தேவர்கள், மனிதர்கள் என்பது போன்ற ஏற்றத்தாழ்வுகள் அனைத்தும், ஜீவாத்மாக்களுடைய கர்மங்கள் காரணமாகவே அமைகிறது. ஜீவாத்மாக்களும், அவர்களது கர்மங்களுடைய ப்ரவாஹமும் தொடக்கம் அற்றதாகும்”, என்று கூறப்பட்டது. “ஜீவாத்மாக்களும், அவர்களது கர்மங்களுடைய ப்ரவாஹமும் தொடக்கம் அற்றது” என்பது, கட. (5-13) – நித்யோ நித்யாநாம் சேதநச்சேதநாநாம் – நித்யர்களில் நித்யமானவனும், சேதநர்களில் சேதநனும் – என்றும், ச்வே. (1-9) – ஜ்ஞா ஜ்ஞௌ த்வௌ - பிறப்பற்ற இரண்டில் ஒன்று அறிந்ததும் ஒன்று அறியாததுமாகவும் – என்றும் உள்ள ச்ருதி வாக்கியங்களால் அறியப்படுகிறது. ஜீவாத்மாக்களுக்கு தொடக்கம் என்பது இல்லை (அதாவது உற்பத்தி இல்லை) என்றாலும், அனுபவிப்பவன் மற்றும் அனுபவிக்கப்படும் வஸ்து என்பதாக உள்ள சித் மற்றும் அசித் ஆகியவை, ப்ரளய காலத்தில், பல்வேறு பெயர் மற்றும் ரூபம் ஆகியவற்றைக் கொண்டதாகப் பிரித்து அறியக் கூடியதாக இருப்பதில்லை; அப்போது ப்ரஹ்மம் மட்டுமே இருந்தது என்று தீர்மானமாக ஸூத்ரகாரர், ஐத. (1-1) - ஆத்மா வா இதம் ஏக ஏவ அக்ர ஆஸித் ந அந்யத் கிஞ்சந மிஷத் - தொடக்கத்தில் இந்த ஆத்மா மட்டுமே இருந்தது. வேறு எதுவும் அப்போது செயல் புரியவில்லை – என்னும் ச்ருதி வாக்கியத்தின் மூலம், தானும் உரைக்கிறார்.

ப்ரத்யகாத்மா நித்யமானது என்றும், அதற்கு உற்பத்தி இல்லை என்றும் ப்ர. ஸூ. (2-3-18 நாத்மா ச்ருதே: நித்யவாத் ச தாப்ய: - ஆத்மா உற்பத்தி ஆவதில்லை என்று ச்ருதி கூறுவதாலும், அந்த ச்ருதிகள் மூலம் அவை நித்யமானவை என்று அறியப்படுவதாலும் – என்பதால் நிரூபிக்கப்பட்டது. ப்ரத்யகாத்மாவின் ஸ்வரூபமானது ஞானமே ஆகும் (அல்லது அறிபவனாக இருத்தல்) என்னும் கருத்தானது, ப்ர. ஸூ. (2-3-19) - ஜ்ஞ: அத ஏவ - ஆகவே ஜீவாத்மா அறிபவன் ஆகிறான் – என்பதில் கூறப்பட்டது. ப்ரத்யகாத்மாவின் அணு அளவாக உள்ள தன்மை என்பது, ப்ர. ஸூ. (2-3-20) - உத்க்ராந்தி கதி ஆகதீநாம் - சரீரத்திலிருந்து வெளிக்கிளம்புதல், நகர்தல், மீண்டும்

திரும்புதல் ஆகியவை கூறப்படுவதால் – என்பதில் கூறப்பட்டது. அறிபவனாக உள்ள ஆத்மாவே "ஞானம்" என்னும் பதத்தால் கூறப்படுகிறான்; இது ஏனென்றால், அவன் ஞானத்தைத் தனது குணமாகக் கொண்டுள்ளதாலும் (இது தர்மபூத ஞானம் எனப்படும்), ஞானம் மூலம் மட்டுமே அவனை நிரூபணம் செய்ய இயலும் என்பதாலும் ஆகும்; இந்தக் கருத்தானது, ப்ர. ஸூ. (2-3-29) - தத் குண ஸாரத்வாத் து தத் வ்யபதேச: ப்ராஜ்ஞவத் - ஞானம் என்ற குணத்தைச் சாரமாகக் கொண்டுள்ளதால் (சாரம் என்றால் "இன்றியமையாத" என்று பொருள்), ஆத்மாவானது ஞானம் என்று கூறப்படுகிறது. பரமாத்மா (ஆனந்தம் என்று) கூறப்படுவது போன்று – என்றும், ப்ர. ஸூ. (2-3-30) - யாவதாத்ம பாவித்வாத் ச ந தோஷ: தத் தர்சநாத் - ஆத்மா உள்ளவரை ஞானம் தொடர்வதாலும், ஆத்மாவை ஞானம் என்று கூறுவதில் தவறில்லை. இது போன்று கூறப்படுவதைக் காணலாம் – என்றும் உள்ள ஸூத்ரங்களில் கூறப்பட்டது.

ஒரு சிலர் ஞானமே ஆத்மா (அதாவது ஆத்மாவிற்கு அறிவே ரூபம்) என்றும், இந்த்ரியங்கள் முதலானவற்றால் பெறப்பட்ட ஞானமே ஆத்மா என்றும், ஆத்மா விபு (எங்கும் உள்ளவன்) என்றும் கூறுகிறார்கள்; இவற்றில் உள்ள தோஷங்கள் அனைத்தும் ப்ர. ஸூ. (2-3-32) - நித்ய உபலப்தி அநுபலப்தி ப்ரஸங்க: அந்யதர அநியமோ வா அந்யதா - வேறுவிதமாக ஒப்புக்கொண்டால் (ஆத்மா "ஞானம் மட்டும்" என்னும் ஸ்வரூபன், அவன் விபு), ஆத்மாவைக் குறித்த தோற்றம் மற்றும் தோற்றம் இன்மை ஆகியவை எப்போதும் உண்டாகவேண்டும் அல்லது அவை இரண்டில் ஏதேனும் ஒன்று எப்போதும் இருக்கவேண்டும் (தோற்றம் என்றால் அறியப்படுதல்) – என்னும் ஸூத்ரத்தால் கூறப்பட்டன.

ப்ர. ஸூ. (2-3-33) - கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத் - சாஸ்த்ரம் பயனுள்ளது என்றாகவேண்டும் என்றால், ஜீவாத்மா கர்த்தாவாகிறான் – என்றும், ப்ர. ஸூ. (2-3-34) - உபாதநாத் விஹார உபதேசாத் ச - எடுத்துக்கொண்டும் ஸஞ்சரித்துக்கொண்டும் உள்ளதால் (ஜீவாத்மா கர்த்தா ஆகிறான்) – என்றும், ப்ர. ஸூ. (2-3-35) - வ்யாபதேசாத் ச க்ரியாயாம் ந சேத் நிர்தேஶ விபர்யய: - (வைதிக) கார்யங்களில் ஜீவாத்மா கர்த்தா என்று கூறப்படுகிறான் – என்றும், ப்ர. ஸூ. (2-3-36) - உபலப்திவத் அநியம: - தோற்றத்தைப் போன்று நியமங்கள் இல்லாத காரணத்தால் – என்றும், ப்ர. ஸூ. (2-3-37) - சக்தி விபர்யயாத் - (ஆத்மாவிற்கு) அனுபவிக்கும் சக்தி இல்லை என்றாகிவிடுவதால் – என்றும்,

ப்ர. ஸூ. (2-3-38) - ஸமாத்யபாவாத் ச - ஸமாதி நிலையும் இல்லை என்பதால் – என்றும், ப்ர. ஸூ. (2-3-39) - யதா ச தக்ஷா உபயதா – தக்ஷனைப் போன்று இரண்டு விதத்திலும் பொருந்தும் – என்றும் உள்ள ஸூத்ரங்கள் மூலம், "சுபம் மற்றும் அசுபம் ஆகிய இரண்டுவிதமான கர்மங்களையும் ஜீவனே செய்கிறான். இவைகளைச் செய்வது ப்ரகுதி அல்ல" என்று கூறப்பட்டது. இவற்றை ப்ரக்ருதி செய்கிறது என்று கூறினால், ப்ரக்ருதியானது அனைவருக்கும் பொதுவாக உள்ளதால், அது செய்கின்ற கர்மங்களுடைய பலனை அனைவரும் அனுபவிக்கவேண்டும் என்னும் நிலை ஏற்படும். மேலும், ஜீவாத்மாவின் செயலாற்றும் தன்மை என்பது பரமபுருஷனுடைய அனுமதியின் பின்னரே உண்டாகிறது என்பதை ப்ர. ஸூ. (2-3-40) - பராத் து தத் ச்ருதே: – (ஜீவாத்மாவுடைய) அந்த செயலாற்றும் தன்மை என்பது பரமாத்மாவால் உண்டாகிறது என ச்ருதி கூறுகிறது – என்றும், ப்ர. ஸூ. (2-3-41 க்ருத ப்ரயத்நாபேக்ஷ: து விஹித ப்ரதிஷித்த அவையர்த்யாதிப்ய: - அந்தச் சாஸ்த்ரங்கள் வீணாகாமல் இருப்பதற்காக, ஜீவாத்மாவின் முயற்சியை ஸர்வேச்வரன் அனுமதிக்கிறான் – என்றும் உள்ள ஸூத்ரங்கள் கூறுகின்றன.

ப்ரத்யகாத்மா மற்றும் பரமாத்மா ஆகியோருடைய ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவம் ஆகியவை பலவாக உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. அவையாவன: ப்ரத்யகாத்மா கர்மவசப்பட்டவன், துக்கத்தால் பீடிக்கப்படுபவன், அனைத்தையும் எப்போதும் அறியாதவன், மோக்ஷம் என்பது உபாஸனை மூலம் மட்டுமே கிட்டும்படியாக உள்ளவன் ஆவான்; பரமாத்மா எந்தவிதமான தோஷங்களும் அற்றவன், அனைத்தையும் எப்போதும் அறிபவன், ஸத்யஸங்கல்பம் கொண்டவன், அனைத்திற்கும் ஈச்வரன் ஆவான். இவற்றைக் கூறும் வேதாந்த வாக்கியங்களானவை பின்வருமாறு:

ப்ர. ஸூ. (2-3-42) - அம்சோ நாநாவ்யபதேசாத் அந்யதா ச அபி தாச கிதவாதித்வம் அதீயதே ஏகே - ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமாக உள்ளவனே ஆவான், காரணம் ஜீவாத்மா ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று சிலர் கூறுவதாலும், இரண்டிற்கும் வேறுபாடு இல்லை என்று சிலர் கூறுவதாலும், "தாசர், கிதவர்" என்பதாக ப்ரஹ்மத்தைக் கூறுவதாலும் – என்றும், ப்ர. ஸூ. (2-3-43) - மந்த்ரவர்ணாத் - மந்த்ரவர்ணத்தாலும் (ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமே ஆவான்) – என்றும், ப்ர. ஸூ. (2-3-44) - அபி ஸ்மர்யதே - ஸ்ம்ருதியிலும் (ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமே எனப்படுகிறது)

– என்றும், ப்ர. ஸூ. (2-3-45) - ப்ரகாசாதிவத் து ந ஏவம் பர: - ஒளி முதலானவை போன்றாகும். பரமாத்மா ஜீவனை போன்றவன் அல்லன் – என்றும், ப்ர. ஸூ. (2-3-46) - ஸ்மரந்தி ச – ஸ்ம்ருதியிலும் உள்ளது – என்றும் உள்ள ஸூத்ரங்கள்; ச்வே. (4-7) - அநீசயா சோசதி முஹ்யமாந: | ஜுஷ்டம் யதா பச்யத் அந்யமீசமஸ்ய மஹிமாநம் இதரோ வீதசோக: - ஜீவாத்மா ப்ரக்ருதியால் மோகம் அடைந்தவனாக நின்று வருந்துகிறான். அவன் அதே மரத்தில் உள்ளவனும், அனைத்தையும் நியமிப்பவனும் ஆகிய பரமாத்மாவின் மேன்மையை உணர்கிறான். அப்போது இவனுடைய துன்பங்கள் விலகுகின்றன – என்றும், ச்வே. (5-1) – க்ஷரம் து அவித்யா ஹி அம்ருதம் து வித்யா வித்யா அவித்யே ஈசதே யஸ்து ஸ: அந்ய: - அழியக்கூடியது அவித்யை (கர்மம்), அழியாதது வித்யை (ப்ரஹ்மஞானம்), அவித்யை மற்றும் வித்யை ஆகிய இரண்டையும் நியமிப்பவன் ஜீவாத்மாவைக் காட்டிலும் வேறுபட்ட ஈச்வரன் – என்றும், ப்ரு. (4-3-21) – ப்ராஜ்ஞேந ஆத்மநா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் கிஞ்சந வேத ந அநந்தரம் – அனைத்தும் அறிந்த பரமாத்மாவால் நன்றாகத் தழுவி அணைக்கப்பட்டு, அதன் பின்னர் உள்ளும்புறமும் சிறிதும் அறியாதவனாக – என்றும், ச்வே. (4-6) - தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்து அத்தி அநச்நந் அந்யோ: அபிசாகசீதி - இந்த இருவரில் ஒருவன் கர்மம் என்ற அத்திப்பழத்தை உண்கிறான், மற்றொருவன் பார்த்தபடி உள்ளான் – என்றும், ச்வே. (1-19) - ஜ்ஞா ஜ்ஞௌ த்வா அஜௌ ஈச அநீசௌ - அறிந்தவன், அறியாதவன் என்று இரண்டு பிறப்பற்றவர்கள் ஈசன், அநீசன் என்று கூறப்படுகிறார்கள் – என்றும், ச்வே. (1-6)- ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேந அம்ருதத்வமேதி - ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வெவ்வேறானவர்கள் என்று அறிந்தவன், அத்தகைய ஞானம் காரணமாகவே பரமாத்மாவின் ப்ரீதிக்கு இலக்காகி, மோக்ஷம் அடைகிறான் – என்றும், முண். (3-1-3) - யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம் கர்த்தாரம் ஈசம் புருஷம் ப்ரஹ்மம் யோநிம் | ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யம் உபைதி - பொன்னிறம் கொண்டவனும், அனைத்தையும் படைப்பவனும், அனைத்தையும் நியமிப்பவனும், மிகவும் உயர்ந்தவனும், இந்த ஜகத்காரணமும் ஆகிய பரமபுருஷனை எப்போது ஒரு ஞானி காண்கிறானோ, அப்போதே அவன் தனது புண்யபாபங்களை உதறியவனாக, தூய்மை நிறைந்து, பரமபுருஷனுடன் உயர்ந்த ஒற்றுமையை அடைகிறான் – என்றும், ச்வே. (6-9) - ஸ காரணம் காரணாதிபாதிபோ ந ச அஸ்ய கச்சித் ஜநிதா ந சாதிப: - பரமபுருஷனே அனைத்திற்கும் காரணம்; இந்த்ரியங்களின் அதிபதியாக உள்ள ஜீவாத்மாவின் அதிபதியாக உள்ளான்; அவனை

உண்டாக்கியவர்களும், தலைவனும் யாரும் இல்லை – என்றும், முண். (1-1-9) – ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் - அனைத்தையும் அறிந்தவன், அனைத்தையும் உணர்ந்தவன் – என்றும், ச்வே. (6-8) - பராஸ்ய சக்தி: விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியா ச – அவனுடைய சக்தியானது பலவிதமாகவும், ஞானம் பலம் மற்றும் செய்கைகளைக் இயல்பாகவே கொண்டதாகவும் உள்ளது – என்றும், ச்வே. (6-19) - நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜனம் - அவயவம் (உறுப்புகள்) இல்லாதது, செயல்பாடு இல்லாதது, சாந்தமானது, தோஷம் அற்றது, குறை அற்றது – என்றும், கட. (5-13) – நித்யோ நித்யாநாம் சேதநச்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந் – நித்யர்களில் நித்யமானவனும், சேதநர்களில் சேதநனும் ஆகிய அவன் அனைவருடைய விருப்பத்தையும் நிறைவேற்றுகிறான் – என்றும்; நித்யமாகவும் பலவாகவும் உள்ள சேதநர்களுடைய விருப்பங்கள் அனைத்தையும் நித்யமாக உள்ள ஒரு சேதநன் நிறைவேற்றுகிறான் என்று கருத்து; மஹா. நா. (13-1) - பதிம் விச்வஸ்ய ஆத்ம ஈச்வரம்– அனைத்து உலகிற்கும் பதியாக உள்ளவன், தன்னைத்தானே நியமிப்பவன் – என்றும் உள்ள பல வாக்கியங்கள் ஆகும்.

அனைத்து ஜீவாத்மாக்களிலும் பரமாத்மா வ்யாபித்து நிற்பதால், பரமாத்மா அவர்களில் ஒருவனாகப் படிக்கப்பட்டான். இதனைக் கூறும் வாக்கியங்களானவை: சாந். ( 6-8-7) - தத் த்வம் அஸி - நீ அந்த ப்ரஹ்மம் ஆகிறாய் – என்றும், ப்ரு. (2-5-19) - அயம் ஆத்மா ப்ரஹ்ம – இந்த ஆத்மா ப்ரஹ்மமே – என்றும், ஐதரேய ஆரண்யகம் (2-2-46) – ய: அஸௌ ஸ: அஹம் ய: அஹம் ஸ: அஸௌ – அது எந்தத் தேவதையோ அது நானே, எது நானோ அதுவே அந்தத் தேவதை – என்றும், ப்ரு. (1-4-10) – அதயோ அந்யாம் தேவதாம் உபாஸ்தே அந்ய: அஸௌ அந்ய: அஹம் அஸ்மீதி ந ஸ வேத – அதன் பின்னர், “அது வேறு, நான் வேறு” என்று யார் ஒருவன் அந்தத் தேவதையைத் தன்னிலும் வேறாக உபாஸிக்கிறானோ, அவன் ப்ரஹ்மத்தை அறிவதில்லை – என்றும், ப்ரு. (1-4-7) - அக்ருத்ஸ்நோ ஹி ஏஷ … ஆத்மா இதி ஏவ உபாஸீத: - ஆத்மா பூர்ணமானவன் அல்லன் … ப்ரஹ்மத்தையே (தன்னுடைய) ஆத்மாவாக உபாஸிக்கக் கடவன் – என்றும், ப்ரஹ்மஸூக்தம் - ப்ரஹ்ம தாசா: ப்ரஹ்ம தாஸா ப்ரஹ்ம இமே கிதவா: - செம்படவர்கள் ப்ரஹ்மம், அடிமைகள் ப்ரஹ்மம், சூதாடுபவர்கள் ப்ரஹ்மம் – என்றும் உள்ளவை ஆகும்.

மேலே கூறப்பட்ட இரண்டுவிதமான நிரூபணங்களுக்கு இடையே முரண்பாடு உண்டாகக்கூடாது என்றால், ஜீவாத்மா பரமாத்மாவின் அம்சம் என்றே இருத்தல்

வேண்டும். இந்தக் கருத்தானது, தகுந்த ந்யாயத்தின் அடிப்படையில் மட்டும் கூறப்படுவதில்லை; ஜீவாத்மா பரமாத்மாவின் அம்சமாகவே உள்ளான் என்பதை ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளில் காணலாம். அவையாவன: சாந். (3-12-6) – பாதோஸ்ய விச்வா பூதாநி - அனைத்து உயிர்களும் அவனுடைய ஒரு பாதம் ஆகும் – என்றும், கீதை. (15-7) – மம ஏவ அம்சோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந: - ஜீவர்கள் உள்ள இந்த லோகத்தில் எப்போதும் உள்ள ஜீவாத்மாக்கள் எனது ஒரு அம்சமே ஆவர் – என்றும் உள்ளவை ஆகும்.

அம்சம் என்றால், ஒரு வஸ்துவின் ஒரு பகுதியே ஆகிறது. இவ்விதம் உள்ளபோது, அந்த இரண்டும் (அம்சம் மற்றும் அம்சீ) ஒரே வஸ்து என்றே ஆகிறது அல்லவோ என்னும் ஐயம் எழலாம். இந்த ஐயத்தை, ப்ர. ஸூ. (2-3-45) - ப்ரகாசாதிவத் து ந ஏவம் பர: - ஒளி முதலானவை போன்றாகும். பரமாத்மா ஜீவனைப் போன்றவன் அல்லன் – என்னும் ஸூத்ரம் விலக்குகிறது. வஸ்துக்களுடைய விசேஷணமாக (அதாவது வஸ்துக்களை தனித்து அடையாளம் காட்டக்கூடியவையாக; உதாரணமாக பாலில் உள்ள வெண்மை என்பது விசேஷணம், பால் என்பது விசேஷ்யம் எனப்படும்) உள்ள ப்ரகாசம், ஜாதி, குணம் மற்றும் சரீரம் ஆகியவை, "அக்னி, ஒரு ஜாதியில் உள்ள தனிப்பொருள் (இது வ்யக்தி எனப்படும்), குணத்தைக் கொண்ட வஸ்து, ஆத்மா" என்பது போன்றவற்றுடன் சேர்ந்தே காணப்பட்டாலும், அவை அந்தந்த வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டவையே ஆகும். இவ்விதமாக உள்ள ப்ரகாசம், ஜாதி, குணம் மற்றும் சரீரம் ஆகியவை, அந்தந்த வஸ்துக்களுடைய அம்சமாக உள்ளதையும் நாம் காண்கிறோம். இதனைப் போன்றே ப்ரத்யகாத்மாவைத் தனது சரீரமாகக் கொண்ட பரமாத்மாவின் அம்சமாகவே ப்ரத்யகாத்மா உள்ளான். இவ்விதம் தன்னுடைய அம்சமாகவே உள்ள ஜீவாத்மாவின் ஸ்வபாவங்கள், பரமாத்மாவிடம் காணப்படுவதில்லை; உலகில் பொதுவாகவே அனைத்து "விசேஷணம் மற்றும் விசேஷ்யம்" ஆகியவற்றின் ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவங்களில் வேறுபாடு உள்ளன (உதாரணமாக பால் மற்றும் அதன் வெண்மை நிறம் ஆகிய இரண்டின் ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவங்களில் வேறுபாடு உள்ளன). ஆகவே ப்ர. ஸூ. (2-3-33) - கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத் - சாஸ்த்ரம் பயனுள்ளது என்றாகவேண்டும் என்றால், ஜீவாத்மா கர்த்தாவாகிறான் – என்றும், ப்ர. ஸூ. (2-3-40) - பராத் து தத் ச்ருதே: – (ஜீவாத்மாவுடைய) அந்த செயலாற்றும் தன்மை என்பது பரமாத்மாவால் உண்டாகிறது என ச்ருதி கூறுகிறது – என்றும் உள்ள ஸூத்ரங்களுக்கு இடையே முரண்பாடு இல்லை என்றாகிறது.

இவ்விதமாக ப்ரகாசம் மற்றும் சரீரம் போன்று, ஜீவாத்மாக்கள் பரமாத்மாவின் அம்சமே ஆவர் என்பதைப் பராசரர் முதலானவர்கள் கூறுகிறார்கள்; ஸ்ரீவிபு. (1-22-56, 57) - ஏகதேச ஸ்திதஸ்ய அக்நே: ஜ்யோத்ஸ்நா விஸ்தாரிணீ யதா || பரஸ்ய ப்ரஹ்மண: சக்தி: தத் ஏதம் அகிலம் ஜகத் - ஒரே இடத்தில் உள்ள அக்னியின் ஜ்யோதியானது அனைத்து இடங்களிலும் பரவுவது போன்று பரப்ரஹ்மத்தின் சக்தியானது இந்த அனைத்து ஜகத்திலும் பரவி நிற்கிறது – என்றும், ஸ்ரீ. விபு. (1-22-38) - யத் கிஞ்சித் ஸ்ருஜ்யதே யேந ஸத்வ ஜாதோந வை த்விஜ | தஸ்ய ஸ்ருஜஸ்ய ஸம்பூதௌ தத் ஸர்வம் வை ஹரே: - அந்தணரே! இந்த உலகில் எந்த ஒரு ப்ராணியால் எந்த ஒரு ப்ராணி படைக்கப்படுகிறதோ, படைக்கப்படும் அந்த ப்ராணியின் உற்பத்திக்குக் காரணமாக, அந்த ப்ராணியை ஸ்ருஷ்டித்த ப்ராணியின் அந்தர்யாமியான ஸ்ரீஹரியே உள்ளான் – என்றும், ஸ்ரீவிபு. (1-22-20) – தே ஸர்வே ஸர்வபூதஸ்ய விஷ்ணோரம்ஸம் உத்பவா: - எந்த உயிர்களெல்லாம் உற்பத்தி ஆகின்றனவோ அவை அனைத்தும் விஷ்ணுவின் அம்சங்களே ஆகும் – என்றும் உள்ளது காணலாம்.

அல்லது ஒரு சிலர், “ப்ரஹ்மத்திற்கு உண்டாகும் உபாதி (உபாதி என்றால், இயல்பாகவே இல்லாமல், உண்டாக்கப்பட்ட ஒரு வரையறை ஆகும். உதாரணமாக, ஆத்மாவிற்குச் சரீரம் என்பது உபாதி ஆகும்) என்னும் தோஷத்தால், அது பலவாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் ப்ரத்யகாத்மாவாக நின்று, அவை ப்ரஹ்மத்தின் அம்சங்களாக உள்ளன. இந்த உபாதிகள் உண்மையானதாகவோ அல்லது உண்மை அற்றதாகவோ இருக்கலாம். வேதாந்த ஞானம் மூலம் இந்த உபாதிகள் விலகுகின்றன”, என்று கூறக்கூடும். இந்த வாத்ங்கள் அனைத்தும், ப்ர. ஸூ. (2-3-49) - ஆபாஸ ஏவ ச - (மேலே உள்ள பூர்வபக்ஷ கருத்து) தோஷம் உள்ளதாகக் காணப்படுகிறது – என்பது தொடங்கி கூறப்படுகிறது.

ஆக, அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்டுள்ள ப்ரஹ்மமானது, அவை அனைத்தின் ஆத்மாவாக உள்ளது. ஒரு சில நேரங்களில் (அதாவது ப்ரளயத்தின்போது), சித் மற்றும் அசித் வஸ்துக்களானவை பெயர் மற்றும் உருவம் என்னும் வேறுபாடுகள் அற்ற நிலையில் உள்ளன; அப்போது அவை ப்ரஹ்மத்தின் சரீரங்களாக உள்ளபோது, அந்த நிலையானது, ப்ரஹ்மத்தின் காரணநிலை எனப்படும். ஒரு சில நேரங்களில் (அதாவது ஸ்ருஷ்டியின் பிறகு), சித் மற்றும் அசித்

வஸ்துக்களானவை பெயர் மற்றும் உருவம் என்னும் வேறுபாடுகளுடன் கூடிய நிலையில் உள்ளன; அப்போது அவை ப்ரஹ்மத்தின் சரீரங்களாக உள்ளபோது, அந்த நிலையானது, ப்ரஹ்மத்தின் கார்யநிலை எனப்படும். ஆக எந்த நிலையாக இருந்தாலும், அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துக்கள் ப்ரஹ்மத்தின் சரீரங்களாகவே உள்ளன; ஆயினும், ப்ரஹ்மத்தின் சரீரங்களாக உள்ள சேதந அசேதநங்கள் மட்டுமே மாறுதல்கள், அபுருஷார்த்தங்களை அடைதல் ஆகியவற்றுடன் கூடியவையாக உள்ளன. ஆனால் அவை அனைத்தின் ஆத்மாவாக உள்ள ப்ரஹ்மமானது அனைத்துவிதமான தாழ்வுகளும் அற்றதாவும், எல்லையற்ற எண்ணற்ற குணங்களான ஞானம் மற்றும் ஆநந்தம் ஆகியவற்றைக் கொண்டதாகவும், இவ்விதமான குணங்களுடைய ஸமுத்ரமாகவும் உள்ளது. தை. (3-1-1) - யதோ வா இமாநி பூதாநி - யாரிடமிருந்து அனைத்தும் பிறந்தனவோ – என்பது போன்ற வாக்கியங்கள், "ப்ரஹ்மமே இந்த ஜகத்தின் நிமித்த மற்றும் உபாதானக்காரணம்" என்று கூறுகின்றன. ஆகவே, "எந்த ஒன்றிலிருந்து இந்த ஜகத்தானது உண்டானதோ, அதுவே ப்ரஹ்மம் ஆகும்" என்று சரியாகவே கூறப்பட்டது.

சாந். (6-2-1) – ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் ஏகம் ஏவ அத்விதீயம் - குழந்தாய்! இந்த உலகமானது ஸ்ருஷ்டிக்கு முன்பு ஸத் என்ற ஒன்றாக மட்டுமே இருந்தது, இரண்டாவது என ஏதும் அற்றதாக இருந்தது – என்றும், சாந். (6-2-3) - தத் ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய – "நான் பலவாகக் கடவேன்" என்று ஸங்கல்பம் செய்தது – என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த வாக்கியங்களுடைய பொருள் இதுவே ஆகும்: ப்ரு. (3-7-22) – யஸ்ய ஆத்மா சரீரம் – யாருக்கு இந்த ஆத்மா சரீரமோ – என்றும், ஸுபால. (7-1) – யஸ்ய அக்ஷரம் சரீரம் | யஸ்ய ப்ருதிவீம் சரீரம் | யஸ்ய அவ்யக்தம் சரீரம் | ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்ய ஏகோ நாராயண: - யாருக்கு அக்ஷரம் சரீரமோ, யாருக்கு ப்ருதிவீ சரீரமோ, யாருக்கு அவ்யக்தம் சரீரமோ, அவன் அனைத்து பூதங்களுடைய ஆத்மா ஆவான்; பாபங்கள் ஏதும் அற்றவனாகவும், தேவர்களுக்கும் தேவனாகவும் உள்ள அவன் நாராயணனே ஆவான் – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலமாக, "அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துக்களை ப்ரஹ்மமானது எப்போதுமே தனது சரீரமாகக் கொண்டுள்ளது" என்று கூறப்படுகிறது. ஆகவே, இப்போது பெயர் மற்றும் ரூபம் ஆகிய வேறுபாடுகளைக் கொண்டவையாக ஸ்தூல நிலையில் உள்ள சித் மற்றும் அசித் வஸ்துக்கள் அனைத்தும், ப்ரளய காலத்தின்போது பெயர் மற்றும் ரூபம் ஆகிய வேறுபாடுகள் இன்றி ஸூக்ஷ்ம நிலையில் ப்ரஹ்மத்தின் ஒரே சரீரமாகக்

காணப்படுகின்றன. அப்போது, தனக்குத் தானே அனைத்தையும் அறியக்கூடியதும், அனைத்து வலிமையும் கொண்டதும் ஆகிய ப்ரஹ்மமானது, வேறு ஒரு நிமித்த காரணத்தின் அவசியம் இல்லாமல், தான் மட்டுமே இருந்தது என்று கருத்து.

அடுத்து, சாந். (6-2-3) - தத் ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய – "நான் பலவாகக் கடவேன்" என்று ஸங்கல்பம் செய்தது – என்று கூறப்பட்டுள்ளது. இந்த வாக்கியத்தின் பொருள் இதுவே ஆகும்: (ப்ரளய காலத்தில்) பெயர் மற்றும் ரூபம் ஆகிய வேறுபாடுகள் இன்றி, ஸூக்ஷ்ம வடிவில் உள்ள சித் மற்றும் அசித் வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்டுள்ளதால், ப்ரஹ்மமானது ஒரே வஸ்துவாக உள்ளது. அப்போது, பெயர் மற்றும் ரூபம் ஆகியவற்றில் வேறுபாடுகள் உண்டாவதற்குத் தகுதியானபடியாக ஸ்தூல நிலையை அடைந்து, "பலவாக ஆவேன்" என்று ப்ரஹ்மம் எண்ணியது. இங்குள்ள "ஸ்யாம் – ஆவேன்" மற்றும் "ப்ரஜாயேய – பிறப்பேன்" ஆகிய இரண்டும் முறையே வ்யஷ்டி மற்றும் ஸமஷ்டி ஸ்ருஷ்டியைக் கூறும் சொற்களாகும் (வ்யஷ்டி என்பது தனித்தனியாக உண்டாக்குதல், ஸமஷ்டி என்பது சேரச் செய்வது). அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துகளும், தங்களுக்கும் பரமாத்மாவிற்கும் இடையே ப்ரளய காலத்தில், "எளிதில் அறிய இயலாத வேற்றுமை" என்று கூறத் தகுந்ததாக உள்ள ஸூக்ஷ்ம நிலையை அடைகின்றன என்பதை அனைத்து வேதாந்திகளும் ஏற்கிறார்கள். இத்தகைய வேற்றுமையானது, "எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ளதான அவித்யையால் உண்டாகிறது", என்று ஒரு சில வேதாந்திகளும் (அத்வைதி), "ப்ரஹ்மத்திற்கு உண்டாகும் உபாதியால் ஏற்படுகிறது", என்று வேறு சில வேதாந்திகளும் (பாஸ்கரர் மற்றும் யாதவ ப்ரகாசர்) கூறுகிறார்கள். இந்த இரண்டு உபதேசங்களிலும், "அஜ்ஞானத்தால் ப்ரஹ்மம் பீடிக்கப்பட்டுள்ளது, ப்ரஹ்மம் உபாதியை அடைந்துள்ளது", என்ற கருத்தைக் காணலாம். ஆனால் இந்த இரண்டு ஸித்தாந்தங்களும், அனைத்து ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளுக்கு முரணாகவே உள்ளன. ஆனால் இந்த இரண்டையும் (அவித்யை, உபாதி) நாம் ஏற்காத காரணத்தால், நம்முடைய ஸித்தாந்தத்தில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை.

## அதிகரணம் – 3 – சாஸ்த்ரயோநித்வாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – சாஸ்த்ரங்கள் (வேத வேதாந்தங்கள்) மூலம் மட்டுமே ப்ரஹ்மமானது அறியத்தக்கதாகும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-1-3 சாஸ்த்ர யோநித்வாத்**

**பொருள்** - சாஸ்த்ரத்தை மட்டுமே தன்னை அறிவதற்கான காரணமாக (ப்ரஹ்மம்) கொண்டுள்ளதால்.

**வேதாந்தஸாரம்** - ப்ரஹ்மமானத்து அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்டுள்ளதால், அத்தகைய ப்ரஹ்மமே இந்த ஜகத்தின் நிமித்த மற்றும் உபாதானக் காரணம் என்றாகிறது. இந்தக் கருத்தை, அனுமானத்தால் அறிய இயலாது. இதனை சாஸ்த்ரத்தால் மட்டுமே அறிய இயலும். இந்தக் காரணத்தால்தான், தை. (3-1-1) - யதோ வா இமாநி பூதாநி – எந்த ஒன்றிடமிருந்து அனைத்து பூதங்களும் – என்னும் வாக்கியமானது, அனைத்து ஜகத்திற்கும் ஒரே காரணமாக உள்ள ப்ரஹ்மத்தைப் போதிக்கிறது என்று கருத்து.

அதிகரணம் – 4 - ஸமந்வயாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - சாஸ்த்ரமானது ப்ரஹ்மத்தை புருஷார்த்தமாகவே உணர்த்துகிறது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-1-4 தத் து ஸமந்வயாத்**

**பொருள்** - புருஷார்த்தமாகவே கூறப்படுவதால் (சாஸ்த்ரம் ப்ரமாணமே ஆகும்).

**வேதாந்தஸாரம்** - ஸமந்வய என்பது புருஷார்த்தத்துடன் ஸம்பந்தம் கொண்டிருத்தல். ப்ரமாணமாக உள்ள சாஸ்த்ரத்திற்கு, புருஷார்த்தத்தைப் போதிப்பதே நோக்கமாக உள்ளது. ஆனால் அதே நேரத்தில் அனைத்து சாஸ்த்ரங்களும், “ப்ரஹ்மமானது தன்னுடைய ஸ்வரூபம், குணங்கள், விபூதிகள் ஆகியவற்றால் அனுபவிக்கப்படும்போது, தனக்கும் மற்றவர்களுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல் எல்லையற்ற ஆனந்த ரூபமாகவே உள்ளது. இப்படிப்பட்ட ப்ரஹ்மமே உயர்ந்த புருஷார்த்தம் ஆகும்”, என்று

உரைக்கின்றன. ஆகவே ப்ரஹ்மமானது சாஸ்த்ரத்தால் மட்டுமே அறியப்படக்கூடியது என்று உரைப்பது பொருத்தமே என்பதால், எந்தவிதமான தோஷமும் இல்லை.

## அதிகரணம் - 5 - ஈக்ஷத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** ஸத் என்று கூறப்படுகின்ற ஜகத்காரணம் மூலப்ரக்ருதி அல்ல; அது பரம்பொருளான நாராயணனையே குறிக்கும் என்று நிரூபிக்கப்பட்ட உள்ளது.

### 1-1-5 ஈக்ஷதே: ந அசப்தம்

**பொருள் -** ஸத்வித்யையில் கூறப்படும் "ஸத்" என்பது, சப்தத்தால் மட்டுமே அறியப்படாததான மூலப்ரக்ருதி அல்ல; ஸங்கல்பம் கூறப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் -** அனுமானத்தால் அறியப்படும் ப்ரதானமே இங்கு "அசப்தம்" என்னும் சொல்லால் கூறப்படுகிறது. ப்ரதானமானது வேதாந்தத்தால் அறியப்படுவதில்லை. ஏனென்றால், உபநிஷத் வாக்கியத்தில் "ஈக்ஷதே – எண்ணியது" என்று கூறப்படுவதால் ஆகும். சாந். (6-2-1) – ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் ஏகம் ஏவ அத்விதீயம் - குழந்தாய்! இந்த உலகமானது ஸ்ருஷ்டிக்கு முன்பு ஸத் என்ற ஒன்றாக மட்டுமே இருந்தது, இரண்டாவது என ஏதும் அற்றதாக இருந்தது – என்றுள்ள வாக்கியத்தைத் தொடர்ந்து வரும் வாக்கியமான, சாந். (6-2-3) - தத் ஐக்ஷத பஹுஸ்யாம் – "நான் பலவாகக் கடவேன்" என்று ஸங்கல்பம் செய்தது – என்பதில் உள்ள "ஈக்ஷ" என்பது ஜகத்காரணதிற்கான செயல்பாட்டைக் கூறுவதாக உள்ளது.

### 1-1-6 கௌண: சேத் ந ஆத்மசப்தாத்

**பொருள் -** ஸத் என்ற பதத்திற்குக் கூறப்பட்ட ஸங்கல்பம் என்பது அமுக்யமானது (லக்ஷணையாகக் கூறப்பட்டது) என்று கூறுவது சரியல்ல. ஸத் என்பதைக் குறித்து ஆத்மா என்ற பதம் உபயோகப்படுத்தப்பட்டதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - சாந். (6-2-3) - தத்தேஜ ஐக்ஷத - அக்னி ஸங்கல்பித்தது – என்னும் வாக்கியத்தின் அசேதந வஸ்து விஷயத்தில் கூட "ஈக்ஷ" என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இங்கு இந்தத் தாதுவானது கௌணமாக (அதாவது அமுக்யமான பொருளில்) வந்துள்ளது. இதனைப் போன்றே ப்ரதானத்திக் குறித்து உள்ள வாக்கியத்திலும் கூட, "ஈக்ஷ" என்னும் தாதுவானது கௌணமாக (அதாவது அமுக்யமான பொருளில்) வந்துள்ளது என்றே கொள்ளவேண்டும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – இவ்விதம் உரைப்பது சரியல்ல. இந்த பகுதியில், எந்த வஸ்துவானது "ஸத்" என்ற பதத்தால் கூறப்பட்டதோ, அந்த வஸ்துவே சேதநமாகிய "ஆத்மா" என்ற பதத்தாலும் கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து, சாந். (6-8-7) – ஸ ஆத்மா, தத் த்வம் அஸி ச்வேதகேது - இதுவே அந்த ஆத்மா, ச்வேதகேதுவே! நீயே அதுவாகிறாய் – என்று உள்ளது.

மேலும், தேஜஸ் முதலானவற்றைக் குறித்து "ஈக்ஷணம் – எண்ணுதல்" கூறப்பட்டதும் அமுக்யமான பொருளில் அல்ல. தேஜஸ் முதலான சொற்கள் அனைத்தும், அந்த வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்டுள்ள ப்ரஹ்மத்தையே குறிப்பதாகும். சாந். (6-3-2) – அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி – எனது அம்சமான ஜீவனைக் கொண்டு உட்புகுந்து, பெயர் மற்றும் ரூபங்களை அளிப்பேன் – என்பதற்கு ஏற்ப, ப்ரஹ்மமானது தனது சரீரமாகவே உள்ள ஜீவாத்மா மூலமாக அனைத்தின் உள்ளேயும் புகுந்து நிற்பதால், அனைத்து வஸ்துக்களுக்கும் பெயர் மற்றும் ரூபங்கள் கொண்டு வேறுபடுத்தக்கூடிய நிலை உண்டாகிறது. தை. (2-6) – தத் ஸ்ருஷ்ட்வா | தத் ஏவ அநுப்ராவிசத் | தத் அநுப்ரவிச்ய | ஸத் ச த்யத் ச அபவத் | நிருக்தம் ச அநிருக்தம் ச | நிலயநம் ச அநிலயநம் ச | விஜ்ஞாநம் ச அவிஜ்ஞாநம் ச | ஸத்யம் ச அந்ருதம் ச ஸத்யம் அபவத் – அது அனைத்தையும் ஸ்ருஷ்டித்தது; இப்படியாக ஸ்ருஷ்டித்த பின்னர் அவற்றுள் புகுந்தது; புகுந்த பின்னர், "ஸத் – த்யத் (சேதந, அசேதந)" என்றும், "இது" என்று காண்பிக்கக் கூடிய வஸ்துக்களாகவும், "இது" என்று காண்பிக்க இயலாத வஸ்துக்களாகவும், அனைத்திற்கும் ஆதாரமாகவும், ஆதாரமாக இல்லாததாகவும், சேதனமாகவும், அசேதனமாகவும், மாறுபடாததாகவும், மாறுபடுவதாகவும் ஆனது; இப்படியாக ஆன பின்னர் (அல்லது பின்னரும்) தனது ஸ்வரூபத்துடன் இருந்தது – என்ற வாக்கியத்தில், "சேதநம் மற்றும் அசேதநம் குறித்து தனித்தனியாக நிரூபிக்கப்பட்டு, அவை

இரண்டின் உள்ளே ப்ரஹ்மமானது உட்புகுந்து, ஸத் மற்றும் த்யத் என்று கூறப்பட்டது", என்று தெளிவாக்கப்பட்டது. இது அதே ப்ரகரணத்தில் உள்ளது.

**1-1-7 தந்நிஷ்டஸ்ய மோக்ஷ உபதேசாத்**

**பொருள்** - ஸத் எனப்படும் ஜகத்காரணப் பொருளை உபாஸிப்பவனுக்கு மோக்ஷம் கூறப்பட்டதால்.

**வேதாந்தஸாரம்** - ஸத் என்னும் வஸ்துவை உபாஸிப்பவனுக்கு மோக்ஷம் கிட்டுவதாக உபதேசிக்கப்பட்டுள்ளதாலும், ஜகத்காரணமாகக் கூறப்பட்டுள்ள ஸத் என்பது ப்ரதானம் அல்ல. அதாவது, சாந். (6-14-2) – தாவத் ஏவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யேத ஸம்பத்ஸ்யே - ஸத் என்ற வஸ்துவை உபாஸிப்பவனுக்கு, சரீரம் விழும்வரை மட்டுமே மோக்ஷம் அடைவதில் தாமதம் உண்டாகிறது; சரீரம் விழுந்தவுடன் மோக்ஷம் அடைகிறான் – என்றுள்ள வாக்கியம் மூலம், ஸத் என்பதை உபாஸிப்பவனுக்கு மோக்ஷம் கூறப்பட்டுள்ளது. ப்ரதானமே ஜகத்காரணம் என்று கூறுபவர்கள் கூட, ப்ரதானமானது தன்னை உபாஸிப்பவனுக்கு மோக்ஷம் அளிப்பதாகக் கூறவில்லை.

**1-1-8 ஹேயத்வா வசநாத் ச**

**பொருள்** - ஸத் என்பதற்குத் தாழ்வு உரைக்கப்படாத காரணத்தால் அது ப்ரதானம் அல்ல.

**வேதாந்தஸாரம்** - ப்ரதானமே ஜகத்காரணம் என்று ஏற்கப்பட்டிருந்தால், "ஸத் என்பதன் மூலம் கூறப்படுவது தள்ளப்படவேண்டியதாகும்", என்றே கூறப்பட்டிருக்கும். ஆனால் அவ்விதம் கூறப்படவில்லை. சாந். (6-8-7) – தத் த்வம் அஸி – நீயே அதுவாகிறாய் – என்பதன் மூலம் மோக்ஷ உபாயமாக இருப்பதால், ஸத் என்பதையே த்யானிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**1-1-9 ப்ரதிஜ்ஞாவிரோதாத்**

**பொருள்** - ப்ரதிஜ்ஞைக்கு விரோதமாக உள்ளதாலும்.

**வேதாந்தஸாரம் -** “ப்ரதானம் ஜகத்காரணம்” என்று உரைத்தால், “ஒன்றைக் குறித்து அறிந்தால், அனைத்தையும் குறித்து அறிந்ததாகும் (அதாவது ஸத் என்ற வஸ்துவைப் பற்றி அறிந்தால், உலகில் உள்ள அனைத்து வஸ்துக்களைப் பற்றியும் அறிந்ததாகிவிடுகிறது)” என்று இந்தப் பகுதியின் தொடக்கத்தில் கூறப்பட்ட ப்ரதிஜ்ஞையுடன் முரண்பாடு உண்டாகிறது. ஆகவே ப்ரதானம் ஜகத்காரணம் அல்ல. சாந். (6-1-1) – யேந அச்ருதம் ச்ருதம் பவதி – எதனைக் குறித்துக் கேட்டால், கேட்கப்படாதவையும் கேட்கப்பட்டதாக ஆகிறதோ – என்ற வாக்கியத்தின் மூலம், “ஸத் என்னும் சப்தத்தால் கூறப்படும் வஸ்துவைக் குறித்த ஞானமானது, அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துக்கள் அதன் கார்யமாகவே உள்ளதால், அவற்றைக் குறித்த ஞானத்தை உண்டாக்குகிறது”, என்னும் ப்ரதிஜ்ஞை ஏற்படுகிறது. ப்ரதானமானது சேதநங்களை உண்டாக்காது என்பதால் (அல்லது சேதநங்கள் ப்ரதானத்தின் கார்யம் அல்ல என்பதால்), ப்ரதானமே ஜகத்காரணம் என்று கூறும் வாதங்களில் விரோதம் உண்டாகிறது. ப்ரதானத்தைக் காட்டிலும் வேறாக உள்ள ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்று ஏற்கும் மதத்தில், சேதந அசேதங்களைத் தனது சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மமே, பெயர் மற்றும் ரூபம் ஆகியவையாக அனைத்தும் பிரிந்துள்ள நிலையில் கார்யமாகவும், அவ்விதம் பிரியாத நிலையில் காரணமாகவும் உள்ளது. ஆகவே “ப்ரஹ்மத்தை அறிவதன் மூலம், அனைத்து பொருள்களையும் அறியலாம்”, என்பது பொருந்துகிறது.

**1-1-10 ஸ்வாப்யயாத்**

**பொருள் –** ஜீவன் தனக்குக் காரணமான ஸத்தில் உறங்கும்போது லயிப்பதாகக் கூறப்படுவதாலும்.

**வேதாந்தஸாரம் -** மேலும் ஒரு காரணத்தால் ப்ரதானமானது ஜகத்காரணம் அல்ல. சாந். (6-8-1) – ஸ்வப்நாந்தம் மே ஸோம்ய விஜாநீஹி – கனவுகளுடன் கூடிய உறக்கநிலை என்பது குறித்து நான் கூறுவதை அறிவாயாக – என்றும், சாந். (6-8-1) – யத்ர ஏதத் புருஷ: ஸ்வபிதி நாம ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி | ஸ்வம் அபீதோ பவதி | தஸ்மாத் ஏநம் ஸ்வபிதி ஆசக்ஷதே | ஸ்வம் ஹி அபீதோ பவதி - ஜீவன் உறங்கும்போது ஸத் என்பதுடன் கூடியவன் ஆகிறான். தனக்குக் காரணமான அதில் சென்று லயிக்கிறான். இதனால்தான் உறங்குபவனை ஸ்வபிதி என்பர். தனக்குக் காரணமான ஸத்தில் அல்லவோ அவன் லயத்தை அடைகிறான் – என்றும் உள்ள வரிகள் மூலம், உறங்குகின்ற

ஜீவாத்மா ஸத்துடன் சேர்ந்தவனாக, தனது ஆத்மாவில் லயிக்கிறான் என்று அறியலாம். இதன் மூலம் ஸத் என்பது, ப்ரதானத்தைக் காட்டிலும் வேறான ஒன்றாகவே அறியப்படுகிறது. இங்குள்ள “ஸ்வம் அபீதோ பவதி” என்பதற்கு, “இந்த ஜீவாத்மா தன்னையே அடைந்தவன் ஆகிறான்” என்று பொருள்.

சித் வஸ்துவைத் தனது சரீரமாகக் கொண்டும், அத்தகைய சித் வஸ்துவிற்கு ஆத்மாவாகவும் உள்ள ப்ரஹ்மமே “ஜீவாத்மா” என்னும் பதத்தால் கூறப்படுவதாக, பெயர் மற்றும் ரூபங்களைக் குறித்து விவரிக்கும் ச்ருதியில் உரைக்கப்படுகிறது. ஜீவாத்மா என்னும் பதத்தின் பொருளாக உள்ள பரப்ரஹ்மமே, ஆழ்ந்த உறக்கத்தின்போது (அதாவது ஸுக்ஷுப்தி), ப்ரளய காலத்தைப் போன்று, பெயர் மற்றும் ரூபங்கள் ஏதும் இல்லாதவனாக உள்ளதால், ஸத் என்னும் பதத்தால் மட்டுமே கூறப்படுகிறான் என்பதையே, சாந். (6-8-1) – ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி | ஸ்வம் அபீதோ பவதி - ஜீவன் உறங்கும்போது ஸத் என்பதுடன் கூடியவன் ஆகிறான். தனக்குக் காரணமான அதில் சென்று லயிக்கிறான் – என்பதால் கூறப்படுகிறது.

வேறு ஒரு இடத்திலும் (ப்ருஹதாரண்யகம்), இந்தக் கருத்தைக் குறித்து உரைக்கும் பகுதியில், “பெயர் மற்றும் ரூபங்களுடைய சேர்க்கை இன்றி உள்ளதால், ப்ராஜ்ஞனுடன் (அதாவது ப்ரஹ்மம்) சேர்ந்துள்ளான்” என்னும் கருத்தானது, ப்ரு. (4-3-21) – ப்ராஜ்ஞேந ஆத்மநா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் கிஞ்சந வேத ந அந்தரம் – அனைத்தும் அறிந்த பரமாத்மாவால் நன்றாகத் தழுவி அணைக்கப்பட்டு உள்ளும்புறமும் சிறிதும் அறியாதவனாக – என்று கூறப்படுகிறது. ஜீவாத்மாவிற்கு மோக்ஷம் கிட்டும் காலம் முடிய, பெயர் மற்றும் ரூபம் ஆகியவற்றுடன் ஸம்பந்தம் உள்ளது; இதனால்தால் அவனுக்குத் தன்னைத் தவிர உள்ள மற்ற வஸ்துக்களைக் குறித்த ஞானம் உண்டாகிறது. ஆழ்ந்த உறக்கத்தின்போது பெயர் மற்றும் ரூபங்களை கைவிட்டு, ஸத் என்னும் வஸ்துவுடன் சேர்ந்தபடி உள்ளான்; தொடர்ந்து விழிப்பு நிலையில், பெயர் மற்றும் ரூபம் ஆகியவற்றை அடைந்தவனாக, அத்தகைய பெயர் மற்றும் ரூபங்களாகவே ஆகிறான். இந்தக் கருத்தானது, கௌஷீ. (4-19) - யதா ஸுப்த: ஸ்வப்நம் ந கதஞ்சந பச்யதி அதாஸ்மிந் ப்ராண ஏவ ஏகதா பவதி | … ஏதஸ்மாத் ஆத்மந: ப்ராணா யதாயதநம் விப்ரதிஷ்டந்தே - (இங்கு) உறங்கியவன் இதில் இருந்தான். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அவன் கனவுகள் எதனையும் காண்பதில்லை. அப்போது இவை (இந்த்ரியங்கள்)

ப்ராணனுடன் கலந்து ஒன்றாகவே உள்ளன – என்று கூறப்பட்டது. இதனைப் போன்றே, சாந். (6-9-3) - த இஹ வ்யாக்ரோ வா ஸிம்ஹோ வா வ்ருகோ வா வராஹோ வா ... யத் அபிவதந்தி ததா பவந்தி – இது போன்றே புலியோ, சிங்கமோ, ஓநாயோ, வராகமோ, ... எதுவாக இருந்தாலும், அவையாகவே மீண்டும் ஆகிறான் – என்றும் கூறப்பட்டது.

**1-1-11 கதிஸாமாந்யாத்**

**பொருள்** - மற்ற உபநிஷத் வாக்கியங்களுக்கு உள்ள கதியே, இந்த உபநிஷத் வாக்கியத்துக்கும் என்பதால் (ப்ரதானம் ஜகத்காரணம் அல்ல).

**வேதாந்தஸாரம்** - இப்போது நாம் ஆராயும் உபநிஷத் பகுதிக்கும், மற்ற உபநிஷத்துக்களில் கூறப்பட்ட விஷயங்களுக்கும் ஒற்றுமை இருக்கவேண்டும் என்பதால், ப்ரதானமானது ஜகத்காரணம் அல்ல. ஐத. (1-1-2) - ஆத்மாவா இதம் ஏக ஏவ அக்ர ஆஸீத் நாந்யத் கிஞ்சந மிஷத் ஸ ஐக்ஷத லோகந்து ஸ்ருஜா இதி | ஸ இமம் லோகாந் அஸ்ருஜத - தொடக்கத்தில் இந்த ஆத்மா மட்டுமே இருந்தது. வேறு எதுவும் இல்லை. சற்று விழித்துப் பார்த்துவிட்டு, “நான் இந்த உலகத்தைப் படைப்பேன்”, என்று சிந்தித்து பின்னர் இந்த உலகத்தைப் படைத்தது – என்றும், தை. (3-1) - தஸ்மாத் வா ஏதஸ்மாத் ஆத்மந ஆகாச: ஸம்பூத: – அந்தப் பரமாத்மாவிலிருந்து ஆகாசம் உண்டானது – என்றும், ச்வே. (6-9) - ஸ காரணம் காரணாதிபாதிபோ ந ச அஸ்ய கச்சித் ஜநிதா ந சாதிப: - பரமபுருஷனே அனைத்திற்கும் காரணம்; இந்த்ரியங்களின் அதிபதியாக உள்ள ஜீவாத்மாவின் அதிபதியாக உள்ளான்; அவனை உண்டாக்கியவர்களும், தலைவனும் யாரும் இல்லை – என்றும் உள்ள அனைத்து உபநிஷத் வாக்கியங்களும், “ஸர்வேச்வரனே அனைத்து ஜகத்திற்கும் காரணம் ஆவான்” என்றே கூறுகின்றன.

**1-1-12 ச்ருதத்வாத் ச**

**பொருள்** - இந்த உபநிஷத்திலேயே அவ்விதம் ஓதப்பட்டதால்.

**வேதாந்தஸாரம்** - இந்த உபநிஷத்திலும் (அதாவது இப்போது ஆராயப்படுகின்ற வாக்கியம் உள்ளதான சாந்தோக்ய உபநிஷத்) கூட, சாந். (7-26-3) - ஆத்மத: ப்ராண: -

ஆத்மாவிலிருந்து ப்ராணன் – என்றும், சாந். (7-26-1) - ஆத்மத: ஆகாச: - ஆத்மாவிலிருந்து ஆகாசம் – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலம், "அனைத்தும் ஆத்மாவிலிருந்தே உற்பத்தி ஆனது" என்று கூறப்படுகிறது. ஆகவே அசேதநமான ப்ரதானத்தைக் காட்டிலும் வேறுபட்டவனும், அனைத்தும் அறிந்தவனும் ஆகிய புருஷோத்தமனே ஜகத்காரணம் ஆகிறான் என்று உறுதியாகிறது.

## அதிகரணம் – 6 - ஆநந்தமயாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – தைத்திரீய ஆனந்தவல்லியில் "ஆனந்தமயன்" என்று கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-1-13 ஆநந்தமய: அப்யாஸாத்**

**பொருள்** - ஆநந்தமயன் என்று ஓதப்படுபவன் பரமாத்மாவே ஆவான்; காரணம் அவனது ஆனந்தம் தொடர்ந்து படிக்கப்பட்டது.

**வேதாந்தஸாரம்** – ப்ரதாநத்தைக் காட்டிலும் வேறுபட்டவனாகவும், சேதநனாகவும் உள்ள ப்ரத்யகாத்மாவிற்கு "ஈக்ஷணம் – காணுதல் அல்லது எண்ணுதல்" என்பது போன்ற திறன்கள் உள்ளன. ஆயினும், பந்தத்திலோ அல்லது மோக்ஷம் பெற்றோ உள்ள ப்ரத்யகாத்மா ஜகத்காரணம் அல்லன். தை. (2-1-1) - தஸ்மாத் வா ஏதஸ்மாத் ஆத்மந: ஆகாச: ஸம்பூத: – இந்த ஆத்மாவிடமிருந்து ஆகாசம் உண்டானது – என்று தொடங்கி, தை. (2-1-5) – ஏதஸ்மாத் வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத் | அந்ய: அந்தர ஆத்மா ஆனந்தமய: - அப்படிப்பட்ட இந்த விஜ்ஞானமயனாகிற புத்தியைக் காட்டிலும் வேறுபட்டவனும், அந்தராத்மாவாக உள்ளவனும் ஆனந்தமயன் – என்பது முடிய உள்ள பகுதியில், ஆனந்தமயமாக உள்ள தன்மையானது ஜகத்காரண வஸ்துவிற்குக் கூறப்பட்டது. அப்படிப்பட்ட ஆனந்தமயன் என்பவன், ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவனும், அனைத்தும் அறிந்தவனும் ஆகிய பரமாத்மாவே ஆவான். ஏனென்றால், "அப்யாஸாத் – மீண்டும் கூறப்பட்டுள்ளதால்" ஆகும். அதாவது ஆனந்தத்தைப் படிப்படியாக அதிகரித்தபடிக் கூறி வந்து (மனித ஆனந்தத்தை விட தேவர்களுடைய ஆனந்தம் அதிகமாகும் என்பது போன்று வரிசையாகக் கூறி வந்து),

ஆனந்தமயனுடைய ஆனந்தம் என்பது அளவிட இயலாதபடி உள்ளதாகக் கூறப்பட்டது. இப்படிப்பட்ட ஆனந்தமயனே தை. (2-8-4) – தே யே சதம் ப்ரஜாபதே: ஆநந்தா: – ப்ரஹ்மத்தின் ஆனந்தமானது ப்ரஜாபதியின் ஆனந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமானது – என்றும், தை. (2-8-1) - ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த: - இது ப்ரஹ்ம ஆனந்தத்தின் ஒரு பகுதியாக உள்ளது – என்றும், தை. (2-9) - யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்ந பிபேதி குதச்சந - அவனது ஆனந்தத்தின் எல்லையைக் காண இயலாமல் மனமும் வாக்கும் திரும்பி வந்தன, அவனுடைய ஆனந்தத்தை அறிந்தவன் எதற்காகவும் பயப்படுவதில்லை – என்றும் கூறப்பட்டான்.

**1-1-14 விகார சப்தாந் ந இதி சேத் ந ப்ராசுர்யாத்**

**பொருள்** – “ஆனந்தத்தின் விகாரமே ஆனந்தமயன்” என்பதை உணர்த்துவதான மயட் என்பது பயன்படுத்தப்பட்டுள்ளதால், ஆனந்தமயன் பரமாத்மா அல்லன் என்று கூறுவது தவறு; ஆனந்தத்தின் மிகுதியையே மயட் காண்பிக்கிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - (ஆனந்தமயன் என்பதில் உள்ள) “மயட்” என்னும் விகுதியானது, தை. (2-1-3) – ஸ வா ஏஷ புருஷ: அந்நரஸமய: - இந்தப் புருஷன் அன்னத்தின் சுவை மயமாக உள்ளான் – என்றுள்ள வாக்கியத்தின்படி, மாறுதல் அல்லது விகாரம் என்னும் பொருளைத் தருவதாகும். ஆகவே “ஆனந்தமயன்” என்ற பதமும் விகாரத்தையே கூறுவதாக உள்ளது. ஆகவே மாறுபாடுகள் அடையாதவனாக உள்ள பரமாத்மா, இந்தப் பதத்தால் கூறப்பட்டவன் அல்லன்.

**வேதாந்தஸாரம் : ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. இங்கு அர்த்தத்தில் விரோதம் உள்ளது. இங்கு “மயட்” என்பது “ப்ராசுர்யம் – நிறைவு அல்லது மிகுதி” என்னும் பொருளில் உள்ளது. தை. (2-1-1) - தஸ்மாத் வா ஏதஸ்மாத் ஆத்மந: ஆகாச: ஸம்பூத: – இந்த ஆத்மாவிடமிருந்து ஆகாசம் உண்டானது – என்னும் வாக்கியமானது, மாற்றங்களை அடையாத ஆத்மாவைக் குறிப்பதாக உள்ளது. “மயட்” என்னும் விகுதியானது விகாரத்தைக் குறிப்பதாகக் கொள்ளும் கருத்தானது, ப்ராணமயன் என்பதைக் குறித்துள்ள பகுதியிலேயே கைவிடப்படுகிறது. ஆகவே ஆனந்தமயன் என்பவன் பரமபுருஷனே

ஆவான் என்றே ஏற்கப்படவேண்டும்; காரணம் அவனிடமே ஆனந்தம் மிகுதியாக உள்ளதால் ஆகும்.

**1-1-15 தத்தேது வ்யபதேசாத் ச**

**பொருள்** - ஜீவனுடைய ஆனந்த்திற்குக் காரணமாகவும் ஆனந்தமயனை உரைப்பதால், (ஆனந்தமயன் என்பது) ப்ரஹ்மமே ஆகும்.

**வேதாந்தஸாரம்** - தை. (2-7) – ஏஷ ஹி ஏவ ஆநந்தயதி - இந்த ஆனந்தமயனே ஆனந்தம் அடையும்படிச் செய்கிறான் - என்ற வரியின் மூலம், ஆனந்தமயன் (என்ற ப்ரஹ்மமே) ஜீவன்களின் ஆனந்தத்திற்கு காரணம் என்று கூறப்பட்டான். ஆகவே ப்ரத்யகாத்மா ஆனந்தமயன் அல்லன்.

**1-1-16 மாந்த்ரவர்ணிகமேவ ச கீயதே**

**பொருள்** – மந்த்ரவர்ணத்தில் படிக்கப்பட்ட ப்ரஹ்மமே ஆனந்தமயன் என்று பாடப்பட்டது.

**வேதாந்தஸாரம்** - தை. (2-1-1) - ஸத்யம் ஞானம் ஆனந்தம் ப்ரஹ்மம் – என்ற மந்த்ரத்தில் உள்ள பதங்களால் கூறப்பட்ட அந்த ப்ரஹ்மமே, தை. (2-1-1) - தஸ்மாத் வா ஏதஸ்மாத் – இந்த ஆத்மாவிடமிருந்து – என்ற வாக்கியத்தில் ஆனந்தமயனாகக் கூறப்பட்டது. ஆகவே ப்ரத்யகாத்மா ஆனந்தமயன் அல்லன்.

**1-1-17 ந இதரோ அநுபபத்தே**

**பொருள்** - மிகுந்த அறிவு உள்ளவன் என்பது பொருந்தாத காரணத்தினால், (ஆனந்தமயன் என்பவன்) ஜீவன் அல்லன்.

**வேதாந்தஸாரம்** – மந்த்ரத்தில் (மேலே உள்ள ஸூத்ரம் காண்க) மற்றவனாகிய ப்ரத்யகாத்மா கூறப்பட்டானோ என்னும் ஐயம் ஏற்படக்கூடாது. ஏனென்றால், அடுத்து

தை. (2-1-1) – ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணோ விபச்சிதா – தனது விருப்பங்களை ப்ரஹ்மத்துடன் சேர்ந்து நின்று அனுபவிக்கிறான் – என்னும் வாக்கியத்தில் கூறப்படுவதான, "எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாத ஞானம் அல்லது பலவிதமாகக் காணப்படும் அறிவு (விபச்சித்)" என்பது பந்தம் மற்றும் மோக்ஷம் ஆகிய எந்த நிலையில் உள்ள ப்ரத்யகாத்மாவிற்கும் பொருந்தாது. சாந். (6-2-1) – ஸ: காமயத – அது விரும்பியது – என்றும், சாந். (6-2-3) – பஹு ஸ்யாம் ப்ரஜாயேய - நான் பலவாகக் கடவேன், அனைத்தையும் உண்டாக்குவேன் – என்றும் உள்ள வரிகளின் மூலமாக விபச்சித் என்பது, "ப்ரஹ்மமானது சித் மற்றும் அசித் என்று பலவித விசித்ரமான ரூபங்களை எடுத்தல் என்னும் ஸங்கல்ப வடிவில் அடங்குகிறது" என்று தெளிவாகிறது. முக்தி பெற்ற ஜீவாத்மா அனைத்தும் அறிந்தவனாக உள்ளபோதிலும், அவனுக்கு ஜகத் வ்யாபாரம் (ஜகத்தைப் படைத்தல் முதலான செயல்கள்) இல்லை; ஆகவே அவனுக்கு மேலே கூறப்பட்ட விபச்சித்வம் என்பதும் இல்லை.

**1-1-18 பேத வ்யபதேசாத் ச**

**பொருள்** – ஆனந்தமயனுக்கு வேறுபாட்டை உரைப்பதாலும்.

**வேதாந்தஸாரம்** – விஜ்ஞானமயனாக உள்ள ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் ஆனந்தமயமான ப்ரஹ்மம் வேறுபட்டது என்பதை, தை. (2-5) – தஸ்மாத்வா ஏதஸ்மாத் விஜ்ஞானமயாத் அந்யோந்தர ஆத்மா ஆனந்தமய: - அப்படிப்பட்ட இந்த விஜ்ஞானமயனைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மாவாக உள்ள ஆனந்தமயன் – என்ற வாக்கியம் கூறுகிறது. ஆனால், "தை. (2-5) – விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே – விஜ்ஞானம் யஜ்ஞங்களை இயற்றுகிறது – என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே புத்தியை விஜ்ஞானம் என்று உரைத்து, விஜ்ஞானமயன் என புத்தியைக் கூறி, அதனைக் காட்டிலும் வேறுபட்ட ஆனந்தமயன் என்று இங்கு கூறுவதாகக் கொள்ளலாம் அல்லவோ (ஆகவே புத்தியைக் காட்டிலும் வேறுபட்ட ஆனந்தமயன் என்பவன் ப்ரத்யகாத்மாவே ஆவான் அல்லவோ)?" என்று கேட்கலாம். இவ்விதம் கூறுதல் பொருந்தாது. இந்த ஐயத்தை ஸூத்ரகாரர், ப்ர. ஸூ. (2-3-35) - வ்யாபதேசாத் ச க்ரியாயாம் ந சேத் நிர்தேச விபர்யய: - (வைதிக) கார்யங்களில் ஜீவாத்மா கர்த்தா என்று கூறப்படுகிறான் – என்பதால் நீக்குகிறார். தை. (2-5) – விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே – விஜ்ஞானம் யஜ்ஞங்களை இயற்றுகிறது – என்னும்

வாக்கியத்தில் விஜ்ஞானத்தைக் கர்த்தாவாகக் கூறியுள்ளதால், ஜீவனே அந்தக் கர்த்தா என்றாகிறான். "விஜ்ஞானம் என்னும் பதமானது ஜீவாத்மாவைக் கூறாமல் புத்தியைக் குறிக்கிறது" என்றால், இந்த வரியானது வேறுவிதமாக அமைந்திருக்கும்; காரணம், புத்தி என்பது கரணம் மட்டுமே ஆகும்.

**1-1-19 காமாத் ச ந அநுமாநாபேக்ஷா**

**பொருள்** - ஜகத் ஸ்ருஷ்டி என்பது வெறும் ஸங்கல்பத்தால் மட்டுமே ஆகும்; ப்ரக்ருதியை எதிர்நோக்கி இருப்பதில்லை.

**வேதாந்தஸாரம்** – தை. (2-6) – ஸோகாமயத பஹுஸ்யாம் – அந்த ஆனந்தமயன், "நான் பலவாகக் கடவேன்" என்று ஸங்கல்பித்தது – என்பதன் மூலம், ப்ரஹ்மத்தின் விருப்பத்தால் இந்த ஜகத்தானது உண்டானது என்பது தெளிவாகிறது. ப்ரத்யகாத்மா ஏதேனும் ஒன்றை உண்டாக்கவேண்டும் என்றால், ப்ரதானத்தை எதிர்பார்த்தே ஸ்ருஷ்டிப்பதை நாம் பார்க்கிறோம்.

**1-1-20 அஸ்மிந் அஸ்ய ச தத்யோகம் சாஸ்தி**

**பொருள்** – இந்த ஆனந்தமயனிடம், இந்த ஜீவனுக்கு ஆனந்த சேர்த்தி உண்டாவதை வேதம் விதிப்பதாலும் ஆகும்.

**வேதாந்தஸாரம்** – தை. (2-7) – ரஸோ வை ஸ: | ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி – அந்த ஆனந்தமயன் ரஸ ஸ்வரூபம், இத்தகைய ரஸ ஸ்வரூபமாக உள்ள அவனை அடைந்து ஜீவனும் ஆனந்தம் அடைகிறான் - என்ற வரியில், ஆனந்தமயனிடமிருந்து ப்ரத்யகாத்மா ஆனந்தம் அடைகிறான் என்று கூறப்பட்டது. ஆகவே ஆனந்தமயன் என்று கூறப்படுபவன் ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவனும், அனைத்தும் அறிந்தவனும், புருஷோத்தமனும், ஜகத்காரணமாக உள்ளவனும் ஆவான்.

## அதிகரணம் - 7 – அந்தரதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – சூர்யமண்டலத்தின் உள்ளேயும், கண்களின் உள்ளேயும் இருப்பவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-1-21 அந்த: தத் தர்ம உபதேசாத்**

**பொருள்** - சூரியனுக்கும் கண்களுக்கும் உள்ளே காணப்படுபவன் பரமாத்மாவே ஆவான். அவனுக்கே உரிய தன்மைகள் உபதேசிக்கப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம்** – "இந்த ஜகத்தின் காரணமாக உள்ளவன், விபச்சித் மற்றும் ஆனந்தமயன் என்று கூறப்படுபவன் மிகவும் சிறப்பான புண்யங்கள் பல செய்த ஜீவாத்மாவே ஆவான்; காரணம், அவனுக்குச் சரீரம் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளதால் ஆகும்; அவன் பரமாத்மா அல்லன்" என்று சந்தேகம் கொள்ளுதல் கூடாது. அவன், சாந். (1-6-6) - ய ஏஷ: அந்தராதித்யே ஹிரண்யமய: புருஷ: - ஆதித்யனுக்குள் எந்த ஒரு பொன்மயமான புருஷன் உள்ளானோ – என்னும் வாக்கியத்தில் "புருஷன்" என்னும் பதத்தால் கூறப்பட்ட பரமபுருஷனாகிய பரமாத்மாவே ஆவான். ஏன்? காரணம், அவனுக்கே உரிய தன்மைகள் உபதேசிக்கப்படுவதால் ஆகும். சாந். (1-6-7) – ஸ ஏஷ ஸர்வேஷாம் லோகாநாம் ஈச: ஸர்வேஷாம் காமாநாம் – அவன் அனைத்து லோகங்களையும் ஆள்கிறான், அனைவருடைய விருப்பங்களையும் நிறைவேற்றுகிறான் – என்றும், சாந். (1-6-7) - தஸ்யோதிதி நாம | ஸ ஏஷ ஸர்வேப்ய பாப்மப்ய உதித: - அவனை உத் (உயர்ந்த) என்ற பெயரிட்டு அழைப்பார்கள். அவனே பாபங்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்டவன் ஆவான் – என்றும் உள்ள வாக்கியங்கள், ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் வேறுபட்ட பரமபுருஷனுடைய தர்மங்களாக, "அனைத்து லோகங்களுக்கும் ஈசனாக உள்ள தன்மை, அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றும் தன்மை, கர்மவசப்படாத தன்மை" முதலானவற்றைக் கூறின.

ச்வே. (3-8) - வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் – பொன்நிறமாக உள்ளவனும், இருளுக்கு அப்பால் உள்ளவனும் ஆகிய இந்தப் புருஷனை நான் அறிவேன் – என்பது போன்ற வாக்கியங்கள், "மூன்று குணங்கள் கொண்ட

ப்ரக்ருதியால் மாற்ற இயலாத ஞானத்தைப் போன்றே, அவனுக்கே உரியதான ரூபத்தைக் கொண்டவனாக உள்ளான்" என்று உரைக்கின்றன. ஞானம் முதலானவை அவனுடைய குணங்களாக உள்ளன என்பதை தை. (2-1) – ஸத்யம் ஞானம் – என்றும், முண். (1-1-9) – ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் - அனைத்தையும் அறிந்தவன், அனைத்தையும் உணர்ந்தவன் – என்றும், ச்வே. (6-8) - பராஸ்ய சக்தி: விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியா ச – அவனுடைய சக்தியானது பலவிதமாகவும், ஞானம் பலம் மற்றும் செய்கைகளை இயல்பாகவே கொண்டதாகவும் உள்ளது – என்றும் உள்ள வாக்கியங்கள் கூறுகின்றன. மேலும், அவன் இந்த ப்ரக்ருதியில் இல்லாதபடியான, அவனுக்கே உரிய ரூபத்துடன் உள்ளான் என்பதை ச்வே. (3-8) - ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் – பொன்நிறமாக உள்ளவனும், இருளுக்கு அப்பால் உள்ளவனும் – என்பது போன்ற வரிகள் கூறுகின்றன.

வாக்கியகாரரும் (இது டங்கர் என்னும் ஆசார்யரைக் குறிக்கும்) இவ்விதமாக உரைக்கிறார்: "பொன் நிறமான புருஷன் காணப்படுகிறான் என்ற ச்ருதி வாக்கியமானது, அனைத்தும் அறிந்தவன் மற்றும் அனைத்திற்கும் உள்ளில் இருப்பவன் என்னும் பரமாத்மாவையே குறிப்பதாகும்; காரணம், அவனே அனைத்து லோகங்களுக்கும் ஈசனாகவும், அனைவருடைய விருப்பங்களை நிறைவேற்றுபவனாகவும், அனைத்து தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாக உள்ளவனாகவும் இருப்பதால் ஆகும்", என்றார். இதனைத் தொடர்ந்து, அவனுடைய ரூபம் கார்யத்தால் உண்டாவது மற்றும் மாயாமயமானது ஆகும் என்னும் வாதங்களைத் தள்ளும்விதமாக, "அவன் அனைத்தையும் தனது விருப்பத்தின்படி செய்யவல்லவன் என்பதால், தனது அடியார்களை அனுக்ரஹம் செய்வதற்காகத் தான் விரும்பும் ரூபத்தை எடுக்கிறான்", என்றார். மேலும், "அவனுடைய ரூபத்தை அந்தகரணத்தால் மட்டுமே அறிய இயலும் என்பதால், மற்ற இந்த்ரியங்களால் உணர இயலாது", என்றும் கூறினார்.

த்ரமிடாசார்யர் தனது வ்யாக்யானத்தில், "அவனுடைய ரூபம் மாயாமாத்ரம் அல்ல. அது விச்வத்தை ஸ்ருஷ்டிக்கவல்ல உண்மையானது ஆகும். அதனைக் கண்களால் காண இயலாது. எந்தவிதமான தோஷமும் இல்லாததும், அவனை அடையவல்ல உபாயத்தைக் கைக்கொண்டதும் ஆகிய மனதால் மட்டுமே உணர இயலும். இதனை ச்ருதியானது முண். (3-1-8) – ந சக்ஷுஷா க்ருஹ்யதே ந அபி வாசா - கண்ணால் காணப்படுவதில்லை, வாக்கிற்கு எட்டுவதில்லை – என்றும், கட. (6-9) – மநஸா து விசுத்தேந: - தூய்மையான

மனதால் அறியப்படுகிறான் – என்றும் கூறுகிறது. ரூபம் இல்லாத தேவதைகளுக்கு ச்ருதிகள் ரூபங்களைக் கூறுவதில்லை; காரணம், சாஸ்த்ரங்கள் உள்ளதை உள்ளபடி கூறுபவை ஆகும். வேறு ஒரு பகுதியில் ப்ரு. (2-3-6) - மஹாரஜநம் வாஸ: - அருமையான காவிநிற துணி போன்று காணப்பட்டது – என்றும், ச்வே. (3-8) – வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் – சூரியன் போன்று ப்ரகாசிக்கும் இந்தப் புருஷனை நான் அறிவேன் – என்றும் கூறப்படுகிறது", என்றார்.

வ்யாக்யம் என்னும் நூலில், "ஹிரண்மயம் என்னும் பதமானது, சந்த்ரமுகம் என்ற சொல்லில் காணப்படும் சந்த்ரன் என்பதைப் போன்றதாகும்", என்று உள்ளது. இந்த வாக்கியத்தை த்ரமிடாசார்யரும் வ்யாக்யானம் செய்யும்போது, "மயட் என்னும் விகுதியானது விகாரம் என்னும் பொருளில் அமைக்கப்படவில்லை; காரணம் ஆத்மா உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பதால் ஆகும்", என்றார்.

ஆகவே ப்ரதானம் மற்றும் ப்ரத்யகாத்மா ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், தடை இல்லாத விபச்சித்தைக் கொண்டதாகவும், எல்லையற்ற ஆனந்தம் கொண்டதாகவும், தனக்கே உரிய திவ்யமான ரூபம் கொண்டதாகவும், புருஷோத்தமனாகவும் உள்ள பரப்ரஹ்மமே ஜகத்காரணம் என்று வேதாந்தங்கள் வெளிப்படுத்துவதில் எந்தவிதமான தோஷமும் இல்லை.

**1-1-22 பேத வ்யபதேசாத் ச**

**பொருள்** - ஆதித்யன் உள்ளிட்ட ஜீவாத்மாக்களைக் காட்டிலும் உள்ள வேறுபாட்டை உரைப்பதால், சூரியன் மற்றும் கண்களுக்குள் உள்ளவன் பரமாத்மாவே ஆவான்.

**வேதாந்தஸாரம்** – ப்ரு. (3-7-9) - ய ஆதித்யே திஷ்டந் ஆதித்யாத் அந்தரோ யம் ஆதித்யோ ந வேத யஸ்ய ஆதித்ய: சரீரம் ய ஆதித்யம் அந்தரோ யமயதி ஸ த ஆத்மா அந்தர்யாமி அம்ருத - யார் ஆதித்யனில் நிற்கிறானோ, யார் அந்த ஆதித்யனைக் காட்டிலும் வேறுபட்டவனோ, யார் அவ்விதம் உள்ளதை ஆதித்யன் அறியாமல் உள்ளானோ, யாருக்கு ஆதித்யன் சரீரமோ, யார் ஆதித்யனை உள்ளில் இருந்து நியமிக்கிறானோ, அவனே உனக்கு ஆத்மாவாக உள்ளான் – என்னும் வாக்கியம் மூலம் அவன் அனைத்து

தெய்வங்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்றாகிறது. அவன் ஆத்மாவைக் காட்டிலும் உயர்ந்தவன் என்பது, "ய ஆத்மநி திஷ்டந் – யார் ஆத்மாவில் வசிக்கிறானோ" என்னும் வாக்கியத்தால் அறியப்படுகிறது. அவன் அனைத்து லோகங்களையும் விட உயர்ந்தவன் என்பது, "ய: ஸர்வேஷு லோகேஷு திஷ்டந் – யார் அனைத்து லோகங்களிலும் வசிக்கிறானோ" என்னும் வாக்கியத்தால் அறியப்படுகிறது. அவன் அனைத்து பூதங்களையும் விட உயர்ந்தவன் என்பது, "ய: ஸர்வேஷு பூதேஷு திஷ்டந் – யார் அனைத்து பூதங்களிலும் வசிக்கிறானோ" என்னும் வாக்கியத்தால் அறியப்படுகிறது. அவன் அனைத்து வேதங்களையும் விட உயர்ந்தவன் என்பது, "ய: ஸர்வேஷு வேதேஷு திஷ்டந் – யார் அனைத்து வேதங்களிலும் வசிக்கிறானோ" என்னும் வாக்கியத்தால் அறியப்படுகிறது. அவன் அனைத்து யஜ்ஞங்களையும் விட உயர்ந்தவன் என்பது, "ய: ஸர்வேஷு யஜ்ஞேஷு திஷ்டந் – யார் அனைத்து யஜ்ஞங்களிலும் வசிக்கிறானோ" என்னும் வாக்கியத்தால் அறியப்படுகிறது. இவை அனைத்தும் அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் உள்ளவை ஆகும்.

ஸுபால உபநிஷத்தில், ஸுபால. (7-1) - ய: ப்ருதிவீம் அந்தரே ஸஞ்சரந் – யார் ப்ருதிவியில் உள்ளில் ஸஞ்சரிக்கிறானோ – என்று தொடங்கி, ஸுபால. (7-1) – யோ அவ்யக்தம் அந்தரே ஸஞ்சரந், யோ அக்ஷரம் அந்தரே ஸஞ்சரந், யோ ம்ருத்யும் அந்தரே ஸஞ்சரந், யஸ்ய ம்ருத்யு: சரீரம் | யம் ம்ருத்யுர் ந வேத | ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: - யார் அவ்யக்தத்தில் ஸஞ்சரிக்கிறானோ, யார் அக்ஷரத்தில் ஸஞ்சரிக்கிறானோ, யார் ம்ருத்யுவில் ஸஞ்சரிக்கிறானோ, யாருக்கு ம்ருத்யு சரீரமோ, யார் இவ்விதம் உள்ளதை ம்ருத்யு அறியவில்லையோ, அவன் அனைத்திற்கும் ஆத்மாவாகவும், பாபங்கள் அற்றவனாகவும், தேவர்கள் அனைவருக்கும் தேவனாகவும் உள்ள நாராயணனே ஆவான் – என்று முடியும் பகுதி மூலமாக அவன் அனைத்து தெய்வங்கள், லோகங்கள், பூதங்கள், வேதங்கள், யஜ்ஞங்கள், ஆத்மாக்கள் ஆகியவற்றைக் காட்டிலும் மேலானவன் என்பது உணர்த்தப்படுகிறது. அவை அனைத்தையும் அவன் தனது சரீரமாகக் கொண்டுள்ளான். இவனே அவற்றின் ஆத்மாவாக உள்ளான். அவற்றால் அவன் அறியப்படாமல் உள்ளான். இவனே அவற்றை நியமிப்பவனாக உள்ளான். அவற்றைக் காட்டிலும் வேறுபட்டவனாக உள்ளான். இப்படியாக, பாபங்கள் ஏதும் அற்றவனும், அனைத்து ஆத்மாக்கள் மற்றும்

ப்ரதானத்தைக் காட்டிலும் வேறுபட்டவனும் ஆகிய நாராயணனே அனைத்து ஜகத்திற்கும் ஒரே காரணம் என்பது தெளிவாகிறது.

### அதிகரணம் – 8, 9 – ஆகாசாதிகரணம் மற்றும் ப்ராணாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஆகாசம் என்று கூறப்படுவதும், ப்ராணன் என்று கூறப்படுவதும் பரப்ரஹ்மமே ஆகும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-1-23 ஆகாச: தல்லிங்காத்**

**பொருள்** - ஆகாசம் எனப்படுவது பரமாத்மாவே ஆவான்; காரணம் பரமாத்மாவுக்கு மட்டுமே உரிய அடையாளங்கள் காணப்படுவதால் ஆகும்.

**1-1-24 அத ஏவ ப்ராண:**

**பொருள்** - பரமாத்மாவுக்கே உரிய அடையாளங்கள் காணப்படுவதால், ப்ராணன் என்பதும் பரமாத்மாவே ஆவான்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (1-9-1) – ஸர்வாணி ஹ வா இமாநி பூதாநி ஆகாசாத் ஏவ ஸமுத்பத்யந்தே ஆகாசம் ப்ரத்யஸ்தம் யாந்தி – அனைத்து உயிர்களும் ஆகாசத்திலிருந்து அல்லவோ உண்டாகின்றன? ஆகாசத்திலேயே சென்று ஒடுங்குகின்றன – என்றும், சாந். (1-11-4) - ஸர்வாணி ஹ வா இமாநி பூதாநி ப்ராணமேவ அபி ஸம்விசந்தி ப்ராணமப்யுஜ்ஜிஹதே - அனைத்தும் ப்ராணனிலிருந்து வெளிப்படுகின்றன, அதிலேயே மீண்டும் வந்து லயிக்கின்றன – என்றும் உள்ள வாக்கியங்களைக் காண்க. சாந். (6-2-1) – ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் – தொடக்கத்தில் இந்த ஸத் என்பது மட்டுமே இருந்தது – என்னும் வாக்கியத்தில் ஜகத்காரணமாகக் கூறப்பட்ட பொதுச்சொல்லான “ஸத்” என்பதை, மேலே காண்பிக்கப்பட்ட வாக்கியங்கள், “ஆகாசம், ப்ராணன்” என்பவற்றுடன் சேர்த்துக் கூறுகின்றன. இங்குள்ள ஆகாசம் என்பது பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாசமா,

ப்ராணன் என்பது முக்யப்ராணனுடன் ஸஞ்சரிக்கும் ஜீவாத்மாவா என்னும் ஐயம் உண்டாகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – "ஸர்வாணி ஹ வா இமாநி பூதாநி" என்றுள்ள வாக்கியங்களில் காணப்படும் "ஹ வா" என்பதன் மூலம், அந்தந்த வாக்கியங்களில் கூறப்படும் வஸ்துவே ஜகத்காரணம் என்று ஏற்கப்படுவதற்கான காரணம், நன்றாக அறியப்படுகிறது. ஆகவே அங்கு ஜகத்காரணமாக "ஆகாசம், ப்ராணன்" என்னும் பதங்களால் கூறப்படுபவன், பஞ்சபூத ஆகாசம் மற்றும் ஜீவாத்மா ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்ட பரமபுருஷனே ஆவான்.

இங்கு தெளிவாக அறியப்படுவது என்னவென்றால் – தனது ஸங்கல்பத்தால் பலவாக ஆகுபவன், எல்லையற்ற ஆனந்தம் கொண்டவன், ஜீவாத்மாக்களுக்கு ஆனந்தம் அளிப்பவன், விஜ்ஞானமயனை (ஜீவாத்மா) காட்டிலும் வேறானவன், அனைத்து லோகங்களுக்கும் பயம் மற்றும் பயமின்மைக்குக் காரணமானவன், அனைத்து லோகங்களின் அனைத்து விருப்பங்களுக்கும் ஈசனாக உள்ளவன், எந்தவிதமான பாபங்களும் அண்டாதவன், அவனுக்கே உரிய திவ்யமான ரூபம் கொண்டவன், சூரிய கதிர்களால் மலர்கின்ற தாமரை போன்ற திருக்கண்கள் கொண்டவன், அனைத்தும் அறிந்தவன், ஸத்யஸங்கல்பன், அனைத்து இந்த்ரியங்களுடைய ஈசனாகிய ஜீவாத்மாவிற்கு ஈசன்; இப்படிப்பட்ட பரமபுருஷனே அனைத்து ஜகத்திற்கும் ஒரே காரணமாக உள்ளான். ஆகவே அவனே "ஆகாசம், ப்ராணன்" ஆகிய இரண்டு சொற்களாலும் ஜகத்காரணமாகக் கூறப்படுவது பொருத்தமே ஆகும்.

## அதிகரணம் – 10 - ஜ்யோதிரதிகரணம்

### 1-1-25 ஜ்யோதி: சரணாபிதாநாத்

**பொருள்** – ஜ்யோதி என்று கூறப்படுபவனும் பரமாத்மாவே ஆவான், அவனுடைய திருவடிகள் குறித்துக் கூறப்பட்டுள்ளதால்.

**வேதாந்தஸாரம் -** சாந். (3-13-7) – அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே விச்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு அநுத்தமேஷு உத்தமேஷு லோகேஷு இதம் வாவ தத் யதிதம் அஸ்மிந்நந்த: புருஷே ஜ்யோதி: - அனைத்துவிதமான பொருள்களுக்கும் அப்பால், பரமபதத்தின் மேலே, தனக்கும் மேலே ஏதும் இல்லாத சிறந்த லோகங்களில் எந்த ஒரு ஜ்யோதி உள்ளதோ, அந்த ஜ்யோதியே புருஷனின் (ஜீவாத்மா) உள்ளே இருப்பதாகும் – என்று ஒரு வாக்கியம் உள்ளது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – இந்த வாக்கியத்தில் உள்ள ஜ்யோதி என்னும் சொல்லானது, அனைத்தைக் காட்டிலும் உயர்ந்த வஸ்துவாகவே படிக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்தப் பதமானது, அனைத்திற்கும் காரணமாக உள்ள வஸ்துவையே குறிக்கிறது. மேலும் அந்த ஜ்யோதியானது நமது வயிற்றில் உள்ள ஜாடராக்னியாகவும் படிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு கருத்தையும், அந்த வாக்கியம் மறுப்பதையும் நம்மால் காண இயலவில்லை. ஆகவே அந்த ஜ்யோதியே ஜகத்காரணம் என்று இங்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – "இந்த இரண்டு கருத்தையும், அந்த வாக்கியம் மறுப்பதையும் நம்மால் காண இயலவில்லை" என்று கூறுவது உண்மையே ஆகும். ஆனால் அதே பகுதியில் உள்ள சாந். (3-12-6) - பாதோஸ்ய ஸர்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி – இந்தப் பரம்பொருளுக்கு அனைத்து பூதங்களும் ஒரு பாதமாகும்; இதன் மற்ற மூன்று பாதங்களும் பரமபதத்தில் உள்ளன – என்னும் வாக்கியம் மூலமாக, பரமபுருஷன் த்யுலோகத்துடன் (ஸ்வர்கம்) ஸம்பந்தப்படுத்திக் கூறப்பட்டு, அனைத்தும் அவனுடைய பாதங்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அந்தப் பரமபுருஷனே இந்த வாக்கியத்திலும் கூறப்படுகிறான். ஆகவே அந்தப் பரமபுருஷனே ஜ்யோதி என்னும் பதம் மூலமாக, அனைத்து வஸ்துக்களைக் காட்டிலும் உயர்ந்தவனாகவும், அனைத்திற்கும் காரணமாகவும் கூறப்படுகிறான். இப்படிப்பட்ட ஜ்யோதியை, நம்முடைய வயிற்றில் உள்ள ஜாடராக்னியாகக் கூறுவதில் எந்தவிதமான தோஷமும் இல்லை; காரணம் இவ்விதமாக பரமபுருஷனை உபாஸிப்பதால் விரும்பிய பலன் கிட்டும் என்பதால் விரோதம் இல்லை. அனைத்து ஜகத்திற்கும் ஒரே காரணமாகவும், இந்தப் ப்ரக்ருதியுடன் சேராதபடியாக தனக்கே உரியதான திவ்யமான வர்ணத்துடன் கூடிய திவ்யமான ரூபம் கொண்டவனாகவும் பரமபுருஷன் உள்ளான்;

இப்படிப்பட்ட பரமபுருஷன், ப்ரக்ருதி மண்டலத்தின் அப்பால் உள்ளதால், அவனுக்கு மட்டுமே எல்லையற்ற தேஜஸ் உள்ளது; எனவே அவனையே ஜ்யோதி என்னும் பதத்தால் கூறுவதும், அனைத்திற்கும் அப்பால் உயர்ந்த இடத்தில் வசிப்பதாகக் கூறுவதும் பொருத்தமே ஆகும்.

**1-1-26 சந்தோபிதாநாத் ந இதி சேத் ந ததாசேதோர்ப்பண நிகமாத் ததா ஹி தர்சநம்**

**பொருள்** - முன்பு கூறப்பட்ட வாக்கியம் ஒன்றில் காயத்ரீ சந்தஸ் குறித்துக் கூறப்பட்டதால், "பாதேஸ்ய ஸர்வா பூதாநி" என்ற வாக்கியத்தில் கூறப்படுவது ப்ரஹ்மம் அல்ல என்று கூறினால், அது சரியல்ல. ப்ரஹ்மத்தைக் காயத்ரீ சமமாகவே மனதில் அனுஸந்திக்கவேண்டும் என்று கூறப்படுவதால், அதே போன்று வேறு ஒரு வாக்கியத்தில் உள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - இதே பகுதியின் முற்பாகத்தில் உள்ள ஒரு வாக்கியத்தில், சாந். (3-12-1) – காயத்ரீ வா இதம் ஸர்வம் - இவை அனைத்தும் காயத்ரியே ஆகும் - என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே இங்கு பரமபுருஷனைக் குறித்து எதுவும் கூறப்படவில்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. இங்குள்ள வாக்யத்தில், "பரமபுருஷனை அந்த காயத்ரீ சந்தஸ்ஸை ஒத்தவனாகவே மனதில் எப்போதும் த்யானிக்கவேண்டும்" என்பதே கூறப்பட்டது; ஏனென்றால், சந்தஸ் மட்டுமே அனைத்து பூதங்களுடைய ஸ்வரூபமாக இருக்கமுடியாது. வேறு சில பகுதிகளில் கூட, வேறு பொருளை சந்தஸ்ஸைப் போன்றே இருப்பதன் காரணமாக, அவற்றையும் சந்தஸ் என்று கூறுவதைக் காணலாம். உதாரணமாக, சாந். (4-3-8) - தே வா ஏதே பஞ்சாந்யே - அக்னி, சூரியன், ஜலம், சந்த்ரன், வாயு என்ற ஐந்தும் – என்று தொடங்கி, சாந். (4-3-8) – ஸ ஏஷா விராட் – இதுவே அந்த விராட் (பத்து அசை கொண்ட ஸந்தஸ்) – என்று முடிக்கப்பட்டது.

**1-1-27 பூதாதி பாத வ்யபதேச: உபபத்தே: ச ஏவம்**

**பொருள்** - பூதங்கள் முதலானவற்றைக் காயத்ரிக்குப் பாதங்களாக உரைப்பது பொருந்த வேண்டும் என்பதற்காகவும் காயத்ரி என்பது ப்ரஹ்மமே ஆகும்.

**வேதாந்தஸாரம்** – ஆத்மாக்கள், பூமி, சரீரம் மற்றும் இதயம் என இந்த நான்கையும் காயத்ரியின் நான்கு பாதங்களாக இங்குள்ள வாக்கியம் கூறுகிறது. காயத்ரீ என்னும் பதம் மூலம் பரமபுருஷனைக் கூறினால் அல்லாமல், இந்தக் கருத்து பொருந்தாது. ஆகவே முன்பு நாம் கூறிய கருத்தே பொருத்தமானது ஆகும்.

**1-1-28 உபதேச பேதாத் ந இதி சேத் ந உபயஸ்மிந் அபி அவிரோதாத்**

**பொருள்** – திவி, திவ: என்றுள்ள இரண்டு மந்த்ரங்களிலும் உபதேசம் வேறுபடுவதால், பின் மந்த்ரத்தில் உள்ளதே முன் மந்திரத்திலும் கூறப்பட்டது என்று கூறுவது சரியல்ல; காரணம் இரண்டு உபதேசத்திலும் வேறுபாடு இல்லை என்பதால் இரண்டும் ஒன்றே ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – இதற்கு முன்புள்ள சாந். (3-12-6) – த்ரிபாதஸ்ய அம்ருதம் திவி - இதன் மூன்று பாதங்கள் த்யுலோகத்தில் (ஸ்வர்கத்தில்) உள்ளன – என்னும் வாக்கியத்தில் பரமபுருஷன் கூறப்பட்டான். சாந். (3-13-7) - அத யதத: பரோ திவ: - த்யுலோகத்தின் அப்பால் உள்ள – என்ற வாக்கியத்தில் ஐந்தாம் வேற்றுமையில் பரமபுருஷனுடன் ஸம்பந்தம் கொண்ட ஜ்யோதி என்பதே கூறப்பட்டது. ஆகவே முன் மந்த்ரத்தில் கூறப்படும் ப்ரஹ்மமே, பின் மந்த்ரத்திலும் கூறப்பட்டது என்று உரைக்க இயலாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. இங்குள்ள இரண்டு உபதேசங்களில் எந்த முரண்பாடும் இல்லை. ஒரு மரத்தின் நுனியில் அமர்ந்துள்ள கழுகைப் பார்த்து, “மரத்தின் நுனியில் கழுகு உள்ளது” என்று கூறினாலும், “மரத்தின் நுனிக்கு மேல் கழுகு உள்ளது” என்று கூறினாலும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. எனவே இங்கு த்யுலோகத்திற்கு அப்பால் பரமபுருஷன் உள்ளான் என்று கூறுவதே நோக்கமாகும்.

## அதிகரணம் – 11 – இந்த்ரப்ரணாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ப்ராணன், இந்த்ரன் என்று கௌஷீதகீ உபநிஷத்தில் கூறப்படுவது ஜீவன் மட்டும் அல்ல; அவற்றைச் சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மமே ஆகும் என்று நிருபிக்கப்பட உள்ளது.

**1-1-29 ப்ராண: ததா அநுகமாத்**

**பொருள்** - ப்ராணன் எனப்படுவது பரமாத்மாவே ஆகும். காரணம், பரமாத்மாவின் தன்மைகளான ஆனந்தம் போன்றவற்றுடன் இந்த ப்ராணனுக்குத் தொடர்பு உள்ளதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – கௌஷீ. (3-1) - ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா தம் மாம் ஆயுர் அம்ருதம் இதி உபாஸ்வ – அறிவு ரூபமான ஆத்மாவாகிய நானே ப்ராணனாகவும் உள்ளேன், ப்ராணனாக உள்ள என்னையே ஆயுள் மற்றும் அம்ருதம் என்று கொண்டு உபாஸிப்பாயாக – என்னும் வாக்கியம் மூலமாக, "மனிதனுக்கு உயர்ந்த நன்மையாகிய மோக்ஷத்தை அளிக்கும் உபாஸனத்தின் இலக்காக உள்ளவன் ஜீவாத்மாவாகிய இந்த்ரனே ஆவான்" என்று கூறப்படுகிறது. ஜகத்காரணமே மோக்ஷ மார்க்கமாக உள்ளதால், இந்த்ரனே ஜகத்காரணம் ஆகிறான். சாந். (6-14-2) – தஸ்ய தாவத் ஏவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே - சரீரம் நீங்கும்வரை மட்டுமே உபாஸகன் ஒருவனுக்குத் தாமதம் உள்ளது, சரீரம் விழுந்ததுடன் அவனுக்கு மோக்ஷம் கிட்டுகிறது - என்ற வரியில் ஜகத்காரண வஸ்துவை உபாஸிப்பவனுக்கே மோக்ஷம் உண்டு என்று கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அந்த வாக்கியத்தில் ப்ராணன் என்னும் பதத்துடன் ஸாமாநாதிகரண்யத்தில் படிக்கப்பட்ட இந்த்ரன் என்னும் பதம் மூலம் கூறப்படுபவன், ஜீவாத்மாவைக் காட்டிலும் வேறான பரமாத்மாவே ஆவான். ஏன்? அதனைத் தொடர்ந்து வரும் வாக்கியங்களால் ஆகும். பரமாத்மாவிற்கே உரியதான ஆனந்தம், வயோதிகம் அற்ற தன்மை, இறப்பற்ற தன்மை ஆகியவை அனைத்தும் இந்த்ரன் மற்றும் ப்ராணன் ஆகிய பதங்களால் கூறப்படும் வஸ்துவிற்கு உள்ளது என்பதை கௌஷீ. (3-8) – ஸ ஏஷ ப்ராண ஏவ ப்ரஜ்ஞாத்மா ஆநந்தோ அஜரோ அம்ருத: - ப்ராணன் எனப்படும் அந்த ஆத்மா

ஆனந்தமாகவும், வயோதிகம் அற்றவனாகவும், மரணம் அற்றவனாகவும் உள்ளான் – என்னும் வாக்கியம் கூறுகிறது.

**1-1-30 ந வக்து: ஆத்மோபதேசாத் இதி சேத் அத்யாத்ம ஸம்பந்த பூமா ஹி அஸ்மிந்**

**பொருள்** - உபதேசிப்பவனாகிய இந்த்ரன், தன்னையே உபாஸிக்கவேண்டும் என்று கூறுவதால், இந்த்ரன் மற்றும் ப்ராணன் போன்று பதங்களால் கூறப்படுவது ப்ரஹ்மம் அல்ல என்று கூறினால் சரியல்ல; பரமாத்மாவுக்குத் தொடர்புடைய பெருமைகள் இந்தப் பகுதியில் காணப்படுகிறது அல்லவோ?

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – தொடக்கத்தில் கௌஷீ. (3-9) – மாம் ஏவ விஜாநீஹி – என்னை மட்டுமே அறிவாய் – என்றுள்ள வாக்கியம் மூலம் த்வஷ்டாவின் புத்ரனைத் தான் கொன்றதாக, அறிகின்ற ஜீவாத்ம பாவத்தில் இந்த்ரன் உபதேசம் செய்கிறான். இத்தகைய தொடக்கத்திற்கு ஏற்றபடியே முடிவும் இருத்தல் வேண்டும் (ஆகவே இந்த்ரன் என்னும் பதமானது ஜீவாத்மாவையே குறிக்கிறது).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. "அத்யாத்ம ஸம்பந்த பூமா ஹி அஸ்மிந் - பரமாத்மாவுக்குத் தொடர்புடைய பெருமைகள் இந்தப் பகுதியில் காணப்படுகிறது". "அத்யாத்ம" என்பது பரமாத்மாவின் தர்மங்கள். அதாவது, அந்த வாக்கியத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை, இந்த்ரன் என்னும் பதத்தால் கூறப்பட்டவனுக்கு, பரமாத்மாவுடன் ஸம்பந்தம் கொண்டுள்ள பலவிதமான குணங்களும் கூறப்பட்டன. கௌஷீ. (3-1) - கௌஷீ. (3-1) - யம் த்வம் மநுஷ்யாய ஹிததமாம் மந்யஸே – எந்த ஒரு வரம் அளித்தால் அது மனிதனுக்கு நன்மை பயக்கும் என்று நீ எண்ணுகிறாயோ அந்த வரத்தைத் நீயே தேர்ந்தெடுத்து எனக்கு அளிப்பாயாக – என்று தொடங்குவதன் மூலம் மனிதனுக்கு நன்மையை அளிக்கும் உபாஸனம் கூறப்பட்டது. இத்தகைய நன்மையாக இருத்தல் என்பது பரமாத்மாவின் தர்மம் என்று தை. ஆ. (3-12-7) – தமேவ வித்வாந் அம்ருதம் இஹ பவதி | நாந்ய: பந்தா - இப்படியாக ஸர்வேச்வரனை அறிந்தவன் இந்த உலகிலேயே முக்தனாகிறான், அவனை அடைய வேறு உபாயம் இல்லை – என்பது போன்ற ச்ருதி வாக்கியங்கள் கூறுகின்றன. இதே போன்று, கௌஷீ. (3-8) - ஏஷ ஏவ ஸாது கர்ம காரயதி - இவன் நற்கர்மங்கள் செய்யத் தூண்டுகிறான் - என்பதன் மூலம் அனைவரையும்

கர்மங்களைச் செய்விக்கை; கௌஷீ. (2-8) - ஏவமேவைதா பூதமாத்ரா: - அனைத்தும் அவனிடமே சேர்க்கப்பட்டுள்ளன – என்று தொடங்கி, கௌஷீ. (2-8) - ப்ரஜ்ஞாமாத்ரா: ப்ராணேர்ப்பிதா: - அனைத்தும் அந்த ப்ராணனிடமே - என்பதன் மூலம் அனைத்தையும் தாங்குதல்; இதே போன்று ஆனந்தமயமாக இருத்தல்; கௌஷீ. (3-8) - ஏஷ லோகாதிபதி: - அனைத்து உலகங்களின் அதிபதி – என்பதன் மூலம் ஸர்வேச்வரனாக இருத்தல் ஆகிய அனைத்து தர்மங்களும் கூறப்பட்டன.

**1-1-31 சாஸ்த்ர த்ருஷ்ட்யா தூபதேசோ வாமதேவவத்**

**பொருள்** - வாமதேவரிஷி போன்று இங்கும் இந்த்ரனுடைய உபதேசம் என்பது சாஸ்த்ர ரீதியில் ஆகும்.

**வேதாந்தஸாரம்** – பெயர் மற்றும் ரூபம் ஆகியவற்றின் இலக்கணத்தை விவரிக்கும் சாஸ்த்ரங்கள், "அனைத்து சொற்களும் பரமாத்மாவையே கூறுகின்றன" என்று உரைக்கின்றன. இத்தகைய இலக்கணத்தை நினைவுபடுத்துவதற்காகவே அங்கு "இந்த்ரன்" என்னும் பதம் மூலம் பரமாத்மா உபதேசிக்கப்பட்டான். இத்தகைய சாஸ்த்ரத்தை நன்குணர்ந்த வாமதேவர், ப்ரு. (1-4-10) – தத் ஏதத் பச்யந் ருஷிர் வாமதேவ: ப்ரதிபேதே அஹம் மநுரபவம் ஸூர்யச்ச - பரமாத்மாவை உபாஸிக்கும் வாமதேவர், "நானே மனுவாகவும் சூரியனாகவும் உள்ளேன்" என்றார் – என்று கூறியதாக உள்ளது.

**1-1-32 ஜீவமுக்ய ப்ராணலிங்காத் ந இதி சேத் ந உபாஸாத்ரைவித்யாத் ஆச்ரிதத்வாத் இஹ தத் யோகாத்**

**பொருள்** - "ஜீவாத்மா மற்றும் முக்யப்ராணன் ஆகியவற்றின் அடையாளங்கள் உள்ளதால் பரமாத்ம தர்மங்கள் கொண்டு பொருள் நிர்ணயம் செய்தல் கூடாது" என்று உரைப்பது சரியல்ல. உபாஸனை என்பது மூன்றுவிதம் என்பதாலும், மூன்றுவிதமான உபாஸனைகளும் ஆச்ரயிக்கப்பட்டுள்ளதாலும், இங்கு மூன்றுவிதமான உபாஸனைகளும் கூறப்பட்டதாலும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** கௌஷீ. (3-1) - த்ரிசீர்ஷாணம் த்வாஷ்ட்ரமஹநம் - மூன்று தலை உள்ளவனாய், த்வஷ்டாவின் மகனாய் இருந்த விச்வரூபனைக் கொன்றேன் – என்றும், கௌஷீ. (3-2) – யாவத் அஸ்மிந் சரீரே ப்ராணோ வஸதி தாவத் ஆயு: - உடலில் ப்ராணன் உள்ளவரை மட்டுமே ஆயுள் இருக்கும் – என்றும் உள்ள வாக்கியங்களில் ஜீவாத்மா மற்றும் முக்கியப்ராணனுடைய அடையாளங்கள் காணப்படுகின்றன. ஆகவே இந்தப் பகுதியில் ப்ரஹ்மத்தைக் குறித்துக் கூறப்படவில்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. மூன்றுவிதமான உபாஸனங்கள் உள்ளதன் காரணமாக இங்கு ஜீவனைக் குறிக்கும் பதம் மற்றும் ப்ராணனைக் குறிக்கும் பதம் ஆகியவை பரமாத்மாவைக் குறிப்பது பொருத்தமே ஆகும். வேறு ஓர் இடத்தில் மூன்றுவிதமான பரமாத்ம உபாஸனம் கூறப்படுள்ளது. அவையாவன - அனைத்து பரமாத்ம ஸ்வரூபத்தை நேரே அனுஸந்தித்தல், அனுபவிக்கும் ஜீவாத்மாவைத் தனது சரீரமாகக் கொண்டது என்று அனுஸந்தித்தல் மற்றும் அனுபவிக்கப்படுவது என்று கூறப்படும் அசேதனங்களைத் தனது சரீரமாகக் கொண்டது என்று அனுஸந்தித்தல் – என்பவை ஆகும். தை. (2-1-1) - ஸத்யம் ஞானம் அநந்தம் ப்ரஹ்ம - இயல்பாகவே உள்ளதாய் இருப்பதும், எப்போதும் குறைவுபடாத அறிவையே தனது ஸ்வரூபமாகவும் குணமாகவும் கொண்டதும், இடம் மற்றும் காலம் போன்ற எதனாலும் அளவுபடாமல் உள்ளதும் ஆகிய ப்ரஹ்மம் – என்றுள்ள வரியில், பரமாத்ம ஸ்வரூப உபாஸனம் கூறப்படுவதைக் காணலாம். “அனுபவிப்பவனாகிய ஜீவாத்மாவைத் தனது சரீரமாகக் கொண்டது” என்னும் வடிவில் உள்ள ப்ரஹ்ம உபாஸனம் மற்றும் “இன்பம் அளிப்பதாகவும் அனுபவிக்கப்படுவதாகவும் உள்ள அசேதனத்தைச் சரீரமாகக் கொண்டது” என்னும் வடிவில் உள்ள ப்ரஹ்ம உபாஸனம் ஆகிய இரண்டையும், தை. (2-6-2) – தத் அநுப்ரவிச்ய ஸத் ச த்யத் ச … ஸத்யம் ச அந்ருதம் ச ஸத்யம் அபவத் - அதற்குள் புகுந்த இவன், ஸத் என்றும், த்யத் என்றும் (ஜீவாத்மா, அசித்) நின்றான்; ஜீவனாகவும், அசித்தாகவும் ஆனபோதிலும் மாற்றம் அற்றதாகவே இருந்தது – என்ற வாக்கியத்தில் காண்க. இந்தப் பகுதியிலும் அதே போன்ற மூன்றுவிதமான உபாஸனமே கூறப்பட்டது. ப்ர. ஸூ. (1-1-2) - ஜந்மாதி அஸ்ய யத: - இந்த ஜகத்திற்கு ஸ்ருஷ்டி போன்ற செயல்கள் எதனிடமிருந்து ஏற்பட்டதோ (அதுவே ப்ரஹ்மம்) – என்னும் ஸூத்ரத்தில், “ஸத், ப்ரஹ்மம், ஆத்மா” என்னும் பதங்களால் கூறப்பட்ட ஜகத்காரணமான வஸ்துவானது, ப்ரக்ருதி மற்றும் புருஷன் (ஜீவாத்மா) ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டது என்று

கூறப்பட்டது. ப்ர. ஸூ. (1-1-25) - ஜ்யோதி: சரணாபிதாநாத் – ஜ்யோதி என்று கூறப்படுபவனும் பரமாத்மாவே ஆவான், அவனுடைய திருவடிகள் குறித்துக் கூறப்பட்டுள்ளதால் – என்னும் ஸூத்ரத்தில், புருஷஸூக்தம் கூறும் மஹாபுருஷனே ஜகத்காரணம் என்று கூறப்பட்டது. அவனே, ஜீவாத்மாவைக் குறிக்கும் இந்த்ரன் முதலான பதங்களால் கூறப்படுகிறான் என்றும், ஒரு சில இடங்களில் சாஸ்த்ரங்களுக்கு உரிய மரியாதை காரணமாக "அந்தந்த வஸ்துக்களைச் சரீரமாகக் கொண்டு உபாஸிப்பதற்காக இவ்விதம் உபதேசிக்கப்படுகிறான்" என்றும் கூறப்படுகிறது; இதனை ப்ர. ஸூ. (1-1-31) - சாஸ்த்ர த்ருஷ்ட்யா தூபதேசோ வாமதேவவத் - வாமதேவரிஷி போன்று இங்கும் இந்த்ரனுடைய உபதேசம் என்பது சாஸ்த்ர ரீதியில் ஆகும் – என்றும், ப்ர. ஸூ. (1-1-32) - உபாஸாத்ரைவித்யாத் - உபாஸனை என்பது மூன்றுவிதம் – என்றும் உள்ள ஸூத்ரங்கள் கூறுகின்றன.

## முதல் அத்யாயம் இரண்டாம் பாதம்

## அதிகரணம் – 1 - ஸர்வத்ர ப்ரஸித்த்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - சாந்தோக்ய உபநிஷத் (3-14-1) – ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம – என்பதில் கூறப்படும் ப்ரஹ்மம் என்பது பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

### 1-2-1 ஸர்வத்ர ப்ரஸித்தோபதேசாத்

**பொருள்** - "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்றுள்ள வாக்கியத்தில் அனைத்து வஸ்துக்களுடனும் ஒரே வேற்றுமையில் கூறப்பட்ட வஸ்து பரப்ரஹ்மமே ஆகும்; இப்படியே உபதேசிக்கப்பட்டுள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம்** - சாந். (3-14-1) - ஸர்வம் கல்விதம் - இவை அனைத்தும் – என்னும் வாக்கியத்தில் ஸாமாநாதிகரண்யத்தில் கூறப்பட்டுள்ள "ப்ரஹ்ம" என்னும் பதமானது, பரமாத்மாவையே குறிப்பதாகும். ஏன்? இப்படியே உபதேசிக்கப்பட்டுள்ளதால் ஆகும். இவை அனைத்தும் ப்ரஹ்மமே என்று கூறுவதன் காரணமானது, சாந். (3-14-1) –

தஜ்ஜலாந் – அதனால் இவை தோன்றி – என்னும் வாக்கியத்தால் நிரூபிக்கப்படுகிறது. அனைவராலும் நன்றாக அறியப்பட்ட ஒன்றே இங்கு காரணமாக உபதேசிக்கப்பட்டது. தை. (2-3-1) - யதோ வா இமாநி – இவை அனைத்தும் எதிலிருந்து தோன்றி – என்பது போன்ற அனைத்து உபநிஷத் வாக்கியங்கள் மூலமும் ப்ரஹ்மமே ஜகத்தின் உற்பத்தி, இருப்பு மற்றும் ஸம்ஹாரத்திற்குக் காரணமாக அறியப்படுகிறது.

**1-2-2 விவக்ஷித குணோபபத்தே: ச**

**பொருள்** - இங்கு கூறப்படும் குணங்கள் பொருந்தவேண்டும் என்றால், (இங்கு கூறப்படுவது பரம்பொருள் குறித்தே ஆகும்).

**வேதாந்தஸாரம்** – அந்த உபநிஷத் வாக்கியத்தில் (சாந். 3-14-2 – மநோமய: ப்ராணசரீரோ பாரூப: ஸத்யஸங்கல்ப) கூறப்படுகின்ற "தூய்மையான மனதால் அறியத்தக்கவன்; தடையில்லாத ஸங்கல்பம் கொண்டவன்" போன்ற குணங்கள் ப்ரஹ்மத்திற்கே கூறப்படுகின்றன.

**1-2-3 அநுபபத்தே: து ந சாரீர:**

**பொருள்** - முன்பு கூறப்பட்ட குணங்கள் ஏதும் ஜீவாத்மாவுக்குப் பொருந்தாது என்பதால், இவன் ஜீவன் அல்லன்.

**வேதாந்தஸாரம்** – துக்கம் கலந்த ஸுகங்களை அனுபவிக்கும் ஜீவாத்மாவிற்கு இத்தகைய குணங்கள் இருப்பதில்லை. ஆகவே இங்கு கூறப்பட்டவன் சரீரத்துடன் கூடிய ஜீவாத்மா அல்லன்.

**1-2-4 கர்ம கர்த்ரு வ்யபதேசாத் ச**

**பொருள்** - பரமாத்மாவை அடையப்படுபவனாகவும், ஜீவாத்மாவை அடைபவனாகவும் கூறுவதால் பரமாத்மாவே ஆகும்.

**வேதாந்தஸாரம்** – சாந். (3-14-4) – ஏதமித: ப்ரேத்ய அபி ஸம்பவிதாஸ்மி - இந்த உலகை விட்டு நான் சென்ற பின்னர், அந்தப் பரமாத்மாவை அடைவேன் - என்ற வாக்கியத்தில், ப்ரஹ்மத்தையே அடையப்படும் பொருளாகவும், ஜீவாத்மாவையே அவனை அடையும் பொருளாகவும் கூறப்பட்டது. ஆகவே ஜீவாத்மாவைக் காட்டிலும் வேறுபட்ட ப்ரஹ்மமே அடையப்படும் வஸ்து ஆகும்.

**1-2-5 சப்தவிசேஷாத்**

**பொருள்** - ஒருவிதமான சொற்கள் காரணமாகவும், இவன் ஜீவாத்மாவைக் காட்டிலும் வேறானவனே ஆவான்.

**வேதாந்தஸாரம்** – சாந். (3-14-3) - ஏஷ ம ஆத்ம அந்தர்ஹ்ருதயே – இதயத்தில் உள்ளவன் என்னுடைய ஆத்மா – என்று ப்ரஹ்மத்தின் சரீரமான ஜீவாத்மாவை ஆறாம் வேற்றுமையிலும் (அதாவது “என்னுடைய” என்பது ஆறாம் வேற்றுமை), உபாஸிக்கப்படுகின்ற ப்ரஹ்மத்தை முதல் வேற்றுமையிலும் (அதாவது “ஆத்மா”) கூறப்பட்டதைக் காணலாம்.

**1-2-6 ஸ்ம்ருதேச்ச**

**பொருள்** - ஸ்ம்ருதிகளிலும் இவ்விதமே கூறப்பட்டுள்ளதாலும்.

**வேதாந்தஸாரம்** – புருஷோத்தமனே முதல் வேற்றுமையில் கூறப்படுகிறான் என்று உறுதியாகக் கூறப்படுகிறது. அதாவது கீதையில் (15-15) – ஸர்வஸ்ய ச அஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ – அனைவருடைய இதயத்திலும் நான் அருகில் உள்ளேன் – என்றுள்ளது காணலாம்.

**1-2-7 அர்ப்ப கௌகஸ்த்வாத் தத் வ்யபதேசாத் ச நேதி சேத் ந நிசாய்யத்வாத் ஏவம் வ்யோமவத் ச**

**பொருள்** – “சிறியதான இதயத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டதாலும், சிறியவன் என்று ஓதப்படுவதாலும் பரமாத்மா அல்ல”, என்று கூறுவது சரியல்ல. இதயத்தில் உள்ளவன் என்று உபாஸிப்பதற்காகவே இவ்விதம் கூறப்படுகிறான்; ஆகாசம் போன்று பெரியவனாகவும் கூறப்படுகிறான்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (3-14-3) – ஏஷ ம ஆத்ம அந்தர்ஹ்ருதயே அணீயாந் வ்ரீஹே: - இதயத்தில் உள்ள இந்த என்னுடைய ஆத்மா நெல், கோதுமையைக் காட்டிலும் மிகவும் சிறியவன் – என்பது போன்ற வாக்கியங்கள், “சிறியதான இடத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டவன், மிகவும் சிறியவன்” என்று ஓதுவதால், இங்கு கூறப்படுபவன் உயர்ந்தவன் (அதாவது பரமாத்மா) அல்லன்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. த்யானிப்பதற்கு ஏதுவாகவே இவ்விதம் கூறப்பட்டான் அல்லாமல், சிறிய ரூபம் கொண்டவன் என்னும் கருத்தில் அல்ல. ஆகாசம் போன்றும் அவன் கூறப்படுகிறான். சாந். (3-14-3) – ஜ்யாயாந் ப்ருதிவ்யா ஜ்யாயாந் அந்தரிக்ஷாத் - பூமியைக் காட்டிலும் பெரியவன், அந்தரிக்ஷத்தைக் காட்டிலும் பெரியவன் – என்பது போன்ற வாக்கியங்களில் அவன் பெரியவனாகவும் கூறப்படுகிறான்.

**1-2-8 ஸம்போக ப்ராப்திரிதி சேத் ந வைசேஷ்யாத்**

**பொருள்** - சரீரத்திற்குள் இருப்பதால், சுகதுக்கங்கள் போன்றவை பரமாத்மாவுக்கும் ஏற்படுமோ என்றால், அல்ல; வேறுபாடு உள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – பரப்ரஹ்மமானது, ஜீவாத்மா போன்று சரீரத்தினுள் உள்ளது என்று கொண்டால், ஜீவாத்மாவைப் போன்று இன்பதுன்பங்களை பரப்ரஹ்மமும் அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்படும் அல்லவோ?

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல; இன்பதுன்பங்களை அனுபவிப்பதன் காரணம் வேறுபடுவதால் ஆகும். பரமாத்மா தனது விருப்பத்தின் காரணமாகவே, ஜீவாத்மாவைக் காப்பாற்றுவதற்காக, அந்தச் சரீரத்தில் வசிக்கிறான்.

## அதிகரணம் - 2 – அத்த்ராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – கடவல்லீயில் (1-2-24) கூறுவதற்கு ஏற்ப, அனைத்து சராசரங்களையும் உண்பவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது.

பரமாத்மா அனுபவிப்பனாக இருப்பதில்லை என்று கூறினால், அனைத்து இடங்களிலும் அனைத்தையும் ஜீவாத்மாவே அனுபவிக்கிறான் என்றாகும் அல்லவோ என்ற கேள்விக்கு விடை அளிக்கப்படுகிறது.

**1-2-9 அத்தா சராசர க்ரஹணாத்**

**பொருள்** - அந்தணர் மற்றும் க்ஷத்ரியரை உண்பவனாகக் கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான். இதன் காரணம், உணவாக அசையும் பொருள் மற்றும் அசையாத பொருள் ஆகிய அனைத்தும் கூறப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம்** - கட. (2-24) - யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் சேபே பவத ஓதந: | ம்ருத்யுர் யஸ்ய உபஸேசநம் க இத்தா வேத யத்ர ஸ: - யாருக்கு அந்தணர் மற்றும் க்ஷத்ரியர் ஆகிய இருவரும் உணவாகிறார்களோ, யாருக்கு யமன் ஊறுகாய் ஆகிறானோ, அவன் எங்கு உள்ளான் என்று யார் அறிவார் – என்று கூறப்பட்டது. இங்கு உணவு மற்றும் ஊறுகாய் ஆகிய சொற்கள் மூலமாக “உண்பவன்” என்று கூறப்படுபவன் பரமபுருஷனே ஆவான். ஏனெனில், அந்தணர்கள் மற்றும் க்ஷத்ரியர்கள் முதலான சொற்களால் குறிக்கப்படும் அசையும் மற்றும் அசையாத பொருள்களை, மரணம் என்பதை ஊறுகாயாகக் கொண்டு, உண்பவன் அவனே ஆவான் என்று கூறப்பட்டுள்ளது.

**1-2-10 ப்ரகரணாத் ச**

**பொருள் -** இங்கு உள்ள (ப்ரஹ்மத்தைக் குறித்த) பகுதியாலும் பரமாத்மாவே ஆவான்.

**வேதாந்தஸாரம் -** கட. (1-2-22) - மஹாந்தம் விபும் ஆத்மாநம் மத்வா தீரோ ந சோசதி – உயர்ந்தவனும், எங்கும் வ்யாபித்துள்ளவனும் ஆகிய பரமாத்மாவை உபாஸிக்கும் அறிவாளி ஒருவன் எதற்கும் வருத்தம் அடையமாட்டான் – என்றும், கட. (1-2-23) – நாயம் ஆத்மா ப்ரவசநேந லப்ய: - பரமாத்மா ச்ரவணம் முதலானவை மூலம் மட்டுமே அடையப்படுபவன் அல்லன் – என்றும் உள்ள வாக்கியத்தில், இவை அமைந்துள்ள பகுதியின் காரணமாக, பரமாத்மாவே கூறப்படுகிறான் என்று கருத்து.

**1-2-11 குஹாம் ப்ரவிஷ்டௌ ஆத்மாநௌ ஹி தத் தர்சநாத்**

**பொருள் -** இதயம் என்ற குகைக்குள் நுழைந்திருப்பவர்கள் இருவரும் பரமாத்மாவும் ஜீவாத்மாவுமே ஆவார்கள்; இவர்களுக்கு அவ்விதம் நுழைந்தது காணப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் -** கட. (1-3-1) - ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே - கர்மபலன்களை அனுபவிப்பவர்களும், புண்ணிய லோகமான இந்த உலகில் இதயம் என்று குகையில் நுழைந்திருப்பவர்களும் இருவர் ஆவர் – என்னும் வாக்கியத்தில், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் கூறப்படுகிறார்கள்; காரணம், கர்மபலன்களை அனுபவித்தல் என்பது தொடர்பாக, இந்த இருவரும் முறையே அனுபவிக்கத் தூண்டப்படுபவன் மற்றும் அனுபவிக்கத் தூண்டுபவன் என உள்ளனர். மேலும் இந்தப் பகுதியில், இதயம் என்னும் குகைக்குள் புகுந்துள்ளதாக இந்த இருவரே கூறப்பட்டனர். கட. (2-12) - தம் துர்தசம் கூடம் அநுப்ரவிஷ்டம் குஹாஹிதம் - காண்பதற்கு அரியவனும், நம்முடைய கர்மம் காரணமாக நமக்கு மறைவாக உள்ளவனும், எங்கும் வ்யாபித்துள்ளவனும், இதயம் என்ற குகையில் உள்ளவனும் – என்பதன் மூலம் பரமாத்மா கூறப்படுகிறான். ஜீவாத்மாவைக் குறித்து கட. (4-7) – யா ப்ராணேந ஸம்பவதி அதிதிர் தேவதாமயீ குஹாம் ப்ரவிச்ய திஷ்டந்தீ - கர்மபலத்தை உண்பதால் அதிதி என்று கூறப்படும் எந்த ஒரு ஜீவாத்மா ப்ராணனுடன் வாழ்கின்றானோ, இதயம் என்ற குகையில் நுழைந்துள்ளானோ, “தேவர்கள்” எனப்படும் இந்த்ரியங்கள் மூலம் ஏற்படும்

இன்பங்களைப் பெறுகிறானோ – என்று கூறப்பட்டது; இங்கு, ஜீவாத்மா கர்மங்களுடைய பலனை உண்பதால், அதிதி எனப்படுகிறான்.

**1-2-12 விசேஷணாத் ச**

**பொருள்** – சிறப்பித்துக் கூறப்படுவதால் (பரமாத்மாவே ஆவான்).

**வேதாந்தஸாரம்** - இந்தப் பகுதியில் பல இடங்களில், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் சிறப்பித்துக் கூறப்படுகின்றனர். உதாரணமாக, கட. (1-2-18) – ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித் – இந்த விபச்சித் (ஞானம் உள்ள ஜீவாத்மா) – பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை – என்பதன் மூலம் ஜீவாத்மா கூறப்படுகிறான். கட. (1-2-20) – அணோரணீயாந் மஹதோ மஹீயாந் – அணுவைக் காட்டிலும் அணுவாக உள்ளவன், பெரியதைக் காட்டிலும் பெரியதாக உள்ளவன் – என்றும், கட. (1-2-22) – மஹந்தம் விபும் ஆத்மாநம் – அனைத்தையும் பரவி நிற்கின்ற மஹத்தான ஆத்மா – என்றும், கட. (1-2-23) – ந அயம் ஆத்மா ப்ரவசநேந – மனனம் போன்றவற்றால் அடைய இயலாது – என்றும், கட. (3-9) - விஜ்ஞாநஸாரதிர் யஸ்து மந: ப்ரக்ரஹவாந் நர: | ஸோத்வந: பாரமாப்நோதி தத் விஷ்ணோ: பரமம் பதம் – அறிவைத் தேரோட்டியாகவும், மனதைக் கடிவாளமாகவும் கொண்டு மனிதன் ஸம்ஸாரத்தின் அக்கரையான மஹாவிஷ்ணுவின் பரமபதத்தை அடைகிறான் – என்றும் உள்ள வாக்கியங்களால் பரமாத்மா கூறப்படுகிறான்.

மேலும் சாந். (3-12-6) – த்ரிபாதஸ்யாம்ருதம் திவி - அவனது மற்ற மூன்று பாதங்கள் பரமபதத்தில் உள்ளன – என்றும், சாந். (3-13-7) – அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே விச்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு அநுத்தமேஷு உத்தமேஷு லோகேஷு - அனைத்துவிதமான பொருள்களுக்கும் அப்பால், பரமபதத்தின் மேலே, தனக்கும் மேலே ஏதும் இல்லாத சிறந்த லோகங்களில் – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலம், “இந்த ப்ரக்ருதி மண்டலத்திற்கு அப்பால் உள்ளதும், ஸம்ஸார மார்கத்திற்கு இட்டுச் செல்லாததும், விஷ்ணுவின் உயர்ந்த இடமாக உள்ளதும் ஆகிய பரமபதத்தையே முமுக்ஷுக்கள் விரும்புகின்றார்கள்”, என்று கூறப்படுகிறது. இந்தக் கருத்தையே தை. ஸம்ஹிதை (1-3-6) – தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய: - விஷ்ணுவின் பரமபதத்தை நித்யஸூரிகள் எப்போதும் பார்த்தபடி உள்ளனர் – என்றும், தை. (2-1-1) –

தத் அக்ஷரே பரமே வ்யோமந் – அழியாத உயர்ந்த இடத்தில் அவன் உள்ளான் – என்றும், தை. ஸம்ஹிதை (2-2-12) – க்ஷயந்தம் அஸ்ய ரஜத: பராகே – ரஜஸ்ஸுக்கும் அப்பால் உள்ள இடத்தில் வசிப்பவன் – என்றும், தை. (2-1-1) – விச்வம் புராணம் தமஸ: பரஸ்தாத் – இருளுக்கும் அப்பால் வசிக்கும் அவன் எங்கும் பரவி உள்ளவன், பழமையானவன் – என்றும், தை. ஆ. (3-12-39) – தே ஹ நாகம் மஹிமாந: ஸசந்தே | யத்ர பூர்வே ஸாத்ய: ஸந்தி தேவா: - உயர்ந்தவர்களாக உள்ளவர்கள் ஸாத்யர்கள் வசிக்கும் அந்த இடத்தை அடைகிறார்கள் – என்றும் உள்ள வாக்கியங்கள் கூறுகின்றன.

## அதிகரணம் - 3 – அந்தராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - கண்ணின் உள்ளே இருப்பவனாகச் சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்படுவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்படுகிறது.

**1-2-13 அந்தர உபபத்தே:**

**பொருள்** - கண்ணில் உள்ளவனாகக் கூறப்படுவன் பரமாத்மாவே, அங்கு கூறப்படுவது அவனுக்கு மட்டுமே பொருந்தும் என்பதால் ஆகும்.

**வேதாந்தஸாரம்** - சாந். (4-15-1) - ய ஏஷோ அக்ஷிணி புருஷோ த்ருச்யதே ஏஷ ஆத்மேதி ஹோவாச ஏதத் அம்ருதம் அபயமேதத் ப்ரஹ்ம – கண்ணில் எந்த ஒரு புருஷன் காணப்படுகிறானோ அவனே ஆத்மா என்றும், அம்ருதம் என்றும், அபயம் என்றும், ப்ரஹ்மம் என்றும் கூறினார் – என்று கண்களில் உள்ளவன் பரமபுருஷனே எனக் கூறப்படுகிறான். எந்த ஒரு காரணத்தையும் எதிர்பாராமல் தனக்குத்தானே போக்யமாக இருத்தல், பயம் அற்றிருத்தல், அனைத்து நற்குணங்களுக்கும் இருப்பிடமாக இருத்தல் போன்றவை அவனுக்கு மட்டுமே பொருந்துகிறது.

**1-2-14 ஸ்தாநாதி வ்யபதேசாத் ச**

**பொருள்** - கண்களில் இருப்பு போன்றவையும் கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம்** - ப்ரு. (3-7-18) - யச் சக்ஷுஷி திஷ்டந் - யார் கண்களில் உள்ளானோ - என்பதன் மூலம் பரமாத்மாவே கண்களில் உள்ளதாகவும், அதனை நியமிப்பதாகவும் கூறப்படுகிறது. ஆகவே இது உயர்ந்ததாகவே (பரமாத்மா) இருக்கவேண்டும்.

**1-2-15 ஸுக விசிஷ்டாபிதாநாத் ஏவ ச**

**பொருள்** - ஸுகத்துடன் கூடியவன் என்று கூறப்படுவதால் (கண்களில் உள்ளவன் பரமாத்மாவே ஆவான்).

**வேதாந்தஸாரம்** - சாந். (4-10-5) - கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம[1] – ஸுகத்துடன் கூடியது ப்ரஹ்மம் (அல்லது ப்ரஹ்மமே ஸுகம்), மிகவும் பெரியது ப்ரஹ்மம் (அல்லது ப்ரஹ்மமே ஆகாசம்) - என்று முதலில் ஸுகத்துடன் கூடியதாக ப்ரஹ்மத்தை உரைப்பதால், இது உயர்ந்ததாகவே (பரமாத்மா) இருக்கவேண்டும்.

**1-2-16 அத ஏவ ச ஸ ப்ரஹ்ம**

**பொருள்** - இந்தக் காரணத்தால் (க என்ற சப்தம் மூலம் கூறப்படும் ஆகாசமும்) ப்ரஹ்மமே ஆகும்.

**வேதாந்தஸாரம்** - (உபகோஸலன் என்பவன் தனது குருவான ஸத்யகாம ஜாபாலி என்பவருடன் பன்னிரண்டு வருடங்கள் இருந்தான். ஆனால் ஒரு காலகட்டத்தில் அவர் உபகோஸலனுக்கு ப்ரஹ்மத்தைக் குறித்து ஏதும் உபதேசிக்காமல் சென்றுவிட்டார். அப்போது மனம் தளர்ந்த அவனுக்கு, கார்ஹபத்யம் முதலான ஐந்து அக்னிகளும் ப்ரஹ்மத்தைக் குறித்து உபதேசித்தன) உபகோஸலன் ஸம்ஸாரத்தை எண்ணி அச்சம் கொண்டவனாக, ப்ரஹ்மத்தைக் குறித்து அறிய ஆவல் கொண்டான். அப்போது அக்னிகள் அவனுக்கு சாந். (4-10-5) - கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம – ஸுகத்துடன் கூடியது

[1] கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம – இங்குள்ள "கம்" என்பதில் உள்ள இரண்டு "க" என்னும் எழுத்துக்கள், வடமொழியில் உள்ள இரண்டுவிதமான ஒலிகள் கொண்ட "க" ஆகும். முதலில் உள்ள "க" என்பதை "கண்" என்பதில் உள்ளது போன்றும், இரண்டாவது "க" என்பதை "காபந்து" என்பதில் உள்ளது போன்றும் உச்சரிக்கவேண்டும்.

ப்ரஹ்மம் (அல்லது ப்ரஹ்மமே ஸுகம்), மிகவும் பெரியது ப்ரஹ்மம் (அல்லது ப்ரஹ்மமே ஆகாசம்) – என்று உபதேசம் செய்தன. சாந். (4-10-5) - யதேவ கம் தத் ஏவ கம் - எது ஸுகமானதோ அதுவே ஆகாசம் – என்று அந்த வஸ்துவின் ஸ்வரூபம் கூறப்பட்டது. எனவே ஆகாசம் என்பதன் மூலம் அளவற்ற தன்மையை உரைத்து, “இவ்விதம் அளவற்றதான ப்ரஹ்மம் ஸுகரூபம்” எனப்பட்டது.

**1-2-17** ச்ருத உபநிஷத்க கத்யபிதாநாத் ச

**பொருள்** – பரமாத்மாவைக் குறித்து உண்மை அறிவு உள்ளவன், எப்போதும் எண்ணியபடி இருத்தல் வேண்டும் என்று அர்ச்சிராதிகதியைக் கூறுவதால், கண்ணில் உள்ளவன் பரமபுருஷனே ஆவான்.

**வேதாந்தஸாரம்** – இப்படியாக ச்ருதியில் கூறப்பட்ட ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் குறித்து அறிந்தவன் செல்லக் கூடியதான அர்ச்சிராதி கதியானது, கண்களில் உள்ள புருஷனைக் குறித்து அறிந்தவன் செல்லக்கூடியதாக உள்ளது என்றும், சாந். (4-15-5) - தே அர்ச்சிஷம் ஏவ அபி ஸம்பவந்தி – அர்ச்சிராதி மார்க்கம் சென்ற பின்னர் – என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே இங்கு (கண்களில் உள்ளவனாக) கூறப்படுபவன் பரமபுருஷனே ஆவான்.

**1-2-18** அநவஸ்தி தே அஸம்பவாத் ச நேதர:

**பொருள்** – ஜீவன் போன்றவர்கள் எப்போதும் கண்ணில் இல்லாமையாலும், இயல்பாகவே அம்ருதத்வம் போன்ற தம்மைகள் ஜீவாத்மாவுக்குப் பொருந்தாமல் உள்ளதாலும், கண்களில் உள்ளவன் பரமாத்மாவே ஆவான்.

**வேதாந்தஸாரம்** – பரமாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவனாகிய ஜீவாத்மா, கண்களில் உள்ளவன் அல்லன். காரணம் ஜீவாத்மா எப்போதும் கண்களில் வசிப்பதில்லை என்பதாலும், அவனுக்கு அம்ருதத்வம் (இறவாமை) இல்லை என்பதாகும்.

## அதிகரணம் - 4 - அந்தர்யாம்யாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ப்ரு. (5-7-22) – அந்தர்யாமியாக ஓதப்படுபவன் பரமாத்மாவே ஆவான் - என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-2-19 அந்தர்யாமி அதிதைவாதி லோகாதிஷு தத் தர்ம வ்யபதேசாத்**

**பொருள்** - "அதிதைவம்" போன்ற பதங்களுடன் கூடிய வாக்கியங்களில் கூறப்பட்ட அந்தர்யாமி, பரமாத்மாவே ஆவான்; அவனுக்கே உரிய தர்மங்கள் அங்கு கூறப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம்** – "அதிதைவம் (மற்ற தெய்வங்களுக்கும் தெய்வம்), அதிலோகம் (அனைத்து லோகங்களுக்கும் தெய்வம்)" என்னும் அடையாளங்களுடன் கூடிய வாக்கியங்களான ப்ரு. (3-7-3) - ய: ப்ருதிவ்யாம் திஷ்டந் - யார் பூமியில் உள்ளானோ – என்பது போன்றவற்றில் கூறப்படுபவன் பரமபுருஷனே ஆவான். இதன் காரணம் இந்த வரிகளின் மூலமாக, "அனைத்திற்கும் அந்தர்யாமியாக இருத்தல், யாராலும் அறிய இயலாமல் இருத்தல், அனைத்தையும் தனது சரீரமாகக் கொண்டிருத்தல், அனைத்தையும் நியமிப்பவனாக இருத்தல்" முதலான பரமாத்மாவிற்கே உரிய தர்மங்கள் கூறப்பட்டதால் ஆகும்.

**1-2-20** ந ச ஸ்மார்த்தம் அதத் தர்மாபிலாபாத் சாரீரச்ச

**பொருள்** - ப்ரக்ருதியும், சரீர தொடர்புள்ள ஜீவாத்மாவும் அந்தர்யாமி அல்லர்; அவர்களுக்குப் பொருந்தாத தர்மங்கள் (தன்மை) கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம்** – ப்ரதானம் மற்றும் ஜீவாத்மா ஆகியவை அந்தர்யாமியாக இருக்கமுடியாது. காரணம், இங்கு கூறப்பட்டுள்ள "யாராலும் அறிய இயலாமல் இருத்தல்" முதலான அனைத்து தர்மங்களும் அவர்களுக்குப் பொருந்தாது என்பதால் ஆகும். இத்தகைய தர்மங்கள் ஸ்மார்தம் (ப்ரதானம்) என்பதற்கு உண்டாகாது என்பது போன்றே ஜீவாத்மாவிற்கும் ஸம்பவிக்காது.

**1-2-21 உபயே அபி ஹி பேதே ந ஏநம் அதீயதே**

**பொருள்** - காண்வம் மற்றும் மாத்யந்தினம் ஆகிய இரண்டு சாகைகளிலும் அந்தர்யாமியை வேறுபட்டவனாக ஓதப்பட்டது.

**வேதாந்தஸாரம்** – காண்வம் மற்றும் மாத்யந்தினம் ஆகிய இரண்டு சாகைகளிலும், ப்ரு. (3-7-22) – யோ விஜ்ஞாநே திஷ்டந் - விஜ்ஞானத்தில் உள்ளவன் யாரோ – என்றும், ப்ரு. (3-7-22) – ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோ அந்தர யம் ஆத்மா ந வேத யஸ்ய ஆத்மா சரீரம் ய ஆத்மாநம் அந்தரோ யமயதி - யார் ஆத்மாவில் நிற்கிறானோ, ஆத்மாவின் உள்ளே இருக்கிறானோ, யார் இவ்விதம் உள்ளதை ஆத்மா அறியாதோ, யாருக்கு ஆத்மா சரீரமோ, யார் ஆத்மாவுக்கு உள்ளே புகுந்து நியமிக்கிறானோ – என்றும் உள்ள வாக்கியங்களில், ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் அந்தர்யாமியாக உள்ளவன் வேறுபட்டவனாகவே படிக்கப்பட்டான். ஆகவே அவன் (அந்தர்யாமி) பரமபுருஷனே ஆகிறான்.

## அதிகரணம் – 5 – அத்ருச்யத்வாதிகுணகாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – முண். (1-1-5, 6) – அக்ஷரம் எனப்படும் மூலப்ரக்ருதி, இதனைக் காட்டிலும் மேலான ஜீவன், அவனைக் காட்டிலும் மேலான அக்ஷரம் எனப்படுபவன் பரமாத்மாவே என்று கூறப்பட்ட கருத்து ஆராயப்படுகிறது.

**1-2-22** அத்ருச்யத்வாதிகுணகோ தர்மோக்த:

**பொருள்** - காணப்படாமை போன்றவற்றை குணமாகக் கொண்டவன் என்று ஓதப்படுபவன் பரமாத்மாவே ஆவான்; அவனுக்கே உரிய குணங்கள் கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம்** – கீழே உள்ள பல வாக்கியங்கள், ப்ரதானம் மற்றும் ப்ரத்யகாத்மா ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டவனும், அவற்றுக்கு அந்தர்யாமியும் ஆகிய பரமாத்மாவைக் கூறுகின்றன:

- முண். (1-1-5) – அத பரா யயா தத் அக்ஷரம் அதிகம்யதே - பரவித்யை (உயர்ந்த வித்யை) மூலம் அடுத்தபடியாக அக்ஷரம் என்ற அழிவற்ற அந்தப் பொருள் அடையப்படுகிறது
- முண். (1-1-6) – யத் தத் அத்ரேச்யம் - அது காணப்படாதது – என்று தொடங்கப்பட்டு முண். (1-1-6) – யத் பூதயோநி பரிபச்யந்தி தீரா: - பூதங்களுக்குக் காரணமாக உள்ளது, இதனை அனைத்தும் அறிந்தவர்கள் காண்கிறார்கள் – என்று முடிக்கபடும் வாக்கியம்
- முண். (2-1-2) - அக்ஷராத் பரத: பர: - மேலான அக்ஷரத்தைக் காட்டிலும் மேலானது

இப்படிப்பட்ட அவனுடைய தர்மத்தை, முண். (1-1-9) – ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் – யார் அனைத்தையும் அறிந்தவனோ, யார் அனைத்தையும் உணர்ந்தவனோ – என்னும் வாக்கியம் கூறுகிறது.

**1-2-23** விசேஷேண பேத வ்யபதேசாப்யாம் ச நேதரௌ

**பொருள்** - தனித்துக் கூறுவதாலும், வேறுபாட்டினை உரைப்பதாலும், ப்ரக்ருதி மற்றும் புருஷர்கள் கூறப்படவில்லை.

**வேதாந்தஸாரம்** – இந்தப் பகுதியில், "ஒன்றை அறிந்தால் அனைத்தையும் குறித்து அறிந்ததாகிறது" என்று கூறப்படுகிறது. ஆகவே இங்கு கூறப்படுவது ப்ரதானம் குறித்து அல்ல. முண். (2-1-2) - அக்ஷராத் பரத: பர: - அக்ஷரம் எனப்படும் மூலப்ரக்ருதியைக் காட்டிலும் மேலானவனாகிய ஜீவாத்மாவைக் காட்டிலும் உயர்ந்தவன் – என்னும் வாக்கியத்தின் மூலம், ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் "அக்ஷரம்" எனப்படும் ப்ரதானம் வேறானது என்று கூறப்படுகிறது; அது மட்டும் அல்லாமல், அக்ஷரம் என்பது ப்ரத்யகாத்மாவும் அல்ல என்றும் ஆகிறது. அல்லது வேறுவிதமாகவும் உரைக்கலாம். "அக்ஷராத் பரத: பர:" என்பதில் உள்ள "அக்ஷராத்" மற்றும் "பரத:" ஆகிய இரண்டையும் ஸாமாநாதிகரண்யத்தில் வைக்கும்போது, "ப்ரஹ்மமானது, அக்ஷரத்தை (ப்ரதானம்) காட்டிலும் வேறானதாகிய இருபத்து ஐந்தாவது தத்வத்தை (அதாவது ஜீவாத்மா) காட்டிலும் வேறானது ஆகும்" என்று தேறுகிறது.

**1-2-24 ரூபோபந்யாஸாத் ச**

**பொருள்** – உலகம் முழுவதும் அக்ஷரத்தின் சரீரம் என்று கூறப்படுவதால், அக்ஷரம் பரமாத்மாவே ஆகும்.

**வேதாந்தஸாரம்** – முண். (2-1-4) – அக்நிர் மூர்த்தா - இவனுக்கு அக்னி எனப்படும் த்யுலோகம் தலையாகவும் – என்னும் வாக்கியமானது மூன்று லோகங்களும் அவனுடைய சரீரமாகவே உள்ளதாகக் கூறுவதால், அவனே பரமாத்மா ஆவான்.

## அதிகரணம் – 6 - வைச்வாநராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - முண்டக உபநிஷத் (2-1-1) மற்றும் சாந்தோக்ய உபநிஷத் (5-12-18) ஆகியவற்றில் கூறப்படும் வைச்வாநரன் என்பவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-2-25 வைச்வாநர: ஸாதாரண சப்த விசேஷாத்**

**பொருள்** - வைச்வாநரன் என்று படிக்கப்படுபவன் பரமாத்மாவே ஆவான்; பொதுவான பதத்தைச் சிறப்பித்துக் கூறுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம்** – சாந். (5-11-6) – ஆத்மாநம் ஏவ இமம் வைச்வாநரம் - இப்போது நீவிர் இந்த வைச்வாநராத்மாவை உபாஸிக்கிறீர் – என்பது போன்ற வாக்கியங்களில் உள்ள "வைச்வாநரன்" என்பது பரமாத்மாவையே குறிப்பதாகும். "வைச்வாநரன்" என்பது பொதுவாக வயிற்றில் உள்ள ஜாடராக்னியைக் குறித்தாலும், இந்தப் பகுதியில் பரமாத்மாவைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். இதன் காரணம், இங்கு அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ள தன்மை மற்றும் ப்ரஹ்மம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்ட நிலை ஆகியவற்றால் ஆகும்.

**1-2-26 ஸ்மர்யமாணம் அநுமாநம் ஸ்யாத் இதி**

**பொருள்** - இவ்விதமாக உலகம் அனைத்தையும் உருவமாகக் கொண்டதாக அறிவுறுத்தப்படுவது, "வைச்வாநரன் என்னும் பரமாத்மாவே ஆகும்" என்று கூறப்படும் விஷயத்தில் அடையாளமாகக் கூடும்.

**வேதாந்தஸாரம்** – முண். (2-1-4) – அக்நிர் மூர்த்தா - இவனுக்கு அக்னி எனப்படும் த்யுலோகம் தலையாகவும் – என்பது போன்ற வாக்கியங்களில் வைச்வாநர ரூபமானது த்யுலோகம் (ஸ்வர்கம்) தொடங்கி பூமி முடிய உள்ளதாகக் கூறப்படுகிறது. மற்ற இடங்களிலும் இதே போன்று கூறப்படுவதை நினைவில் கொண்டு, இங்கு வைச்வாநரனாகக் கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான் எனலாம்.

**1-2-27 சப்தாதிப்ய: அந்த: ப்ரதிஷ்டாநாத் ச நேதி சேத் ந ததா த்ருஷ்ட்யுபதேசாத் அஸம்பவாத் புருஷமபி ச ஏநம் அதீயதே**

**பொருள்** - சப்தம் போன்றவற்றாலும், சரீரத்தின் உள்ளிருப்பவன் என்பதாலும் வைச்வாநரன் பரமாத்மாவே ஆவான் என்று கூற இயலாது; இவ்விதம் நீ கூறுவாய் என்றால் அது சரியல்ல; ஜாடராக்னியைச் சரீரமாகக் கொண்டதாகவே பரமாத்ம உபாஸனம் கூறப்படுவதாலும், அந்த ஜாடராக்னிக்கு மூன்று லோகத்தையும் சரீரமாகக் கொண்டிருத்தல் என்பது பொருந்தாது என்பதாலும் வைச்வாநரனே பரமாத்மா ஆகிறான்; மேலும் இவனையே புருஷன் என்று வேதம் கூறுகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சத. (13-6-1-11) - ஸ ஏஷ அக்னிர் வைச்வாநர: - இந்த அக்னியே வைச்வாநரன் – என்ற வாக்கியத்தில், அக்னியானது வைஷ்வாநரனுடன் ஸாமாநாதிகரண்யத்தில் படிக்கப்பட்டுள்ளது. மேலும், சத. (10-6-1-11) – புருஷேந்த: ப்ரதிஷ்டிதம் – (இந்த வைச்வாநரன்) புருஷனுக்குள் வசிக்கிறான் – என்பதன் மூலம், அந்த அக்னியானது ப்ராணாஹுதியின் இருப்பிடமாகவும் கூறப்படுகிறான். ஆகவே வைச்வாநரன் என்பது பரமாத்மாக் குறிப்பதல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. “வயிற்றில் உள்ள ஜாடராக்னியைத் தனது சரீரமாக வைச்வாநரன் கொண்டுள்ளான் என்றே உபாஸிக்கவேண்டும்” என்று கூறப்படுவதால் (பரமாத்மாவே வைச்வாநரன் என்று கூறப்படுபவன்) ஆகிறான். மேலும் வயிற்றில் உள்ள ஜாடராக்னியானது மூன்று லோகங்களையும் தனது சரீரமாகக் கொண்டிருக்க இயலாது. மேலும் வாஜஸநேயர்கள், சத. (10-6-1-11) – ஸ ஏஷ: அக்னிர் வைச்வாநரோ யத் புருஷ: - யார் அந்தப் புருஷனாக உள்ளானோ, அந்தப் புருஷனே இந்த அக்னியாகிற வைச்வாநரன் – என்று வைச்வாநரனை ஒரு புருஷனாக உரைப்பது காணலாம். புருஷன் என்னும் பதமானது, எந்தவிதமான நிபந்தனையும் இன்றி, பரமாத்மாவாகிய நாராயணனையே குறிப்பதாகும் என்பதை ச்வே. (3-14) – ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: - ஆயிரம் தலை கொண்டவன் – என்று தொடங்கி, விச்வம் ஏவேதம் புருஷ: - இந்த விச்வமானது அந்தப் புருஷனே – என்று முடிப்பதன் மூலம் அறியலாம்.

**1-2-28 அத ஏவ ந தேவதா பூதஞ்ச**

**பொருள் -** ஆகவே தேவதையும் (சூரியன்), மூன்றாவது பூதமான தேஜஸ்ஸும் (அக்னி) வைச்வாநரன் அல்ல.

**வேதாந்தஸாரம் –** வைச்வாநரன் மூன்று லோகங்களையும் சரீரமாகக் கொண்டவன் என்றும், புருஷன் என்றும் கூறப்படுவதால் அவனை அக்னி என்றோ அல்லது பஞ்சபூதங்களில் மூன்றாவது என்றோ கூற இயலாது.

**1-2-29 ஸாக்ஷாத் அபி அவிரோதம் ஜைமிநி:**

**பொருள் -** அக்னி என்ற பதத்திற்கு நேராகவே பொருள் கொண்டாலும் (அதாவது பரமாத்மா என்று உயர்ந்த பொருள் கொண்டாலும்) விரோதம் இல்லை என்று ஜைமினி கூறுகிறார்.

**வேதாந்தஸாரம் –** “ஜடராக்னியைப் பரமாத்மா சரீரமாகக் கொண்டுள்ளதாக உபாஸிக்க வேண்டும்” என்பதை உணர்த்துவதற்காகவே அக்னியானது வைஷ்வாநரனுடன்

ஸாமாநாதிகரண்யத்தில் படிக்கப்பட்டுள்ளதாகக் கூறுவது அவசியம் அற்றதாகும். பரமாத்மா அனைவரையும் உயர்ந்த கதிக்கு இட்டுச் செல்லக் கூடியவன் என்பதால், அவன் “அக்னி” என்னும் சொல்லால் கூறப்படுகிறான். எனவே இங்கு எந்தவிதமான முரண்பாடும் இல்லை என்றே ஆசார்யர் ஜைமிநி கருதுகிறார்.

**1-2-30 அபிவ்யக்தே: இதி ஆச்மரத்ய:**

**பொருள்** - உபாஸகனுக்குத் தோன்றுவதற்காக (உபாஸகன் உணர்வதற்காக) மட்டுமே இவ்விதம் அளவுள்ளதாகக் கூறப்பட்டது என்று ஆச்மரத்யர் என்ற ஆசார்யர் கூறுகிறார்.

**வேதாந்தஸாரம்** - சாந். (5-18-1) - யஸ்த்வேதமேவம் ப்ராதேச மாத்ரம் (அபி விமாநம்) – யார் ஒருவன் அளவற்றவனாகிய வைச்வாநரனை இப்படியாக த்யுலோகம் போன்ற ப்ரதேசங்களில் மட்டும் அளவுபட்டவனாக உபாஸிக்கிறானோ – என்னும் வாக்கியம் மூலமாக, “உபாஸனை செய்வதன் பொருட்டே, அளவில்லாத பரமாத்மா, ஸ்வர்க லோகம் முதலானவற்றால் அளவுபடுத்தப்பட்டுக் கூறப்படுகிறான்”, என்று ஆச்மரத்யர் கருதுகிறார்.

**1-2-31 அநுஸ்ம்ருதே: பாதரி:**

**பொருள்** – உபாஸனை செய்வதற்கு ஏற்றதாகவே, புருஷரூபத்தில் பரமாத்மா கூறப்படுகிறான் என்று பாதரி முனிவர் எண்ணுகிறார்.

**வேதாந்தஸாரம்** – த்யுலோகம் தொடங்கி பூமி முடிய உள்ள அனைத்தும், பரமாத்மாவின் தலை முதல் பாதம் வரை உள்ள அவயங்களாக (உடல் உறுப்புக்கள்) கற்பனை செய்யப்பட்டுள்ளன. இது ப்ரஹ்மத்தை அவ்விதம் உபாஸனை செய்வதற்காகவே ஆகும் என பாதரி கருதுகிறார்.

**1-2-32 ஸம்பத்தே: இதி ஜைமிநிஸ் ததா ஹி தர்சயதி**

**பொருள்** – உபாஸகனுடைய பல்வேறு அங்கங்களை வேதி (பலிபீடம்) போன்றவையாக உரைப்பது என்பது, வைச்வாநர வித்யையின் அங்கமாக உள்ள ப்ராணாஹுதியை, அக்னிஹோத்ரமாக செய்வதற்காகவே ஆகும் என்று ஜைமினி முனிவர் எண்ணுகிறார்; ச்ருதியும் இவ்விதமே கூறுகிறது.

**வேதாந்தஸாரம்** – சாந். (5-18-2) - உர ஏவ வேதிர்லோமாநி பர்ஹிர் ஹ்ருதயம் கார்ஹபத்ய: - மார்பே வேதி, ரோமங்களே பர்ஹிஸ் என்ற தர்ப்பைகள், இதயமே கார்ஹபத்யம் – என்னும் வாக்கியத்தில் உபாஸகன் தனது மார்பை வேதி (பலிபீடம்) முதலானவையாக எண்ணவேண்டும் என்று கூறப்படுகிறது. இது ஏனென்றால், ப்ராணாஹுதியை அக்னிஹோத்ரமாக நிரூபிப்பதற்காகவே ஆகும். இதுவே ஜைமிநியின் கருத்தாகும். இதனைக் கூறும் ச்ருதியானது, சாந். (5-24-1) – ய ஏததேவம் வித்வாந் அக்நிஹோத்ரம் ஜுஹோதி – தனது மார்பையே வேதி என்று அறிந்து யார் ஒருவன் ப்ராணாஹுதியாக உள்ள அக்னிஹோத்ரத்தைச் செய்கிறானோ – என்பதாகிறது. இந்தக் கருத்து ஏற்புடையதாகவே உள்ளது. இங்கு ஆசார்யர்களுடைய திருநாமங்கள், அவர்களைக் கௌரவிப்பதற்காகக் கூறப்பட்டன.

**1-2-33 ஆமநந்தி சைநமஸ்மிந்**

**பொருள்** - பரமாத்மாவை உபாஸகனுடைய சரீரத்தில் ப்ராணாஹுதி மூலம் ஆராதிக்கும் பொருட்டு வேதங்களும் கூறுகின்றன.

**வேதாந்தஸாரம்** – ச்ருதியானது, "உபாஸகன் ப்ராணாஹுதியைச் செய்யும்போது, அவனுடைய சரீரத்தில் பரமாத்மா இருப்பதாக எண்ணுவேண்டும்" என்பதற்காக, சாந். (5-18-2) - தஸ்ய ஹ வா ஏதஸ்யாத்மநோ மூர்த்தைவ ஸுதேஜா: - உபாஸகனுடைய தலையே, பரமாத்மாவின் தலையான ஸுதேஜா எனப்படும் த்யுலோகம் ஆகும் – என்னும் வாக்கியத்தை உரைக்கிறது. அதாவது, உபாஸாகனுடைய தலை போன்றவற்றை, பரமாத்மாவின் தலை போன்றவையாகக் கூறுகிறது என்று கருத்து.

## முதல் அத்யாயம் மூன்றாம் பாதம்

## அதிகரணம் – 1 – த்யுப்வாத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – முண்டக உபநிஷத்தில் (2-2-5, 6) த்யுலோகம் (ஸ்வர்கம்), பூமி போன்றவற்றுக்கு இருப்பிடமாகக் கூறப்பட்டவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-3-1 த்யுப்வாத்யாயதநம் ஸ்வ சப்தாத்**

**பொருள்** - தேவலோகம், பூமி போன்றவற்றுக்கு இருப்பிடமாகக் கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான்; அவனுக்கே உரிய பதங்கள் காணப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம்** - முண். (2-2-5) – யஸ்மிந் த்யௌ: ப்ருதிவீ ச அந்தரிக்ஷம் - யாரிடம் தேவலோகம், பூமி, அந்தரிக்ஷம் – என்னும் வாக்கியத்தில் ஸ்வர்கம், பூமி போன்றவற்றுக்கு ஆதாரமாகப் பரமபுருஷனே கூறப்படுகிறான்; ஏனென்றால் (அதாவது பரமபுருஷனே கூறப்படுகிறான் என்று உரைப்பது ஏனென்றால்), முண். (2-2-5) – தமேவைகம் ஜாநதாத்மாநம் - அந்த ஆத்மா ஒருவனையே அறிவீர்களாக – என்பதில் “ஆத்மா” என்று கூறுவதால் ஆகும். எந்தவிதமான நிபந்தனையும் இல்லை என்னும்போது, “ஆத்மா” என்ற சொல்லானது பரமபுருஷனையே குறிப்பதாகும். இந்தக் கருத்தானது, முண். (2-2-5) – அம்ருதஸ்யைஷ ஸேது: - மோக்ஷத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய பாலம் அவனே ஆவான் – என்பதன் மூலம் உறுதியாகிறது. முண். (2-2-6) – பஹுதா ஜாயமாந: - பலவிதமாகப் பிறந்து – என்பதன் மூலம் அவனுடைய பரத்வமானது தள்ளப்படவில்லை. தை. ஆர. (3-13) – அஜாயமாநோ பஹுதா விஜாயதே – அவன் பிறப்பற்றவன் என்றாலும், தனது விருப்பத்தின்படி பலவாகப் பிறக்கிறான் – என்பதன் மூலம், “அவன் கர்மம் காரணமாகப் பிறப்பதில்லை. ஆனால் தனது அடியார்கள் மீது கொண்ட ப்ரியம் காரணமாக, அவன் தனது விருப்பத்திற்கு ஏற்ப பிறக்கிறான்” என்பதே கூறப்படுகிறது.

**1-3-2 முக்தோபஸ்ருப்ய வ்யபதேஶாத் ச**

**பொருள்** - முக்தி அடைந்தவர்களால் அடையப்படுபவன் என்று கூறுவதாலும் (பரமபுருஷனே ஆவான்).

**வேதாந்தஸாரம்** – முண். (3-1-3) - ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யம் உபைதி - ப்ரஹ்மஞானியான ஒருவன் (பரமபுருஷனை எப்போது காண்கிறானோ) அப்போதே அவன் தனது புண்ணிய பாபங்களை கைவிட்டு, தோஷங்கள் அற்றவனாய், பரமபுருஷனுடனான ஒப்புமையை அடைகிறான் – என்றும், முண். (3-1-8) - ததா வித்வாந் நாம ரூபாத் விமுக்த: பராத்பரம் புருஷம் உபைதி திவ்யம் - முக்தி பெற்ற ஒருவன் பரமபுருஷனை அடைந்த பின்னர், தனது பெயர் மற்றும் ரூபத்திலிருந்து விடுபட்டு (ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு) பரமபுருஷனுடனான ஒப்புமையை அடைகிறான் – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலம், "புண்ணியம், பாபம், பெயர், ரூபம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்றவர்களே அவனை அடைய இயலும்" என்று உபதேசிக்கப்பட்டுள்ளது.

**1-3-3 ந அநுமாநம் அதச்சப்தாத் ப்ராணப்ருத் ச**

**பொருள்** – அதனைக் கூறும் சப்தம் இல்லாத காரணத்தால், இங்கு கூறப்படுவது ப்ரக்ருதி அல்ல, ப்ராணனுடன் கூடிய ஜீவாத்மாவும் அல்லன்.

**வேதாந்தஸாரம்** – [குறிப்பு: இங்கு பொருள் விளங்குவதற்காக ஸ்ரீபாஷ்யத்திலிருந்தும் சில சொற்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன] ப்ரதானத்தைக் கூறும் சொற்கள் இல்லாத காரணத்தால், (த்யுலோகம் மற்றும் பூமி போன்றவற்றுக்கு) ப்ரதானம் ஆதாரமாக இருக்கமுடியாது. இது போன்றே, இங்கு ப்ராணனுடன் கூடிய ஜீவாத்மாவைக் கூறும் வாக்கியமும் இல்லை.

**1-3-4 பேதவ்யபதேஶாத்**

**பொருள்** - ஜீவாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று கூறப்படுவதாலும் (இவன் பரமாத்மாவே ஆவான்).

**வேதாந்தஸாரம்** – [குறிப்பு: இங்கு பொருள் விளங்குவதற்காக ஸ்ரீபாஷ்யத்திலிருந்தும் சில சொற்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன] முண். (3-1-2), ச்வே. (4-7) – ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ அநீசயா ஶோசதி முஹ்யமாந: | ஜுஷ்டம் யதா பச்யத் யந்யமீசம் அஸ்ய மஹிமாநமிதி வீதஶோக: - மரம் போன்று அழியக்கூடிய ஒரே சரீரத்தில், ஜீவன் அழுந்தியபடி உள்ளவனாக இன்பமாக உள்ள ப்ரக்ருதியில் மயங்கி, உதவியின்றி வருந்துகிறான்; இவன் எப்போது அதே சரீரத்தில் உள்ள ஸர்வேச்வரனை தன்னிலும் வேறுபட்டவனாகக் கண்டு, அவனுடைய மேன்மைகளை இப்படியாகக் காண்கிறானோ, அப்போது தனது வருத்தம் நீங்கப் பெறுகிறான் – என்பது போன்ற வாக்கியங்களில் ப்ரத்யாத்மாவைக் காட்டிலும் (பரமாத்மா) வேறுபட்டவன் என்று கூறப்படுவதால், இந்தப் பகுதியில் பரமாத்மாவே கூறப்படுகிறான் என்று கருத்து.

**1-3-5 ப்ரகரணாத்**

**பொருள்** - இங்குள்ள ப்ரகரணத்தின் (context) காரணமாகவும் பரமாத்மாவே ஆவான்.

**வேதாந்தஸாரம்** – இந்தப் பகுதியானது பரம்பொருளையே கூறுவதாகும்; முண். (1-1-5) – அத பரா யயா தத் அக்ஷரம் அதிகம்யதே – இதுவே அந்த அழிவில்லாத ப்ரஹ்மத்தை நாம் அறியும்படிச் செய்யக்கூடிய உயர்ந்த ஞானம் – என்பது காணலாம்.

**1-3-6 ஸ்தித்யதநாப்யாம் ச**

**பொருள்** - பரமாத்மாவுக்குச் சரீரத்தில் இருப்பு மட்டுமே என்றும், ஜீவாத்மாவுக்கு மட்டுமே கர்மபலனை அனுபவித்தல் என்றும் கூறப்படுவதாலும் (பரமாத்மாவே ஆவான்).

**வேதாந்தஸாரம்** – முண். (3-1-1) - தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அநஶ்நந் அந்யோ அபிசாகஶீதி - இரண்டு பறவைகளில் (பரமாத்மா, ஜீவாத்மா) ஒன்று கனியை (கர்மபலன்) உண்கிறது. மற்றொன்று (பரமாத்மா) ப்ரகாசமாக உள்ளது – என்ற வாக்கியத்தின் மூலம், ஜீவாத்மா மட்டுமே கர்மபலன்களை அனுபவிக்கிறான் என்றும், மற்றொரு வஸ்துவானது மிகுந்த தேஜஸ்ஸுடன் உள்ளது என்றும் கூறப்படுகிறது. ஆகவே இந்தப் பகுதியில் பரமாத்மாவே கூறப்படுகிறான்.

## அதிகரணம் – 2 - பூமாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - சாந்தோக்ய உபநிஷத்தில் (7-24-1) – உள்ள "பூமா" என்ற பதம் பரமாத்மாவையே குறிக்கிறது என்று நிரூபிக்கப்பட உள்ளது (ப்ரஹ்மத்தையே "பூமா" என்று கூறுவதாகக் கருத்து. இங்கு மொழிபெயர்ப்பில் சிலர் "பூமா" என்றும், சிலர் "பூமந்" என்றும் குறிப்பிடுவர்).

### 1-3-7 பூமா ஸம்ப்ரஸாதாத் அதி உபதேஶாத்

**பொருள்** - பெரியது என்ற ஓதப்படுவது பரமாத்மாவே ஆகும்; ஜீவனைக் காட்டிலும் உயர்ந்தவனாகக் கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம்** – ச்ருதியானது, சாந். (7-22-1) - ஸுகம் த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்யம் – ஸுகத்தை அறியவேண்டும் (ஆனந்தத்தை அறியவேண்டும்) – என்றும், சாந். (7-23) – பூமா ஏவ ஸுகம் – பூமா என்பதே ஸுகம் – என்றும் உரைத்து, அப்படிப்பட்ட பூமா என்பதன் ஸ்வரூபத்தை அடுத்து உரைக்கிறது; சாந். (7-24-1) - யத்ர நாந்யத் ச்ருணோதி நாந்யத் விஜாநாதி ஸ பூமா - இத்தகைய உயர்ந்த பூமா என்பதைக் காட்டிலும் உயர்ந்த எதனையும் கேட்பதும் இல்லை, அறிவதும் இல்லை – என்று கூறுகிறது. அதாவது, எந்த ஒரு ஸுகத்தை அனுபவிக்கும்போது மற்ற எதுவும் ஸுகங்களாகக் காண்பதில்லையோ, ஸுகங்களாகக் கேட்பதில்லையோ, ஸுகங்களாக அறியப்படுவதில்லையோ அதுவே "பூமா" ஆகும்; சாந். (7-24-1) – அத யத்ர அந்யத் பஶ்யதி அந்யத் ச்ருணோதி அந்யத் விஜாநாதி ததல்பம் - எதனை அறியும்போது மற்றொன்றையும் காண்பதும், கேட்பதும், அறிவதும் உண்டோ அது சிறியதாகும் – என்பதே இங்கு கூறப்படுவதாகும்.

மஹாபாரதத்தில், சாந்திபர்வம் (196-4) – திவ்யாநி காமசாராணி விமாநாநி ஸமாஸ்ததா | ஆக்ரீடா விவிதா ராஜந் பத்மிந்யச்ச அமலோதகா: || ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந: - ஸ்வர்கத்தில் உள்ளவையும், நமது விருப்பத்திற்கு ஏற்ப ஸஞ்சாரம் செய்ய உதவுபவையும் ஆகிய விமானங்கள், சபைகள், பலவிதமான நந்தவனங்கள், கலங்கல் இல்லாத நீர் நிறைந்த தாமரைக் குளங்கள் ஆகிய அனைத்துமே, பரமாத்மாவின் இருப்பிடத்தை ஒப்பு நோக்கும்போது, நரகங்களே ஆகும் – என்று கூறப்படுகிறது. சாந். (7-16-1) – ஏஷ து வா அதிவததி ய: ஸத்யேந அதிவததி - அவன் உபாஸிக்கும் வஸ்து அனைத்தையும் விட உயர்ந்தது என்று கூறுகிறான்; ஸத்யத்தை உரைப்பவன், அந்த ஸத்யமானது அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தது என்கிறான் – என்று கூறுகிறது. அதிவாதித்வம் (அதிவாதி என்னும் தன்மை) என்றால், தான் உபாஸிக்கும் பொருளானது மனிதனுக்கு எல்லையற்ற புருஷார்த்தத்தை (பயனை) அளிப்பதால், அது மற்ற அனைத்தைக் காட்டிலும் மேலானது என்று உறுதியாக நிற்கும் தன்மையாகும் (அதாவது, தான் உபாஸிக்கும் பொருளே அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தது என்று கூறுபவன் அதிவாதி ஆவான்). “அல்பம் – குறைவானது” என்பதற்கு எதிர்ப்பதமாக கூறப்பட்ட “பூமா” என்னும் பதமானது, பரமாத்மா கொண்டுள்ள அளவற்ற ஸுகத்தைக் குறிப்பதாகும். மேலும், “பூமா” என்ற பதமானது ஸம்ப்ரஸாதனைக் காட்டிலும் வேறுபட்ட பரமாத்மாவையே குறிக்கும். “ஸம்ப்ரஸாதன்” என்பது ப்ரத்யகாத்மாவைக் குறிப்பதாகும்; காரணம், சாந். (8-3-4) – அத ஏஷ ஸம்ப்ரஸாத: – ஸம்ப்ரஸாதன் எனப்படும் இந்த ஜீவாத்மா – என்று ச்ருதி கூறுகிறது. சாந். (7-16-1) – ஏஷ து வா அதிவததி ய: ஸத்யேந அதிவததி - அவன் உபாஸிக்கும் வஸ்து அனைத்தையும் விட உயர்ந்தது என்று கூறுகிறான்; ஸத்யத்தை உரைப்பவன், அந்த ஸத்யமானது அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தது என்கிறான் – என்னும் வாக்கியத்தால், ப்ராணன் என்பதால் கூறப்படும் ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் உயர்ந்தவனும் வேறுபட்டவனும் ஆகிய (பரம) புருஷனே உபதேசிக்கப்படுகிறான்.

**1-3-8 தர்மோபபத்தேச்ச**

**பொருள்** - தர்மங்கள் (தன்மைகள்) பொருந்தவேண்டும் என்றால் (பூமா என்பது ப்ரஹ்மமே).

**வேதாந்தஸாரம்** – சாந். (7-24-1) – ஸ பகவ: கஸ்மிந் ப்ரதிஷ்டித:? ஸ்வே மஹிம்நி – அவன் யாரால் நிலை நிற்கிறான்? தனது மஹிமையால் – என்பது போன்ற வாக்கியங்கள் மூலம், “அவன் தனது மஹிமையால் நிலை நிற்கிறான். அனைத்திற்கும் காரணமாக உள்ளான். அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளான்” என்பதான் அவனுடைய தர்மங்கள் கூறப்படுகின்றன. ஆகவே “பூமா” என்ற பதமானது பரமபுருஷனையே குறிக்கும்.

## அதிகரணம் – 3- அக்ஷராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – மூலப்ரருதிக்கு ஆதாரமாகக் கூறப்படும் அக்ஷரம் என்பது பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-3-9 அக்ஷரம் அம்பராந்த த்ருதே:**

**பொருள்** - மூலப்ரக்ருதியைத் தாங்கி நிற்பதால் அக்ஷரம் என்பது பரமாத்மாவே.

**வேதாந்தஸாரம்** - ப்ரு. (3-8-8) - ஏதத்வை தத் அக்ஷரம் கார்க்கி! ப்ராஹ்மணா அபிவதந்தி அஸ்தூலம் அநணு - (யாஜ்ஞவல்க்யர் கார்க்கியிடம்) இதனையே ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் அக்ஷரம் என்று கூறுகிறார்கள். அது ஸ்தூலமானதும் அல்ல, ஸூக்ஷ்மமானதும் அல்ல – என்னும் வாக்கியத்தில் உள்ள “அக்ஷரம்” என்ற பதம் மூலம் பரப்ரஹ்மமே கூறப்படுகிறது; ஏனெனில், ஆகாசத்திற்கும் காரணமாக உள்ள ப்ரதானத்தைத் தாங்கக்கூடியதால் ஆகும். ப்ரு. (3-8-6) - யத் ஊர்த்வம் கார்க்கி திவோ – ஸ்வர்கத்திற்கும் மேலே எது உள்ளதோ – என்ற வாக்கியம் மூலமாக, அனைத்திற்கும் ஆதாரமாக அக்ஷரமே உள்ளதாகக் கூறப்படுகிறது. அடுத்து, ப்ரு. (5-8-7) - கஸ்மிந் து கல்வாகாச ஓதச்ச ப்ரோதச்ச - இந்த ஆகாசம் எதில் பின்னிப் பிணையப்பட்டு நிற்கிறது – என்று கேட்கப்பட்டது (குறிப்பு: வேதாந்தஸாரத்தில் இந்த வாக்கியமானது “கஸ்மிந்” என்று மட்டுமே உள்ளது. விளக்குவதற்காக இங்கு முழுவதும் தரப்பட்டது). இதற்கு விடையாக, ப்ரு. (3-8-8) - ஏதத்வை தத் அக்ஷரம் - (யாஜ்ஞவல்க்யர் கார்க்கியிடம்) இதனையே ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் அக்ஷரம் என்று கூறுகிறார்கள் – என்று கூறப்படுகிறது; இதன் மூலம், வாயுவுடன் கூடியதான ப்ரக்ருதிக்கும் ஆதாரமாக அக்ஷரம்

உள்ளது என்று கருத்து. விகாரப்பொருள்கள் (மாற்றம் அடையக்கூடியவை) அனைத்தும், ஆகாசத்தையே அண்டி நிற்பதாகக் கூறப்பட்டுள்ளது; ஆகாசம் என்ற பதத்தால் கூறப்படுவது ஒரு ஸூக்ஷ்மமான வஸ்து ஆகும் (இது காரண நிலையில் உள்ள ப்ரதானம்). இத்தகைய ஸூக்ஷ்மமான வஸ்துவின் ஆதாரமாக அக்ஷரமே உள்ளது என்று கூறப்பட்டது; இது பரப்ரஹ்மமே ஆகும்.

**1-3-10 ஸா ச ப்ரசாஸநாத்**

**பொருள்** - அவ்யக்தத்தைத் தாங்குவது சக்தி மூலமாக என்பதால் (பரமாத்மாவையே குறிக்கும்).

**வேதாந்தஸாரம்** - ப்ரு. (3-8-9) - ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்க்கி - கார்க்கி! இந்த அக்ஷரத்தின் கட்டளையால் – என்னும் வாக்கியத்தின் மூலம் இவ்விதமாக தாங்கி நிற்பதற்கான ஆணை குறித்துக் கூறப்படுகிறது (அதாவது ப்ரஸாஸநம் என்பது அரச ஆணை போன்றதாகும். இங்கு, இந்த அக்ஷரத்தின் கட்டளையால் சூரியனும் சந்த்ரனும் நிலைக்கிறார்கள்; அக்ஷரத்தின் கட்டளையால் ஸ்வர்கமும் பூமியும் நிலைக்கிறது என்பது போன்று இந்த உபநிஷத் வாக்கியம் நீள்கிறது). ஆகவே இங்கு கூறப்பட்ட அக்ஷரம் என்பது ப்ரத்யகாத்மா அல்ல.

**1-3-11 அந்யபாவ வ்யாவ்ருத்தே: ச**

**பொருள்** - வேறு தன்மை கொண்டவை தள்ளப்பட்டதாலும்.

**வேதாந்தஸாரம்** - “அந்யபாவ” என்றால் “வேறு தன்மை கொண்டது” என்று பொருள். இந்த வாக்கியத்தின் மீதம் உள்ள பகுதியானது, ப்ரு. (3-8-11) – அத்ருஷ்டம் த்ருஷ்ட்ரு - இந்த அக்ஷரமானது வேறொன்றால் காண முடியாதபடியும், தான் காண்பதாகவும் – என்பதாக நீள்கிறது. இது, அக்ஷரம் என்பது பரமாத்மாவைக் காட்டிலும் வேறான தன்மை கொண்டது என்பதை மறுக்கும்விதமாக அமைந்துள்ளது. ஆகவே அக்ஷரம் என்பது பரமாத்மாவே ஆகும்.

## அதிகரணம் – 4 - ஈக்ஷதிகர்மாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஞானிகளால் காணப்படுவனாக ப்ரச்ந உபநிஷத்தில் கூறப்படும் புருஷன் பரமாத்மாவே ஆவான்.

**1-3-12 ஈக்ஷதிகர்ம வ்யபதேசாத் ஸ:**

**பொருள்** - காணப்படுபவனாகக் கூறப்படுபவன் பரமாத்மாவே, இவ்விதமே கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம்** – ப்ர. (5-5) – ய: புநரேதம் த்ரிமாத்ரேண ஓம் இதி ஏதேந ஏவ அக்ஷரேண பரம் புருஷம் அபித்யாயீத - மூன்று மாத்திரைகள் கொண்டதான இந்த "ஓம்" என்ற அக்ஷரத்தை மட்டுமே கொண்டு யார் ஒருவன் இந்தப் பரமபுருஷனை த்யானம் செய்கிறானோ – என்று தொடங்கி, ப்ர. (5-5) – ஸ ஏதஸ்மாத் ஜீவநாத் பராத்பரம் புரிசயம் புருஷம் ஈக்ஷதே - இந்த்ரியங்களைக் காட்டிலும் உயர்ந்த ஜீவாத்மாவைக் காட்டிலும் உயர்ந்தவனும், இதயத்தில் உள்ளவனும் ஆகிய புருஷனைக் காண்கிறான் – என்று முடிகிறது. இங்கு த்யானத்தைத் தொடர்ந்து உள்ள ஈக்ஷதி கர்மத்திற்கு (காணப்படுவதாகிய செயலுக்கு) இலக்காக உள்ளவன் பரமாத்மாவே ஆவான் என்று பொருள். ஏனென்றால், தொடர்ந்து வருவதான, ப்ர. (5-7) – தம் ஓம் காரேண ஏவ ஆயதநேந அந்வேதி வித்வாந் யத் தத் சாந்தம் அஜரம் அம்ருத்யும் அபயம் பரம் ச – அந்த வித்வான் (உபாஸகன்), ஓம் என்ற அக்ஷரத்தின் ஆதாரத்துடன் சாந்தமானதும், வயோதிகம் அற்றதும், மரணம் அற்றதும், பயம் அற்றதும், உயர்ந்ததும் ஆகிய வஸ்துவை அடைகிறான் – என்றுள்ள பகுதியில் பரமபுருஷனுக்கே உரிய தர்மங்கள் கூறப்படுகின்றன. இது தவிர, ப்ர. (5-7) - யத் தத் கவயோ வேதயந்தே – எதனை, அறிந்தவர்கள் அறிகிறார்களோ – என்பதன் மூலம், "அறிந்தவர்கள் அவனுடைய இடத்தைக் காண்கிறார்கள்" என்று கூறுவதாலும் ஆகும்.

## அதிகரணம் - 5 - தஹராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – தஹரம் என்னும் இடத்தில் (ஆகாசத்தில்) உள்ளவன் பரமாத்மாவே என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-3-13 தஹர உத்தரேப்ய:**

**பொருள்** - அடுத்து வரும் வரிகளால் கூறப்படும் காரணங்களால் தஹராகாசம் எனப்படுபவன் பரமாத்மாவே.

**வேதாந்தஸாரம்** – சாந். (8-1-1) – அத யதிதம் அஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம தஹர: அஸ்மிந் அந்தர ஆகாச: தஸ்மிந் யதந்தஸ் தத் அந்வேஷ்டவ்யம் தத்வாவ விஜிஜ்ஞாஸிதவ்யம் - ப்ரஹ்மத்தின் இருப்பிடமான இந்தச் சரீரத்தில், தாமரை போன்று சிறியதான (இதயம்) இடம் உள்ளது. அதற்குள் ஸூக்ஷ்மமான ஆகாசம் உள்ளது. அதற்குள் இருப்பதே தேடப்பட்டு, புரிந்து கொள்ள வேண்டியதாகும் - என்று கூறப்பட்டுள்ளது. இங்குள்ள "தஹர ஆகாசம்" என்பதன் மூலம் பரமாத்மாவே கூறப்படுகிறான்; ஏனெனில், அடுத்து வரும் வாக்கியத்தில் அவனுக்கே உரிய தர்மங்கள் கூறப்படுவதால் ஆகும். இதனைத் தொடர்ந்து, தஹராகாசமானது அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது என்று கூறப்பட்ட, சாந். (8-1-5) - ஏதத் ஸத்யம் ப்ரஹ்மபுரம் - (இந்தக் காரணத்தால்) இதுவே உண்மையான ப்ரஹ்மபுரம் (சரீரம்) – என்பதாக உரைக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, "இந்த தஹராகாசம் எது? விரும்பக்கூடிய குணங்கள் எவை?", என்பது போன்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இதற்கு விடையாக, சாந். (8-1-5) – ஏஷ ஆத்மா அபஹதபாப்மா – பாபங்கள் அற்றதாக உள்ள இந்த ஆத்மா – என்று தொடங்கி, சாந். (8-1-5) - ஸத்யஸங்கல்ப – என்று முடிக்கப்படும் பகுதி மூலம் அதே தஹராகாசமானது இத்தகைய விரும்பப்படும் குணங்களான "பாபங்கள் அற்றதாக உள்ள தன்மை" போன்ற பலவற்றுடன் கூடியதாக உள்ள தன்மைகள் கூறப்பட்டு, அதுவே ஆத்மாவாக உள்ளது என்பதும் கூறப்பட்டது. சாந். (8-1-1) – தஹர: அஸ்மிந் அந்தராகாசஸ் தஸ்மிந் யத் அந்தந்தஸ் தத் அந்வேஷ்டயம் - அதற்குள் ஸூக்ஷ்மமான தஹராகாசம் உள்ளது; அதற்குள் (தஹராகாசம் மற்றும் அதற்குள் உள்ள வஸ்து) உள்ள வஸ்துவே தேடப்பட வேண்டியது ஆகும் – என்று தஹராகாசம் மற்றும்

அதன் உள்ளே காணப்படும் வஸ்து ஆகியவையே தேடப்பட வேண்டியவை எனக் கூறப்படுகிறது. இந்தக் கருத்தானது, சாந். (8-1-6) – அத ய இஹ ஆத்மாநம் அநுவித்ய வ்ரஜந்த்யே தாம்ச்ச ஸத்யாந் காமாந் - யார் ஒருவன் இந்த ஆத்மாவையும், அதன் உயர்ந்த குணங்களையும் அறிந்த பின்னர் – என்று கூறப்படுகிறது.

**1-3-14 கதி சப்தாப்யாம் ததா ஹி த்ருஷ்டம் லிங்கம் ச**

**பொருள்** - செல்வதைக் கூறுவதாலும், தகுந்த சொல் உள்ளதாலும், வேறு இடத்தில் கூறப்படுவதாலும், அடையாளங்கள் உள்ளதாலும்.

**வேதாந்தஸாரம்** – சாந். (8-3-2) – ஏவம் ஏவேமா: ஸர்வா: ப்ரஜா அஹரஹர் கச்சந்த்ய ஏதம் ப்ரஹ்மலோகம் ந விந்தந்தி - அன்றாடம் (உறக்கத்தில்) இந்த ப்ரஹ்மலோகம் (தஹராகாசம்) சென்றபடி இருந்தாலும் அதனை அறியமாட்டார்கள் – என்பதன் மூலம், “அனைவரும், ஒவ்வொரு நாளும், அவனை அறியாமல் உள்ளபோதிலும், அவனில் சென்று உறங்குகிறார்கள்” என்று கூறப்படுகிறது. இங்கு தஹராகாசம் என்பது ப்ரஹ்மலோகம் என்பதுடன் ஸாமாநாதிகரண்யத்தில் படிக்கப்பட்டு, இதன் மூலம் “தஹராகாசம் என்பது பரமாத்மாவே ஆகும்” என்று உணர்த்தப்படுகிறது. கட. (5-8) – தஸ்மிந் லோகா: ச்ரிதா: ஸர்வே – ப்ரஹ்மத்திடமே அனைத்து லோகங்களும் ஒடுங்கி உள்ளன – என்றும், தை. (2-1-3) – தத் அக்ஷரே பரமே ப்ரஜா: - அந்த அழியாத ப்ரஹ்மத்திடமே ப்ரஜைகள் ஒடுங்குகின்றன – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலமாக அனைத்து ப்ரஜைகளும் பரமாத்மாவிடம் சென்று வசிப்பதை அறியலாம். “ப்ரஹ்மலோகம்” என்ற பதமானது உயர்ந்த ப்ரஹ்மத்தைக் குறிப்பதை, ப்ரு. (4-3-32) – ஏஷ ப்ரஹ்மலோக: - இதுவே ப்ரஹ்மலோகம் - என்பதன் மூலம் அறியலாம். அனைத்தும் தஹராகாசத்தில் சென்று வசித்தல், ப்ரஹ்மலோகம் என்னும் பதம் ஆகியவை மூலம் பரமாத்மாவின் அடையாளம் இங்கு காணப்படுவதற்கு வேறு ப்ரமாணங்கள் அவசியம் இல்லை.

**1-3-15 த்ருதேச்ச மஹிம்ந: அஸ்ய அஸ்மிந் உபலப்தே:**

**பொருள் –** ப்ரஹ்மத்தின் மகிமையால், அனைத்தையும் தாங்கி நிற்கின்ற மேன்மையானது தஹராகாசத்தில் காணப்படுவதால் (இது ப்ரஹ்மமே ஆகும்).

**வேதாந்தஸாரம்** - சாந். (8-4-1) – அத ய ஆத்மா ஸ ஸேதுர் வித்ருதி: - இந்த ஆத்மா அணை போன்று பிரித்து – என்பதன் மூலம் பரமாத்மாவே ஜகத்தைத் தாங்கி நிற்பது கூறப்பட்டது; அதாவது தஹராகாசம் என்னும் வஸ்துவில், ஜகத்தைத் தாங்கி நிற்பது என்பது போன்ற (பரமாத்மாவின்) உயர்ந்த தன்மைகள் காணப்படுகின்றன. பரமாத்மாவின் மஹிமை குறித்து ப்ரு. (4-4-22) – ஏஷ ஸேதுர் விதரண: - இவனே அணையாக நின்று – என்று கூறுகிறது (அதாவது : அனைத்தையும் தாங்கி நிற்பதாகிய மஹிமையானது, ப்ரஹ்மத்திடம் உள்ளது; அதே மஹிமையானது தஹராகாசத்திடமும் காணப்படுகிறது. ஆகவே தஹராகாசம் என்பது ப்ரஹ்மமே ஆகும்).

**1-3-16 ப்ரஸித்தேச்ச**

**பொருள்** - இது அனைவரும் அறிந்தது என்பதாலும்.

**வேதாந்தஸாரம்** – தை. (2-7) - யதேஷ ஆகாச ஆநந்தோ ந ஸ்யாத் – இந்த ஆகாசம் (ப்ரஹ்மம்) ஆனந்தமயனாக இல்லையென்றால் - என்பது போன்ற வரிகளின் மூலம், ஆகாசம் என்ற பதமானது பரபரஹ்மத்தையே குறிக்கிறது என்பது ப்ரஸித்தமாகும். ஆகாசம் என்ற பதமானது, “ஸத்யஸங்கல்பம்” போன்ற குணங்களுடன் கூறப்படும்போது, அந்தப் பதமானது, பொதுவாக, பூத ஆகாசத்தைக் குறிக்கிறது என்பதைக் காட்டிலும், ப்ரஹ்மத்தையே குறிக்கிறது என்ற கருத்தே வலிமையானதாகும்.

**1-3-17 இதர பராமர்சாத் ஸ இதி சேத் ந அஸம்பவாத்**

**பொருள்** - வேறுபட்டதான ஜீவாத்மாவைக் குறிப்பதால், தஹராகாசமானது ஜீவனே என்று கூறுவது சரியல்ல; காரணம், இது ஸம்பவிக்காது.

**வேதாந்தஸாரம்** – "சாந். (8-3-3) - அத ய ஏஷ ஸம்ப்ரஸாத: – இந்த ஸம்ப்ரஸாதன் (ஜீவாத்மா) – என்னும் வாக்கியத்தில் ஜீவாத்மாவே கூறப்படுகிறான்; ஆகவே இங்கு காணப்படும் ஆகாசம் என்னும் பதமானது ஜீவாத்மாவையே கூறுவதாகும்", என்று உரைத்தால், அது சரியல்ல. இங்கு கூறப்படும் குணங்கள் ஜீவாத்மாவிற்கு உண்டாகாது.

**1-3-18 உத்தராத் சேத் ஆவிர்பூத ஸ்வரூப: து**

**பொருள்** – அடுத்து காணப்படும் வரிகளால் கூறப்படலாம் என்றால், விளங்கப் பெற்ற ஸ்வரூபம் கொண்டவன் அல்லவா?

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – அடுத்து வரும் வாக்கியமான சாந். (8-7-1) - ய ஆத்மா அபஹதபாப்மா - யார் ஒருவன் ஆத்மாவாக உள்ளானோ, அவன் பாபங்கள் அற்ற தன்மை – என்பதில், ஜீவாத்மாவிற்கு பாபங்கள் அற்ற தன்மை முதலானவை உண்டாவதாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு விழிப்பு நிலை, கனவு நிலை, ஆழ்ந்த உறக்க நிலை ஆகியவை கூறப்பட்டுள்ளதால், இந்தப் பகுதியில் கூறப்பட்டவன் ஜீவாத்மாவே ஆவான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. இவ்விதம் கூறினால், நாம் உரைக்கும் பதில் "ஆவிர்பூத ஸ்வரூப: து" என்பதாகும். மேலே கூறப்பட்ட வாக்கியமானது, "பாபங்கள் அற்ற தன்மை போன்றதான தனது ஸ்வரூபங்கள் அனைத்தும் மறைக்கப்பட்ட நிலையில் முதலில் ஜீவாத்மா உள்ளான். பின்னர் தனது கர்மபந்தங்களிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், சரீரத்திலிருந்து மேலே புறப்பட்டு, பரம் ஜ்யோதியை அடைந்து, தனது ஸ்வரூபத்தை மீண்டும் பெறுகிறான். இதன் விளைவாக, பாபங்கள் அற்ற தன்மை போன்றவை அவனுக்கு மீண்டும் திரும்புகின்றன", என்பதையே கூறுகிறது. ஆனால், தஹராகாசம் என்பது எதனாலும் தனது ஸ்வரூபம் மறைக்கப்படாமல், கல்யாணகுணங்களுடன் கூடியபடி உள்ளதால், அது ஜீவாத்மா அல்ல.

**1-3-19 அந்யார்த்த: ச பராமர்ச:**

**பொருள் –** ஜீவனைக் குறித்து உரைப்பது வேறு ஒரு பயனுக்காக ஆகும்.

**வேதாந்தஸாரம்** - சாந். (8-3-4) - அஸ்மாத் சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருப ஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே – தனது சரீரத்திலிருந்து வெளிக்கிளம்பி, உயர்ந்த ஜ்யோதியை அடைந்து, தனது ஸ்வரூபம் கிட்டப்பெறுகிறான் – என்பதன் மூலம், "தஹராகாசத்தை அடையும் ஜீவாத்மா தனது ஸ்வரூபம் கிட்டப் பெறுகிறான்" என்பதே கூறப்படுகிறது. ஆகவே, ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை மீண்டும் உணர்த்தக் கூடிய மஹாத்ம்யம் பரமாத்மாவிற்கு உள்ளதை உணர்த்துவதற்காகவே இங்கு ஜீவாத்மா குறித்துக் கூறப்பட்டது.

**1-3-20 அல்ப ச்ருதே: இதி சேத் தத் உக்தம்**

**பொருள்** – "தஹராகாசம் சிறிய அளவு என்பதால், அது ஜீவாத்மாவே ஆகும்", என்று கூறினால், இதற்கு முன்பே பதில் கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – தஹராகாசம் என்பது மிகவும் சிறிய அளவு கொண்டதாகக் கூறப்படுகிறது. அதனை ஸ்வரூபமாகக் கொண்டவன் பரமாத்மாவாக இருக்க முடியாது. ஆகவே இங்கு பரமாத்மா கூறப்படவில்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – இவ்விதம் கூறினால், இதற்கான பதிலானது, ப்ர. ஸூ. (1-2-7) – நிசாய்யத்வாத் ஏவம் - உபாஸிப்பதற்காக மட்டுமே – என்பதில் விளக்கமாகக் கூறப்பட்டது.

**1-3-21 அநுக்ருதே: தஸ்ய ச**

**பொருள்** – பரமாத்மாவைப் போன்றே ஜீவாத்மா உள்ளதாலும் (தஹராகாசம் பரமாத்மாவே ஆகும்).

**வேதாந்தஸாரம்** – தஹராகாசம் எனப்படும் உயர்ந்த ஜ்யோதி (ப்ரஹ்மம்) போன்றே ஜீவாத்மாவும் உள்ளதால், அவன் தஹராகாசம் அல்லன். சாந். (8-12-3) – ஸ தத்ர பர்யேதி ஜக்ஷத் க்ரீடந் ரமமாண: - இந்த உத்தமப்ருஷன் அங்கு உண்பது, விளையாடுவது –

என்பதன் மூலம், ப்ரஹ்மத்தை அடைந்த பின்னர், அந்த ப்ரஹ்மத்தைப் போன்றே, தனது விருப்பப்படி உள்ளான் என்று கூறப்படுகிறது.

**1-3-22 அபி ஸ்மர்யதே**

**பொருள்** - ஸ்ம்ருதியிலும் இது போன்று கூறப்படுகிறது.

**வேதாந்தஸாரம்** – (ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுகின்ற முக்தி நிலையில் உள்ள ஜீவாத்மாவானது, பரப்ரஹ்மத்தை போன்ற ஒத்த நிலையை அடைவதாக ஸ்ம்ருதியிலும் கூறப்படுகிறது) இதனைக் கீதை. (14-2) – இதம் ஜ்ஞாநம் உபாச்ரித்ய மம ஸாதர்ம்யம் ஆகாதா: | ஸர்க்கே அபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யதந்தி ச – இந்த ஞானத்தை அடைந்து, எனக்குச் சமமாதல் என்பதான மோக்ஷத்தை அடைந்தவர்கள், ஸ்ருஷ்டி காலத்தில் மீண்டும் பிறப்பதும் இல்லை, ப்ரளயத்தின்போது அழிவதும் இல்லை – என்றது காணலாம்.

## அதிகாரம் – 6 - ப்ரமிதாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – இதயத்தில் கட்டைவிரல் பருமன் கொண்டவனாகக் கூறப்படுபவன், அனைத்து லோகங்களுக்கும் ஈச்வரனாகிய பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-3-23 சப்தாத் ஏவ ப்ரமித:**

**வேதாந்தஸாரம்** - கட. (4-12) - அங்குஷ்டமாத்ர: புருஷோ மத்ய ஆத்மநி திஷ்டதி | ஈசோநோ பூதபவ்யஸ்ய – எந்தப் புருஷன், கட்டைவிரல் அளவு கொண்டவனாக ஆத்மாவின் நடுவில் உள்ளானோ, இறந்தகாலம் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றை நியமித்தபடி உள்ளானோ – என்னும் வாக்கியத்தில் அங்குஷ்டனாக (கட்டைவிரல் அளவுள்ளவன்) கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான்; காரணம் அந்த வாக்கியத்தில் - ஈசோநோ பூதபவ்யஸ்ய - இறந்தகாலம் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றை நியமித்தபடி உள்ளானோ – என்று ஸர்வேச்வரத்தன்மையைக் கூறும் சொற்கள் உள்ளன.

**1-3-24 ஹ்ருதி அபேக்ஷயா து மநுஷ்ய அதிகாரத்வாத்**

**பொருள் –** மனிதனுக்கே அதிகாரம் உள்ளதால், அந்த இதயத்துடன் தொடர்பு உள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் –** அளவிட இயலாதவனாகிய பரமாத்மா, உபாஸகனுடைய இதயத்தில் இருப்பவனாக உள்ளதைக் கருத்தில் கொண்டே, கட்டைவிரல் அளவுள்ளவனாகக் கூறப்படுகிறான். அவனை மனிதர்கள் மட்டுமே உபாஸிக்கத் தகுதி கொண்டவர்கள் ஆவர். சாஸ்த்ரங்கள் அனைத்தும் மனிதர்களுக்காகவே உள்ளன. ஆகவே இங்கு மனிதர்களுடைய இதயம் தொடர்பாகக் கூறப்பட்டது. இந்த அதிகரணத்தில் கூறப்பட்ட விஷயமானது பின்னர் நிறைவு செய்யப்படும்.

## அதிகாரணம் – 7 - தேவதாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** தேவர்களுக்கும் உபாஸனத்தில் அதிகாரம் உண்டு என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-3-25 தத் உபரி அபி பாதராயண: ஸம்பவாத்**

**பொருள் -** ப்ரஹ்ம உபாஸனம் என்பது, மனிதர்களைக் காட்டிலும் மேம்பட்ட தேவர்களுக்கும் உண்டு என்று பாதராயணர் கருதுகிறார்.

**வேதாந்தஸாரம் –** ப்ரஹ்ம உபாஸனை என்பது மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்த தேவர்களுக்கும் உண்டு. தேவர்களுக்கும் அர்த்தித்வம் (ஏதேனும் தேவைப்படுகின்ற நிலை. அதாவது தன்னிடம் இல்லாத ஒன்றை மற்றவரிடமிருந்து பெறவேண்டிய நிலை) மற்றும் ஸாமர்த்யம் (தகுதி) ஆகிய இரண்டும் உள்ளதால், அவர்களுக்கும் உபாஸனை உள்ளதாக பகவான் பாதராயணர் கருதுகிறார். அவர்களுக்கு பூர்வஜன்மத்தில் ஏற்பட்ட ஞானம் எப்போதும் நினைவில் உள்ளதால், உபாஸனை என்பது உண்டாகும். மந்த்ரங்கள் மற்றும் அர்த்தவாதம் (புகழ்ச்சி) ஆகிய இரண்டுமே சரீரத்துடன் கூடியவர்களாக

தேவர்களைத் துதிப்பதே ஆகும். இவ்விதம் உள்ளபோது, அதே வேதங்களை ப்ரமாணமாகக் கொண்டு, அவர்களுக்குச் சரீரம் உள்ளதை ஏற்கவேண்டும் (ஆகவே அவர்களுக்கு மனிதர்களைப் போன்றே உபாஸனையும் உண்டு).

**1-3-26 விரோத: கர்மணி இதி சேத் ந அநேக ப்ரதிபத்தே: தர்சநாத்**

**பொருள்** - யாகம் போன்ற கர்மங்களில் விரோதம் ஏற்படும் என்று கூறினால், பல சரீரங்கள் உள்ளதால் விரோதம் இல்லை.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** தேவர்களுக்குச் சரீரம் உள்ளது என்று ஒப்புக் கொண்டால், (ஒரே தேவதையைக் குறித்துப் பல இடங்களில் யாகங்கள் நடந்தால்) ஒரே தேவதை ஒரே நேரத்தில் பல இடங்களில் இருக்க முடியாது என்றாகும்; ஆகவே கர்மங்களில் விரோதம் ஏற்படும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. ஸௌபரி முதலானவர்கள், தங்களுடைய சக்தி காரணமாக ஒரே நேரத்தில் பல சரீரங்களை எடுத்தனர் என்பதைக் காணலாம்.

**1-3-27 சப்த இதி சேத் ந அத: ப்ரபவாத் ப்ரத்யக்ஷ அநுமாநாப்யாம்**

**பொருள் –** இந்த்ரன் முதலான சப்தங்களில் விரோதம் வரும் என்றால், வேத சப்தங்களிலிருந்தே வருவதால் விரோதம் இல்லை; இதனை ச்ருதி ஸ்ம்ருதிகளில் காணலாம்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** வேத சப்தங்களில் விரோதம் உண்டாகும். எப்படி? அவயவங்களுடன் (உடல் உறுப்புகள்) கூடிய சரீரத்திற்கு உற்பத்தி என்பது உண்டு. ஆக, இந்த்ரன் முதலான தேவர்களுக்கு (அவயவத்துடன் கூடிய சரீரம் உள்ளதால்) உற்பத்தி உண்டு என்றாகிறது. இவ்விதம் கொள்ளும்போது, இந்த்ரன் முதலானவர்கள் உற்பத்தி ஆவதற்கு முன்பும், அவர்கள் அழிந்த பின்னரும், அவர்களுடைய பெயர்களைக் கொண்ட வேதவரிகளுக்கு எந்தப் பயனும் இல்லை என்றாகிவிடும். ஆக, வேதங்களில் உள்ள

இந்தச் சொற்களுக்கு பொருள் இல்லை; எனவே, வேதங்களும் அநித்யமானவை என்றாகிவிடும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. “இந்த்ரன்” என்னும் இந்த சப்தம் மூலமே, மீண்டும் மீண்டும் இந்த்ரன் முதலானவர்கள் படைக்கப்பட்டபடி உள்ளனர். வேதத்தில் காணப்படும் இந்த்ரன் முதலான சொற்கள், சாதாரணமாக தேவதத்தன் என்று கூறுவது போன்று ஒரு குறிப்பிட்ட புருஷனைக் குறிப்பதல்ல; அவை, “மாடு” என்ற பதமானது எவ்விதம் குறிப்பிட்ட தன்மைகள் கொண்ட ஒரு விலங்கு ஜாதியைக் குறிக்குமோ அது போன்று, ஒரு குறிப்பிட்ட ஜாதியைக் குறிப்பதாகும். ஆகவே ஒரு இந்த்ரன் அழிந்தவுடன், வேதத்தில் உள்ள “இந்த்ர” என்ற சப்தத்தைக் கொண்டு நான்முகன் தனது மனதிற்குள் முன்பு இருந்த இந்த்ர ஸ்ருஷ்டியின் நினைவு மூலமாக, அந்தத் தன்மைகள் கொண்ட அடுத்த இந்த்ரனைப் படைக்கிறான்; இது குயவன் ஒருவன், “குடம்” என்ற சொல்லைத் தனது மனதில் நிலைநிறுத்தியபடி ஒரு புதிய குடத்தை உண்டாக்குவது போன்றே ஆகும். ஆகவே இங்கு எந்தவிதமான முரண்பாடும் இல்லை.

ஆனால் இந்த விஷயங்கள் எப்படி அறியப்பட்டன என்று கேட்கலாம். இதற்கு விடை - ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி மூலம் ஆகும். ச்ருதியில் தை. ப்ரா. (2-6-2) – வேதேந நாமரூபே வ்யாகரோத் | ஸதாஸதீ ப்ரஜாபதி: - நான்முகன் வேதத்தின் துணை கொண்டு ஸத் என்றும், அஸத் என்றும் வேறுபடுத்தினான் – என்றும், தை. ப்ரா. (2-2-4) - ஸ பூரிதி வ்யாஹரத்ஸ பூமிம் அஸ்ருஜத - “பூ:” என்ற பதத்தை உச்சரித்து பூமியைப் படைத்தான் – என்றும் கூறப்பட்டுள்ளது. ஸ்ம்ருதியில் மநு. (1-21) - ஸர்வேஷாம் து ஸ நாமாநி கர்மாணி ச ப்ருதக் ப்ருதக் | வேத சப்தேப்ய ஏவாதௌ ப்ருதக் ஸம்ஸ்தாச்ச நிர்மமே - அனைத்து வஸ்துக்களுக்கும் ஸ்ருஷ்டி காலத்தில், கர்மங்களையும் செயல்களையும் தனித்தனியாக வேத சப்தம் கொண்டே படைத்தான். இது போன்று அந்தந்த ரூபங்களையும் தனித்தனியாகப் படைத்தான் – என்று கூறப்பட்டது.

**1-3-28 அத ஏவ ச நித்யத்வம்**

**பொருள் –** ஆகவே வேதத்தின் நித்யத்தன்மை ஸம்பவிக்கிறது.

**வேதாந்தஸாரம் –** வேதங்களில் உள்ளவற்றை நான்முகன் நினைவு கூர்கிறான். அதனைத் தொடர்ந்து அவன் அனைத்தையும் படைக்கிறான். மந்த்ரக்ருதோ வ்ருணீதோ - மந்த்ரங்களை உண்டாக்கியவர்களை வேண்டுகிறான் - என்றும், தை. ஸம். (5-2-3) - விச்வாமித்ரஸ்ய ஸூக்தம் பவதி - விச்வாமித்திரருடைய ஸூக்தம் தொடங்குகிறது - என்றும் உள்ள வரிகளில், விச்வாமித்திரர் போன்றவர்கள் மந்த்ரங்களை உண்டாக்கியவர்கள் என்று கூறப்பட்டபோதிலும், (அந்த ரிஷிகள் மீண்டும் அதே போன்று ஸ்ருஷ்டிக்கப்படுவதால்) வேதங்கள் நித்யமே என்றாகிறது. மந்த்ரங்களை மற்றவர்கள் மூலம் உபதேசம் செய்யாமலேயே அறியக்கூடியவர்களும், முன் கல்பத்தில் இருந்தவர்களும் ஆகிய விச்வாமித்திரர் போன்றவர்களை நான்முகன் வேதசப்தம் மூலமாக நினைவு கூர்கிறான். தொடர்ந்து அந்த ரிஷிகளை அதே உருவம், சக்தி முதலானவற்றுடன் ஸ்ருஷ்டிக்கிறான்; பின்னர் அவர்கள் அதே மந்த்ரங்களை நினைவு கூர்ந்து உண்டாக்கும் சக்தியையும் அவர்களுக்கு அளிக்கிறான். இவை நைமித்திகள் ப்ரளயத்தில் நடக்கின்றன. அவர்களும் எந்தவிதமான பிழையும் இன்றி அந்த மந்த்ரங்களை வெளிப்படுத்துகிறார்கள். இதனால்தான், “வேதம் நித்யமானது”, என்று கூறப்படுகிறது. இப்போது வந்த இந்த ரிஷிகளும், இந்த மந்த்ரங்களை உண்டாக்கியவர்கள் என்றே கூறப்படுகிறார்கள்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** ஆனால் ப்ராக்ருத ப்ரளயத்தின்போது நான்முகனும் வேதமும் அழியும் என்றுள்ளபோது, வேதங்களை நித்யம் என்று கூறுவது எவ்விதம் பொருந்தும்? (அடுத்த ஸூத்ரத்தில் விடை அளிக்கிறார்)

**1-3-29 ஸமாந நாம ரூபத்வாத் ச ஆவ்ருத்தௌ அபி அவிரோத: தர்சநாத் ஸ்ம்ருதே: ச**

**பொருள்** - ப்ராக்ருத ப்ரளயத்தின் பின் ஸ்ருஷ்டிக்கப்படும்போது, முன்பு உள்ளது போன்றே பெயர் மற்றும் உருவம் கொண்டவையாக இருப்பதால், விரோதம் இல்லை. வேதங்களிலும், ஸ்ம்ருதிகளிலும் கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** (கடந்த ஸூத்ரத்தின் இறுதியில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) அனைத்தும் முன்பு போன்றே, அதே பெயர் மற்றும் உருவங்களுடன் படைக்கப்படுவதால், ப்ராக்ருத ப்ரளயம் மீண்டும் மீண்டும் வந்தாலும், எந்தவிதமான

விரோதமும் இல்லை. ஆதிகர்த்தாவாகிய பரமபுருஷன், முன்பு போன்ற உருவ அமைப்பு கொண்ட ஜகத்தை நினைவில் கொண்டு வந்து, அதனைப் போன்ற ஜகத்தை மீண்டும் படைக்கிறான். வேதங்களை, முன்பு இருந்த அதே குறிப்பிட்ட வரிசையில் (இது பூர்வ ஆநுபூர்வி எனப்படும்) நான்முகனுக்கு உபதேசம் செய்கிறான். ஆதிகர்த்தா இந்த ஜகத்தை முன்பிருந்தது போன்றே படைக்கிறான் என்பது ச்ருதி மற்றும் ஸ்ம்ருதியால் அறியப்படுகிறது. ச்ருதியில் ச்வே. (6-18) – யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை - யார் முதலில் நான்முகனைப் படைத்து அவனுக்கு வேதங்களை உபதேசம் செய்கிறானோ – என்று கூறப்பட்டது. ஸ்ம்ருதியில் ஸ்ரீவிபு. (1-5-64) - யதர்த்துஷ்வ்ருது லிங்காநி நாநா ரூபாணி பர்யதே | த்ருச்யந்தே தாநிதாந்யேவ ததா பாவா யுகாதிஷு - எவ்விதம் பலவிதமான ருதுக்களின் வரிசையானது மீண்டும் தோன்றி, அந்த வரிசை மாறாமல் உள்ளனவோ, அதே போன்று பலவிதமான பொருள்களும் அந்தந்த யுகத்தின் தொடக்கத்தில் காணப்படுகின்றன – எனப்பட்டது. “வேதங்கள், நித்யமானவை”, என்று கூறுவதன் மூலம் உணர்த்தப்படுவது என்னவென்றால், “முந்தைய முந்தைய காலங்களில் உச்சரிக்கப்பட்ட அதே உச்சரிப்பு வரிசைகளை, மாறாமல் உச்சரித்தல்”, என்பதே ஆகும்.

## அதிகரணம் – 8 - மத்வதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஆதித்யன் போன்றவர்களுக்கு மதுவித்யை முதலான ப்ரஹ்மவித்யைகளில் அதிகாரம் உண்டு என்று நிரூபிக்கப்படுகிறது.

**1-3-30 மத்வாதிஷு அஸம்பவாத் அநதிகாரம் ஜைமிநி:**

**பொருள்** - மதுவித்யை போன்ற வித்யைகளில் அதிகாரம் ஏற்படாது என்பதால், தேவர்களுக்கு அதிகாரம் இல்லை என்றே ஜைமினி கூறினார் (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்).

**குறிப்பு** - (இது வேதாந்தஸாரத்தின் பகுதி அல்ல. மதுவித்யை என்றால் என்ன என்று கூறுவதற்காக எழுதப்பட்டது) மதுவித்யை என்பது சாந்தோக்ய உபநிஷத்தில் (3-1-1) உள்ளதாகும். இது தேனாக சூரியனை த்யானம் செய்வதாகும். சூரிய

மண்டலத்தை, தேவதைகள் உட்கொள்ளும் தேனாகவும், மேல் உலகில் அந்தரிக்ஷம் எனப்படும் தேன் அடை இருப்பதாகவும், வேதங்கள் இதிகாச புராண உபநிஷத்துக்களுடன் சேர்ந்து வண்டுகள் என்பதாகவும், வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள் மற்றும் மருத் ஸாத்ய கணங்கள் நான்கு திசைகளிலும், மேல்புறத்திலும் நிற்பதாகவும் கருதி, சூரியனுக்கு அந்தர்யாமியாக பகவானை உபாஸனம் செய்தலே மதுவித்யை எனப்படும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – மதுவித்யை போன்றவற்றில், வஸு முதலான தேவதைகளை உபாஸனை செய்து, அந்த உபாஸனை மூலமாக வஸு முதலானவர்களை அடைதல் கூறப்படுகிறது. அத்தகைய வஸு முதலான தேவதைகள் தாங்களே உபாஸனை செய்பவர்களாகவும், தாங்களே உபாஸிக்கப்படுபவர்களாகவும் இருக்க முடியாது; ஆகவே அவர்கள் உபாஸிக்க இயலாது. மேலும் அவர்கள் வஸுக்களாகவே இருப்பதால், அவர்கள் வஸுக்களை அடைதலும் பொருந்தாது. ஆகவே அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்பதால், அவர்களால் மதுவித்யை முதலானவற்றைக் கைக்கொள்ள இயலாது என்று ஜைமினி முனிவர் கருதுகிறார்.

**1-3-31 ஜ்யோதிஷி பாவாத் ச**

**பொருள்** - உயர்ந்த ஜ்யோதியான பரமாத்மாவிடம் உபாஸனம் உண்டு என்பதால், இந்த உபாஸனை தேவர்களுக்கு இல்லை. (இதுவும் பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்).

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ப்ரு. (4-4-16) - தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதிராயுர்ஹோபாஸதே அம்ருதம் - ஜ்யோதிகளுக்கு எல்லாம் ஜ்யோதியாக உள்ள பரமாத்மாவையே தேவர்கள் தங்களுடைய ஆயுளாகவும் அமிர்தமாகவும் உபாஸிக்கிறார்கள் – என்று உயர்ந்த ஜ்யோதியான பரப்ரஹ்ம உபாஸனை என்பது, தேவர்களுக்குக் கூறப்பட்டது. பரப்ரஹ்மத்தை உபாஸித்தல் என்பது தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் பொதுவானதே ஆகும். இப்படி உள்ளபோது இந்த வரியில் தேவர்களுக்கு உபாஸகத்வம் (உபாஸித்தல் என்ற செயல்) உண்டு என்று கூறுவதன் மூலம், அவர்களுக்கு இந்த ப்ரஹ்ம உபாஸனை தவிர மற்ற அனைத்து உபாஸனைகளும்

தள்ளப்படுகின்றன என்பதே கூறப்படுகிறது. ஆகவே வஸுக்கள் முதலானவர்களுக்கு (மதுவித்யையில்) அதிகாரம் இல்லை.

**1-3-32 பாவம் து பாதராயண: அஸ்தி ஹி**

**பொருள்** – மதுவித்யையில் தேவர்களுக்கு அதிகாரம் உண்டு என்றே பாதராயணர் எண்ணுகிறார்; அடுத்த கல்பத்தில் ஏற்படுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (கடந்த இரண்டு ஸூத்ரங்களில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) வஸுக்கள் போன்றவர்களுக்கு மதுவித்யையில் அதிகாரம் உண்டு என்றே பகவான் பாதராயணர் கருதுகிறார். தற்போது வஸுவாக உள்ளவர்கள், அடுத்த கல்பத்திலும் இதே போன்று வஸுவாக உள்ள தன்மையை அடைவதற்காக, இப்போது தாங்கள் உள்ள வஸு என்ற நிலையிலேயே உபாஸனை செய்தல் ஸம்பவிக்கலாம். சாந். (3-11-1) - ஏகல ஏவ மத்யே ஸ்தாதா – நடுவில் மாறாமல் உள்ளான் – என்னும் வாக்கியத்தில், காரணநிலையில் ஆதித்யன் மாறாமல் உள்ளதாகக் கூறப்படுகிறது; இதே பகுதியில், சாந். (3-11-3) - ய ஏதாமேவ ப்ரஹ்மோபநிஷதம் வேத - இந்த ப்ரஹ்மஞானத்தை (ப்ரஹ்மோபநிஷத்) அறிந்தவனுக்கு – என்று, மதுவித்யையானது ப்ரஹ்மவித்யையே ஆகும் என கூறப்படுகிறது. ஆகவே காரணநிலை மற்றும் கார்யநிலை ஆகிய இரண்டிலுமே ப்ரஹ்மம் உள்ளதாக உபாஸனை செய்தல் வேண்டும். இவ்விதம் உபாஸிக்கும் ஒருவன் மற்றோரு கல்பத்தில், வஸு போன்ற தன்மையை அடைந்து, அந்தக் கல்பத்தின் முடிவில், (காரண நிலையில் உள்ள) ப்ரஹ்மத்தை அடைகிறான்; எனவே இங்கு முரண்பாடு ஏதும் இல்லை.

## அதிகரணம் – 9 - அபசூத்ராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ப்ரஹ்மவித்யையில் சிலருக்கு அதிகாரம் உள்ளதா என்று ஆராயப்படுகிறது.

**1-3-33 சுகஸ்ய தத் அநாதர ச்ரவணாத் ததா ஆத்ரவணாத் ஸூச்யதே ஹி**

**பொருள் -** ஹம்ஸத்தின் (அன்னம்) நிந்தையாகக் கூறப்பட்ட வாக்கியத்தைக் கேட்டதால், அப்போது ஓடுவதால், ஜாநச்ருதியின் சோகம் உணர்த்தப்பட்டது.

**1-3-34 க்ஷத்ரியத்வகதே: ச**

**பொருள் -** ஜாநச்ருதி க்ஷத்ரியனே ஆவான் என்று அறியப்படுவதாலும்.

**1-3-35 உத்தரத்ர சைத்ரரதேந லிங்காத்**

**பொருள் -** மேலே கூறப்படுகின்ற சைத்ரரத வம்சத்தைச் சேர்ந்த க்ஷத்ரியன் மூலமும், ஜாநச்ருதி ஒரு க்ஷத்ரியனே ஆவான் என்பதை அறியலாம்; அடையாளம் உள்ளதால்.

**1-3-36 ஸம்ஸ்கார பராமர்சாத் தத் அபாவாபிலாபாத் ச**

**பொருள் -** வித்யையில் உபநயனம் போன்றவை கூறப்படுவதாலும், இவை கிடையாது என்று கூறுவதாலும்.

**1-3-37 தத் அபாவ நிர்த்தாரணே (ச) ப்ரவ்ருத்தே:**

**பொருள் -** இல்லை என்று உறுதி செய்த பின்னரே, உபதேசம் தொடங்குவதாலும்.

**1-3-38 ச்ரவண அத்யயந அர்த்த ப்ரதிஷேதாத்**

**பொருள் -** வேதத்தைக் கேட்பது, அத்யயனம் செய்வது, பொருளை அறிவது தடுக்கப்பட்டுள்ளதாலும்.

**1-3-39 ஸ்ம்ருதேச்ச**

**பொருள்** – ஸ்ம்ருதியிலும் கூறப்பட்டது.

அதிகரணம் – 10 - ப்ரமிதாதிகரணம் (தொடர்ச்சி)

**குறிப்பு** - இது ஆறாவது அதிகரணமாகிற ப்ரமிதாதிகரணத்தின் தொடர்ச்சியே ஆகும்.

**1-3-40 கம்பநாத்**

**பொருள்** - தேவர்களுக்கு நடுக்கம் கூறப்படுவதால் (கட்டைவிரல் அளவுள்ளவன் என்று கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான்).

**வேதாந்தஸாரம்** – கட்டைவிரல் அளவுள்ளவன் என்று கூறும் பகுதியின் நடுவில், கட. (6-2) – யத் இதம் கிம் ச ஜகத் ஸர்வம் ப்ராண ஏஜதி நிஸ்ஸ்ருதம் - ப்ராணனில் தோன்றி வாழும் இந்த அனைத்து லோகங்களும், உயர்த்திப் பிடிக்கப்பட்ட வஜ்ராயுதம் போன்ற இவனைக் கண்டு நடுங்குகின்றன – என்பதான வாக்கியம் உள்ளது. கட்டைவிரல் அளவுள்ளவனும், ப்ராணன் என்னும் பதத்தால் கூறப்படுபவனும் ஆகிய பரமபுருஷனைக் கண்டு அக்னி, வாயு, சூரியன், இந்த்ரன் போன்றவர்கள் உள்ளிட்ட இந்த ஜகத்தானது, தங்களுக்கு எதிரே வஜ்ராயுதம் உயர்த்திப் பிடிக்கப்பட்டவர்கள் போன்று, அச்சத்தால் நடுங்கியபடி உள்ளது. ஆகவே கட்டைவிரல் அளவுள்ளவன் என்று கூறப்படுபவன் பரமபுருஷனே ஆவான்.

**1-3-41 ஜ்யோதிர் தர்சநாத்**

**பொருள்** - கட்டைவிரல் அளவுள்ள புருஷனுக்கு சிறந்த ஜ்யோதி உள்ளதாலும்.

**வேதாந்தஸாரம்** – இந்தப் பகுதியில் (அதாவது கட்டைவிரல் அளவுள்ள புருஷனை விஷயமாகக் கொண்டு கூறப்பட்ட இரண்டு வாக்கியங்களுக்கு நடுவில்), கட. (5-15) - ந தத்ர ஸூர்யோ பாதி - அந்தப் பரமபுருஷனிடம் சூரியனும் – என்று தொடங்கி, கட. (5-15)

- தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி - அவனுடைய ஒளியாலேயே இவை அனைத்தும் ப்ரகாசிக்கின்றன – என்று முடியும் வாக்கியம் உள்ளது. இங்குள்ள “பா – ஒளி” என்பதன் மூலம், எல்லையற்ற தேஜஸ் கூறப்பட்டது. ஆகவே இங்கு கட்டைவிரல் அளவுள்ளவன் என்று கூறப்படுபவன் பரமபுருஷனே ஆவான்.

## அதிகரணம் – 10 - அர்த்தாந்த்ரத்வாதி வ்யபதேசாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – பெயர் மற்றும் உருவங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தியவன் பரமாத்மா என்பதால், ஆகாசம் என்று கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-3-42 ஆகாச: அர்த்தாந்தரத்வாதி வ்யபதேசாத்**

**பொருள்** - வேறுபட்டவனாக இருத்தல் போன்றவை கூறப்படுவதால், ஆகாசம் எனப்படுபவன் பரமாத்மாவே ஆவான்.

**வேதாந்தஸாரம்** – சாந். (8-14-1) - ஆகாசோ ஹ வை நாம ரூபயோர் நிர்வஹிதா தே யதந்தரா தத் ப்ரஹ்ம - ஆகாசம் என்பது பெயர் மற்றும் ரூபங்களை ஏற்படுத்துகிறது. இவை இன்றி உள்ளது எதுவோ அதுவே ப்ரஹ்மமாகவும் – என்னும் வாக்கியத்தின் மூலம் கூறப்படும் ஆகாசம் என்ற வஸ்துவானது, சாந். (8-13-1) - தூத்வா சரீரம் அக்ருதம் க்ருதாத்மா - தனது சரீரத்தை உதறி, செய்யவேண்டியதைச் செய்தவனாக – என்பதில் கூறப்பட்ட தூய்மையானவனும், சரீரத்தின் உள்ளே இருப்பவனும் ஆகிய ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் வேறுபட்ட பரமபுருஷனே ஆகும். ஏனென்றால் அந்த வஸ்துவானது பெயர் மற்றும் ரூபங்களை உண்டாக்குபவன் என்றும், அவற்றால் தீண்டப்படாதவன் என்றும் கூறப்படுகிறது. இத்தகைய தன்மைகள் கொண்டவனாகவும், அம்ருதமாகவும் அவன் கூறப்படுகிறான்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஆனால், சாந். (6-8-7) - தத் த்வம் அஸி - நீ அந்த ப்ரஹ்மம் ஆகிறாய் – என்பது போன்ற உபதேச வாக்கியங்கள் மூலம், “ப்ரத்யகாத்மா

பரமபுருஷனைக் காட்டிலும் வேறுபட்டவன் அல்லன்” என்று தேறுகிறது அல்லவோ? (இந்த ஐயத்தை அடுத்த ஸூத்ரத்தில் விலக்குகிறார்)

**1-3-43 ஸுஷுப்தி உத்க்ராந்தயோ: பேதேந**

**பொருள்** - உறங்கும் நிலை மற்றும் மரணத்தின் பின் வெளிக்கிளம்பும் நிலை ஆகியவற்றில் வெவ்வேறாகவே கூறுவதால் (ஆகாசம் ப்ரத்யகாத்மா அல்ல).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ப்ரு. (4-3-21) - ப்ராஜ்ஞேந ஆத்மநா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் கிஞ்சந வேதநாத்தரம் – உறங்கும்போது, அனைத்தும் அறிந்த பரமாத்மாவால் நன்றாக அணைத்துக் கொள்ளப்படுகின்ற ஜீவாத்மா, உள்ளும்புறமும் உள்ள எதனையும் அறிவதில்லை – என்றும், ப்ரு. (4-3-35) – ப்ராஜ்ஞேந ஆத்மநா அந்வாரூட – அனைத்தும் அறிந்த பரமாத்மாவால் மேல் ஏற்றிக் கொள்ளப்பட்டவனாக – என்றும் கூறப்படுகிறது. ஆகவே ஆழ்ந்த உறக்கம் மற்றும் மேலே எழும்புதல் ஆகிய நிலைகளில், ப்ரத்யகாத்மாவிற்கு வெளி மற்றும் உள் விஷயங்கள் ஏதும் தெரிவதில்லை. ஆனால் இங்கு, “ப்ராஜ்ஞன் – அனைத்தும் அறிந்தவன்” என்று வேறு ஒருவனாகக் கூறப்பட்டுள்ளதால், பரமாத்மா வேறானவனே ஆவான்.

**1-3-44 பத்யாதி சப்தேப்ய:**

**பொருள்** - “பதி” போன்ற சொற்கள் உள்ளதாலும் (வேறுபட்டவனே).

**வேதாந்தஸாரம்** – (ஜீவாத்மாவை உறக்கம் போன்ற நிலைகளில்) அணைத்துக் கொள்கின்ற பரமாத்மா, தொடர்ந்து வரும் வரிகளில், “பதி = எஜமானன், அரசன்” என்று கூறப்படுகிறான். ஆகவே அவன் ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் வேறானவனே ஆகிறான். அங்கு தொடர்ந்து, ப்ரு. (4-4-22) – ஸர்வஸ்ய அதிபதி: ஸர்வச்ய வசீ ஸர்வஸ்ய ஈசாந: – அனைத்திற்கும் அதிபதியாக உள்ளவன், அனைத்தையும் தன்வசப்படுத்துபவன், அனைத்தையும் ஆள்பவன் – என்று கூறப்படுகிறது. ஜீவாத்மா மற்றும் பரமாத்மா ஆகிய இருவரும் ஒன்றே என்பதான ஐக்யத்தை, ப்ர. ஸூ. (1-4-22) - அவஸ்திதே: இதி காசக்ருத்ஸ்ந: - “பரமாத்மா ஜீவாத்மாவிற்குள் நிற்பதால்”, என்று காசக்ருத்ஸ்நர்

கருதுகிறார் – என்னும் ஸூத்ரம் மூலமாக, “ஜீவாத்மா சரீரமாகவும், பரமாத்மா அந்தச் சரீரத்தின் ஆத்மாவாகவும் உள்ளதால் பொருந்தும்” என்று உரைப்பதன் வாயிலாகக் கண்டிக்கிறார்.

## முதல் அத்யாயம் நான்காம் பாதம்

## அதிகரணம் – 1 - ஆநுமாநிகாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொள்ளாத மூலப்ரக்ருதியானது (ஜகத்தின்) காரணப்பொருள் என்று கூறப்படவில்லை என்பது நிரூபிக்கபட உள்ளது.

**1-4-1 ஆநுமாநிகம் அபி ஏகேஷாம் இதி சேத் ந சரீர ரூபக விந்யஸ்த க்ருஹீதே: தர்சயதி ச**

**பொருள் –** “அவ்யக்தம் எனப்படும் மூலப்ரக்ருதியே ஜகத்காரணம் என்று கூறப்படுகிறது” என்று உரைத்தால், அது சரியல்ல; உருவகத்தில் தேராக உருவகம் செய்யப்பட்ட சரீரத்தையே அவ்யக்தம் என்பதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஒரு சில வேத சாகைகளில், “அனுமானத்தால் நிரூபிக்கவல்லதான ப்ரதானமே ஜகத்காரணம் ஆகும்” என்று கூறுகிறார்கள். இதனை கட. (3-11) – மஹத: பரம் அவ்யக்தம் - மஹத்தைக் காட்டிலும் மேலானது அவ்யக்தம் – என்னும் வாக்கியம் கூறுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. கட. (3-3) - ஆத்மாநம் ரதிநம் வித்தி – ஆத்மாவைத் தேரில் உள்ள எஜமானனாக அறியவேண்டும் – என்னும் வாக்கியத்தில் தேரை ஓட்டுபவன், தேர் என்பது போன்ற பலவும் அந்தந்த விஷயங்களை வசப்படுத்துவதற்காக, உபாஸனை பொருள்களாகக் கூறப்பட்டன. இங்கு தேராக உருவகப்படுத்தப்பட்ட சரீரமே அவ்யக்தம் என்பதாகக் கூறப்பட்டது. தொடர்ந்து கட. (3-10) - இந்த்ரியேப்ய: பரா ஹி அர்த்தா: - இந்த்ரியங்களைக் காட்டிலும் இந்த்ரிய விஷயங்கள் மேலானவை – என்பதன் மூலம், வசப்படுத்தும் விஷயத்தில் இந்த்ரிய விஷயங்களே மேலானவை என்று கூறப்பட்டன. தொடர்ந்து கட. (3-13) - யச்சேத்

வாங்மநஸீ ப்ராஜ்ஞ: - ஞானி ஒருவன் தனது வாக்கை மனத்தில் அடக்கவேண்டும் – என்பதும் இதனையே கூறுகிறது.

**1-4-2 ஸூக்ஷ்மம் து தத் அர்ஹத்வாத்**

**பொருள்** - ஸூக்ஷ்ம நிலையான ப்ரக்ருதியே சரீரமாக உள்ளது; கார்யம் செய்யத் தகுந்ததாக உள்ளதால்.

**வேதாந்தஸாரம்** – புலப்படாமல் ஸூக்ஷ்ம நிலையில் உள்ள அவ்யக்தமானது (பூத ஸூக்ஷ்மங்கள்) சரீர நிலையை அடைந்து, கர்மங்களில் ஈடுபடும் தகுதி பெறுகிறது. ஆகவே அவ்யக்தம் என்ற பதமானது சரீரத்தைக் குறிப்பதாகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஆனால் (சரீரத்தை ரதமாகவும், இந்த்ரியங்களைக் குதிரைகளாகவும் என) அனைத்து வஸ்துக்களையும் உருவகப்படுத்தியே கூறப்பட்டது என்னும்போது, கட. (3-11) – அவ்யக்தாத் புருஷ: பர: - அவ்யக்தத்தைக் காட்டிலும் மேலானவன் புருஷன் – என்று ஏன் கூறவேண்டும்? இதற்கான பதிலை அடுத்த ஸூத்ரத்தில் கூறுகிறார்.

**1-4-3 தத் அதீநத்வாத் அர்த்தவத்**

**பொருள்** - அந்த அவ்யக்தம் அவனைச் சார்ந்துள்ளதால், பயன்படும்படி உள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஆத்மா மற்றும் சரீரம் ஆகியவை புருஷனுக்கு அடங்கியே உள்ளன. ஆக அவையே உபாஸனை என்பது பூர்த்தியாக உதவுகின்றன. அனைவருக்கும் அந்தர்யாமியாக உள்ள புருஷன், அனைத்து ஆத்மாக்களையும் உபாஸனையில் ஈடுபடுத்துகிறான். அவனே உபாஸனைக்கு உபாயமாகவும், வசப்படுத்தப்படவேண்டிய வஸ்துக்களில் முதன்மையானவனாகவும் உள்ளான். அவனே உபாஸகர்களால் அடையப்படும் இலக்காகவும் உள்ளான். கட. (3-11) – ஸா காஷ்டா ஸா பரா கதி: - அவனே உயர்ந்த எல்லையாகவும், உயர்ந்த கதியாகவும் உள்ளான் - என்று கூறப்பட்டது.

**1-4-4 ஜ்ஞேயத்வ அவசநாத் ச**

**பொருள்** - மோக்ஷம் பெறுவதற்கு அறியப்படவேண்டியதாகக் கூறப்படவில்லை என்பதாலும்.

**வேதாந்தஸாரம்** – (இங்கு கபிலதந்த்ரத்தில் கூறப்பட்ட அவ்யக்தமே கூறப்பட்டது என்றால், அதனை அறியப்படவேண்டிய ஒன்றாகக் கூறியிருக்க வேண்டும்) இங்கு, அவ்யக்தத்தை அறியப்படவேண்டிய ஒன்றாகக் கூறவில்லை. ஆகவே இந்த அவ்யக்தம் என்பது கபிலதந்த்ரத்தில் கூறப்பட்ட அவ்யக்தம் அல்ல.

**1-4-5 வததி இதி சேத் ந ப்ராஜ்ஞோ ஹி ப்ரகரணாத்**

**பொருள்** – “அவ்யக்தம் அறியப்படவேண்டியது என்று கூறப்படுகிறது” என்றால், அப்படி அல்ல; ப்ரகரணத்தை ஆராய்ந்தால், அங்கு கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – கட. (3-15) - அசப்தம் அஸ்பர்சம் - சப்தம், தொடு உணர்ச்சி – என்று தொடங்கி, கட. (3-15) - நிசாய்ய தம் - அந்த தத்வத்தை த்யானிப்பதால் – என முடியும் ச்ருதி வரியானது, “அவ்யக்தம் என்பது அறியப்படவேண்டியதாகும்” என்றே கூறுகிறது அல்லவோ?

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - அப்படி அல்ல. கட. (3-9) - தத் விஷ்ணோ: பரமம் பதம் – அந்த விஷ்ணுவின் பரமபதத்தை அடைகிறான் – என்றும், கட. (3-12) - ஏஷ ஸர்வேஷு பூதேஷு கூட: ஆத்மா ந ப்ரகாசதே - இந்த ஆத்மா அனைவருக்குள்ளும் அவர்களால் அறியப்படாதவனாக, தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாதபடி உள்ளான் – என்றும் உள்ள வாக்கியங்களில் கூறப்படுபவனே, கட. (3-15) - நிசாய்ய தம் - அந்த தத்வத்தை த்யானிப்பதால் – என்ற இந்தப் பகுதியிலும் அறியப்படவேண்டியவனாகக் கூறப்படுகிறான்.

**1-4-6 த்ரயாணாம் ஏவ ச ஏவம் உபந்யாஸ: ப்ரச்நச்ச**

**பொருள்** – மூன்றைக் குறித்தே அறியவேண்டும் என்று பதில் அளிக்கப்படுகிறது; இது குறித்தே கேள்வியும் உள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – இந்தப் பகுதியில், "உபாஸிக்கப்படும் பொருள், உபாஸனை, உபாஸிப்பவன்" ஆகிய மூன்றைக் குறித்து மட்டுமே கேள்விகளும் பதில்களும் உள்ளன. இங்கு ப்ரதானத்தைக் குறித்து ஏதும் இல்லை. இங்கு, கட. (2-12) – அத்யாத்ம யோகாதிகமேந தேவம் மத்வா – ஆத்மாவிடம் மனத்தை யோகத்தின் மூலம் நிலைநிறுத்துவதால் ஏற்படும் ஞானத்தால் – என்று உபதேசம் செய்யப்பட்டது. இதற்கான கேள்வியாக, கட. (1-1-20) - யேயம் ப்ரேதே விசிகித்ஸா மநுஷ்யே அஸ்தீத்யேகே - ஒருவன் மரணம் அடைந்த பின்னர் ஒரு சிலர் "அவன் இருக்கிறான்" என்றும், ஒரு சிலர் "அவன் இல்லை" என்றும் கூறுகிறார்கள் – என்பது உள்ளது.

**1-4-7 மஹத்வச் ச**

**பொருள்** - மஹத் தத்வம் போன்று.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – கட. (3-10) - புத்தேராத்மா மஹாந் பர: – புத்தியைக் காட்டிலும் மஹான் என்று கூறப்படும் ஆத்மா உயர்ந்தது - என்ற இடத்தில் உள்ள "மஹாந்" என்ற பதமானது, கபிலதந்த்ரத்தில் கூறப்பட்ட "மஹாந்" என்பது அல்ல. அவர்கள் கூறும் அவ்யக்தமும் அல்ல.

## அதிகரணம் – 2 – சமஸாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - "அஜா" என்ற சொல்லால், ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொண்ட மூலப்ரக்ருதியே கூறப்பட்டது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-4-8 சமஸவத் அவிசேஷாத்**

**பொருள்** - சமஸம் போன்று சிறப்பித்துக் கூறப்படாத காரணத்தால்.

**குறிப்பு** (இது வேதாந்தஸாரத்தின் பகுதி அல்ல) - சமஸம் என்பது யாகங்களில் பயன் படுத்துகின்ற, மரத்தால் செய்யப்பட்ட ஒருவகை பாத்திரம் ஆகும். அது, கீழ்ப்பாகம் அகலமாகவும், மேற்பாகம் ஒரு சிறிய துளை மட்டுமே கொண்டதாகவும் காணப்படும். அதில் ஸோமலதை என்ற மூலிகை ரஸம் வைக்கப்படும்.

**வேதாந்தஸாரம்** – ச்வே. (4-5) - அஜாம் ஏகாம் லோஹித சுக்ல க்ருஷ்ணம் பஹ்வீம் ப்ரஜா: ஸ்ருஜமாநாம் - சிவப்பும் வெளுப்பும், கறுப்புமாக உள்ள பிறப்பற்ற ஒருவள் (ப்ரக்ருதி), தன்னைப் போன்றுள்ள பல ப்ரஜைகளை உற்பத்தி செய்கிறாள் – என்னும் வாக்கியமானது "ஸாங்க்யர்கள் கூறும் ப்ரக்ருதியானது ஜகத்காரணம்" என்று கூறவில்லை. ஆனால், "பிறப்பற்ற தன்மை (அஜா) என்பது போன்ற காரணங்களால், இந்தப் பகுதியில் ஸாங்க்யர்களுடைய ப்ரக்ருதியே கூறப்படுகிறது", என்று உரைக்கலாகாது; காரணம் "அஜா" என்ற பதமானது, ப்ரு. (2-2-3) - அர்வாக்பிலச் சமஸ - கீழே துளை உள்ளதாகவும், மேலே பருத்ததாகவும் உள்ள சமஸம் – என்பதில் உள்ள "சமஸம்" என்ற பதத்தைப் போன்று, எந்த ஒரு குறிப்பிட்ட பொருளிலும் வரவில்லை. இங்குள்ள "சமஸம்" என்ற பதமானது சிறப்பான ஒரு பொருளைத் தருவதாக வந்தது; இதனை ப்ரு. (4-2-3) – இதம் தச்சிர: - இப்படி உள்ளது தலையே ஆகும் – என்பதன் மூலம் அறியலாம். காரணப்பெயர்கள் விஷயத்தில், மற்ற சிறப்பான விவரங்கள் மூலமே பொருளைத் தீர்மானிக்கவேண்டும்.

**1-4-9 ஜ்யோதிருபக்ரமா து ததா ஹி அதீயத ஏகே**

**பொருள் -** இது உயர்ந்த ஜ்யோதியான ப்ரஹ்மத்தைக் காரணமாகக் கொண்டதாகும். ஒரு குறிப்பிட்ட சாகையைச் சார்ந்தவர்கள் இப்படியே ஓதுகிறார்கள்.

**வேதாந்தஸாரம்** – இந்த ஜ்யோதி ப்ரஹ்மமே ஆகும். ஆக, அஜா என்பது ப்ரஹ்மத்தைத் தனது காரணமாகக் கொண்டதாகும். தைத்திரீய சாகையைச் சேர்ந்த ஒரு சிலர், இந்த

“அஜா (ப்ரக்ருதி)” என்பது, ப்ரஹ்மத்தைக் காரணமாகக் கொண்டுள்ளது என்று கூறுகிறார்கள். மஹா. நா. (12-1-1) - அணோரணீயாத் மஹதோ மஹீயாந் - அணுவைக் காட்டிலும் சிறியவன், பெரியதைக் காட்டிலும் பெரியவன் – என்று தொடங்கி, மஹா. நா. (12-1-3) – அத: ஸமுத்ரா கிரயச்ச – அவனிடமிருந்து ஸமுத்ரங்களும் மலைகளும் – என்று முடிகிறது. இதன் மூலம், “அனைத்தும் ப்ரஹ்மத்திடமிருந்தே உற்பத்தி ஆகின்றன. அனைத்தும் ப்ரஹ்மதையே ஆத்மாவாகக் கொண்டுள்ளன” என்று தேறுகிறது. இந்தக் கருத்தை வெளிப்படுத்தவே அவர்கள், தை. ஆர. (6-10) - அஜாம் ஏகாம் – பிறப்பற்ற ஒரு – என்கிறார்கள். எனவே மேலே உள்ள உபதேசங்களின் அடிப்படையில், “ப்ரஹ்மமே ப்ரக்ருதியின் காரணம்” என்று நிச்சயிக்கப்படுகிறது.

**1-4-10 கல்பந உபதேசாத் ச மத்வாதிவத் அவிரோத:**

**பொருள்** - ஸ்ருஷ்டியைக் கூறுவதால், மது என்பது போன்று, விரோதம் இல்லை.

**வேதாந்தஸாரம்** – கல்பநம் என்றால் உண்டாக்குதல் அல்லது ஸ்ருஷ்டி என்று பொருள். மஹா. நா. (5-7) - ஸூர்யா சந்த்ரமஸௌ ததா யதா பூர்வமகல்பயந் - சூரியனையும் சந்த்ரனையும், முன்பு இருந்தது போன்றே ஸ்ருஷ்டித்தான் - என்ற வரியில் உள்ள “கல்பநம்” என்பது ஸ்ருஷ்டியைக் குறிக்கிறது. ச்வே. (4-9) – அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விச்வம் ஏதத் – இதிலிருந்து, மாயையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள பரமாத்மா, இந்த விச்வத்தை ஸ்ருஷ்டிக்கிறான் - என்று ஜகத் ஸ்ருஷ்டி குறித்து உபதேசிக்கப்பட்டது; ஆகவே பிறப்பற்றதாகக் கூறப்படும் ப்ரதானமானது ப்ரஹ்மத்திடமிருந்து ஸ்ருஷ்டியனது என்பதில் விரோதம் ஏதும் இல்லை. எப்படி விரோதம் இல்லை என்பதைக் கூறுவோம். ப்ரளய காலத்தில் அனைத்து அசேதநங்களும் தங்களுடைய பெயர் மற்றும் ரூபங்களை இழந்து, ப்ரஹ்மத்தின் சரீரமாகவே நிற்கின்றன; ஆகவே அந்த நிலையில் அவை பிறப்பற்றவை எனக் கூறப்படுகின்றன. ஸ்ருஷ்டி காலத்தில் அவை தங்களுக்கான பெயர் மற்றும் ரூபம் ஆகியவற்றை ப்ரஹ்மத்திடமிருந்து பெறுகின்றன; எனவே அவை ப்ரஹ்மத்தால் ஸ்ருஷ்டி செய்யப்படுவதாகக் கருத்து. உதாரணமாக, மதுவித்யையில், ஸ்ருஷ்டியின்போது ஆதித்யன் மதுவின் நிலையை எடுத்துக் கொள்வதாகவும், கார்ய நிலையில் உள்ளபோது வசுக்களுடைய இனிமைக்காக பலவிதமான இன்பம் அளிக்கும் பொருள்களின் ஆதாரமாக உள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால் ப்ரளயத்தின்போது

அவன் ஸூக்ஷ்ம நிலையை அடைந்து, மது என்று கூறமுடியாதபடி உள்ளதால், கார்ய நிலையை அடைவதில்லை. இதனை சாந். (3-1-1) - அஸௌ வா ஆதித்யோ தேவமது - ஆதித்யன் தேவர்களுக்குத் தேனாக உள்ளான் – என்றும், சாந். (3-11-1) - ந ஏவ உதேதா ந அஸ்தமேதா ஏகல ஏவ மத்யே ஸ்தாதா – (கார்யநிலையில் வந்த பின்னர்) மேலே எழும்பிய அவன், (காரணநிலையில்) உதிப்பதும் அஸ்தமிப்பதும் இல்லை; நடுவில் மாறாமல் உள்ளான் – என்றும் உள்ள வாக்கியங்களில் காணலாம்.

## அதிகரணம் – 3 - ஸங்க்யோப ஸங்க்ரஹாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – இந்த்ரியங்கள், ஆகாசம் போன்ற அனைத்தும் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொண்டவையே ஆகும் என்று நிரூபிக்கப்பட்ட உள்ளது.

**1-4-11 ந ஸங்க்யோபஸங்க்ரஹாத் அபி நாநா பாவாத் அதிரேகாத் ச**

**பொருள்** – எண்ணிக்கையைக் கூறுகிறது என்பதால் ஸாங்க்யமதம் கூறப்படுகிறது என்றாகாது; வேறுபாடுவதாலும், அதிகம் உள்ளதாலும்.

**வேதாந்தஸாரம்** - ப்ரு. (4-4-17) – யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா: - எந்த ஆத்மாவிடம் ஐந்து "ஐந்து பேர்கள்" – என்னும் வாக்கியத்தில், இருபத்து ஐந்து விதங்களாக ப்ரக்ருதியின் மாற்றங்கள் கூறப்பட்டுள்ளதால், இங்கு ப்ரக்ருதி குறித்தே உரைக்கப்படுவதாகச் சிலர் வாதம் செய்யலாம். ஆனால் இங்கு ப்ரக்ருதி குறித்து உரைக்கப்படவில்லை. மேலே உள்ள உபநிஷத் வாக்கியத்தில் காணப்படும் "யத் (யஸ்மிந் என்பதில் உள்ள யத்)" என்பதன் மூலம் ப்ரஹ்மமே ப்ரக்ருதியின் ஆதாரமாக உள்ளது என்பதும், அது ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறுபட்டது என்பதும் தேறுகிறது. அந்த (இருபத்து ஐந்து) தத்வங்களைக் காட்டிலும் வேறானதாக உள்ளது. "ய:" மற்றும் "ஆகாசம்" ஆகிய இரண்டாலும் குறிப்பிடப்படும் வஸ்துக்கள், ப்ரக்ருதியின் இருபத்து ஐந்து வகைகளைக் காட்டிலும் கூடுதலானவை ஆகும். ஸூத்ரத்தில் உள்ள "அபி" என்பது, இருபத்து ஐந்து தத்வங்கள் குறித்து இங்கு கூறப்படவில்லை என்பதையே உணர்த்துகிறது. இங்குள்ள "பஞ்சஜநா:" என்ற தொகைமொழியானது, ஒரு கூட்டத்தைக் குறிப்பிடவில்லை; மாறாக பாணினி. (2-1-50) – திக் ஸங்க்யே ஸம்க்ஞாயாம் - திசை மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றைக் கூறும்

சொற்கள் மற்றவற்றுடன் சேரும்போது, ஒரு பெயரை உண்டாக்குவதற்காக, முதல் சொல்லுடன் சேர்ந்து நின்று, ஸமாஸத்தை (தொகை) அடைகிறது - என்று ஸூத்ரத்திற்கு ஏற்ப, ஒரு பெயரையே குறிப்பிடுகிறது. உதாரணமாக, “ஸப்த ஸப்தரிஷிகள் = ஏழு ஸப்தரிஷிகள்” என்று கூறுவது போன்றாகும்.

**1-4-12 ப்ராணதய: வாக்யசேஷாத்**

**பொருள் -** முடிக்கும் பகுதி மூலமாக, ப்ராணன் போன்றவையே கூறப்பட்டதாகிறது.

**வேதாந்தஸாரம் –** இந்தப் பகுதி முடியும்போது, ப்ரு. (4-4-18) - ப்ராணஸ்ய ப்ராணமுத சக்ஷுஷச் சக்ஷு: - ப்ராணனுக்கு ப்ராணனாகவும், கண்ணுக்கு கண்ணாகவும் – என்பதன் மூலம், “ஐந்து” என்பது ப்ராணன் முதலானவற்றைக் குறிப்பதாக அறியலாம். அந்தச் சொற்களானவை கண் மற்றும் காது ஆகியவற்றுடன் ஒருவிதமான சேர்க்கையில் படிக்கப்படுவதால், “ப்ராணன், அன்னம்” ஆகியவை தொடு உணர்ச்சி இந்த்ரியம் ஆகியவற்றைக் குறிப்பதாக உள்ளன.

**1-4-13 ஜ்யோதிஷா ஏகேஷாம் அஸதி அந்நே**

**பொருள் -** முன்பு உள்ள ஜ்யோதி என்ற பதம் மூலம், அந்நம் என்பது இல்லாதபோது, அவ்விதம் அறியப்படுகிறது.

**வேதாந்தஸாரம் –** காண்வ சாகையில் “அன்னத்தின் அன்னம்” கூறப்படவில்லை. ஆனால் அங்கு, ப்ரு. (4-4-16) – தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி: - ஜ்யோதிகள் அனைத்திற்கும் ஜ்யோதியாகவும் தேவர்கள் உபாஸிக்கிறார்கள் – என்று தொடங்குகிறார்கள். இங்கு, ஐந்து “ஐந்து பேர்கள்” என்னும் பகுதியில் படிக்கப்படும் “ஜ்யோதி” என்பது இந்த்ரியங்களைக் குறிப்பதாக உள்ளது. “ஜ்யோதிஷாம் ஜ்யோதி:” என்பது அனைத்து ப்ரகாசங்களுக்கும் ப்ரகாசமாக உள்ள ப்ரஹ்மத்தைக் குறிப்பதாகும். இதனைத் தொடர்ந்து “பஞ்ச பஞ்சஜநா: - ஐந்து ஐந்து பேர்கள்” என்பது வருகிறது. ஆகவே “பஞ்சஜநா” என்பதன் மூலம் நாம் ஐந்து இந்த்ரியங்களையே அறிகிறோம்.

## அதிகரணம் – 4 – காரணத்வாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - வேதங்கள் அனைத்தும், ப்ரஹ்மம் ஒன்றை மட்டுமே ஜகத்காரணமாகக் கூறுகின்றன என்று உரைக்கமுடியும் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**1-4-14 காரணத்வேந ச ஆகாசாதிஷு யதா வ்யபதிஷ்ட உக்தே:**

**பொருள்** - ஆகாசம் போன்றவற்றுக்குக் காரணமாக உள்ளது என்று கூறப்பட்டதையே மீண்டும் கூறுவதால்.

**வேதாந்தஸாரம்** - தை. (2-7-1) – அஸத்வா இதம் அக்ர ஆஸீத் - தொடக்கத்தில் இவை அனைத்தும் அஸத் என்றே இருந்தன – என்றும், ப்ரு. (1-4-7) - தத் ஏதம் தர்ஹி அவ்யாக்ருதம் ஆஸீத் – இந்த ஜகத்தானது அப்போது அவ்யாக்ருதமாக (அதாவது பெயர் மற்றும் ரூபம் போன்ற வேறுபாடுகள் இன்றி) இருந்தது – என்றும் உள்ளது போன்ற அனைத்து வேதாந்த வாக்கியங்களும் கார்யப்பொருளாகிய ஆகாசத்திற்கான காரணப்பொருள் கூறப்படுகிறது. ஆனால் இங்கு காரணப்பொருளானது (அதாவது ப்ரஹ்மம்) சிறப்பித்துக் கூறப்படவில்லை. ஆனால், ஐத. (1-1) - ஆத்மா வா இதம் ஏக ஏவ அக்ர ஆஸீத் ந அந்யத் கிஞ்சந மிஷத் | ஸ ஈக்ஷத லோகாந்நு ஸ்ருஜா - தொடக்கத்தில் இந்த ஆத்மா மட்டுமே இருந்தது. வேறு எதுவும் அப்போது செயல் புரியவில்லை. அப்போது அது “நான் உலகத்தைப் படைப்பேன்” என்று எண்ணியது – என்பது போன்ற வாக்கியங்களில், காரணப்பொருளானது (அதாவது ப்ரஹ்மம்) சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. ஆகவே கபிலதந்த்ரத்தில் (ஸாங்க்யம்) கூறப்படும் ப்ரக்ருதியே அனைத்திற்கும் காரணம் என்று கூறுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை.

**1-4-15 ஸமாகர்ஷாத்**

**பொருள்** - தொடர்ந்து கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம்** – தை. (2-6) – ஸோ காமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேய – அந்த ப்ரஹ்மம், “நான் பலவாகக் கடவேன்”, என்று ஸங்கல்பித்து ஸ்ருஷ்டித்தது – என்ற முன்புள்ள

வாக்கியம் மூலம் அனைத்தும் அறிந்த ப்ரஹ்மம் கூறப்படுகிறது. அந்த ப்ரஹ்மமே, தை. (3-7-1) – அஸத்வா இதம் அக்ர ஆஸீத் – தொடக்கத்தில் இவை அனைத்தும் அஸத் என்றே இருந்தன – என்ற வாக்கியத்திலும் தொடர்ந்து கூறப்பட்டது. இதனைப் போன்று, ப்ரு. (1-4-7) - தத் ஏதம் தர்ஹி அவ்யாக்ருதம் ஆஸீத் – இந்த ஜகத்தானது அப்போது அவ்யாக்ருதமாக (அதாவது பெயர் மற்றும் ரூபம் போன்ற வேறுபாடுகள் இன்றி) இருந்தது – என்பதில் கூறப்படும் ப்ரஹ்மமே, ப்ரு. (1-4-7) – ஸ ஏஷ இஹ ப்ரவிஷ்ட ஆநகாக்ரேப்ய: - இந்த ப்ரஹ்மமே நகத்தின் நுனி தொடங்கி முழுவதும் நிரம்பியுள்ளது – என்றும், ச்வே. (3-19) – பச்யத்ய சக்ஷு: - கண்கள் இல்லாமல் காண்கிறான் – என்றும் உள்ள வாக்கியங்களில் கூறப்படுகிறது. ஆகவே முதலில் பெயர் மற்றும் ரூபங்கள் ஆகியவை இல்லாமல் இருந்த அவனையே அஸத் மற்றும் அவ்யாக்ருதம் ஆகிய பதங்கள் குறிப்பதாகக் கொள்ளவேண்டும்.

### 1-4-16 ஜகத்வாசித்வாத்

**பொருள்** - உலகத்தைக் கூறுவதால், இங்கு கூறப்படுவது பரமாத்மாவே.

**வேதாந்தஸாரம்** – கௌஷீ. (4-1) - ப்ரஹ்ம தே ப்ரவாணி - (பாலாகி என்ற அந்தணன், அஜாதசத்ரு என்ற அரசனிடம் கூறுவது) உனக்கு ப்ரஹ்மத்தைக் குறித்து உபதேசிக்கிறேன் - என்று தொடங்கப்பட்டு, கௌஷீ. (4-18) - யோவை பாலாகே ஏதேஷாம் புருஷாணாம் கர்த்தா யஸ்ய ச ஏதத் கர்ம ஸ வை வேதிதவ்ய: - பாலாகி! யார் இந்த புருஷர்களுக்குக் கர்த்தாவாக உள்ளானோ, யாருக்கு இந்த புண்யபாப ரூபமான கர்மம் உள்ளதோ, அவனே அறியத்தக்கவன் – என்று முடிக்கப்பட்டது. இங்கு “கர்ம” என்பதுடன் ஸாமாநாதிகரண்யத்தில் படிக்கப்பட்ட “ஏதத் – இந்த” என்ற பதமானது உற்பத்தியான ஒன்றைக் குறிப்பதால், ஜகத்தையே உணர்த்துவதாகும். ஆகவே இங்கு அறியப்படவேண்டியதாக பரப்ரஹ்மமே கூறப்படுகிறது.

### 1-4-17 ஜீவமுக்ய ப்ராண லிங்காத் ந இதி சேத் தத் வ்யாக்யாதம்

**பொருள்** – “இங்கு ஜீவன் மற்றும் முக்யப்ராணன் ஆகிய அடையாளங்கள் காணப்படுவதால் பரமாத்மா அல்லன்”, என்று கூறினால், அது பொருந்தாது; இதற்கான பதில் முன்பே கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம்** – “கௌஷீ. (4-20) - ஏதைராத்மபிர் புங்க்தே - இந்தப் புருஷன் மற்ற புருஷர்களை (ப்ராணன் முதலானவை) அனுபவிக்கிறான் – என்றும், கௌஷீ. (4-19) - அதாஸ்மிந் ப்ராண ஏவ ஏகதா பவதி - உறங்கும்போது ப்ராணனுடன் சேர்ந்து ஒன்றாகிறான் – என்றும் உள்ள வாக்கியங்களில், ஜீவாத்மாவிற்குப் பொருந்தக்கூடிய அடையாளங்கள் மற்றும் முக்யப்ராணனின் தன்மைகள் ஆகியவையே கூறப்பட்டுள்ளன; பரமாத்மா குறித்து அல்ல”, என்று சிலர் கூறுகிறார்கள். இந்த ஆக்ஷேபத்திற்கான சமாதானமானது, ப்ரதர்தன வித்யை குறித்து உரைக்கும் பகுதியிலேயே (ப்ர. ஸூ. 1-1-31) கூறப்பட்டது. அந்தப் பகுதியில் கூறப்பட்டதைக் கொண்டு, இங்கு ப்ரஹ்மமே உரைக்கப்பட்டது என்கிறோம். ஆகவே அதற்கு ஏற்றபடியே மற்ற விஷயங்களையும் நாம் விளக்கவேண்டும்.

**1-4-18 அந்யார்தம் து ஜைமிநி: ப்ரச்ந வ்யாக்யாநாப்யாம் அபி ச ஏவம் ஏக**

**பொருள்** - ஜீவாத்மா அடையாளம் என்பது வேறு ஒரு கருத்திற்காகக் கூறப்பட்டது என்பதை கேள்வி பதில்களிலிருந்து அறியலாம் என்று ஜைமிநி மஹரிஷி எண்ணுகிறார்; வேறு ஒரு சாகையைச் சார்ந்தவர்கள் இவ்விதமே ஓதுகிறார்கள்.

**வேதாந்தஸாரம்** – ப்ரு. (2-1-15) – தௌ ஹ ஸுப்தம் புருஷமாஜக்மது: - இரண்டு பேரும் (பாலாகி, அஜாதசத்ரு) உறங்கிக் கொண்டிருந்த ஒருவனிடம் சென்றனர் – என்பது போன்ற வாக்கியங்கள், “சரீரத்தைக் காட்டிலும் ஜீவாத்மா வேறானது” என்பதையே வெளிப்படுத்துகிறது. இதன் மூலம், ஜீவாத்மாவைக் காட்டிலும் பரமாத்மா வேறுபட்டவன் என்பது கூறப்படுகிறது. இதனை வேறு ஒரு சாகையில் உள்ள கேள்வி பதில் பகுதி மூலம் அறியலாம். கௌஷீ. (4-18) – க்வா ஏஷ பாலாகே புருஷோ சயிஷ்ட? – பாலாகி! (உறங்கிக் கொண்டிருந்த) இந்தப் புருஷன் எங்கு கிடந்தான்? – என்று கேட்கப்பட்டது; இதற்கு விடையாக, கௌஷீ. (4-19) – அதாஸ்மிந் ப்ராண ஏவைகதா பவதி – அப்போது இவை (இந்த்ரியங்கள்) ப்ராணனுடன் கலந்து, ஒன்றாக உள்ளன – என்று கூறப்பட்டது.

இந்தக் கருத்தானது, சாந். (6-8-1) - ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி – ஸத் என்பதுடன் தொடர்பு கொண்டவன் ஆகிறான் – என்பது போன்றே உள்ளது. இந்தக் கேள்வி மற்றும் பதில் போன்றே வாஜஸநேயர்களும் ஓதுகிறார்கள்; அந்தப் பகுதியானது, ப்ரு. (2-1-16) - க்வ ஏஷ ததா – (உறங்கும்போது) இவன் எங்கு இருந்தான் – என்று தொடங்கி, ப்ரு. (2-1-17) - அதாய ஏஷ: அந்தர்ஹ்ருதய ஆகாச: தஸ்மிந் சேதே – இதயத்தில் உள்ள ஆகாசத்தில் உறங்குகிறான் – என்று முடிவதாகும்.

## அதிகரணம் – 6 - வாக்யாந்வயாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ப்ருஹத் உபநிஷத்தில், காணத்தக்கவனாகக் கூறப்படுபவன் பரமாத்மாவே ஆவான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-4-19 வாக்யாந்வயாத்**

**பொருள்** – வாக்கியங்கள் அனைத்தும் பரமாத்மாவிடமே பொருந்துவதால்.

**வேதாந்தஸாரம்** - ப்ரு. (4-5-6) - ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி ஆத்மநாஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி – ப்ரியமானவனே! கணவன் தனது மனைவியிடம், அவள் தனது கணவன் மீது கொண்டுள்ள விருப்பம் காரணமாக ப்ரியத்துடன் இருப்பதில்லை. மாறாக ஆத்மாவின் விருப்பத்தால் அவ்விதம் உள்ளான் - என்று தொடங்கப்பட்டு, ப்ரு. (4-5-6) – ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: – அந்த ஆத்மாவே காணப்படவேண்டியது – என்று முடியும் பகுதியில், பரமாத்மாவே கூறப்படுகிறான். ஏனென்றால், ப்ரு. (4-5-3) - அம்ருதத்வஸ்ய து நாசாஸ்தி வித்தேந - மோக்ஷத்தைச் செல்வம் கொண்டு அடைய இயலாது – என்று தொடங்கி, ப்ரு. (4-5-6) – ஆத்மநி கல்வரே த்ருஷ்டே ச்ருதே மதே விஜ்ஞாதே இதம் ஸர்வம் விதிதம் – ஆத்மாவைக் காணவும், கேட்கவும், நினைக்கவும், த்யானிக்கவும், அறியவும் செய்தால், இவை அனைத்தையும் அறிந்ததாகிறது - என்று முடிக்கப்படும் பகுதி மற்றும் ப்ரு. (4-5-15) – யேநேதம் ஸர்வம் விஜாநாதி – எதன் மூலம் இவை அனைத்தும் அறிந்ததாகிறதோ – என்றும் உள்ள வாக்கியம் காரணமாக ஆகும். இந்த வாக்கியங்கள் அனைத்துமே பரமாத்மாவைக் கூறுவதாக உள்ளன.

இந்த ப்ரகரணத்திலும், வேறு ப்ரகரணத்திலும் ஜீவாத்மாவைக் குறிக்கும் சொற்களானவை பரமாத்மாவைக் குறிப்பதாகவும், பரமாத்மாவைக் குறிக்கும் சொற்களுடன் ஸாமாநாதிகரண்யத்தில் உள்ளதாகவும் அமைந்துள்ளன. தனது மதத்தில் மட்டும் அல்லாமல், மற்றவர்களும், ஜீவாத்மாவைக் குறிக்கும் பதம் மூலமாக பரமாத்மாவைக் கூறுவதற்கான காரணத்தை அடுத்த (இரண்டு) ஸூத்ரங்களில் உரைக்கிறார்.

**1-4-20 ப்ரதிஜ்ஞா ஸித்தேர் லிங்கம் ஆச்மரத்ய:**

**பொருள்** - ஒன்றை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததாகும் என்பது உறுதியாகும் பொருட்டு, ஜீவாத்மாவைக் கூறும் பதத்தால் பரமாத்மாவை கூறுவது அடையாளமாகும் என்று ஆச்மரத்யர் கூறுகிறார் (இந்தக் கருத்தை யாதவப்ரகாசர் ஏற்கிறார். ஜீவாத்மாவைக் குறிக்கும் பதம் மூலம் பரமாத்மா கூறப்பட்டதை ஏற்றாலும், இந்த ஸூத்ரத்தில் கூறும் காரணத்தை ஸூத்ரகாரர் ஏற்கவில்லை. ஆகவே இது பூர்வபக்ஷ ஸூத்ரம் போன்றதே ஆகும்).

**வேதாந்தஸாரம்** - ப்ரு. (4-5-6) – ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: – அந்த ஆத்மாவே காணப்படவேண்டியது – என்பதன் மூலம் கூறப்பட்ட கருத்தான ""ஒன்றை அறிந்தால் அனைத்தைக் குறித்தும் அறிந்ததாகிறது" என்ற உறுதியான கருத்தானது மெய்ப்படும் விதமாகவே, ஜீவனை எந்தப் பதம் குறிக்கிறதோ அந்தப் பதத்தால் பரமாத்மாவும் கூறப்படுகிறது. இப்படியே ஆச்மரத்யர் என்ற ஆசார்யர் எண்ணுகிறார். அதாவது, ஜீவாத்மாக்கள் பரமாத்மாவின் கார்யமாக உள்ளதால் அவனுக்கு அடங்கியவர்களே என்பதால், அவர்கள் பரமாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவர் அல்லர் என்பதை உணர்த்தவே ஜீவாத்மாவைக் குறிக்கும் பதம் மூலம் பரமாத்மா கூறப்படுகிறான்.

**1-4-21 உத்க்ரமிஷ்யத ஏவம் பாவாத் இதி ஔடுலோமி:**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) சரீரத்திலிருந்து புறப்பட்டு மோக்ஷம் அடையும்போது இவன் ப்ரஹ்மமாகவே ஆவதால் (இங்கு ஜீவனைக் குறிக்கும்

பதங்கள் பரமாத்மாவைக் குறிக்கும்) என்று ஔடுலோமி கருதுகிறார் (இது கடந்த ஸூத்ரத்தில் கூறப்பட்ட கருத்திற்கான மறுப்பாக உள்ளது. இதனை பாஸ்கரரும், ஆதிசங்கரரும் ஏற்கிறார்கள். ஜீவாத்மாவைக் குறிக்கும் பதம் மூலம் பரமாத்மா கூறப்பட்டதை ஏற்றாலும், இந்த ஸூத்ரத்தில் கூறும் காரணத்தை ஸூத்ரகாரர் ஏற்கவில்லை. ஆகவே இது பூர்வபக்ஷ ஸூத்ரம் போன்றதே ஆகும்).

**வேதாந்தஸாரம்** - சரீரத்தை விட்டுக் கிளம்பிய ஜீவாத்மா, பரமாத்மாவின் நிலையை அடைகிறான். ஆகவே ஜீவாத்மாவைக் குறிக்கும் சொற்களால் பரமாத்மா கூறப்படுகிறான் என ஔடுலோமி என்ற ஆசார்யர் கருதுகிறார்.

**1-4-22 அவஸ்திதே: இதி காசக்ருத்ஸ்ந:**

**பொருள்** – "பரமாத்மா ஜீவாத்மாவிற்குள் நிற்பதால்", என்று காசக்ருத்ஸ்நர் கருதுகிறார்.

**வேதாந்தஸாரம்** (இது கடந்த இரண்டு ஸூத்ரங்களில் கூறப்பட்ட அனைத்தையும் மறுப்பதாகிய பரமஸித்தாந்தம் எனப்படும்) – அதாவது, ப்ரு. (3-7-22) - ய ஆத்மநி திஷ்டந் ஆத்மந: அந்தர: - யார் இந்த ஆத்மாவில் உள்ளானோ – என்பது போன்ற வாக்கியங்கள் மூலம், அனைத்து ஜீவாத்மாக்களுக்கும் ஆத்மாவாக ப்ரஹ்மம் உள்ளது; இதன் காரணமாகவே, ப்ரஹ்மமானது ஜீவாத்மாவைக் குறிக்கும் சொல்லால் கூறப்படுகிறது என்று காசக்ருத்ஸ்நர் என்னும் ஆசார்யர் கருதுகிறார். கடந்த இரு ஸூத்ரங்களில், இரண்டு மதங்களுடைய கருத்துக்களை உரைத்து, அவற்றை இங்கு மறுத்த காரணத்தால், இங்கு கூறப்பட்டதே ஸூத்ரகாரருடைய கருத்து என்றாகிறது. மேலும் இந்த ஸூத்ரத்தில் கூறப்பட்ட கருத்தை மறுத்து வேறு எதனையும் அவர் கூறவில்லை. ஆகவே இதுவே ஸூத்ரகாரருடைய முடிவு என நிச்சயிக்கப்படுகிறது.

## அதிகரணம் - 7- ப்ரக்ருதியதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ப்ரஹ்மமே ஜகத்திற்கு நிமித்தகாரணமாக மட்டுமே அல்லாமல், உபாதானக் காரணமாகவும் உள்ளது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**1-4-23 ப்ரக்ருதி: ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்த அநுபரோதாத்**

**பொருள்** - ப்ரஹ்மமே உபாதானக் காரணம் என்றால் மட்டுமே, உறுதிபட உரைக்கும் வாக்கியங்களும் உதாரணங்களும் முரண்படாமல் இருக்கும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – பரப்ரஹ்மமானது ஜகத்தின் உபாதானக் காரணம் மட்டுமே ஆகும், நிமித்த காரணம் அல்ல (மண்பானைக்கு களிமண் என்பது உபாதானக் காரணம், குயவன் நிமித்தகாரணம்).

**குறிப்பு** – இதனை மறுக்கிறார். இது வேதாந்தஸாரத்தின் பகுதி அல்ல. விளக்குவதற்காகத் தரப்பட்டது. ப்ரஹ்மமானது இந்த ஜகத்தின் நிமித்தகாரணம் மட்டுமே ஆகும் என்று கூறினால், அந்த ப்ரஹ்மத்தைப் பற்றி அறிந்தால், ஜகத்தைக் குறித்த அனைத்தையுமே அறிந்ததாகாது. ஒரு குயவனைப் பற்றி அறிந்தால், குடம் குறித்த அறிவு ஏற்படுவதில்லை அல்லவோ?

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. சாந். (6-1-3) - ஸ்தப்தோ அஸி உத தம் ஆதேசம் அப்ராக்ஷ்யோ யேந அச்ருதம் ச்ருதம் பவதி – எதனைக் குறித்துக் கேட்டால் கேட்கப்படாதவையும் கேட்கப்பட்டதாக ஆகிறதோ, அதனைக் குறித்துக் கேட்டாயா – என்னும் வாக்கியமானது, "அனைத்தையும் நியமிப்பவனும், நிமித்தகாரணமும் ஆகிய ப்ரஹ்மத்தைக் குறித்து அறிந்தால், சேதந அசேதநங்கள் அடங்கியதான இந்த ஜகத் முழுவதும் அறியப்பட்டதாகிறது", என்று கூறுகிறது. இங்குள்ள ப்ரதிஜ்ஞை, "அனைத்தையும் நியமிப்பவனைக் குறித்து அறிந்தால், இவை அனைத்தைக் குறித்தும் அறிந்ததாகிறது", என்பதே ஆகும். இந்த இடத்தில் களிமண் என்பது உதாரணமாக எடுக்கப்பட்டுள்ளது (அதாவது களிமண்ணைக் குறித்து அறிந்தால், மண்ணால் செய்யப்பட்ட அனைத்தைக் குறித்தும் அறிந்ததாகிறது). ப்ரதிஜ்ஞை மற்றும் உதாரணம் ஆகியவற்றுக்கு இடையில் முரண்பாடு ஏற்படக்கூடாது என்றால், மேலே கூறப்பட்ட உண்மையை (ப்ரஹ்மமே உபாதானக்காரணம் மற்றும் நிமித்தகாரணம்) ஏற்கவேண்டும். மேலே உள்ள உபநிஷத் வரியில் காணப்படும் "ஆதேச" என்பது நியமிப்பவனைக் குறிக்கும்; அவனால் இந்த அனைத்தும் ஆளப்படுகிறது. "ஆதேச" என்றால் உயர்ந்த சாஸநம் (நாம் அரசியல் சாஸநம் என்று கூறுகிறோம் அல்லவா) ஆகும். இதனை, ப்ரு. (3-

8-9) - ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்க்கி - கார்க்கி! இந்த அக்ஷரத்தின் உயர்ந்த கட்டளையால்தான் – என்பதன் மூலம் அறியலாம்.

**1-4-24 அபித்யோப்தேசாத் ச**

**பொருள் -** ப்ரஹ்மம், தானே ஸங்கல்பிப்பதாகக் கூறுவதால்.

**வேதாந்தஸாரம்** – சாந். (6-2-3) - தத் ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய – "நான் பலவாகக் கடவேன்", என்று ஸங்கல்பித்தது – என்பது போன்ற வரிகளின் மூலம், "நிமித்தகாரணமாக உள்ள ப்ரஹ்மமே, சேதநம் மற்றும் அசேதநம் ஆகியவை நிறைந்த இந்த ஜகத்தின் காரணமாவேன் என்று ஸங்கல்பம் செய்து, ஜகத் ரூபமாக நின்றது", என்பதை அறியலாம். ஆகவே (நிமித்தகாரணமாக உள்ள) ப்ரஹ்மமே, ஜகத்தின் உபாதானக்காரணமாகவும் உள்ளது.

**1-4-25 ஸாக்ஷாத் ச உபாயாம்நாநாத்**

**பொருள்** - இந்த இரண்டுவிதமாகவும் (நிமித்தகாரணம் மற்றும் உபாதானக் காரணம்) உள்ளதாக ச்ருதிகள் நேரடியாகவே கூறுவதால்.

**வேதாந்தஸாரம்** – தை. ப்ரா. (2-8-9) - ப்ரஹ்ம வநம் ப்ரஹ்ம ஸ வ்ருக்ஷ ஆஸீத் – ப்ரஹ்மமே அந்த வனம், ப்ரஹ்மமே அந்த மரம் – என்றும், தை. ப்ரா. (2-8-9) - ப்ரஹ்மாத் யதிஷ்டத் புவநாநி தாரயந் – ப்ரஹ்மமே இந்த உலகங்களைத் தாங்கி நிற்கிறது – என்றும் உள்ல வாக்கியங்கள் மூலம் ப்ரஹ்மமே உபாதானக்காரணம் மற்றும் நிமித்தகாரணம் ஆகும் என அறியலாம். இந்தக் கருத்தானது அந்த வாக்கியங்களில் உள்ள "ஸ்வ" என்னும் பதம் மூலம் தேறுகிறது.

**1-4-26 ஆத்மக்ருதே:**

**பொருள்** - தன்னைத்தானே ஸ்ருஷ்டிப்பதாகக் கூறுவதால்.

**வேதாந்தஸாரம்** – தை. (2-6) – ஸோகாமயத – அது விரும்பியது – என்பதன் மூலம் ப்ரஹ்மம் நிமித்தகாரணம் என்றாகிறது. தொடர்ந்து உள்ள வரியான, தை. (2-7) – தத் ஆத்மாநம் ஸ்வயம்க்ருதே - ப்ரஹ்மம் தன்னைத்தானே ஸ்ருஷ்டித்துக் கொண்டது - என்பதன் மூலம் ப்ரஹ்மமே தன்னை ஜகத் ரூபமாக அமைத்துக் கொள்வதை அறியலாம். இந்த வாக்கியங்கள் மூலம், பரமபுருஷனே இந்த ஜகத்தின் நிமித்தகாரணம் மற்றும் உபாதானக்காரணம் என்றாகிறான்.

பரப்ரஹ்மமானது "எந்தவிதமான களங்களும் அற்றது, ஸத்யஸங்கல்பம் முதலான தன்மைகள் கொண்டது" என்பதாக உள்ளது. ஆனால், அத்தகைய பரப்ரஹ்மமே இத்தகைய தன்மைகளுக்கு எதிர்த்தட்டாகவும், அனைத்துவிதமான தாழ்வுகளுக்கும் இருப்பிடமாகவும் உள்ள ஜகத் ரூபத்தையும் எடுத்துக் கொள்கிறது. இவ்விதம் உள்ள முரண்பாடு எப்படிப் பொருந்தும் என்னும் சந்தேகத்திற்கு அடுத்த ஸூத்ரத்தில் விடை அளிக்கிறார்.

**1-4-27 பரிணாமாத்**

**பொருள்** - பரிணாமம் (மாற்றம்) காரணமாக ஆகும்.

**வேதாந்தஸாரம்** – ச்ருதிகள் பரிணாமத்தைக் கூறுவதால், இங்கு விரோதம் இல்லை. காரணநிலையில் ப்ரஹ்மம் உள்ளபோது, பெயர் மற்றும் உருவம் ஆகியவை ஏதும் இன்றி, ஸூக்ஷ்மமான நிலையில் உள்ள சித் மற்றும் அசித் வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்டுள்ளது. அப்போது அந்தப் பரமபுருஷன், தனது சரீரமாகவே உள்ளதான சித் மற்றும் அசித் வஸ்துக்கள் தனித்தனியான பெயர் மற்றும் உருவம் ஆகியவற்றை அடையவேண்டும் என்று ஸங்கல்பம் செய்கிறான்; தை. (2-6) – ஸோ காமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேய – அந்த ப்ரஹ்மம், "நான் பலவாகக் கடவேன்", என்று ஸங்கல்பித்து ஸ்ருஷ்டித்தது – என்பது காணலாம். இதன் விளைவாக தனது சரீரமாகவும், ஸூக்ஷ்மமாகவும் உள்ள சித் மற்றும் அசித் வஸ்துக்களைத் தன்னிடமிருந்து பிரிக்கிறான்; தை. (2-6) - இதம் ஸர்வம் அஸ்ருஜத | யதிதம் கிஞ்ச - அது இந்த அனைத்தையும் ஸ்ருஷ்டித்தது – என்பது காண்க. இதனைத் தொடர்ந்து, தனது சரீரமாகவே உள்ளதும், ஸ்தூலமாக உள்ளதும், தன்னைக் காட்டிலும் வேறுபட்டதும் ஆகிய சித் மற்றும் அசித்

வஸ்துக்களின் உள்ளே புகுகிறான்; தை. (2-6) - தத் ஸ்ருஷ்ட்வா | தத் ஏவ அநுப்ரவிசத் - இப்படியாக ஸ்ருஷ்டித்தவுடன் இவை அனைத்திற்குள்ளும் புகுந்தது – என்பது காண்க. அதன் பின்னர் அவன் பலவிதமான வஸ்துக்களாகப் பரிணமிக்கிறான் என்று கூறப்படுகிறது; தை. (2-6) – ஸத் ச த்யத் ச அபவத் | நிருக்தம் ச அநிருக்தம் ச | நிலயநம் ச அநிலயநம் ச | விஜ்ஞாநம் ச அவிஜ்ஞாநம் ச | ஸத்யம் ச அந்ருதம் ச ஸத்யம் அபவத் – புகுந்த பின்னர், "ஸத் - த்யத்" என்றும், "இது" என்று காண்பிக்கக் கூடிய வஸ்துக்களாகவும், "இது" என்று காண்பிக்க இயலாத வஸ்துக்களாகவும், அனைத்திற்கும் ஆதாரமாகவும், ஆதாரமாக இல்லாததாகவும், சேதனமாகவும், அசேதனமாகவும், மாறுபடாததாகவும், மாறுபடுவதாகவும் ஆனது; இப்படியாக ஆன பின்னர் (அல்லது பின்னரும்) தனது ஸ்வரூபத்துடன் இருந்தது – என்பது காண்க. ஆகவே இங்கு எந்தவிதமான விரோதமும் இல்லை. பிரிவற்ற நிலையில் கூட ஜீவனும் அவனுடைய கர்மங்களும் ஸூக்ஷ்ம ரூபமாக உள்ளதை ப்ர. ஸூ. (2-1-35) - ந கர்ம அவிபாகாத் இதி சேத் ந அநாதித்வாத் உபபத்யதே ச அபி உபலப்யதே ச - ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மம் தவிர்த்து ஏதும் இல்லை என்பதால், ஜீவாத்மா இல்லையாகையால், கர்மமும் இல்லை என்று கூறினால், சரியல்ல; ஜீவாத்மா அநாதி என்பதால் பொருந்தும் – என்கிறது.

**1-4-28 யோநிச்ச ஹி கீயதே**

**பொருள்** - உலகின் யோநி (பிறப்பிடம்) என்று கூறப்படுவதாலும்.

**வேதாந்தஸாரம்** - முண். (1-1-6) - யத் பூதயோநிம் - எதனை அனைத்திற்கும் யோநியாகக் காண்கிறார்களோ – என்பதன் மூலம் அவனே யோநியாகக் கூறப்படுகிறான். ஆகவே அவனே உபாதானக்காரணமும் ஆகிறான்.

**1-4-29 ஏதேந ஸர்வே வ்யாக்யாதா வ்யாக்யாதா:**

**பொருள்** – இவை அனைத்தாலும், அனைத்து வாக்கியங்களும் விளக்கப்பட்டன.

**வேதாந்தஸாரம்** – "ஜந்மாதி அஸ்ய யத:" என்னும் ஸூத்ரம் தொடங்கி, இதுவரை கூறப்பட்ட அனைத்து ந்யாயங்களாலும், "அனைத்து வேதாந்தங்களும் பரப்ரஹ்மத்தையே

கூறுகின்றன” என்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. “வ்யாக்யாதா = வ்யாக்யானம் செய்யப்பட்டது” என்று இரண்டுமுறை கூறப்பட்டதன் மூலம், இந்த அத்யாயம் முடிகிறது என்பது உணர்த்தப்பட்டது.

வேதாந்தஸாரம் முதல் அத்யாயம் ஸம்பூர்ணம்

## அத்யாயம் – 2 – அவிரோத அத்யாயம்

### பாதம் – 1 – ஸ்ம்ருதி பாதம்

இந்தப் பாதத்தில் கபில ஸ்ம்ருதி முதலான ஸ்ம்ருதிகள் மூலமாக இந்த அத்யாயத்தில் ஆராயப்படும் விஷயத்திற்கு எந்தவிதமான விரோதங்களும் இல்லை என்று நிரூபிக்கப்பட உள்ளது.

### அதிகரணம் – 1 – ஸ்ம்ருதி அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – கபில மஹரிஷியால் இயற்றப்பட்ட ஸாங்க்ய ஸ்ம்ருதி என்பது மயக்கத்தால் இயற்றப்பட்டது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**2-1-1 ஸ்ம்ருதி அநவகாச தோஷ ப்ரஸங்க: இதி சேத் ந அந்ய ஸ்ம்ருதி அநவகாச தோஷ ப்ரஸங்காத்**

**பொருள்** – (ப்ரஹ்மமே அனைத்திற்கும் காரணம் என்பதை ஏற்றால்) கபில ஸ்ம்ருதி பயனற்றுப் போகும் என்னும் தோஷம் உண்டாகும் என்று கூறினால், (ப்ரதானமே அனைத்திற்கும் காரணம் என்று கபில ஸ்ம்ருதி கூறியதை ஏற்றால்) மநு முதலான ஸ்ம்ருதிகள் பயனற்றுப் போகும் என்னும் தோஷம் உண்டாகும் என்பதால், முதலில் கூறியது பொருந்தாது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – வேதாந்தங்களின் ஆழ்பொருளை அறிய உபப்ரும்ஹணங்களின் துணை தேவைப்படுகிறது (உபப்ரும்ஹணம் – வேதங்களின் ஆழ்பொருளை விளக்குவதற்காக ஏற்பட்ட இதிகாசங்கள், புராணங்கள் போன்றவை

ஆகும்). ஆகவே கபில ஸ்ம்ருதியின் துணை கொண்டு, வேதாந்த வாக்கியங்களானவை ப்ரதானத்தையே (அல்லது ப்ரக்ருதி) ஜகத்காரணமாக ஏற்கவேண்டும். இவ்விதம் இல்லையென்றால், கபில ஸ்ம்ருதியானது வேதாந்த வாக்கியங்களுக்குத் துணையான இல்லாத நூலாக இல்லை என்றாகி, அது பயனற்றதாகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. கபில ஸ்ம்ருதியை உபப்ரும்ஹணமாக ஏற்றால், வேதாந்தத்திற்கு விரோதமாக இல்லாத மநு முதலான பல ஸ்ம்ருதிகள் பயனற்றுப் போகும். வேதங்களை அறிய உபப்ரும்ஹணங்களின் துணை அவசியமே ஆகும்; ஆனால், வேதங்களில் கூறப்பட்ட ஆழ்பொருளை விரிவாக எடுத்துரைக்கும் ஸ்ம்ருதிகள் உள்ளபோது, வேதங்களுக்கு விரோதமாகப் பொருள் கூறும் ஸ்ம்ருதிகளை உபப்ரும்ஹணங்களாகக் கொள்ளக்கூடாது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஆனால் யோகீந்த்ரராகிய கபிலர் மற்ற ஸ்ம்ருதிகளை ஏற்பதில்லை. இவ்விதம் உள்ளபோது அவற்றை ஏற்பது எவ்விதத்தில் ந்யாயம் ஆகும்? இதற்கான பதிலை அடுத்த ஸூத்ரத்தில் கூறுகிறார்.

**2-1-2 இதரேஷாம் ச அநுபலப்தே:**

**பொருள்** – மற்ற ஸ்ம்ருதிகளை கூறியவர்களுக்கு (கபிலருக்கு உண்டான காட்சி) உண்டாகவில்லை என்பதால் (கபிலருடைய ஸ்ம்ருதி, வேதாந்தங்களுக்கு விளக்கம் தரவல்லதாகாது).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – மனு முதலான யோகீந்த்ரர்கள், வேதங்களுடைய ஆழ்பொருளை நேரடியாகவே அறிந்தவர்கள் ஆவர். அவர்கள் கபிலருடைய ஸித்தாந்தங்களை ஏற்பதில்லை. ஆகவே கபிலர் அறிந்தவை தவறே ஆகும்.

## அதிகரணம் – 2 – யோக ப்ரத்யுக்தி அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – நான்முகனால் இயற்றப்பட்ட யோகஸ்ம்ருதியை நிராகரித்தல்.

**2-1-3 ஏதேந யோக: ப்ரத்யுக்த:**

**பொருள்** – (கபில ஸ்ம்ருதியை நிராகரித்த) அதே வழியிலேயே யோகஸ்ம்ருதியும் தகுந்த பதில் கூறப்பட்டதானது.

**வேதாந்தஸாரம்** – ஹிரண்யகர்ப்பன் ஏற்படுத்திய யோக ஸ்ம்ருதியும், கபில ஸ்ம்ருதி போன்றே, வேதங்களுக்கு விரோதமான கருத்துக்களைக் கொண்டதாகும். ஆகவே அதுவும் தள்ளப்படுகிறது.

## அதிகரணம் – 3 – விலக்ஷணத்வ அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – வேறுபட்ட பலவற்றையும் கொண்டுள்ள ஜகத்திற்கு ப்ரஹ்மம் காரணமாக இருப்பதில் குறையில்லை.

**2-1-4 ந விலக்ஷணத்வாத் அஸ்ய ததாத்வம் ச சப்தாத்**

**பொருள்** – (இது பூர்வபக்ஷ ஸூத்ரம் ஆகும்; அதாவது பூர்வபக்ஷத்தை மட்டுமே கொண்டுள்ளது) இந்த உலகம் ப்ரஹ்மத்தின் காரியம் அல்ல (ப்ரஹ்மத்தால் உண்டாக்கப்பட்டது அல்ல); இது ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டுள்ளதாலும், இவ்விதம் வேறுபட்டுள்ளதை சாஸ்த்ரத்தால் அறியலாம் என்பதாலும் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – இந்த ஜகத்தானது மாற்றங்களுக்கு இருப்பிடமாக உள்ளது; அஜ்ஞானம் நிரம்பியது; புருஷார்த்தங்களாக அல்லாதவற்றுக்கு இருப்பிடமாக உள்ளது. ஆகவே இந்த ஜகத்தானது ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறானதாக (வேறான தன்மைகள் கொண்டதாக) உள்ளதால், இது ப்ரஹ்மத்தின் கார்யமாக இருக்கமுடியாது.

இந்த இரண்டிற்கும் வேறுபாடுகள் உள்ளதை தைத். (2-6-3) – விஜ்ஞாநம் ச அவிஜ்ஞாநம் ச – சேதநம் எனவும், அசேதநம் எனவும் – என்பது போன்ற வாக்கியங்கள் கூறுகின்றன.

**2-1-5 அபிமாநி வ்யபதேசஸ்து விஶேஷாநுகதிப்யாம்**

**பொருள்** – [இது பூர்வபக்ஷம் மட்டுமே கொண்ட ஸூத்ரம் ஆகும்] ("பூமி உரைத்தது" முதலான இடங்களில் பூமி முதலானவற்றின்) அபிமான தேவதைகளே கூறப்படுகிறது; சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதாலும், உட்புகுவதாகக் கூறுவதாலும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – தைத். ஸம். (5-5-2-10) – தம் ப்ருதிவீ அப்ரவீத் - அவனை நோக்கி பூமி கூறியது – என்றும், தைத். ப்ரா. (3-1-5) – ஆபோ வா அகாமயந்த – தண்ணீர் உண்மையிலேயே விரும்பியது – என்றும் உள்ள வாக்கியங்களில், ஞானத்துடன் கூடிய வஸ்துக்கள் மட்டுமே செய்யக்கூடியதான சில கார்யங்களை, பூமி முதலானவை செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அந்தச் செயல்களைச் செய்வது அவற்றின் அபிமானி தேவதைகளே ஆகும்; ஏனென்றால், சாந். (6-3-2) – ஹந்த அஹம் இமா: திஸ்ரோ தேவதா: - நான் இந்த மூன்று தேவதைகளுக்குள்ளும் நுழைகிறேன் – என்ற வாக்கியத்தில் "தேவதா" என்பது போன்ற பதங்களால் சிறப்பாகக் கூறுவதைக் காணலாம். அசித் வஸ்துக்களில், அவற்றின் அபிமானி தேவதைகள் புகுகின்றன என்பதை ஐத. (1-2-4) – அக்நிர் வாக்பூத்வா முகம் ப்ராவிசத் – அக்னி வாக்காக முகத்தில் நுழைந்தது – என்னும் வாக்கியம் கூறுகிறது.

**2-1-6 த்ருஶ்யதே து**

**பொருள்** – காணப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (இதுவரை கூறப்பட்ட பூர்வபக்ஷ வாதங்களுக்குப் பதில் உரைக்கிறார்) கார்ய-காரணப் பொருள்களுக்கு இடையே வேறுபாடு இருந்தாலும், கார்ய-காரண ஸம்பந்தம் உள்ளதை நாம் காணலாம். தேனீக்களைக் காட்டிலும் வேறுபட்ட புழுக்கள் தேனியிலிருந்து உண்டாவதை நாம் காணலாம்.

**2-1-7 அஸத் இதி சேத் ந ப்ரதிஷேத மாத்ரத்வாத்**

**பொருள் –** (கார்ய காரண வேறுபாட்டினை மேலே கூறியபடி ஒப்புக் கொண்டால், கார்யம் காரணத்தில்) இல்லாமல் போய்விடும் என்று கூறினால், அது சரியல்ல. (கார்ய காரணங்கள்) ஒரே போன்று இருத்தல்வேண்டும் என்னும் விதியை மட்டுமே தள்ளுகிறோம்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** [கடந்த ஸூத்ரத்தில் கூறியபடி, கார்யமான ஜகத்தைக் காட்டிலும் காரணமான ப்ரஹ்மம் வேறுபட்டது என்று கூறினால், கார்ய காரணப் பொருள்கள் வெவ்வேறு என்று கூறப்பட்டதாகிறது] இவ்விதம் கொண்டால், காரணமான ப்ரஹ்மத்திடம் கார்யமான உலகம் இல்லை என்றே ஆகிறது [ஆக இதன் மூலம், இல்லாத ஒன்றிலிருந்தே உலகம் வெளிவந்தது என்றாகிவிடும். இது அஸத் கார்யவாதம் என்பதாகும் – இல்லாத ஒன்றிலிருந்து ஒரு பொருள் வெளிவருதல்].

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. கடந்த ஸூத்ரத்தில் கார்யகாரணங்களுக்கு இடையே ஒரே லக்ஷணம் (பண்புகள்) இருத்தல்வேண்டும் என்னும் விதி மட்டுமே நிராகரிக்கப்பட்டது. கார்யமும் காரணமும் ஒரே பொருளாக இருத்தல்வேண்டும் என்பது தள்ளப்படவில்லை (அதாவது காரணபூதமாக உள்ள ப்ரஹ்மமே தன்னை மாறுதலுக்கு உட்படுத்திக் கொண்டு தன்னைக் காட்டிலும் வேறுபட்ட உலகமாகத் தென்படுகிறது என்று கூறுவதை மறுக்கவில்லை).

**2-1-8 அபீதௌ தத்வத் ப்ரஸங்காத் அஸமஞ்ஜஸம்**

**பொருள் –** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ப்ரளயத்தின்போது உலகத்தைப் போன்றே (ப்ரஹ்மத்திற்கும் மாற்றம் அடைதல் என்னும் தோஷங்கள்) உண்டாகும் என்பதால், (வேதாந்த வாக்கியங்கள்) பொருந்தாமல் போகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** ப்ரஹ்மமும் ஜகத்தும் ஒரே வஸ்து என்று கொண்டால், ஜகத்திற்கு உரியதான "மாற்றம் அடையும் தன்மை" முதலானவை ப்ரஹ்மத்திற்கும்

உள்ளது என்றாகும். இதன் விளைவாக, வேதாந்த வாக்கியங்கள் அனைத்தும் பொருந்தாமல் போகும்.

**2-1-9 ந து த்ருஷ்டாந்தபாவாத்**

**பொருள்** – (ப்ரஹ்மத்திடம் தோஷங்கள் ஏற்படாது என்பதால்) வேதாந்த வாக்கியங்கள் பொருந்தாத வாக்கியங்கள் ஆகாது; உதாரணங்கள் உள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (கடந்த ஸூத்ர பூர்வபக்ஷத்திற்கு உரியது) அப்படி அல்ல. ப்ரு. (3-7-22) - யஸ்ய ஆத்மா சரீரம் – யாருக்கு ஆத்மா சரீரமோ – என்றும், ஸுபால. (7-1) - யஸ்ய அவ்யக்தம் சரீரம் - யாருக்கு அவ்யக்தம் சரீரமோ – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலம், ப்ரஹ்மமானது அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்டுள்ளது என அறியலாம். ஒரே வஸ்துவானது, கார்யம் மற்றும் காரணம் ஆகிய (இரண்டு வேறுபட்ட) நிலைகளில் உள்ளபோது, குணங்கள் மற்றும் தோஷங்கள் ஆகிய இரண்டும் உண்டாவதற்கு உதாரணங்கள் உள்ளன. அதாவது, "மனித சரீரத்தில் ஜீவாத்மா உள்ளது. அந்தச் சரீரமானது குழந்தைப் பருவம், வாலிபம், வயோதிகம் என்பதான மற்றங்களை அடைகிறது". இங்குள்ள "குழந்தைப் பருவம், வாலிபம்" ஆகியவை சரீரத்தில் மட்டுமே காணப்படுகின்றன. ஞானம், ஸுகம் முதலானவை ஆத்மாவில் உள்ளன. இதனைப் போன்றே, அஜ்ஞானம் மற்றும் மாற்றம் அடையும் தன்மைகள் முதலானவை, அவனுடைய சரீரமாக உள்ள சித் மற்றும் அசித் வஸ்துக்களில் உள்ளன. சித் மற்றும் அசித் வஸ்துக்களுடைய ஆத்மாவாக உள்ள ப்ரஹ்மமானது, எந்தவிதமான தோஷங்களும் அற்றதாகவும், அனைத்தும் அறிந்ததாகவும் உள்ளது. மேலும் அது மாற்றம் அடையாமலும், ஸத்யஸங்கல்பம் கொண்டதாகவும் உள்ளது.

**2-1-10 ஸ்வ பக்ஷ தோஷாச்ச**

**பொருள்** – ஸாங்க்யர்களுடைய கருத்திலும் தோஷம் உள்ளதால் (ப்ரஹ்மமே அனைத்திற்கும் காரணப்பொருள் என்பதே ஏற்கத்தக்கது).

**வேதாந்தஸாரம்** – ப்ரதானத்தை ஜகத்காரணமாகக் கூறும் (ஸாங்க்ய) ஸித்தாந்தத்தில் தோஷம் உள்ளது; ஆகவே வேதாந்தத்தையே ஏற்கவேண்டும். ப்ரதானத்தை ஜகத்காரணமாகக் கூறும் மதத்தில், "புருஷனின் (இது ஜீவாத்மாவைக் குறிக்கும்) மேற்பார்வையில் ப்ரதானம் மாற்றம் அடைகிறது. ஆனால் புருஷன் மாறுபடாமல் உள்ளான்", என்று கூறப்படுகிறது. ஒன்றின் பண்புகளை மற்றொன்றின் மீது ஏறிட்டுக் கூறுவது "அத்யாஸம்" எனப்படும். மாற்றம் அடையாத புருஷன் விஷயத்தில், அவனிடம் இல்லாத பண்புகளை ஏற்றிக் கூறுதல் என்பது இயலாது (காரணம் அவ்விதம் உரைத்தால், மாறுபாடுகள் உண்டு என்றாகிவிடும்). ஆனால் இவர்கள் கருத்தை ஏற்றால், மாற்றம் அடையாத புருஷனுக்கு, அசேதநமாக உள்ள ப்ரக்ருதியின் பண்புகளை ஏற்றி (அதாவது அத்யாஸமாக) உரைக்கவேண்டியதாகிறது. இது பொருந்தாது.

**2-1-11 தர்க்காப்ரதிஷ்டாநாத் அபி**

**பொருள்** – தர்க்கம் (தர்க்கம் என்றால் சொற்கள் கொண்டு வாதம் செய்வதில் உள்ள ஒருவகை) ஒரு நிலையில் நிற்காத காரணத்தால் (ப்ரஹ்மமே அனைத்திற்கும் காரணப்பொருள் என்பதே ஏற்கத்தக்கது).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரதானமே ஜகத்காரணம் என்னும் வாதமானது குதர்க்கத்தால் உண்டானது ஆகும். இந்த வாதமானது நிலையானது அல்ல (அதாவது வேறு வாதம் கொண்டு தள்ளப்படலாம்). ஆகவே ப்ரதானமானது ஜகத்காரணம் அல்ல.

**2-1-12 அந்யதா அநுமேயம் இதி சேத் ஏவம் அபி அநிர்மோக்ஷ ப்ரஸங்க:**

**பொருள்** – (ப்ரதானத்தை ஜகத்காரணம் என்று) வேறுவிதத்தில் அனுமானம் செய்யலாம் என்றால்; இவ்விதம் அனுமானம் செய்தாலும், "தர்க்கம் நிலையாக இருக்காது" என்னும் தோஷத்திலிருந்து விடுதலை இல்லை.

**வேதாந்தஸாரம்** – "வேறுவிதமான வாதங்களைக் கொண்டு ப்ரதானமே ஜகத்காரணம் ஆகும் என நாங்கள் அனுமானம் செய்கிறோம்", என்று உரைக்கலாம். ஆனாலும் முன்பு நாங்கள் எழுப்பிய ஆக்ஷேபங்களைத் தள்ள இயலாது; அதாவது இந்த அனுமானத்தையும்

கண்டிக்கவல்ல வலிமை கொண்ட ஒருவன் வரக்கூடும் என்பதால், உங்களுடைய (பூர்வபக்ஷி) தர்க்கத்திற்கு நிலையாக இருத்தல் என்பது இல்லாமல் போகிறது.

## அதிகரணம் – 4 – ஶிஷ்டா பரிக்ரஹ அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – பரமாணுவே ஜகத்காரணம் என்பதான நையாயிக மதம், கணாதருடைய வைசேஷிக மதம், சமணமதம் போன்ற அனைத்தும் தள்ளப்படுகின்றன.

**2-1-13 ஏதேந ஶிஷ்டாப்ரிக்ரஹா அபி வ்யாக்யாதா:**

**பொருள்** – இதன் மூலம் (ப்ரதானமே ஜகத்காரணம் என்னும் வாதம் தள்ளப்பட்ட அதே காரணத்தால்), வேதங்களால் ஏற்கப்படாத மற்ற அனைத்து வாதங்களும் தள்ளப்பட்டன.

**வேதாந்தஸாரம்** – எந்த வழியின் மூலம் வேதங்களால் ஏற்கப்படாத ஸாங்க்யர்களுடைய (ஜகத்காரணம் குறித்த) வாதங்கள் தள்ளப்பட்டனவோ அதே வழியின் மூலம் கணபக்ஷர் (வைசேஷிகர்), அக்ஷபாதர் (கௌதமர்), க்ஷபணகர் (ஜைநர்) ஆகியோர்களுடைய ஸ்ம்ருதிகளும் தள்ளப்படுகின்றன.

## அதிகரணம் – 5 – போக்த்ராபத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஜீவாத்மாவுடைய ஸுகதுக்கங்கள் கர்மம் காரணமாகவே உண்டாவதால், ப்ரஹ்மத்திற்கு ஸுகதுக்கங்கள் இல்லை என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**2-1-14 போக்த்ராபத்தே: அவிபாகஶ்சேத் ஸ்யாத் லோகவத்**

**பொருள்** – (சேதந அசேதநங்கள் என்னும் சரீரம் கொண்டதால்) ப்ரஹ்மத்திற்கும் ஸுகதுக்கங்கள் உண்டாகும் என்பதால் (ஜீவாத்மா பரமாத்மா) வேறுபாடு இல்லை என்றால், (வேறுபாடு உள்ளதை) உலகத்தில் நாம் காணலாம்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ப்ரஹ்மமானது அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்டுள்ளது என்னும்போது, "ப்ரஹ்மானது சரீரத்துடன் உள்ளது" என்றாகிறது. இதனால், இன்பதுன்பங்களை அனுபவித்தல் என்னும் நிலை வந்துவிடும். சரீரத்துடன் கூடியவனாகிய ஜீவாத்மா எத்தகைய ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறானோ, அதே போன்று ப்ரஹ்மத்திற்கும் தனது சரீரம் காரணமாக வந்து சேர்வதான ஸுகதுக்கங்களைத் தடுக்க இயலாது. ஆகவே ஜீவனைக் காட்டிலும் வேறானது என்னும் வேறுபாடு இல்லை என்றாகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. எந்தவிதமான தாழ்வுகளும் அற்றது மற்றும் அனைத்துவிதமான கல்யாணகுணங்களுக்கும் இருப்பிடம் என்பது போன்ற பல விஷயங்களில் ப்ரஹ்மமானது ஜீவாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டதே ஆகும். துக்க அனுபவத்திற்கு சரீர ஸம்பந்தம் காரணம் ஆகாது; மற்றவர்களுடைய வசப்பட்டிருத்தலே துக்க அனுபவம் உண்டாக்கக் காரணம் ஆகும். ஒரு அரசன் சரீரத்துடன் கூடியவனாக உள்ளபோதிலும், அவன் தனக்கு மட்டுமே வசப்பட்டவனாக இருப்பதால், தனது கட்டளையைத் தானே மீறுவதால் உண்டாகக்கூடிய துக்கத்தை அவன் அனுபவிப்பதில்லை; மாறாக, மற்றவர்களுக்கு அந்த நிலை உண்டாகிறது.

## அதிகரணம் – 6 - ஆரம்பணாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - காரணமாக உள்ள ப்ரஹ்மத்தைக் காட்டிலும் அதன் கார்யமாக உள்ள ஜகத் வேறுபடாதது ஆகும் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**2-1-15 தத் அநந்யத்வம் ஆரம்பண சப்தாதிப்ய:**

**பொருள்** - காரணமான ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபடாமல் உள்ளது; இது "வாசாரம்பணம்" என்பதால் விளங்குகிறது.

**வேதாந்தஸாரம்** – ப்ரஹ்மத்தின் கார்யமாக உள்ள ஜகத்தானது காரணமான ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபடாமல் உள்ளது. இந்தக் கருத்தானது இதனை விவரிக்கின்ற வாக்கியங்கள் மூலம் புலப்படுகிறது. அந்த வாக்கியங்களானவை: சாந். (6-

1-4) - வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம் - வாக்கை முன்னிட்டுக் கொண்டு உண்டாகும் செய்கைகள் நிகழ்வதற்காகவே மண் என்பதான காரணப்பொருள் உருவ மாறுபாட்டையும், குடம் என்ற பெயர் மாறுபாட்டையும் அடைகிறது; கார்யப் பொருளாகிய குடம் உண்மையில் மண்ணாகவே உள்ளது - என்றும், சாந். (6-2-1) – ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் ஏகம் ஏவ அத்விதீயம் - இந்த உலகம் முதலில் ஸத் என்ற ப்ரஹ்மமாக மட்டுமே இருந்தது, இரண்டாவது ஏதும் அற்றதாக இந்த ஒன்று மட்டுமே இருந்தது - என்றும், சாந். (6-2-3) - தத் ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜயேய இதி தத் தேஜோ அஸ்ருஜத – "நான் பலவாகக் கடவேன்" என்று ஸங்கல்பம் செய்தது, தேஜஸ்ஸைப் படைத்தது - என்றும், சாந். (6-8-4) - ஐததாத்ம்யம் இதம் ஸர்வம் - இவை அனைத்தும் தங்கள் ஆத்மாவாக – என்றும், சாந். (6-8-7) – தத் த்வம் அஸி – நீயே அதுவாக உள்ளாய் – என்றும் கூறப்படும் பல வாக்கியங்கள் ஆகும்.

**2-1-16 பாவே ச உபலப்தே:**

**பொருள்** - கார்யநிலையிலும் காரணநிலையின் தொடர்ச்சி உள்ளதால்.

**வேதாந்தஸாரம்** – குடம் முதலான கார்யப்பொருள்களில், "இது அந்த மண்ணே ஆகும்" என்பதான காரணப்பொருளுடைய தொடர்ச்சி உள்ளது. ஆகவே கார்யம் என்பது காரணத்தைக் காட்டிலும் வேறானது அல்ல.

**2-1-17 ஸத்வாத் ச அபரஸ்ய**

**பொருள்** – காரணப்பொருளைக் காட்டிலும் வேறுபட்ட கார்யப்பொருளும் காரணப்பொருளாகவே இருந்ததைக் காண்பதால் (இரண்டும் ஒன்றே)

**வேதாந்தஸாரம்** – கார்யமானது காரணத்தில் ஒன்றியுள்ளதால், இவை இரண்டும் வேறானது அல்ல. குடமானது முன்பு மண்ணாக இருந்தது என அறியப்படுகிறது. ஆகவே குடம் என்பது மண்ணின் மாறுபாடாகவே உள்ளது.

**2-1-18 அஸத் வ்யபதேஶாத் ந இதி சேத் ந தர்மாந்தரேண வாக்யஶேஷாத் யுக்தே: சப்தாந்தராச்ச**

**பொருள்** - "இந்த உலகம் அஸத்தாக இருந்தது" என்று வேதவாக்கியம் கூறுவதால், கார்யம் காரணத்தில் உள்ளது என்று கூறுவது தவறாகும் என்று உரைக்கமுடியாது; காரணம், அங்கு வேறு ஒன்றின் காரணமாகவே அஸத் எனப்பட்டது. இந்த விஷயம் ஒரு வாக்கியத்தின் மீதப்பகுதியிலிருந்தும், மற்றொரு வாக்கியத்திலிருந்தும் தேறுகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – தை. ப்ரா. (2-2-9) - இதம் வா அக்ரே ந ஏவ கிஞ்சநாஸீத் - முதலில் இந்த ஏதும் இல்லை – என்னும் வாக்கியத்தின் மூலம், "தொடக்கத்தில் கார்யம் ஏதும் இல்லை" என்றே அறியப்படுகிறது. ஆகவே, கார்யமானது காரணத்தில் ஒன்றியுள்ளது எனக் கூற இயலாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. அங்கு "இல்லை" என்று கூறப்பட்டதன் கருத்து என்னவென்றால், "ஸ்தூலமாக உள்ள நிலை இன்றி ஸூக்ஷ்மமான நிலையில் உள்ளது" என்று வேறுவிதமான தர்மத்துடன் வஸ்துக்கள் உள்ளதைக் கூறுவதாகும். ஏன்? அந்த வாக்கியத்தின் எஞ்சிய பகுதியானது, தைத். ப்ரா. (2-2-9) - தத் அஸத் ஏவ ஸந்மநோ அகுருத ஸ்யாம் – அந்த அஸத்தானது நான் பலவாகக் கடவேன் என்று ஸங்கல்பம் செய்தது - என்று உள்ளது. தொடர்ந்து உள்ளபடி இருக்கின்ற வஸ்துவே இவ்விதம் ஸங்கல்பம் செய்ய இயலும். யுக்தி மூலமாகவும் அஸத் என்பது ஒரு கார்யப்பொருளின் வேறு நிலையே ஆகும் என்பதை அறியலாம் (அதாவது, தகுந்த யுக்தி மூலம் ஸத் மற்றும் அஸத் ஆகிய இரண்டுமே பொருள்களின் தர்மங்கள் என்று நாம் அறியலாம்). உதாரணமாக மண் உருண்டை, குடம், கபாலம் (உடைந்த குடத்தின் ஓடுகள்) ஆகியவை அனைத்தும் ஒன்றுக்கொன்று முரணான பண்புகளைக் கொண்டதாக உள்ளன; இதன் விளைவாகவே நாம், "குடம் முன்பு இல்லை (அதாவது மண்ணானது உருண்டை என்னும் நிலையில் உள்ளபோது அங்கு குடம் இல்லை), இப்போது குடம் உள்ளது (மண்ணானது குடமாக மாறிய பின்னர் குடம் உள்ளது), இனி இருக்கப்போகிறது" என்று கூறுகிறோம். இந்தக் கருத்தை ப்ரு. (1-4-7) - தத்தேதம் தர்ஹி அவ்யாக்ருதம் ஆஸீத் - இந்த ஜகத்தானது அப்போது பெயர் மற்றும் ரூபம் ஆகியவற்றால் வேறுபடாமல் இருந்தது – என்று மிகவும் தெளிவாக உரைத்தது.

**2-1-19 படவத் ச**

**பொருள்** - துணியைப் போன்று.

**வேதாந்தஸாரம்** - பல நூல்கள் ஒரு குறிப்பிட்ட அமைப்பில் இணைக்கப்பட்டு ஏற்படும் கார்யமானது துணி எனப்படுகிறது. இது போன்றே ப்ரஹ்மத்திற்கு ஆகும் (அதாவது ப்ரஹ்மமும் ஜகத் என்றாகிறது).

**2-1-20 யதா ச ப்ராணாதி:**

**பொருள்** - ப்ராணன் போன்று

**வேதாந்தஸாரம்** – வாயு ஒன்றாகவே உள்ளபோதிலும், சரீரத்தில் உள்ள பல பகுதிகளிலும் அதற்கு ஏற்படும் மாறுபாடு காரணமாக அந்த வாயுவானது ப்ராணன், அபாநன் போன்ற பல பெயர், ரூபம் மற்றும் செயல் ஆகியவற்றை அடைகிறது. இது போன்றே ஜகத்தானது ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறானது அல்ல.

## அதிகரணம் - 7 - இதர வ்யபதேசாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஜீவனையும் ப்ரஹ்மத்தையும் வெவ்வேறாகவே ச்ருதி கூறியுள்ளதால், "ப்ரஹ்மத்தை ஜீவனாகக் கூறுவதால் தோஷங்கள் ஏற்படும்" என்பது தள்ளப்படுகிறது.

**2-1-21 இதர வ்யபதேசாத் ஹிதாகரணாதி தோஷ ப்ரஸக்தி:**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ப்ரஹ்மத்தை ஜீவனாகக் கூறுவதால், ப்ரஹ்மம் தனக்கு நன்மையைச் செய்து கொள்ளவில்லை, தோஷத்தையே ஏற்படுத்திக் கொள்கிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – "சாந். (6-8-7) - தத் த்வம் அஸி - நீ அதுவாகிறாய் – என்றும், ப்ரு. (4-4-5) - அயம் ஆத்மா ப்ரஹ்ம – இந்த ஆத்மாவே ப்ரஹ்மம் – என்பது போன்ற வரிகள் மூலமாக, கார்யப்பொருளான ஜீவாத்மாவானது ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறானது அல்ல என்பதே கூறப்படுகிறது" என சிலர் உரைக்கிறார்கள். ஆனால் இவ்விதம் கொண்டால், "அனைத்தும் அறிந்ததாகவும், ஸத்ய ஸங்கல்பம் போன்ற குணங்களைக் கொண்டதாகவும் உள்ள ப்ரஹ்மமானது, தனக்கு ஏற்றதான நன்மையை அளிக்கவல்லதான ஜகத்தை உற்பத்தி செய்யவில்லை என்றும், தனக்குத் தீமையை ஏற்படுத்தவல்லதான ஜகத்திற்கு தானே காரணமாகிவிட்டது என்றும் இரண்டு தோஷங்கள் ஏற்படும்" என நாங்கள் (வைசேஷிகர்) கூறுகிறோம்.

### 2-1-22 அதிகம் து பேத நிர்தேஶாத்

**பொருள்** - ப்ரஹ்மம் வேறானது என்று கூறுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) அப்படி அல்ல. கார்யமும் காரணமும் ஒன்றே என்றாலும், ஜீவாத்மாவின் ஸ்வரூபமானது ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறானதே ஆகும். இந்தக் கருத்தை ச்வே. (1-9) - கரணாதிபாதிப: - ஜீவாத்மாவிற்கும் எஜமானன் – என்றும், ச்வே. (5-1) – வித்யா அவித்யே ஈசதே யஸ்து ஸ: அந்ய: - வித்யை மற்றும் அவித்யை ஆகியவற்றை நியமிப்பவன் வேறு ஒருவனே – என்றும் உள்ள வாக்கியங்கள் உறுதியாக்குகின்றன. அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மமானது, காரணநிலை மற்றும் கார்யநிலை ஆகிய இரண்டையும் கொண்டுள்ளது. இப்படியாக குணங்கள் மற்றும் தோஷங்களின் நிலை கூறப்படுகிறது; இதுவே ப்ர. ஸூ. (2-1-9) - ந து த்ருஷ்டாந்தபாவாத் - (ப்ரஹ்மத்திடம் தோஷங்கள் ஏற்படாது என்பதால்) வேதாந்த வாக்கியங்கள் பொருந்தாத வாக்கியங்கள் ஆகாது; உதாரணங்கள் உள்ளதால் – என்பதிலும் கூறப்பட்டது. ப்ரு. (3-7-3) - யஸ்ய ப்ருதிவீ சரீரம் - யாருக்கு ப்ருதிவி சரீரமோ – என்றும், ப்ரு. (3-7-22) - யஸ்ய ஆத்மா சரீரம் – யாருக்கு ஆத்மா சரீரமோ – என்றும் உள்ள நூற்றுக்கணக்கான ச்ருதி வாக்கியங்கள், "சித் மற்றும் அசித் வஸ்துக்கள் ப்ரஹ்மத்தின் சரீரம்" என்று கூறுகின்றன.

**2-1-23 அஶ்மாதிவத் ச தத் அநுபபத்தி:**

**பொருள் -** கல் போன்றவற்றுக்குப் போல ஸ்வரூப ஐக்யம் பொருந்தாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** கல், மண், மரம் என்னும் அசேதந வஸ்துக்களைப் போன்றே, ஜீவாத்மாவும் ச்வே. (4-7) - அநீசயா சோசதி முஹ்யமாந: - ப்ரக்ருதியால் மோகம் அடைந்தவனாக நின்று வருந்துகிறான் – என்பது போன்ற வாக்கியங்களால், அனைத்தும் அறிந்ததும் ஸத்யஸங்கல்பம் கொண்டதும் ஆகிய ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவனே ஆகிறான்.

**2-1-24 உபஸம்ஹார தர்சநாத் ந இதி சேத் ந க்ஷீரவத் ஹி**

**பொருள் -** உபகரணங்கள் உதவியாக உள்ளதைக் காண்பதால், அத்தகைய உபகரணங்கள் இல்லை என்பதால், ப்ரஹ்மம் காரணமாக இருக்கமுடியாது என்றால், அப்படிக் கூறமுடியாது; பால் தயிராவது போன்று.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** ஒரு கார்யத்தைச் செய்து முடிப்பதற்கு பலவிதமான காரகங்கள் (கருவிகள் போன்றவை) தேவைப்படுகின்றன. ஆகவே ப்ரஹ்மம் மட்டுமே ஜகத்காரணமாக இருக்கமுடியாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. பால் (தனித்து நின்று) தயிராக மாறுவது போன்றே, ப்ரஹ்மமும் ஜகத்தாகிறது.

**2-1-25 தேவாதிவத் அபி லோகே**

**பொருள் -** தேவர்களும் தங்கள் லோகத்தில் ஸங்கல்பத்தினாலேயே படைக்கிறார்கள்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** தேவர்களுக்கு உள்ள சக்திகளை நாம் சாஸ்த்ரங்கள் மூலமாக அறிகிறோம். அவர்கள் அவரவர்களுடைய லோகத்தில், தங்களுக்குத் தேவையான உருவங்களை, தங்களுடைய ஸங்கல்பத்தால் (சிந்தனையால்) படைத்துக்

கொள்கிறார்கள். இதனைப் போன்றே சாஸ்த்ரங்களில் கூறப்பட்டதற்கு ஏற்ப, ப்ரஹ்மத்திற்கும் இந்த நிலை பொருந்தும்.

## அதிகரணம் – 9 – க்ருத்ஸ்ந ப்ரஸக்தி அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – அவயவங்கள் (பகுதிகள், உறுப்புகள்) இல்லாத ப்ரஹ்மத்திடமிருந்து இந்த ஜகத் உண்டானது; ஆகவே அந்த ப்ரஹ்மமே உபாதானக் காரணம் என்று கூறுவதில் தடையில்லை என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**2-1-26 க்ருத்ஸ்ந ப்ரஸக்தி: நிரவயவத்வ சப்தகோப: வா**

**பொருள்** - (ப்ரஹ்மம் அவயவம் அற்றது என்பதால்) முழுவதுமே கார்யப்பொருள் என்றாகிவிடும். இதனைத் தவிர்க்க அவயவம் உள்ளது என்றால், மற்ற வாக்கியஙள் பாதிக்கப்படும் (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும். இதனைக் கூறுபவர்கள் ஸாங்க்யர்கள் ஆவர்).

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – அனைத்து சித் மற்றும் அசித் வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்டுள்ள ப்ரஹ்மமானது, கார்யம் மற்றும் காரண நிலைகளில் உள்ளது என்று கூறப்பட்டது. இவ்விதமான சரீரங்களுடன் கூடிய ப்ரஹ்மமானது, அவயவங்கள் (உறுப்புகள் அல்லது பகுதிகள்) அற்றது ஆகும்; இதன் விளைவாக, முழுவதுமாக உள்ள ப்ரஹ்மமே கார்யமாக உள்ளது என்றாகிறது. “ப்ரஹ்மமானது தனது ஒரு அம்சத்தால் (பகுதியால்) கார்யமாக நிற்கிறது”, என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் இவ்விதம் கொண்டால், “ப்ரஹ்மம் அவயவங்கள் அற்றது” என்று உரைப்பது பொருந்தாது. எனவே ப்ரஹ்மம் ஜகத்காரணம் அல்ல.

**2-1-27 ச்ருதேஸ்து சப்த மூலத்வாத்**

**பொருள்** - ச்ருதியில் கூறப்படுள்ளதால், ப்ரஹ்மத்திற்கு சாஸ்த்ரமே ப்ரமாணம் என்பதால் தோஷம் இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) ச்ருதிகளைப் ப்ரமாணமாக ஏற்பதால், இந்த ஆக்ஷேபம் பொருந்தாது. வேத சப்தங்களைக் கொண்டு மட்டுமே ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை அறியலாம். மற்ற ப்ரமாணங்களால் அறியப்படக்கூடிய வஸ்துக்களைக் காட்டிலும் ப்ரஹ்மமானது வேறுபட்டது ஆகும். எனவே, மற்ற வஸ்துக்களில் காணப்படாத சக்தியானது ப்ரஹ்மத்தில் உள்ளதில் எந்த முரண்பாடு இல்லை. ஆக “மாட்டின் தன்மை” என்பது போன்றதான ஜாதிக்கே உரிய தன்மைகள், “உடைந்த கொம்புள்ள மாடு, கொம்பற்ற மாடு” என அனைத்து மாடுகளிலும் பரிபூர்ணமாக உள்ளது போன்று, ப்ரஹ்மமானது கார்யநிலை மற்றும் காரணநிலை ஆகிய அனைத்திலும் பரிபூர்ணமாகவே உள்ளது.

**2-1-28 ஆத்மநி ச ஏவம் விசித்ராஶ்ச ஹி**

**பொருள் -** ஜீவாத்மாவிடமும் இது போன்றே உள்ளது. மற்றொன்றில் இல்லாமல் (அசேதனத்தில்) விசித்ரமாக உள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அசேதநங்களில் காணப்படும் தர்மங்களுக்கு எதிர்த்தட்டாக உள்ள தர்மங்களை ஜீவாத்மா கொண்டிருத்தல் என்பது, அவற்றைக் காட்டிலும் வேறுபட்ட சக்தியைக் கொண்டிருப்பதால் ஆகும். அக்னி, நீர் போன்ற அசித் பொருள்கள் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டதாகவும், அவையவைக்கே உரிய விசித்ரமான தர்மங்களுடன் சேர்ந்துள்ளதையும் நாம் காண்கிறோம்.

**1-1-29 ஸ்வபக்ஷ தோஷாத் ச**

**பொருள் -** அவர்கள் கூறும் கருத்திலேயே தோஷம் உள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** மேலே கூறப்பட்ட தோஷமானது (அதாவது, ஒரு காரணப்பொருள் தன்னைக் கார்யப்பொருளாக மாற்ற விரும்பினால், அது முழுமையாக தன்னை மாற்றிக் கொள்ளவேண்டும் என்னும் தோஷம்) அவயவங்கள் அற்றதும், அசித் பொருளாக உள்ளதும் ஆகிய ப்ரதானத்திற்கே உள்ளது. ஆகவே ப்ரஹ்மமே ஜகத்காரணம் ஆகும்.

**2-1-30 ஸர்வோ பேதா ச தத் தர்சநாத்**

**பொருள்** - உயர்ந்த தேவதை (ப்ரஹ்மம்) அனைத்து சக்திகளையும் கொண்டது என்று ச்ருதிகள் கூறுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ச்வே. (6-8) - பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே – பரமாத்மாவிற்கு சக்தி பலவிதமாகவும் – என்னும் ச்ருதி வாக்கியமானது, உயர்ந்த தேவதைக்கு (பரமாத்மா) அனைத்து சக்தியுடன் சேர்க்கை உள்ளது என்பதைக் கூறுகிறது.

**2-1-31 விகரணத்வாத் ந இதி சேத் தத் உக்தம்**

**பொருள்** - சரீரம் மற்றும் இந்த்ரியங்கள் இல்லாததால் ப்ரஹ்மமானது நிமித்தகாரணம் ஆகாது என்றால், இதற்கான பதில் முன்பே உரைக்கப்பட்டது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - ச்வே. (6-8) – ந தஸ்ய கார்யம் கரணம் ச வித்யதே – கார்யமும் (சரீரமும்), கரணமும் (இந்த்ரியம்) இல்லை – என்பதன் மூலம் ப்ரஹ்மத்திற்குக் கரணங்கள் இல்லை என்றாகிறது; ஆகவே அதற்கு ஜகத்காரணத் தன்மையும் இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – இதற்கான பதிலை நாம் ப்ர. ஸூ. (2-1-27) - சப்த மூலத்வாத் – என்பதில், "சாஸ்த்ரம் மூலம் மட்டுமே ப்ரஹ்மத்தை அறியலாம், அது அனைத்து வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டது", என்று உரைத்தோம்.

## அதிகரணம் - 10 – ப்ரயோஜநவத்வாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - அனைத்து விருப்பங்களும் நிறைவேறப் பெற்றவன் என்றபோதிலும், லீலை வடிவில் (விளையாட்டு ரூபத்தில்) உள்ள பலன் காரணமாக அவனே ஜகத்காரணம் என்பதில் தவறில்லை என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**2-1-32 ந ப்ரயோஜநவத்வாத்**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டும் உள்ள ஸூத்ரமாகும்) ஸ்ருஷ்டி போன்றவற்றால் பயன் இருக்கவேண்டும் என்பதால் ப்ரஹ்மம் ஜகத்காரணம் அல்ல.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** ப்ரஹ்மமானது தனது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறப் பெற்றதாகும். இப்படி உள்ளபோது இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதன் மூலம் அதற்கு எந்தப் பயனும் இல்லை. ஆகவே ப்ரஹ்மம் ஜகத்காரணம் அல்ல.

**2-1-33 லோகவத் து லீலா கைவல்யம்**

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -**(கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) அனைத்து விருப்பங்களும் நிறைவேறப்பெற்றவனாக உள்ளபோதிலும், தனது லீலையை பயனாகக் கருதி இந்த ஜகத்தைப் படைக்கிறான். ஆகவே இந்த ஸ்ருஷ்டியினால் அவனுக்கு எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லை. இந்த உலகத்தில் கூட, வெறும் லீலைகளுக்காக பந்து விளையாடுதல் போன்றவற்றைக் காண்கிறோம். அனைத்துவிதங்களிலும் த்ருப்தி அடைந்தவனாக உள்ள அவனுக்கு, "அனைத்து விருப்பங்களின் நிறைவு" என்பது, "இன்பத்திற்கு அவசியமானவை எப்போதும் தயாராக உள்ளது" என்னும் நிலையே ஆகும். ஆத்ம த்ருப்தன் ஒருவனுக்கு மற்ற இன்பங்கள் மூலமாக உண்டாகும் த்ருப்தி என்பது வேறாகவே இருக்கும். லீலை என்பது இந்த இரண்டைக் காட்டிலும் வேறுபட்டது ஆகும். மூன்று குணங்களும் (அதாவது ப்ரதானம்) மற்றும் ஜீவாத்மா ஆகிய இரண்டுமே லீலையில் ருசி கொண்டவனுக்கு அவசியமாகும்.

**2-1-34 வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் ததாஹி தர்சயதி**

**பொருள் -** பாரபக்ஷம் (ஒருதலையாக நடத்தல்) மற்றும் கருணை இன்மை ஏற்படாது; கர்மம் காரணமாகவே ஆகும். இவ்விதமே ச்ருதி கூறுகிறது.

**வேதாந்தஸாரம்** – தேவர்கள் முதலான ஏற்றத்தாழ்வுடன் ஸ்ருஷ்டிப்பதால் அவனுக்கு பாரபக்ஷம் மற்றும் கருணை இன்மை என்னும் நிலை உண்டாகாது. க்ஷேத்ரஜ்ஞர்களுடைய கர்மபலனே இவ்விதமான (ஏற்றத்தாழ்வுகளுடன் கூடிய) ஸ்ருஷ்டிக்குக் காரணம் ஆகும். இதனை ப்ரு. (6-4-5) - ஸாதுகாரீ ஸாதுர்பவதி | பாபகாரீ பாபோபவதி – நற்கர்மங்கள் செய்தவன் நல்ல சரீரத்தைப் பெறுகிறான், பாபகர்மங்கள் செய்தவன் தாழ்ந்த சரீரத்தை அடைகிறான் – என்னும் ச்ருதி வாக்கியத்தில் காணலாம்.

**2-1-35 ந கர்ம அவிபாகாத் இதி சேத் ந அநாதித்வாத் உபபத்யதே ச அபி உபலப்யதே ச**

**பொருள்** - ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மம் தவிர்த்து ஏதும் இல்லை என்பதால், ஜீவாத்மா இல்லையாகையால், கர்மமும் இல்லை என்று கூறினால், சரியல்ல; ஜீவாத்மா அநாதி என்பதால் பொருந்தும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – "ஒரு வஸ்து மட்டுமே" என்பதைக் குறித்துக் கூறும் ச்ருதிகள், சாந். (6-2-1) - ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் ஏகம் ஏவ - தொடக்கத்தில் ஸத் மட்டுமே இருந்தது - என்று கூறுகின்றன. ஆகவே அப்போது க்ஷேத்ரஜ்ஞர்கள் இல்லாதபோது, அவர்களுடைய கர்மங்களும் இருக்கமுடியாது (ஆகவே கடந்த ஸூத்ரத்தில் கூறப்பட்டபடி கர்மத்தை எதிர்பார்த்து ஸ்ருஷ்டிகளில் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது என்று கூறியது எப்படிப் பொருந்தும்).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – க்ஷேத்ரஜ்ஞர்கள் அநாதி (தொடக்கம் இன்றி எப்போதும் இருந்து வருபவர்கள்) என்பதால் அவர்களுடைய கர்ம ப்ரவாஹமும் அநாதி ஆகிறது. (ஜீவாத்மாக்கள்) அநாதி என்றபோதிலும், "அவிபாகம் – தொடக்கத்தில் ஒன்றாகவே இருந்தது" என்று ச்ருதி கூறுவதும் பொருத்தமே ஆகும்; எப்படி என்றால், அந்த நிலையில் பெயர் மற்றும் உருவம் ஆகிய வேறுபாடுகள் இல்லை என்பதால் ஒன்றாகவே இருந்தது என்று கருத்து; இதனை ப்ரு. (1-4-7) - தத்தேதம் தர்ஹி அவ்யாக்ருதம் ஆஸீத் | தத் நாம ரூப்யாம் வ்யாக்ரியத - இந்த ஜகத்தானது ஸ்ருஷ்டிக்கு முன்பு அவ்யாக்ருதமான (அவ்யக்தமாக, அதாவது பெயர் மற்றும் ரூபம் அற்றதாக) ப்ரஹ்மமாகவே இருந்தது. அதன் பின்னர் பெயர் மற்றும் ரூபங்கள் உள்ளதாக ஆனது – என்றது. மேலே கூறப்பட்ட கருத்தானது இந்த ச்ருதியின் பொருளைப் போன்றே உள்ளது. ச்வே. (1-9) – ஜ்ஞா

ஜ்ஞௌ த்வௌ ஈச அநீசௌ - பிறப்பற்ற இரண்டில் ஒன்று அறிந்ததும் ஒன்று அறியாததுமாகவும், ஒன்று வலிமை உள்ளதும் ஒன்று வலிமை அற்றதுமாகவும் – என்றும், கட. (5-13) – நித்யோ நித்யாநாம் – நித்யர்களில் நித்யமானவனும் – என்றும் உள்ள வாக்கியங்கள் க்ஷேத்ரஜ்ஞர்களுடைய அநாதி தன்மையைக் கூறுகின்றன.

**2-1-36 ஸர்வதர்ம உபபத்தே: ச**

**பொருள்** - அனைத்து தன்மைகளும் பொருந்துவதாலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ப்ரதானம் மற்றும் பரமாணுக்கள் எந்தெந்த தன்மைகள் இல்லை என்று கூறப்படுகின்றனவோ, அவை அனைத்தும் ப்ரஹ்மத்திடம் காணப்படுகின்றன; ஏனென்றால், ப்ரஹ்மமானது மற்ற அனைத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்பதால் ஆகும். அது அனைத்து சக்திகளையும் கொண்டதாக ச்ருதி கூறுகிறது. ஆகவே ப்ரஹ்மமே ஜகத்தின் ஒரே காரணம் என்றாகிறது.

## பாதம் – 2 – தர்க்க பாதம்

இந்தப் பாதத்தில் தர்க்கங்கள் மூலமாக ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்பதை (அல்லது ப்ரஹ்மகாரணவாதத்தை) மறுக்கின்ற மற்ற ஸித்தாந்தங்கள் அனைத்தும் தள்ளப்படுகின்றன. இதனால் இது தர்க்க பாதம் எனப்படுகிறது.

## அதிகரணம் – 1 – ரசநாநுபபத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – இந்த அதிகரணத்தில் ஸாங்க்யர்களின் ஸித்தாந்தம் தள்ளப்படுகிறது.

**2-2-1 ரசநாநுபபத்தேஶ்ச ந அநுமாநம் ப்ரவ்ருத்தேஶ்ச**

**பொருள்** - பொருந்தாது என்பதாலும், செயல்பாட்டிலும் மூல ப்ரக்ருதி ஜகத்காரணம் அல்ல.

**வேதாந்தஸாரம் –** ரதங்கள், மாளிகைகள் போன்றவற்றை உருவாக்கத் தேவையான அசித் பொருள்களாகிய மரம் முதலானவற்றால் மட்டுமே, அவற்றை உண்டாக்கும் ஞானம் கொண்ட ஒரு சேதநனுடைய உதவியின்றி, அவற்றை உண்டாக்க இயலாது. அவற்றை உண்டாக்கும் ஞானம் கொண்ட ஒருவன் மூலம் மட்டுமே ரதம் போன்றவை உண்டாகின்றன. இதனைப் போன்றே அசேதநமான ப்ரக்ருதியை அனுமானத்தால் மட்டுமே அறிய இயலும். அனைத்தும் அறிந்த பரமாத்மா ப்ரக்ருதியை மேற்பார்வை இடாவிடில் அது ஜகத்காரணம் ஆகாது.

**2-2-2 பய: அம்புவத் சேத் தத்ர அபி**

**பொருள்** - பாலும் நீரும் போன்று (சேதநன் உதவி இன்றி நடைபெறலாம்); இவ்விடத்திலும் அத்தகைய மேற்பார்வையிடுதல் காணப்படுவதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** பால் மற்றும் தண்ணீர் ஆகியவை எதனுடைய உதவியும் இன்றி தயிர் முதலானவையாக மாறுகின்றன. இதே போன்று ப்ரதானமும் (எதன் உதவியும் இன்றி ஜகத்காரணம்) ஆகலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. அவைகளும் முன்பு கூறிய விதியில் அடங்கும்.

**2-3-3 வ்யதிரேக அநவஸ்திதே: ச அநபேக்ஷத்வாத்**

**பொருள்** - (ப்ரதானம் ஜகத்தை உண்டாக்க ப்ரஹ்மத்தை) எதிர்பாராமல் உள்ளது என்றால், ஸ்ருஷ்டிக்கு எதிர்த்தட்டாக உள்ள லயித்தல் (ப்ரளயம்) என்பது இல்லாமல் போகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அனைத்தும் அறிந்த ப்ரஹ்மத்தின் வழிநடத்துதல் (அல்லது மேற்பார்வை) இன்றி ப்ரதானமே ஜகத்தை உண்டாக்குகிறது என்றால், எப்போதுமே ஸ்ருஷ்டித்தபடி உள்ள நிலை ஏற்படும். ஆகவே ப்ரதானம் ஜகத்காரணம் அல்ல.

**2-2-4 அந்யத்ர அபாவாத் ச ந த்ருணாதிவத்**

**பொருள்** - புல் போன்று மாறுதல் அடைகிறது என்று கூறுவது சரியல்ல; காளை போன்றவற்றால் உண்ணப்படும் அவற்றுக்கு இந்த மாறுதல்கள் காணப்படவில்லை

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** "பசு உட்கொண்ட புல்லானது பாலாக மாறுவது போன்று, ப்ரதானமும் ஜகத்தாக மாறுகிறது" என்று கூறுவது சரியல்ல. அவ்விதம் மாறுவதை காளை மாட்டின் விஷயத்தில் நாம் காண்பதில்லை. ஆகவே புல்லானது பாலாக மாறுவது என்பதும், அனைத்தும் அறிந்த ஒருவனுடைய மேற்பார்வையிலேயே ஆகும்.

**2-2-5 புருஷாஶ்மவத் இதி சேத் ததா அபி**

**பொருள்** – மனிதனைப் போன்றும், காந்தக்கல் போன்றும் என்று கூறினாலும் அப்போதும் இயலாது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – புருஷனாகிய ஆத்மாவின் சேர்க்கை காரணமாக அசேதநமாக உள்ள அந்த ப்ரதானம் செயல்படுகிறது. அதாவது கண்பார்வை அற்ற ஒருவன், கால்கள் முடமான ஒருவன் மூலமாக நடக்கிறான்; காந்தக்கல் ஒன்றால் ஈர்க்கப்படும் இரும்பானது அசைகிறது. ஆகவே ப்ரதானம் செயல்பட (அதாவது ஸ்ருஷ்டி செய்ய), அனைத்தும் அறிந்த ஒருவனுடைய மேற்பார்வை அவசியம் இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. நீங்கள் உரைப்பது போன்று கொண்டாலும், ப்ரதானம் ஜகத்காரணம் ஆகாது; ஏனென்றால், நீங்கள் கூறும் புருஷன் எந்தவிதமான மாற்றங்களும் அடையாமல் உள்ளாதால் ஆகும். கால்கள் முடமான ஒருவனோ அல்லது காந்தமோ, முறையே வழியை உபதேசித்தல் அல்லது ஓரிடத்திலுருந்து வேறு ஓர் இடத்திற்கு நகர்தல் ஆகிய மாற்றங்கள் அடைவது காணலாம்.

**2-2-6 அங்கித்வ அநுபத்தேஶ்ச**

**பொருள்** – ப்ரளயத்தின்போது ஒரு குணம் ஓங்கி நின்று முக்கியமானதாக ஆவது பொருந்தாது என்பதாலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - இந்த ஜகத்தின் உற்பத்தி என்பது மூன்று குணங்களில் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகள் காரணமாக அவைகளுக்குள் ஏற்படுகின்ற அங்கி - அங்கம் (அங்கி – உயர்ந்தவை, அங்கம் - தாழ்ந்தவை) என்பதால் உண்டாகிறது என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் ப்ரளய நிலையில் அவை சமமாக உள்ளதால், அவற்றுக்கு இடையே "அங்கி – அங்கம்" என்னும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதில்லை. ஆகவே ஜகத்ஸ்ருஷ்டி என்பது ஏற்படாது.

**2-2-7 அந்யதா அநுமிதௌ ச ஜ்ஞஶக்தி வியோகாத்**

**பொருள்** - வேறுவிதமாக அநுமானம் செய்தாலும், ப்ரதானத்திற்கும் அறிவுள்ளது என்ற சக்தி இல்லை என்பதாலும் (ஜகத்காரணம் ஆகாது).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அதாவது, "அறிவுள்ளது என்ற சக்தி இல்லை – சேதநனுடைய சக்தி என்னும் அறிவு ப்ரதானத்திற்கு இல்லை" என்று பொருள். கீழே நாங்கள் கூறியபடி அல்லாமல், வேறுவிதங்களில் ப்ரதானமே ஜகத்காரணம் என்று அனுமானம் செய்தாலும், "அறியவல்லது என்ற சக்தி இல்லை" என்னும் காரணத்தால் ஸ்ருஷ்டி உண்டாகாது. இந்தக் காரணத்தால், மேற்கூறிய தோஷங்கள் நிலையாகவே உள்ளன.

**2-2-8 அப்யுகமே அபி அர்த்தாபாவாத்**

**பொருள்** - வேறு அநுமானத்தாலும் ப்ரதானத்திற்கு ஜகத்காரணத் தன்மை உண்டு என்று ஒப்புக்கொண்டாலும், அதனால் எந்தப் பயனும் இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ப்ரதானத்தை (ஜகத்காரணம் என்று கூறுவது) அநுமானத்தால் ஒப்புக் கொள்ள நேர்ந்தாலும், அந்த ப்ரதானத்தால் பயன் ஒன்றும் இல்லை என்பதால், அதனை ஜகத்காரணம் என்று அநுமானிப்பது அவசியமற்றதாகும். மாற்றங்கள் ஏதும் அடையாதவனாகிய புருஷன், ப்ரதானம் எத்தகைய ரூபங்கள் எடுக்கிறதோ அத்தகைய ரூபங்களை எடுப்பதில்லை (ஆகவே நித்யமுக்தன் ஆவான்). இப்படிப்பட்ட ஸ்வரூபம் கொண்ட அவனுக்கு ப்ரக்ருதியைக் காணும்போது அனுபவித்தபடி இருத்தலும், அதனை விட்டு அகலும்போது மோக்ஷம் கிட்டுதலும் ஏற்படாது.

**2-2-9 விப்ரதிஷேதாத் ச அஸமஞ்ஜஸம்**

**பொருள் –** முரணாகப் பேசுவதால், (ஸாங்க்ய மதம்) நிராகரிக்கப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** புருஷனுக்கு தர்சனம், அனுபவம், மாற்றம் இன்மை என்பது போன்ற ஒன்றுக்கொன்று முரணாக உள்ள பலவற்றையும் கபிலருடைய ஸித்தாந்தம் கூறுவதால், அந்த மதம் தள்ளப்படுகிறது.

### அதிகரணம் – 2 – மஹத்தீர்க்காதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** வைசேஷிக மதத்தை நிராகரிக்கிறார்.

**2-2-10 மஹத் தீர்க்கவத் வா ஹ்ரஸ்வ பரிமண்டலாப்யாம்**

**பொருள் -** பெரியதும் நீண்டதும் என்றுள்ள ஒன்று, சிறியதும் அணுவிலிருந்தும் வராது என்பது போன்று.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** "பொருத்தமற்றது" என்பதைக் கடந்த ஸூத்ரத்திலிருந்து எடுத்துக் கொள்ளவேண்டும் (இது அங்குள்ள "அஸமஞ்ஜஸம்" என்ற பதம்). ஸூத்ரத்தில் உள்ள "வா" என்பது "ச = உம்மைத்தொகை" என்ற பொருளில் உள்ளது. "ஹ்ரஸ்வ பரிமண்டலாப்யாம்"; "த்வய அணுகம் மற்றும் பரமாணுக்கள் ஆகியவற்றிலிருந்து

பெரியதும் நீண்டதும் ஆகிய தத்ரய அணுகம் உண்டாகிறது" என்று கூறும் (கணாத) மதத்தின் கருத்து பொருத்தமற்றதே ஆகும் (வைசேஷிகர் கருத்தின்படி பிரிக்க இயலாத ஒன்று அணுவாகும். இதுவே பரமாணு எனப்படுகிறது. இரண்டு பரமாணுக்களிலிருந்து ஒரு த்வயணுகமும், மூன்று த்வயணுகத்திலிருந்து ஒரு த்ரயணுகமும் ஏற்படுகிறது என்று கருத்து). பொதுவாகவே, ஆறு பக்கங்கள் கொண்ட ஒரு அவயவம் (ஒரு பொருளின் ஒரு பகுதி), தன்னைப் போன்றே ஆறு பக்கங்கள் கொண்ட மற்றொரு அவயவத்துடன் சேர்ந்து, ஒரு பெரிய அவயவியை (அவயங்களைக் கொண்ட பொருளானது அவயவி) உண்டாக்குகின்றன. ஆனால் பரமாணுக்களுக்கு அவயவங்கள் இல்லை; ஆகவே பக்கங்களும் இல்லை. பக்கங்கள் ஏதும் இல்லாத வஸ்துக்கள் ஒன்றாக இணைந்து ஒரு பெரிய வஸ்துவை உண்டாக்க வழி இல்லை.

**2-2-11 உபயதாபி ந கர்ம அத: தத் அபாவ:**

**பொருள் -** இரண்டிலும் க்ரியை ஏற்படாது; ஆகவே பொருந்தாது.

**குறிப்பு –** (இது வேதாந்தஸாரத்தின் பகுதி அல்ல. விளக்குவதற்காகத் தரப்பட்டது) இந்த ஜகத்தின் உற்பத்திக்குப் பரமாணுவே காரணம் என்று கூறுபவர்கள் – பரமாணுவில் முதன்முதலாக ஒரு செயல் (க்ரியை) ஏற்படுகிறது. இதனால் அந்தப் பரமாணு மற்றொரு பரமாணுவுடன் சேர்கிறது. இதிலிருந்து த்வயணுகம் தோன்றுகிறது. இப்படியே ஒவ்வொன்றாக வரிசையாகத் தோன்றுகிறது. இப்படியே ஒவ்வொன்றாக வரிசையாகத் தோன்றி, ஜகத் உண்டாகிறது - என்று கூறுகிறார்கள். அனைத்து உலகங்களும் தோன்றுவதற்குக் காரணமாக உள்ளதான பரமாணுவில் தோன்றிய முதல் கர்மம் என்பது அத்ருஷ்டத்தால் (கண்களுக்குத் தெரியாத ஒன்று. அத்ருஷ்டம் என்பது ஜீவாத்மாக்களுடைய சேமிக்கப்பட்ட புண்ணிய பாப பலன்கள் ஆகும். இவை பின்னர் பலன் அளிப்பவை ஆகும்) ஏற்படுகிறது என்று ஒப்புக்கொள்கிறார்கள். இதனை மறுக்கிறார்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** முதல் செயலானது பரமாணுக்களில் உண்டாவதை ஏற்க இயலாது. ஆகவே அதன் விளைவாக ஏற்படும் அணுக்களின் சேர்க்கையையும் ஒப்புக் கொள்ள இயலாது. க்ஷேத்ரஜ்ஞர்களுடைய அத்ருஷ்டம் இல்லாமல் ஒரு சில நேரங்களில்

மட்டும் பரமாணுக்களின் சேர்க்கை உண்டாக வாய்ப்பில்லை. அத்ருஷ்டத்தின் விளைவாக ஒரே நேரத்தில் அனைத்து பரமாணுக்களிலும் சேர்க்கை உண்டாகவும் வாய்ப்பில்லை. க்ஷேத்ரஜ்ஞர்களுடைய அத்ருஷ்டம் என்பதை எதிர்பாராமலேயே இத்தகைய சேர்க்கை உண்டாகிறது என்று கூறினால், குறிப்பிட்ட காலத்தில் ஸ்ருஷ்டி ஏற்படுதல், மற்ற காலங்களில் ஸ்ருஷ்டி ஏற்படாமல் இருத்தல் என்பதற்கான காரணம் என்ன? கர்மங்கள் எப்போது பலன் அளிக்கத் தொடங்கும் என்று உரைக்க இயலாது. ஒரு கர்மத்தை இயற்றும்போது, இந்தக் கர்மமானது இன்ன காலத்தில் பலன் அளிக்கும் என்னும் விதிமுறை உள்ளது. இவ்விதம் காலக்கெடு ஏதும் இல்லாத கர்மங்களுக்கு, மற்ற வலிமையான கர்மங்கள் குறுக்கிடாமல் உள்ள காலமே, பயன் அளிக்கும் காலம் ஆகும். ஆகவே பல க்ஷேத்ரஜ்ஞர்கள், பல காலங்களில், பல பயன்களை அளிக்கவல்ல பல கர்மங்களைச் செய்துள்ளனர் என்னும்போது, அவை அனைத்தும் ஒரே நேரத்தில் ஒரே போன்ற ஸ்ருஷ்டி என்னும் செயலை உண்டாக்குகின்றன என்று உரைப்பது பொருத்தம் ஆகாது. அனுமானத்தாலே ஈச்வரனை நிரூபிப்பது இயலாது என்பதால், ஈச்வரனின் சக்தி காரணமாக அணுக்களே ஜகத்காரணம் என்று உரைப்பது சரியல்ல.

**2-2-12 ஸமவாய அப்யுபகமாச்ச ஸாம்யாத் அநவஸ்திதே:**

**பொருள்** - ஸமவாயத்தாலும் அநவஸ்தை தோஷம் ஏற்படுவதால் (ஸமவாயம் என்றால் என்ன? திரவியம் மற்றும் அதன் குணம், திரவியம் மற்றும் அதன் செயல், முழுப்பொருள் மற்றும் அதன் அவயவங்கள், காரணப்பொருள் மற்றும் கார்யப்பொருள் ஆகியவற்றைப் பிரிக்க இயலாமல் ஒட்டி இருத்தலே ஸமவாயம் ஆகும்).

**குறிப்பு** – அடுத்த பத்தியில் உள்ள வேதாந்தஸார விஷயங்கள் விளங்குவதற்காக, இதே ஸூத்ரத்திற்கான ஸ்ரீபாஷ்ய பகுதியும் சேர்த்து அளிக்கப்பட்டுள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - வைசேஷிகர்கள் ஸமவாயத்தை ஒப்புக் கொண்டுள்ளதாலும், பொருத்தமின்மை ஏற்படுகிறது. ஏன்? அத்தகைய ஸமவாயம் மூலம் அநவஸ்தை தோஷம் ஏற்படுகிறது. அவயவி (முழுப்பொருள்), ஜாதி (பொதுப்பொருள்), குணம் ஆகியவை தங்களை நிரூபிக்க மற்றவற்றைச் சார்ந்துள்ளன, அந்த மற்றவை மேலும் மற்றவற்றைச் சார்ந்துள்ளன என்று நீண்டு கொண்டே செல்வதால் அநவஸ்தை

தோசஷம் ஏற்படுகிறது. (அவயவி என்பது “அதன் அவயவங்கள் இவை” என்று கூறுவதை நம்பி உள்ளது, ஜாதி என்பது “இந்த ஜாதியைச் சேர்ந்த பொருள்கள்” என்பதை நம்பி கூறுவதை உள்ளது, குணம் என்பது “இந்தக் குணம் இந்தப் பொருளுக்கு உள்ளது” என்று மற்ற பொருளை நம்பி உள்ளது. இவை ஒவ்வொன்றும் மேலும் சிலவற்றை நம்பி உள்ளன என்று நீளும்). இந்த நீள்கின்ற தோஷத்தை (அநவஸ்தையை) மறுப்பதற்காக நீங்கள் (வைசேஷிகர்), “இரண்டு வஸ்துக்கள் (ஒன்று காரணம், மற்றொன்று காரியம்) ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் உள்ளதற்கான ஸம்பந்தம் என்பது ஸமவாயத்தின் இயல்பு”, என்று கூறலாம் (இவ்விதம் கூறினால், அந்த ஸம்பந்தத்திற்கும் ஒரு ஸமவாயம் வேண்டும் என்ற அவசியம் இல்லாமல் போவதால், அநவஸ்தை ஏற்படாது என்று அவர்கள் கருதுகிறார்கள்). இவ்விதம் நீங்கள் (வைசேஷிகர்) கூறினால், ஜாதி குணம் போன்றவற்றுக்கும் இதே இயல்பு உள்ளதாகக் கூறலாம் அல்லவோ (அப்படியானால் “நூல் – துணி” என்பதற்கு இடையில் உள்ள ஸம்பந்தம் இயல்பானது, அங்கு ஸமவாயம் என்று ஏதும் இல்லை என்றாகிவிடும்)?

**2-2-13 நித்யமேவ ச பாவாத்**

**பொருள்** – ஸமவாயம் எப்போதும் உள்ளது என்றால், அதனைக் கொண்டுள்ள பொருள்களும் எப்போதும் உள்ளன என்றாகிவிடும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஸமயாயம் மூலம் ஏற்படும் ஸம்பந்தம் நித்யம் என்று அவர்கள் கூறுகிறார்கள். இவ்விதம் கூறினால், இந்த ஸம்பந்தத்தைக் கொண்டுள்ள பொருள்கள் அனைத்தும் நித்யம் அல்ல என்னும்போது, ஸம்பந்தம் மட்டும் நித்யம் என்று கூறுவது. பொருந்தாத கருத்தாகும். ஆகவே அவயவம் மற்றும் அவயவி ஆகிய இரண்டுமே நித்யம் என்றாகிவிடும்; இதன் விளைவாக, ஸம்பந்தம் என்பதே இல்லாமல் போகும்.

**2-2-14 ரூபாதிமத்வாச்ச விபர்யயோ தர்ஶநாத்**

**பொருள்** - பரமாணுக்களுக்கு ரூபம் போன்றவை உள்ளதால், அதன் எதிர்த்தட்டானதும் உண்டாகும்; இப்படியே காணப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – பரமாணுக்களுக்கு ரூபம் போன்றவை உண்டு. ரூபம் போன்றவற்றுடன் கூடிய குடம் முதலானவற்றுக்கு நித்யமாக இருத்தல் என்பது கிடையாது; ஆகவே பரமாணுக்களும் நித்யம் அல்ல என்றாகிறது.

**2-2-15 உபயதா ச தோஷாத்**

**பொருள் -** இரண்டு விதத்திலும் தோஷம் உண்டு.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – "அநித்யமான தன்மை வருகிறது என்பதால் பரமாணுக்களுக்கு ரூபம் போன்றவை இல்லை", என்று நீங்கள் (வைசேஷிகர்) கூறலாம். இவ்விதம் கொண்டால், "கார்யத்தின் குணமானது காரணத்தின் குணத்தால் உண்டாகிறது", என்பது பொருந்தாமல் போகும். இந்தப் பொருந்தாமையை விலக்குவதற்காக ரூபம் போன்றவை உண்டு என்றால், அநித்ய தன்மை உண்டாகும். ஆக இரண்டுவிதங்களிலும் தோஷம் ஏற்படுவதால், இந்த மதமானது பொருந்தாதே ஆகும்.

**2-2-16 அபரிக்ரஹாத் ச அத்யந்த அநபேக்ஷா**

**பொருள் -** ஏற்கப்படாத காரணத்தால், முழுவதுமாக தள்ளத்தக்கது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – கணாத மதத்தின் எந்த ஒரு அம்சமும் வைதிகர்களால் ஏற்கப்படக் கூடியதல்ல. அனைத்துவிதங்களிலும் அது பொருந்தாமல் உள்ளதால், அதனை முற்றிலுமாகவே தள்ளவேண்டும்.

## அதிகரணம் – 3 – ஸமுதாயாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - பௌத்த மதத்தின் பிரிவான வைபாஷிகர் மற்றும் ஸௌத்ராந்திகர் மதங்கள் தள்ளப்படுகிற்து. பௌத்தர்களில் நான்கு பிரிவினர் உள்ளனர் - வைபாஷிகர், ஸௌத்ராந்திகர், யோகாசாரர், மாத்யமிகர் என்பவர்கள் ஆவர். வைபாஷிகர் கூறுவது உலகம் ப்ரத்யக்ஷமாகவும், நொடிக்கு நொடி அழிந்தும்

உண்டாகியபடியும் (க்ஷணிகம் எனப்படும்) உள்ளது என்கிறார்கள். ஸௌத்ராந்திகர் அநுமானத்தால் மட்டுமே உலகம் அறியப்படுகிறது, க்ஷணிகமாகவும் உள்ளது என்கிறார்கள். யோகாசாரர் வெளி உலகமே இல்லை, க்ஷணிகமான ஞானம் மட்டுமே உள்ளது என்கிறார்கள். மாத்யமிகர் எதுவுமே இல்லை, சூந்யமே உள்ளது என்கிறார்கள்.

**2-2-17 ஸமுதாய உபய ஹேதுகே அபி தத் அப்ராப்தி:**

**பொருள் -** இரண்டையும் காரணப்பொருளாகக் கொண்டாலும்; ஏற்படாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** இவர்கள், "பூமி முதலான பூதங்கள், பரமாணுக்களைத் தங்கள் காரணப்பொருளாகக் கொண்டுள்ள கூட்டம் (ஸமுதாயம் என்பர்) ஆகும். சரீரம், இந்த்ரியம் ஆகியவை பூமி முதலானவற்றைத் தங்கள் காரணப்பொருளாகக் கொண்ட கூட்டம் ஆகும்", என்கிறார்கள். இவற்றைக் காரணப்பொருளாகக் கொண்டு (ஜகத்தைப் போன்ற) பெரிய பொருள் உண்டாகாது. ஏன்? (பரமாணுக்கள் மற்றும் பூமி முதலான பூதங்கள்) அனைத்தும் க்ஷணிகங்கள் (ஒவ்வொரு நொடியிலும் அழிந்தபடி உள்ளவை) என்பதே அவர்கள் கருத்தாகும். இவ்விதம் பரமாணுக்களும், பூமி உள்ளிட்ட பூதங்களும் ஒவ்வொரு க்ஷணத்திலும் அழிந்தபடி உள்ளபோது, ஒரு கூட்டமாக அடுத்த க்ஷணத்தில் உள்ள பொருள்கள் எவை என்னும் கேள்வி எழுகிறது.

**2-2-18 இதரேதர ப்ரத்யயத்வாத் உபபந்நம் இதி சேத் ந ஸங்காதபாவா நிமித்தத்வாத்**

**பொருள் -** ஒன்றுக்கொன்று தொடர்ந்து காரணமாக உள்ளதால் ஜகத்காரணம் பொருந்தும் என்று கூறினால்; பொருந்தாது; காரணம், அவித்யை போன்றவையும் சுழன்றபடி உள்ளதால் காரணம் ஆகாது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** ஒவ்வொரு க்ஷணமும் அழிந்தபடி உள்ளவற்றை, அவித்யை காரணமாகவே, நிலையானவை என்று நாம் அறிகிறோம். இத்தகைய அவித்யையால் விருப்பு மற்றும் வெறுப்பு போன்றவையும், விருப்பு மற்றும் வெறுப்பு போன்றவற்றால் அவித்யையும் என ஒன்றுக்கு ஒன்று காரணமாக உள்ளன. ஆகவே இது போன்ற நிலையே அனைத்திற்கும் காரணமாக உள்ளது எனலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. அவித்யை போன்றவை (பூமி முதலான பூதங்களின்) கூட்டத்திற்குக் காரணம் அல்ல. முத்துச்சிப்பியை நோக்கி வெள்ளி என்ற தவறாக அறிவதால், அங்கு முத்துச்சிப்பி உற்பத்தி ஆவதில்லை (அதாவது அந்த மயக்கம் என்பது சிப்பியின் உற்பத்திக்குக் காரணம் அல்ல). மேலும் யார் ஒருவனுக்கு க்ஷணிகமானவற்றில் நிலையான தன்மை உள்ளதாகத் தோன்றுகிறதோ, (வைபாஷிகர் மதத்தின்படி அவனும் க்ஷணிகம் என்பதால்) அவன் அந்த நொடியிலேயே அழிகிறான். ஆகவே அவித்யையால் தோன்றும் விருப்பு போன்றவை யாரிடம் உண்டாகும்?

**2-2-19 உத்தரோத்பாதே ச பூர்வ நிரோதாத்**

**பொருள் -** பின் க்ஷணம் ஏற்படும்போது முன் க்ஷணம் அழிவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அடுத்த க்ஷணத்தில் ஒரு குடம் உண்டாகும்போது, முந்தைய க்ஷணத்தில் இருந்த குடம் அழிகிறது. ஆக, முன்னர் இருந்த ஒன்று இல்லாமலேயே, பின்னர் ஒன்று உண்டாகலாம் என்றாகி, இல்லாத ஒன்றிலிருந்து ஒரு பொருள் உண்டாகலாம் என்றாவதால், எப்போதும் எங்கும் அனைத்துமே உற்பத்தி ஆகலாம் என்றாகிவிடும்.

**2-2-20 அஸதி ப்ரதிஜ்ஞோபரோத: யௌகபத்யம் அந்யதா**

**பொருள் -** காரணம் இல்லாதபோது ஒப்புக்கொண்ட விஷயத்தில் முரண்பாடு ஏற்படும்; ஒரே நேரத்தில் தோன்றுவதாக இருக்கும்.

**குறிப்பு –** அடுத்த பத்தியில் உள்ள வேதாந்தஸாரத்தின் பல வாக்கியங்கள், இதே ஸூத்ரத்திற்கான ஸ்ரீபாஷ்யத்திலிருந்து தரப்பட்டவை ஆகும். விளங்குவதற்காக இவ்விதம் உள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – காரணப்பொருள் இல்லாமல் கார்யப்பொருள் உண்டாகிறது என்று நீங்கள் (வைபாஷிகர்) கூறினால், உங்களுடைய கொள்கையான "அதிபதி ஸஹகாரி … - செயலாற்றுபவன், உதவி செய்பவன் … ஆகியவை ஞானத்திற்குக் காரணங்கள்" என்பது முரண்படும் அல்லவோ? இந்தக் கொள்கைக்கு விரோதம் ஏற்படக்கூடாது என்பதற்காக நீங்கள் (வைபாஷிகர்) - முன் க்ஷணத்தில் தோன்றிய குடம் உள்ளபோதே, அடுத்த க்ஷணத்திற்கான குடம் தோன்றுகிறது - என்று கூறினால், கார்யம் மற்றும் காரணம் ஆகிய இரண்டுவிதமான குடங்களும் ஒரே க்ஷணத்தில் உள்ளதாகத் தோன்றும். இதனை மறுக்கும்விதமாக நீங்கள் (வைபாஷிகர்) - க்ஷணிகத்வம் என்பது இருக்கவே செய்கிறது - என்று கூறினால், இந்த்ரிய விஷயங்கள் இந்த்ரியங்களால் உணரப்படுதலும், அதனை அறிவதான ஞான உற்பத்தியும் ஒரே க்ஷணத்தில் நிகழ்கிறது என்றாகிவிடும்.

**2-2-21 ப்ரதி ஸங்க்யா அப்ரதி ஸங்க்யா நிரோத அப்ராப்தி: அவிச்சேதாத்**

**பொருள்** - ஸ்தூல ஸூக்ஷ்ம அழிவுகள் ஏற்படாது. ஒட்டாத காரணத்தால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – "நிரோதம்" என்றால் "முழுமையான அழிவு" ஆகும். அதாவது இவ்விதம் அழியும் பொருளானது, ஸ்தூலமாகவோ மற்றும் ஸூக்ஷ்மமாகவே இருக்காது; காரணம், "பானையின் அழிவு" என்றால், "பானையானது ஓடுகளாக மாறியது" என்றே பொருள். மேலும் ஸத் எனப்படும் த்ரவ்யமே அனைத்து நிலைகளிலும் தொடர்ந்தபடி உள்ளது.

**2-2-22 உபயதா ச தோஷாத்**

**பொருள்** - இல்லாதவற்றிலிருந்து பொருள் உண்டாதல், இருக்கின்ற பொருள் இல்லை என்றாதல் ஆகிய இரண்டிலுமே தோஷம் உள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம்** - க்ஷணிகத்வாதிகளால் (பௌத்தர்கள் - அனைத்துமே க்ஷணிகர் என்று கூறுபவர்கள்) இல்லாத ஒன்றிலிருந்து உற்பத்தியும் (துச்சதையிலிருந்து உற்பத்தி), உற்பத்தி ஆனவை இல்லாத தன்மையையும் அடைவதாகக் கூறுவது

பொருந்தாது என்று முன்பே கூறப்பட்டது. இந்த இரண்டுவிதமான கருத்துக்களுமே தோஷம் உள்ளவை ஆகும். இல்லாத ஒன்றிலிருந்து உண்டாகும் பொருளும், இல்லாத தன்மையையே கொண்டதாக இருக்கும். ஆகவே அவர்கள் கூறும் துச்சத்வம் என்பதை நிரூபிக்க இயலாது.

### 2-2-23 ஆகாஶே ச அவிஶேஷாத்

**பொருள்** - ஆகாச விஷயத்திலும் (பௌத்தர்களின் வாதம்) பொருந்தாது, அங்கும் வேற்றுமை இல்லை என்பதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – பௌத்தர்கள் கூறுவதான "ஆகாசம் துச்சதை - ஆகாசம் சூந்யம்" என்ற வாதமும் தள்ளப்படுகிறது. ஏனென்றால், கழுகு முதலானவை பறக்கும் இடமாக ஆகாசம் உள்ளது.

### 2-2-24 அநுஸ்ம்ருதேஶ்ச

**பொருள்** - மறுபடியும் அனுபவிக்கப்படுவதால்

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – நினைவுபடுத்திக் கொள்ளுதல் (இது ப்ரத்யபிஜ்ஞ ஞாநம் எனப்படும்) என்பதன் விளைவாக க்ஷணிகத்வம் என்பது பொருந்தாது (அதாவது முன்பு அறியப்பட்ட அனைத்து வஸ்துக்கள் குறித்தும், "இந்தப் பொருள் முன்பு பார்த்த அந்தப் பொருளே ஆகும்" என்ற எண்ணம் ஏற்படுகிறது). பொதுவாக, "இதுவே அது" என்னும் எண்ணத்தில் ஒரு குறிப்பிட்ட பொருள் மட்டுமே (மீண்டும் நினைவு கூரப்பட்டு) அறியப்படுகிறது. இங்குள்ள ஸாமாநாதிகரண்யத்தின் மூலம், முன்பு அறியப்பட்ட பொருள் இப்போது மீண்டும் அறியப்படுவதை நாம் உணர்கிறோம். அதாவது, ஒருவன் முன்பு ஒருமுறை ஒரு பொருளைப் பார்த்தபோது, அந்தப் பொருளுக்கும் இந்த்ரியங்களுக்கும் உண்டான தொடர்பானது, இப்போது அதே பொருளை மீண்டும் காணும்போது, நினைவில் வருகிறது.

**2-2-25 ந அஸத் அத்ருஷ்டத்வாத்**

**பொருள் -** இல்லாத ஒன்றிலிருந்து அல்ல, இதனைக் காண இயலவில்லை.

**குறிப்பு –** அடுத்த பத்தியில் உள்ள வேதாந்தஸாரத்தின் பல வாக்கியங்கள், இதே ஸூத்ரத்திற்கான ஸ்ரீபாஷ்யத்திலிருந்து தரப்பட்டவை ஆகும். விளங்குவதற்காக இவ்விதம் உள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** நீங்கள் (ஸௌத்ராந்திகர்கள்), "பொதுவாகவே ஞானத்திற்கு ஒரு விசித்ரமான தன்மை உண்டு. ஒரு பொருள் தன்னை இவ்விதம் ஞானத்திற்கு ஸமர்ப்பித்த பின்னர் நாசம் அடைந்தாலும், அவற்றின் நீலநிறம் போன்ற பல தன்மைகள் மூலம் நாம் அந்தப் பொருளை இன்னது என்று நாம் தீர்மானித்து விடுகிறோம்", என்று கூறுவது சரியல்ல. இவ்விதம் கொண்டால், அழிந்து போன ஒரு பொருளைக் குறித்து தொடர்ச்சியாகப் பலமுறை அதன் நீலநிறம் குறித்த ஞானம் ஏற்படும்போது, மஞ்சள் நிறத்தைக் குறித்த ஞானம் ஏற்படுவது எப்படி என்ற கேள்வி எழுகிறது.

**2-2-26 உதாஸீநாநாம் அபி ச ஏவம் ஸித்தி:**

**பொருள் -** முயலாதவர்களுக்கு அனைத்து கிட்டும் என்றாகிவிடும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அனைத்தும் க்ஷணிகமே என்று கொண்டால், ஒரு செயலைச் செய்பவன் ஒருவன் என்றும், அதன் பலனை அனுபவிப்பவன் வேறு ஒருவன் என்றும் ஆகிவிடும் (ஆனால் இருவரும் ஒரே மனிதனே ஆவான்). இதன் விளைவாக எந்தவிதமான முயற்சியும் செய்யாதவர்களுக்குக்கூட அனைத்தும் கிட்டும் என்றாகிவிடும்.

## அதிகரணம் – 4 - உபலப்தி அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** பௌத்த மதத்தின் பிரிவான யோகாசார மதம் தள்ளப்படுகிறது.

**2-2-27 ந அபாவ உபலப்தே:**

**பொருள் -** அறிவு தவிர்ந்த வெளிப்பொருள்கள் இல்லை, அவையும் அறிவுக்கு விஷயம் என்பதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** "ஞானம் மட்டுமே உள்ளது (அதாவது அது மட்டுமே உண்மை), அதனைத் தவிர்த்து வேறு ஏதும் இல்லை", என்று கூறும் யோகாசாரர்கள் கருத்தும் சரியல்ல. பொதுவாக "நான் குடத்தை அறிகிறேன்" என்னும் ஞானத்திற்கு இலக்காக "குடம்" என்பது உள்ளது. ஆகவே அந்தக் குடத்தை இல்லை என்று கூற முடியாது. ஞானம் என்பது ஒரு புருஷனுக்கு ஒரு பொருளைக் குறித்து அறிவதற்குத் தேவையான உதவியைச் செய்கிறது.

**2-2-28 வைதர்ம்யாத் ச ந ஸ்வப்நாதிவத்**

**பொருள் -** வேறுபட்டிருப்பதால், கனவு ஞானம் போன்றவை போல் அல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** "கனவில் ஏற்படும் ஞானம் போன்றே விழிப்பு நிலையில் உண்டாகும் ஞானமும் உண்மையற்றதே ஆகும்", என்று கூறலாகாது; காரணம், அவற்றில் வேறுபாடு உண்டு. விழிப்பு நிலையில் உள்ளபோது "இந்த்ரியங்களுக்கு தோஷம் இன்மை, ஏற்படும் ஞானம் வேறு எதனாலும் தள்ளப்படாத தன்மை" ஆகியவை உள்ளதால் ஆகும்.

**2-2-29 ந பாவ: அநுபலப்தே:**

**பொருள் -** பொருள்கள் இன்றி ஞானத்தின் இருப்பு மட்டும் என்பது கிடையாது; இவ்விதம் காணப்படாமையால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - பொருள்கள் ஏதும் இன்றி ஞானம் மட்டும் இருத்தல் என்பது ஸம்பவிக்காது. ஏன்? அது போன்று எங்கும் காணப்படுவதில்லை. கனவில் உள்ள ஞானத்திலும் கூட பொருள்கள் இன்றி ஞானம் ஏற்படுவதில்லை என பின்னர் நிரூபிப்போம்.

அதிகரணம் – 5 - ஸர்வதா அநுபபத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – பௌத்த மதத்தின் மாத்யமிக பிரிவு தள்ளப்படுகிறது.

**2-2-30 ஸர்வதா அநுபபத்தே: ச**

**பொருள்** - எந்தவிதத்திலும் பொருந்தாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - மாத்யமிகரின் கருத்தாகிய "அனைத்தும் சூந்யம்" என்பது பொருந்தாது (அல்லது ஸம்பவிக்காது). அனைத்தும் ஸத்தா (இருக்கும் வஸ்து) அல்லது அஸத்தா (இல்லாத பொருள்) என்று மட்டுமே கூறப்படலாம் அல்லாமல், துச்சத்வம் (சூந்யம்) என்பது ஏற்படாது; காரணம் அதனை நிரூபிக்க இயலாது. ஏனென்றால், ஒரு பொருள் உள்ளது (ஸத்) என்பதும், இல்லை (அஸத்) என்பதும், ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட நிலையாகும்.

அதிகரணம் – 6 - ஏகஸ்மிந் அஸம்பவாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** இந்த அதிகாணரத்தில் ஜைனர்களுடைய மதம் தள்ளப்படுகிறது

**2-2-31 ந ஏகஸ்மிந் அஸம்பவாத்**

**பொருள்** - ஒன்றிலேயே இருப்பது பொருந்தாது என்பதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - அடுத்து அர்ஹத மதம் (ஜைனர்கள்) கூறுவதும் பொருந்தாது. அவர்கள் கூறுவது போன்று ஒரே பொருளில் ஒரே நேரத்தில் "ஸத், அஸத்

(இருப்பு, இல்லாமை)", "நித்யமாக உள்ள தன்மை, அநித்யமான தன்மை", "பேதம், அபேதம்" ஆகிய அனைத்தும் ஸம்பவிக்காது. (ஒரு பொருளும், அதன் குறிப்பிட்ட நிலையும் பர்யாயம் எனப்படுகின்றன. இந்த பர்யாயம் என்பது வேறு ஒரு பொருள் என்றாகும்). ஒரு பொருளுடைய பர்யாய ரூபங்களாகிய மண் உருண்டை, குடம், உடைந்த ஓடுகள் போன்றவை ஒரே நேரத்தில் தோன்ற முடியாது. இது போன்று "இருப்பு" என்ற நிலையுடன் காணப்படும் வஸ்துவானது, அதே நேரத்தில் "இல்லை" என்ற நிலையுடன் காணப்பட இயலாது. மண்ணானது அதன் பல்வேறு பகுதிகளுடைய வேறுபாட்டால் குடம், மண் தட்டு என்பது போன்றதாகிறது. ஒரே த்ரவ்யத்தின் அநித்யத்தன்மையும், அதற்கு முரணாக உள்ள நித்யத்தன்மையும், ஒரே பொருளில் காணப்பட இயலாது; இதன் காரணம், ஒன்று பொருளின் உற்பத்தியுடனும், மற்றொன்று பொருளின் அழிவுடன் ஸம்பந்தம் கொண்டுள்ளது. ஆக இவை ஒரே பொருளில், ஒரே நேரத்தில் இருக்க முடியாது.

**2-2-32 ஏவம் ச ஆத்மா அகார்த்ஸ்ந்யம்**

**பொருள் -** ஆத்மாவிற்கு நிறைவு இன்மை ஏற்படுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** நீங்கள் (ஜைனர்கள்) கூறுவது போன்று, ஆத்மாவானது சரீரத்தின் அளவே கொண்டது என்றால், பெரிய சரீரம் ஒன்றிலிருந்த ஆத்மா சிறியதொரு சரீரத்தில் புகும்போது, அதன் ஒரு பகுதி மட்டுமே புக இயலும் என்பதால், முழுமையாக இருக்காது என்றாகும்.

**2-2-33 ந ச பர்யாயாத் அபி அவிரோதா: விகாராதிப்ய:**

**பொருள் -** பர்யாயம் மூலம் கூற முடியாது, அங்கும் தோஷங்கள் உண்டு.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** சுருக்கம் அடைதல், விரிவு அடைதல் போன்ற தன்மைகள் ஆத்மாவிற்கு உள்ளதால், அவற்றின் மூலம் அது அந்தந்த நிலை மாறுதல்களை அடைகிறது என்று கூறி, கடந்த ஸூத்ரத்தில் கூறப்பட்ட முரண்பாட்டை விலக்க

இயலாது. ஏனென்றால், இதன் மூலம் ஆத்மாவிற்கு, குடம் முதலானவை போன்று மாறுதல்கள் ஏற்படும் என்றாகிறது.

**2-3-34 அந்த்யாவஸ்திதே: ச உபயநித்யத்வாத் அவிஶேஷ:**

**பொருள்** - ஆத்மாவிற்கு மோக்ஷ நிலையில் உண்டாகும் அளவு என்பதே இயல்பானதால், அந்த நிலையில் ஆத்மாவும் அதன் பரிணாமமும் நித்யம் என்பதால் வேறுபாடு இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – "அந்த்ய" என்றால் "மோக்ஷ நிலையில் உள்ள அளவு" என்று பொருள். அந்த நிலையில் உள்ள அளவே ஆத்மாவின் இயல்பான அளவு என்பதால், அதன் பின்னர் அந்த அளவானது மாறாமல் உள்ளது. ஆத்மாவும், அதன் அளவும் நித்யமாக உள்ளன; ஆகவே இதற்கு முன்புள்ள நிலைகளிலும் இந்த அளவே இருந்திருக்கவேண்டும் (காரணம், இயல்பான ஒரு விஷயம் மாறாது அல்லவோ). எனவே, "ஆத்மாவின் அளவானது, பலவிதமான சரீரங்களின் அளவே ஆகும்", என்று உரைத்தால், ஒரு சில சரீரங்களில் முழுமை இல்லாமல் போகும்.

### அதிகரணம் – 7 – பசுபத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - பாசுபத மதம் தள்ளப்படுகிறது

**2-2-35 பத்யு: அஸாமஞ்ஜஸ்யாத்**

**பொருள்** – பசுபதியின் மதம் பொருத்தம் அற்றது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ர. ஸூ. (2-2-31) - ந ஏகஸ்மிந் அஸம்பவாத் – என்பதில் உள்ள "ந:" என்பது இங்கும் தொடர்வதாகக் கொள்ளவேண்டும். பசுபதியின் மதமானது ஏற்கத்தக்கது அல்ல. இதன் காரணம், அந்த மதத்தில் வேதத்திற்கு முரணாக "உபாதானக்காரணம் மற்றும் நிமித்தகாரணம் ஆகியவை வெவ்வேறு" என்பதும், வேதத்திற்கு முரணான ஒழுக்கங்களும் கூறப்படுவதால் ஆகும்.

**2-2-36 அதிஷ்டாந அநுபபத்தே: ச**

**பொருள் -** நியமிப்பது இயலாது என்பதால் பொருந்தாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ஈச்வரனை அனுமானத்தால் நிரூபிக்கும் அந்த மதத்தில், "அவன் நிமித்தகாரணம் மட்டுமே ஆவான்", என்று கூறப்படுகிறது. இது ஸம்பவிக்காது. இவ்விதம் கொண்டால், சரீரம் அற்ற ஈச்வரன் ப்ரதானத்தை நடத்துவது பொருந்தாது. சரீரம் உண்டு என்றால், அத்தகைய சரீரத்தின் உற்பத்தி குறித்து எந்த ஓர் இடத்திலும் கூறப்படவில்லை. அவயவங்களுடன் கூடிய அவனுடைய சரீரம் நித்யமானது என்றால் பூமி, மலை முதலானவையும் நித்யமே என்று கூறுவதில் தோஷம் இல்லை.

**2-2-37 கரணவத் சேத் ந போகாதிப்ய:**

**பொருள் -** சரீரம் அற்ற ஜீவன், இந்திரியங்களை நியமிப்பது போன்று, எனக் கூறினால் அனுபவிப்பது ஏற்படும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** "ஜீவாத்மா, சரீரம் இல்லாதவனாக உள்ளபோதிலும் தனது இந்த்ரியங்களையும் சரீரத்தையும் நியமிப்பது போன்று ஈச்வரனும் சரீரம் இன்றியே ப்ரதானத்தை நியமிக்கிறான்", என்று பூர்வபக்ஷி கூறலாம். இது சரியல்ல. புண்ணிய பாபங்கள் காரணமாக, அவற்றின் பலனை அனுபவிப்பதற்காகவே ஜீவாத்மா அவ்விதம் செயல் புரிகிறான் (இது ஈச்வரனுக்குப் பொருந்தாது).

**2-2-38 அந்தவத்வம் அஸர்வஜ்ஞதா வா**

**பொருள் -** எல்லையுடன் கூடியவன், அனைத்தையும் அறியாதவன் என்றாகிவிடும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ஈச்வரனுக்கும் அவ்விதமே (புண்ணிய பாப பலன்) உண்டு என்றால், க்ஷேத்ரஜ்ஞர்கள் போன்றே எல்லையுடன் கூடியவனாகவும், குறுகிய ஞானம் கொண்டவனாகவும் அவனைக் கூறும்படியாகும்.

## அதிகரணம் – 8 – உத்பத்யஸம்பவாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - பாஞ்சராத்ர ஆகமம் ப்ரமாணம் அல்ல என்று கூறுவது தள்ளப்படுகிறது.

**2-2-39 உத்பத்தி அஸம்பவாத்**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரம்) ஜீவாத்மாவிற்கு உற்பத்தி ஒட்டாது என்பதால் பாஞ்சராத்ரம் ப்ரமாணம் அல்ல.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஜீவாத்மாவின் உற்பத்தியைக் கூறுவதால், ஸாங்க்யம் போன்று பாஞ்சராத்ரமும் தள்ளபட வேண்டியதே ஆகும். காரணம், இக்கருத்தானது ச்ருதிக்கு முரண்பாடாக உள்ளதால் ப்ரமாணம் ஆகாது.

**2-2-40 ந ச கர்த்து: கரணம்**

**பொருள்** – (பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) கர்த்தாவாகிய ஜீவாத்மாவிடமிருந்து மனம் உற்பத்தி ஆகிறது என்பது பொருந்தாது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – (கடந்த ஸூத்ரத்தில் கூறப்பட்ட பரமஸம்ஹிதையில் - ஸங்கர்ஷணாத் ப்ரத்யும்ந ஸம்ஜ்ஞும் மநோ ஜாயதே - ஸங்கர்ஷணனிடமிருந்து ப்ரத்யும்நன் என்ற பெயர் கொண்ட மனம் உண்டானது – என்று கூறுவதில்) கர்த்தாவாகிய ஜீவாத்மாவிடமிருந்து, கரணமாகிய மனம் உற்பத்தி ஆகிறது என்று ஏற்பட்டது. ஆனால் இப்படிப்பட்ட உற்பத்தியை ச்ருதி கூறவில்லை. ச்ருதியானது முண். (2-1-3) - ஏதஸ்மாத் ஜாயதே ப்ராண: மநஸ ஸர்வேந்த்ரியாணி ச - அவனிடமிருந்து (பரமாத்மா) ப்ராணன், மனம், அனைத்து இந்த்ரியங்கள் ஆகியவை உண்டாயின – என்று கூறுகிறது.

**2-2-41 விஜ்ஞாநாதிபாவே வா தத் அப்ரதிஷேத:**

**பொருள் -** ஞானஸ்வரூபம் போன்றவற்றுடன் உள்ளதால் விரோதம் இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** (கடந்த இரண்டு ஸூத்ரங்களில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) – "வாஸுதேவாத் ஸங்கர்ஷணோ நாம ஜீவ: - வாஸுதேவனிடமிருந்து ஸங்கர்ஷணன் என்னும் ஜீவாத்மா தோன்றுகிறான்" என்பதான வாக்கியத்தில் உள்ள ஸங்கர்ஷணன் என்ற சொல்லானது, ஞானரூபமான வாஸுதேவனையே குறிப்பதாகும். இப்படிப்பட்ட கருத்தை எதுவும் தள்ள இயலாது. பரப்ரஹ்மமாகிய வாஸுதேவன் தனது இச்சைப்படி அவதரிக்கிறான் என்பதை புருஷ ஸூக்தத்தில் – அஜாயமாநோ பஹுதா விஜாயதே - பிறப்பற்ற அவன், பல பிறவிகள் எடுத்து – என்று ச்ருதி கூறுகிறது. ஜீவன் முதலான பதங்கள், அந்தந்த சரீரங்களைப் பெற்ற ஸங்கர்ஷணன் முதலானவர்களைக் குறிக்கிறது.

**2-2-42 விப்ரதிஷேதாத் ச**

**பொருள் –** மறுக்கப்பட்டுள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அந்த (பாஞ்சராத்ர) தந்த்ரத்திலும் ஜீவாத்மாவிற்கு உற்பத்தி என்பது மறுக்கப்பட்டிருக்கிறது. இதனை பரமஸம்ஹிதை – வ்யாப்தி ரூபேண ஸம்பந்த: தஸ்யாச்ச புருஷஸ்ய ச | ஸ ஹி அநாதி: அநந்தச்ச பரமார்த்தேந நிச்சித: – ப்ரக்ருதியுடன் ஸம்பந்தம் கொண்டுள்ள புருஷன் (ஜீவாத்மா) எப்போதும் உள்ளான், முடிவற்றவன், உண்மையான ஸ்வரூபம் கொண்டவன் – என்று கூறுவதால், ச்ருதியுடன் முரண்பாடு இல்லை.

## பாதம் – 3 – வியத் பாதம்

இந்தப் பாதத்தில் வியத் எனப்படும் ஆகாசம் போன்றவையும் ப்ரஹ்மத்தின் கார்யமே என்று நிரூபிக்கப்பட உள்ளது.

அதிகரணம் – 1 – வியத் அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஆகாசம் ப்ரஹ்மத்திடமிருந்து உற்பத்தி ஆகிறது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**2-3-1 ந வியத் அச்ருதே:**

**பொருள்** - (இந்த ஸூத்ரம் பூர்வபக்ஷம் மட்டுமே உள்ளதாகும்) ஆகாசம் உற்பத்தி ஆவதில்லை; உற்பத்தியைக் கூறுகின்ற ச்ருதிகள் காணப்படாமையால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - ஆகாசம் உற்பத்தி ஆவதில்லை. ஏன்? ஆகாசத்தின் உற்பத்தியைக் கூறும் ச்ருதி வாக்கியங்கள் இல்லாமையால் ஆகும். ஆத்மாவைப் போன்றே ஆகாசமும் அவயவம் (உறுப்புக்கள்) இல்லாமல் உள்ளதால், ச்ருதியில் இதற்கு உற்பத்தி உள்ளதாகக் கூறப்படவில்லை.

**2-3-2 அஸ்தி து**

**பொருள்** – (இது ஸித்தாந்த ஸூத்ரம் ஆகும்) ஆகாசத்திற்கு உற்பத்தி உண்டு.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (ஆகாசத்திற்கு உற்பத்தி உண்டு என) ச்ருதி கூறுவதைக் கேட்க இயல்கிறது. இந்த்ரியங்களுக்குப் புலப்படாத அர்த்தங்களைக் கூறுவதாகிய ச்ருதியானது, தை. (2-1-2) – ஆத்மந ஆகாச: ஸம்பூத: - அந்த ஆத்மாவிலிருந்து ஆகாசம் வந்தது – என்று, ஆகாசத்திற்கு உற்பத்தி உள்ளதை வெளிப்படுத்துகிறது. ஆனால், கட. (1-2-18) – ந ஜாயதே – அவன் பிறப்பதில்லை – என்பதன் மூலம் ஜீவாத்மாவிற்கு உற்பத்தி மறுக்கப்படுகிறது.

**2-3-3 கௌணீ அஸம்பவாத் ஶப்தாச்ச**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரம் ஆகும்) அக்னியை முதலில் படைத்ததாகக் கூறியிருப்பது பொருந்தாது என்பதாலும், ஆகாசம் அழிவற்றது என்று

கூறும் ச்ருதியாலும், ஆகாசத்திற்கு உற்பத்தி உள்ளதாகக் கூறும் வாக்கியங்கள் அமுக்கியமானவை ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (6-2-3) - தத் தேஜோ அஸ்ருஜத: - அது தேஜஸ்ஸைப் படைத்தது - என்று முதலில் தேஜஸ்ஸையே ப்ரஹ்மம் படைத்ததாகக் கூறப்பட்டது. ஆகவே, தை. (2-1-2) – ஆத்மந ஆகாச: ஸம்பூத: - அந்த ஆத்மாவிலிருந்து ஆகாசம் வந்தது – என்ற வாக்கியத்தை கௌணமாகவே பொருள் கொள்ளவேண்டும் (உதாரணமாக, "சிங்கம் போன்றவன்" என்னும் வாக்கியத்தில் உள்ள சிங்கம் என்ற சொல்லானது கௌணமாக உள்ளது என்று கூறப்படுகிறது; இது வீரத்தைக் குறிக்கிறது). மேலும் ப்ரு. (2-3-3) - வாயுச்ச அந்தரிக்ஷம் ச ஏதத் அம்ருதம் – வாயுவும் ஆகாசமும் அழிவற்றவை - என்றும் கூறப்பட்டதைக் காணலாம்.

**2-3-4 ஸ்யாத் (ச) ஏகஸ்ய ப்ரஹ்ம சப்தவத்**

**பொருள்** – (இதுவும் பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ஒரே சொல்லிற்கு இரண்டு பொருள் இருக்கலாம், ப்ரஹ்மம் என்ற சொல் போன்று.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – "ஸம்பூத: = உண்டானது" என்ற சொல்லானது ஆகாசம் என்பதுடன் படிக்கும்போது கௌணமாகவும், மற்றவற்றுடன் படிக்கும்போது நேரடியாகவும் கொள்ளப்படுகிறது [அதாவது அந்தப் பதத்திற்கு, தை. (2-1-1) – தஸ்மாத் வா ஏதஸ்மாத் வா ஆத்மந ஆகாச ஸம்பூத: - பரமாத்மாவிடமிருந்து ஆகாசம் உண்டானது - என்று கூறுகின்ற வரியில் உள்ள ஆகாசம் என்பதுடன் முக்கியத்வம் உண்டாகாது என்பதால், "ஸம்பூத:" என்ற பதம் அமுக்யமாகவே படிக்கப்படுகிறது, ஆனால் அதே "ஸம்பூத:" என்ற சொல்லானது, தை. (2-1-1) - வாயோரக்நி: - என்ற இடத்தில், முக்கியத்வம் வாய்ந்ததாகவே கொள்ளப்படுகிறது]. முண். (1-1-10) – தஸ்மாத் ஏதத் ப்ரஹ்ம நாம ரூபம் அந்நம் ச ஜாயதே – அந்தப் பரமாத்மாவிடமிருந்து ப்ரஹ்மம் எனப்படும் இந்த ப்ரக்ருதி, பெயர் மட்டும் ரூபங்களுடன் கூடிய கார்யப்பொருளாகத் தோன்றுகிறது - என்ற வரியில், "ப்ரஹ்மம்" என்ற பதமானது "ப்ரக்ருதி" என்ற பொருளில் அமுக்யமாக (தனது முக்கியமான அர்த்தத்தை விடுத்து) படிக்கப்பட்டது. ஆனால் அதே ப்ரகணத்தில் உள்ள மற்றொரு வரியான முண். (1-1-9) - தபஸா சீயதே ப்ரஹ்ம -

ஸங்கல்பத்தால் ப்ரஹ்மம் புஷ்டி அடைகிறது - என்ற வரியில், "ப்ரஹ்மம்" என்பது முக்கிய அர்த்தத்தில் படிக்கப்பட்டது. இந்தக் கருத்தை அடுத்து மறுக்கிறார்.

**2-3-5 ப்ரதிஜ்ஞா அஹாநி: அவ்யதிரேகாத்**

**பொருள்** - (ப்ரஹ்மத்தை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததாகும் என்னும்) உறுதிக்கு எந்தக் குறையும் இல்லை, காரணம் ஆகாசம் வேறுபடாமல் உள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) சாந். (6-1-3) - யோநச்ருதம் ச்ருதம் - மண்கட்டியைக் குறித்து அறிந்தால் மண்ணால் செய்யப்பட்ட அனைத்தையும் அறிந்ததாகும் – என்பதில் கூறப்பட்டதான "ஒன்றைக் குறித்து அறிந்தால், மற்ற அனைத்தையும் அறிந்ததாகும்" என்ற ப்ரதிஜ்ஞையை ஏன் விட இயலாது என்றால், ஆகாசமானது ப்ரஹ்மத்தின் கார்யமாக உள்ளதாலும், அதற்கும் ப்ரஹ்மத்திற்கும் வேறுபாடு இல்லை என்பதாலும் ஆகும்.

**2-3-6 ஶப்தேப்ய:**

**பொருள்** - (ஸ்ருஷ்டிக்கு முன்பு ப்ரஹ்மம் மட்டுமே இருந்தது என்னும்) ச்ருதி வாக்கியங்களாலும் (ஆகாசத்திற்கு உற்பத்தி உண்டு).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – தை. (2-1-1) – ஆகாச ஸம்பூத: - பரமாத்மாவிடமிருந்து ஆகாசம் உண்டானது - என்று கூறுகின்ற வரியானது, "ஆகாசம் உற்பத்தி ஆகிறது", என்பதையே உணர்த்துகிறது. இந்த வாக்கியமானது, "முதலில் தேஜஸ்ஸே உற்பத்தி ஆயிற்று" என்பதைக் கூறும் வாக்கியமான சாந். (6-2-3) - தத் தேஜ: அஸ்ருஜத - அது தேஜஸ்ஸைப் படைத்தது – என்பதில், "ஆகாசம்" என்னும் பதம் வரவில்லை என்பதால் தள்ளப்பட இயலாது.

**2-3-7 யாவத் விகாரம் து விபாகோ லோகவத்**

**பொருள்** - (ஆகாசம் போன்ற) அனைத்து கார்யப்பொருள்களுக்கும் உற்பத்தி கூறப்பட்டுள்ளது, உலகத்தைப் போன்றே.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சாந். (6-8-7) - ஐததாத்ம்யமிதம் ஸர்வம் - இந்த அனைத்தும் ப்ரஹ்மத்தையே ஆத்மாவாகக் கொண்டுள்ளன - என்பது போன்ற வாக்கியங்கள் மூலம், ஆகாசம் ஒரு மாற்றம் (அதாவது மாற்றத்தால் உண்டானது, அதாவது கார்யப்பொருள்) என்று கூறப்பட்டுள்ளது. இங்கு உணர்த்தப்படுவது என்னவென்றால், தேஜஸ் முதலானவற்றின் உற்பத்தி குறித்துக் கூறும் வாக்கியங்களானவை, மற்ற வஸ்துக்களுக்கும் உற்பத்தி உள்ளதையும் சேர்த்தே கூறுகின்றன என்பதாகும். பொதுவாக லோகத்தில், "தசேமே தேவதத்த புத்ரா: - இந்தப் பத்துப் பேரும் தேவதத்தனின் புத்ரர்கள்" என்று கூறுவதன் மூலம், அவர்களில் உள்ள சிலருக்கு தேவதத்தனிடமிருந்து பிறப்பு கூறப்படுகிறது. இது போன்றே இங்கும் கொள்ளவேண்டும்.

**2-3-8 ஏதேந மாதரிஶ்வா வ்யாக்யாத:**

**பொருள்** – இந்தக் காரணத்தால் வாயுவிற்கும் உற்பத்தி உண்டு என்று கூறப்பட்டதாயிற்று.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - வாயுவைக் குறித்து ஏன் தனியாக ஒரு ஸூத்ரத்தில் கூறினார் என்றால், ப்ர. ஸூ. (2-3-10) – தேஜோ அதஸ்ததா ஹி ஆஹ – என்பதில், வாயுவிடமிருந்து அக்னி உண்டானது என்று கூறுவதற்காக ஆகும்.

**2-3-9 அஸம்பவ: து ஸத: அநுபபத்தே:**

**பொருள்** – ஸத் என்னும் ப்ரஹ்மத்திற்கு மட்டுமே உற்பத்தி இல்லை; இவ்விதம் கொள்ளவில்லை என்றால் "ப்ரஹ்மத்தை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததாகும்" என்று கூறுவது பொருந்தாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரஹ்மத்திற்கு மட்டுமே உற்பத்தி இல்லை. உபநிஷத்தில், “ஸத் ஏவ – ஸத் மட்டும்” என்பதில் உள்ள “ஏவ” என்பதன் மூலம், மற்றவற்றுக்கு உற்பத்தி இன்மை என்பது பொருந்தாது என்றாகிறது.

## அதிகரணம் – 2 - தேஜோதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஆகாசம் போன்றவற்றைத் தனது சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மத்திடமிருந்தே தேஜஸ் போன்றவை உண்டாகின்றன என்பது நிரூபிக்கப்பட்ட உள்ளது.

**வேதாந்தஸாரம்** – ஆகாசம் உட்பட அனைத்து கார்யங்களும் ப்ரஹ்மத்திடமிருந்தே நேரடியாக உற்பத்து ஆகின்றன என்பதைக் கூறும் பொருட்டு ஸூத்ரகாரர் சில பூர்வபக்ஷங்களை உரைக்கிறார்.

**2-3-10 தேஜ: அத: ததா ஹி ஆஹ**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) தேஜஸ் வாயுவிலிருந்து உண்டாகிறது என்று ச்ருதி கூறுகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – தேஜஸ்ஸானது வாயுவிடமிருந்தே உற்பத்தி ஆகிறது, நேரடியாக ப்ரஹ்மத்திடமிருந்து அல்ல. இதனை தைத். (2-1-1) - வாயோரக்நி: - வாயுவிடமிருந்து அக்னி – என்பதன் மூலம் அறியலாம்.

**2-3-11 ஆப:**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) நீரும் அது போன்றே உற்பத்தி ஆகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – நீரும் (அதற்கு முந்தைய வஸ்துவாகிய) தேஜஸ்ஸிலிருந்து உண்டாகிறது என்பதை தைத். (2-1-1) - அக்நோராப: - அக்னியிலிருந்து நீர் – என்று ச்ருதி கூறுகிறது.

**2-3-12 ப்ருதிவீ**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) பூமியும் அது போன்றே உண்டானது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – பூமியானது நீரிலிருந்து உண்டானது என்பதை ச்ருதி தை. (2-1-1) - அத்ப்ய: ப்ருதிவீ – நீரிலிருந்து ப்ருதிவீ - என்றது.

**2-3-13 அதிகாரரூப ஶப்தாந்தரேப்ய:**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) அதே ப்ரகரணமாக உள்ளதாலும், (பூமி போன்ற) நிறத்தாலும், மற்ற ச்ருதி வாக்கியங்களாலும் (அன்னம் என்பது பூமியையே குறிக்கிறது).

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - சாந். (6-2-4) – தா அந்தம் அஸ்ருஜந்த - அன்னத்தைப் படைத்தன – என்பதில் உள்ள "அன்னம்" என்ற பதமானது ப்ருதிவியைக் குறிப்பதாகும்; காரணம், இந்த வாக்கியம் அமைந்துள்ள பகுதியானது பூதங்களுடைய ஸ்ருஷ்டி குறித்துள்ளதாகும். ப்ருதிவிக்கு நிறம் உள்ளதை சாந். (6-4-1) – யத் க்ருஷ்ணம் தத் அந்நஸ்ய - கருத்த நிறம் அன்னத்தினுடையது – என்றது. தை. (2-1-1) – அத்ப்ய: ப்ருதிவீ - நீரிலிருந்து பூமியும் – என்பதில் "ப்ருதிவி" என்னும் பதம் அமைந்துள்ளது.

**2-3-14 தத் அபித்யாநாத் ஏவ து தல்லிங்காத் ஸ:**

**பொருள்** - தானே பலவாக ஆவேன் என்று ஸங்கல்பம் செய்தல் என்பது பரமாத்மாவுக்கு மட்டுமே உரிய அடையாளமாக உள்ளதால், அனைத்திற்கும் நேர்க்காரணம் பரமாத்மாவே ஆவான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (இதுவரை கூறப்பட்ட பூர்வபக்ஷங்களுக்கு உரியது) சாந். (6-2-3) - தத் தேஜ ஐக்ஷத – அந்த தேஜஸ்ஸானது ஸங்கல்பித்து - என்றும், சாந். (6-2-4) - தா ஆப ஐக்ஷந்த - அந்த நீரானது ஸங்கல்பித்தது - என்றும் உள்ள பல வரிகளில் காணப்படும் "நான் பலவாக ஆகிறேன்" என்றுள்ளதான சிந்தனை என்பது, சாந். (6-2-3) - தத் ஐக்ஷத பஹுஸ்யாம் – "நான் பலவாகக் கடவேன்" என்று ஸங்கல்பம் செய்தது – என்ற வாக்கியத்தில் காணப்படுவது போன்றே உள்ளது. இவை பரமாத்மாவிற்கு (ஜகத்)காரணத்தைக் கூறக்கூடிய அடையாளங்களைக் காண்பிக்கின்றன. பரமாத்மாவே அக்னி முதலானவற்றைத் தனது சரீரமாகக் கொண்டுள்ளான், அவனே "அக்னி" முதலான பதங்களால் இங்கு கூறப்படுகிறான்; ஆகவே அவனே ஜகத்காரணம் ஆகிறான் என்பதையே இங்கு கூறுகின்றன.

**2-3-15 விபர்யயேண து க்ரம: அத: உத்பத்யதே ச**

**பொருள்** - ஸ்ருஷ்டியில் வரிசை மாறுதலுடன் இருத்தல் என்பது ப்ரஹ்மத்திடமிருந்தே நேரடியாக வந்தது என்றால் மட்டுமே பொருந்தும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – முண். (2-1-3) - ஏதஸ்மாத் ஜாயதே ப்ராண: … கம் வாயு: ஜ்யோதி: ஆப: - பரமாத்மாவிடமிருந்து ப்ராணன் … ஆகாசம், வாயு, அக்னி, நீர் போன்றவை உண்டாயின – என்பதில் பஞ்சபூதங்களின் உற்பத்தி வரிசையானது மாற்றி உரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், இவை அனைத்தும் ப்ரஹ்மத்திடமிருந்தே நேரடியாக உற்பத்தி ஆகின்றன என்றாகிறது. ஆகவே தேஜஸ் முதலானவற்றைத் தனது சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மத்திடமிருந்தே நேரடியாக அனைத்தின் ஸ்ருஷ்டியும் உண்டாகிறது என்பது பொருந்துகிறது.

**2-3-16 அந்தரா விஜ்ஞாந மநஸீ க்ரமேண தல்லிங்காத் இதி சேத் ந அவிஶேஷாத்**

**பொருள்** - (பூதங்கள், ப்ராணன் ஆகியவற்றின்) நடுவில் இந்த்ரியங்களும் மநஸ்ஸும் வரிசையாக உண்டாகின்றன, பஞ்சபூதங்கள் வரிசையாக உண்டாவதைக் காண்பிக்கும்

அடையாளங்கள் உள்ளதால் ஆகும். இவ்விதம் கூறுவது பொருந்தாது; வேறுபாடு இன்றி உள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - முண். (2-1-3) - கம் வாயு: ஜ்யோதி: ஆப: - ஆகாசம், வாயு, அக்னி, நீர் போன்றவை உண்டாயின – என்பதில், பூதங்கள் மற்றும் ப்ராணன் ஆகியவற்றுக்கு இடையில் இந்த்ரியங்கள் மற்றும் மனம் ஆகியவற்றின் உற்பத்தி கூறப்படுகிறது; இது ஏனென்றால், வேறு ஒரு ச்ருதி வாக்கியத்தில் உள்ள வரிசையை இங்கு நினைவு கூர்ந்ததால் ஆகும். இதன் விளைவாகவே இந்த ச்ருதியில் ஒரு குறிப்பிட்ட வரிசை கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. முண். (2-1-3) - ஏதஸ்மாத் ஜாயதே – அவனிடமிருந்து தோன்றியது - என்னும் பகுதியானது ப்ராணன் தொடங்கி, ப்ருதிவி முடிய உள்ள அனைத்திற்கும் பொதுவானதாகும். ஆகவே தேஜஸ் முதலான அனைத்திற்கும் பரமாத்மாவே நேரடியான ஸ்ருஷ்டி காரணம் ஆவான்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - சாந். (6-2-3) - தத் தேஜ ஐக்ஷத – அந்த தேஜஸ்ஸானது ஸங்கல்பித்து – என்பதில் உள்ள தேஜஸ் முதலான பதங்களானவை லோகத்தில் பொதுவாகப் பயன்படுத்தபடும் “அக்னி” என்பது போன்ற நேரடியான பொருளைத் தருவதாகவே உள்ளன; அவை ப்ரஹ்மத்தைப் பொறுத்தவரை கௌணமாகவே உள்ளன. இதற்கான சமாதானத்தை அடுத்து உரைக்கிறார்.

**2-3-17 சராசர வ்யாபாஶ்ரய து ஸ்யாத் தத் வ்யபதேஶ: அபாக்த: தத் பாவபாவித்வாத்**

**பொருள்** – அசையும் மற்றும் அசையாப் பொருள்களைக் கூறும் சொற்கள் ப்ரஹ்மத்தைக் குறிப்பதையே தங்களுடைய முக்கியமான பொருளாக (நேரடியான அர்த்தமாக) கொண்டுள்ளன; காரணம் அவற்றின் உள்ளே அந்தர்யாமியாக ப்ரஹ்மம் உள்ளதால் மட்டுமே, அந்தந்த பொருள்களை உணர்த்தும் திறன் அவற்றுக்கு வந்தது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (கடந்த ஸூத்ரத்தின் இறுதியில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) அசையும் மற்றும் அசையாப்பொருள்களைக் கூறும் அந்தந்த பதங்கள், ப்ரஹ்மத்திடம் முக்கியமே (அவை நேரடியாக ப்ரஹ்மத்தையே கூறுகின்றன) ஆகும். ஏன்?

சாந். (6-3-2) - அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிச்ய நாம ரூபே வ்யாகரவாணி - அனைத்து ஜீவாத்மாக்களிலும் ப்ரவேசித்து, அவர்களில் பெயர் மற்றும் ரூபம் ஆகிய வேறுபாடுகளை உண்டாக்கக் கடவேன் - என்ற வாக்கியத்தின் மூலம், "ப்ரஹ்மம் அனைத்தின் உள்ளிலும் அவற்றின் ஆத்மாவாகப் புகுந்து, அவற்றுக்குத் தனித்தனியான பெயர் மற்றும் உருவம் ஆகியவற்றை அளிக்கிறது", என்று அறியலாம். ஆனால் உலகில் உள்ளவர்கள் இதனை அறியாமல், சொற்களை அவற்றுடைய முழுப்பொருள் அன்றி ஒரு பகுதியை மட்டுமே பயன்படுத்துகிறார்கள் (அதாவது அந்தச் சொற்கள், அந்தந்த பொருள்களை முழுமையாகக் கூறாமல் ஒரு பகுதியை மட்டுமே குறிப்பதாக உள்ளன என்று கருத்து; அதாவது அந்தப் பொருள்களின் அந்தர்யாமியாக உள்ள பரமாத்மா முடிய கூறுவதில்லை என்பதால், அவை முழுமையான பொருளை உரைப்பதில்லை என்று கருத்து).

## அதிகரணம் – 3 – ஆத்மாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஆத்மாக்களுக்கு உற்பத்தி இல்லை என்று நிரூபிக்கபட உள்ளது.

**2-3-18 ந ஆத்மா ஶ்ருதே: நித்யவாத் ச தாப்ய:**

**பொருள்** - ஆத்மா உற்பத்தி ஆவதில்லை என்று ச்ருதி கூறுவதாலும், அந்த ச்ருதிகள் மூலம் அவை நித்யமானவை என்று அறியப்படுவதாலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஆத்மா உற்பத்தி ஆவதில்லை. ஏன்? இவ்விதம் ச்ருதி கூறுகிறது; கட. (2-18) – ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித் - ஆத்மா உற்பத்தி ஆவதும் இல்லை, இறப்பதும் இல்லை – என்பது காணலாம். ச்வே. (6-13) - நித்யோ நித்யாநாம் - நித்யர்களாக உள்ளவர்களில் நித்யன் - என்பதன் மூலம் ஆத்மா நித்யமானவன் என்றாகிறது.

## அதிகாரம் – 4 – ஜ்ஞாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஞானஸ்வரூபமாக உள்ள ஜீவாத்மா, ஞானத்தைத் தனது குணமாகக் கொண்டபடியும், அறிபவனாகவும் உள்ளான் என்பது நிரூபிக்கப்ப்ட்ட உள்ளது.

**2-3-19 ஜ்ஞ: அத ஏவ**

**பொருள்** – (ச்ருதிகளில் கூறப்பட்டதால்) ஆகவே ஜிவாத்மா அறிபவன் ஆகிறான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சாந். (8-12-4) – அத யோ வேதேதம் ஜிக்ராணீதி ஸ ஆத்மா - யார் ஒருவன் "நான் இதனை முகர்கிறேன்" என்று உணர்கிறானோ அவனே ஆத்மா – என்றும், சாந். (8-12-5) – மநஸா ஏதாந் காமாந் பச்யந் ரமதே ய ஏதே ப்ரஹ்மலோகே – (இந்த ஞானக்கண்ணாகிய) மனம் கொண்டு, அவன் ப்ரஹ்மலோகத்தில் உள்ள அனைத்து விருப்பங்களையும் அனுபவிக்கிறான் – என்றும் உள்ள ச்ருதி வாக்கியங்களின்படி பந்தத்தில் உள்ளவனாகவும், முக்தனாகவும் உள்ள ஆத்மா, அறிபவனாகவே உள்ளான். சாந். (8-12-5) – மந: அஸ்ய திவ்யம் சக்ஷு: - மனமானது அவனுடைய ஞானக்கண் – என்ற ச்ருதியின் மூலம், "மனமானது அவனுடைய ஸ்வதர்மமான அறிவு" என்று அறியலாம்.

**2-3-20 உத்க்ராந்தி கதி ஆகதீநாம்**

**பொருள்** - சரீரத்திலிருந்து வெளிக்கிளம்புதல், நகர்தல், மீண்டும் திரும்புதல் ஆகியவை கூறப்படுவதால் (விபு அல்லன் – எங்கும் நிறைந்தவன் அல்லன்).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – "உத்க்ராந்தி கதி ஆகநீநாம் - செல்லுதல், நகர்தல், வருதல்" ஆகியவை கூறப்படுவதால் ச்ருதியானது ஜீவாத்மாவை அணு அளவே உள்ளவன் என்கிறது.

**2-3-21 ஸ்வாத்மநா ச உத்தரயோ:**

**பொருள் -** மற்ற லோகங்களுக்குச் செல்லுதல், மீண்டும் திரும்புதல் என்பவை தனது ஆத்ம ஸ்வரூபத்தால் என்ற காரணத்தாலும் (ஆத்மா அணுவே).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** செல்லுதல் மற்றும் திரும்புதல் ஆகியவை அந்த ஆத்மா மூலம் மட்டுமே நடைபெறவேண்டும் என்பதால் ஆத்மா அணு அளவே உள்ளவன் ஆவான்.

**2-3-22 ந அணு அத: ஶ்ருதே: இதி சேத் ந இதராதிகாராத்**

**பொருள் -** ச்ருதியில் கூறப்பட்டதால் ஜீவன் அணு அல்லன் என்று கூறுவது சரியல்ல; காரணம் அங்கு வேறு விஷயம் உள்ளதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** ப்ரு. (4-4-22) – ஸ வா ஏஷா மஹாந் அஜ: ஆத்மா - அத்தகைய உயர்ந்தவனாகிய ஆத்மா பிறப்பற்றவனாக உள்ளான் – என்று ச்ருதி கூறுவதால், ஆத்மா அணு அளவு அல்லன்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அப்படி அல்ல. அந்த வாக்கியம் அமைந்த பகுதியானது பரமாத்மாவைக் குறிப்பதாக ப்ரு. (4-4-13) – யஸ்யாநுவித்த: ப்ரதிபுத்த: ஆத்மா - யாருக்கு இந்த அனைத்தும் அறிந்த ஆத்மா (பரமாத்மா) உபாஸிப்பதற்கான பொருளோ – என்பதன் மூலம் அறியலாம்.

**2-3-23 ஸ்வஶப்தோந்மாநாப்யாம் ச**

**பொருள் -** (ஜீவாத்மா குறித்து) அணு சப்தமும், அதன் அளவும் கூறப்படுவதால் (ஜீவாத்மா அணு அளவே ஆவான்).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** ஆத்மா அணு அளவே உள்ளது என்பதை ச்ருதியானது முண். (3-1-9) - ஏஷ அணு: ஆத்மா - அத்தகைய அணு அளவுள்ள ஜீவாத்மா – என்று

கூறியது. மேலும் ச்வே. (5-8) – ஆராக்ரமாத்ர: ஹி அவர: - சாட்டை நுனியில் உள்ள முள் போன்று நுண்ணியவன் - என்றும் கூறியது. இந்தக் காரணங்களால் ஆத்மா அணு அளவே ஆவான்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஜீவாத்மா அணு அளவே உள்ளவன் என்றால், சரீரம் முழுவதிலும் அனுபவிக்கப்படும் வேதனை என்பது பொருந்தவில்லை அல்லவோ? இதற்கு மற்ற மதங்களில் கூறப்படும் பதிலை முதலில் கூறுகிறார் (அடுத்த ஸூத்ரம்).

**2-3-24 அவிரோத: சந்தநவத்**

**பொருள்** - சந்தனம் போன்று; ஆகவே விரோதம் இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - (மற்ற மதத்தினர் கூறும் பதில்) ஹரிசந்தனத்தை ஒரு துளி எடுத்து சரீரத்தின் ஒரு பகுதியில் பூசிக்கொள்வதன் மூலம், அந்தச் சரீரம் முழுவதும் மகிழ்ச்சி பரவுகிறது. இது போன்றே, ஆத்மாவிற்கும் உள்ளது (அவன் சரீரத்தில் ஏதோ ஒரு இடத்தில் இருந்தாலும், சரீரம் முழுவதிலும் ஏற்படுகின்ற வேதனைகளை அனுபவிக்கிறான்). ஆகவே இங்கு எந்த விரோதமும் இல்லை.

**2-3-25 அவஸ்திதி வைஶேஷ்யாத் இதி சேத் ந அப்யுபகமாத் ஹ்ருதி ஹி**

**பொருள்** - சந்தனம் அவ்விதம் இன்பம் அளிக்கக் குறையில்லை; ஆனால் ஜீவன் அவ்விதம் அல்லன் என்று கூறுவது சரியல்ல; இதயத்தில் உள்ளதாகக் கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - ஹரிசந்தனத்தின் ஒரு துளியானது சரீரத்தின் ஒரு குறிப்பட்ட பகுதியில் பூசப்படும்போது, அதன் அனுபவமானது சரீரம் முழுவதும் பரவி, இன்பத்தை ஏற்படுத்தவல்லதாகும். (ஆனால் ஆத்மாவைப் பொறுத்தவரை சரீரத்தில் "அது இந்தப் பகுதியில் உள்ளது" என்று கூறமுடியாது. ஆகவே இந்த உதாரணம் பொருந்தாது).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (மற்ற மதத்தினர் கூறும் பதில்) இவ்விதம் கூறுவது சரியல்ல. ஆத்மாவானது சரீரத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ளது. ஆத்மாவானது

இதயத்தில் உள்ளதாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. இதனை ச்ருதியானது ப்ரு. (4-3-7) - யோயம் விஜ்ஞாநமய: ப்ராணேஷு ஹ்ருத்யந்தர் ஜ்யோதி: - யார் ஒருவன் இதயத்தில் உள்ளானோ, யார் ப்ராணனால் சூழப்பட்டுள்ளானோ, யார் ஜ்யோதிமயமாக உள்ளானோ, ஞானத்தை உள்ள யாரோ – என்கிறது. (சரீரத்தில் ஒரு இடத்தில் ஆத்மா இருந்தாலும், சரீரம் முழுவதிலும் இன்பதுன்பங்களை எப்படி ஏற்கிறது என்பதை) தனது மதத்தின்படி உள்ள கருத்தை அடுத்த ஸூத்ரத்தில் கூறுகிறார்.

**2-3-26 குணாத்வா ஆலோகவத்**

**பொருள் -** கிரணங்கள் போன்று தனது குணத்தினால் பரவுகிறான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** ஆத்மாவானது தன்னுடைய ஞானம் என்ற குணத்தால் (இது தர்மபூத ஞானம் எனப்படும்) சரீரத்தின் அனைத்து இடங்களிலும் பரவி நிற்கிறது. இது, இரத்தினக்கல் ஒன்று தனது இருப்பிடம் முழுவதையும் தன்னுடைய ஒளியால் நிரப்புவது போன்று ஆகும். கௌஷீ. (3-1) – ப்ரஜ்ஞாமாத்ராஸு அர்ப்பிதா: - (பஞ்சபூதங்கள் தாங்கள் இயங்குவதற்கு) ஸூக்ஷ்மமான ஞானத்தையும் – என்று ச்ருதி கூறுகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் -** "ஞானம் மட்டுமே" என்பதே ஆத்மஸ்வரூபம் என்று நாங்கள் முன்பே கூறினோம். (அப்படி உள்ளபோது ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறாக உள்ள ஒரு குணமாக ஞானத்தை எப்படிக் கூறமுடியும்? அதாவது ஆத்மா, ஞானத்தைக் குணமாகக் கொண்டவன் என்று கூறுவது எப்படி) இதற்கு அடுத்த ஸூத்ரத்தில் விடை அளிக்கிறார்.

**2-3-27 வ்யதிரேக: கந்தவத் ததா ச தர்ஶயதி**

**பொருள் -** மணம் போன்று வேறுபாடு உள்ளது, ச்ருதியும் காண்பிக்கிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** "கந்தவதீ ப்ருதிவீ – பூமிக்கு மணம் உள்ளது" என்பது போன்று, "அஹம் ஜாநாமி - நான் அறிகிறேன்" என்பதன் மூலம் வெளிப்படுவதான

ஞானமாகிய குணம் என்பது, அந்த ஆத்மாவைக் காட்டிலும் வேறானதாக உள்ளது (அதாவது, “பூமி வேறு; அதன் மணம் என்னும் குணம் வேறு”, என்பதைப் போன்று கொள்க). இதனை ப்ரு. (6-3-30) - ஜாநாதி ஏவ அயம் புருஷ – இந்தப் புருஷன் அறிகிறான் – என்பதில் காணலாம்.

**2-3-28 ப்ருதக் உபதேஶாத்**

**பொருள்** - வேறாக உபதேசிப்பதாலும் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஞானத்தையும் ஆத்மாவையும், ச்ருதியானது தனித்தனியே கூறுவதைக் காணலாம்; ப்ரு. (4-3-30) – ந ஹி விஜ்ஞாது: விஜ்ஞாதே: விபரிலோபோ வித்யதே – அறிபவனுடைய அறிவுக்கு அழிவு உள்ளதை இதுவரை அறிந்ததில்லை - என்று கூறியது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஆனால், ப்ரு. (4-3-7) - யோயம் விஜ்ஞாநமய: - ஞானமே ஆகிறான் – என்பதன் மூலம், “ஆத்மாவானது ஞானமே ஆவான்” என்று கூறப்பட்டது அல்லவோ? இதற்கு அடுத்த ஸூத்ரத்தில் பதில் உரைக்கிறார்.

**2-3-29 தத் குண ஸாரத்வாத் து தத் வ்யபதேஶ: ப்ராஜ்ஞவத்**

**பொருள்** - ஞானம் என்ற குணத்தைச் சாரமாகக் கொண்டுள்ளதால் (சாரம் என்றால் “இன்றியமையாத” என்று பொருள்), ஆத்மாவானது ஞானம் என்று கூறப்படுகிறது. பரமாத்மா (ஆனந்தம் என்று) கூறப்படுவது போன்று.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஞானம் என்ற குணத்தை முதன்மையாகக் கொண்டுள்ளதால் ஆத்மாவிற்கு “விஜ்ஞாநம்” என்று பெயர் உள்ளது. அதாவது, தை. (2-1-1) - ஸத்யம் ஞானம் - என்பதன் மூலம், அனைத்தும் அறிந்த ப்ரஹ்மமானது, “விபச்சித் – ஞானம்” என்று கூறப்பட்டது (அதே போன்று இங்கு ஜீவாத்மா விஷயத்திலும் கொள்ளவேண்டும்).

**2-3-30 யாவதாத்ம பாவித்வாத் ச ந தோஷ: தத் தர்ஶநாத்**

**பொருள்** - ஆத்மா உள்ளவரை ஞானம் தொடர்வதாலும், ஆத்மாவை ஞானம் என்று கூறுவதில் தவறில்லை. இது போன்று கூறப்படுவதைக் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ஞானமானது ஆத்மா உள்ளவரை இருக்கின்ற தர்மம் (பண்பு) என்பதால், ஆத்மாவை விஜ்ஞாநம் என்ற சொல்லால் கூறுவதில் தவறில்லை. மாடுகள் குறையுள்ளதாக (கொம்பு ஒடிந்தவை முதலான மாடுகள்) இருந்தாலும் அவை அவற்றை "மாடுகள்" என்றே அழைப்பதைக் காணலாம். காரணம், அவற்றின் ஸ்வரூபத்தை நிரூபிக்கும் தன்மைகள் தொடர்ந்தபடி உள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஆழ்ந்த உறக்கம் போன்ற நிலைகளில் ஞானம் காணப்படுவதில்லை; இவ்விதம் உள்ளபோது, "ஞானமானது ஆத்மா உள்ளவரை இருக்கின்ற தர்மம்" என்று எப்படிக் கூறலாம்? இதற்கு அடுத்த ஸூத்ரத்தில் விடை அளிக்கிறார்.

**2-3-31 பும்ஸத்வாதிவத் து அஸ்ய ஸத: அபிவ்யக்தி யோகாத்**

**பொருள்** - இந்த தர்மபூத ஞானத்திற்கு (ஆத்மாவிற்கு ஞானம் குணமாக இருக்கும்போது, அத்தகைய ஞானமானது தர்மபூத ஞானம் எனப்படும்), ஆண்மை வெளிப்படுவது போன்று வெளிப்படுதல் உள்ளதாகக் கொள்ளலாம் என்பதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஆழ்ந்த உறக்க நிலையில் உள்ள ஞானமானது தன்னை வெளிப்படுத்திக் கொள்வதில்லை. ஆனால் விழிப்பு நிலையில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. ஆகவே ஞானம் என்பது ஆத்மாவின் ஸ்வரூபம் ஆகும். இது மனிதனின் ஆண்மைத்தன்மை போன்றதாகும். ஏழுவிதமான தாதுக்களில் மனிதனின் ஆண்மைத்தன்மைக்கே உரிய தாதுவானது அவனுக்கு இயல்பாகவே உள்ளபோதிலும், பாலகனாக உள்ளபோது அது வெளிப்படாமல், வாலிபனாக ஆகும்போதே மட்டுமே வெளிப்படுகிறது.

**2-3-32 நித்ய உபலப்தி அநுபலப்தி ப்ரஸங்க: அந்யதர அநியமோ வா அந்யதா**

**பொருள் -** வேறுவிதமாக ஒப்புக்கொண்டால் (ஆத்மா "ஞானம் மட்டும்" என்னும் ஸ்வரூபன், அவன் விபு), ஆத்மாவைக் குறித்த தோற்றம் மற்றும் தோற்றம் இன்மை ஆகியவை எப்போதும் உண்டாகவேண்டும் அல்லது அவை இரண்டில் ஏதேனும் ஒன்று எப்போதும் இருக்கவேண்டும் (தோற்றம் என்றால் அறியப்படுதல்).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ஜீவாத்மா அறிபவனாகவும், அணு அளவே கொண்டவனாகவும் உள்ளான் என்று கூறப்பட்டது. இதனை ஏற்காமல், ஆத்மாவானது எங்கும் வ்யாபித்துள்ளது என்ற கருத்து மற்றும் ஞானத்தை மட்டுமே ஸ்வரூபமாகக் கொண்டது என்ற கருத்து ஆகியவற்றை ஒப்புக்கொண்டால், ஆத்மாவைக் குறித்து தோற்றமும், தோற்றம் இன்மையும் எப்போதும் உண்டானபடி இருக்கும். ஒரு ஞானம் குறித்து அறியப்படும்போது, அதனை வேறு காரணங்களால் தடுக்க இயலாது. இத்தகைய நிலையானது, ஆத்மாவை "ஞானம் மட்டும்" என்னும் ஸ்வரூபனாகவும், எங்கும் உள்ளவனாகவும் இருப்பதாகக் கொள்ளும் மதங்களில் உண்டாகும். ஆத்மாக்கள் எங்கும் பரவி நிற்கின்றன. அனைத்து ஆத்மாக்களிலும் உள்ள பொதுவான தன்மை என்னவென்றால், அவை மனதுடன் ஸம்பந்தம் கொள்ளும்போது அவற்றைக் குறித்த ஞானம் (அல்லது உணர்ச்சி) உண்டாகும்.

[அடுத்து அத்ருஷ்டம் குறித்து உரைக்கிறார். வேதாந்தஸாரத்தில் இந்தப் பகுதியானது ஒரே வரியில் அமைந்துள்ளதால், இதனை விளக்கும்விதமாக ஸ்ரீபாஷ்யத்திலிருந்து இந்த வரிக்கான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது] அடுத்து (வைசேஷிகர்களுடைய ஸித்தாந்தத்தின்படி) ஆத்மாவானது இந்த்ரியங்களுடன் ஸம்பந்தம் அடையும்போது மட்டுமே அறிவை அடைகிறது (அல்லது தனது தோற்றத்தைப் பெறுகிறது) என்று கூறுவதும் சரியல்ல. காரணம், இவர்களுடைய கருத்தின்படி ஆத்மா எங்கும் பரவி உள்ளதால், இந்த்ரியங்களுடைய ஸம்பந்தமும் எப்போதும் இருந்தபடியே உள்ளது; இதன் விளைவாக ஒரு குறிப்பிட்ட கர்மத்தால் ஏற்படும் அத்ருஷ்டம் என்பது (இவர்கள் கருத்தின்படி கர்மங்களின் பலன்கள் அனைத்தும் சேகரித்து வைக்கப்படுகிறது. இதற்கு அத்ருஷ்டம் என்று பெயர்) அந்தந்த ஆத்மாக்களுக்கு மட்டுமே உண்டாகும் என்னும் கட்டுப்பாடு இல்லாமல் போகும். இதற்கு, "ஆத்மாவைக் குறித்து தோற்றம், தோற்றம்

இன்மை ஆகிய இரண்டும் எதிரெதிர் தன்மைகள் என்பதால், இவற்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே உண்டாகும்", என்று வாதம் செய்யலாம். அப்படியானால் ஏதேனும் ஒன்று மட்டுமே எப்போதும் நிலைத்து நிற்கும் என்றாகும்.

## அதிகரணம் – 5 - கர்த்ரதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஜீவனுக்கு செயல்களைச் செய்பவனாக உள்ள தன்மை (கர்த்ருத்வம்) உண்டு என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**2-3-33 கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்வாத்**

**பொருள்** - சாஸ்த்ரம் பயனுள்ளது என்றாகவேண்டும் என்றால், ஜீவாத்மா கர்த்தாவாகிறான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ஆத்மா அறிபவன் மட்டும் அல்லாமல் (அதாவது அறிவுக்கு இருப்பிடம் என்பது மட்டும் அல்லாமல்), அவன் கர்த்தாவாகவும் உள்ளான். ஆத்மாவைக் கர்த்தா அல்லன் என்று கூறினால், “இதனைச் செய், இதனைச் செய்யாதே” என்று உரைக்கும் சாஸ்த்ரங்கள் பயனின்றிப் போகும்.

**2-3-34 உபாதநாத் விஹார உபதேஶாத் ச**

**பொருள்** - எடுத்துக்கொண்டும் ஸஞ்சரித்துக்கொண்டும் உள்ளதால் (ஜீவாத்மா கர்த்தா ஆகிறான்).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரு. (2-1-8) - ப்ராணாந் க்ருஹீத்வா ஸ்வே ஶரீரே யதா காமம் பரிவர்த்ததே – ஜீவாத்மா தனது இந்த்ரியங்களை எடுத்துக்கொண்டு, தனது சரீரத்தில் தனது விருப்பம் போன்று ஸஞ்சாரம் செய்கிறான் - என்று கூறியது. அதாவது ப்ராணன்களை எடுத்துக்கொண்டு ஆத்மா ஸஞ்சாரம் செய்கிறது என்பதன் மூலம், ஆத்மாவின் கர்த்ருத்வம் (எடுத்தல், ஸஞ்சரித்தல் ) கூறப்பட்டது.

**2-3-35 வ்யாபதேஶாத் ச க்ரியாயாம் ந சேத் நிர்தேஶ விபர்யய:**

**பொருள் -** (வைதிக) கார்யங்களில் ஜீவாத்மா கர்த்தா என்று கூறப்படுகிறான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** தை. (2-5-1) - விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே கர்மாணி தநுதேபி ச – விஜ்ஞாநம் (என்ற ஜீவாத்மா) யஜ்ஞம் இயற்றுகிறான், கர்மங்களைச் செய்கிறான் – என்று கூறுவதன் மூலம், யஜ்ஞம் போன்றவற்றில் கர்த்தாவாகக் கூறப்பட்டதால் கூறப்பட்டதாலும், ஆத்மா கர்த்தா ஆகிறான். “விஜ்ஞாநம்” என்ற பதம் மூலம் ஆத்மா கூறப்படவில்லை, அந்தப் பதத்தால் புத்தியே கூறப்பட்டது என்று சிலர் உரைக்கலாம். இது சரியல்ல. அவ்விதம் கொள்ளப்பட்டிருந்தால், ”விஜ்ஞாநம்” என்ற பதமானது, மூன்றாம் வேற்றுமையில் கூறப்பட்டிருக்கும்; அதாவது புத்தியானது செயலின் முக்கிய கருவியாக அமைவதால், “விஜ்ஞாநேந யஜ்ஞம் - புத்தியால் யஜ்ஞம்” என்று இருந்திருக்கும்.

**2-3-36 உபலப்திவத் அநியம:**

**பொருள் –** தோற்றத்தைப் போன்று நியமங்கள் இல்லாத காரணத்தால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** (ஆத்மாவிற்கு கர்த்ருத்வம் இல்லை) ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வம் உள்ளது என்றும் கூறினால், ப்ரக்ருதியானது அனைத்து புருஷர்களுக்கும் பொதுவாக உள்ளது என்பதால், அது செய்யும் அனைத்து கர்மங்களின் பலனையும், அனைவரும் அனுபவிக்கவேண்டும் என்றாகிவிடும். இது, மேலே புத்தி குறித்து உரைக்கும்போது கூறப்பட்டது போன்று, எந்தவிதமான விதிகளுக்கும் உட்படாமல் போகும்.

**2-3-37 ஶக்தி விபர்யயாத்**

**பொருள் -** (ஆத்மாவிற்கு) அனுபவிக்கும் சக்தி இல்லை என்றாகிவிடுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** ப்ரக்ருதிக்குக் கர்த்ருத்வம் கூறப்பட்டால், கர்த்தா மட்டுமே பலனை அனுபவிக்கவேண்டும் என்ற விதியின்படி, அனுபவிப்பதும் ப்ரக்ருதியே என்றாகிறது.

**2-3-38 ஸமாத்யபாவாத் ச**

**பொருள் -** ஸமாதி நிலையும் இலை என்பதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வம் உள்ளது என்று ஒப்புக்கொண்டால், "நான் ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறானவன்" என்ற ஸமாதி நிலை ஏற்படாது.

**2-3-39 யதா ச தக்ஷா உபயதா**

**பொருள் –** தக்ஷனை (தச்சன்) போன்று இரண்டு விதத்திலும் பொருந்தும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ஆத்மாவைக் கர்த்தா என்று ஏற்றுக்கொண்டால் மட்டுமே "ஒருவன் தனக்கு விருப்பமானபோது செயலாற்றுகிறான், விருப்பம் இல்லாதபோது செயலாற்றுவதில்லை" என்னும் நிலை பொருந்தும். இது தச்சனுடைய நிலை போன்றே ஆகும் (ஒரு தச்சனிடம் இழைப்புளி போன்ற கருவிகள் உள்ளபோதிலும், அவர் விரும்பும்போது வேலை செய்கிறார், வேலை செய்யாமலும் உள்ளார்). ஆனால் இந்த நிலையானது, புத்தியைக் கர்த்தா என்று கூறினால் பொருந்தாது; காரணம், சேதநனுக்கு மட்டுமே விரும்புதல் என்பது உண்டு.

## அதிகரணம் – 6 - பராயத்தாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** ஜீவாத்மாவின் கர்த்ருத்வம் என்பது பரமாத்மாவின் கட்டளைக்கு உட்பட்டதாகும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**2-3-40 பராத் து தத் ச்ருதே:**

**பொருள்** – ஜீவாத்மாவுடைய கர்த்ருத்வம் பரமாத்மாவால் உண்டாகிறது. ச்ருதி கூறுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரு. (3-7-22) – ய: ஆத்மாநம் அந்தரோ யமயதி - யார் ஒருவன் ஆத்மாவினுள் இருக்கிறானோ – என்பது போன்ற ச்ருதிகள், "ஜீவனுடைய கர்த்ருத்வம் பரமாத்மாவிடமிருந்தே வருகிறது", என்கின்றன. இதனையே ஸ்ம்ருதியும் கீதை (15-15) - ஸர்வஸ்ய ச அஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட: மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநம் ச - அனைத்து ஜீவன்களின் இதயங்களிலும் நான் உள்ளேன்; அவர்களுடைய நினைவு, ஞானம், மறதி போன்றவை என்னால் ஏற்படுகின்றன – என்கிறது.

**2-3-41 க்ருத ப்ரயத்நாபேக்ஷ: து விஹித ப்ரதிஷித்த அவையர்த்யாதிப்ய:**

**பொருள்** - அந்தச் சாஸ்த்ரங்கள் வீணாகாமல் இருப்பதற்காக, ஜீவாத்மாவின் முயற்சியை ஸர்வேச்வரன் அனுமதிக்கிறான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – முதலில் ஜீவாத்மா தனது விருப்பத்தின்படி ஒரு செயலைச் செய்யவோ அல்லது செய்யாமல் இருக்கவோ முயல்கிறான். இவ்விதம் செயலைச் செய்தல் அல்லது செயலிலிருந்து விலகுதல் என்பதற்கு ஏற்ப பரமாத்மா அந்த முயற்சியை அனுமதிக்கிறான். இதனை "செயல்களை விதிக்கின்ற, தள்ளுகின்ற சாஸ்த்ரங்கள் வீணாகக்கூடாது" என்பதாலும், "பகவானுடைய அநுக்ரஹம் மற்றும் நிக்ரஹம்" என்பதாலும் அறியலாம். ஒருவன் வலிமையான பொருள்களைச் சுமக்கும் சக்தி அற்றவனாக இருக்கக்கூடும். ஆனால் அவன் வேறு ஒருவனுடைய உதவியைக் கொண்டு அந்தச் செயலைச் செய்தபோதிலும், தனது முயற்சி காரணமாக, "செய், செய்யாதே" என்னும் விதி மற்றும் தள்ளுதல் ஆகியவற்றுக்கு ஆளாகிறான். இதனைப் போன்றே ஜீவாத்மாக்கள் அனைவரும், பரமாத்மாவின் அனுமதியின் பேரில் செயலாற்றினாலும், "செய், செய்யாதே" என்னும் விதிகளுக்கு உட்பட்டே அமைகிறான். ஆகவே இங்கு விரோதம் ஏதும் இல்லை.

### அதிகரணம் – 7 - அம்சாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமாகவே உள்ளான் என்று நிரூபிக்கப்பட உள்ளது (அம்சம் என்றால் பகுதி என்று பொருள்).

**2-3-42 அம்ஶோ நாநா வ்யபதேஶாத் அந்யதா ச அபி தாஶ கிதவாதித்வம் அதீயதே ஏகே**

**பொருள்** - ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமாக உள்ளவனே ஆவான், காரணம் ஜீவாத்மா ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று சிலர் கூறுவதாலும், இரண்டிற்கும் வேறுபாடு இல்லை என்று சிலர் கூறுவதாலும், "தாசர், கிதவர்" என்பதாக ப்ரஹ்மத்தைக் கூறுவதாலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமே (பகுதி) ஆகிறான். ச்வே. (1-16) - ப்ருதக் ஆத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா – இந்த ஆத்மாவும் அதனை நியமிப்பவனும் தனித்தனியானவர்கள் என்று அறிந்து – என்றும், ச்வே. (6-9) - ஸ காரணம் கரணாதிபாதிபோ - பரமபுருஷனே அனைத்திற்கும் காரணம், இந்த்ரியங்களின் அதிபதியான ஜீவாத்மாவிற்கு அதிபதி – என்றும் உள்ள பலவிதமான உபதேசங்கள் இருவரும் வெவ்வேறு என்று கூறுகின்றன. சாந். (6-8-7) – தத் த்வம் அஸி - நீயே அதுவாகிறாய் (ப்ரஹ்மமாக உள்ளாய்) – என்றும், ப்ரு. (2-5-19) - அயமாத்மா ப்ரஹ்ம – இந்த ஆத்மா ப்ரஹ்மமாகிறது – என்றும் உள்ள வாக்கியங்கள் இருவருக்கும் ஐக்யம் கூறுகிறது. அதர்வண வேதத்தில் உள்ள "ப்ரஹ்ம தாசா: - அடிமைகள் ப்ரஹ்மமே" என்பது போன்ற வாக்கியங்கள், ப்ரஹ்மமானது அனைத்து ஜீவாத்மாக்களிலும் ப்ரவி நிற்பதால், இருவரும் ஒன்றே என்கின்றன. இப்படியாக இரண்டுவிதமாக உபதேசங்களுக்கும் (இருவரும் வெவ்வேறு, இருவரும் ஒன்றே என இருவகை) முக்கியத்வம் ஏற்படவேண்டும் என்றால், ஜீவாத்மாவை ப்ரஹ்மத்தின் அம்சம் என்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

**2-3-43 மந்த்ரவர்ணாத்**

**பொருள் –** மந்த்ரவர்ணத்தாலும் (ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமே ஆவான்).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** புருஷஸூக்தத்தில் – பாதோ அஸ்ய விச்வா பூதாநி – அனைத்து ஜீவராசிகளும் இவனுடைய கால் பகுதி - என்ற மந்த்ரவர்ணத்தில் ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமாகவே (பகுதியாகவே) படிக்கப்பட்டுள்ளான்.

**2-3-44 அபி ஸ்மர்யதே**

**பொருள் -** ஸ்ம்ருதியிலும் (ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமே எனப்படுகிறது).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** கீதையில் (15-7) – மம ஏவ அம்சோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந: - ஜீவர்கள் உள்ள இந்த லோகத்தில் எப்போதும் உள்ள ஜீவாத்மாக்கள் எனது ஒரு அம்சமே ஆவர் – என்று (ஜீவாத்மாவைப் ப்ரஹ்மத்தின் அம்சமாகவே) கூறியது காணலாம்.

**2-3-45 ப்ரகாஶாதிவத் து ந ஏவம் பர:**

**பொருள் -** ஒளி முதலானவை போன்றாகும். பரமாத்மா ஜீவனை போன்றவன் அல்லன்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் அம்சமாக உள்ளபோதிலும், ஜீவாத்மாவின் ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவங்கள் பரப்ரஹ்மத்திற்கு இல்லை. ஆனால், ப்ரஹ்மமானது எப்போதுமே தோஷம் அற்றதாகவும், அனைத்தும் அறிந்ததாகவும், ஸத்யஸங்கல்பம் கொண்டதாகவும் உள்ளது. எப்படி? ஒளியைப் போன்று ஆகும். ஒரு இரத்தினக்கல்லின் ஒளியானது, அந்தக் கல்லின் அம்சமாகவே கொள்ளப்படுகிறது. ஸூத்ரத்தில் உள்ள "ஆதி - முதலானவை" என்பதன் மூலம் ஜாதி, குணம், சரீரம் போன்றவை உணர்த்தப்படுகின்றன. விசேஷணங்கள் (குறிப்பிட்ட சிறப்பு) அனைத்தும் விசேஷ்யத்திற்கு (அத்தகைய சிறப்பைக் கொண்ட பொருள்) அம்சம் என்றாலும், அவற்றுடைய ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவம் ஆகியவற்றில் வேறுபாடு இருத்தல் என்பது

முரணாகாது. இதனையே ப்ரு. (3-7-22) - ய ஆத்மநி திஷ்டந் … யஸ்ய ஆத்மா சரீரம் - யார் ஆத்மாவில் உள்ளானோ … யாருக்கு ஆத்மா சரீரமோ – என்னும் வாக்கியம் கூறுகிறது.

**2-3-46 ஸ்மரந்தி ச**

**பொருள் –** ஸ்ம்ருதியிலும் உள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** “ஒளிர்கின்ற பொருளுக்கு உள்ள ஒளியைப் போன்று, சித் மற்றும் அசித் வஸ்துக்களை அடக்கிய இந்த ஜகத்தானது, ப்ரஹ்மத்தின் அம்சமாகவே உள்ளது”, என்று பராசரர் போன்றவர்கள் ஸ்ம்ருதிகளில், ஸ்ரீ. விபு. (1-22-56) – ஏகதேஶ ஸ்திதஸ்ய அக்நே: ஜ்யோத்ஸ்நா விஸ்தாரிணீ யதா | பரஸ்ய ப்ரஹ்மண: க்தி: தததேம் அகிலம் ஜகத் – ஓர் இடத்தில் உள்ள அக்னியின் ஒளியானது எங்கும் பரவுவது போன்று, பரப்ரஹ்மத்தின் சக்தியானது ஜகத் முழுவதும் பரவி நிற்கிறது – என்றும், ஸ்ரீவிபு. (1-22-37) - தத் ஸர்வே வை ஹரேஸ்தநு: - இவை அனைத்தும் ஸ்ரீஹரியின் சரீரம் – என்றும், ஸ்ரீவி. (1-22-84) – தாநி ஸர்வாணி தத் வபு: - இவை அனைத்தும் அவனுடைய சரீரம் – என்றும் கூறுகிறார்கள்.

**2-3-47 அநுஜ்ஞா பரிஹாரௌ தேஹ ஸம்பந்தாத் ஜ்யோதிராத்வத்**

**பொருள் -** அக்னியைப் போன்று, சிலருக்கு அனுமதியும் சிலருக்கு மறுப்பும், சரீரத் தொடர்பு காரணமாகவே ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அனைத்து ஜீவாத்மாக்களும் ப்ரஹ்மத்தின் அம்சமாக உள்ளபோதிலும், ஒரு சிலருக்கு வேத அத்யயனம் செய்வதில் அனுமதி போன்றவைகளும், தடைகளும் ஏற்படலாம். இது, அந்தணன் முதலான சரீர ஸம்பந்தம் காரணமாக விளைவதாகும். வேதம் ஓதுபவன் வீட்டில் உள்ள அக்னிக்கும், மயானத்தில் உள்ள அக்னிக்கும் வேறுபாடு உள்ளது போன்றே ஆகும்.

**2-3-48 அஸந்ததேப்ச அவ்யதிகர:**

**பொருள் -** அணுவாக உள்ளதாலும் வேறுபட்டதே.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** (அனைத்து ஜீவாத்மாக்களும் ப்ரஹ்மத்தின் அம்சம் என்பதால் ஒரே தன்மை கொண்டவர்கள் என்றபோதிலும்) ஒவ்வொரு ஜீவனும் அணு அளவே உள்ளதாலும், தனித்தனியான சரீரத்தில் உள்ளதாலும், ஒருவருடைய ஞானம், ஸுகம் போன்றவை மற்றவர்களுடன் கலப்பதில்லை. ஆனால் இந்தக் கருத்தானது, ப்ரஹ்மத்திற்கு அஜ்ஞானம் அல்லது உபாதி உள்ளதன் விளைவாக ப்ரஹ்மத்திற்கு அனைத்து அனுபவங்களும் உண்டாகின்றன என்று கூறும் இரண்டு மதங்களுக்கும் (அத்வைதம் மற்றும் பாஸ்கர மதம்) பொருந்தாது.

**2-3-49 ஆபாஸ ஏவ ச**

**பொருள்** - (மேலே உள்ள பூர்வபக்ஷ கருத்து) தோஷம் உள்ளதாகக் காணப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** இரண்டு மதங்களில் கூறப்படும் கருத்துக்களுமே தவறானவை ஆகும்.

**2-3-50 அத்ருஷ்டா நியமாத்**

**பொருள் -** அத்ருஷ்டத்திலும் விதிமுறை இல்லாததால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அவர்கள் கருத்தின்படி, “ப்ரஹ்மம் மட்டுமே அஜ்ஞானம் அல்லது உபாதியால் பீடிக்கப்படுகிறது. ஆனால் ஜீவாத்மாக்கள், ஸத்யமாகவோ அல்லது அஸத்யமாகவோ உள்ள உபாதியால் பீடிக்கப்படுகிறார்கள்”. இவ்விதம் கொள்ளும்போது, “இது இந்த ஜீவனுடையது” என்று கூறவல்ல உறுதி (அல்லது விதிமுறை) இல்லாத காரணத்தால், அத்ருஷ்டங்களாலும் உபாதிகளில் பேதம் ஏற்படுத்த இயலாது.

**2-3-51 அபி ஸந்த்யாதிஷு அபி ச ஏவம்**

**பொருள் -** ஸங்கல்பம் போன்றவற்றிலும் அதே தோஷம் ஏற்படும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அத்ருஷ்டம் உண்டாக்கக் காரணமாக உள்ள ஸங்கல்பத்திற்கும் எந்த விதிமுறையும் இல்லை என்றாகும்.

**2-3-52 ப்ரதேஶாத் பேதாத் இதி சேத் ந அந்தர்பாவாத்**

**பொருள்** – ப்ரஹ்மத்தைப் பிரிப்பதால் அதன் பல பகுதிகளின் பேதம் காரணமாக, அனுபவங்களில் வேறுபாடு ஏற்படும் என்று கூறினால் அது சரியல்ல; அனைத்தும் அதில் அடங்குவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – நீங்கள் (பாஸ்கர மதத்தினர்), "ப்ரஹ்மத்தின் எந்த ஒரு பகுதி உபாதியுடன் ஸம்பந்தம் கொண்டுள்ளதோ, அதுவே ஜீவாத்மா ஆகிறது", என்று கூறலாம். அனால், அப்படி அல்ல. உபாதி நகரும்போது, ப்ரஹ்மத்தின் அனைத்து பகுதிகளும் உபாதியின் ஸம்பந்தம் அடைகின்றன.

## பாதம் – 4 – ப்ராண பாதம்

இந்தப் பாதத்தில் ப்ராணன்கள் எனப்படும் இந்த்ரியங்கள் மற்றும் முக்யப்ராணன் போன்றவையும் ப்ரஹ்மத்தின் கார்யமே என்று நிரூபிக்கப்பட உள்ளது.

### அதிகரணம் – 1 – ப்ராண உத்பத்தி அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – சத. (6-1-1) வரியானது ஆராயப்படுகிறது; இந்த அதிகரணத்தில் இந்த்ரியங்கள் ப்ரஹ்மத்திடமிருந்தே உண்டாகின்றன என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**2-4-1 ததா ப்ராணா:**

**பொருள்** – (இந்த ஸூத்ரத்திற்கான பொருளை பூர்வபக்ஷமாகவும் ஸித்தாந்தமாகவும் வெவ்வேறு விதத்தில் கூறுவர். ஸூத்ரத்தில் உள்ள ப்ராணன் என்னும் சொல்லானது இந்த்ரியங்களைக் குறிக்கும்) பூர்வபக்ஷ பொருள் – ஜீவாத்மா போன்று இந்த்ரியங்களும் நித்யமானவை ஆகும். ஸித்தாந்த பொருள் – ஆகாசம் போன்று இந்த்ரியங்களும் உண்டாகின்றன.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – "ஜீவாத்மாக்கள் உற்பத்தி ஆவதில்லை, அவை நித்யமானவை ஆகும்" என்று ச்ருதி கூறுகிறது. இதே போன்று இந்த்ரியங்களும் உற்பத்தி ஆவதில்லை. சத. (6-1-1) – அஸத் வா இதம் அக்ர ஆஸீத் … ருஷயோ வாவ தே அக்ரே ஸத் ஆஸீத் … ப்ராணா வா ருஷய: - இந்த உலகம் முன்பு அஸத்தாகவே இருந்தது (அதாவது ப்ரளய காலத்தில், இல்லாத ஒன்றாகவே இருந்தது). அப்போது ரிஷிகளாவே இருந்தது. ரிஷிகள் யார்? ப்ராணனே ரிஷிகள் – என்பதன் மூலம், "ப்ரளய காலத்தில் ப்ராணன் இருந்தது" என்று கூறப்பட்டது.

**2-4-2 கௌணீ அஸம்பவாத் தத் ப்ராக் ப்ஶ்ருதே: ச**

**பொருள்** - (பன்மையின் கூறப்பட்டது) முக்கியமான பொருளில் அல்ல; அனைத்தும் அழிந்த பின்னர், பல வஸ்துக்கள் இருக்கமுடியாது என்பதாலும், ஸ்ருஷ்டிக்கு முன்பு பரமாத்மா மட்டுமே இருந்தான் என்று கூறுவதாலும் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) பரமாத்மா மட்டுமே ஸ்ருஷ்டிக்கு முன்பு இருந்தான் என்று ச்ருதி கூறுகிறது. "ரிஷிகள், ப்ராணன்கள்" ஆகிய பதங்கள் பரமாத்மாவையே குறிப்பதாகும். பன்மையில் கூறப்பட்டது முக்கியமான பொருளில் அல்ல என்றே கொள்ளவேண்டும்.

**2-4-3 தத் பூர்வகத்வாத் ச:**

**பொருள்** - (பரமாத்மாவைக் காட்டிலும் வேறாக உள்ள மற்றவற்றின்) பெயர் போன்றவை அவற்றை ஸ்ருஷ்டித்த பின்னரே உண்டாகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – பரமாத்மாவைக் காட்டிலும் வேறாக உள்ள மற்ற பொருள்களைக் குறிக்கின்ற பெயர் முதலானவைகள், ஸ்ருஷ்டிக்குப் பின்னரே ஏற்படுகின்றன. ஆகவே ப்ராணன் என்னும் பதமானது இந்த்ரியங்களைக் குறிக்கவில்லை.

## அதிகரணம் – 2 - ஸப்தகத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – இந்த்ரியங்கள் ஏழு அல்ல, அவை பதினொன்று ஆகும் என நிரூபிக்கப்பட்ட உள்ளது. இதில் முண். (2-1-8) மற்றும் ப்ரு. (5-9-4) ஆகியவை ஆராயப்பட உள்ளன.

### 2-4-4 ஸப்த கதே: விஶேஷிதத்வாத் ச

**பொருள்** - (ஜீவாத்மாவுடன்) செல்வது (ஏழு இந்த்ரியங்கள் என்று) கூறப்படுவதாலும், (ஏழு இந்த்ரியங்கள் எவை என்று) குறிப்பிடப்படுவதாலும் (இந்த்ரியங்கள்) ஏழு ஆகும் (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்).

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – முண். (2-1-8) – ஸப்த … ப்ராணா: - ஏழு ப்ராணன்கள் – என்றும், கட. (6-10) - யதா பஞ்ச அவதிஷ்டந்தே ஜ்ஞாநாநி மநஸா ஸஹ | புத்திஶ்ச – ஐந்து ஞானேந்த்ரியங்களும், மனமும், புத்தியும் – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலம் ப்ராணன்கள் ஏழாகும் என்று அறியலாம். அதாவது ஜீவாத்மாவில் ஏழு ப்ராணன்களே ஸஞ்சரிக்கின்றன என்றும், அவையே த்யானத்திற்குக் கூறப்பட்டன என்றும் தேறுகிறது.

### 2-4-5 ஹஸ்தாதயஸ்து ஸ்திதே அத: ந ஏவம்

**பொருள்** - ஜீவாத்மா சரீரத்தில் உள்ளபோது, கைகள் போன்றவை உதவி செய்வதால், இந்த்ரியங்கள் ஏழு என்று கூறுவது பொருந்தாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கான பதில்) கரங்கள் முதலானவையும், சரீரத்தில் வசிக்கின்ற ஜீவாத்மாவிற்கு உதவி செய்வதால்,

அவையும் இந்த்ரியங்களே ஆகின்றன. ஆக இந்த்ரியங்கள் ஏழு அல்ல, அவை பதினொன்றாகும். இதனை ச்ருதியும் ஸ்ம்ருதியும் ப்ரு. (3-9-4) – தஶ இமே புருஷே ப்ராணா: ஆத்மா ஏகாதஶ: - புருஷனின் காணப்படும் பத்து ப்ராணன்கள் (இந்திரியங்கள்) மற்றும் பதினொன்றாக உள்ள ஆத்மா – என்றும், கீதை (13-5) – இந்த்ரியாணி தச ஏவம் ச - பத்து இந்த்ரியங்களுடன் சேர்ந்த மனம் என்ற பதினொன்றும் – என்றும் கூறுகின்றன. புத்தி என்பது மனதின் வேறு ஒரு செயலே ஆகும். உபநிஷத்தில் ஏழு இந்த்ரியங்கள் ஸஞ்சரிப்பதாகக் கூறியது ஏனென்றால், அவையே அனைத்திலும் முக்கியமானது என்பதால் ஆகும்.

## அதிகரணம் - 3 - ப்ராண அணுத்வ அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – இந்த்ரியங்களும் அணு அளவே ஆகும் என்று நிரூபிக்கப்பட உள்ளது; இதில் ப்ரு. (3-5-13) மற்றும் ப்ரு. (6-4-2) ஆகிய வரிகள் ஆராயப்பட உள்ளன.

**2-4-6 அணவ: ச**

**பொருள்** – இந்த்ரியங்களும் அணு அளவே ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – இந்த்ரியங்களும் அணு அளவே ஆகும். ப்ரு. (6-4-2) - ப்ராணம் அநு உத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா: அநு உத்க்ராமந்தி - வெளிக்கிளம்பும் ஜீவனைத் தொடர்ந்து செல்லும் முக்யப்ராணனைத் தொடர்ந்து, அனைத்து ப்ராணன்களும் (இந்த்ரியங்கள்) செல்கின்றன – என்பதன் மூலம் அவற்றின் ஸஞ்சாரமும் கூறப்பட்டுள்ளது.

**2-4-7 ச்ரேஷ்ட: ச**

**பொருள்** – முக்யப்ராணனும் உற்பத்தி ஆகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – "ச்ரேஷ்ட – உயர்ந்தது" என்பதன் மூலம் ஐந்து செயல்களுடன் கூடிய ப்ராணனே கூறப்பட்டதாக அறியவேண்டும். இதுவும் உற்பத்தி ஆகிறது. அடுத்த ஸூத்ரத்தில் தொடருவதால், இது இங்கு தனித்து கூறப்பட்டது.

## அதிகரணம் – 4 – வாயு க்ரியா அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - முக்யப்ராணன் வாயுவோ அல்லது செயல்பாடோ அல்ல என்று நிரூபிக்கப்பட உள்ளது; முண். (2-1-3) ஆராயப்பட உள்ளது.

**2-4-8 ந வாயு க்ரியே ப்ருதக் உபதேஶாத்**

**பொருள்** - வேறுபட்டதாகக் கூறப்படுவதால், ப்ராணன் என்பது வாயுவோ அல்லது அதன் செயல்பாடோ அல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஐந்து செயல்களுடன் கூடிய ப்ராணன் என்பது வாயு மட்டும் அல்ல, அந்தச் செயல்பாடுகளும் அல்ல; ஏன்? அவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாகக் கூறுவதால் ஆகும். முண். (2-1-3) – ஏதஸ்மாத் ஜாயதே ப்ராண: மந: ஸர்வ இந்த்ரியாணி ச கம் வாயு: - இதிலிருந்து (ப்ரஹ்மம்) ப்ராணன், மனம், அனைத்து இந்த்ரியங்கள், ஆகாசம், வாயு ஆகியவை வெளிப்பட்டன - என்ற வரியில், வாயுவும் ப்ராணனும் தனித்தனியாகவே கூறப்பட்டன.

**2-4-9 சக்ஷுராதிவத் து தத் ஸஹ ஶிஷ்டயாதிப்ய:**

**பொருள்** - கண் முதலானவை போன்று ப்ராணனும் (ஒரு உபகரணம் மட்டுமே). கண் முதலானவற்றோடு படிக்கப்பட்டதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ராணன் என்பது வாயுவைக் காட்டிலும் வேறானது, ஆனால் அக்னி முதலானவை போன்று முற்றிலுமாக வேறானது அல்ல. சரீரத்தை நிலை நிறுத்தவல்லது வாயுவே ஆகும். அது, கண் முதலானவை போன்று ஜீவாத்மாவிற்கு உபகரணம் ஆகும்; ஏனென்றால் கண் முதலானவற்றுடன் சேர்த்து உபதேசம்

செய்யப்பட்டுள்ளதாலும், அவற்றைப் போன்றே உதவி செய்வதாலும், முக்கியமாக உள்ளதாலும் ஆகும்.

**2-4-10 அகரணத்வாத் ச ந தோஷ: ததா ஹி தர்யதி**

**பொருள்** - (ஜீவனுக்கு ப்ராணன் மூலம்) எந்தச் செயல்பாடும் இல்லை என்ற தோஷம் இல்லை; (இந்த்ரியங்களைத் தரித்தல்) உதவியைச் செய்வதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – இங்கு "கரணம்" என்பது செய்கை என்னும் பொருளில் உள்ளது. அதாவது இந்த ப்ராணனுக்கு ஜீவனைக் குறித்து உதவி செய்கின்ற செயல்பாடு ஏதும் இல்லை என்பதால் தோஷம் கூறுதல் பொருந்தாது; அந்த தோஷம் பொருந்தாது. சரீரம் மற்றும் இந்த்ரியங்கள் அழியாமல் காக்கும் செயலானது ப்ராணனுக்கு உள்ளதாக ச்ருதி கூறுகிறது; ஏனென்றால், ப்ராணன் வெளியே கிளம்பியவுடன் சரீரம் மற்றும் இந்த்ரியங்கள் அழிகின்றன எனக் கூறப்பட்டுள்ளது.

**2-4-11 பஞ்ச வ்ருத்தி: மநோவத் வ்யாபதியதே**

**பொருள்** – ஐந்து செயல்கலைக் கொண்ட ப்ராணன் என்பதே, (பல செயல்கள் கொண்ட) மனம் போன்று பல பெயர்களால் கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஒன்றாகவே உள்ள ப்ராணனானது தனது ஐந்துவிதமான செயல்பாடுகளால் ப்ராணன், அபாநன் என்னும் பெயர்களுடன் உள்ளது. இது, மனம் என்பது ஒன்றாகவே உள்ளபோதிலும், காமம் முதலான பலவிதங்களாக உள்ளது போன்று ஆகும்; இதனை ப்ரு. (1-5-3) - காம: ஸங்கல்ப – காமம் (ஆசை), ஸங்கல்பம் – என்று தொடங்கி, ப்ரு. (1-5-3) - ஏதத் ஸர்வம் மந ஏவ – இவை அனைத்தும் மனமே ஆகும் - என்று கூறியது.

## அதிகரணம் – 5 - ஶ்ரேஷ்ட அணுத்வ அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – முக்யப்ராணனும் அணு அளவே ஆகும் என்று நிரூபிக்கப்பட்ட உள்ளது; முண். (2-1-3), ப்ரு. (6-4-2) ஆகியவை ஆராயப்படுகின்றன.

**2-4-12 அணு: ச**

**பொருள்** – (முக்யப்ராணனும்) அணு அளவே ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரு. (4-4-2) - ப்ராண: அநூத்க்ராமதி - முக்யப்ராணனும் செல்கிறது – என்று வெளிக்கிளம்புதல் கூறப்படுவதால் (முக்ய ப்ராணனும் அணு அளவே ஆகும்).

## அதிகரணம் – 6 - ஜ்யோதிராதி அதிஷ்டாந அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஜீவன், அக்னி முதலான தேவதைகள் ப்ராணனை அண்டி நிற்பது என்பது, பரமாத்மாவின் ஆணையால் ஆகும் என்று நிரூபிக்கப்பட உள்ளது. ப்ரு. (5-7-5) ஆராயப்பட உள்ளது.

**2-4-13 ஜ்யோதிராதி அதிஷ்டாநம் து ததாமநநாத் ப்ரணவதா ஶப்தாத்**

**பொருள்** – இந்திரியங்களை, அக்னி முதலான தேவதைகள், ஜீவாத்மாவுடன் சேர்ந்து நியமித்தல் என்பது ப்ரஹ்மத்தின் ஆணைக்குட்பட்டே ஆகும் என்று ச்ருதியிலிருந்து அறியப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ஜீவனோடு சேர்ந்து அக்னி முதலான தேவதைகள், ப்ராணன்களை (இந்த்ரியங்களை) நியமித்தல் என்ற நிலையானது, பரமாத்மாவின் ஸங்கல்பத்தால் உண்டாகிறது என்றே கூறவேண்டும். ஏன்? ப்ரு. (3-7-5) - யோ அக்நௌ திஷ்டந் … அக்நிம் அந்தரோ யமயதி - யார் அக்னியின் உள்ளே இருக்கிறானோ … யார் அக்னியின் உள்ளிருந்து நியமிக்கிறானோ – என்பதால் ஆகும்.

**2-4-14 தஸ்ய ச நித்யத்வாத்**

**பொருள் –** பரமாத்மா எப்போதும் உள்ளவன் என்பதால் அனைத்தையும் நியமிக்கிறான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அனைத்து வஸ்துக்களுக்கும் எப்போதும் பரமாத்மாவால் நியமிக்கப்படுதல் என்ற நிலை உள்ளதால் ஆகும்.

## அதிகரணம் – 7 - இந்த்ரிய அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** இந்த்ரியங்கள் அனைத்தும் முக்யப்ராணனைக் காட்டிலும் வேறுபட்டவை என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**2-4-15 த இந்த்ரியாணி தத் வ்யபதேஶாத் அந்யத்ர ஶ்ரேஷ்டாத்**

**பொருள் –** முக்யப்ராணன் தவிர, அவை (ப்ராணன் என்ற பதத்தால் கூறப்படுபவை) அனைத்தும் இந்த்ரியங்களே ஆகும். அவற்றைக் குறித்து அது போன்றே கூறப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** முக்யப்ராணன் நீங்கலாக உள்ள மற்ற இந்த்ரியங்களே ப்ராணன் என்ற பதத்தால் கூறப்பட்டுள்ளது. இதனைக் கீதையில் (13-5) – இந்த்ரியாணி தஶ ஏகம் ச - பத்து புலன்கள், மனம் மற்றும் புலன்களுடைய விஷயமான ஐந்து - என்றது காண்க.

**2- 4-16 பேத ஶ்ருதே: வைலக்ஷண்யாத் ச**

**பொருள் -** இந்த்ரியங்கள் மற்றும் (முக்ய) ப்ராணன் ஆகியவற்றை வேறுபடுத்திக் கூறுவதாலும், வேறுவகைப்பட்டுள்ளதாலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – முண். (2-1-3) - ஏதஸ்மாத் ஜாயதே ப்ராணோ மந: ஸர்வ இந்த்ரியாணி ச – பரம்பொருளிடமிருந்து ப்ராணன், மனம், அனைத்து இந்த்ரியங்கள் வெளிப்பட்டன – என்பது போன்ற இடங்களில், இந்த்ரியங்களைக் காட்டிலும் (முக்ய) ப்ராணன் வேறானது என்பதை உணர்த்துவிதமாக, தனியாகவே படிக்கப்பட்டுள்ளது. இந்த்ரியங்கள் செயல்படாமல் உள்ளபோதிலும் முக்யப்ராணன் செயலாற்றியபடியே உள்ளது. ஆகவே ப்ராணனுக்கும் இந்த்ரியங்களுக்கும் வேறுபாடு உள்ளது.

## அதிகரணம் – 8 – ஸம்ஜ்ஞாமூர்த்தி க்லுப்தி அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – த்ரிவ்ருத்கரணம் மற்றும் நாம ரூபங்கள் ஆகியவற்றைச் செய்பவன் ஒருவனே ஆவான் என்று நிரூபிக்கப்பட உள்ளது; சாந். (6-3-2) ஆராயப்பட உள்ளது.

**2-4-17 ஸ்ம்ஜ்ஞாமூர்த்தி க்லுப்தி: து த்ரிவ்ருத் குர்வத: உபதேஶாத்**

**பொருள் -** பெயர் மற்றும் உருவங்களை உருவாக்குதல் என்பது த்ரிவ்ருத்கரணம் செய்யும் பரம்பொருளே ஆவான் என்று உபதேசிக்கப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – தேவர்கள் முதலான பெயர் மற்றும் ரூபம் ஆகியவற்றின் வ்யஷ்டி ஸ்ருஷ்டி என்பது நான்முகனைத் தனது சரீரமாகக் கொண்ட பரமாத்மாவின் செயலே ஆகும், அது நான்முகனுடைய செயல் மட்டுமே அல்ல. ஏனென்றால், த்ரிவ்ருத்கரணம் செய்தவனே பெயர் மற்றும் ரூபங்களையும் செய்வதாக ச்ருதி உரைப்பதால் ஆகும்; இதனை சாந். (6-3-2) – நாமரூபே வ்யாகரவாணி தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதம் ஏகைககாம் கரவாணி – மேலே கூறப்பட்ட தேவதை தனக்குள், “பெயர் மற்றும் ரூபங்களை அளிப்பேன், ஒவ்வொன்றையும் மூன்றும் உள்ளதாகச் செய்வேன்” என்று ஸங்கல்பம் செய்தது – என்பது காண்க. த்ரிவ்ருத்கரணத்தைச் செய்தல் நான்முகனுக்கு இயலாது; ஏனென்றால் முதலில் அக்னி, நீர், அன்னம் (பூமி) ஆகியவை சேர்ந்த அண்டம் உற்பத்தியாகிறது; அதன் பின்னரே நான்முகன் உண்டாகிறான்; இதனை ஸ்ம்ருதியானது மநு. (1-8, 9) - தத் அண்டம் அபவத்வைமம் ஸஹஸ்ராம்சு ஸமப்ரபம் | தஸ்மிந் ஜஜ்ஞே ஸ்வயம் ப்ரஹ்மா ஸர்வ லோக பிதாமஹ: - இது

தங்கமயமான முட்டையாக மாறி, ஆயிரம் கிரணங்கள் கொண்ட சூரியனுக்கு ஒப்பாக ப்ரகாசித்தது. அதிலிருந்து, அனைத்து லோகங்களுக்கும் பாட்டனாராகிய நான்முகன் தோன்றினான் - என்று கூறியது.

**2-4-18 மாம்ஸாதி பௌமம் யதா ஶப்தம் இதரயோ: ச**

**பொருள்** – மாம்ஸம் மற்றும் மனம் ஆகிய இரண்டும் பூமியின் மாறுபாடே ஆகும். இதனை மற்ற வாக்கியங்களிலும் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – [த்ரிவ்ருத்கரணத்தைக் குறித்த உபதேசமானது, அண்டத்தின் ஸ்ருஷ்டியைத் தொடர்ந்து நான்முகனால் படைக்கப்பட்ட தேவதைகளைப் படைக்கும்போது செய்யப்பட்டதாகும் என்று பூர்வபக்ஷி கூறுவது பொருந்தாது. ஏன்?] இதனை ஏற்றுக்கொண்டால், சாந். (6-5-1) – அந்நம் அசிதம் த்ரேதா விதீயதே - உண்ணப்பட்ட உணவு மூன்றாகப் பிரிக்கப்படுகிறது - என்ற வாக்கியத்தில் மாம்ஸம் என்பது மலத்தைக் காட்டிலும் அணுவாகவும் (சிறியது, நுண்ணியது), மனம் என்பது மலத்தைக் காட்டிலும் மிகவும் நுண்ணியதாகவும் இருப்பதாகக் கூறப்பட்டதால், (மாம்ஸமும் மனமும், அவற்றினை உண்டாக்குகின்ற காரணப்பொருளின் தன்மையை ஒட்டியே இருக்கவேண்டும் என்பதால்) மாம்ஸம் நீரினாலும் மனம் தேஜஸ்ஸினாலும் (அக்னி) உண்டாக்கப்பட்டது என்று கூறவேண்டிய நிலைவரும். ஆனால் இது, தொடக்கத்தில் சாந். (6-5-1) – அந்நமசிதம் த்ரேதா - உணவு மூன்றாகப் பிரிகிறது (உணவு என்பது அன்னம் = பூமி) - என்று கூறப்பட்டதற்கு முரணாகிறது; காரணம் பூமியே அங்கு அன்னம், நீர், அக்னி என மாறுவதாகக் கூறப்பட்டது. மேலும் இது, சாந். (6-5-4) – அந்நமயம் ஹி ஸோம்ய மந: – குழந்தாய்! மனதில் பூமியின் பாகமும் – என்பதுடனும் முரணாகிறது; காரணம், மனம் என்பது பூமியின் தன்மையைக் கொண்டதாகும். இதனைப் போன்றே, அக்னி மற்றும் நீர் ஆகியவற்றின் மூன்றுவிதமான மாறுபாடுகளுடனும் முரண்பாடு உண்டாகும். இதனால்தான் ஸூத்ரமானது, "மாம்ஸாதி பௌமம் யதா சப்தம் இதரயோ: ச - மாம்ஸம் மற்றும் மனம் ஆகிய இரண்டும் பூமியின் மாறுபாடே ஆகும். இதனை மற்ற வாக்கியங்களிலும் காணலாம்" என்று உள்ளது. மேலும் இங்கு, மாம்ஸமும் மனமும், மலத்தைப் போன்றே பூமியின் தன்மை கொண்டதாக உள்ளது என்று கூறப்பட்டது. இதனைப் போன்று, குருதியும் ப்ராணனும், மூத்ரத்தைப் போன்றே நீரின்

தன்மை கொண்டதாக உள்ளது என்று கூறப்பட்டது. இதனைப் போன்று, மஜ்ஜையும் வாக்கும், எலும்புகளைப் போன்றே தேஜஸ்ஸின் தன்மை கொண்டதாக உள்ளது என்று கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஆக, முன்னமேயே மூன்றும் கலந்த நிலை உண்டாகியுள்ளது. அப்படியானால், அவ்விதம் மூன்றும் கலந்த பொருளை "அன்னம், நீர் மற்றும் தேஜஸ்" என்று எவ்விதம் பெயரிட்டுக் கூற முடியும்? அடுத்த ஸூத்ரத்தில் விடை அளிக்கிறார்.

**2-4-19 வைஶேஷ்யாத் து தத்வாத: தத்வாத:**

**பொருள் -** ஒவ்வொரு பகுதி அதிகமாக உள்ளதால், தனித்தனியாகக் கூறப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அன்னம் போன்றவற்றில் அந்தந்த பூதங்களில், அவை அவை அதிகமாக உள்ளதால் இவ்விதம் தனித்தனியே கூறப்படுகிறது.

வேதாந்தஸாரம் இரண்டாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

## அத்யாயம் – 3 – உபாஸநா அத்யாயம்

### பாதம் – 1 – வைராக்ய பாதம்

இந்தப் பாதத்தில் விழிப்பு நிலையில் உள்ள ஜீவாத்மாவிற்கு ஏற்படக்கூடிய தோஷங்கள் அனைத்தும் காண்பிக்கப்பட்டு, இவை அனைத்தும் இந்தச் சரீரத்துடன் சேர்ந்துள்ளதால் உண்டாகின்றன என்று விளக்கப்பட்டு, இதன் மூலம் இந்த உலக வாழ்வினைக் குறித்த வைராக்யம் (பற்றற்ற நிலை) உண்டாக்கப்படுகிறது (அல்லது) இந்தப் பாதத்தில் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஜீவனுக்குள்ள தோஷங்கள் யாவை என்று கூறப்பட உள்ளன. இவற்றை விளக்கினால் மட்டுமே, இது போன்ற தோஷங்கள் அற்ற ப்ரஹ்மத்தை அடைய வேண்டும் என்ற வைராக்யம் ஒரு ஜீவனுக்கு ஏற்படும். எனவே முதலில் இவை கூறப்பட்டன.

## அதிகரணம் – 1 – ததந்தர ப்ரதிபத்த்ய அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – இந்த அதிகரணத்தில், சாந்தோக்ய உபநிஷத் கூறும் கருத்தான - ஜீவன் ஓர் உடலை விட்டு வெளியே கிளப்பும்போது (மரணத்தின் பின்னர்), பஞ்ச பூதங்களுடன் கூடியவனாக, ஸூக்ஷ்ம ரூபத்துடன் செல்கிறான் - என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3-1-1** ததந்தர ப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த: ப்ரஶ்ந நிரூபணாப்யாம்

**பொருள்** - ஜீவன் மற்றொரு உடலை அடையச் செல்லும் போது, பஞ்சபூதங்களுடன் கூடிய உடலுடன் செல்கிறான். உபநிஷத்தில் உள்ள கேள்வி பதில் மூலம் இப்படியே உணர்த்தப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஜீவாத்மா ஒரு சரீரத்திலிருந்து புறப்பட்டு மற்றொரு சரீரத்திற்குச் செல்லும்போது, பூதஸூக்ஷ்மங்களால் அணைக்கப்பட்டபடியே செல்கிறான். இதனை பஞ்சாக்னி வித்யை பகுதியில் உள்ள கேள்வி-பதில் மூலம் அறியலாம். இங்கு, "சாந். (5-3-3) - வேத்த யதா பஞ்சம்யாமாஹுதாவாப புருஷ வசஸோ பவந்தி - ஐந்தாவது ஆஹுதியாக அளிக்கப்படும் நீர் என்பது எவ்விதம் புருஷன் என்று கூறப்படுகிறது என்று அறிவாயா?", என்பதே கேள்வியாகும். இதற்கு விடையாக, "சாந். (5-9-1) - இதி து பஞ்சம்யாம் ஆஹுதாவாப புருஷ வசஸோ பவந்தி - இப்படியாகவே ஐந்தாவது ஆஹுதியாக விடப்படும் நீர் என்பது புருஷனாகப் பெயர் அடைகின்றது", என்று கூறப்பட்டது. இந்தக் கேள்வி மற்றும் பதிலுடைய கருத்தானது அடுத்த வரும் ஸூத்ரங்களில் உள்ளது. இங்கு கூறப்படுவது என்னவென்றால்: அந்தணன் முதலான சரீரங்களில் உள்ள ஜீவாத்மா யாகம், தானம் முதலான கர்மங்களைச் செய்கிறான். அதன் பின்னர் அவற்றுக்கான பலனை அனுபவிப்பதற்காக, அந்தச் சரீரத்தை விட்டுக் கிளம்புகிறான். அந்தச் சரீரத்தில் உள்ள மற்ற பூதங்களுடன் கலந்த ஸூக்ஷ்மமான நீரால் அணைக்கப்பட்டு, அக்னி என்று உருவகம் செய்யப்பட்ட த்யுலோகம் (ஸ்வர்கம்) அடைகிறான். அதன் பின்னர் அம்ருதமய சரீரமாக பரிணமிக்கின்ற அதே நீரால் அணைக்கப்பட்டு, தேவர்களுக்கு அடங்கியவன் ஆகிறான். அங்கு தனது கர்மபலனை, அந்தத் தேவர்களுடன் சேர்ந்து அனுபவிக்கிறான். அந்தக் கர்மபலன்கள் அனைத்தும் அனுபவித்துத் தீர்ந்த பின்னர், எஞ்சிய கர்மபலனுடன், அந்தணன் முதலான சரீரத்தில் பிறக்கிறான். மீண்டும் கர்மங்களை இயற்றுவதற்காக, நீரால் அணைக்கப்பட்டு,

அக்னியாக உருவகம் செய்யப்படும் மேகத்தில் (பர்ஜன்யம் – மழை) புகுகிறான். தொடர்ந்து மழை வடிவில், அக்னியாக உருவகம் செய்யப்படும் பூமியில் நுழைகிறான். அதன் பின்னர், நெல் முதலானவற்றுடன் சேர்ந்து, உணவாக மாறுகிறான். தொடர்ந்து, அந்த உணவுடன் சேர்ந்து, அக்னியாக உருவகம் செய்யப்படும் புருஷனை (ஆண்) அடைகிறான். அதன் பின்னர், புருஷனுடைய விந்துவாக மாறுகின்ற நீருடன் கலந்தவனாக, அக்னியாக உருவகம் செய்யப்படும் பெண்ணிற்குள் புகுகிறான். அங்கு கர்ப்பமாக மாறி, புருஷன் என்னும் பெயர் கொண்ட நீருடன் சேர்ந்து, கர்மபலன்களுக்கு ஏற்றபடி அந்தணன் முதலான பிறவிகளை எடுக்கிறான்.

**3-1-2 த்ரயாத்மகத்வாத் து பூயஸ்த்வாத்**

**பொருள்** - மூன்று பூதங்களையுமே கொண்டிருப்பதாலும், நீர் அதிகமாக உள்ளதாலும் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – த்ரிவ்ருத்கரணம் காரணமாக அனைத்து வஸ்துக்களுமே மூன்றின் கலவையாகவே உள்ளன. ஆனால் இங்கு நீர் மட்டும் ஏன் கூறப்பட்டது என்றால், சரீரத்தில் அது அதிக அளவில் உள்ளதால் ஆகும்.

**3-1-3 ப்ராணகதே: ச**

**பொருள்** - ப்ராணன்களும் (இந்த்ரியங்களும்) செல்வதால் (இந்த்ரியங்களுக்கு ஆதாரமாக உள்ள பூதஸூக்ஷ்மங்களும் ஜீவனுடன் செல்கின்றன).

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம்** – ப்ரு. (4-4-2) - ப்ராணம் அநூத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தி - ப்ராணனைத் தொடர்ந்து மற்ற ப்ராணன்களும் (இந்த்ரியங்கள்) கிளம்புகின்றன - என்று கூறப்பட்டது. ஆகவே ஜீவாத்மாவுடன் சேர்ந்தே அனைத்து இந்த்ரியங்களும் கிளம்புகின்றன. ஆகவே தங்களுடைய இருப்பிடமான ஸூக்ஷ்ம சரீரத்துடன் சேர்ந்தே இந்த்ரியங்கள் செல்கின்றன என்று அறியப்படுகிறது.

**3-1-4 அக்ந்யாதி கதி: ச்ருதே: இதி சேத் ந பாக்தத்வாத்**

**பொருள்** - மரணகாலத்தில் இந்த்ரியங்கள் என்பது அக்னியுடன் இணைவதாகக் கூறுவதால், ப்ராணன் ஜீவனுடன் செல்வதில்லை என்று கூறினால் - நாம் மறுக்கிறோம், காரணம் அங்கு வேறு ஒரு பொருளில் (அர்த்தத்தில்) கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ப்ரு. (5-2-13) - அக்நிம் வாக் அப்யேதி - (உயிர் பிரிந்தபின்) வாக்கு அக்னியில் இணைகிறது - என்று கூறப்பட்டது. ஆக, இதன் மூலம் மரணகாலத்தில் வாக்கு போன்றவை அக்னி முதலானவற்றில் இணைவதை அறியலாம். எனவே அவை (இந்த்ரியங்கள்) ஜீவனுடன் செல்வதில்லை என்றாகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. காரணம், வாக்கு போன்றவை வேறு பொருளில் உள்ளன; அதாவது, அந்தப் புலன்களின் அபிமான தேவதைகளைக் குறிக்கின்றன. அதே உபநிஷத் வரியில் - ஓஷதீர் லோமாநி - இறந்தவனின் தலைமுடிகள் மரங்களில் கலக்கின்றன - என்று கூறப்பட்டது. ஆனால் இவ்விதம் இந்த முடிகள் கலப்பதில்லை.

**3-1-5 ப்ரதமே அச்ரவணாத் இதி சேத் ந தா ஏவ ஹி உபபத்தே:**

**பொருள்** – "முதல் ஹோமத்தில் கூறப்படாத காரணத்தினால், ஜீவன் பூதஸூக்ஷ்மங்களுடன் செல்வதில்லை"; இவ்விதம் கூறுவது பொருந்தாது - காரணம் நீர் அல்லவோ கூறப்பட்டுள்ளது? இப்படிக் கொண்டால் மட்டுமே கேள்வி பதில் பொருந்தும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – நீரானது ஜீவன் கிளப்பும்போது, அவனுடன் செல்வதில்லை. இதன் காரணம், ஸ்வர்கம் என்ற அக்னியில் செய்யப்படும் முதல் ஹோமமாக, நீர் கூறப்படவில்லை. சாந். (5-4-2) - ஏதஸ்மிந் அக்நௌ தேவா ச்ரத்தாம் ஜுஹ்வதி - தேவலோகம் என்ற அக்னியில் தேவர்கள் ச்ரத்தையை (மனித மனத்தின் ஒரு செயல்பாடு, அதாவது ஆழ்ந்த ஈடுபாடு எனலாம்) ஹோமம் செய்கின்றனர் - என்று கூறியது. எனவே இங்கு ச்ரத்தை என்பதே கூறப்படுகிறது (நீர் அல்ல).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - இது தவறான வாதமாகும். நீர் என்பதே, "ச்ரத்தை" என்ற பதம் மூலம் கூறப்பட்டுள்ளது; காரணம், நீரைக் குறித்து கேள்வி எழும்போது, அதற்கான

பதிலும் நீரைக் குறித்தே இருக்கவேண்டும். ச்ரத்தை என்ற சொல்லால் நீரானது குறிக்கப்பட்டால் மட்டுமே, இங்கு கூறப்பட்ட பதிலானது பொருந்தும். மேலும், தைத். ப்ரா. (3-2-4) – ச்ரத்தா வா ஆப: - ச்ரத்தை என்பது நீர் – என்றது காணலாம்.

**3-1-6 அச்ருதத்வாத் இதி சேத் ந இஷ்ட அதிகாரிணாம் ப்ரதீதே:**

**பொருள்** - ஜீவன் போகிறான் என்று கூறப்படவில்லையே - இவ்விதம் ஆக்ஷேபம் செய்வது சரியல்ல. யாகம் போன்றவற்றை இயற்றும் ஜீவன்கள் குறித்தே கூறப்பட்டன.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – இங்கு கூறப்பட்ட கேள்வி-பதில் பகுதியில், நீர் மட்டுமே கூறப்பட்டது அல்லாமல், அவற்றால் அணைக்கப்பட்ட ஜீவாத்மா அல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - அப்படி அல்ல. சாந். (5-10-3) - அத ய இமே க்ராமே இஷ்டாபூர்த்தே தத்தம் இதி உபாஸதே - கிராமங்களில் இருந்தபடி யாகம் இயற்றுதல், குளம் வெட்டுதல், தானம் செய்தல் போன்றவற்றைச் செய்தவர்கள், (தூமாதி மார்க்கமாக ஸ்வர்கம் செல்கின்றனர்) – என்றுள்ள வாக்கியம் மூலமாக, யாகம் போன்றவற்றைச் செய்தவர்கள் செல்லும் மார்க்கம் கூறப்பட்டது. மேலும், சாந். (5-4-2) - தஸ்யா ஆஹுதே: ஸோமோ ராஜா ஸம்பவதி - அந்த ஆஹுதியில் இருந்து ஸோமராஜா வெளிப்படுகிறான் – என்றுள்ள வாக்கியத்தில், ஸ்வர்க்கம் என்னும் அக்னியுடன் சேர்த்துக் கூறப்படும் நீருடன் ஸம்பந்தம் கொண்டுள்ளவன் ஸோமராஜாவாகிறான் என்று கூறப்படுகிறது. ஸோமராஜா எனப்படும் இவனே, சாந். (5-10-4) – ஸோமோராஜா – என்று கூறப்படுகிறான். ஆகவே நீரால் அணைக்கப்பட்டு, அவற்றைத் தனது சரீரமாகக் கொண்ட ஜீவனே “நீர்” என்று அழைக்கப்படுகிறான். இதுவே இங்கு அறியப்படுகிறது.

**3-1-7 பாக்தம் வா அநாத்மவித்த்வாத் ததா ஹி தர்ஶயதி**

**பொருள்** - அந்த உபநிஷத் வாக்கியம் வேறு பொருளில் வந்துள்ளது. ப்ரஹ்மத்தைக் குறித்த அறிவில்லாத காரணத்தினால், அந்த அதிகாரிகள் தேவர்களுக்கு உணவாகின்றனர். இதனையே ச்ருதி கூறுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சாந். (5-10-4) - ஏஷ ஸோமோ ராஜா – அங்கு ஸோமராஜா ஆகிறான் – என்றும், சாந். (5-10-4) - தம் தேவா பக்ஷயந்தி - (ஸோமராஜாவை) தேவர்கள்

உண்ணுகின்றனர் – என்றும் உள்ள வாக்கியங்களில், ஸோமராஜாவை தேவர்கள் உண்பதாகக் கூறுவது என்பது வேறு பொருளில் வந்துள்ளது. அதாவது, ஆத்ம ஞானம் அற்றவனாகிய ஜீவாத்மா, தேவர்களால் அனுபவிக்கும்படியான உபகரணம் ஆகிறான். ச்ருதியானது, (ஸோமராஜாவாகிய அந்த ஜீவாத்மா) பசு போன்று தேவர்களுக்கு கருவியாகிறான் என்பதை ப்ரு. (1-4-10) – யதா பசு: ஏவம் ஸ தேவாநாம் - மனிதர்களுக்குப் பசு பயன்படுவது போன்று, அவன் தேவர்களுக்குப் பயன்படுகிறான் – என்று கூறியது. ஸ்ம்ருதியானது, ஆத்மஞானம் உள்ளவர்கள் ப்ரஹ்மத்தை அடைவதையும், அந்த ஞானம் அற்றவர்கள் தேவதைகளின் உபயோகப் பொருள்களாக உள்ளதையும் கூறுகின்றது; கீதை (7-23) - தேவாந் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி - தேவதைகளை ஆராதிப்பவர்கள் அவர்களிடம் செல்கின்றனர், என்னை (க்ருஷ்ணனை) ஆராதிப்பவர்கள் என்னிடம் வந்தடைகின்றனர் - என்றது.

## அதிகரணம் - 2 - க்ருதாத்யயாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஸ்வர்கத்தில் இருந்து மீண்டும் கீழே இறங்கும் ஜீவன், தான் அனுபவிக்கவேண்டிய எஞ்சிய கர்மபலன்களுடனேயே வருகிறான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3-1-8 க்ருதாத்யயே அநுசயவாந் த்ருஷ்ட ஸ்ம்ருதிப்யாம் யதேதம் அநேவம் ச**

**பொருள்** - கர்மபலன் அனுபவிக்கப்பட்ட பின்னர், கர்மபலனில் உள்ள மீதத்துடன் (எஞ்சிய கர்ம பலன்), ஜீவன் வருகிறான். இவ்விதமே ச்ருதியும் ஸ்ம்ருதியும் கூறுகிறது. ஒரு வழியில் சென்று மற்றொரு வழியில் திரும்புகிறான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – கர்மபலன் அனுபவிக்கப்பட்ட பின்னர், கர்மபலனில் உள்ள மீதத்துடன் (எஞ்சிய கர்ம பலன்), ஜீவன் வருகிறான் என்பதை ச்ருதி மற்றும் ஸ்ம்ருதி மூலம் அறியலாம்; சாந். (5-10-7) – ரமணீய சரணா ரமணீயாம் யோநிம் ஆபத்யந்தே - எஞ்சிய புண்ணிய பலன்களுடன் (ரமணீய) திரும்பும்போது, நற்பிறவிகளை எடுக்கின்றனர் – என்பது காண்க. இதனை ஸ்ம்ருதியானது ஆப. ஸூ. (2-1-2, 3) – தத: பரிவ்ருத்தௌ கர்மபல சேஷேண ஜாதிம் ரூபம் - ஸ்வர்கத்திலிருந்து திரும்பும்போது எஞ்சியுள்ள கர்மபலன் காரணமாக சிறந்த குலம், அழகான ரூபம் - என்று கூறியது.

மீண்டும் திரும்பும்போது, மேலே சென்ற வழியில் சிறிதும், வேறு வழியில் சிறிதும் வருகிறார்கள்.

**3-1-9 சரணாத் இதிசேத் ந தத் உபலக்ஷணார்த்தா இதி கார்ஷ்ணாஜிநி:**

**பொருள்** – ஆசாரம் (ஒழுக்கம்) என்பதே "சரண" என்ற பதம் மூலம் (கடந்த ஸூத்ரத்தில் உள்ள கபூயசரணா, ரமணீயசரணா போன்ற பதங்கள்) கூறப்பட்டது; அவை குறிப்பது கர்மத்தை அல்ல - என்று ஆக்ஷேபிப்பது சரியில்ல; அந்தப் பதங்கள் கர்மங்களைக் குறிப்பதாகவே கார்ஷ்ணாஜிநி முனிவர் கூறுகிறார்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – "சாந். (5-10-7) – ரமணீய சரணா:" என்பதில் உள்ள "சரணம்" என்ற பதமானது, எஞ்சிய புண்ய பலன்களைக் கூறவில்லை. அந்தச் சொல்லானது "ஆசாரம் (ஒழுக்கம்)" என்ற பொருளையே தருகிறது (ஆகவே ஜீவாத்மா எஞ்சிய பலன்களுடன் திரும்புவதில்லை).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. ச்ருதியில் உள்ள "சரண" என்ற அந்தச் சொல்லானது, எஞ்சிய கர்மபலனையே குறிப்பதாகும்; காரணம் கர்மமே ஸுகம் மற்றும் துக்கம் ஆகியவற்றின் ஸாதனமாக உள்ளது.

**3-1-10 ஆநர்த்தக்யம் இதி சேத் ந தத் அபேக்ஷத்வாத்**

**பொருள்** - (ஆசாரம் மூலம் இன்ப துன்பம் ஏற்படவில்லை என்றால்) இந்த ஆசாரம் பயனற்றதாகிவிடுமே; இவ்விதம் வாதம் செய்வது சரியல்ல - காரணம் புண்ணியபாப கர்மங்கள் அதனையே சார்ந்துள்ளன.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – (ஆசாரம் மூலம் இன்பதுன்பங்கள் விளையாது என்றால்) ஸ்ம்ருதிகளில் கூறப்பட்ட ஆசாரம் என்பது பயனற்றதாகி விடும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. ஆசாரம் என்பதே புண்ணிய கர்மங்களின் அடிப்படை ஆகிறது. இதனை தக்ஷ. (2-27) - ஸந்த்யாஹீநோ அசுசி: நித்யம் அநர்ஹ: ஸர்வ கர்மஸு - ஸந்த்யாவந்தனம் செய்யாதவன் அசுத்தமானவன், அவன் எந்தக் கர்மத்தையும் இயற்றும் தகுதி அற்றவன் – என்பது போன்ற வாக்கியங்களில் காணலாம் என்பதே கார்ஷ்ணாஜி ரிஷியின் கருத்தாகும்.

**3-1-11 ஸுக்ருத துஷ்க்ருதே ஏவ இதி து பாதரி:**

**பொருள்** – "சரண" என்ற பதம் புண்ணிய பாப கர்மங்களைக் குறிப்பதாகவே பாதரி கூறுகிறார்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – "ரமணீய சரணா:" மற்றும் "கபூய சரணா:" என்பவற்றில் காணப்படும் "சரண" என்பதன் மூலம் நற்செயல்கள் மற்றும் தகாத செயல்களே கூறப்படுவதாக பாதரி கருதுகிறார்; இதனை "புண்யம் கர்ம ஆசரதி" என்பது போன்றவற்றால் அறியலாம். மேலும், "புண்ணிய கர்மங்கள் அனைத்தும் ஸ்ம்ருதிகளில் கூறப்பட்ட சிறந்த ஆசாரத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவே உள்ளன" என்றும் அவர் ஏற்கிறார்.

## அதிகரணம் – 3 – அநிஷ்டாதிகார்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - இந்த அதிகரணத்தில், பாபம் செய்தவர்கள் சந்த்ரமண்டலம் செல்வதில்லை என்பது நிருபிக்கப்பட்ட உள்ளது.

**3-1-12 அநிஷ்டாதிகாரிணாம் அபி ச ச்ருதம்**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) யாகம் போன்றவற்றைச் செய்யாதவர்களுக்கும் சந்த்ரமண்டலம் அடைவது கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - யாகங்கள் (இஷ்டம்), குளம் வெட்டுதல் போன்ற செயல்கள் (பூர்த்தம்) ஆகியவற்றைச் செய்யாதவர்களும் சந்த்ரமண்டலம் செல்கிறார்கள். கௌஷீ. (1-2) - யே வை கே ச அஸ்மாத் லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸம் ஏவ தே ஸர்வே கச்சந்தி - இந்த உலகில் இருந்து புறப்படுபவர்கள் அனைவரும் சந்த்ரமண்டலம் செல்கின்றனர் – என்று கூறுகிறது.

**3-1-13 ஸம்யமநே து அநுபூய இதரேஷாம் ஆரோஹ அவரோஹ தத் கதி தர்சநாத்**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) மற்றவர்களுக்கு (பாபம் செய்தவர்களுக்கு) சந்த்ரமண்டலம் செல்வதும், பின்னர் அங்கிருந்து மீள்வதும், யமலோகத்தை அடைந்து, அனுபவித்த பின்னரே ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - (கடந்த ஸூத்ரத்தின் இறுதியில் பூர்வபக்ஷி கூறியது தொடர்கிறது) - யாகங்கள் (இஷ்டம்), குளம் வெட்டுதல் போன்ற செயல்கள் (பூர்த்தம்) ஆகியவற்றைச் செய்யாதவர்கள் தங்களுடைய கர்மங்களுக்கான பலனை யமனின் இருப்பிடத்தில் அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு மேலே செல்லுதலும், கீழே திரும்புதலும் உள்ளதை தை. ஆர. (2-1) - வைவஸ்வதம் ஸங்கமநம் - சூரியனின் புத்திரனான யமனை அடைகிறார்கள் – என்பதில் காணலாம்.

**3-1-14 ஸ்மரந்தி ச**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) இதனை ஸ்ம்ருதிகளிலும் காணமுடியும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - ஸ்ரீவிபு. (3-7-5) - ஸர்வே சைதே வசம் யாந்தி யமஸ்ய– இவர்கள் அனைவரும் யமனின் கட்டுப்பாட்டில் அகப்படுகின்றனர் - என்று கூறியது.

**3-1-15 அபி ஸப்த**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ஏழு நரகங்கள் குறித்துக் கூறப்படுவதாலும் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - ரௌரவம் உள்ளிட்ட ஏழு நரகங்கள் (ரௌரவம், மஹாரௌரவம், தபநம், அவீசி, ஸம்ஹாரம், காலஸூத்ரம் மற்றும் கும்பீபாகம்) ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டது.

**3-1-16 தத்ர அபி தத் வ்யாபாராத் அவிரோத:**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) யமனின் ஆணைக்கு உட்பட்டே (நரகங்கள்) உள்ளதால், எந்த விரோதமும் இல்லை.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – யமனிடம் செல்வதில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை; காரணம் அந்த நரகங்கள் அனைத்தும் யமனின் கட்டளைக்கு அடிபணிந்தே உள்ளன.

**3-1-17 வித்யாகர்மணோ இதி து ப்ரக்ருதத்வாத்**

**பொருள் -** ப்ரஹ்மவித்யை உள்ளவர்களுக்கு அர்ச்சிராதியும், கர்மங்களைச் சரிவர இயற்றி வருபவர்களுக்கு தூமாதி மார்க்கமும் கிட்டும் என்றே படிக்கப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - (ஸூத்ரம் 3-1-12 முதல் 3-1-16 முடிய உள்ள பூர்வபக்ஷங்களுக்கு உரிய ஸித்தாந்தமாகும்) – ஞானம் மற்றும் கர்மம் ஆகியவற்றின் பலனாக முறையே ப்ரஹ்மத்தை அடைதல் மற்றும் சந்த்ரமண்டலத்தை அடைதல் என்பதே பலனாகக் கூறப்பட்டது. எப்படி? சாந். (5-10-1) - தத்ய இத்தம் விது: … தே அர்ச்சிஷம் அபி ஸம்பவந்தி அர்ச்சிஷ அஹ: - யார் (ப்ரஹ்மரூபமாக) ஆத்மாவை உபாஸிக்கிறார்களோ … அவர்கள் அர்ச்சிராதி மார்க்கமாக பகல்தேவதையை அடைகின்றனர் – என்றும், சாந். (5-10-3) - இஷ்டாபூர்த்தே தத்தம் இதி உபாஸதே - கிராமங்களில் இருந்துகொண்டு புண்ணிய செயல்களைச் செய்பவர்கள் (குளம் வெட்டுதல், யாகம் இயற்றுதல் போன்றவை) … தே தூமம் அபி ஸம்பவந்தி - அவர்களுக்குத் தூமாதி மார்க்கம் கிட்டுகிறது – என்றும் உள்ள வாக்கியங்களில் ப்ரஹ்மத்தை அடைதல் மற்றும் சந்த்ரமண்டலம் அடைதல் ஆகியவை கூறப்பட்டது. ஆகவே பாபிகள் சந்த்ரமண்டலம் செல்வதில்லை.

**3-1-18 ந த்ருதீயே ததா உபலப்தே:**

**பொருள்** - மூன்றாவது இடமாகிய நரகம் (ஸ்வர்கம் என்ற த்யுலோகம், ப்ரஹ்மலோகம் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்ட மூன்றாவது இடம்) என்பதற்குச் செல்லும் பாபம் செய்தவர்கள் பொருட்டு ஐந்தாவது ஆஹுதி அவசியம் இல்லை. இவ்விதமே ச்ருதி கூறுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – பாபிகள் த்யுலோகம் செல்வதில்லை என்பதால், அவர்கள் சந்த்ரமண்டலமும் செல்வதில்லை. இதனை, சாந். (5-10-8) - அத ஏதயோ: பதோர்ந கதரேண ச ந - எந்த ஜீவராசிகள் மேலே கூறப்பட்ட அர்ச்சிராதி, தூமாதி மார்க்கங்களில் செல்லாமல் உள்ளனவோ - என்று தொடங்கி, சாந். (5-10-8) - ஏதத் த்ருதீயம் ஸ்தாநம் | தேநாஸௌ லோகோ ந ஸம்பூர்யதே - இதனால்தான் அந்த உலகம் நிரம்பாமல் உள்ளது - என்று முடிக்கப்பட்டது.

**3-1-19 ஸ்மர்யதே அபி ச லோகே**

**பொருள் -** இந்த உலகில் சிலர் இவ்விதம் உள்ளனர் (ஐந்தாவது ஆஹுதி இல்லாமலேயே உடல் எடுத்தவர்கள்) என்று ஸ்ம்ருதியும் கூறுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - புண்ணியம் நிறைந்தவர்களாகிய த்ரௌபதி போன்றவர்களுக்கு (இவர்கள் அக்னியில் இருந்து வெளிப்பட்டவர்கள்), ஐந்தாவது ஆஹுதி இல்லாமலேயே சரீரம் உள்ளதாக ஸ்ம்ருதியில் கூறப்பட்டது.

**3-1-20 தர்சநாத் ச**

**பொருள் -** இதே கருத்தை ச்ருதியிலும் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ச்ருதியில் சாந். (6-3-1) - த்ரீண்யேவ பீஜாநி பவந்தி ஆண்டஜம் ஜீவஜம் உத்பிஜ்ஜம் - முட்டைகளில் இருந்து பிறப்பவை, கர்ப்பம் மூலம் பிறப்பவை, பூமியைப் பிளந்து பிறப்பவை - என்று உள்ளதைக் காணலாம். இவற்றில், பூமியைப் பிளந்து கொண்டு தோன்றும் மரம் போன்றவற்றுக்கும், வியர்வை மூலம் தோன்றும் கிருமிகள் போன்றவற்றுக்கும், ஐந்தாவது ஆஹுதி இல்லாமலேயே சரீரம் ஏற்படுவதைக் காணலாம்.

**3-1-21 த்ருதீய சப்தாவரோத: ஸம்சோகஜஸ்ய**

**பொருள்** - மூன்றாவதாக உள்ள பதம் மூலம் (கடந்த ஸூத்ரத்தில் உள்ள உபநிஷத் வரியில் காணப்படும் உத்பிஜ்ஜம் என்ற பதம்) வியர்வையில் தோன்றுபவையும் கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - உத்பிஜ்ஜம் என்ற பதம் மூலம், வெப்பத்தாலும் வியர்வையாலும் உண்டாகும் கிருமிகள் குறித்துக் கூறப்பட்டது.

## அதிகரணம் - 4 - தத் ஸ்வாபாவ்யாபத்த்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - மேலே கிளம்பும் ஜீவன், ஆகாசம் போன்றவற்றுடன் தொடர்பு மட்டுமே அடைகிறான் என்று நிருபிக்கப்பட உள்ளது.

**3-1-22 தத்ஸ்வாபாவ்யாபத்தி: உபபத்தே:**

**பொருள்** – ஜீவன், ஆகாசம் போன்றவற்றின் ஸ்வபாவம் (தன்மை) அடைகிறான் என்று கூறுவதே பொருந்துகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (5-10-5) – யத் ஏதம் ஆகாசம் – அங்கிருந்து ஆகாசம் - என்பதில், "மீண்டும் திரும்புபவர்கள் ஆகாசத்துடன் ஒப்புமை அடைகிறார்கள்" என்பதே கூறப்பட்டது; காரணம், அந்த இடங்களில் ஸுக துக்க அனுபவங்கள் உண்டாவதில்லை. அவற்றை அனுபவிப்பதற்காக அல்லவோ சரீரம் எடுக்கப்படுகிறது!

## அதிகரணம் - 5 - நாதிசிராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஆகாசம் போன்றவற்றில் ஜீவன் சிறிது காலம் மட்டுமே தங்கிவிட்டுக் கிளம்புகிறான் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**3-1-23 நாதிசிரேண விசேஷாத்**

**பொருள்** - நீண்ட காலம் இருப்பதில்லை, இவ்விதமே கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சாந். (5-10-6) – அதோ வை கலு துர்நிஷ் ப்ரபதரம் - மிகவும் சிரமத்துடன் வெளியேறுகிறான் – என்பதன் மூலம், "தானியம் முதலானவற்றில் இருந்து நீண்ட காலம் சிரமப்பட்டு வெளியேறுகிறான்" என்று கூறப்பட்டது; ஆகவே (இதற்கு முந்தைய இடங்களான) ஆகாசம் போன்றவைகளில் இருந்து குறுகிய காலத்தில் வெளியேறுகிறான் என்றே கூற வேண்டும்.

## அதிகரணம் - 6 - அந்யாதிஷ்டிதாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – இறங்கும் ஜீவாத்மா, தானியம் போன்றவற்றைத் தனது சரீரமாகக் கொண்டுள்ள மற்ற ஜீவன்களுடன் நெருங்கிய தொடர்பு மட்டுமே கொள்கிறான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

### 3-1-24 அந்யாதிஷ்டிதே பூர்வவத் அபிலாபாத்

**பொருள்** - வேறு ஜீவன்களுடன் தொடர்பு மட்டுமே கொண்டுள்ளான். இவ்விதமே கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - நெல் போன்றவையாக உள்ள மற்ற ஜீவன்களுடன் சேர்க்கை மட்டுமே கொண்டுள்ளான் என்பதை சாந். (5-10-6) - த இஹ வ்ரீஹியவா - அதன் பின்னர் நெல் – என்னும் வாக்கியம் கூறுகிறது. ஏனென்றால், ஆகாசம் என்பவையாகப் பிறப்பதற்கு எந்தவிதமான காரணமும் கூறப்படவில்லை (ஆகவே ஆகாசமாகப் பிறப்பதில்லை) என்பது போன்றே, தானியங்களாகப் பிறப்பதற்கு எந்தவிதமான காரணமும் கூறப்படவில்லை. மேலே கூறப்பட்ட ச்ருதியில் உள்ள "ஜாயந்தே - பிறக்கிறான்" என்ற பதமானது, கௌணமாக (அமுக்யமான பொருளில்) வந்துள்ளது. "அந்தணன் முதலான பிறவியை எடுக்கிறான்" என்று கூறும்போது, அதற்கான காரணமானது, சாந். (5-10-7) – ரமணீய சரணா: - புண்ணிய பலன்களின் மீதம் – என்று கூறப்படுகிறது.

**3-1-25 அசுத்தம் இதி சேத் ந சப்தாந்**

**பொருள்** – "அசுத்தமான கர்மங்கள் என்பதால் (நெல் முதலிவையாகவே பிறக்கிறான்)" - இவ்விதம் கூறுவது பொருந்தாது, சாஸ்திரம் கூறுகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – கீழே இறங்கும் ஜீவாத்மா, அசுத்த கர்மபலனுடன் வருகிறான். ஏனென்றால், கடந்த பிறவிகளில் அவன் செய்யும் அக்னீஷோமீயம் முதலான யாகங்களில் உயிர்களுக்கும் ஹிம்ஸைகள் உள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. ஐத. ப்ரா (7-4) - ஹிரண்யசரீர: ஊர்த்வம் ஸ்வர்க்கம் லோகமேதி - பொன்மயமான உடல் எடுத்தபடி மேல் நோக்கி ஸ்வர்கம் செல்கிறது – என்றும், தை. ப்ரா. (3-7-7-14) - ந வா உ ஏதந் ம்ரீயதே ந ரிஷ்யஸி - (பசுவதை செய்யப்படும் பசுவிடம்) இந்த யாகத்தின் பொருட்டு வதைக்கப்படும் நீ, மரணம் அடைவது கிடையாது – என்றும் உள்ள வாக்கியங்களின்படி, யாகங்களில் உயிர்களுக்கு ஹிம்ஸை என்பது இல்லை.

**3-1-26 ரேதஸ்ஸிக்யோக: அத:**

**பொருள்** - விந்துவை விடுபவனாகக் கூறுவது போன்று.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சாந். (5-10-6) - யோ யோ ஹி அந்நமத்தி யோ ரேத: ஸிஞ்சதி, தத் பூய ஏவ பவதி - யார் ஒருவன் அன்னத்தை உண்கிறானோ, யார் ஒருவன் விந்துவை விடுகிறானோ – என்பதன் மூலம், "தானியம் முதலானவற்றுடன் ஸம்பந்தம் கொண்ட பின்னர், விந்துவை விடுபவனுடன் ஸம்பந்தம் கொள்கிறான்" என்று கூறப்படுகிறது. இது போன்றே நெல் முதலானவற்றுடன் சேர்த்தி அடைகிறான் என்று கொள்ளவேண்டும்.

**3-1-27 யோநே: சரீரம்**

**பொருள்** - கர்ப்பத்தை அடைந்த பின்னரே உடல் தோன்றுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - பெண்ணின் கர்ப்பத்தில் சென்ற பின்னரே சரீரத்தை அடைகிறான்.

## பாதம் – 2 – உபயலிங்கபாதம்

உலக விஷயங்களில் நாட்டம் கொண்டுள்ள ஜீவனுக்கு, பரமாத்மா மீது ஈடுபாடு ஏற்படவேண்டும். அதன் பொருட்டு, பரமாத்மாவானவன் - குற்றம் குறை அற்றவன், அளவற்ற திருக்கல்யாண குணங்கள் கொண்டவன், தாழ்வுகள் அற்றவன் என்று கூறப்பட உள்ளது.

## அதிகரணம் – 1 – ஸந்த்யாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - இந்த அதிகரணத்தில், ஜீவன் தனது கனவில் காணும் பொருள்கள் அனைத்தும் பரமாத்மாவால் படைக்கப்படுகின்றன என்பது நிருபிக்கப்பட உள்ளது.

**3-2-1 ஸந்த்யே ஸ்ருஷ்டி: ஆஹ ஹி**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ஸ்வப்ன நிலையில் (கனவில்) ஜீவன் உள்ளபோது உண்டாகும் பொருள்களின் உற்பத்தி, ஜீவனாலேயே நிகழ்கிறது. இப்படியாகவே ச்ருதிகள் கூறுகின்றன.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – "ஸந்த்யே" என்றால் "ஸ்வப்னம் (அல்லது கனவில் உள்ள இடம்)" என்று பொருள். ப்ரு. (4-3-10) - அத ரதாந் ரதயோகாந் பத: ஸ்ருஜதே - தேர், குதிரைகள், பாதைகள் ஆகியவற்றைப் படைக்கிறான் – என்பதில் கூறப்படும் படைப்புகளை ஜீவாத்மாவே செய்கிறான். இது ஏனென்றால், ப்ரு. (4-3-10) - புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்ய: ஸ்ருஜதே | ஸ ஹி கர்த்தா - குளங்கள், குட்டைகள், நதிகள் ஆகியவற்றைப் படைக்கிறான்; இதன் காரணம், அவன் ஸ்ருஷ்டி (படைப்பவன்) செய்பவன் அல்லவா – என்று, கனவு காண்கின்ற ஜீவாத்மாவே கர்த்தா எனக் கூறப்படுவதால் ஆகும்.

**3-2-2 நிர்மாதாரம் ச ஏகே புத்ராதய: ச**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) வேறு சாகையைச் சேர்ந்தவர்கள் ஜீவனைப் படைப்பவன் என்றே ஓதுகின்றனர். புத்திரன் போன்றவர்கள் விரும்பப்படும் பொருள்களாகவே கூறப்படுகின்றனர்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - (கடந்த ஸூத்ரத்தின் பூர்வபக்ஷம் தொடர்கிறது) மேலும், ஜீவன் தனது கனவில் காணும் பொருள்களை அவனே படைப்பதாக வேறு சாகையைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள்; கட. (5-8) - ய ஏஷு ஸுப்தேஷு ஜாகர்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண: - இந்த்ரியங்கள் உறங்கிக் கொண்டுள்ளபோது, எந்த ஒரு ஜீவன் விழித்தபடி இருந்து, தான் விரும்பியவற்றைப் படைக்கிறானோ - என்று கூறியது. இங்கு உள்ள காமம் என்ற பதம் மூலம், புத்திரன் போன்றவர்கள் கூறப்பட்டனர். காமம் என்ற பதம் மூலம் புத்திரர்களே கூறப்பட்டனர் என்பதை உணர்த்தும் உபநிஷத் வரிகள் உள்ளன; கட. (1-5) - ஸர்வாந் காமாந் சந்தத: - விரும்பப்படும் பொருள் அனைத்தும் விரும்பியபடி வருவதற்கு (வேண்டிக் கொள்வாயாக) – என்றும், கட. (1-23) – சதாயுஷ: புத்ரபௌத்ரான் - நூறு ஆண்டுகள் வாழும் புத்திரன், பௌத்திரனை (வேண்டிக் கொள்வாயாக) – என்றும் இந்தப் பகுதியில் உள்ளன.

**3-2-3 மாயாமாத்ரம் து கார்த்ஸ்யேந அநபிவ்யக்த ஸ்வரூபத்வாத்**

**பொருள்** - வியப்பு அளிக்கவல்ல கனவுப் பொருள்கள் அனைத்தும் பரமாத்மாவால் படைக்கப்பட்டதே தவிர, ஜீவனால் அல்ல, இவன் ஞானம் பெறாதவன் ஆகையால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - (கடந்த இரு ஸூத்ரங்களில் உள்ள பூர்வபக்ஷத்திற்கான ஸித்தாந்தம்) – கனவில் காணப்படும் தேர் முதலானவைகள், மாயாமாத்ரமாக ஈச்வரனால் படைக்கப்பட்டவை ஆகும். கனவில் உள்ள பொருள்களை, அந்தக் கனவைக் காண்பவன் மட்டுமே பார்க்கிறான்; அவை அந்த நேரத்தில் மட்டுமே புலப்படுகின்றன; ஆக அவை ஆச்சர்யமாக உள்ளதால், “மாயை” என்று கூறப்படுகிறது. ஸத்யஸங்கல்பம் போன்றவை ஜீவாத்மாவிற்கு இயல்பாகவே உள்ளபோதிலும், ஸம்ஸார நிலையில் உள்ளபோது அவை மறைவாகவே இருக்கும். ஆகவே ஸத்யஸங்கல்பம் மூலமாக கனவில் ஸ்ருஷ்டித்தல் என்பது பொருந்தாது. ப்ரு. (4-3-10) – ஸ ஹி கர்த்தா - அவன் அன்றோ ஸ்ருஷ்டி செய்பவன் – என்றும், கட. (5-8) - புருஷோ நிர்மிமாண: - எந்த ஒரு புருஷன்

படைக்கிறானோ – என்றும் உள்ள வாகியங்கள் ஜீவாத்மாவைக் குறித்து உள்ளவை அல்ல; காரணம், அதே பகுதியில் கட. (5-8) - தஸ்மிந் லோகா: ஆச்ரிதா: ஸர்வே தநு நாத்யேதி கச்சந - அவனிடம் அனைத்தும் லயித்துள்ளன, அவனை யாரும் கடப்பதில்லை - என்று கூறப்பட்டது. ஜீவாத்மாவிடம் இயல்பாகவே உள்ள (ஸத்யஸங்கல்பம் போன்ற) தன்மைகள் மறைவதற்கான காரணத்தை அடுத்த ஸூத்ரம் கூறுகிறது.

### 3-2-4 பராபித்யாநாத் து திரோஹிதம் ததோ ஹி அஸ்ய பந்தவிபர்யயௌ

**பொருள்** - பரமபுருஷனின் ஸங்கல்பம் காரணமாகவே ஜீவனின் ஸ்வரூபம் மறைக்கப்படுகிறது, அந்த ஸங்கல்பம் காரணமாகவே, ஜீவனுக்கு ஸம்ஸாரபந்தம் உண்டாகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - பரமபுருஷனின் ஸங்கல்பம் (பராபித்யாநாத்) காரணமாகவே, ஜீவனுக்கு அவனுடைய (ஜீவனுடைய) உண்மையான ஸ்வரூபம் மறைக்கப்படுகிறது. இது ஏனென்றால், ஜீவாத்மாவுடைய அநாதியான குற்றங்கள் காரணமாக ஆகும். இவனுடைய பந்தமும் மோக்ஷமும் பரமாத்மாவின் ஸங்கல்பத்தால் மட்டுமே ஆகும் என்பதை ச்ருதிகள் கூறுகின்றன; தை. (2-7-1) - அத தஸ்ய பயம் பவதி - அவனைப் பயம் (ஸம்ஸார) தொற்றிக் கொள்கிறது – என்றும், தை. (2-7-1) – (ப்ரஹ்மத்திடம் இவன் எப்போது நிலைபெறுகிறானோ அப்போது) பயம் அற்ற தன்மையை அடைகிறான் – என்றும் உள்ள வாக்கியங்கள் காண்க.

### 3-2-5 தேஹ யோகாத்வா ஸ: அபி

**பொருள்** - ஜீவனின் ஸ்வரூப மறைவு என்பது ஸ்ருஷ்டியின்போது ஏற்படும் சரீரத் தொடர்பினால் உண்டாகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ஸ்ருஷ்டி காலத்தில், தேவர்கள் மனிதர்கள் என்பது போன்ற சரீரங்களாக உள்ள அசித் பொருள்களின் தொடர்பு ஏற்படுவதால் ஜீவாத்மாவின் ஸ்வரூபம் மறைக்கப்படுகிறது. ப்ரளய காலத்தில் பெயர் மற்றும் உருவம் அற்ற ஸூக்ஷ்ம ப்ரக்ருதி தொடர்பு காரணமாக, ஜீவனின் ஸ்வரூபம் மறைக்கப்படுகிறது.

**3-2-6 ஸூசகச்ச ஹி ச்ருதே: ஆசக்ஷதே ச தத்வித:**

**பொருள்** - கனவுகள் நற்பலன், தீயபலன் ஆகியவற்றை உணர்த்துகின்றன என்று ச்ருதிகள் கூறுகின்றன.கனவுகள் பற்றி அறிந்தவர்களும் இப்படியே கூறுகின்றனர்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - கனவுகள் என்பது எதிர்காலத்தில் ஏற்பட உள்ள நன்மை-தீமைகளின் அறிகுறியே என்று ச்ருதிகள் கூறுகின்றன. இதனை ஐத. ஆர. (3-2-4) – அத ஸ்வப்நே புருஷம் க்ருஷ்ணம் – கருத்த பற்கள் கொண்ட கருத்த மனிதனைக் கனவில் கண்டால் (அவன் இவனைக் கொல்வான்) – என்றது. இப்படியாகவே கனவைக் குறித்து அறிந்தவர்கள் கூறுகிறார்கள். (தீயவற்றை யாரும் விரும்புவதில்லை, ஆகவே அவன் நன்மையை அளிக்கும் கனவுகளை மட்டும் காண முயல்வான்) ஆகவே கனவுகளில் உள்ளவற்றை ஜீவாத்மா ஸ்ருஷ்டிப்பதில்லை.

அதிகரணம் - 2 - ததபாவாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ஜீவன் உறங்கும் இடங்களாக உள்ளவை எவை என்று கூறி, நிருபிக்கப்பட உள்ளன.

**3-2-7 ததபாவ: நாடீஷு தத் ச்ருதே ஆத்மநி ச**

**பொருள்** - கனவுகள் அற்ற ஆழ்ந்த உறக்க நிலை (ஸுஷுப்தி நிலை) என்பது நாடிகள், புரீதத் மற்றும் பரமாத்மா ஆகியவற்றில் ஏற்படுகிறது. இவ்விதமே ச்ருதிகள் கூறுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – “கனவுகள் அற்ற நிலை (தத் அபாவ)” என்பது “ஆழ்ந்த உறக்கம் (ஸுஷுப்தி)” என்பதாகும். சாந். (8-6-3) – ஆஸு ததா நாடீஷு ஸுப்தோ பவதி - அப்போது அவன் வெளிவிஷயங்களால் கவரப்படாமல், நாடிகளில் நுழைகிறான் – என்றும், சாந். (6-8-1) - ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி – குழந்தாய்! அப்போது அந்த ஜீவன், பரமாத்மாவுடன் சேர்ந்துள்ளான் – என்றும் உள்ள ச்ருதி வாக்கியங்கள், முறையே நாடிகள் மற்றும் பரமாத்மாவைக் குறிக்கின்றன. மேலும் ப்ரு. (2-1-19) - புரீததி சேதே - புரீதத் என்ற இடத்தில் உறங்குகின்றான் – என்று புரீதத் (இதயம்) கூறப்படுகிறது. ஒருவன் “ஒரு வீட்டின் மாடியில் உள்ள கட்டிலில் உள்ள மெத்தையில் உறங்குகிறான்”

என்பதில் முரண்பாடு இல்லை என்பது போன்றே இங்கும் முரண்பாடு இல்லை (அதாவது நாடிகளின் வழியே இதயத்திற்குள் புகுந்து, அங்குள்ள பரமாத்மாவிடம் உறங்குகிறான்).

**3-2-8 அத: ப்ரபோத: அஸ்மாத்**

**பொருள்** - ப்ரஹ்மத்திடம் சென்று உறங்குவதால், ப்ரஹ்மத்திடமிருந்தே விழித்து எழுதல் பொருந்துகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (ஜீவன் உறங்கும் இடமாக ப்ரஹ்மமே உள்ளதால்) அந்த ப்ரஹ்மத்திடமிருந்தே ஜீவன் விழித்து எழுதல் என்று ச்ருதி கூறுவது பொருந்துகிறது. இதனை சாந். (6-10-2) - ஸத ஆகம்ய ந விது: - ப்ரஹ்மத்திடம் உறங்கிவிட்டு வந்தபோதிலும் - என்று கூறியது.

## அதிகரணம் - 3 - கர்மாநுஸ்ம்ருதி சப்த வித்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - உறங்கிய ஜீவனே மீண்டும் விழித்து எழுகிறான், அவன் வேறு ஜீவன் அல்லன் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3-2-9 ஸ ஏவது கர்மாநுஸ்ம்ருதி சப்த விதிப்ய:**

**பொருள்** - கர்மம், ஞாபகம், வேதவரி, விதிகள் ஆகிய நான்கு காரணங்களாலும், விழித்து எழும் ஜீவன், உறங்கச் சென்ற ஜீவனே ஆவான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஆழ்ந்த உறக்க நிலையில் பரமாத்மாவுடன் சேர்ந்து உறங்கியவனே மீண்டும் விழித்து எழுகிறான் (வேறு ஒரு ஜீவாத்மா அல்லன்). உறக்கத்திற்கு முன்பாகச் செய்த கர்மங்களின் பலனை அனுபவிக்கவேண்டியவன் என்பதாலும், உறக்கத்திற்கு முன்பு நடந்தவை அனைத்தும் ஞாபகத்தில் உள்ளதாலும், இப்படியே கொள்ளவேண்டும். சாந். (6-10-2) - த இஹ வ்யாக்ரோ வா – புலி முதலான வடிவங்களில் – என்று தொடங்கி, சாந். (6-10-2) - யத்யத் பவந்தி ததா பவந்தி - எந்த உருவில் ஜீவன் உறங்கச் சென்றானோ, அதே உருவில் மீண்டும் எழுகிறான் - என்று கூறியது. இவ்விதம் ஏற்கவில்லையென்றால், மோக்ஷ உபாயம் குறித்த விதிமுறைகள் அனைத்தும் பயனற்றுப்போகும்.

## அதிகரணம் - 4 -முக்தாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - மூர்ச்சை என்னும் மயக்க நிலை என்பது விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகியவற்றைக் காட்டிலும் மாறுபட்டது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3-2-10 முக்தே அர்த்த ஸம்பத்தி: பரிசேஷாத்**

**பொருள்** - மூர்ச்சை என்பது மரணத்தின் பாதி நிலையாகும். மற்றவற்றில் சேர்க்கப்பட இயலாத காரணத்தால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - மயக்கம் அடைந்தவன், மரணம் என்ற நிலையின் பாதியைக் கடந்தாகவே கொள்ளவேண்டும். காரணம், மேலே கூறப்பட்ட மற்ற நிலைகள் (விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம்) அனைத்தைக் காட்டிலும், மயக்க நிலைக்கான காரணமும் அடையாளங்களும் வேறு என்பதால் ஆகும். மேலும் அவன் விழித்து எழமாட்டான் என்னும் உறுதி இல்லை (என்பதால் இந்நிலையானது மரணமும் இல்லை).

## அதிகரணம் - 5 - உபயலிங்க அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - சரீரங்களில் அந்தர்யாமியாக ப்ரஹ்மமாகிய பரமாத்மா உள்ளபோதிலும், அந்த சரீரங்களின் தோஷங்கள் (குற்றம், குறைபாடுகள்) பரமாத்மாவை அண்டுவதில்லை என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3-2-11 ந ஸ்தாநத: அபி பரஸ்ய உபயலிங்கம் ஸர்வத்ர ஹி**

**பொருள்** - இருக்கும் இடங்கள் காரணமாக பரமாத்மாவிற்குத் தாழ்வு ஏற்படுவதில்லை, காரணம் ப்ரஹ்மம் தாழ்வு இல்லாமலும், உயர்ந்த குணங்கள் கொண்டதாகவும் இருக்கிறது என ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் கூறுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – விழிப்பு முதலான நான்கு நிலைகளிலும், ஜீவாத்மாவிற்கு அந்தர்யாமியாக பரப்ரஹ்மம் இருப்பதால், அதற்கு எந்தவிதமான உண்டாவதில்லை. பரப்ரஹ்மத்திற்கு "எந்தவிதமான தோஷமும் அற்றது, அனைத்து கல்யாணகுணங்களும்

கொண்டது” என்னும் இருவிதமான அடையாளங்கள் உள்ளதாக ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் கூறுகின்றன. சாந். (8-1-5) - அபஹதபாப்மா ... ஸத்யஸங்கல்ப: - பாபம் அற்றவன் ... தளராத ஸங்கல்பம் உடையவன் – என்றும், ச்வே. (6-19) – நிரவத்யம் - தோஷம் அற்றது – என்றும், முண். (1-1-9) – ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் - அனைத்தையும் அறிந்தவன், அனைத்தையும் உணர்ந்தவன் – என்றும், ஸ்ரீவிபு. (6-5-84) - ஸமஸ்த கல்யாண குணாத்மக: அஸௌ - இவன் அனைத்துத் திருக்கல்யாண குணங்களும் உடையவன் – என்றும், ஸ்ரீவிபு. (6-5-84, 85) - ஸகலா ந யத்ர க்லேசாதய: ஸந்தி - எந்தவிதமான தோஷங்களும் இல்லாதவன் – என்றும் கூறப்படுகிறது.

**3-2-12 பேதாத் இதி சேத் ந ப்ரத்யோகம் அதத் வசநாத்**

**பொருள்** - சரீர தொடர்பு காரணமாக ஜீவனுக்குத் தோஷங்கள் உண்டாவது போன்று பரமாத்மாவுக்கும் ஏற்படலாம் அல்லவா என்று கேட்டால் - ஏற்படாது, சரீர தொடர்பு பற்றிக் கூறப்படும் இடங்களிலும் பரமாத்மா தோஷம் அற்றவன் என்றே கூறப்படுகிறான்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஜீவாத்மா இயல்பாகவே பாபங்கள் அற்றவன் என்றாலும், பலவிதமான சரீரங்களுடன் அவனுக்கு உண்டாகும் ஸம்பந்தம் காரணமாக, அவனுக்குத் தோஷங்கள் வந்து சேர்கின்றன. இதே போன்று பரமாத்மாவிற்கும், ப்ரு. (3-7-3) – யஸ்ய ப்ருதிவீ சரீரம் – யாருக்கு பூமி சரீரமோ – என்பது போன்ற சரீர ஸம்பந்தத்தின் விளைவாக, தோஷங்கள் உண்டாகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. ப்ரு. (3-7-3) – யஸ்ய ப்ருதிவீ சரீரம் – யாருக்கு பூமி சரீரமோ – என்பது போன்று உரைக்கப்படும் இடங்களில், “ஸ த ஆத்மா அந்தர்யாமி அம்ருத: - அந்தப் பரம்பொருளே மரணம் மற்றும் தோஷங்கள் அற்றவனாக, உனக்குள் உள்ளான்”, என்று கூறப்படுகிறது. ஆகவே அவன் தோஷம் அற்றவன் என்றாகிறான்.

**3-2-13 அபி ச ஏவம் ஏகே**

**பொருள்** - முண்டக உபநிஷத்தில் இவ்விதமாகவே ஓதுகின்றனர் (பரமாத்மா தோஷங்களால் தீண்டப்படாதவன் என்று ஓதுகின்றனர்).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ஒரே சரீரத்தில் ஜீவனும் பரமாத்மாவும் உள்ளபோதிலும், அவர்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் கூறப்பட்டுள்ளன. முண். (3-1-1) - த்வா ஸுபர்ணா - அழகிய இறகுகள் கொண்ட இரு பறவைகள் – என்று தொடங்கி, முண். (3-1-1) - பிப்பலம் ஸ்வாத்வத்தி அநச்நந் அந்ய: அபிசாகசீதி - ஒன்று மட்டும் (ஜீவன்), அந்த மரத்தின் பழங்களை (கர்மபலன்) சுவைத்தபடி உள்ளது; மற்றொரு பறவை (பரமாத்மா) அதனை உண்ணாமல் பார்த்தபடி உள்ளது – என்று கூறப்பட்டது.

**3-2-14 அரூபவதேவ ஹி தத் ப்ரதாநத்வாத்**

**பொருள்** - அனைத்தையும் நிர்வாகம் செய்வதால், ப்ரஹ்மம் ரூபம் இல்லாதது போன்றதே ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - மனிதர்கள் போன்ற பல சரீரங்களில் ப்ரஹ்மம் புகுந்தாலும், ப்ரஹ்மம் ரூபம் இல்லாதது போன்றதே ஆகும். ஜீவாத்மாக்களுக்கு பெயர் மற்றும் உருவங்களை அளிப்பதால், அதுவே முதன்மையானதாகும். இப்படியே ச்ருதியானது சாந். (8-14-1) - நாமரூபயோ நிர்வஹிதா தே யதந்தரா - ப்ரஹ்மமானது ஜீவாத்மாக்களுக்கு பெயர் மற்றும் ரூபங்களை அளிக்கிறது; ஆயினும் அந்தப் பெயர் மற்றும் ரூபங்களால் தீண்டப்படாமல் எது உள்ளதோ – என்றது. “பெயர் மற்றும் உருவம் ஆகியவற்றின் மத்தியில் உள்ளது” என்றால், “அவற்றுக்கு வசப்படாமல் உள்ளது” என்று பொருள்.

**3-2-15 ப்ரகாசவத் ச அவையர்த்யாத்**

**பொருள்** – “ப்ரஹ்மம் ப்ரகாசமானது” என்பது போன்ற வரிகள் பயனற்றுப் போய்விடக்கூடாது என்பதற்காக, “ப்ரஹ்மம் ப்ரகாச ஸ்வரூபமானது” என்பதை ஏற்கிறோம். அதே போன்றே இங்கும் ஏற்கவேண்டும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - தை. (2-1) - ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம - என்று கூறும் வரிகள் பயனற்றுப் போகக்கூடாது என்பதற்காக ப்ரஹ்மம் ப்ரகாச ஸ்வரூபமானது (ப்ரகாசம் = ஞானம்) என்பதை நாம் ஏற்கிறோம். இதே போன்று, ச்வே. (6-19) – நிரவத்யம் - தோஷம் அற்றது – என்றும், முண். (1-1-9) – ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் - அனைத்தையும் அறிந்தவன், அனைத்தையும் உணர்ந்தவன் – என்றும், ச்வே. (6-8) - பராஸ்ய சக்தி:

விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியா ச – அவனுடைய சக்தியானது பலவிதமாகவும், ஞானம் பலம் மற்றும் செய்கைகளை இயல்பாகவே கொண்டதாகவும் உள்ளது – என்றும் உள்ள நூற்றுக்கணக்கான வாக்கியங்கள் பயனற்றுப் போகாமல் இருப்பதற்காக, ப்ரஹ்மமானது "தோஷம் அற்றது, கல்யாண குணங்களுடன் கூடியது" என்னும் இரண்டு அடையாளங்களுடன் உள்ளது என்பதை ஏற்கவேண்டும்.

### 3-2-16 ஆஹ ச தந்மாத்ரம்

**பொருள்** - ப்ரஹ்மம் ப்ரகாச ஸ்வரூபம் என்பது கூறப்பட்டது, மற்ற ச்ருதி வரிகளை ஆக்ஷேபிக்கவில்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – தை. (2-1) - ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம - என்ற வரியின் மூலம், ப்ரஹ்மமானது ப்ரகாச ஸ்வரூபம் என்பது மட்டுமே கூறப்பட்டது. இதன் மூலம், (ப்ரஹ்மத்திற்கு உள்ள ஸத்யஸங்கல்பம் போன்ற) மற்ற எதுவும் மறுக்கப்படவில்லை; அவ்விதம் சிறப்பித்துக் கூறுவதற்கோ அல்லது விரோதமாக உரைப்பதற்கோ எந்தக் காரணமும் இல்லை.

### 3-2-17 தர்சயதி ச அத அபி ஸ்மர்யதே

**பொருள்** - ப்ரஹ்மம் உபயலிங்கம் (உபயலிங்கம் = கல்யாண குணங்கள் கொண்டது, தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாக உள்ளது என்ற இரு தன்மைகள்) என்பதை அனைத்து ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் கூறுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - பல வேதாந்த வாக்கியங்களின் மூலம், ப்ரஹ்மமானது கல்யாணகுணங்கள் கொண்டது என்றும், அனைத்துவிதமான தோஷங்களும் அற்றது என்றும் கூறப்படுகிறது. அவையாவன : ச்வே. (6-19) - நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் - அவயவங்கள் அற்றவன், செயல்கள் செய்யவேண்டிய அவசியம் அற்றவன், சாந்தமானவன் – என்றும், ச்வே. (6-7) - தம் ஈச்வராணாம் பரமம் மஹேச்வரம் - ஈச்வரர்களுக்கு எல்லாம் மேலான ஸர்வேச்வரன் – என்றும் உள்ளவை ஆகும். இதே போன்று ஸ்ம்ருதியில் கீதை (10-3) - யோ மாம் அஜம் அநாதிம் - யார் ஒருவன் என்னைப் பிறப்பற்றவன், தொடக்கம் அற்றவன் (என அறிகிறானோ) – என்று கூறப்பட்டது.

**3-2-18 - அத ஏவ ச உபமா ஸூர்யகாதிவத்**

**பொருள்** - இதன் காரணமாகவே நீரில் ப்ரதிபலிக்கும் சூர்யன் போன்றவை பரமாத்மாவுக்கு உவமையாகக் கூறப்பட்டன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரஹ்மமானது, பூமி முதலான அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ளபோதிலும், "தோஷங்கள் அற்றதாக இருத்தல், கல்யாண குணங்களின் இருப்பிடமாக இருத்தல்" ஆகிய இரண்டும் எப்போதுமே ப்ரஹ்மத்திற்கு உள்ளது. இந்தக் காரணத்தால்தான் சாஸ்த்ரங்களில், "நீரில் காணப்படும் சூரியனைப் போலே" என்னும் உதாரணங்கள் கூறப்பட்டன; யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி (3-144) - ஆகாசம் ஏகம் ஹி யதா ... ஜலாதாரேஷு இவ அம்சுமாந் - ஒன்றாகவே உள்ள ஆகாசம் (வெற்றிடம்) என்பது கடம் போன்றவற்றில் எவ்விதம் பலவாகத் தோற்றம் அளிக்கிறதோ, அது போன்றே பரமாத்மா பல பொருள்களில் உள்ளான் – என்றது.

**3-2-19 அம்புவத் அக்ரஹணாத் து ந ததாத்வம்**

**பொருள்** - (இது பூர்வபக்ஷி கூறுவது) - நீரில் தெரியும் சூரிய பிம்பம் போன்று, பரமாத்மா பொருள்களில் பொய்யாக இருப்பதில்லை என்பதால், இந்த உவமை பொருத்தமற்றதாகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - சூரியன் போன்றவை நமது தவறான கணிப்பு காரணமாக, நீரில் உள்ளதாகக் காட்சி அளிக்கும் அதே விதத்தில், பரமாத்மா ப்ருதிவி முதலானவற்றால் உள்ளதாகத் தோன்றுவதில்லை. இங்கு அவன் உண்மையாகவே உள்ளான். ஆகவே அவன் தோஷங்கள் அற்றவன் அல்லன் (மேலும் உதாரணமும் பொருந்தாது). அடுத்த ஸூத்ரத்தில் சமாதானம் உரைக்கிறார்.

**3-2-20 வ்ருத்திஹ்ராஸபாக்த்வம் அந்தர்பாவாத் உபய ஸாமஞ்ஜஸ்யாத் ஏவம் தர்சநாத் ச**

**பொருள்** - சூரியன் போன்ற உதாரணம் மூலம் அனைத்தின் உள்ளே இருக்கும் ப்ரஹ்மம் சுருங்குவதும் விரிவதும் கிடையாது என்பதே விளக்கப்பட்டது. உதாரணங்கள்

பொருந்துவதற்காக இவ்விதமே பொருள் கொள்ள வேண்டும். இதனையே நாம் காண்பதாலும் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - (கடந்த ஸூத்திரத்தின் இறுதியில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) அப்படி அல்ல; இந்த மறுப்பு கடந்த ஸூத்ரத்தின் தொடர்ச்சியாகும். பூமி முதலான பொருள்களில் ப்ரஹ்மம் உள்ளபோதிலும், சுருங்குவது மற்றும் விரிவது போன்றவை ப்ரஹ்மத்திற்கு ஏற்படுவதில்லை என்பதே அந்த (சூரிய) உதாரணம் மூலம் கூறப்பட்டது. இங்கு கூறப்பட்ட இரண்டு உதாரணங்கள் பொருந்துவதற்கு இவ்விதமே பொருள் கொள்ளவேண்டும். இதுவே யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி வரிகளில் - ஆகாசம் ஏகம் ஹி யதா - ஒன்றாக உள்ள ஆகாசம் (வெற்றிடம்) – என்பதால் கூறப்பட்டது. அதாவது, நீரில் இல்லாத சூரியனுக்கு எவ்விதம் நீரால் உண்டாகவல்ல தோஷங்கள் உண்டாகாதோ அதே போன்று, பூமி முதலானவற்றில் உண்மையாக உள்ளபோதிலும், தகுந்த காரணங்கள் இல்லையென்பதால், தோஷங்கள் ஏற்படுவதில்லை. இவற்றையே இந்த உதாரணங்கள் காண்பிக்கின்றன. உதாரணமாக - ஸிம்ஹ இவ - இவன் சிங்கம் போன்றவன் – என்று கூறுவதைக் காணலாம்; இதில், (சிங்கத்திற்கும், அந்த மனிதனுக்கும் இடையே உள்ள) ஒரு சில தர்மங்கள் குறித்து மட்டுமே நாம் உணர்கிறோம்.

அல்லது, ஸூத்ரத்தில் உள்ள “தர்சநாத்” என்பதற்கு, சாந். (8-13-1) – அச்வ இவ ரோமாணி விதூய பாபம் – குதிரை தனது முடியை உதறுவது போன்று, பாபங்களை விட்டு – என்பதற்கு ஏற்ப பொருள் கூறலாம். அதாவது ஒரு குதிரையானது தனது சரீரத்தை உதறுவதன் மூலம், தனது அவயவமும், தனது சரீரத்தில் உண்டானதும் ஆகிய ரோமங்களை நீக்குகிறது. ஆனால் ஒரு ஜீவாத்மா முன்பு தான் செய்த தவறுகளை விட்டபோதிலும், முன்பு செய்யப்பட்ட காரணத்தால், அவை பகவானுக்கு ப்ரீதியற்ற நிலையை உண்டாக்குகின்றன; இத்தகைய அப்ரீதி காரணமாக அந்த ஜீவாத்மாவிற்குத் துக்கத்தை அளிக்கத் தொடங்குகிறான்; ஆனால் அவை அனைத்து, அவனுடைய கருணையால் விளைந்த உபாஸனத்தால் விலகக்கூடும்; ஆகவே இங்கு தோஷங்களுடைய ஒட்டாமை என்பதே சிந்திக்கப்படுவதாகக் கொள்ளலாம்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஆனால் ப்ரு. (2-3-6) - அதாத ஆதேச: நேதி நேதி - இதுவே உபதேசம் ஆகும், முன்பு கூறிய ஏதும் இல்லை, ஏதும் இல்லை – என்பதன் மூலம் “ப்ரஹ்மத்திற்கு விசேஷங்கள் ஏதும் இல்லை”, என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே மேலே

கூறப்பட்ட இரண்டுவிதமான அடையாளங்களும் ப்ரஹ்மத்திற்கு இல்லை என்றே ஆகிறது. அடுத்த ஸூத்ரத்தில் விடை அளிக்கிறார்.

**3-2-21 ப்ரக்ருத ஏதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய:**

**பொருள் –** "முன்பு கூறப்பட்ட ரூபங்கள் மட்டுமே உடையது ப்ரஹ்மம்" என்ற கருத்தை மட்டுமே நிராகரித்தது. அதனைத் தொடர்ந்து மீண்டும் கல்யாணகுணங்களைக் கூறத் தொடங்கியது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** (கடந்த ஸூத்ரத்தின் இறுதியில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) – ப்ரு. (2-3-1) - த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே - ப்ரஹ்மத்திற்கு (ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும்) இரு ரூபங்கள் உண்டு – என்று தொடங்கும் வாக்கியம் மூலம், வேறு எதன் மூலமும் அறிய இயலாத விஷயமான, "இந்த ப்ரபஞ்சம் ப்ரஹ்மத்தின் ரூபமே ஆகும்" என்பது கூறப்பட்டது. ஆகவே, இந்த வாக்கியத்தைத் தொடர்ந்து உள்ள மற்றொரு வாக்கியமானது இதனை மறுக்க இயலாது. ஆகவே, ப்ரு. (2-3-6) - நேதி நேதி - என்று ச்ருதி வரியானது, இந்தப் பகுதியில் ப்ரஹ்மத்திற்கு எத்தகைய விசேஷங்கள் கூறப்பட்டனவோ, ப்ரஹ்மமானது அத்தகைய அளவுடன் மட்டுமே கூடியது என்பதையே மறுக்கிறது; அதாவது அந்த அளவு மட்டும் அல்ல, அதனைக் காட்டிலும் அதிகமாகவே உள்ளது என்று கூறுகிறது. மேலும், ப்ரு. (2-3-6) - ந ஹி ஏதஸ்மாத் இதி நேத்யந்யத் பரமஸ்தி - ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்தது வேறு ஏதும் இல்லை – என்பதன் மூலம், மேலே கூறப்பட்ட குணங்களில் கூறப்படாதவை கூறப்பட்டது. இதன் பின்னர், ப்ரு. (2-3-6) - அத நாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யம் - இந்த ப்ரஹ்மம் ஸத்யங்களில் ஸத்யம் ஆகும் – என்று உள்ளது. இதனை விளக்குவிதமாக, ப்ரு. (2-3-6) - ப்ராணா வை ஸத்யம் தேஷாம் ஏஷ ஸத்யம் - ப்ராணன் எனப்படும் ஜீவன் மாற்றம் அடையாமல் உள்ளதால் ஸத்யம் எனப்படுகிறான் – என்று கூறியது (அதாவது அந்த ஸத்யமான ஜீவனைக் காட்டிலும் பரமாத்மா ஸத்யம் என்று பொருள்). இங்குள்ள "ப்ராணன்" என்ற சொல்லால் ஜீவாத்மா கூறப்படுகிறான். இப்படிப்பட்ட ஜீவன்கள், ஆகாசம் முதலானவற்றைப் போன்று உற்பத்தி அடையாமல் உள்ளதால் ஸத்யம் எனப்படுகின்றனர். ப்ரு. (2-3-6) - தேஷாம் ஏஷ - இப்படிப்பட்ட ஜீவன்களைக் காட்டிலும் உயர்ந்த ஸத்யமாக பரமபுருஷன் உள்ளான் – என்று பொருள். காரணம், ப்ரஹ்மத்தின் ஞானம் சுருங்குவதும், மாற்றம் அடைவதும் கிடையாது. எனவே, ப்ரஹ்மத்தின் அளத்தற்குரிய தன்மை மட்டுமே தள்ளப்படுவதால், ப்ரஹ்மம் இரு அடையாளங்களும் (தாழ்வுகளால் தீண்டப்படாதது, குணங்கள் நிறைந்தது) கொண்டது என்பது உறுதியாகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – இருப்பு (ஸத்) என்பதாக மட்டுமே உள்ள ப்ரஹ்மமே ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தால் அறியப்படுகிறது. ப்ரத்யக்ஷத்தால் அறியப்படுகின்ற மற்ற அனைத்தும் ப்ராந்தியே (பிழையாக அறிதலே) ஆகும். இந்தக் கருத்தே ப்ரு. (2-3-6) - நேதி நேதி - ஏதும் இல்லை, ஏதும் இல்லை – என்னும் மறுப்பு வாக்கியத்தால் கூறப்படுகிறது. இதற்கான பதிலை அடுத்த ஸூத்ரத்தில் கூறுகிறார்.

**3-2-22 தத் அவ்யக்தம் ஆஹ ஹி**

**பொருள்** - மற்ற எந்த ப்ரமாணத்தாலும் அறிய இயலாது என்று சாஸ்திரம் கூறுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** –அந்த ப்ரஹ்ம ஸ்வரூபமானது, (சாஸ்த்ரம் தவிர) மற்ற எந்த ப்ரமாணத்தாலும் அறியப்படுவதில்லை. இதனை ச்ருதிகள், கட. (6-9) - ந ஸந்த்ருசே திஷ்டதி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கச்ச ந ஏநம் - இந்தப் பரமாத்மா கண் பார்வையில் அகப்படாதவன், இவனைக் கண்கள் கொண்டு யாரும் காண இயலாது – என்று கூறியது. ப்ரத்யக்ஷம் மூலமாக குடம் போன்றவை மட்டுமே அறியப்படுகிறது, ப்ரஹ்மம் அல்ல.

**3-2-23 அபி ஸம்ராதநே ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்**

**பொருள்** - பக்தி என்ற உபாஸனம் கொண்டு மட்டுமே பரஹ்மத்தை அறிய இயலும். இதனை ச்ருதியும் ஸ்ம்ருதியும் கூறுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (வேறு எந்த ப்ரமாணத்தாலும் அறிய இயலாது என்பதற்கு மேலும் ஒரு காரணமும் கூறுகிறார்) ப்ரஹ்மத்திற்கு மகிழ்வு ஏற்படுத்தக்கூடிய இடைவிடாத த்யானத்தால் மட்டுமே ப்ரஹ்ம ஸ்வரூபத்தை உணர இயலும், இதனை ச்ருதியானது முண். (3-2-3) - நாயமாத்மா ப்ரவசநேந லப்ய: - இந்தப் பரமாத்மா ச்ரவணம் (அவனைப் பற்றிக் கேட்பது) போன்றவற்றால் அறியப்பட இயலாதவன் – என்றது. ஸ்ம்ருதியான கீதை (11-53) - நாஹம் வேதை: - என்னை வேதங்களாலும் அறிய இயலாது – என்றது.

**3-2-24 ப்ரகாசாதிவத் ச அவைசேஷ்யம் ப்ரகாச ச கர்மணி அப்யாஸாத்**

**பொருள்** - ஞானமயமாகவும் ஆனந்தமயமாகவும் உள்ளது போன்றே, மூர்த்தமாகவும் அமூர்த்தமாகவும் உள்ள பொருள்களைத் தனது சரீரங்களாகப் ப்ரஹ்மம் கொண்டுள்ளது என்றே யோகிகள் காண்கின்றனர். இடைவிடாமல் உபாஸனத்தில் நின்றால் இத்தகைய ப்ரஹ்மம் உணரப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – இடைவிடாத உபாஸனம் மூலம் ப்ரஹ்ம ஸ்வரூபமானது ப்ரத்யக்ஷமாகும். அப்படிப்பட்ட ஒருவனுக்கு ஞானம், ஆனந்தம், ஜகத்துடைய ஐச்வர்யம் போன்ற பலவும், எந்தவிதமான வேறுபாடுகளும் இன்றிப் புலப்படும். இதனைப் போன்ற நிலையே ப்ரு. (1-4-10) - அஹம் மநுரபவம் ஸூர்யச்ச – நானே மனுவாகவும், சூரியனாகவும் ஆனேன் – என்பதால் கூறப்பட்டது.

**3-2-25 அதோ அநந்தேந ததாஹி லிங்கம்**

**பொருள்** - மேலே கூறப்பட்ட பல காரணங்களால் ப்ரஹ்மம் உபயலிங்கமாகவே உள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ப்ரு. (2-3-1) - த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே - ப்ரஹ்மத்திற்கு (ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும்) இரு ரூபங்கள் உண்டு – என்பது போன்ற வாக்கியங்கள் மூலம், ப்ரஹ்மமானது அளவற்ற குணங்கள் கொண்டது என்று உணரலாம். இதனை ஏற்றால் மட்டுமே ப்ரஹ்மம் உபயலிங்கம் என்பது பொருந்துகிறது.

## அதிகரணம் - 6 - அஹிகுண்டலாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - கடந்த அதிகரணத்தில் ப்ரஹ்மத்தின் ரூபமாக அசேதனப் பொருள்களான மூர்த்தமும் (விக்ரஹம்), அமூர்த்தமும் (ப்ரபஞ்சமே ப்ரஹ்மத்தின் சரீரம் முதலானவை) கூறப்பட்டன. ப்ரஹ்மமானது இவ்விதம் அசேதனப் பொருள்களைத் தனது ரூபமாகக் கொண்டால், அந்த அசேதனங்களிடம் உள்ள தோஷங்கள் ப்ரஹ்மத்திற்கு ஏற்படலாம் அல்லவோ என்ற ஐயம் நீக்கப்படுகிறது.

**3-2-26 உபய வ்யபதேசாத் து அஹிகுண்டலவத்**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) இரண்டுவிதமாகவும் கூறப்படுவதால்; பாம்பு தன்னுடைய உடலை நீட்டிக் கொள்வதும் சுருக்கிக் கொள்வதும் போல்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - சாந். (7-25-2) - ஆத்மா ஏவ இதம் ஸர்வம் - இவை அனைத்தும் ஆத்மாவே – என்றும், ச்வே. (4-9) - அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விச்வம் ஏதத் தஸ்மிம்ச்ச அந்யோ மாயயா ஸந்நிருத்த: - மாயையை உடையவன் (ஈச்வரன்) இந்த ப்ரக்ருதி மூலம் விச்வத்தை ஸ்ருஷ்டிக்கிறான் – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலம், அனைத்தும் ப்ரஹ்ம ஸ்வரூபம் என சில இடங்களிலும், வெவ்வேறு என சில இடங்களிலும் கூறப்பட்டதை அறியலாம். ஆகவே, பாம்பு நீட்டியும் சுருண்டும் உள்ளது போன்று, ப்ரஹ்மமே இந்த ஜகத் என்றாகிறது எனலாம். ப்ரு. (4-3-1) – த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே - இந்த இரண்டும் ப்ரஹ்மத்தின் ரூபம் – என்றது காண்க.

**3-2-27 ப்ரகாசாச்ரயவத் வா தேஜஸ்த்வாத்**

**பொருள்** - (இதுவும் பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ஒளியும் அதன் உற்பத்தி இடமும் போன்று. காரணம், இரண்டும் தேஜஸ் என்றும் ஜாதியைச் சேர்ந்ததால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - ஒளியும், அதன் உற்பத்தி இடமும் வெவ்வேறாக உள்ளபோதிலும், இரண்டுமே ஒளி என்ற ஜாதியைச் சேர்ந்ததால் ஒரே வஸ்துவாக உள்ளது. இதனைப் போன்றே அசேதநமும் ப்ரஹ்மமும் ஒரே ஜாதியாகக் கூறப்படலாம்.

**3-2-28 பூர்வவத் வா**

**பொருள்** - முன்பு கூறப்பட்டது போன்று.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** (கடந்த இரண்டு ஸூத்திரங்களில் உள்ள பூர்வபக்ஷத்தைத் தள்ளுகிறது) - ஸூத்திரத்தில் உள்ள "வா - அல்லது" என்ற பதம், கடந்த இரண்டு ஸூத்ரங்களில் உள்ள பூர்வபக்ஷங்களைத் தள்ளுகிறது. ஜீவாத்மாக்கள், தங்களை விட்டுப் பிரிக்க இயலாதபடி இணைக்கப்பட்டுள்ள ப்ரஹ்மத்தின் அம்சமாகவே (பகுதியாகவே)

உள்ளனர் என்பது முன்பே கூறப்பட்டது (ப்ர. ஸூ. 2-3-42, 2-3-45). ஒளி, ஜாதி, குணம் மற்றும் சரீரம் ஆகிய அனைத்துமே இரத்தினக்கல், குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்த தனிப்பொருள், குணத்தைக் கொண்டவன் மற்றும் ஆத்மா என்பதிலிருந்து பிரிந்து தனியே இருக்கமுடியாது என்பதால், அவை (ஒளி முதலானவை) முறையே, அவற்றின் (இரத்தினக்கல் முதலானவை) அம்சங்கள் ஆகின்றன. அது போன்று ஜீவனும் ப்ரஹ்மத்தின் அம்சமே என்றாகிறது. சாந். (7-25-2) – ஆத்மைவேதம் ஸர்வம் – இவை அனைத்தும் ஆத்மாவே – என்றுள்ள வாக்கியத்தில், சித் மற்றும் அசித் ஆகிய இரண்டுமே ப்ரஹ்மத்துடன் சேர்த்துப் படிக்கப்பட்டதால், அசித் வஸ்துக்களும் ப்ரஹ்மத்தின் அம்சங்களே என்றாகிறது. (ப்ரஹ்ம ஸ்வரூபமே அசேதநமாக மாறுகிறது என்றும், ப்ரஹ்மமும் அசேதநமும் ஒரே ஜாதியாகும் என்பதால் ஜகத்தே ப்ரஹ்ம ஸ்வரூபமாக உள்ளது என்றும், அசேதநமும் சேதந வஸ்துக்கள் போன்று ப்ரஹ்மத்தின் சரீரமாக உள்ளதால், அவை ப்ரஹ்ம ஸ்வரூபம் ஆகலாம் என்றும் மூன்றுவிதமான கருத்துக்கள் உண்டு. இதனை அடுத்து ஆராய்கிறார்) இவற்றில் முதல் இரண்டு கருத்துக்களில், அசேதநங்களுடைய தோஷங்கள் ப்ரஹ்மத்திடம் வந்து சேர்வதைத் தவிர்க்க இயலாது. ப்ரு. (3-7-3) – யஸ்ய ப்ருதிவீ சரீரம் – யாருக்கு இந்தப் பூமி சரீரமோ – என்றும், ப்ரு. (3-7-3) – யஸ்ய ஆத்மா சரீரம் – யாருக்கு இந்த ஆத்மா சரீரமோ – என்றும் உள்ள வாக்கியங்களின்படி, சித் மற்றும் அசித் வஸ்துக்கள் ப்ரஹ்மத்தின் சரீரமாக உள்ளதால், அவை விசேஷணங்களாக (பண்புகள்) உள்ளன என்றாகிறது.

### 3-2-29 ப்ரதிஷேதாச்ச

**பொருள்** - தள்ளப்படுவதாலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (8-1-5) - நாஸ்ய ஜரயா ஏதத் ஜீர்யதி - வயதாகி கிழத்தன்மை அடைவது என்பது இல்லை – என்பது போன்ற வரிகள், அசித் பொருள்களுக்கான தன்மைகள் (பிறப்பு, இறப்பு, கிழத்தன்மை) எதுவும் ப்ரஹ்மத்திற்கு இல்லை என்கின்றன.

அதிகரணம் - 7 - பராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து வேறு ஏதும் இல்லை என்றும், இதனைத் தவிர அடையவேண்டிய இலக்கு வேறு ஏதும் இல்லை என்றும் நிரூபிக்கப்பட உள்ளது.

**வேதாந்தஸாரம்** – ப்ர. ஸூ. (1-1-2) – ஜந்மாத்யஸ்ய யத: - என்பது தொடங்கி, ப்ர. ஸூ. (3-2-29) – ப்ரதிசேஷாத் ச – என்பது முடிய உள்ள ஸூத்ரங்களில், பரமகாரணமாக ப்ரஹ்மமே கூறப்பட்டது. ஆனால், ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து ஒன்று உள்ளதோ என்னும் சந்தேகம் எழுகிறது. இதனை அடுத்த ஸூத்ரத்தில் எழுப்புகிறார்.

**3-2-30 பரமத: ஸேது உந்மாந ஸம்பந்த பேத வ்யபதேசேப்ய:**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) அணை, அளவு, தொடர்பு, வேறுபாடு ஆகியவை கூறப்பட்டதால், இதனைக் காட்டிலும் உயர்ந்தது உள்ளது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (8-4-1) - அத ய ஆத்மா ஸ ஸேது: - இந்த ஆத்மாவைத் தாங்கும் பாலமாக உள்ளான் – என்றும், சாந். (8-4-2) - ஏதம் ஸேதும் தீர்த்வா - இந்தப் பாலத்தைக் கடந்த பின்னர் – என்றும், சாந். (3-18-2) - சதுஷ்பாத் ப்ரஹ்ம - ப்ரஹ்மம் நான்கு பாதங்கள் கொண்டது – என்றும், முண். (2-2-5) - அம்ருதஸ்யைஷ ஸேது: - பரமாத்மா, மோக்ஷத்தை அடைவிக்கும் பாலம் – என்றும் உள்ள வரிகளால் ப்ரஹ்மமானது “பாலம், கடக்க உதவுபவன், அளவுடன் கூடியவன், அமிர்தத்திற்கு அழைத்துச் செல்பவன்” என்று கூறப்பட்டது. மேலும், ச்வே. (3-9) - தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம் - அந்தப் புருஷனால் இவை நிரம்பி உள்ளன – என்றும், ச்வே. (3-10) - ததோ யத் உத்தரதரம் - அந்தப் புருஷனைக் காட்டிலும் எது மேலானதோ – என்றும் கூறப்படுகிறது. ஆகவே ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து வேறு ஒன்று உள்ளது என்றாகிறது.

**3-2-31 ஸமாந்யாத்து**

**பொருள் -** பொதுவான தன்மை காரணத்தால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்குரியது) - ஸூத்திரத்தில் உள்ள “து - ஆனால்” என்ற பதம், பூர்வபக்ஷ வாதத்தைத் தள்ளுகிறது. மேலே கூறியது சரியல்ல. ஏன்? ப்ரு. (2-3-6) - ந ஹி ஏதஸ்மாத் இதி நேதி அந்யத் பரம் அஸ்தி - இதனைக் கடந்து ஏதும் இல்லை, ஏதும் இல்லை. (ப்ரஹ்மத்தைக் கூற) வேறு ஏதும் இல்லை – என்பது போன்றுள்ள ஆயிரக்கணக்கான வாக்கியங்கள் உள்ளன; இங்கு உள்ள “ந இதி” என்பதன் மூலம், மூர்த்தம் மற்றும் அமூர்த்தம் என்பதாக உள்ள ப்ரபஞ்சத்தைத் தனது ப்ரகாரமாகக் கொண்ட ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து வேறு இல்லை என்பதே கூறப்படுகிறது. அனைத்து பொருட்களையும் ஒன்றுடன் ஒன்று கலக்காமல் இருக்கும்படியாக பரமாத்மா அவற்றை நியமிப்பதால் “ஸேது – அணை அல்லது பாலம்” எனப்படுகிறான்; சாந். (8-4-1) - அத ய ஆத்மா ஸ ஸேது: வித்ருதி: ஏஷாம் லோகாநாம் அஸம்பேதாய - இந்த ஆத்மாவைத் தாங்கும் பாலமாக உள்ளான், இந்த உலகங்கள் ஒன்றுடன் ஒன்று கலக்காமல் இருக்கும்படியாக உள்ளான் – என்பது காண்க. சாந். (3-14-1) - ஸர்வே கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜாலாநிதி சாந்த உபாஸீத - இந்த அனைத்தும் ப்ரஹ்மமே; இவை அனைத்தும் அதிலேயே தோன்றி, லயித்து, வாழ்கின்றன; இவ்விதம் சாந்தமாக ஒருவன் உபாஸிப்பானாக – என்று தொடங்கி, சாந். (3-14-4) – ஏதமித: ப்ரேத்ய அபி ஸம்பவிதாஸ்மி - இந்த உலகை விட்டு நான் சென்ற பின்னர், அந்தப் பரமாத்மாவை அடைவேன் – என்று முடிக்கும் பகுதி மூலமாக, “இந்த ஜகத்தின் நிமித்தகாரணம் மற்றும் உபாதானக்காரணம் என்றுள்ள ப்ரஹ்மமே அடையப்பட வேண்டிய உயர்ந்த வஸ்து ஆகும்”, என்பது கூறப்பட்டது. “தரதி – கடக்கவேண்டும்” என்றால், “அடையப்படவேண்டும்” என்று பொருளாகும்.

**3-2-32 புத்த்யர்த்த: பாதவத்**

**பொருள்** - பாதம் போன்று உபாஸனத்திற்காகக் கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (3-18-2) - சதுஷ்பாத் ப்ரஹ்ம - ப்ரஹ்மம் நான்கு பாதங்கள் கொண்டது – என்று அளவுபடுத்தப்பட்டு ஏன் கூறப்பட்டது என்றால், சாந். (3-18-2) - வாக் பாத: … சக்ஷுஷ்பாத: - வாக்கு, பாதம், … கண் – என்பது போன்ற வரிகளில் கூறப்படுவது போன்று, உபாஸனை செய்வதை எளிதாக்கவே உள்ளன என்று அறியவேண்டும்.

**3-2-33 ஸ்தாந விசேஷாத் ப்ரகாசாதிவத்**

**பொருள் -** ஒளி முதலான இடங்களின் ஸம்பந்தம் காரணமாக ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** அளவிட இயலாதபடி பரமாத்மா உள்ளபோதிலும், ஒரு குறிப்பிட்ட இடத்துடன் அவனை எண்ணியபடி இருத்தல் (உபாஸனைக்காக) பொருத்தமே ஆகும். இது எங்கும் உள்ள ஒளியானது ஜன்னல் வழியாக வரும்போது "ஜன்னல் ஒளி" என்று கூறப்படுவது போன்றும், எங்கும் உள்ள ஆகாசம் குடத்திற்குள் உள்ளபோது "குட ஆகாசம்" என்றும் கூறப்படுவது போன்றும் ஆகும்.

**3-2-34 உபபத்தேச்ச**

**பொருள் -** (தன்னை அடையும் உபாயமாக தானே உள்ள தன்மை) பொருந்துவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** உயர்ந்த இடமாக உள்ள பரமாத்மா, உயர்ந்த அந்த இடத்தை அடைய உதவும் உபாயமாகவும் உள்ளான். இதனை ச்ருதியானது, முண். (3-2-3) - யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய - பரமாத்மா யார் ஒருவனைத் தேர்ந்தெடுக்கிறானோ அவன் மட்டுமே பரமாத்மாவை அடைய இயலும் – என்று கூறுகிறது.

**3-2-35 ததா அந்ய ப்ரதிசேஷாத்**

**பொருள் -** இப்படியாக அதனைக் காட்டிலும் வேறு இல்லை என மறுப்பதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ச்வே. (3-9) - யஸ்மாத்பரம் ந அபரமஸ்தி கிஞ்சித் | யஸ்மாத் ந அணீய: ந ஜ்யாயோஸ்தி கச்சித் - எந்தப் பரம்பொருளைக் காட்டிலும் மேலானது வேறு இல்லையோ, எதனைக் காட்டிலும் சிறியதும் பெரியதும் இல்லையோ – என்பது போன்ற வாக்கியங்கள் மூலம் இந்தப் புருஷனைக் காட்டிலும் உயர்ந்தது ஏதும் இல்லை என்று மறுக்கப்படுவதால், அவனைத் தவிர உயர்ந்தவர்கள் யாரும் இல்லை. ஆனால், ச்வே. (3-10) - ததோ யத் உத்தரதரம் - இதனைவிட அப்பால் என்ன உள்ளது – என்று ஒரு வாக்கியம் உள்ளது; இதன் கருத்து என்னவென்றால், இந்தப் புருஷ தத்வத்தைக் காட்டிலும் உயர்ந்தது வேறு ஏதும் இல்லை என்பதாகும். இந்தப் புருஷ

தத்வமே, உபநிஷத்துடைய இந்தப் பகுதியின் தொடக்கத்தில் கூறப்பட்டு, முடிவில் விரிவாக உரைக்கப்பட்டது; ச்வே. (3-10) - அரூபம் அநாமயம் | ய ஏதத் விது: அம்ருதாஸ்தே பவந்தி அதேதர துக்கமேவ அபியந்தி - உருவம் அற்றதாகவும் (அதாவது கர்மத்தால் வந்த சரீரம் அற்றதாக), தோஷங்கள் அற்றதாகவும் உள்ளது; இதனை அறிந்தவர்கள், மோக்ஷம் பெறுகின்றனர்; இதனை உபாஸிக்காதவர்கள் ஸம்ஸார துன்பத்தைப் பெறுகின்றனர் – என்று கூறியது. இவ்விதம் முடிப்பதற்கு ஒரு காரணம் உள்ளது. என்னவென்றால், இந்தப் பகுதியின் தொடக்கத்தில் ச்வே. (3-8) – தமேவ விதித்வா அதிம்ருத்யும் ஏதி | நாந்ய: பந்தா: - அவனை இவ்விதம் அறிந்தவன் ம்ருத்யுவை (அவித்யை) கடக்கிறான், இதனை தவிர வேறு உபாயம் இல்லை – என்று கூறப்பட்டது; மேலே உரைத்தபடி முடிக்கப்படவில்லையென்றால், தொடக்கத்தில் உள்ள கருத்துடன் முரண்பாடு உண்டாகும்.

**3-2-36 அநேந ஸர்வகதத்வம் ஆயாம சப்தாதிப்ய:**

**பொருள்** - ஆயாம என்ற பதம் காரணமாக, “அனைத்தும் ப்ரஹ்மத்தால் வ்யாபிக்கப்பட்டுள்ளது”, எனலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – மஹா. நா. (12-1-1) - அணோரணீயாத் மஹதோ மஹீயாந் - அணுவைக் காட்டிலும் சிறியவன், பெரியதைக் காட்டிலும் பெரியவன் – என்றும், ச்வே. (3-9) - தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம் - புருஷனால் அனைத்தும் வ்யாபிக்கப்பட்டது – என்றும், மஹா. நா. (10-5) - வ்யாப்ய நாராயண: ஸ்தித: - அனைத்திலும் நாராயணனே வ்யாபித்து நிற்கிறான் – என்றும், முண். (1-1-6) - நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் - நித்யமாகவும் அனைத்துமாகவும் எங்கும் உள்ளவன், ஸூக்ஷ்மமாக உள்ளவன் – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலம், தன்னைத் தவிர உள்ள மற்ற அனைத்திலும் ப்ரஹ்மம் பரவி நிற்கிறது என்று அறியலாம். இதன் மூலம் அதனைக் காட்டிலும் உயர்ந்த வஸ்துவானது மறுக்கப்படுகிறது.

## அதிகரணம் - 8 - பலாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - அனைத்துக் கர்மங்களின் பலனையும் பரமாத்மாவே அளிக்கிறான் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**3-2-37 பலம் அத: உபபத்தே:**

**பொருள்** – (இது ஸித்தாந்தம் மட்டுமே உள்ள ஸூத்ரம் ஆகும்) பரம்பொருளிடமிருந்தே பலன்கள் கிட்டுகின்றன, இதுவே பொருந்துகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – கர்மங்கள் மற்றும் உபாஸனம் ஆகியவற்றால் ஆராதிக்கப்பட்ட பரப்ரஹ்மத்திடமிருந்தே, இன்பம் மற்றும் மோக்ஷம் ஆகிய பலன்கள் உண்டாகின்றன. கர்மங்கள் அனைத்தும் நொடிப்பொழுதில் அழியக்கூடியவை ஆகும்; ஆகவே அவை எதிர்காலத்தில் பலனை அளிக்கவல்லவை அல்ல. எனவே, அனைத்தும் அறிந்தவனும், மிகுந்த கருணை கொண்டவனும் ஆகிய அவனிடமிருந்து பலனைப் பெறுதல் என்பது பொருந்துகிறது.

**3-2-38 ச்ருதத்வாத் ச**

**பொருள் -** இப்படியே ச்ருதி வரிகள் கூறுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரு. (4-4-24) - அந்நாத: வஸுதாந: - அன்னத்தையும் தனத்தையும் அளிக்கிறான் – என்றும், தை. ஆர. (2-7) – ஏஷ ஹி ஏவ ஆநந்தயாதி - பரமபுருஷனே மோக்ஷம் என்ற ஆனந்தம் அளிக்கிறான் – என்றும் உள்ள ச்ருதி வரிகள் மூலமாக, அவனே அனைத்து பலன்களையும் அளிக்கிறான் என்றாகிறது.

**3-2-39 தர்மம் ஜைமிநி: அத ஏவ**

**பொருள்** – (இது பூர்வபக்ஷ ஸூத்ரமாகும்) தர்மம் முதலியவைகளே பலன் அளிப்பதாக ஜைமிநி கூறுகிறார்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** (கடந்த இரு ஸூத்ரங்களில் கூறப்பட்ட ஸித்தாந்தத்திற்கான பூர்வபக்ஷம் இதுவாகும்) – ச்ருதி முதலானவற்றில் கூறப்பட்டதன் காரணமாக, தர்மங்களே (அதாவது சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்கள்) பலன்களை அளிப்பவையாகும் என்பதே ஜைமிநியின் கருத்தாகும். விவசாயம் முதலான கர்மங்கள், தாங்களே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பலன்களை அளிப்பதை நாம் காண்கிறோம். ச்ருதி வசனங்கள், குறிப்பிட்ட கர்மங்களை விதிப்பவை ஆகும்.

இப்படிப்பட்ட விதிமுறைகளை நிலைநாட்ட வேறு எந்தவிதமான வழியும் இல்லை என்பதால், இத்தகைய கர்மங்களே “அபூர்வம்” என்பதன் மூலம் பலன்களை அளிப்பதாகக் கொள்ளவேண்டும்.

**3-2-40 பூர்வம் து பாதராயண: ஹேதுவ்யபதேசாத்**

**பொருள்** - (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) – பலனை அளிப்பதால் முந்தையதே என்று பாதராயணர் கூறுகிறார்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - முன்பு (ப்ர. ஸூ. 3-2-37) கூறியபடி, பரமபுருஷனே அனைத்துப் பலன்களையும் அளிப்பதாக பகவான் தராயணர் கருதுகிறார். தை. ஸம். (2-1-1) - வாயவ்யம் ச்வேதமாலபேத - ஐச்வர்யம் விரும்பும் ஒருவன் வாயுவிற்கு உரிய வெண்மையான வெள்ளாட்டுக் கிடாவை – என்று தொடங்கி, தை. ஸம். (2-1-1) - ஸ ஏவ ஏநம் பூதிம் கமயதி - அப்படிப்பட்ட வாயு இவ்விதமாக யாகம் இயற்றியவனை ஐச்வர்யத்திற்கு அழைத்துச் செல்கிறான் – என்று முடியும் வாக்கியம் மூலமாக, “பகவானை ஆத்மாவாகக் கொண்ட வாயு முதலான தேவதைகள், தங்களை ஆராதிக்கும் மனிதர்களுக்குப் பலன் அளிக்கின்றனர்”, என்பது கூறப்பட்டது. ஒரு குறிப்பிட்ட விதிவாக்கியத்தை கருத்துள்ளதாக ஆக்கவேண்டும் என்றால், அதனுடன் மற்ற பகுதிகளில் காணப்படும் வாக்கியங்களைச் சேர்க்கலாம். இங்கு, ப்ரு. (3-7-7) - யோ வாயௌதிஷ்டந் - யார் வாயுவில் உள்ளானோ – என்பது அவ்விதம் உள்ள பகுதியாகும்.

## பாதம் – 3 - குண உபஸம்ஹார பாதம்

இந்தப் பாதத்தில் ப்ரஹ்மத்தை அடைவதற்கு உபாயமாக உள்ள உபாஸனை, த்யானம், பக்தி போன்று கூறப்படும் பல்வேறு ப்ரஹ்மவித்யைகள் பற்றி ஆராயப்படுகின்றன. இப்படிப்பட்ட வித்யைகளில் உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் படிக்கப்படுகின்றன.

## அதிகரணம் – 1 - ஸர்வவேதாந்தப்ரத்யய அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – வைச்வாநர வித்யை, தஹரா வித்யை போன்ற பல வித்யைகள் பல்வேறு வேதசாகைகளில் ஓதப்படுகின்றன. இவை அனைத்தும் ஒன்றே என நிரூபிக்கப்பட உள்ளது.

### 3-3-1 ஸர்வ வேதாந்த ப்ரத்யயம் சோதநாத்யவிசேஷாத்

**பொருள்** – அனைத்து வேதாந்தங்களிலும் படிக்கப்படும் உபாஸனம் ஒன்றே ஆகும். விதி வாக்யம் முதலியவை காரணமாக ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – தஹரவித்யை போன்றவை, வேதாந்தத்தின் பல சாகைகளிலும் உள்ளது. அனைத்து சாகைகளில் கூறப்பட்ட இந்த வித்யைகள் ஒன்றே ஆகும். ஏனென்றால், ஒரு சாகையில் "உபாஸீத – இப்படியாக உபாஸிக்கவேண்டும்" என்றும், மற்றொரு சாகையில் "வித்யாத் – அறியவேண்டும்" என்றும் கூறப்பட்டபோதிலும், உணர்த்தப்படும் அர்த்தம் ஒன்றாகவே உள்ளது. இதன் விளைவாக அவற்றின் செயலும், பெயரும் ஒன்றாகவே உள்ளன. இது Vஏதங்களில் விதிக்கப்பட்ட அனைத்து கர்மங்களுக்கும் பொருந்தும்.

### 3-3-2 பேதாத் ந இதி சேத் ஏகஸ்யாம் அபி

**பொருள்** - வித்யையில் உள்ள பேதம் வெளிப்படுகிறது என்பதால், "ஒன்றல்ல" என்று கூறினால், ஒரே வித்யை காரணமாக (இந்த வாதம் பொருந்தாது).

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – அந்தந்த வித்யைகளில் உள்ள விதிச்சொல்லானது வெவ்வேறு என்பதால், விதிக்கப்பட்டவையும் வெவ்வேறு என்றே ஆகிறது. எனவே அந்த வித்யைகள் ஒன்றல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. ஒரே வித்யை பல சாகைகளில் கூறப்பட்டிருந்தாலும், அந்தந்த சாகையைச் சார்ந்த உபாஸகர்கள் வேறுபடுவதால்,

அவர்கள் பின்பற்றுவதற்காக, மீண்டும் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளது. ஆக்வே அவை வெவ்வேறு அல்ல.

**3-3-3 ஸ்வாத்யாயஸ்ய ததாத்வே ஹி ஸமாசாரே அதிகாராத் ச ஸவவத் ச தந்நியம:**

**பொருள் -** வேத அத்யயனம் செய்யத் தகுதி உண்டாகும் பொருட்டு, சிரோவிரதம் என்ற விதி கூறப்பட்டது. ஸமாசாரம் என்ற க்ரந்தம் இதனைக் கூறுகிறது. ஸவஹோமங்கள் உள்ளது போன்று, இதுவும் அவர்களுக்கு மட்டுமே உள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அதர்வணவேதத்தில் முண். (3-2-10) – தேஷாம் ஏவ ஏதாம் ப்ரஹ்ம வித்யாம் வதேத – அவனிடம் மட்டுமே இந்தப் ப்ரஹ்மவித்யை குறித்துக் கூறவேண்டும் – என்பதன் மூலம், சிரோவ்ரதம் என்பது விதிக்கப்பட்ட ஒன்றாகிறது. முண். (3-2-11) – ந ஏதத் அசீர்ணவ்ரதோ அதீயீத - சிரோவிரதத்தைப் பின்பற்றாதவன் இந்த வேதத்தை அத்யயனம் செய்யக்கூடாது – என்பதன் மூலம், சிரோவ்ரதமானது வேத அத்யயனத்தின் ஓர் அங்கமாக உள்ளது என்பது அறியப்படுகிறது. ஸமாசாரம் என்னும் க்ரந்தத்தில், "இதம் அபி வேத வ்ரதேந வ்யாக்யாதம் – வேதவ்ரதத்தில் இது குறித்து வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளது", என்றுள்ளது (அல்லது சிரோவ்ரத்தை வேதவ்ரதமாகவே ஸமாசாரம் என்னும் க்ரந்தம் வ்யாக்யானம் செய்கிறது என்றும் பொருள் கூறலாம்). மேலே உள்ள முண்டக உபநிஷத் வாக்கியத்தில் காணப்படும் "ப்ரஹ்மவித்யாம்" என்பதில் உள்ள "ப்ரஹ்ம" என்னும் பதமானது, வேதத்தைக் குறிப்பதாகும். ஸவஹோமம் போன்றே சிரோவ்ரதமும், அதர்வணவேதிகளுக்கு மட்டுமே உள்ளதாகும். ஆகவே வித்யைகள் வெவ்வேறு என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

**3-3-4 தர்சயதி ச**

**பொருள்** – வேதம் உணர்த்துகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அனைத்து வித்யைகளும் ஒன்றே என ச்ருதி வரிகளில் காணலாம். (இங்கு பல சாகைகளில் கூறப்பட்ட தஹர வித்யையானது உதாரணமாகக் கூறப்படுகிறது) சாந்தோக்ய உபநிஷத்தில் உள்ள தஹரவித்யையில், ப்ரஹ்மத்தின் எட்டு

தன்மைகள் கூறப்படுகின்றன. ஆனால் தைத்திரீயத்தில், தை. (3-12-3) – தஸ்மிந் யத் அந்த: – அதனுள் இருப்பதே (பரமாத்மா) – என்பது மட்டும் கூறப்படுகிறது.

**3-3-5 உபஸம்ஹார: அர்த்தா பேதாத் விதிசேஷவத் ஸமாநே ச**

**பொருள்** – அனைத்து இடங்களிலும் படிக்கப்படும் வித்யைகள் ஒன்றாக உள்ளதால், ஒரு சாகையில் கூறப்பட்ட தன்மைகளை மற்ற சாகைகளிலும், அந்த வித்யையில் சேர்த்துக் கொள்ளவேண்டும். விதிகள் எப்படிக் கொள்ளப்படுகின்றனவோ அதுபோல், இங்கும் பேதம் இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஒரு சாகையில் உள்ள வித்யைக்கான குணங்களை, அதே பெயருடைய மற்ற சாகை வித்யையிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும். பல சாகைகளில், ஒரே பெயர் கொண்ட வித்யை குறித்து பல விஷயங்கள் கூறப்பட்டிருந்தாலும், அவை அனைத்தும் ஒரே வித்யையின் உதவிக்காகவே ஆகும் என்று கொள்ளவேண்டும். ஒரே விதிக்குக் கூறப்படும் பல தன்மைகள் அனைத்தும், அந்த விதிக்கு அடங்கியே உள்ளது போன்று ஆகும்.

## அதிகரணம் – 2 – அந்யதாத்வ அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – சாந்தோக்யம் மற்றும் ப்ருஹத் உபநிஷத்தில் உள்ள உத்கீத வித்யைகள் வெவ்வேறு என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**குறிப்பு** - (இது வேதாந்தஸாரத்தில் உள்ள பகுதி அல்ல. இந்த அதிகரணத்தை விளக்குவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது). உத்கீத வித்யை என்றால் என்ன? எதிரிகளை வீழ்த்துவதற்கு ஸாம கானத்தில் பாடப்படும் உத்கீதம் என்னும் பகுதி வேதங்களில் உள்ளது. அசுரர்களை வீழ்த்துவதற்குத் தேவர்கள் உத்கீதத்தைக் கைக்கொள்ள முடிவு செய்தனர். ஆனால் இந்த உத்கீதம் என்பதை எந்த உறுப்பைக் கொண்டு பாடுவது என்ற குழப்பம் உண்டானது. முதலில் வாக்கு தேவதை கொண்டு பாடுவது என்று முடிவு செய்தனர். முதலில் வெற்றி உண்டானபோதும், பின்னர் வாக்கில் உண்டான தோஷங்கள் காரணமாக, இந்த முயற்சி பலிக்கவில்லை. இப்படியாக ஒவ்வொரு உறுப்பின் தேவதையைக் கொண்டு முயற்சித்து தோல்வியே கிட்டியது. இறுதியாகப் ப்ராணன் கொண்டு உத்கீதம் பாடி வென்றனர். இங்கு உணர்த்தப்படுவது அனைத்து உறுப்புகளும்

தோஷத்துடன் கூடியவையே ஆகும். ஆனால் ப்ராணன் மட்டுமே எந்தவிதமான தோஷங்களாலும் பாதிக்கப்படாமல் உள்ளது என்பதாகும்.

### 3-3-6 அந்யதாத்வம் சப்தாதிதி சேத் ந அவிசேஷாத்

**பொருள்** – வேதவரிகளின் மூலம் வேறுபாடு விளங்குகிறது என்பது பொருந்தாது, காரணம் – வேறுபாடு இல்லாததால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ப்ருஹத் உபநிஷத் மற்றும் சாந்தோக்ய உபநிஷத் ஆகிய இரண்டிலும் ப்ராணனை ஏறிட்டுக் கொண்ட உத்கீத வித்யை கூறப்பட்டுள்ளது. இவை சத்ருக்களை வெல்வதற்காக உள்ளன. மேலும் இரண்டிலும் ஒரே போன்ற விதிமுறைகள் உள்ளன. ஆகவே இரண்டில் உள்ள வித்யையும் ஒன்றே ஆகும். (அடுத்து வருகின்றன பத்தியானது, மேலே உள்ள பூர்வபக்ஷத்தை மறுப்பது போன்று உள்ளதால், இது ஸித்தாந்தமோ என்ற எண்ணம் ஏற்படும். ஆனால் இந்தப் பகுதி ஸித்தாந்தம் அல்ல. மேலே கூறப்பட்ட தனது கருத்துக்கு, ஸித்தாந்தி என்ன பதில் அளிப்பார் என்று பூர்வபக்ஷி யூகம் செய்து, ஸித்தாந்தி இவ்விதமாகக் கூறுவார் என்று எண்ணுகிறார். அதனைத் தானே கூறி, "இது போன்று நீங்கள் (ஸித்தாந்தி) வாதம் செய்வது சரியல்ல", என்று மறுத்து, தனது பூர்வபக்ஷத்தை மேலும் உறுதிபடக் கூறுகிறார்). ப்ருஹதாரண்யகத்தில் உத்கீதத்தை ப்ராணன் மீது ஏற்றிக் கூறும்போது, உத்கீதத்தை இசைக்கின்ற உத்காதா ப்ராணனாகக் கூறப்படுகிறான். சாந்தோக்யகத்தில் உத்கீதத்தை ப்ராணன் மீது ஏற்றிக் கூறும்போது, உத்கீதமானது ப்ராணனாகக் கூறப்படுகிறது. வாஜஸநேயகத்தில் (ப்ருஹதாரண்யகம்), ப்ரு. (1-3-7) – அத ஹ இமம் ஆஸந்யம் ப்ராணம் ஊசு: த்வம் ந: உத்காயேதி | ததா இதி தேப்ய: ஏஷ: ப்ராண: உதகாயத் – தேவர்கள் முக்யப்ராணனிடம், " நீ எங்களின் பொருட்டு உத்கீதத்தை இசைப்பாயாக", என்றனர். உடனே ப்ராணன், "அப்படியே செய்கிறேன்", எனக் கூறி, உத்கீத கானம் செய்தது – என்று கூறப்பட்டது; இங்கு உத்கீதம் செய்யும் உத்காதாவிடம் ப்ராணன் என்ற எண்ணத்தை ஏற்றிக் கூறுவதாக உள்ளது. சாந்தோக்ய உபநிஷத்தில் ப்ராணனை ஏற்றிக் கூறி, சாந். (1-2-7) – ய ஏவ அயம் முக்ய: ப்ராண: தம் உத்கீதம் உபாஸாம் சக்ரிரே - அதன் பின்னர் முக்யப்ராணனை உபாஸித்தனர் - என்று உள்ளது; ஆக உத்கீதமானது ப்ராணனாகக் கூறப்படுகிறது. ஆகவே இந்த இரண்டு வித்யைகளும் வெவ்வேறு என்றே ஆகின்றன. (இதனை மறுத்து பூர்வபக்ஷம் கூறுகிறார்) அப்படி அல்ல. இரண்டின்

தொடக்கமும் ஒரே போன்று உள்ளதால் வெவ்வேறு அல்ல. ஒன்றின் (ப்ருஹத்) தொடக்கத்தில் ப்ரு. (1-3-1) – ஹந்த அஸுராந் யஜ்ஞே உத்கீதேந அத்யயாம - யஜ்ஞத்தில் உத்கீதத்தின் மூலம் நாம் வெற்றி கொள்வோம் - என்று கூறப்பட்டது. மற்றொன்றில் (சாந்தோக்யம்) சாந். (1-2-10) – தத்த தேவா உத்கீதம் ஆஜஹ்ரு: அநேநைவ ஏநாந் அபிஹ நிஷ்யாம: - தேவர்கள் யுத்தத்தின்போது, “இந்த உத்கீதத்தைக் கொண்டு அசுரர்களைக் கொல்வோம்”, என்று கூறினர் – என்று கூறப்பட்டது (ஆகவே இரண்டும் ஒரே வித்யையே ஆகும்).

3-3-7 **ந வா ப்ரகரண பேதாத் பரோவரீயஸ்த்வாதிவத்**

**பொருள் -** மேலே உள்ள வாதம் தவறானது. இரண்டிலும் கூறப்படும் விஷயங்கள் வேறுபட்டுள்ளன. குணத்தில் வேறுபாடு கூறுவது போன்று.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல (வித்யைகள் ஒன்றல்ல). அந்தப் பகுதியில் கூறப்படும் விஷயங்களில் வேறுபாடு உள்ளதால் ஆகும். சாந்தோக்யத்தில், சாந். (1-1-1) - ஓம் இதி ஏதத் அக்ஷரம் உத்கீதம் உபாஸ்த – உத்கீதத்தின் அவயவயமாக (பகுதியாக) உள்ள ஓம் என்னும் அக்ஷரத்தை உபாஸிப்பானாக – என்று உத்கீதத்தின் அவயவமான ப்ரணவம் (ஓம்) குறித்த உபாஸனை தொடங்கப்பட்டது. வாஜஸநேயகத்தில் ப்ரு. (1-3-1) – ஹந்த அஸுராந் உத்கீதேந அத்யயாம: - ஆஹா! நாம் அசுரர்களை உத்கீதம் கொண்டு அழித்துவிடுவோம் – என்று முழு உத்கீதத்தைக் கூறுகிறார்கள். ஆக இரண்டு வித்யைகளின் ரூபங்களில் பேதம் உள்ளது. (பரோவரீயஸ்த்வாதிவத்) ஒரே சாகையைச் சேர்ந்த இரண்டு இடங்களில், (ப்ரணவத்தில் பரமாத்மா என்ற எண்ணத்தை ஏறிட்டுக் கொண்டு உபாஸிப்பது பொதுவாக இருந்தாலும்) ஓர் இடத்தில் பொன்மயமான திருமேனியுடன் உள்ள பரமாத்மா என்றும், மற்றோர் இடத்தில் உயர்ந்த குணங்களுடன் கூடிய பரமாத்மா என்றும், வெவ்வேறுவிதமாக உபாஸிக்கும்படிக் கூறியது காண்க (இதனால் இந்த உபாஸனங்கள் ஒன்றல்ல என்றே தேறுகிறது. இதே போன்று இங்கும் வித்யா பேதத்தைப் பற்றிய சந்தேகம் எழுவதற்கு வாய்ப்பே இல்லை).

3-3-8 **ஸம்ஜ்ஞாத: சேத் தத் உக்தம் அஸ்தி து தத் அபி**

**பொருள் -** பெயர் ஒன்றாக உள்ளதால் வித்யைகளும் என்றே என்பதை ஏற்க முடியாது; வெவ்வேறு விதிகள் உள்ள இடங்களிலும் இது போல் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** உத்கீத வித்யை என்ற பெயர் இரண்டு இடங்களிலும் (சாந்தோக்யம், ப்ருஹத்) ஒன்றாக உள்ளதால், இரண்டு வித்யைகளும் ஒன்றே எனக் கூறினால், விதிமுறைகள் வெவ்வேறாக உள்ள இடத்தில் கூட, வித்யைகளின் பெயர்கள் ஒன்றாக உள்ளதைக் காணலாம். உதாரணமாக, அக்னிஹோத்ரம் என்பது, "அன்றாடம் இயற்றப்படும் அக்னிஹோத்ரம், ஒரு மாதம் மட்டுமே செய்யப்படும் குண்டபாயிகளின் அயநாக்னிஹோத்ரம்" ஆகிய இரண்டையும் குறிக்கும்.

3-3-9 **வ்யாப்தேச்ச ஸமஞ்ஜஸம்**

**பொருள் -** பல இடங்களில் கூறப்படுவதால், நடுவில் கூறப்படுவதும் பொருந்தும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந்தோக்ய உபநிஷத்தின் முதல் ப்ரபாடகத்தில் கூறப்பட்ட உத்கீதத்தின் அவயவமான (பகுதியான) ப்ரணவத்தைக் குறித்து, அடுத்துள்ள ப்ரபாடங்களிலும் படிக்கப்பட்டதைக் காணலாம். ஆகவே நடுவில் உள்ளதான சாந். (1-2-7) – உத்கீதம் உபாஸாம் சக்ரிரே – முக்கிய ப்ராணனையே உத்கீதமாக உபாஸனை செய்தனர் – என்பதும் ப்ரணவ உபாஸனை என்பது பொருந்துகிறது.

**3-3-10 ஸர்வாபேதாத் அந்யத்ர இமே**

**பொருள் –** அனைத்து இடங்களிலும் பேதம் இல்லாமல் உள்ளதால், வேறு இடங்களிலும் அப்படியே.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந்தோக்யத்திலும் வாஜஸநேயகத்திலும் (ப்ருஹத்), கௌஷீதகீயிலும், சாந். (5-1-1), ப்ரு. (6-1-1) – யோ ஹ வை ஜ்யேஷ்டம் ச ச்ரேஷ்டம் ச வேத ஜ்யேஷ்டச்ச ஹ வை ச்ரேஷ்டச்ச பவதி ப்ராணோ வாவ ஜ்யேஷ்டச்ச ச்ரேஷ்டச்ச – யார் ஒருவன் மூத்ததாகவும் உயர்ந்ததாகவும் உள்ளதை அறிகிறானோ, அவன்

மூத்தவனாகவும் உயர்ந்தவனாகவும் ஆகிறான்; ப்ராணன் என்பது மூத்ததாகவும் உயர்ந்ததாகவும் உள்ளது – என்பதன் மூலம், வாக் முதலான இந்த்ரியங்கள் நிலைப்பதற்கு ஆதாரமாக உள்ளதால் ப்ராணனே மூத்ததாகவும் உயர்ந்ததாகவும் கூறப்பட்டது. ஆனால், ஐச்வர்யத்தை அளிக்கின்ற தன்மை முதலான சில குணங்கள் வாக் முதலான இந்த்ரியங்களுக்கு மட்டுமே உள்ளது என்றும், அத்தகைய தன்மைகள் அவைகளுக்குக் கிட்டுவதற்கும் ப்ராணனே காரணம் என்றும் சாந்தோக்யம் மற்றும் ப்ருஹத்தில் கூறப்பட்டது; இது கௌஷீதகீயில் கூறப்படவில்லை. ஆனால் "ப்ராணனே மூத்தது" என்பது போன்றவற்றை உள்ளடக்கிய ப்ராணவித்யையானது, இந்த மூன்றிலுமே எந்தவிதமான வேறுபாடும் இன்றி அமைந்துள்ளது. ஆகவே ஐச்வர்யத்துடன் கூடிய தன்மை (வஸிஷ்டத்வம்) போன்றவை, கௌஷீதகீயில் உள்ள ப்ராணவித்யையிலும் கொள்ளப்படவேண்டும்.

## அதிகரணம் – 4 – ஆநந்தாத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ப்ரஹ்மம் ஆனந்தமயமானது, மாற்றம் அடையாமல் உள்ளது, ஞானமயமானது, அளவுபடுத்த இயலாதது, தோஷங்கள் இல்லாமல் உள்ளது என்று கூறப்பட்டது. இந்த ஐந்து குணங்களும் அனைத்து ப்ரஹ்ம வித்யைகளிலும் படிக்கப்பட வேண்டும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3-3-11 ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய**

**பொருள்** – ப்ரஹ்மத்தின் ஆனந்தம் போன்ற தன்மைகள் அனைத்து இடங்களிலும் பொருந்தும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – கடந்த ஸூத்ரத்தில் காணப்படும் "அபேதாத்" என்பதை இங்கும் சேர்த்துக் கொள்ளவேண்டும். ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நிரூபித்துக் காண்பிக்கின்ற "தோஷம் அற்ற ஞானம், ஆனந்தம்" முதலான குணங்கள், மற்ற வித்யைகளிலும் கொள்ளப்படவேண்டும். காரணம், குணங்களைக் கொண்டுள்ள ப்ரஹ்மமானது அனைத்து வித்யைகளிலும் வேறுபடாதது (ஒன்றே) ஆகும்.

**3-3-12 ப்ரியசிரஸ்த்வாத்ய ப்ராப்தி: உபசயாபசயௌ ஹி பேதே**

**பொருள்** – ப்ரியசிரஸ்த்வம் போன்ற குணங்களை அனைத்து வித்யைகளிலும் படிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை – காரணம், உறுப்பு பேதங்களை ஏற்றால் வளர்தல்-குறைதல் போன்ற தோஷங்கள் உண்டாகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – தை. ஆர. (2-5) – தஸ்ய ப்ரியமேவ சிர: - ப்ரியத்தைத் தலையாகக் கொண்டு – போன்ற வரிகளில் ப்ரஹ்மத்தின் குணமாகப் படிக்கப்பட்ட ப்ரியசிரஸ்தவம் (தலை மிகவும் ப்ரியமானது) போன்றவை அனைத்து வித்யைகளிலும் படிக்கப்பட வேண்டியதில்லை; காரணம், அவை ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நிரூபிக்கவல்ல குணங்கள் அல்ல. அவற்றை ப்ரஹ்மத்தின் குணமாகக் கொண்டால், (தலை-வால் முதலான அவயவங்கள் வளர்தல் மற்றும் குறைதல் ஆகியவற்றுக்கு இலக்காவது போன்று) ப்ரஹ்மத்திற்கு வளர்தல் மற்றும் குறைதல் என்பதான தோஷங்கள் ஏற்படும்.

**3-3-13 இதரே து அர்த்த ஸாமாந்யாத்**

**பொருள்** – மற்றவைகளே ஆகும், காரணம் அவைகளே கூடத் தோன்றுபவையாக உள்ளன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைப் பற்றித் தெளிவாக உணர்ந்து கொள்வதற்காக, ப்ரஹ்மத்தின் ஆனந்தம் முதலான குணங்களை அனைத்து வித்யைகளிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றாகிறது.

**3-3-14 ஆத்யாநாய ப்ரயோஜந அபாவாத்**

**பொருள்** – வேறு பயன் கூறப்படாததால், உபாஸனையின் பொருட்டே ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரியம் போன்றவை ப்ரஹ்மத்தின் தலை முதலானவைகளாக உருவகம் செய்யப்பட்டதற்கு வேறு எந்தவிதமான பயனும் (உள்நோக்கமும்) இல்லை என்பதால், அது போன்று உருவகப்படுத்தியது என்பது அதன் உபாஸனையின் பொருட்டே ஆகும் என்று கொள்ளவேண்டும்.

**3-3-15 ஆத்ம சப்தாத் ச**

**பொருள் –** ஆத்ம சப்தம் உள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** தை. (2-5) – அந்ய: அந்தர ஆத்மா ஆனந்தமய: - வேறு ஒரு ஆத்மா ஆனந்தமயனாக உள்ளான் – என்பதில் “ஆத்மா” என்னும் பதம் வந்துள்ளது. ஆகவே ப்ரியசிரஸ்த்வம் போன்றவை ப்ரஹ்மத்தின் குணங்கள் அல்ல (அவை உபாஸனையின் பொருட்டே கூறப்பட்டன).

**3-3-16 ஆத்ம க்ருஹீதி: இதரவத் உத்தராத்**

**பொருள் –** மற்ற வாக்கியங்களில் எடுப்பது போன்று இங்கும் ஆத்ம சப்தம் குறிக்கிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** (கடந்த ஸூத்ரத்தில் காணப்படும் தை. (2-5) – அந்ய: அந்தர ஆத்மா ஆனந்தமய: - வேறு ஒரு ஆத்மா ஆனந்தமயனாக உள்ளான் - என்பதில் உள்ள) ஆத்மா என்னும் பதம், பரமாத்மாவையே குறிக்கும். அடுத்து உள்ள வரியானது தை. (2-6) – ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேய – “நானே பலவாகக் கடவேன்” என்று ஸங்கல்பம் செய்தது (ஆகவே ஆத்ம பதம் பரமாத்மாவையே குறிக்கும்) – என்று “ப்ரஹ்மம் பலவாகக் கடவதாக ஸங்கல்பம் செய்தது” என்பதைக் கூறுகிறது. இது, ஐத. (1-1-1) – ஆத்மா வா இதம் ஏக ஏவ அக்ர ஆஸீத் - ப்ரளயத்தின்போது இந்த ஆத்மா (பரமாத்மா) மட்டுமே இருந்தது – என்பது போன்ற வரிகளில் உள்ள ஆத்மா என்ற பதமானது, பரமாத்மாவையே குறிப்பது போன்றதாகும்.

**3-3-17 அந்வயாத் இதி சேத் ஸ்யாத் அவதாரணாத்**

**பொருள் –** அசேதனம் குறித்தும் ஆத்மசப்தம் உபயோகப்பட்டதே என்றால், இவ்விதம் கூற அவசியம் இல்லை, புத்தி மூலம் கருதப்படுகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – நீங்கள் (ஸித்தாந்தி) கூறுவது போன்று, அடுத்த வரியில் உள்ள ஆத்மா என்னும் சொல்லிற்கு (பரமாத்மா என்னும்) பொருள் கொள்ள இயலாது; காரணம், தொடக்கத்தில் ப்ராணமயன் முதலானவற்றில் ஆத்ம பதமானது உபயோகிக்கப்பட்டதைக் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – தை. (2-1) –ஆத்மந ஆகாச: ஸம்பூத: - இந்த ஆத்மாவிடமிருந்தே ஆகாசம் தோன்றியது – என்பதன் மூலம், ப்ராணமயன் என்பது பரமாத்மாவையே குறிக்கும் என்று தேறுகிறது. ஆகவே இங்கு பரமாத்மாவே கூறப்பட்டான் என்று தீர்மானிக்கப்படுகிறது.

## அதிகரணம் – 5 – கார்யாக்யாநாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஆசமனம் செய்யப்படும் நீரானது ப்ராணனுக்கு வஸ்திரமாக உள்ளது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-18 **கார்யாக்யாநாத் அபூர்வம்**

**பொருள்** – புதியதே எடுக்கப்படவேண்டும், எதனைச் செய்யவேண்டும் என்று கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ராணவித்யை குறித்து உரைக்கும்போது, ப்ரு. (6-1-1) – யோ ஹ வை ஜ்யேஷ்டம் ச ச்ரேஷ்டம் ச வேத – யார் ஒருவன் மூத்ததாகவும் உயர்ந்ததாகவும் உள்ளதை அறிகிறானோ – என்று கூறப்பட்டது. தொடர்ந்து, ப்ராணனுக்கு (ஆசமனம் செய்யப்படும்) நீர் என்பது வஸ்திரமாகிறது என்று கூறப்படுகிறது. மேலும், ஸத. (14-9-2-15) – தஸ்மாத் ஏவம் வித் அசிஷ்யந் ஆசாமேத் அசித்வா சாசாமந்தி ஏதம் ஏவ ததநமநக்நம் குருதே – எனவே இந்த விஷயங்களை அறிந்தவன், உண்பதற்கு முன்பும் பின்பும் ஆசமனம் செய்யவேண்டும்; இதனால் அவன் ப்ராணனை நிர்வாணம் அற்றதாக ஆக்குகிறான் – என்று ஆசமனம் குறித்து உள்ளது. ஆக இங்கு ப்ராணனுக்கு நீர் மூலம் வஸ்திரம் அளிக்கப்படுகிறது என்பதே கூறப்பட்டது; காரணம், இந்த விஷயமானது இதற்கு முன்பு எங்கும் கூறப்படவில்லை. இங்கு மீண்டும் ஆசமனம் விதிக்கப்படுகிறது என்று கூற இயலாது, காரணம் அது முன்பே வேறு இடத்தில்

விதிக்கப்பட்ட ஒன்றாகும். ஆகவே (ஆசமனம் செய்யப்படும்போது விடப்படும்) நீரானது, ப்ராணனுக்கு வஸ்திரமாகிறது என்பதே இங்கு உணர்த்தப்படுவதாகக் கொள்ளப்பட வேண்டும். "முன்பு விதிக்கப்படாத விஷயமே விதிக்கப்படவேண்டும்", என்பது அனைவராலும் ஏற்கப்பட்ட ஒன்றாகும்.

### அதிகரணம் – 6 - ஸமாநாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – சுக்ல யஜுர் வேதத்தில் உள்ள அக்னிரஹஸ்யம் மற்றும் ப்ருஹத் ஆரண்யகம் என்ற இரண்டிலும், சாண்டில்ய வித்யை என்பது ஓதப்பட்டுள்ளது. இவை இரண்டிற்கும் இடையே ரூபத்தில் வேறுபாடு இல்லாத காரணத்தினால், இரண்டும் ஒன்றே என நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-19 **ஸமாந ஏவம் ச அபேதாத்**

**பொருள் -** குணங்கள் ஒன்றாக உள்ளதால், வேறுபடாத காரணத்தினால் ஒன்றே ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அக்னிரஹஸ்யத்திலும், ப்ருஹதாரண்யகத்திலும் சாண்டில்யவித்யை படிக்கப்பட்டது. ஒன்றில், ஸத. (10-6-3-2) - ஸ ஆத்மாநம் உபாஸீத மநோமயம் ப்ராண சரீரம் பாரூபம் ஸத்யஸங்கல்பம் ஆகாசாத்மாநம் – அவன் தூய்மையான மனம் மூலம் அறியத்தக்கவனாக, ப்ராணனைச் சரீரமாகக் கொண்டவனாக, ஜ்யோதி ரூபமாக, ஆகாசத்திற்கு ஆத்மாவாக உள்ளவனாக, ஸத்யஸங்கல்பனாக உள்ள பரம்பொருளை உபாஸனை செய்யக்கடவன் – என்று உள்ளது. மற்றொன்றில், ப்ரு. (5-6-1) – மநோமயோ அயம் புருஷ: பா: ஸத்யம் தஸ்மிந் அந்தர் ஹ்ருதயே யதா வ்ரீஹிர்வா யவோ வா ஸ ஏஷ ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசாந: ஸர்வஸ்யாதிபதி: ஸர்வம் இதம் ப்ரசாஸ்தி– இந்தப் புருஷன் தூய்மையான மனம் கொண்டு அறியத்தக்கவன்; தானாகவே ப்ரகாசமாக உள்ளவன்; மாற்றங்கள் அடையாதவன்; இதயத்தில் நெல் அளவில் உள்ளவன்; அனைவரையும் தன் வயப்படுத்தியுள்ளவன்; அனைவரையும் அனைத்தையும் நியமித்தபடி உள்ளவன் – என்று கூறப்பட்டது. இந்த இரண்டிலும் அவன் மநோமயன் (மனதால் அறியப்படுபவன்) என்றே படிக்கப்படுகிறான். ஆகவே இங்கு கூடுதலாகப் படிக்கப்பட்ட "அனைத்தையும் தன் வயப்படுத்துபவன்" போன்ற தன்மைகள், ஸத்யஸங்கல்பம் என்ற தன்மையிலேயே அடங்கிவிடுவதால், இவற்றுக்கு இடையே

முரண்பாடு இல்லை. எனவே இரண்டு வித்யைகளுக்கும் இடையே வேறுபாடு இல்லை, இரு வித்யைகளும் ஒன்றே என்றாகிறது.

## அதிகரணம் – 7 – ஸம்பந்தாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஆதித்யனை இருப்பிடமாகக் கொண்ட ப்ரஹ்மம் என்பதன் மூலம் அந்தராதித்ய வித்யை என்பதும், கண்களை இருப்பிடமாகக் கொண்ட ப்ரஹ்மம் என்பதன் மூலம் அக்ஷி வித்யை என்பதும் கொள்ளவேண்டும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-20 **ஸம்பந்தாத் ஏவம் அந்யத்ர அபி**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) இரண்டு இடங்களில் உள்ள தொடர்பு வேறு இடத்திலும் கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ப்ரு. (5-5-2) – ய ஏஷ ஏதஸ்மிந் மண்டலே புருஷோ யச்சாயம் தக்ஷிணே அக்ஷிந் – இந்தப் ப்ரஹ்மமே ஆதித்ய மண்டலத்தில் உள்ளவன் ஆவான்; இவனே சூரியனிலும் வலது கண்ணிலும் உள்ளான் – என்று தொடங்கப்படும் பகுதியில், "ப்ரஹ்மமே சூரிய மண்டலத்திலும், கண்ணிலும் உள்ளதாகக் கூறப்பட்டு, அவனே அங்கு உபாஸிக்கத்தக்கவன்" என்று கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ப்ரு. (5-5-3) – தஸ்யோபநிஷத் அஹரித்யதிதைவதம் - அவனது ரஹஸ்யப் பெயர் அஹர், அவன் அனைத்து தெய்வங்களைக் காட்டிலும் உயர்ந்தவன் – என்றும், ப்ரு. (5-5-4) – தஸ்யோபநிஷத் அஹமித்யதிதைவதம் – அவனது ரஹஸ்யப் பெயர் அஹம், அவன் அனைத்து தெய்வங்களைக் காட்டிலும் உயர்ந்தவன் – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலம், அவனுடைய இரண்டு ரஹஸ்யமான பெயர்களான "அஹர், அஹம்" ஆகியவை கூறப்பட்டன. ஆக இந்த இரண்டிலும் ஒரே வஸ்து மட்டுமே உபாஸனைப்பொருளாகக் கூறப்பட்டது. ஆகவே இந்த இரண்டு வித்யைகளும் ஒன்றே எனவும், இரண்டு பெயர்களையும் ஒரே உபாஸனையில் கொள்ளவேண்டும் எனவும் அறியவேண்டும்.

**3-3-21 ந வா விசேஷாத்**

**பொருள்** – ரூபம் வேறுபடுவதால் ஒன்றல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) அப்படி அல்ல. இரண்டு வித்யைகளும் வெவ்வேறானவை ஆகும். (ப்ரஹ்மம் ஒன்று என்றாலும்) ஓர் இடத்தில் ஆதித்யனாகிய இடத்துடனும், மற்றோர் இடத்தில் வலது கண் என்னும் இடத்துடனும் தொடர்பு கொண்டுள்ளதாக உபாஸிக்கப்படுகிறது. ஆகவே அந்தந்த இடத்திற்கு ஏற்றபடியாக பெயர்களும் உள்ளன.

3-3-22 **தர்சயதி ச**

**பொருள்** – ச்ருதியும் இப்படியே கூறுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (ஸூத்ரம் 3-3-20ல் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) ச்ருதியில் இரண்டு வித்யைக்கும் வேறுபாடு உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது; சாந். (1-7-5) – தஸ்யை தஸ்ய தத் ஏவ ரூபம் யதமுஷ்ய ரூபம் – ஆதித்யனில் உள்ள ப்ரஹ்மத்திற்கு எது ரூபமோ, வலது கண்ணில் உள்ள ப்ரஹ்மத்திற்கு அதுவே ரூபம் – என்று ரூபங்களில் வேறுபாடு கூறப்படுகிறது.

## அதிகரணம் – 7 - ஸம்ப்ருத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – கட உபநிஷத்தில் உள்ள ஸம்ப்ருதி என்னும் தன்மை, த்யுவ்யாப்தி என்னும் தன்மை ஆகியவை அனைத்து வித்யைகளிலும் உபாஸிக்க வேண்டியவை அல்ல என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-23 **ஸம்ப்ருதி த்யுவ்யாப்தி அபி ச அத:**

**பொருள்** – அனைத்து வல்லமையுடன் இருத்தல் (ஸம்ப்ருதி), த்யுலோகம் என்னும் தேவலோகத்தில் பரவி நிற்கை (த்யுவ்யாப்தி) ஆகியவை ஒரு இடத்துடன் தொடர்பு கொண்டவை என்பதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – தை. ப்ரா. (2-4-6) - ப்ரஹ்ம ஜ்யேஷ்டா வீர்யா ஸம்ப்ருதாநி ப்ரஹ்மாக்ரே ஜ்யேஷ்டம் திவமாததாந - ப்ரஹ்மத்திடம் அனைத்து வீர்யங்களும் உள்ளன; எல்லையற்ற காலங்கள் புகழுடன் உள்ள ப்ரஹ்மம் தேவலோகத்தை வ்யாபித்துள்ளது -

என்பதன் மூலம், "ப்ரஹ்மம் அனைத்து வீர்யங்களும் நிறைந்தது; தேவலோகத்தை வ்யாபித்துள்ளது", என்று உணர்த்தப்பட்டது. இந்த இரண்டு தன்மைகளும் எந்த ஒரு குறிப்பிட்ட உபாஸனத்திற்காகவும் அல்லாமல், பொதுவாக உள்ளது போன்றே கூறப்பட்டது (ஆகவே இதனை அனைத்து உபாஸனங்களுக்கும் பொதுவாகவே கொள்ளவேண்டும்).

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. இவற்றை அனைத்து உபாஸனங்களிலும் கொள்ள இயலாது. "த்யுலோகம் என்னும் தேவலோகத்தில் பரவி நிற்கை (த்யுவ்யாப்தி)" என்னும் தன்மையைக் குறித்த த்யானமானது, சிறிய இடம் என்பது அல்லாத இடங்களைக் குறிக்கும்போது மட்டுமே கூறப்படுகிறது. இங்குள்ள வாக்கியத்தில் அனைத்து வல்லமையுடன் இருத்தல் (ஸம்ப்ருதி) என்பது, த்யுலோகம் என்னும் தேவலோகத்தில் பரவி நிற்கை (த்யுவ்யாப்தி) சேர்த்தே கூறப்பட்டது. ஆகவே இத்தகைய அனைத்து வல்லமையுடன் இருத்தல் (ஸம்ப்ருதி) தன்மையும், அந்த மற்றொரு தன்மை எந்த இடத்தில் பொருந்துகிறதோ, அந்த இடத்திற்கு மட்டுமே பொருந்தும்.

## அதிகரணம் – 9 – புருஷவித்யாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – சாந்தோக்யத்திலும், தைத்திரீயத்திலும் முழங்கப்பட்ட புருஷ வித்யைகளில் ரூபம் வேறுபடுவதால் அவை வெவ்வேறு வித்யைகள் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3-2-24 புருஷவித்யாயாம் அபி ச இதரேஷாம் அநாம்நாநாத்**

**பொருள்** – புருஷவித்யையிலும் வேறுபாடு உள்ளது, ஒன்றில் உள்ள குணங்கள் மற்றொன்றில் இல்லாமையால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந்தோக்யம் மற்றும் தைத்திரீயகம் ஆகியவற்றில் கூறப்பட்ட புருஷவித்யைகள் வெவ்வேறானவை ஆகும். ஒன்றில் (தைத்திரீயகம்), யாகம் இயற்றும் யஜமானன் மற்றும் அவனுடைய பத்னி ஆகிய இருவரும், யாகத்தின் அங்கம் மற்றும் மூன்று ஸவநம் (ஸவநம் என்பது ஒருநாள் சூரிய உதயம் முதல் மறுநாள் சூரிய உதயம் வரை உள்ள காலம் ஆகும்) எனக் கூறப்பட்டனர். மற்றொன்றில் (சாந்தோக்யம்),

இது போன்று கூறப்படவில்லை. பலன்களிலும் வேறுபாடு உள்ளது. தைத்திரீயகத்தில் உபாஸகனுடைய ஆத்மாவானது யஜமானனாகக் கூறப்பட்டது; மாலை, காலை, மதியம் ஆகிய மூன்றும் ஸவநங்களாகக் கூறப்பட்டன; ப்ரஹ்மத்தின் மஹிமையை அடைதலே பலன் ஆகும். இங்கு பலன் குறித்து நேரடியாகக் கூறப்படவில்லை; ஆகவே இங்குள்ள புருஷவித்யை என்பது ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாகக் கூறப்பட்டதாகிறது. சாந்தோக்யத்தில் அசிசிஷா எனப்படும், உண்பதில் உள்ள விருப்பமானது, "தீக்ஷை" என்று கூறப்படுகிறது; சாந்தோக்யத்தில் மனிதனின் வாழ்வை மூன்றாகப் பிரித்து, அதுவே ஸவநங்கள் என்று கூறப்படுகின்றன; சாந். (3-16-7) –வர்ஷசதம் ஜீவதி – பதினாறு நூறு வருடங்கள் இந்த உபாஸகன் வாழ்வான் – என்று புருஷ வித்யையின் பலன் கூறப்பட்டது.

## அதிகரணம் – 10 – வேதாத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – தைத்திரீய சீக்ஷாவல்லியில் உள்ள சில மந்த்ரங்கள் ப்ரஹ்ம வித்யைக்கு அங்கமல்ல என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-25 **வேதாத்யர்த்த பேதாத்**

**பொருள்** – வேறு பொருள் கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அதர்வண வேதத்தைச் சார்ந்தவர்கள் உபநிஷத்தின் தொடக்கத்தில் தை. (1-1-1) – சுக்ரம் ப்ரவித்ய ஹ்ருதயம் ப்ரவித்ய – விரோதியின் வீர்யத்தைப் பிளக்கவேண்டும், இதயத்தைப் பிளக்கவேண்டும் – என்று ஓதுகின்றனர். ஐதரேயர்கள் மஹாவ்ரத ப்ராஹ்மணத்தைக் கூறத் தொடங்குகின்றனர். தை. (1-1-1) - சம் நோ மித்ர: - மித்ரன் நமக்கு நன்மை அளிக்கட்டும் – என்றும், தை. (1-2-1) – ஸஹ நாவவது – அவன் நம்மைக் காக்கட்டும் – என்றும் கூறுகிறார்கள். இவற்றில், தைத்திரீயகத்தில் உள்ள மந்த்ரங்களுக்கு சிறப்பான வலிமையும், பலனை அளிக்கவல்ல திறனும் உள்ளன. ஆகவே அவை வேத அத்யயனத்திற்கான அங்கங்கள் என்றே கொள்ளப்பட வேண்டும். ஆகவே இவை, அனைத்து வித்யைகளுக்கும் அங்கம் அல்ல என்றே ஆகிறது.

## அதிகரணம் – 11 – ஹாந்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – புண்ணிய மற்றும் பாப கர்மங்கள், மோக்ஷம் பெறுபவனை விட்டு விலகி, மற்றவர்களிடம் சேர்ந்து விடுகின்றன என்று அனைத்து வித்யைகளிலும் கொள்ளவேண்டும் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-26 **ஹாநௌ து உபாய ந சப்த சேஷத்வாத் குசாச்சந்தஸ் ஸ்துத்யுபகாநவத் தத் உக்தம்**

**பொருள்** – உபாஸகனை விட்டு புண்ணியபாப கர்மங்கள் நீங்குகின்றன என்னும் உபநிஷத் வாக்யத்தை மட்டுமோ, மற்றவர்களிடம் சேர்கின்றன என்று கூறும் உபநிஷத் வாக்யத்தை மட்டுமோ படிக்கும் இடத்தில், மற்றதையும் சேர்க்கவேண்டும். உபாயந வாக்யம் என்பது குசா, சந்தஸ், ஸ்துதி, உபகாநம் போன்று இங்கும் கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரஹ்மத்தை அடைகின்ற வித்வான், தனது புண்ணிய பாபங்களை விடுவதாகவும், இதனை த்யானம் செய்யவேண்டும் என்றும் ஒரு சாகையில் கூறப்பட்டுள்ளது. அவ்விதம் விடப்பட்ட புண்ணிய பாபங்கள் சென்று சேரும் இடங்கள் குறித்து மட்டும் மற்றொரு சாகையில் கூறப்பட்டுள்ளது. விடப்பட்ட புண்ணிய கர்மங்கள் முக்தி பெற்றவனுடைய நண்பர்களிடமும், பாபங்கள் அனைத்தும் அவனுடைய விரோதிகளிடமும் சேர்கின்றன. வேறு ஒரு சாகையில், இவற்றின் விடுதல் மற்றும் இவை சென்று சேர்தல் ஆகிய இரண்டுமே கூறப்பட்டுள்ளன. இவை அனைத்துமே சிந்திப்பதற்காக (த்யானம்) கூறப்பட்டது. கைவிடுதல் என்பது, கைவிடுதல் மற்றும் அவை வேறு இடம் சென்று புகுதல் ஆகிய இரண்டையுமே குறிப்பதாகும். “ஹாநி – விடுதல்” என்றால் “வெளியேறுதல்” என்றும், “உபாயநம் – சேர்தல்” என்றால் “புகுதல்” என்றும் பொருள். விடுதல் மற்றும் புகுதல் ஆகிய இரண்டில் ஒன்றை மட்டுமே கூறியிருந்தாலும், அங்கு இரண்டையுமே கூறியதாகவே கொள்ளவேண்டும்; அவை இரண்டில் ஏதேனும் ஒன்று என்று கொள்ளக்கூடாது. புகுதல் என்பதைக் குறித்து உரைக்கும் வாக்கியமானது, விடுதல் குறித்து உரைக்கும் வாக்கியத்தை முழுமை அடையச் செய்வதாகும்; காரணம், வித்வானால் கைவிடப்பட்ட புண்ணிய பாபங்கள் எங்கு சென்று சேர்கின்றன என அவை உரைப்பதால் ஆகும். கௌஷீதகீ உபநிஷத்தில், “குசா வாநஸ்பத்யா – மரத்தினால் ஆகிய ஸமித்து”, என்று உள்ளது (இங்கு கூறப்பட்டுள்ள ஸமித்துக்கள், எந்த மரத்தின் குச்சிகள்

என்று இந்த உபநிஷத்தில் கூறப்படவில்லை). ஆனால், சாட்யாயந சாகையில், “ஔதும்பர்ய: குசா: - அத்தி மரத்தின் ஸமித்து”, என்று இதற்கான பதில் உள்ளது (ஆக ஒரு சாகையின் வரிக்கு, மற்றொரு சாகையில் தொடர்ச்சி கூறப்பட்டுள்ளது). இதே போன்று, “தேவாஸுராணாம் சந்தோபி: - தேவர்களின் சந்தஸ், அஸுரர்களின் சந்தஸ் ஆகியவற்றால் கூறவேண்டும்”, என்று உள்ளது. இங்கு எந்த சந்தஸ்ஸை முதலில் படிக்கவேண்டும் என்பற்கு விடையாக மற்றொரு இடத்தில், “தேவச் சந்தாம்ஸி பூர்வம் – தேவ சந்தஸ்ஸை முதலில் கூறவேண்டும்”, என்று உணர்த்தப்பட்டது. ஒரு சாகையில், “ஹிரண்யேந ஷோடசிந: ஸ்தோத்ரம் உபாகரோதி - பொன்னை வைத்துக் கொண்டு ஷோடசீ ஸ்தோத்ரத்தைத் தொடங்கவேண்டும்”, என்று கூறப்பட்டது (ஆனால் அந்தச் சாகையில், அந்தச் செயலை எந்தக் காலத்தில் செய்யவேண்டும் என்று கூறவில்லை. இதனை) வேறு ஒரு சாகையில், தை. ஸம். (6-6-11) - ஸமயாவிஷிதே ஸூர்யே ஷோடசிந: ஸ்தோத்ரம்– சூரியனின் பாதி அஸ்தமன நேரத்தில், ஷோடசீ ஸ்தோத்ரத்தைக் கூறவேண்டும் – என்று உணர்த்தியது. இது போன்று ஒரு சாகையில், ருத்விஜ உபகாயந்தி - ருத்விக்குகள் உபகாநம் செய்யவேண்டும்” என்று கூறப்பட்டது. மற்றொரு சாகையில், தை. ஸம் (6-3-1) - ந அர்வர்யு: உபகாயேத் – அத்வர்யு உபகாநம் செய்யக்கூடாது – என்று கூறப்பட்டது. ஆகவே, (புண்ணிய பாபங்கள்) விடுதலைக் குறித்து உரைக்கும் வாக்கியங்கள், அவை சென்று சேர்வதைக் குறித்து உரைக்கும் வாக்கியங்களுக்கு துணையாக உள்ளன. ஒரு வாக்யத்திற்குப் பொதுவான பொருளை கூற இயலவில்லை என்றால், அதற்குப் பல மாற்றுப் பொருள்களைக் கூறலாம். ஆனால் ஒரு வரியானது மாற்றுப் பொருள்கள் இல்லாமல், ஒரு பொருளை நேரடியாகவே உணர்த்த இயலும் என்றால், அந்த வரிக்கு மாற்றுப் பொருளைப் படிக்கக்கூடாது; பூர்வமீமாம்ஸை (10-8-4) – அபி து வாக்ய சேஷ: ஸ்யாத் அந்யாய்யத்வாத் விகல்பஸ்ய – ஒரு குறிப்பிட்ட விஷயத்தை விதிக்கின்ற வரியும், அந்த விஷயத்தைக் குறித்துப் பலவிதமான கருத்துக்கள் கூறும் வரிகளும் ஒரே இடத்தில் கூறப்பட்டிருந்தால், விதி குறித்துக் கூறப்படும் வரியை மட்டுமே எடுத்துக் கொள்ளவேண்டும், அல்லாமல் “இதுவோ, அதுவோ” என்று உள்ள வேறுபடும் வரிகளை எடுத்துக் கொள்ளக்கூடாது – என்றது காண்க.

## அதிகரணம் – 12 - ஸாம்பராயதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - உபாஸகனின் கர்மம் முழுவதும் அவன் உடலை விட்டுக் கிளம்பும் காலத்தில் அழிந்து விடுகின்றன என்று நிரூபிக்கப்படுகிறது.

3-3-27 **ஸாம்பராயே தர்த்தவ்யாபாவாத் ததா ஹி அந்யே**

**பொருள் -** மோக்ஷம் அடையும் காலத்தில் அழிகின்றன; அதன் பின்னர் அனுபவிக்கப்பட வேண்டியது ஏதும் இல்லாமையால், இப்படியே கூறப்படுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (8-13-1) - அச்வ இவ ரோமாணி விதூய பாபம் … தூத்வா சரீரம் – குதிரை தனது முடியை உதிர்ப்பது போன்று, பாபங்களை விடுத்து, இந்த உடலைக் கைவிட்டு – என்பதற்கு ஏற்ப, “சரீரத்தைக் கைவிடும்போது புண்ணிய பாப பலன்களி விலகுகின்றன”, என ச்ருதி கூறுகிறது. வேறு ஒரு சாகையில், கௌஷீ. (1-4 ) – ஸ ஆகச்சதி விரஜாம் நதீம் தாம் மநஸாத்யேதி தத் ஸுக்ருத துஷ்க்ருதே தூநுதே - அதன் பின்னர் வ்ரஜாநதிக்கு வந்து சேர்கிறான், தனது மனதால் தாண்டுகிறான், அந்த இடத்தில் தனது புண்ணிய பாபங்களைத் துறக்கிறான் – என்று கூறப்பட்டது. இரண்டிலும் வெவ்வேறு விதமாகக் கூறப்பட்டபோதிலும், சரீரம் விடும்போது மட்டுமே புண்ணிய பாபங்களை விடுவதாகச் சிந்திக்கவேண்டும். சரீரத்தை விட்ட பின்னர், ப்ரஹ்மத்தை அடையவேண்டியது அல்லாமல், அனுபவிக்கவேண்டிய போகங்கள் வேறு ஏதும் இல்லை. வேறு ஒரு சாகையிலும், சாந். (6-14-2) - தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யேத ஸம்பத்ஸ்யே - கர்மங்கள் கழியும்வரை மட்டுமே உபாஸகனுக்குக் காலதாமதம் ஆகிறது, அதன் பின்னர் உடனே ப்ரஹ்மத்தை அடைந்து விடுகிறான் – என்று, சரீரத்தை விட்டவுடன் ப்ரஹ்மத்தை அடைவதாகக் கூறப்பட்டது.

3-3-28 **சந்தத உபய அவிரோதாத்**

**பொருள் -** முரண்பாடு ஏற்படாமல் இருக்க சரியானபடி வரிசை கொள்ளவேண்டும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – “சரீரத்தை விடும்போது புண்ணிய பாபங்களை விடுகிறான்” என்றும், “சரீரத்தை விட்ட பின்னர் ப்ரஹ்மத்தை அடைகிறான்” என்றும் இரண்டுவிதமான ச்ருதி வாக்கியங்கள் உள்ளன. இந்த ச்ருதி வாக்கியங்களுக்குள் விரோதம் ஏற்படக்கூடாது. ஆகவே, கௌஷீ. (1-4 ) – ஸுக்ருத துஷ்க்ருதே தூநுதே - தனது புண்ணிய பாபங்களைத் துறக்கிறான் – என்னும் வாக்கியத்தைச் சரியாகப் பொருத்தவேண்டும். அந்த வரியில் உள்ள “தத் ஸுக்ருத துஷ்க்ருதே தூநுதே - தனது

புண்ணிய பாபங்களை உதறுகிறான்” என்ற பகுதியை, கௌஷீ. (1-4) - ஏதம் தேவயாநம் பந்தாநமாபத்ய – இந்த தேவயாநத்தை அடைந்து - என்ற பதங்களுக்கு முன்பாக வைத்துப் படிக்க வேண்டும் (அதாவது, “புண்ணிய பாபங்களைக் கைவிட்டு, தேவயாந மார்க்கத்தை அடைந்து, அக்னிலோகம் வருகிறான்” என்று படிக்கவேண்டும்). இதற்கு பூர்வபக்ஷி கேள்வி எழுப்புகிறார் (அடுத்த ஸூத்ரம் காண்க).

**3-3-29 கதே: அர்த்தத்வம் உபயதா அந்யதா ஹி விரோத:**

**பொருள்** – இரண்டுவிதமாகக் கொண்டால் மட்டுமே அர்ச்சிராதி மார்க்கம் என்பது பொருந்துகிறது. இப்படிக் கொள்ளவில்லை என்றால் விரோதமாகிவிடும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** (கடந்த ஸூத்ரத்தின் அடிப்படையில் பூர்வபக்ஷி வாதம் செய்கிறார். இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) – தேவயான மார்க்கமாகச் செல்வது குறித்த வாக்கியமானது, உபாஸகனின் புண்ணிய பாபங்கள் இரண்டு வழிகளில் நீங்கினால் மட்டுமே பொருத்தமானதாக இருக்கும் (அதாவது புண்ணிய பாபங்களின் ஒரு பகுதியானது, உடலை விடும்போது நீங்குகின்றன என்றும், எஞ்சிய பகுதியானது அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்லும்போது கழிகின்றன என்றும் இரண்டு விதமாகக் கர்மங்கள் கழிந்தால் மட்டுமே, தேவயாந மார்க்கத்தைக் கூறிய கௌஷீதகீ உபநிஷத் வரிக்குப் பொருள் ஏற்படும்; இல்லையெனில் முரண்பாடே உண்டாகும் என்று கருத்து). இதனை விடுத்து, உடலை விடும்போதே புண்ணிய பாபங்களும் கழிந்து விடுகின்றன என்று கொண்டால், (அந்தக் கர்மங்களால் உண்டான ஸூக்ஷ்ம) சரீரமும் அழிந்துவிடும். உடல் இல்லாத ஆத்மாவானது எந்த வழியிலும் செல்ல இயலாது. இதன் விளைவாக, செல்லும் வழியைக் குறித்துக் கூறும் ச்ருதி வாக்கியத்திற்கு முரண்பாடு ஏற்படும். இதற்கான ஸித்தாந்தம் அடுத்த ஸூத்ரத்தில் உள்ளது.

3-3-30 **உபபந்ந: தல்லக்ஷணார்த்தோபலப்தே: லோகவத்**

**பொருள்** - உடல் தொடர்பு காணப்படுவதால் பொருத்தமே ஆகும். இப்படியாகவே உலகில் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) - உபாஸகன் தனது உடலைக் கைவிட்டுக் கிளம்பும்போதே, அனைத்துக் கர்மங்களும் அழிந்துவிடுகின்றன என்று கூறுவதே பொருத்தம் ஆகும். ஆனால் ப்ரஹ்ம உபாஸனை செய்தவர்கள், கர்மங்கள் அல்லாமலேயே, அந்தப் பாதையில் செல்லுதல் உண்டாகும். இதனை சாந். (7-25-2) - ஸ ஸ்வராட் பவதி தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி – அவன் கர்மங்களுக்கு வசப்படாமலும், தனது விருப்பப்படி அனைத்து லோகங்களிலும் சஞ்சரிப்பவனாகவும் உள்ளான் – என்பது போன்ற வாக்கியங்கள் கூறுகின்றன. இந்த உலகில், அரசனைப் புகழ்ந்தபடி உள்ளவர்களுக்கு, மற்றவர்கள் யாருக்கும் கிட்டாத அனைத்தும் கிட்டுவதை நாம் காணலாம்.

3-3-31 **யாவத் அதிகாரம் அவஸ்திதி: ஆதிகாரிணாம்**

**பொருள் -** அதிகாரப் பதவி முடியும்வரை உள்ளது. அதுவரை கர்மமும் பதவியும் உண்டு.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – வஸிஷ்டர் போன்றவர்கள் கூட தங்கள் சரீரம் விழுந்த பின்னரும் கர்ம பலன்களை அனுபவித்தபடியே உள்ளனர். இதன் காரணம், அவர்கள் உள்ள பதவிகளை அடையச் செய்த கர்மங்கள் அழியாததால் ஆகும். அவர்கள் இருக்கின்ற அதிகாரத்திற்குக் காரணமான கர்மங்கள் நீங்கும்வரை, அவர்கள் அவற்றை அனுபவித்தபடியே உள்ளனர். அவர்கள் அர்ச்சிராதி மார்க்கமாகச் செல்வதில்லை (அதாவது, அந்தக் கர்மங்கள் கழியும்வரை, அவர்களுக்கு சரீரம் விழுந்தவுடன் அர்ச்சிராதி கதி என்பது இல்லை). ஞானிகளுக்கும்கூட, பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்கள் (இவை ப்ராரப்த கர்மங்கள் எனப்படும்) அனைத்தும் அழியும்வரை, அந்தக் கர்மங்கள் தொடர்ந்தபடியே இருக்கும் எனக் கூறப்படுகிறது.

## அதிகரணம் – 13 - அநியமாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** அனைத்து வித்யைகளுக்கும் அர்ச்சிராதி மார்க்கம் பொதுவானது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-32 **அநியம: ஸர்வேஷாம் அவிரோத: சப்தாநுமாநாப்யாம்**

**பொருள்** – அர்ச்சிராதியாலேயே அடையப்படுகிறது. இதில் வேறுபாடு இல்லை. இவ்விதம் கொண்டால் மட்டுமே முரண்பாடு உண்டாகாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – உபகோஸல வித்யை போன்ற சில வித்யைகளில், ப்ரஹ்ம உபாஸகர்களுக்கு அர்ச்சிராதி மார்க்கம் கூறப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பிட்ட வித்யைகளை அறிந்தவர்களுக்கு மட்டுமே அர்ச்சிராதி மார்க்கமாக ப்ரஹ்ம ப்ராப்தி (ப்ரஹ்மத்தை அடைதல்) என்று கூறுவதற்கு எந்தவிதமான விதிகளும் இல்லை; அவர்கள் மட்டுமே அர்ச்சிராதி மார்க்கத்தை த்யானிக்கவேண்டும் என்பதும் இல்லை. மற்ற வித்யைகளை அறிந்த அனைத்து உபாஸகர்களும், அந்த மார்க்கம் வழியே செல்கின்றனர். இவ்விதம் கொண்டால் மட்டுமே ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளுக்கு இடையே விரோதம் ஏற்படாமல் இருக்கும். ச்ருதிகளில் பஞ்சாக்னி வித்யையில் ப்ரு. (6-2-15 ) – யே சாமீ அரண்யே ச்ரத்தாம் ஸத்யம் உபாஸதே தே அர்ச்சிஷம் அபி ஸம்பவந்தி - யார் தங்கள் ஆத்மாக்களை ப்ரஹ்மாத்மகம் என்று உபாஸனை செய்கின்றனரோ, எந்த உபாஸகர்கள் கானகத்தில் இருந்தபடி ச்ரத்தையுடன் ஸத்யம் எனப்படும் ப்ரஹ்மத்தை உபாஸிக்கின்றனரோ அவர்கள் அர்ச்சிராதி மார்க்கமாகச் செல்கின்றனர் – என்று கூறப்படுகிறது. ஸ்ம்ருதியில் கீதை. (8-24) - அக்நிர் ஜ்யோதிரஹ: சுக்ல: - அர்ச்சிஸ், அஹஸ், சுக்லபக்ஷம் – என்று கூறப்படுகிறது.

## அதிகரணம் -14 - அக்ஷரத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – தாழ்வுகளால் தீண்டப்படாமல் உள்ள ப்ரஹ்மத்தின் மேன்மை என்பது அனைத்து வித்யைகளிலும் ஓதப்படவேண்டும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-33 **அக்ஷரதியாம் து அவரோத: ஸாமாந்ய தத் பாவாப்யாம் ஔபஸதவத் தத் உக்தம்**

**பொருள்** - ப்ரஹ்மத்திற்குக் கூறப்படும் குணங்கள் குறித்த அறிவானது அனைத்து வித்யைகளிலும் உள்ளது. காரணம், அந்தக் குணங்கள் பொதுவானதாகவும், அவை ப்ரஹ்மத்தில் அடங்கி இருப்பதாலும் ஆகும். பூர்வமீமாம்ஸையில் உபஸத்து குறித்து இப்படியே கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரு. (3-8-8) - ஏதத் ஏவ தத் அக்ஷரம் - இந்த அக்ஷரம் என்பதே – என்றும், முண். (1-1-5) - அத பரா யயா தத் அக்ஷரம் – எந்த உயர்ந்த ஞானத்தால் அந்த அக்ஷரம் அடையப்படுகிறதோ – என்றும் தொடங்குகின்ற வாக்கியங்கள் முறையே ப்ரு. (3-8-8) - அஸ்தூலம் அநணு அஹ்ரஸ்வம் அதீர்க்கம் அலோஹிதம் - ஸ்தூலமாக உள்ளதைக் காட்டிலும் வேறுபட்டது; அணுவிலும் மாறுபட்டது; குட்டையாகவும் நெட்டையாகவும் உள்ளதைக் காட்டிலும் மாறுபட்டது; சிகப்பு போன்ற பல நிறங்களைக் காட்டிலும் மாறுபட்டது – என்றும், முண். (1-1-5) - யத் தத் அத்ரேச்யம் அக்ராஹ்யம் – ஞானேந்த்ரியங்களால் அடைய இயலாதது, கர்மேந்த்ரியங்களால் அறிய இயலாதது – என்றும் முடிக்கப்படுகிறது. அக்ஷரம் என்னும் பதத்தால் கூறப்பட்ட ப்ரஹ்மத்தின் தன்மைகளான “ஸ்தூலமாக இல்லாதது, காண இயலாதது” முதலான தன்மைகள், அனைத்து பரவித்யைகளிலும் (உயர்ந்த வித்யைகள்) படிக்கப்பட வேண்டும்; இதன் காரணம், இந்த அனைத்து குணங்களையும் கொண்டதான ப்ரஹ்மமானது ஒரே வஸ்து என்பதால் ஆகும். மேலும், இது போன்ற குணங்கள் இல்லையென்றால், ப்ரஹ்மத்தை “மற்ற வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டது” என்று த்யானிக்க இயலாது. ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் ப்ரஹ்மத்தை வேறுபடுத்திக் காண்பிக்கக்கூடியவை, “தாழ்வுகள் கலவாத ஆனந்தம்” முதலான குணங்களே ஆகும். முக்கியம் அல்லாதவை, முக்கியமானதை அண்டி நிற்பது இயல்பானதே ஆகும் (அதாவது ஒரு பொருளின் ஸ்வரூபத்தை அறிய உதவும் தன்மைகள், அந்தத் தன்மைகளைக் கொண்ட பொருளைப் பின்தொடர்ந்தபடியே உள்ளன). உதாரணமாக, உபஸத் என்னும் க்ரியையில், ஜமதக்நி முனிவரால் பின்பற்றப்பட்ட சதூராத்ரம் என்னும் கர்மாவில் கூறப்படும் மந்த்ரமானது (ஸாமவேதத்தின்படி) உரத்த குரலில் உச்சரிக்கப்படவேண்டும் என்றாலும், உபஸத் என்பது அடங்கியுள்ள யஜுர்வேதத்திற்கு ஏற்ப தாழ்ந்த குரலிலேயே உச்சரிக்கப்படுகிறது. இதனை ஜை. ஸூ. (3-3-9) - குணமுக்ய வ்யதிக்ரமே – துணைச் செயலுக்கும், முதன்மையான செயலுக்கும் விரோதம் உண்டானால் – என்ற ஸூத்ரம் கூறுகிறது. ஆனால் இந்தக் கருத்தின் அடிப்படையில், “அனைத்து வித்யைகளிலும் அனைத்து குணங்களையும் படிக்கவேண்டும்” என்று கூற இயலாது. இதனை அடுத்த ஸூத்ரம் நிரூபிக்கிறது.

3-3-34 **இயத் ஆமநநாத்**

**பொருள் -** அத்தனை குணங்களும்; காரணம், அறியப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – இங்கு “ஆமநநம்” என்பது “தனித்தன்மையுடன் கூடிய த்யானம், அதனையே எண்ணி இருத்தல்” என்பதாகும். எந்தக் குணங்கள் ப்ரஹ்மத்தை மற்ற வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டது என்று நிரூபித்துக் காண்பிக்குமோ, அவற்றை மட்டும், அனைத்து வித்யைகளிலும் படிக்கவேண்டும்.

## அதிகரணம் -15 - அந்தரத்வாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ப்ருஹத் உபநிஷத்தில் உள்ள இரண்டு வெவ்வேறு பகுதிகளில் ஓதப்படும் வித்யைகள் ஒன்றே என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-35 **அந்தரா பூதக்ராமவத் ஸ்வாத்மந: அந்யதா பேதாந் உபபத்தி: இதி சேத் ந உபதேசவத்**

**பொருள் -** அனைத்திற்கும் உள்ளே இருப்பவன் என்பது பஞ்சபூதங்களால் உண்டான சரீரத்தை நியமிக்கும் ஜீவனைக் குறித்தே கூறப்பட்டது. இவ்விதம் கொள்ளவில்லை என்றால், வேறுபாடுகள் இல்லை என்றாகிவிடும். எனவே வித்யைகள் வேறு என்றே கொள்ளவேண்டும் - இவ்விதம் இல்லை, அவை வெவ்வேறு அல்ல, உபதேசம் போன்றே ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – உஷஸ்தர் ப்ரு. (3-4-1) – ய ஆத்மா – அந்த ஆத்மா – என்றுள்ள ஒரு கேள்வி கேட்டார். அந்தக் கேள்வியானது, “பலவற்றையும் உடையவன், அவற்றின் உள்ளே இருப்பவன், ப்ரத்யகாத்மா எனப்படும் ஜீவாத்மா” என்பவனைக் குறித்தே உள்ளது. இவ்விதம் ஏற்கவில்லை என்றால், கஹோலர் கேட்ட கேள்விக்குப் பதிலாக, “ய: ப்ராணேன ப்ராணதி ஸ த ஆத்மா – ப்ராணனால் இருப்பவன் அந்த ஆத்மா” என்பதில் உள்ள “பசி தாகம் அற்றவன்” என்னும் பதில்களில் உள்ள வேறுபாட்டினை விளக்க இயலாது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. இரண்டு இடங்களிலும் கேட்கப்படும் கேள்வி, ப்ரு. (3-4-1) - ய ஆத்மா ஸர்வாந்தர – அனைவருக்கும் உள்ளே இருப்பவன் யாரோ – என்ற ஒரே கேள்வியே ஆகும். ஆக இரண்டு இடங்களிலும் பரமாத்மாவே உணர்த்தப்படுகிறான். அந்தக் கேள்விகளுக்கான பதில்களில் காணப்படும், "ஜீவாத்மாவை மூச்சுவிடச் செய்யும் திறன், பசி தாகம் அற்றவன்" என்பது போன்றதான தன்மைகள் பரமாத்மாவிற்கு மட்டுமே பொருந்தும். அனைவரையும் மூச்சுவிடும்படியாகப் பரமாத்மாவே செய்கிறான் என்பதை தை. (2-7) – கோ ஹ்யேவாந்யாத்க: ப்ராண்யாத் – ஆனந்தமயமான இந்த ஆகாசம் இல்லை என்றால், யார்தான் மூச்சு விட்டபடி வாழ இயலும் – என்னும் வாக்கியம் கூறுகிறது. ஸத்வித்யை போன்று ப்ரஹ்மத்தைக் குறித்தே மீண்டும் மீண்டும் வினாவிடைகள் உள்ளன. கேள்விகள் கேட்பது வெவ்வேறு நபர்களாக உள்ளபோதிலும், வித்யையில் பேதம் இல்லை என்று அடுத்து கூறுகிறார்.

3-3-36 **வ்யதிஹார: விசிம்ஷந்தி ஹி இதரவத்**

**பொருள் -** மற்ற வித்யைகள் போன்று கருத்துப் பரிமாற்றம் மட்டுமே, ஒரே தன்மையைக் கூறுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஆராயப்படும் விஷயமானது ஒன்றே ஆகும் எனத் தீர்மானித்த பின்னர், கேள்வி எழுப்பியவர்களுடைய பல சிந்தனைகளையும் ஒன்றாக்கிக் கொள்ளவேண்டும். "ப்ரஹ்மமானது பசி மற்றும் தாகம் அற்றது" என்பது போன்ற ஞானமானது (கஹோலருக்கு உள்ளது போன்றே, முதல் கேள்வியில்) உஷஸ்தருக்கும் உள்ளது என்றே கொள்ளவேண்டும். "அனைத்து உயிர்களின் ப்ராணச் செயல்களுக்கு ப்ரஹ்மமே காரணமாக உள்ளது", என்ற ஞானமானது (உஷஸ்தருக்கு உள்ளது போன்றே, அடுத்த கேள்வியில்) கஹோலருக்கும் உள்ளது என்று கொள்ளவேண்டும். இதன் காரணம், இங்கு பரமாத்மாவைக் குறித்து மட்டுமே கருத்துப் பரிமாற்றம் நிகழ்வதால் ஆகும். இதனைப் போன்றே ஸத்வித்யையிலும் காணலாம். ஸத்வித்யையில் வெவ்வேறு வினாவிடைகள் உள்ளபோதிலும், அவை ஒரே விஷயத்தை (ப்ரஹ்மத்தை) குறித்து உள்ளது என்று எப்படிக் கூறலாம்? இதற்கான விடையை அடுத்த ஸூத்ரத்தில் உரைக்கிறார்.

3-3-37 **ஸைவ ஹி ஸாத்யாதய:**

**பொருள் -** அதே பரதேவதை அல்லவோ ஓதப்பட்டது. அனைத்திலும் ஸத்யம் என்றே கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அனைத்து பகுதிகளிலும் கேட்கப்பட்ட கேள்விகளும், சாந். (6-3-2) – ஸேயம் தேவதைக்ஷத - அந்தப் பரதேவதை ஸங்கல்பம் செய்தது – என்பதில் கூறப்படும் ஒரே தேவதை குறித்தே ஆகும். இவற்றுக்கான பதில்களும் அதே போன்று சாந். (6-8-7) - தத் ஸத்யம் ஸ ஆத்மா - அதுவே ஸத்யம், அதுவே ஆத்மா – என்று கூறப்பட்டது.

**3-3-38 காமாதி இதரத்ர தத்ர ச ஆயதநாதிப்ய:**

**பொருள் -** ஸத்யகாமத்வம் முதலானவை பல இடங்களிலும் இருப்பிடமாக கொண்ட நிலையால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** சாந்தோக்ய உபநிஷத்தில் (8-1-1) - தஹர: அஸ்மிந் அந்தராகாச தஸ்மிந் யதந்த: தத் அந்வேஷ்டவ்யம் – இதயத்தில் புண்டரீகம் என்ற சிறிய த்வாரத்தில் தஹர என்னும் ஆகாசம் உள்ளது (ஆகாசம் என்றால் வெற்றிடம்). அதற்குள் இருக்கும் ப்ரஹ்மமே தேடப்படவேண்டும் – என்று கூறப்பட்டது. மேலும், சாந். (8-1-5) - ஏஷ ஆத்மா அபஹதபாப்மா - இந்த ஆத்மா பாபங்கள் அற்றவன் – என்று தொடங்கி, சாந். (8-1-5) - ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: - ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன் – என்று கூறப்பட்டது. மேலும் வாஜஸநேயகத்தில் ப்ரு. (4-4-22) - ஸ வா ஏஷ மஹாந் அஜ: ஆத்மா யோயம் விஜ்ஞாநமய ப்ராணேஷு ய: ஏஷ: அந்தர் ஹ்ருதய ஆகாச: தஸ்மிந் சேதே ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசாந: - இதயத்தில் பரந்துள்ள ஆகாசத்தில் சயனித்துள்ள பரமாத்மா அனைத்தையும் தன் வசப்படுத்தியவன் என்பதால், அனைத்தையும் நியமிப்பவன் - என்று உள்ளது. இந்த இரண்டிலும், “அவன் இதயத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டுள்ளான், ஸத்யஸங்கல்பன், அனைத்தையும் வசப்படுத்தியவன்” என்பது போன்றவை கூறப்பட்டன. இதன் மூலம், இந்த இரண்டிலுமே தஹரவித்யை கூறப்பட்டதை அறியலாம். ஆகவே, “பாபங்கள் அற்ற தன்மை” என்பது தொடக்கமாக, “ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன்” என்பது முடிய உள்ள அனைத்தும், இந்த இரண்டு பகுதிகளிலுமே படிக்கப்பட வேண்டும்.

**3-3-39 ஆதராத் அலோப:**

**பொருள் -** ஆதாரம் உள்ளதால் கைவிடப்படவேண்டியவை அல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** ப்ரு. (4-4-19) – ந இஹ நாநாஸ்தி கிஞ்சந - பலவாக உள்ள ஏதும் இங்கு இல்லை – என்றும், ப்ரு. (6-4-22) – ஸ ஏஷ ந இதி ந இதி ஆத்மா – இது அல்ல, இது அல்ல - என்றும் உள்ள வரிகளால், ப்ரஹ்மத்தின் வசித்வம் (அனைத்தையும் வசப்படுத்துதல்) முதலான குணங்கள் மறுக்கப்படவில்லை; காரணம், இவை வேறு எங்கும் அறியப்படாமல், ப்ரு. (4-4-22) - ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்ய ஈசாந: - இவனே அனைத்தையும் வசப்படுத்தி நியமிப்பவன் – என்னும் வரி மூலமாகவே அறியப்படுவதாக உள்ளன. ஆகவே இங்கு எதுவும் தள்ளப்படவில்லை. இவை அனைத்தும் ப்ரஹ்மத்தின் கார்யமாகவே உள்ளதால், இவற்றுக்கு ப்ரஹ்மத்துடன் ஐக்யம் உண்டு. ப்ரு. (4-4-19) – ந இஹ நாநாஸ்தி - பலவாக உள்ள ஏதும் இங்கு இல்லை – என்பதன் மூலம், "ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொள்ளாத எதுவும் இங்கு இல்லை" என்னும் மறுப்பே கூறப்பட்டது. ப்ரு. (6-4-22) – ந இதி ந இதி – இது அல்ல, இது அல்ல – என்பதன் மூலம், "ப்ரஹ்மமானது இந்த உலகியல் வஸ்து அல்ல", என்பதே கூறப்பட்டது.

3-3-40 **உபஸ்திதே அத: தத்வசநாத்**

**பொருள் -** ப்ரஹ்மத்தை அடைந்தவன் என்பதையே காரணமாகக் கொண்டு, பித்ருலோகம் செல்வதாகக் கூறுகையால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** "உபஸ்திதி:" என்றால் "ப்ரஹ்மத்தை அடைந்தவன்" என்று பொருள். "அத:" என்றால், "ப்ரஹ்மத்தை அடைந்ததன் காரணமாக" என்று பொருள். சாந். (8-12-3) – ஜக்ஷத் க்ரீடந் ரமமாண: - முக்தன் அங்கே திரிந்தபடியும், உண்டபடியும், விளையாடியபடியும் உள்ளான் – என்றுள்ள வாக்கியத்திற்கு ஏற்ப அவன் தனது பித்ருக்களை அடைந்து மகிழ்கிறான்; இது மோக்ஷ பலனே ஆகும்; இது ஸம்ஸாரத்துடன் ஸம்பந்தம் கொண்ட பலன் அல்ல. ஆகவே ப்ரஹ்மத்தின் குணங்களைக் குறித்துள்ள வித்யையும் பரவித்யையே ஆகிறது.

## அதிகரணம் - 17 - தந்நிர்த்தாரணாநியமாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - சாந்தோக்யத்தில் உள்ள உத்கீத உபாஸனங்கள், ப்ரஹ்ம வித்யைக்கு அங்கமாக உள்ள யாகங்களில் இருந்தாலும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-41 **தந்நிர்த்தாரண அநியம: தத் த்ருஷ்டே: ப்ருதக்க்ய அப்ரதிபந்த: பலம்**

**பொருள்** - உத்கீதத்தை அங்கமாகக் கொள்ளவேண்டும் என்ற விதி இல்லை; காரணம் உத்கீதையின் பலனாகத் தடையற்ற நிலை என்பது ஓதப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – கோதோஹநம் (ஒரு சில யாகங்களில், அந்த யாகத்தின் பலன் தவிர, பசுக்களையும் செல்வமாகப் பெறவேண்டும் என்று விரும்புபவர்கள் “கோதோஹநம்” என்னும் சிறப்பான பாத்திரத்தில் நீர் கொண்டு வரவேண்டும் என்று கருத்து. ஆனால், இவ்விதம் கொண்டு வருதல் என்பது, அந்தக் கூடுதலான பலனை விரும்பினால் மட்டுமே பொருந்தும் என்பதால், இது கட்டாயமானது அல்ல) என்பது போன்று, உத்கீத உபாஸனை என்பது யாகங்களில் கட்டாயமானது அல்ல; அவ்விதம் உத்கீத உபாஸனை செய்யாதவர்கள் கூட யாகங்களை இயற்றுகிறார்கள். இதனை சாந். (1-1-10) – தேந உபௌ குருதோ யச்சைதத் ஏவம் வேத யச்ச ந வேத – உத்கீத உபாஸனத்தை அறிந்து செய்பவன் மற்றும் அதனைச் செய்யாதவன் ஆகிய இருவரும், ப்ரணவம் மூலமாகவே யாகம் இயற்றுகின்றனர் – என்பதன் மூலம் அறியலாம். மேலும் சாந். (1-1-10) – யதேவ வித்யயா கரோதி ததேவ வீர்ய வத்தரம் – எந்த உத்கீத உபாஸனையுடன் யாகம் இயற்றுகிறானோ, அந்த உத்கீதம் மூலமாகவே யாகத்தை வீர்யம் மிகுந்ததாக ஆக்குகிறான் – என்னும் வரியானது நிகழ்காலத்தில் கூறப்பட்டாலும் கூட, உத்கீத உபாஸனை என்பது கூடுதலான வலிமை அளிப்பதால், அது யாகங்களின் அங்கமாகக் கொள்ளப்படுகிறது. வீர்யம் என்பது யாகத்தின் பலனானது, வேறு வலிமையான கர்மங்கள் காரணமாக எந்தவிதமான தடையும் இல்லாமல் வந்து சேர்வதற்கு உதவுவதாகும். ஆகவே யாகத்தால் பெறப்படும் பலனைக் காட்டிலும் கூடுதலான பலனை உத்கீத உபாஸனை அளிப்பதால், அது கட்டாயம் என்பது அல்ல.

## அதிகரணம் -18 – ப்ரதாநாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – அபஹத பாப்மத்வம் போன்ற பல குணங்களை உபாஸனை செய்யும்போது, தஹர ஆகாசம் எனப்படும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமும் உபாஸிக்கப்பட வேண்டும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-42 **ப்ரதாநவத் ஏவ தத் உக்தம்**

**பொருள்** - மீண்டும் கூறுவது போன்று கூறப்படவேண்டும்; இப்படியே உரைக்கப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – பரமாத்மாவானவன் "பாபங்கள் அற்ற தன்மை" முதலான குணங்கள் கொண்டவனாக த்யானிக்கப்படுவதாக தஹரவித்யையில் கூறப்படுகிறது. அத்தகைய பரமாத்மாவை அவ்விதம் ஒருமுறை உபாஸனை செய்த பின்னர் மீண்டும், "இந்தக் குணத்தைக் கொண்டவன்", என்று அவனுடைய ஒவ்வொரு குணமும் மீண்டும் தனித்தனியாக த்யானித்து உபாஸிக்கப்படுகிறான். இது ஏனென்றால், அந்தந்த குணங்களுடன் அவன் ஸம்பந்தம் கொள்ளும்போது வெவ்வேறானவன் என்று கொள்ளப்படுவதால் ஆகும். உதாரணமாக, தை. ஸம். (2-3-6) – இந்த்ராய ராஜ்ஞே – புரோடசம் என்ற அடையை இந்த்ரனுக்கு அளிக்கவேண்டும் – என்பதில், இந்த்ரன் ஒருவனாக உள்ளபோதிலும், ஒவ்வொரு தன்மைகளுடன் கூறப்படும் அவனுடைய ஸ்வரூபம் வெவ்வேறு என்பதால், வெவ்வேறானவன் என்று கொள்ளப்படுகிறான். இது போன்று வெவ்வேறு உபாஸனங்கள் இந்த்ரனைக் குறித்த ஆவ்ருத்தியில் கூறப்பட வேண்டும். இதனை ஜைமிநி ஸம்ஹிதை (14-2-15) - நாநா வா தேவதா ப்ருதக்த்வாத் - வெவ்வேறாக ஸ்வரூபம் உள்ளதால் தேவதைகள் வெவ்வேறே ஆகும் - என்றது.

## அதிகரணம் -19 - லிங்கபூயஸ்த்வாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - நாராயணாநுவாகம் என்பது ப்ரஹ்ம வித்யைகளின் மூலம் உபாஸிக்கப்படும் பரம்பொருள் எந்த தேவதை என்பதை உணர்த்துவதற்காகவே உள்ளது என்று நிரூபிக்கப்பட்ட உள்ளது.

**3-3-43 லிங்கபூயஸ்த்வாத் தத் ஹி பலீய: தத் அபி**

**பொருள் -** அடையாளங்கள் என்று விளங்கும் வரிகள் வலிமையாக உள்ளன; இது முன்பும் கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – மஹா. நா. (13-1) – ஸஹஸ்ரசீர்ஷம் தேவம் – யார் ஆயிரம் தலைகளுடன் உள்ளானோ, அனைத்திற்கும் தெய்வமாக உள்ளானோ – என்னும் வாக்கியத்தில் உள்ள "நாராயண" என்னும் பதம் மூலம் இங்கு கூறப்படும் தஹர வித்யையில் உபாஸிக்கக்கூடிய வஸ்து மட்டுமே கூறப்படவில்லை; மாறாக, இங்கு (நாராயணாநுவாகத்தில்) கூறப்படும் உபாஸனைப் பொருளானது, அனைத்து பரவித்யைகளிலும் கொள்ளத்தக்கது என்பதை உணர்த்தும் வகையில், பல அடையாள வரிகள் உள்ளன. அந்த வித்யைகளில் அக்ஷரம், சிவன், சம்பு, பரப்ரஹ்மம் போன்ற பதங்களால் உபாஸனைப் பொருளானது கூறப்பட்டு, அவை அனைத்தும் நாராயணனே ஆவான் என்று உறுதியாகக் கூறப்பட்டது. ஒரு ப்ரகரணத்தால் (பகுதியால்) உணர்த்தப்படும் பொருளைக் காட்டிலும் வாக்கியத்தின் மூலம் அறியப்படும் பொருளே, ஒரு விஷயத்தை உறுதியாக்குகிறது. இந்தக் கருத்து ஜை. ஸூ. (3-3-14) – ச்ருதி லிங்க – ச்ருதி, அடையாளம் – என்றுள்ள ஸூத்ரத்தில் கூறப்பட்டது.

## அதிகரணம் – 20 - பூர்வவிகல்பாதிகரணம்

**குறிப்பு** – இந்த அதிகரணத்தில் உள்ள ஸூத்ரங்களைப் புரிந்து கொள்ள சில முக்கியமான விஷயங்களை முதலில் அறியவேண்டும். க்ரது என்பது பல தேவதைகளுக்கு, பல அவிர்பாகங்களை அளிப்பதாகும். இது யாகம் என்பதன் வேறொரு பெயர் என்றும் கூறலாம். ப்ருஹத் ஆரண்யகத்தில் உள்ள அக்னிரஹஸ்யம் என்னும் பகுதியில், ஒரு க்ரது குறித்துக் கூறப்படுகிறது. இதில், அவிர்பாகங்களை ஏற்கும் அக்னியானது, ஒருவிதமான செங்கல்களைக் கொண்டு பறவை வடிவில் அமைக்கப்பட்ட மேடையில் வைக்கப்படுகிறது. இது, "க்ரியாமய அக்னி" எனப்படுகிறது; அதாவது செங்கல் கொண்டு அமைக்கப்பட்ட மேடையில் உள்ள அக்னி ஆகும். இந்த க்ரதுவானது பன்னிரண்டு தினங்கள் செய்யப்படுவதால், இது "த்வாதசாஹ க்ரது" எனப்படுகிறது. ஒவ்வொரு நாளிலும் ஸோமலதை என்னும் கொடியை அரைத்து, அதிலிருந்து சாறு எடுத்தல்

போன்றவை நிகழ்ந்தபடி இருக்கும். இதன் பதினோராவது நாளில், மனதில் ஸோமரஸம் செய்வதாக எண்ணப்பட்டு, அதனை அளிப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, முதல் பத்து தினங்களில் உள்ள க்ரதுவைப் போன்ற வேறு ஒரு த்யானமும் கூறப்படுகிறது. இந்த க்ரதுவில், அனைத்து கருவிகளும் கூறப்பட்டுள்ளபோதிலும், இவை அனைத்தும் காணக்கூடிய பொருள்களாக அல்லாமல், மனதளவில் எண்ணப்படுபவையாகவே உள்ளதாகும் (அதாவது ஸோமலதையை எடுத்தல், அரைத்தல் போன்றவற்றை எண்ணிப் பார்த்தல்). எண்ணத்தால் உண்டாக்கப்படும் இந்த க்ரதுவில், அவிர்பாகங்களை ஏற்கும் அக்னிகளாக மனம், வாக்கு, ப்ராணன், கண், காது, இந்த்ரியங்கள் மற்றும் வயிறு ஆகியவை கூறப்படுகின்றன. இவற்றில் செயல்பாடுகள், உண்மையான க்ரது என்றே கொள்ளப்படுகின்றன. உதாரணமாக மனதின் செயல்பாடு என்பது அக்னியாக உருவகப்படுத்தப்படுகிறது. ஒரு மனிதனின் ஆயுள் 100 வருடங்கள் என்று கொள்ளப்பட்டு, 36000 நாள்கள் என்றாகின்றன. ஆகவே, ஒரு நாளைக்கு மனதின் செயல்பாடு ஒரு அக்னி என்று கொள்ளப்பட்டு, மனிதனின் வாழ்நாளில் 36000 அக்னிகள் உண்டாவதாகக் கருத்து. இந்த அக்னியானது “மனச்சித் அக்னி” எனப்படுகிறது.

**ஆராயப்படும் விஷயம்** – “மனச்சித் அக்னி” போன்ற பலவும், க்ரியாமயமான யாகத்திற்கு (கற்களை அடுக்கி, உண்மையான அக்னி உண்டாக்கிச் செய்யப்படும் யாகம்) அங்கம் அல்ல, அவை வித்யாமயமான யாகத்திற்கே (அதாவது எண்ணத்தின் மூலமாக அக்னி எழுப்பிச் செய்யப்படும் யாகம்) அங்கமாக உள்ளன என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-44 **பூர்வவிகல்ப: ப்ரகரணாத் ஸ்யாத் க்ரியா மாநஸவத்**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரம் ஆகும்) கர்மரூபமாக உள்ள யாகத்தின் அங்கமே ஆகிறது; அதனைக் குறித்த ப்ரகணம் (பகுதி) என்பதால்; முந்தையதோடு விகல்பம் (வேறுபாடு) உள்ளது, மனம் போன்று.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஸத. (10-5-3) - மனச்சிதோ வாக்சித: ப்ராணாசித: - மனம் கொண்டும், வாக்கு கொண்டும், ப்ராணன் கொண்டும் – என்ற வாக்கியத்தில் அக்னியானது உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஸத. (10-5-3-1) – அஸத் வா இதம் அக்ர ஆஸீத் – இல்லை என்பதே முதலில் இருந்தது – என்பதன் மூலம், மனம் முதலானவை

“இல்லை” என்று கூறப்படுவதால், இங்கு கற்கள் மீது வைக்கப்பட்ட அக்னியே (அதாவது க்ரியாமயமான அக்னி) கூறப்பட்டது என்றாகிறது. இங்கு கூறப்படும் அக்னியானது கற்கள் மீது வைக்கப்பட்ட அக்னியா என்னும் சந்தேகம் எழுகிறது. த்வாதசாஹ யஜ்ஞத்தின் பத்தாவது நாளில் லோமரஸம் பருகுதல் முதலான செயல்கள் மனதால் கற்பிக்கப்பட்ட பாத்திரத்திலேயே செய்யப்படும் (அதாவது மனதால் கற்பனையாக உண்டாக்கப்பட்ட பாத்திரத்தில் உள்ள ஸோமரஸத்தை பருகுவதாகக் கற்பனை செய்யப்படும்). இதனைப் போன்றே, இங்கும் கொள்ளவேண்டும். இதில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. அதாவது, மனதால் வளர்க்கப்படும் அக்னிகள் என்றாலும், கற்களை அடுக்கி எழுப்பப்படும் அக்னிகள் போன்றவையே ஆகின்றன.

3-3-45 **அதிதேசாத் ச**

**பொருள் -** (இதுவும் பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரம் ஆகும்) மாற்றப்படுவதாலும் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் -** (இது கடந்த ஸூத்ரத்தின் தொடர்ச்சியே ஆகும்) – ஸத. (10-5-3-11) – தேஷாமேகைக ஏவ தாவந் யாவாநஸௌ பூர்வ: - முன்னர் கூறப்பட்ட (உண்மையான அக்னி) அக்னி போன்றே இவை ஒவ்வொன்றும் – என்று கூறியது. இதன் மூலம், கற்கள் மேல் வைக்கப்பட்ட அக்னிக்கு எந்தவிதமான செயல்பாடுகள் உள்ளனவோ, அவை அனைத்தும், மனம் மூலம் ஏற்படும் அக்னிக்கும் மாற்றிக் கூறப்பட்டன. ஆகவே கற்கள் மீது வைக்கப்படும் அக்னி, யாகத்தின் அங்கமாக எவ்விதம் உள்ளதோ அது போன்று, மனதால் உருவாக்கப்பட்ட அக்னியும் யாகத்தின் அங்கமாகவே உள்ளது.

3-3-46 **வித்யா ஏவ து நிர்த்தாரணாத் தர்சநாத் ச**

**பொருள் -** அவை வித்யா ரூபமானவையே ஆகும். இப்படியே ச்ருதிகள் கூறுவதைக் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** (கடந்த இரு ஸூத்ரங்களில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) - மனத்தால் உருவாக்கப்பட்ட அக்னி போன்றவை வித்யாரூபமான யாகத்திற்கு அங்கமாக உள்ளதால், வித்யாரூபமானவையே ஆகும். ஸத. (10-5-3-12) - தே ஹைதே

வித்யாசித ஏவ - மனம் போன்றவற்றால் உருவாக்கப்பட்ட அக்னியானது, வித்யாரூபமான யாகத்திற்கே அங்கமாக உள்ளது - என்று கூறுவதால், இவை வித்யாமயமானவை என்றே உறுதியாகிறது. மேலும் இங்கு வித்யாரூபமான யாகம் குறித்துக் கூறப்பட்டுள்ளதாலும் இவ்விதமே கொள்ளவேண்டும். மேலும், ஸத. (10-5-3-3) - மநஸைஷு க்ரஹா அக்ருஹ்யந்த - யாக பாத்திரங்கள் அனைத்தும் மனதால் ஆனவை,மனதால் எடுக்கப்படுகின்றன – என்று மனதாலேயே யாகம் இயற்றப்படுவதும் கூறப்படுகிறது.

3-3-47 **ச்ருத்யாதி பலீயஸ்த்வாத் ச ந பாத:**

**பொருள் -** ச்ருதி, லிங்கம், வாக்யம் ஆகியவை வலிமையானவை என்பதால் தடை இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** இங்குள்ள ப்ரகரணத்தில் (இந்தப் பகுதியில்), இது போன்று யாகத்தை விதிக்கும் எந்த ஒரு விதிவாக்யமும் இல்லை என்று கூறி மறுக்க இயலாது. காரணம், ஸத. (10-5-3-12) - தே ஹைதே வித்யாசித் ஏவ | வித்யயா ஹைவைத ஏவம் விதாச்ரவிதா பவந்தி – இவை அனைத்தும் வித்யாரூபம் | வித்யையால் உருவாக்கப்பட்டது, இப்படி அறிபவன் யாரோ – என்று தெளிவாகவே கூறப்பட்டுள்ளது.

**3-3-48 அநுபந்தாதிப்ய: ப்ரஜ்ஞாந்தர ப்ருதக்த்வவத் த்ருஷ்டச்ச தத் உக்தம்**

**பொருள் -** பல அநுபந்தங்கள் (யாகத்தின் அங்கங்களாக உள்ள ஸ்தோத்ரம் போன்றவை) மூலம், வித்யாமயமான யாகத்திற்கும் கர்மரூபமான யாகத்திற்கும் வேறுபாடு அறியப்படுகிறது. மற்ற வித்யைகள் இதே போன்றே வேறுபட்டதாக அறியப்படுகின்றன. இதனைக் காணவும் செய்யலாம். இது முன்னரே கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – மனம் போன்றவற்றால் உண்டாக்கப்படும் அக்னிகள் வித்யாமயமான யாகத்திற்கு அங்கங்கள் என்பதை பல அநுபந்தங்கள் (யாகத்தின் அங்கங்களாக உள்ள ஸ்தோத்ரம் போன்றவை) மூலம் அறியலாம்; உதாரணமாக ஸத. (10-5-3-3) – மநஸைஷு க்ரஹா அக்ருஹ்யந்த - இந்த அக்னியைப் பொறுத்தவரை மனதால் பாத்திரங்கள் எடுக்கப்பட்டு – என்று கூறப்பட்டது. மேலும், ஸத. (10-5-3-12) -

தே ஹைதே வித்யாசித் ஏவ – இவை அனைத்தும் வித்யாரூபம் – என்பது போன்ற ச்ருதிகளால், இந்த யாகங்கள் மனதால் செய்யப்பட்டவை என்றாகிறது. இங்கு வித்யாமயமான யாகமே விதிக்கப்பட்டது. தஹரவித்யை போன்றவற்றில் உள்ள கர்மரூபமான யாகத்தைக் காட்டிலும் இது வேறானதே ஆகும். சாந். (1-1-10) – யதேவ வித்யயா கரோதி – யார் ஒருவன் வித்யையுடன் செய்கிறானோ – என்ற அநுவாதம் மூலம், வித்யாரூபமான யாகங்கள் விதிக்கப்பட்டன என்றாகிறது. இந்த விஷயமானது ஜை. ஸூ. (3-5-21) - வசநாநி த்வபூர்வத்வாத் – அந்த வரிகள் விதிகளே ஆகும், காரணம் அவை புதிதான ஒன்றை அறிவிப்பதால் - என்று கூறப்பட்டது.

**குறிப்பு** (இது வேதாந்தஸாரத்தின் பகுதி அல்ல. விளக்குவதற்காகத் தரப்பட்டது) – முன்பு (ப்ர. ஸூ. 3-3-43), மனச்சித் போன்ற அக்னிகள் கற்கள் கொண்டு இயற்றப்படும் யாகத்தில் வளர்க்கப்படும் அக்னிகள் போன்றதே ஆகும்; ஆகவே மனச்சித் முதலான அக்னிகள் க்ரியாமயமான யாகத்தின் அங்கங்களே என்று கூறினோம் அல்லவா என்று சிலர் கேட்கலாம். இதற்கு அடுத்த ஸூத்ரம் பதில் தருகிறது.

3-3-49 **ந ஸாமாந்யாத் அபி உபலப்தே: ம்ருத்யுவத் ந ஹி லோகாபத்தி:**

**பொருள்** - அப்படி அல்ல, ஏதோ ஒரு சில காரணங்களால் இருக்கலாம்; ம்ருத்யு புருஷனுக்கு ம்ருத்யுலோகம் அடைதல் இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - (கடந்த ஸூத்ரத்தின் இறுதியில் உள்ள ஆக்ஷேபத்திற்கு உரியது) – ஸத. (10-5-3-4) – தேஷாம் ஏகைக ஏவ தாவாந் யாவாந் அஸௌ - இவற்றில், முன்னர் கூறப்பட்டது போன்றே, பின்பு உள்ளதற்கும் – என்று உரைத்தது. அதாவது, கர்மரூபமான யாகத்தில் கற்கள் மீது அக்னியை வளர்த்துச் செய்யும் யாகத்தில் எத்தகைய பலன் உள்ளதோ, அதே போன்று, மனம் மூலம் இயற்றப்படும் அக்னிக்கு, வித்யாரூபமான யாகத்தில் உள்ளது என்று கருத்து. ஆகவே, வித்யாரூபமாக உள்ள யாகங்கள், கர்மரூபமாக உள்ள யாகங்கள் போன்றவையே ஆகும் என்று கூற முடியாது. ஒரு சில விஷயங்களில் ஒற்றுமை இருந்தாலும், இது போன்று ஒன்றாகவே கொள்வதை சில இடங்களில் காணலாம். உதாரணமாக, ஸத. (10-5-2-23) - ஸ ஏஷ ஏவ ம்ருத்யு: ய ஏஷ ஏதஸ்மிந் மண்டலே புருஷ: - இந்த சூர்யமண்டலத்தில் உள்ள புருஷனே ம்ருத்யு புருஷன் ஆவான் - என்றது. இது போன்ற வரிகளில், அழிப்பவன் (ஸம்ஹர்த்தா) போன்ற சில

ஒற்றுமைகள் காரணமாகவே, சூர்யமண்டலத்தில் உள்ள புருஷனே யமன் என்று கூறப்பட்டான் அல்லாமல், யமலோகத்தில் உள்ளவன் என்று கருத்தல்ல.

3-3-50 **பரேண ச சப்தஸ்ய தாத்வித்யம் பூயஸ்த்வாத் து அநுபந்த:**

**பொருள் -** அடுத்து உள்ள ப்ராஹ்மணத்தாலும், சப்தத்திற்கு வித்யாமயமே கூறப்பட்டது; தன்மைகள் அதிகமாக உள்ளதால் இங்கு கூறப்பட்டன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ஸதபத ப்ராஹ்மணத்தில் உள்ள அடுத்த ப்ராஹ்மணத்திலும், மனச்சித் போன்ற அக்னிகள் அதே தன்மையைக் கொண்டதாகவே கூறப்பட்டுள்ளன; அதாவது, அவை வித்யாமயம் என்றே கூறப்பட்டன. இந்த வரிகள், ஸத. (10-5-4-1) – அயம் வாவ லோக ஏஷ: அக்நிச்சிதஸ் தஸ்ய ஆப ஏவ - இந்த உலகமே அக்னியின் மேடையாகும்; கடலில் உள்ள நீரே கற்களாக உள்ளன – என்று தொடங்கி உள்ளவை ஆகும். இங்கு, கர்மத்தைக் காட்டிலும் வேறு பலனைக் கொண்ட வித்யையே விதிக்கப்பட்டது. ஆகவே ஸதபத ப்ராஹ்மணம் கூறுகின்ற அக்னிரஹஸ்ய பகுதியில் மனச்சித் போன்ற அக்னிகளுக்கும் படிக்கப்பட வேண்டிய தன்மைகள் குறித்து, இங்கு அதிகமாக உள்ளதால், இங்கேயே மனச்சித் போன்றவையும் படிக்கப்படுகின்றன.

## அதிகரணம் - 21 - சரீரேபாவாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஸாதன தசையில், அனைத்து வித்யைகளிலும், தன்னைப் பாபங்கள் அற்றவன் முதலான ஸ்வரூபம் உள்ளதாகவே ஜீவன் உபாஸித்துக் கொள்ளவேண்டும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-51 **ஏக ஆத்மந: சரீரே பாவாத்**

**பொருள்** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரம் ஆகும்) – சரீரத்தில் இருப்பு உள்ளதால், சிலர் இப்படிக் கொள்கின்றனர்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - உபாஸகனாகிய ஜீவன், இந்தச் சரீரத்தில் உள்ளவன் ஆவான்; சரீரத்தில் உள்ளதால் அறிபவனாகவும், அனுபவிப்பவனாகவும் உள்ளான்.

இதனால்தான் பரமாத்மாவை உபாஸிக்கும்போது, “அவன் அனைத்து ஆத்மாக்களின் ஆத்மாவாக உள்ளான்” என்று உபாஸித்தல் வேண்டும் எனக் கூறுகிறார்கள்.

**3-3-52 வ்யதிரேகஸ் தத்பாவ பாவித்வாத் ந து உபலப்திவத்**

**பொருள் -** வேறுபாடு அனுஸந்திக்கப்படவேண்டும்; அந்த ஸ்வரூபத்தை அடையப்போகிறவன் என்பதால்; ஞானம் போன்று.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) ஜீவாத்மா தனது ஆத்மாவாகப் பரமாத்மாவை த்யானித்தபடி உபாஸிக்கவேண்டும் என்று கூறுவது, ஜீவாத்மா கர்மம் செய்தபடி உள்ள நிலையில் பொருந்தாது. ஆனால் அவ்விதம் உபாஸிக்கும்போது, ஸம்ஸார நிலையிலிருந்து விடுதலை பெற்றவுடன் மட்டுமே வெளிப்படுவதான “பாபங்கள் அற்ற தன்மை” போன்றவற்றை அவன் உணரவேண்டும். இவ்விதம் தொடர்ந்து எண்ணியபடி உபாஸித்தால் மட்டுமே ஒரு காலகட்டத்தில் அவனுடைய இயல்பான தன்மைகள் அனைத்தும் வெளிப்படத் தொடங்கும் (அதாவது எந்த ஒரு நிலையை அல்லது ஸ்வரூபத்தை ஜீவன் அடைவானோ, அந்த ஸ்வரூபத்தையே உபாஸிக்கவேண்டும்). ப்ரஹ்மத்தை அடைதல் (ப்ரஹ்ம ஞானத்தை அடைதல் அல்லது ப்ரஹ்மத்தை எப்போதும் எண்ணியபடி இருத்தல்) என்பது, ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை உள்ளது உள்ளபடி அறிந்து த்யானித்தல் என்பதால் ஆகும். இது ஜீவாத்மாவிற்கும் பொருந்தும். இதனை சாந்தோக்ய உபநிஷத் (3-14-1) - யதா க்ரது அஸ்மிந் லோகே புருஷோ – இந்த லோகத்தில் உள்ளபோது உபாஸகன் எப்படி உபாஸிக்கிறானோ – என்றது காணலாம்.

## அதிகரணம் – 22 - அங்காவபத்தாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – சாந்தோக்யத்தின் உத்கீத உபாஸனங்கள் அனைத்து சாகைகளிலும் தொடர்புடையவை ஆகும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-53 **அங்காவபத்தா: து ந சாகாஸு ஹி ப்ரதிவேதம்**

**பொருள் -** கர்மங்களுக்கு அங்கமான உத்கீதங்கள் அந்தந்த சாகையைச் சார்ந்தவை மட்டும் அல்ல. அனைத்தையும் சேர்ந்தவை – காரணம் அனைத்துடன் தொடர்பு உள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** உத்கீதம் முதலான அங்கங்களுடன் கூடிய உபாஸனை என்பது ஒரு சில சாகைகளில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. ஆனால் அவற்றை அந்தந்த சாகைகளில் மட்டுமே கொள்ளவேண்டும் என்னும் விதிமுறை ஏதும் இல்லை. உத்கீதம் என்னும் பெயர் ஸம்பந்தம் காரணமாக அவை அனைத்து சாகைகளிலும் கொள்ளப்படலாம்.

**3-3-54 மந்த்ராதிவத் வா அவிரோத:**

**பொருள் -** மந்த்ரங்கள் போன்றே முரண்பாடு இல்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ஸூத்ரத்தில் உள்ள "வா" என்பது அழுத்தத்தை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு சாகையிலும் உள்ள மந்த்ரங்கள், யாகங்களுக்கான அங்கங்களாக, அனைத்து சாகைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் எந்தவிதமான முரண்பாடும் உண்டாவதில்லை. இதே போன்று உத்கீத விஷயத்திலும் முரண்பாடு ஏதும் இல்லை.

## அதிகரணம் - 23 - பூமஜ்யாயஸ்த்வாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** சாந்தோக்யத்தில் கூறப்பட்ட வைச்வாநர உபாஸனமே சரியானது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-55 **பூம்ந: க்ரதுவத் ஜ்யாயஸ்த்வம் ததா ஹி தர்சயதி**

**பொருள் -** முழுமையான உபாஸனமே உயர்ந்தது; இப்படியே ச்ருதியும் கூறுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – வைச்வாநர வித்யையில் வைச்வாநர ஆத்மாவாகிய பரமாத்மாவிற்கு மூன்று லோகங்களே சரீரம் என்றும், ஸ்வர்கலோகம் தொடங்கி பூமி முடிய உள்ள அனைத்தும் அவனுடைய தலை தொடங்கி பாதம் வரை உள்ள உடல் உறுப்புக்கள் ஆகும் என்றும் உபாஸிப்பவனுக்கு, சாந். (5-18-1) – யஸ்த்வேதம் ஏவம் ப்ராதேச மாத்ரம் அபிவிமாநம் ஆத்மாநம் வைச்வாநரம் உபாஸதே ஸ ஸர்வேஷு லோகேஷு – எல்லையற்றவனாக இருந்தபோதிலும், ஆகாசம் போன்றவற்றால் வரையறுக்கப்பட்டுக் கூறப்பட்ட வைச்வாநரனாகிய பரமாத்மாவை உபாஸிப்பவன், அனைத்து உலகங்களின் உணவை (இன்பத்தை) உட்கொள்கிறான் – என்பதில் கூறப்படுவதற்கு ஏற்ப ப்ரஹ்ம அனுபவமே பலனாகக் கிட்டுகிறது. இங்கு தலை முதலான அனைத்து உறுப்புக்களையும் சேர்த்து உபாஸித்தால் மட்டுமே இந்த உபநிஷத் வாக்கியம் ப்ரமாணமாகிறது; இவ்விதம் செய்தால் மட்டுமே ப்ரஹ்ம அனுபவம் பலனாகக் கிட்டுகிறது. இவ்விதம் கொள்ளாமல் தனித்தனியாக உறுப்புகளை உபாஸனம் செய்யும்போது, அளவுடன் கூடிய அனுபவமே கிட்டுகிறது. ஆனால் தனித்தனியாக உறுப்புக்களுடைய உபாஸனம் கூறப்பட்டு, அதற்கான பயன்கள் உரைக்கப்பட்டதன் கருத்து என்ன என்று கேட்கலாம்; யாகத்தின் ஒரு இடத்தில் முழுமையான விஷயம் கூறப்பட்டு, மற்றொரு இடத்தில் அதன் தனியான ஒரு பகுதி கூறப்படுவதைக் காணலாம்; உதாரணமாக தை. ஸம். (2-2-5) – வைச்வாநரம் த்வாதச கபாலம் நிர்வபேத் புத்ரே ஜாதே – பிள்ளைக்குழந்தை பிறந்தால் வைச்வாநரனுக்கு பன்னிரண்டு கபாலயாகம் செய்யவேண்டும் – என்று விதிக்கப்பட்டதன் பகுதிகளே, தை. ஸம். (2-2-5) - யத் அஷ்டா கபாலோ பவதி - எட்டு கபாலங்களில் எது அளிக்கப்படுகிறதோ – என்று தொடங்கும் வரியிலும் மீண்டும் கூறப்படுகிறது. அனைத்து அவயவங்களுடன் கூடிய தொகுத்த ப்ரஹ்ம உபாஸனத்தின் மேன்மையே ச்ருதியில் கூறப்படுகிறது. தனித்தனியான அவயவ உபாஸனை குறித்து சாந். (5-18-1) – திவமேவ பகவோ ராஜந் – அரசனே! நான் அவனை ஸ்வர்கமாக உபாஸிக்கிறேன் – என்று கூறியது; ஆனாலும் இவ்விதமான அவயவ உபாஸனத்தை சாந். (5-12-2) - மூர்த்தா தே வ்யபதிஷ்யத்யந்மாம் நாகம் இஷ்ய: இதி – என்னிடம் நீ வராவிட்டால் உனது தலை வெடித்திருக்கும் – என்று நிந்திக்கிறது.

## அதிகரணம் – 24 - சப்தாதிபேதாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஸத்வித்யை, தஹரவித்யை போன்ற ப்ரஹ்மவித்யைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையே என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-56 **நாநா சப்தாதிபேதாத்**

**பொருள் -** விதி வாக்யமும் ரூபமும் வேறுபட்டுள்ளதால், வித்யைகள் வேறுபட்டவையே ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஸத்வித்யை, பூமவித்யை போன்ற பலவிதமான வித்யைகளிலும் ப்ரஹ்மம் மட்டுமே உபாஸிக்கப்படுகிறது; அவற்றால் பெறக்கூடிய பயனும் ப்ரஹ்மம் மட்டுமே ஆகும். இவ்விதம் உள்ளபோதிலும் அனைத்தும் ஒரே வித்யை என்று கொள்ளக்கூடாது. ஒவ்வொரு வித்யையிலும் உபாஸிக்கப்படும் வகைகளில் உள்ள வேறுபாடுகள்,அங்குள்ள வெவ்வேறு பதங்களில் காணப்படுவதால் ஆகும். இந்தக் கருத்தானது பூர்வகாண்டத்திலேயே தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், வேதாந்த வாக்கியங்கள் ஞானத்தை விதிப்பதில்லை என்று கூறுபவர்களைக் கண்டிப்பதற்காக இங்கு மீண்டும் எடுக்கப்பட்டது.

## அதிகரணம் - 25 – விகல்பாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ப்ரஹ்ம வித்யைகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றினாலே பலன் கிட்டிவிடும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-3-57 **விகல்போ அவிசிஷ்ட பலத்வாத்**

**பொருள் -** ஒவ்வொன்று மட்டுமே பின்பற்றத்தக்கது; பலன் வேறுபடாத காரணத்தால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ஒவ்வொன்றை மட்டுமே அனுஷ்டித்தால் போதுமானது, பல வித்யைகளை சேர்க்க வேண்டியதில்லை. பரவித்யைகளில் வேறுபாடு இல்லை. எல்லையற்ற ஆனந்தம் முதலான தன்மைகளைக் கொண்ட ப்ரஹ்ம அனுபவமே, எந்தவிதமான வேறுபாடும் இன்றி ஒரே போன்று, அனைத்து வித்யைகளின் பலனாகவும் கூறப்பட்டுள்ளதால் ஆகும்.

3-3-58 **காம்யா: து யதாகாமம் ஸமுச்சீயேரந்ந வா பூர்வ ஹேது** அபாவாத்

**பொருள் -** காம்ய பலன்கள் அளிக்கவல்ல வித்யைகளானவை, அவரவர் விருப்பப்படி சேர்த்தோ அல்லது தனித்தனியாகவோ அனுஷ்டிக்கப்படலாம்; அவற்றின் பலன் ப்ரஹ்மவித்யை பலன் போன்று அளவற்றதாக இல்லாததால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ப்ரஹ்மத்தைத் தவிர்த்து உள்ள மற்ற பயன்கள் அனைத்தும் அல்பமானவையே ஆகும். அதிக பலன்களில் விருப்பம் உள்ளதன் காரணமாக அவை ஒன்றாகச் சேர்க்கப்படுகின்றன. ஆகவே அவற்றை அளிக்கவல்ல உபாஸனங்களைச் சேர்த்தோ அல்லது தனியாகவோ கொள்ளலாம்.

## அதிகரணம் – 26 - யதாச்ரயபாவ அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** முன்பு நிரூபிக்கப்பட்ட "உத்கீத உபாஸனமானது அனைத்து யாகங்களிலும், எப்போதும் அங்கம் அல்ல" என்பதைச் சிலர் மறுக்க, அதற்கு சமாதானம் கூறப்பட உள்ளது.

3-3-59 **அங்கேஷு யதாச்ரயபாவ:**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டும் உள்ள ஸூத்ரமாகும்) யாகத்தின் ஆச்ரயமான உத்கீதம் போன்று, உத்கீத உபாஸனங்கள் யாகத்தின் அங்கமே ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - சாந். (1-1-1) - உத்கீதம் உபாஸீத – உத்கீதத்தை "ஓம்" என்றே உபாஸிப்பானாக – என்பதில் கூறப்படும் உத்கீதத்தை ஒரு விதியாகவே, எப்போதும் அங்கமாகக் கைக்கொள்ளவேண்டும். காரணம், கோதோஹநம் போன்று (பசுவை விரும்பினால் கோதோஹன பாத்திரத்தினால் நீர் எடுத்து வரவேண்டும்) பலவிதமான பலன்கள் இங்கு கூறப்படவில்லை. ஆகவே இவற்றை அவசியம் யாகங்களின் அங்கமாகக் கைக்கொள்ளவேண்டும் என்று கூறுவதில் முரண்பாடு இல்லை.

**3-3-60 சிஷ்டேச்ச**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டும் உள்ள ஸூத்ரமாகும்) விதிக்கப்பட்டதாலும் அங்கமே ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - சாந். (1-1-1) - உத்கீதம் உபாஸீத – உத்கீதத்தை "ஓம்" என்றே உபாஸிப்பானாக – என்று விதிக்கப்பட்டுள்ளது. மேலும், சாந். (1-1-10) – யதேவ வித்யயா கரோதி – உத்கீத உபாஸனத்துடன் யாகம் செய்தால் – என்பதில் விதிக்கப்படவில்லை. ஆகவே உத்கீத உபாஸனத்தை யாகத்தின் அங்கமாகக் கொள்வதில் விரோதமில்லை.

**3-3- 61 ஸாமஹாராத்**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டும் உள்ள ஸூத்ரமாகும்) பிழைகளைத் திருத்தலாம் (ஸமாதாநம் செய்து கொள்ளலாம்) என்று கூறுவதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (1-5-5) - உத்கீதம் அநுஸமாஹரதி – உத்கீதத்தில் உள்ள தோஷங்கள் [உத்காதாவின் மூலம் ஓதப்படும் உத்கீதத்தின் பகுதியான ப்ரணவமும், ஹோதாவால் கூறப்படும் ரிக்குகளின் இறுதியாக உள்ள ப்ரணவமும் ஒன்றே என உத்காதாவும் ஹோதாவும் எண்ணவில்லை என்றால் தோஷம் ஏற்படும்] அனைத்தையும் ஹோத்ரி தள்ளுகிறான் – என்று உள்ளது. அதாவது உத்கீதத்தை உபாஸனமாகப் பாடவில்லை என்றால், அந்தத் தோஷத்தை வேறு ஒருவர் நீக்கவேண்டும். ஆகவே உத்கீத உபாஸனம் அவசியம் என்றே ஆகிறது.

**3-3-62 குணஸாதாரண்ய ச்ருதே: ச**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டும் உள்ள ஸூத்ரமாகும்) ப்ரணவத்தின் குணமான உபாஸனத்திற்கு, பொதுவாக இருக்கின்ற தன்மை கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (1-1-9) - ஓம் இதி ஆச்ராவயதி, ஓம் இதி சம்ஸதி, ஓம் இதி உத்காயதி – "ஓம்" என்பதன் மூலமே அத்வர்யு கட்டளை இடுகிறார், ஹோத்ரி

உச்சாடனம் செய்கிறார், உத்காதா கானம் செய்கிறார் - என்று கூறுகிறது. ஆக உபாஸனத்துடன் கூடிய ப்ரணவத்திற்கு, அனைத்து வேதங்களிலும் (அதாவது வேதங்களில் உள்ள கர்மங்களில்) பொதுவாக உள்ள தன்மை ஓதப்படுகிறது எனலாம். ஆகவே உத்கீத உபாஸனையை யாகங்களின் அங்கமாகக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று கூறலாகாது.

3-3-63 **ந வா தத்ஸஹபாவாச்ருதே:**

**பொருள் -** உத்கீதத்திற்கு யாகத்தின் அங்கம் ஓதப்படாத காரணத்தினால், உத்கீத உபாஸனம் அங்கம் என்பது சரியல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** (ஸூத்ரம் 3-3-59 முதல் 3-3-62 வரை உள்ள பூர்வபக்ஷங்களுக்கு உரியது) – அப்படி அல்ல. உத்கீத உபாஸனையானது யாகங்களின் அங்கம் எனக் கூறும் வாக்கியங்கள் ஏதும் இல்லை. ஸூத்ரத்தில் உள்ள "ஸஹபாவ" என்பது "அங்கமாக இருத்தல்" என்னும் பொருளைத் தருகிறது. சாந். (1-1-10) - யதேவ வித்யயா கரோதி ச்ரத்தயா உபநிஷதா ததேவ வீர்யவத்தரம் – ச்ரத்தையான உத்கீத உபாஸனத்துடன் யாகம் செய்தால், அதுவே தடையின்மை என்னும் வீர்ய மிகுதியைக் கொண்டதாகிறது - என்ற வரியில், யாகத்தின் பலனைக் காட்டிலும் தனித்த ஒரு பலன் உத்கீத உபாஸனத்திற்குக் கூறப்பட்டுள்ளது; ஆகவே அது யாகத்தின் அங்கமாக இருக்க முடியாது. சாந். (1-1-1) - உத்கீதம் உபாஸீத – உத்கீதத்தை "ஓம்" என்றே உபாஸிப்பானாக – என்பதன் மூலம் உத்கீத உபாஸனையைக் கைக்கொள்ளவேண்டும் என்பது மட்டுமே கூறப்பட்டது.

3-3-64 **தர்சநாத் ச**

**பொருள் -** உத்கீத உபாஸனம் அங்கம் அல்ல என்று ச்ருதிகள் கூறுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (4-17-10) - ஏவம்வித் ஹவை ப்ரஹ்மா யஜ்ஞம் யஜமாநம் ஸர்வோச்ச ரித்விஜோ அபி ரக்ஷதி - கூறப்பட்ட தோஷங்களின் பரிகாரத்தை அறித்த ப்ரம்மா (நான்முகன் அல்லன். யாகத்தை நடத்தும் நால்வரில் ஒருவர்) யாகத்தையும், எஜமானனையும், ரித்விக்குகளையும் காக்கிறான் - என்ற வரி காண்க.

இங்கு உத்காதா முதலானவர்களின் ஞானம் மூலம் யாகம் காக்கப்படவில்லை என்பதும், அவர்களின் ஞானம் யாகத்தின் அங்கம் அல்ல என்பதும் தேறுகிறது. ஆகவே உத்கீத உபாஸனம் யாகங்களின் அங்கமாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

## பாதம் – 3 - அங்கபாதம்

**ஆராயப்படும் விஷயம்** - ஒரு சிலர் கூறுவது போன்று கர்மங்கள் அனைத்தும் கைவிடத்தக்கது என்று வாதம் தள்ளப்பட்டு, அவை அனைத்தும் கொள்ளத்தக்கதே என்று நிரூபிக்கப்பட உள்ளது. மேலும் ப்ரஹ்ம வித்யைக்கு அங்கமாக உள்ளவற்றைக் குறித்தும் கூறப்படுகிறது.

## அதிகரணம் – 1 - புருஷார்த்தாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - கர்மத்தை அங்கமாகக் கொண்டுள்ள ப்ரஹ்ம உபாஸனம் மூலம் மோக்ஷம் என்ற புருஷார்த்தம் கிட்டுவதாக நிரூபிக்கப்பட உள்ளது.

3-4-1 **புருஷார்த்த: அத: சப்தாத் இதி பாதராயண:**

**பொருள்** – (இது ஸித்தாந்தம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) "ப்ரஹ்ம வித்யைகள் மூலம் மோக்ஷ புருஷார்த்தம் ஏற்படுகிறது என வேதவரிகள் கூறுவதால்", என்று பாதராயணர் கருதுகிறார்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – வித்யைகள் மூலம் உயர்ந்த புருஷார்த்தம் கிட்டுவதாகப் பகவான் பாதராயணர் கருதுகிறார். தை. (2-1) – ப்ரஹ்மவிதாப்நோதி பரம் – ப்ரஹ்மத்தை அறிந்தவன் உயர்ந்ததை அடைகிறான் – என்றும், தை. (2-1-1) – யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந் | ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா – அவனை அறிந்தவன் இரகசியமான குகையை அடைந்து, தனது விருப்பங்களை ப்ரஹ்மத்துடன் சேர்ந்து நின்று அனுபவிக்கிறான் – என்றும் உள்ள வாக்கியங்கள் காண்க.

**குறிப்பு** - அடுத்து உள்ள ஆறு ஸூத்திரங்கள் (3-4-2 முதல் 3-4-7 வரை), மேலே உள்ள ஸித்தாந்தத்தை மறுப்பதான பூர்வபக்ஷங்கள் ஆகும். அதன் பிறகு உள்ள 13 ஸூத்ரங்கள் மூலம் (3-4-8 முதல் 3-4-20), இந்தப் பூர்வபக்ஷங்கள் அனைத்தும் தள்ளப்படுகின்றன.

**3-4-2 சேஷத்வத் புருஷார்த்தவாத: யதா அந்யேஷு இதி ஜைமிநி:**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) யாகத்தின் சேஷமாக மட்டுமே வித்யைகள் உள்ளதால் (அதாவது கர்மங்களுக்குப் பணி புரிவதற்காகவே வித்யைகள் உள்ளதால்), அவை பலன் அளிக்கின்றன என்று கூறுவது, வெறும் புகழ்ச்சிக்காக மட்டுமே ஆகும் (அர்த்தவாதம்). இவை யாகங்களில் பயன்படுத்தப்படும் மற்ற உபகரணங்கள் போன்றவையே ஆகும் என்று ஜைமிநி கூறுகிறார்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (6-8-7) – தத் த்வம் அஸி – நீயே அது ஆகிறாய் – என்பதில் உள்ள ஸாமாநாதிகரண்யம் மூலமாக, “அனைத்து கர்மங்களுடைய கர்த்தா என்னும் நிலையானது ப்ரஹ்மமே ஆகும்” என்று கூறப்படுகிறது. உபாஸனம் என்பது ஜீவாத்மாவிற்கு ஸம்ஸ்கார ரூபமாக, கர்மத்திற்கு அடங்கியதாகவே உள்ளது. எனவே உபாஸனத்தால் ஒருவன் புருஷார்த்தத்தை அடைவதாகக் கூறுதல் என்பது அர்த்தவாதமே (புகழ்வதற்காக கூறப்படுவது) ஆகும் என ஜைமிநி என்னும் ஆசார்யர் கருதுகிறார்.

**3-4-3 ஆசார தர்சநாத்**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்); ஆசாரம் (நடத்தை அல்லது ஒழுக்கம்) காணப்படுவதால் (வித்யைகள் கர்மங்களுக்கு அடங்கியவை).

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ப்ரஹ்மத்தை அறிந்தவனாகிய அச்வபதி கேகயன், சாந். (5-11-5) – யக்ஷ்யமாணோ ஹ வை பகவந்தோ அஹம் – உயர்ந்தவர்களே! நான் யாகம் செய்து கொண்டுள்ளேன் – என்றான். ஆகவே ப்ரஹ்மஞானிகள் அனைவரும் கர்மத்தையே முக்கியமாகக் கொண்டிருந்தனர் என்பதால், அந்த வித்யைகள் கர்மங்களின் அங்கங்களாக உள்ளன என்றாகிறது (எனவே வித்யைகள் மூலமாக உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷம் கிட்டாது).

**3-4-4 தத் ச்ருதே:**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) வேதவரிகளிலும் வித்யைகள் கர்மங்களின் அங்கம் என்பதைக் காணலாம்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - சாந். (1-1-10) - யதேவ வித்யயா கரோதி - வித்யையுடன் எந்தக் கர்மம் செய்யப்படுகிறதோ – என்பதன் மூலம், "வித்யைகள் கர்மத்தை இயற்ற உபயோகமாக உள்ளதால், அவை கர்மத்தின் அங்கமே என்றாகிறது" என்பதை அறியலாம். "எதனைச் செய்கிறானோ, அதனைக் குறித்து அறிந்தே செய்கிறான்" என்பதே இந்த ச்ருதி வாக்கியத்தின் பொருளாகும். அல்லது எந்த ஒரு கர்மத்தை தகுந்த ஞானத்துடன் செய்கிறானோ, அது வீர்யம் மிக்கதாக உள்ளது எனலாம்.

**3-4-5 ஸமந்வாரம்பணாத்**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) சேர்ந்து உள்ளதாகப் படிப்பதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ப்ரு. (4-4-2) - தம் வித்யா கர்மணீ ஸமந்வாரபேதே – மேல்லோகம் செல்லும் ஒருவனை வித்யையும் கர்மமும் பின் தொடர்ந்து செல்கின்றன – என்பதன் மூலம் வித்யையும் கர்மமும் ஒரு புருஷனிடம் சேர்ந்துள்ளன என்று அறியலாம். ஆகவே வித்யையானது கர்மத்தின் அங்கமே ஆகிறது.

**3-4-6 தத்வத: விதாநாத்**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) வித்யை உள்ளவனுக்கும் கர்மம் விதிக்கப்படுவதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (8-15-1) - ஆசார்யகுலாத் வேதம் அதீத்ய … அபி ஸமாவ்ருத்ய குடும்பே – ஆசார்யன் மூலமாக வேதத்தை அத்யயனம் செய்து … குடும்பத்தில் இருந்து – என்பதன் மூலம், அர்த்தஞானத்துடன் வேத அத்யயனம்

செய்தவனுக்கே கர்மங்கள் விதிக்கப்பட்டுள்ளன. வேத அத்யயனம் என்பது பொருளுடன் கற்றலே ஆகும்.

**3-4-7 நியமாத்**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) நியமம் உள்ளதாலும் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஆத்மஞானம் உள்ளவன், கர்மங்களைச் செய்தபடியே தனது வாழ்க்கையைக் கழிக்கவேண்டும் என்பதை ஈசா. (1-2) – குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத் சதம் வா – நூறாண்டு காலம் கர்மம் செய்தபடி வாழ்வதையே ஒருவன் விரும்பவேண்டும் – என்றது.

**3-4-8 அதிகோபதேசாத் து பாதராயணஸ்ய ஏவம் தத் தர்சநாத்**

**பொருள் -** மேலான பரமாத்மாவையே உபதேசம் செய்வதால், வித்யை மூலமே பலன் உண்டாகிறது என பாதராயணர் கருதுகிறார். இப்படியே காணப்படுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** (இந்த ஸூத்ரம் தொடங்கி, ப்ர. ஸூ. 3-4-20 முடிய உள்ள அனைத்து ஸூத்ரங்களும், ப்ர. ஸூ. 3-4-2 தொடங்கி ப்ர. ஸூ. 3-4-7 முடிய உள்ள ஸூத்ரங்களில் கூறப்பட்ட பூர்வபக்ஷங்களுக்கான ஸித்தாந்தமாகும்) – வித்யைகள் கர்மங்களின் அங்கம் அல்ல. "வித்யை மூலமே புருஷார்த்தம் ஸித்திக்கிறது" என்பதே பகவான் பாதராயணருடைய கருத்தாகும். ப்ரத்யகாத்மாவை (ஜீவாத்மா) காட்டிலும் வேறான ஒரு வஸ்துவைக் குறித்தே அறியவேண்டும் என்றே உபதேசம் உள்ளது. இது எப்படி? சாந். (6-2-3) - தத் ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி– ப்ரஹ்மம் ஸங்கல்பம் செய்தது, "நான் பலவாகிறேன்" என்றது – என்றும், ச்வே. (6-9) - ஸ காரணம் கரணாதிபாதிபோ - அவனே காரணம், இந்த்ரியங்களுக்கு அதிபதியான ஜீவனுக்கு அதிபதி – என்றும் உள்ள வாக்கியங்கள் மூலம் "அறியப்படவேண்டியவன் ஜீவாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவன்" என்று கூறப்படுகிறது.

**3-4-9 துல்யம் து தர்சனம்**

**பொருள் -** அங்கமாக இல்லாதது என்பதையும் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** (கர்மங்களைப் போன்றே) ஞானத்தின் முக்யத்வத்திற்கும் சமமான இடம் அளிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கௌஷீ. (3-2-6) - ருஷய: காவஷேயா: கிமர்த்தா வயமத்யேஷ்யாமஹே - காவஷேயர் போன்ற முனிவர்கள், “எதற்காக நாம் வேத அத்யயனம் செய்யவேண்டும்?” – என்பதன் மூலம், ப்ரஹ்மஞானிகள் கர்மங்களைத் துறந்ததையும் காணலாம். ஆனால், பலனை எதிர்பாராமல் செய்யப்படும் கர்மங்கள் அனைத்தும் ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாகவே உள்ளன. பலனை எதிர்பார்த்துச் செய்யப்படும் கர்மங்கள் மட்டுமே துறக்கப்படவேண்டும். ஆகவே இங்கு எந்தவிதமான முரண்பாடும் இல்லை.

**3-4-10 அஸாவத்ரிகீ**

**பொருள் –** யதேவ வித்யயா என்ற வரி அனைத்து வித்யைகளையும் பற்றி அல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** சாந். (1-1-10) - யதேவ வித்யயா கரோதி – வித்யையுடன் எந்தக் கர்மம் செய்யப்படுகிறதோ – என்பதன் மூலம் அனைத்து வித்யைகளும் கூறப்படவில்லை. இங்கு கூறப்பட்ட வித்யை என்பது மிகவும் ப்ரஸித்தமான உத்கீத வித்யையே ஆகும். அதாவது, “யதேவ வித்யயா கரோதி ... ததேவ வீர்யவத்தரம் பவதி – எந்தக் கர்மத்தை வித்யையுடன் இயற்றுகிறானோ ... அது வீர்யம் உள்ளதாகிறது” என்பதன் மூலம், “எந்த ஒரு கர்மமானது உத்கீத வித்யையுடன் செய்யப்படுகிறது, அந்தக் கர்மம் வீர்யம் உள்ளதாகிறது”, என்பதே கூறப்பட்டது.

**3-4-11 விபாக: சதவத்**

**பொருள் -** நூறு நாணயங்கள் போன்று பிரிவு காண இயலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ப்ரு. (4-4-2) - தம் வித்யாகர்மணீ ஸமந்வாரபேதே - பரமபதம் செல்பவனைத் தொடர்ந்து வித்யையும் கர்மமும் செல்கின்றன - என்று கூறியது.

இதன்படி வித்யைக்கும் கர்மத்திற்கும் வெவ்வேறு பலன்கள் உள்ளன என்றாகிறது. ஒருவன் மற்றவனிடம், "வயலையும் இரத்தினத்தையும் கொடுத்ததற்காக இரு நூறு நாணயங்கள் அளித்தேன்", என்று கூறுவதாக வைத்துக் கொள்வோம். இதன் மூலம் வயலுக்காக நூறு காசுகளும், இரத்தினத்திற்காக நூறு காசுகளும் அளிக்கப்பட்டன என்று அறியலாம் அல்லவோ? இது போன்றே இங்கும் கொள்ளவேண்டும்.

**3-4-12 அத்யயந மாத்ர வத:**

**பொருள் -** வேத அத்யயனம் உள்ளவனுக்கே கர்மம் விதிக்கப்பட்டதால், வித்யை கர்மத்தின் அங்கம் அல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (8-15-1) – வேதம் அதீத்ய – வேத அத்யயனம் செய்த பின்னர் – என்றுள்ள வாக்கியத்தால், வேத அத்யயனம் மட்டுமே ஒருவனுக்கு கர்மங்கள் விதிக்கப்பட்டன; ஆகவே வித்யைகள் கர்மங்களுடைய அங்கம் அல்ல. "வேத அத்யயனம் செய்தல்வேண்டும்" என்னும் விதியானது, அக்ஷரங்களை மட்டுமே அறிதல் என்பதுடன் முடிகிறது. அத்யயன விதி என்பதே, வேத வாக்கியங்களின் பொருள் என்ன என்று அறியும் ஆசையை ஏற்படுத்தும் என்று வைத்துக்கொண்டலும், வித்யை கர்மத்தின் அங்கமாகாது; காரணம், இப்படிப்பட்ட அர்த்தஞானம் என்பதைக் காட்டிலும் வித்யை வேறுபட்டது என்பதால் ஆகும். அத்தகைய வித்யையானது, மீண்டும் மீண்டும் செய்யக்கூடிய த்யானம் அல்லது மனன ரூபமானது ஆகும்.

3-4-13 **ந அவிசேஷாத்**

**பொருள் -** விசேஷ காரணம் இல்லாமையால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஈசா. (1-2) - குர்வந்நேவேஹ கர்மாணி - கர்மங்களை மட்டுமே இயற்றி – என்பதன் மூலம், "ப்ரஹ்மஞானி ஒருவன் தனது ஆயுள் முழுவதும் வித்யைக்கு அங்கமாக இல்லாத கர்மங்களை இயற்றி வரவேண்டும்" என்னும் கருத்து கூறப்படவில்லை; காரணம் இவ்விதம் உரைப்பதற்குச் சிறப்பான காரணம் ஏதும் இல்லை. இதனை ஈசா. (1-1) - ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம் – ஈசனால் இந்த உலகம்

வ்யாபிக்கப்பட்டுள்ளது – என்னும் பகுதியும் நிரூபிக்கிறது. ஆகவே வித்யைக்கு கர்மம் அங்கம் என்றாகிறது அல்லாமல், வித்யை கர்மத்திற்கு அங்கம் அல்ல.

### 3-4-14 ஸ்துதயே அநுமதிர் வா

**பொருள் -** வித்யையைப் பெரிதும் புகழும் பொருட்டே, எப்போதும் கர்மம் இயற்றப்படவேண்டியது என்பது அனுமதிக்கப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அல்லது, வித்யையை மேலும் பெருமையாகக் கூறுவதற்காக, வாழ்நாள் முழுவதும் கர்மம் இயற்றலாம் (இயற்றினாலும் அந்தக் கர்மங்களின் பலன் ஒட்டாது) என்ற அனுமதி அளிக்கப்பட்டதாகவே கொள்ளவேண்டும். வித்யையின் மேன்மை காரணமாக, எப்போதும் கர்மங்களை இயற்றியபடி இருந்தாலும், அதன் பலன்கள் வந்து சேராது என்று வித்யையின் மேன்மை கூறப்பட்டது. இதன் பிற்பகுதி – ஈசா. (1-1) - ந கர்ம லிப்யதே நரே - வித்யையுடன் கூடியவனிடம் கர்மங்கள் (பலன்கள்) ஒட்டுவதில்லை – என்றது காண்க.

### 3-4-15 காமகாரேண ச ஏகே

**பொருள் -** சில சாகையைக் சேர்ந்தவர்கள், தங்களின் விருப்பத்தின்படிச் செய்வர்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சில சாகையைக் சேர்ந்தவர்கள், ப்ரஹ்மவித்யை உள்ள ஒருவன் தனது விருப்பத்திற்கு ஏற்ப, க்ருஹஸ்தனுக்கு உரிய கர்மங்களைக் கைவிடலாம் என்பதை ப்ரு. (4-4-22) - கிம் ப்ரஜயா கரிஷ்யாம: - (பிள்ளைகள் மூலம் அடையப்படும் உலகமாக பரமாத்மாவே எங்களுக்கு உள்ளபோது, அத்தகைய) பிள்ளைகளைப் பெற்று நாங்கள் என்ன செய்யப்போகிறோம் – என்று கூறுகிறார்கள். எனவே, வித்யையே முக்கியமானது ஆகும்.

### 3-4-16 உபமர்த்தம் ச

**பொருள் -** கர்மங்கள் ப்ரஹ்மவித்யை மூலம் அழிக்கப்படுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** அனைத்து கர்மங்களும், வித்யை மூலம் அழிக்கப்படுவதை முண். (2-2-8) – க்ஷீயந்தே ச அஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே – மிகவும் உயர்ந்த பரமாத்மாவைக் கண்டவுடன் கர்மங்கள் நீங்குகின்றன - என்றது.

**3-4-17 ஊர்த்வரேதஸ்ஸு ச சப்தே ஹி**

**பொருள் -** ஸந்யாஸிகளுக்கும் கூறப்படுவதைக் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** வித்யை என்பது ஸந்யாஸிகளுக்கும் காணப்படுகிறது. ஆனால் அவர்களுக்கு அக்னிஹோத்திரம் போன்ற கர்மங்கள் காணப்படுவதில்லை. எனவே வித்யைகள் கர்மத்தின் அங்கம் அல்ல. ஸந்யாச ஆச்ரமம் குறித்து வேதமும் கூறுகிறது; சாந். (2-23-1) - த்ரயோ தர்மஸ்கந்தா: - தர்மத்தை மூன்று மார்க்கங்கள் நிலைநிறுத்துகின்றன (யஜ்ஞம், அத்யயனம், தானம் ஆகியவை கொண்ட க்ருஹஸ்தாச்ரமம்; தவம் கொண்ட ஸந்யாஸம்; ப்ரஹ்மசர்யம்) – என்று வேத சப்தம் கூறுகிறது.

**3-4-18 பராமர்சம் ஜைமிநி: அசோதநாத் ச அபவததி ஹி**

**பொருள் –** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) அநுவாதம் [அநுவாதம் – முன்பு கூறப்பட்டதே மீண்டும் கூறப்படுதல்] மட்டுமே உள்ளது, விதிக்கப்படவில்லை, மறுத்துக் கூறுகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம் –** சாந். (2-23-1) - த்ரயோ தர்மஸ்கந்தா - தர்மத்தை மூன்று மார்க்கங்கள் நிலைநிறுத்துகின்றன - என்ற வரி மூலமாக, முன்பு கூறப்பட்டதே கூறப்பட்டது என்றும், இது உபாஸனத்தின் மேன்மையைக் கூறுவதற்காக உள்ளது என்றும் ஜைமிநி கருதுகிறார். தை. ஸம். (1-5-2) – வீரஹா வா ஏஷ தேவாநாம் யோ அக்னிம் உத்வாஸயதே - யார் அக்னிதர்மத்தைக் கைவிடுகிறானோ அவன், வீரன் ஒருவனைக் கொன்ற பாவத்தை அடைகிறான் – என்று மற்ற ஆச்ரமங்கள் கண்டிக்கப்படுவதையே காணலாம் (ஆகவே ஸந்யாஸ ஆச்ரமம் என்ற நிலையே இல்லை என ஜைமிநி கருதுகிறார்).

**3-4-19 அநுஷ்டேயம் பாதராயண: ஸாம்ய ச்ருதே:**

**பொருள் -** அனைத்து ஆச்ரமங்களும் (வாழ்க்கை நிலைகள்) கடைப்பிடிக்கத்தக்கதே; அனைத்தும் கூறப்படுவதால், பாதராயணர் இப்படியே கருதுகிறார்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** க்ருஹஸ்தாச்ரமம் போன்றே மற்ற ஆச்ரமங்களும் பின்பற்றத்தக்கவையே ஆகும் என்று பகவான் பாதாராயணர் கருதுகிறார். ஏன்? சாந். (2-23-1) – த்ரயோ தர்மஸ்கந்தா: - தர்மத்தை மூன்று மார்க்கங்கள் நிலைநிறுத்துகின்றன – என்பதில் அனைத்து ஆச்ரமங்களும் சமமாகவே கூறப்பட்டது.

3-4-20 **விதி: வா தாரணவத்**

**பொருள் -** விதி வாக்கியமே ஆகும், எடுத்துக்கொள்வது போன்றே.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** திஷ்டாக்நி ஹோத்ரத்தில், "உபரி ஹி தேவேப்யோ தாரயதி – தேவர்களுக்காகச் செய்யப்படும்போது அவிர்பாகத்தை", என்று கூறப்பட்டது. இந்த வாக்கியமானது, தனியான ஒரு விதி வாக்கியமே ஆகும் என்றாகிறது. இதனைப் போன்றே இங்கும் கொள்ளவேண்டும் (அதாவது, "த்ரயோ தர்மஸ்கந்தா: - தர்மத்தை மூன்று மார்க்கங்கள் நிலைநிறுத்துகின்றன" என்பதையும் கொள்ளவேண்டும்).

## அதிகரணம் – 2 – ஸ்துதிமாத்ராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** சாந். (1-1-3) – ஸ ஏஷ ரஸாநாம் ரஸதம: - என்பதன் மூலம் உத்கீதம் புகழப்படுவதற்கு மட்டுமே இது போன்று கூறப்படுகிறது என்ற வாதம் தள்ளப்படுகிறது. இது விதி வாக்கியம் என்பது நிரூபிக்கப்படுகிறது.

**3-4-21 ஸ்துதி மாத்ரம் உபாதாநாத் இதி சேத் ந அபூர்வத்வாத்**

**பொருள் –** உத்கீதத்தை உயர்ந்த ரஸமாகக் கூறுவது புகழ்ச்சியே ஆகும் என்றால், அப்படி அல்ல; புதிய விஷயமாக உள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – உத்கீதத்தைக் குறித்து “மற்ற ரஸங்களை விட உயர்ந்தது” என்று வாக்கியமானது விதிவாக்கியம் அல்ல. அதாவது, “இயமேவ ஜுஹு: ஸ்வர்கோ லோக ஆஹவநீய – இந்தப் பூமியே கரண்டி, ஸ்வர்கலோகமே ஆஹவநீய அக்னி” என்று கூறும் வாக்கியம் போன்றதே ஆகும். உத்கீதம் என்பது கர்மத்தின் அங்கமாகும்; எனவே அதனை “மற்ற ரஸங்களைக் காட்டிலும் உயர்ந்தது” என்று கூறும் கருத்தானது புகழ்ச்சியே அல்லாமல், விதிமுறை அல்ல.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. “ஜுஹு – கரண்டி” என்பது குறித்த பகுதியின் அருகில் உத்கீதத்தைப் பற்றிய விதிமுறை ஏதும் இல்லை. இங்கு வேறு விதி வாக்கியம் ஏதும் காணப்படாத காரணத்தால், “அனைத்து ரஸங்களையும் விட உயர்ந்தது” என்று புதிய விஷயமாகக் கூறப்படுவதால், விதி என்றே எற்கலாம்.

**3-4-22 பாவசப்தாத் ச**

**பொருள்** - செயலைக் குறித்த சொல் உள்ளதாலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (1-1-1) - உத்கீதம் உபாஸீத – உத்கீதத்தை “ஓம்” என்றே உபாஸிப்பானாக – என்பதில் விதிமுறைக் குறிக்கும் ப்ரத்யயம் (விகுதி) உள்ளது.

## அதிகரணம் - 3 - பாரிப்லவாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – கௌஷீதகீ உபநிஷத் (3-10), சாந்தோக்ய உபநிஷத் (6-1-1) போன்றவற்றில் காணப்படும் சிறு கதைகள், அங்கு விதிக்கப்படும் வித்யைகளைப் புகழ்வதற்காகவே ஆகும் என்ற நிரூபிக்கப்பட உள்ளது.

**3-4-23 பாரிப்லவார்த்தா: இதி சேத் ந விசேஷிதத்வாத்**

**பொருள்** - கூறப்படும் சிறு கதைகள் அந்த நிகழ்வை விளக்குவதற்காக கூறப்பட்டவை என்று கூறுவது சரியல்ல, அவை குறிப்பிட்டு எடுக்கப்பட்டதைக் காண்க.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – வேதாந்தங்களில் வித்யைகளின் தொடக்கத்தில் ஒரு சில கதைகள் உள்ளன. உதாரணமாக கௌஷீ. (3-1) - ப்ரதர்த்தநோ ந வை - ப்ரதர்த்தனன் என்பவன் – என்பது போன்று உள்ளன. ஆச். ஸூ. (10-6) - ஆக்யாநாநி ஸம்சந்தி – அவர்கள் நிகழ்வைக் கூறுகின்றனர் - என்று கூறப்படுகிறது. ஆகவே இவை பாரிப்லவம் (கதை கூறுதல் அல்லது நிகழ்வைக் கூறுதல்) என்ற விதத்தில் கூறப்பட்டவையே ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. "மநு வைவஸ்வதோ - வைவஸ்வதனின் புத்திரனான மனு" என்று மனு முதலானோரின் கதைகள் சிறப்பித்துக் கூறப்பட்டது. ஆகவே அவை அந்தந்த வித்யைகளை விதிப்பதற்காகவே உள்ளன என்றாகிறது.

**3-3-24 ததா ச ஏகவாக்ய உபபந்தாத்**

**பொருள்** - விதி வாக்கியத்துடன் கூடிய ஒரே வாக்கியமாக உள்ளதாலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – கதைகளைக் கூறும் வாக்கியங்கள், விதி வாக்கியங்களுடன் தொடர்ந்து காணப்படும் ஒரே வாக்யமாகவே உள்ளன. உதாரணமாக, யஜுர் வேதத்தில் – ஸ: அரோதீத் – அவன் (அக்னி) அழுதான் – என்பது போன்ற வாக்கியங்கள், வித்யையைத் துதிப்பதாகவே உள்ளன.

## அதிகரணம் – 4 – அக்நீந்தநாத்யாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஸந்யாஸிகளுக்கு ப்ரஹ்ம உபாஸனம் செய்யும்போது அக்னிஹோத்ரம் போன்றவை உண்டா இல்லையா என்பது ஆராயப்பட்டு, அவை எதிர்பார்க்கப்படுவதில்லை என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3-4-25 அத ஏவ ச அக்நீந்தநாத்யநபேக்ஷா**

**பொருள்** – (இது ஸித்தாந்தம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ஸந்யாஸிகளுக்கும் வித்யைகளின் தொடர்பு கூறப்படுகிறது, அவர்களது வித்யைகள் அக்னிஹோத்ரம் ஆகியவற்றை எதிர்பாராமல் உள்ளன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ப்ரு. (4-4-22) - ஏதமேவ ப்ரவ்ராஜினோ லோகமிச்சந்த: ப்ரவ்ரஜந்தி – இந்தப் பரம்பொருளை அடைய விரும்பிய காரணத்தினால் மட்டுமே ஸந்யாஸிகள் அனைத்தையும் துறக்கின்றனர் – என்பது போன்ற வரிகளின் மூலம், ஸந்யாஸிகள் வித்யையுடன் கூடியுள்ளவர்கள் என்றாகிறது. இதே காரணத்தால், ஸந்யாஸிகளுக்குள்ள வித்யையானது, அக்ந்யாதாநத்தை (அக்னியைப் புனிதமான ஓர் இடத்தில் ஸ்தாபித்தல்) எதிர்பார்ப்பதில்லை என்றாகிறது.

## அதிகரணம் – 5 - ஸர்வாபேக்ஷாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – க்ருஹஸ்தாச்ரமத்தில் உள்ளவர்களுக்கு அந்த ஆச்ரமத்திற்கு உரிய யஜ்ஞம் போன்றவற்றை ப்ரஹ்ம உபாஸனம் எதிர்பார்க்கிறது.

3-4-26 **ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதி ச்ருதே: அச்வவத்**

**பொருள்** – "யஜ்ஞேந தாநேந" எனப்படும் வேத வாக்கியத்தில், குதிரைக்குக் கடிவாளம் எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறுவது போன்று, க்ருஹஸ்தர்களிடம் அக்னிஹோத்ரம் உள்ளிட்ட கர்மங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - அக்னிஹோத்ரம் முதலான கர்மங்களைக் கொண்ட க்ருஹஸ்தர்கள் விஷயத்தில், அனைத்துக் கர்மங்களையும் வித்யையானது எதிர்பார்க்கிறது. இதனை, ப்ரு. (4-4-22) - தமேவம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந – அந்த ப்ரஹ்மத்தை அறிவதில் ஆசை உள்ள ப்ராஹ்மணர்கள், தானம் செய்தல் முதலான யஜ்ஞங்களைச் செய்கிறார்கள் - என்பது போன்ற வரிகள் கூறுகின்றன. ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்ல உதவும் குதிரைக்கு, அந்தக் குதிரையில் அமர்ந்து செல்வதற்கு, அதில் இடப்படும் சேணம் மற்றும் கடிவாளம் போன்றவை உதவி செய்கின்றன; அவை அங்கு எதிர்பார்க்கப்படும் பொருள்களாக உள்ளது போன்றே இங்கும் கொள்ளவேண்டும். ஆகவே ஸந்யாஸிகளுக்கும் தங்களுடைய ஆச்ரமமானது கர்மத்தை எதிர்பார்க்கும்.

## அதிகரணம் – 6 - சமதமாத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – க்ருஹஸ்தாச்ரமத்தில் உள்ள ப்ரஹ்மஞானிகளுக்கும் சமம் (மனதைச் சமநிலையில் வைத்தல்), தமம் (புலன்களை மேயவிடாமல் இருத்தல்) போன்ற ஆத்ம குணங்கள் கைக்கொள்ளத்தக்கவையே ஆகும் என்று நிரூபிக்கப்பட்ட உள்ளது.

3-4-27 **சமதமாத்யுபேத: ஸ்யாத் ததாபி து தத்விதே: ததங்கதயா தேஷாம் அபி அவச்யாநுஷ்டே யத் வாத்**

**பொருள்** – இல்லறத்தில் உள்ளவன் யஜ்ஞம் போன்றவற்றைச் செய்ய வேண்டியவன் என்றாலும் சமம், தமம் போன்ற குணங்களுடன் கூடியவனாக இருத்தல் வேண்டும். அந்த குணங்கள் விதிக்கப்பட்டுள்ள காரணத்தினால், ப்ரஹ்மவித்யை கைகூடும் பொருட்டு, அதன் அங்கமாக அந்தக் குணங்களைக் கைக்கொள்வது அவசியமாகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - இல்லறத்தில் உள்ளவர்கள் கர்மங்களை புலன்களின் மூலம் இயற்றி வந்த போதிலும், ப்ரு. (4-4-23) - சாந்தோ தாந்த: - சமம், தமம் ஆகியவற்றுடன் – என்பதற்கு ஏற்ப இருத்தல் வேண்டும். சாந்தம் முதலான குணங்கள் இல்லையென்றால் ப்ரஹ்மவித்யை நிலைக்காது என்பதால் அவ்விதமே இருக்கவேண்டும்.

## அதிகரணம் - 7 - ஸர்வாந்நாநுமத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ப்ராணவித்யை கூடிய ஒருவனுக்கு, உயிர்போகும் நேரத்தில் மட்டுமே அனைத்துவிதமான உணவும் அனுமதிக்கப்படுகின்றன என்பது நிரூபிக்கப்பட்ட உள்ளது.

3-4-28 **ஸர்வ அந்ந அநுமதி: ச ப்ராணாத்யயே தத் தர்சநாத்**

**பொருள்** - ப்ராணவித்யை உள்ளவனுக்கு, அவன் உயிர் பிரிவதாக இருந்தால் மட்டுமே எந்தவிதமான உணவும் அனுமதிக்கப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ராணவித்யை நிஷ்டர்கள் குறித்துக் கூறும்போது, சாந். (5-2-1) - ந ஹ வா ஏவம் விதி கிஞ்சித் அநந்நம் பவதி – அனைத்து உயிர்களின் உணவுகளையும் ப்ராணனின் உணவுகள் என்று அறிபவர்களுக்கு, உணவு என்று ஏற்கப்படாதது எதுவும் இல்லை – என்று கூறப்பட்டது. இதன் மூலம் அனைத்துவிதமான உணவுகளையும், அனைத்து காலங்களிலும் உட்கொள்ளலாம் என்று கூறப்படவில்லை. ப்ரஹ்மவித்யை நிஷ்டர்களுக்குக் கூட, வேறு உணவு உண்ணவில்லை என்றால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது என்றால் மட்டுமே அனைத்து உணவுகளும் அனுமதிக்கப்படுகின்றன.

**3-4-29 அபாதாத் ச**

**பொருள் -** தள்ளப்படாத காரணத்தினால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (7-26-2) - ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி: - உணவு தூய்மை அடைந்தால் மட்டுமே மனம் தூய்மை அடையும் - என்ற வரியின் மூலம் தூய்மையான உணவை உட்கொள்வதற்கான விதி கூறப்பட்டுள்ளது. இதனைத் தள்ள இயலாது என்பதால், உயிருக்கு ஆபத்து வரும் நேரத்தில் மட்டுமே அனைத்துவிதமான உணவுகளும் அனுமதிக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும்.

**3-4-30 அபி ஸ்மர்யதே**

**பொருள் -** இதனை ஸ்ம்ருதியிலும் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஆபத்து காலத்தில் மட்டுமே அனைத்துவிதமான உணவுகளையும் உண்ணலாம் என்பதை - ப்ராண ஸம்சயம் ஆபந்ந: ய: அந்நமத்தி யதஸ்தத: - உயிர்போகும் ஆபத்து காலங்களில், எங்கிருந்து கொண்டு வந்ததாக இருந்தாலும், எந்த உணவாக இருந்தாலும் – என்று ஸ்ம்ருதி கூறியது.

**3-4-31 சப்த: ச அத: காமகாரே**

**பொருள் -** இதன் காரணமாகவே, விருப்பப்படி நடப்பதைத் தடுக்கும் வேத வாக்கியம் பொருந்துகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - கட ஸம்ஹிதையில் - தஸ்மாத் ப்ராஹ்மண: ஸுராம் ந பிபேத் - ஆகவே அந்தணர்கள் கள்ளைப் பருகாமல் இருக்கவேண்டும் – என்ற வாக்கியமானது தனது விருப்பப்படி ஒருவன் நடப்பதைத் தடுக்கிறது. ஆகவே, உயிருக்கு ஆபத்து வரும் நேரத்தில் மட்டுமே அனைத்துவிதமான உணவுகளும் அனுமதிக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும்.

## அதிகரணம் – 8 - விஹிதத்வாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – யஜ்ஞம் போன்ற கர்மங்கள், ப்ரஹ்மவித்யை மற்றும் க்ருஹஸ்தாச்ரமத்தின் அங்கமாகவே விதிக்கப்படுகின்றன. எனவே இவற்றை ப்ரஹ்மநிஷ்டர்கள், க்ருஹஸ்தர்கள் அனுஷ்டிக்கவேண்டும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-4-32 **விஹிதத்வாத் ச ஆச்ரம கர்ம அபி**

**பொருள்** - க்ருஹஸ்தாச்ரமத்தில் உள்ளவர்களாலும் கைக்கொள்ளப்பட வேண்டியதே ஆகும்; விதிக்கப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஆப. ஸூ. (3-14-11) – யாவஜ்ஜீவமக்நிஹோத்ரம் - உயிர் இருக்கும்வரை க்ருஹஸ்தர்கள் அக்னிஹோத்ரம் செய்யவேண்டும் – என்பதன் மூலம், "ஏதேனும் ஒரு ஆச்ரமத்தில் உள்ளவர்கள், உபாஸனம் இல்லாதவர்களாக இருந்தாலும், யஜ்ஞம் முதலான கர்மங்களை இயற்றவேண்டுன்" என்று கூறப்படுகிறது.

3-4-33 **ஸஹகாரித்வேந ச**

**பொருள் -** ப்ரஹ்மவித்யை ஏற்படுவதற்கு அங்கமாகக் கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ப்ரு. (4-4-22) - தமேவம் வேதாநுவசநேந – வேதங்கள் மூலம் அவனை அறிய முயல்கின்றனர் - என்ற வரியில், கர்மங்கள் வித்யைக்கு அங்கமாகக் கூறப்பட்டன. கர்மங்கள் வித்யைக்கு உதவியாக உள்ளதால், அவற்றை ஞானிகளும் கைக்கொள்ளவேண்டும்.

**3-3-34 ஸர்வதா அபி த ஏவ உபயலிங்காத்**

**பொருள் -** எந்தவகையாக இருந்தாலும் கொள்ளப்படவேண்டும். இப்படியே அடையாளங்கள் காணப்படுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – இந்த இரண்டைப் பொறுத்தவரையில் (ப்ரஹ்மவித்யையின் அங்கமாக உள்ளது, க்ருஹஸ்தாச்ரமத்தின் அங்கமாக உள்ளது என்னும் இரண்டு தன்மைகள்), யஜ்ஞம் முதலான கர்மங்களின் ஸ்வரூபத்தில் வேறுபாடு இல்லை. இந்த இரண்டுவிதமான கர்ம ஸ்வரூபங்கள் ஒரே போன்று உள்ளன. அவை வெவ்வேறு விதமாகச் செய்யப்படுகின்றன. ஆகவே இங்கு முரண்பாடு இல்லை.

**3-4-35 அநபி பவம் ச தர்சயதி**

**பொருள் -** தடைகள் நீங்குவதையும் வேதங்களில் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – தை. (22-1) - தர்மேண பாபம் அபநுததி – யஜ்ஞம் போன்ற தர்மங்கள் மூலம் வித்யைகள் ஏற்படத் தடையாக உள்ள பாபங்களை நீக்குகிறான் – என்பது போன்ற வரிகளால், வித்யைகள் உண்டாகத் தடைகளாக உள்ள பாபம் முதலானவை நீக்கப்படுகின்றன எனப்பட்டது. ஆகவே வித்யையின் உற்பத்திக்கு இடையூறாக உள்ளவற்றை நீக்குவதற்காகக் கர்மம் செய்யவேண்டும்.

## அதிகரணம் – 9 - விதுராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** எந்த ஆச்ரமத்திலும் இல்லாத விதுரர்களுக்கு (விதுரன் என்றால் க்ருஹஸ்தாச்ரமத்தில் இருந்து, மனைவியை இழந்த பின்னர், வானப்ரஸ்தமோ அல்லது ஸந்யாஸமோ கைக்கொள்ளாமல் இருப்பவன் என்று பொருள். இவன் எந்த ஆச்ரமத்திலும் இல்லாதவன் என்றாகிறது. இவனை அநாச்ரமி என்பர்) ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டு என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-4-36 **அந்தரா ச அபி து தத் த்ருஷ்டே:**

**பொருள்** – இடையே உள்ளவர்களுக்கும் ப்ரஹ்மவித்யை உண்டு. ரைக்வர் போன்றவர்களிடம் காணப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – முன்புள்ள ஆச்ரமத்தி விட்ட பின்னர் அடுத்த ஆச்ரமத்தைக் கைக்கொள்ளாமல் இருப்பவனே விதுரன் ஆவான். அவனுக்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உள்ளது. ரைக்வர் போன்றவர்கள் எந்தவிதமான ஆச்ரமத்திலும் இல்லாதபோதிலும், ப்ரஹ்மவித்யையில் மிகவும் ஈடுபாட்டுடன் இருந்தனர் என்பதைக் காணலாம்.

3-4-37 **அபி ஸ்மர்யதே**

**பொருள் -** ஸ்ம்ருதியும் கூறுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - எந்தவிதமான ஆச்ரமத்திலும் இல்லாதவர்களுக்குக்கூட ஜபம் போன்றவையும் வித்யைக்கு அங்கமாகின்றன என்பதை ஸ்ம்ருதிகள் கூறுகின்றன. உதாரணமாக மநு. (2-87) – ஜப்யேநாபி ச ஸம்ஸித்யேத் – ஒருவன் மந்த்ரஜபம் போன்றவற்றால் கைகூடும் ப்ரஹ்மவித்யை மூலம் ஸித்தி பெறுவான் – என்றது காண்க.

**3-4-38 விசேஷ அநுக்ரஹ: ச**

**பொருள்** - வித்யைக்கு அநுக்ரஹம் ஏற்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – எந்தவிதமான ஆச்ரமத்திலும் இல்லாதவர்களுக்கும், ப்ரஹ்மவித்யை அதிகாரம் உள்ளது என்று ச்ருதிகளும் கூறுகின்றன; ப்ர. (1-10) - தபஸா ப்ரஹ்மசர்யேண ச்ரத்தயா வித்யயா ஆத்மாநம் – தவம், ப்ரஹ்மசர்யம், ச்ரத்தை, வித்யை ஆகியவை மூலம் ப்ரஹ்மத்தை உபாஸித்து அடைகின்றனர் - என்றது காண்க.

**3-4-39 அத: து இதர: ஜ்யாய: லிங்காச்ச**

**பொருள் -** ஆச்ரமத்தில் இல்லாத நிலையைக் காட்டிலும், ஆச்ரமத்தில் உள்ளதே சிறந்தது என்று கூறப்படும் அடையாள வரிகள் உள்ளன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** ஆச்ரமத்தில் உள்ளது என்பது, ஆச்ரமத்தில் இல்லாத நிலையை காட்டிலும் உயர்ந்ததாகும். இதன் காரணம், ஆச்ரமத்தில் உள்ளவர்களுக்குத் தர்மங்கள் அதிகம் என்பதால் ஆகும். தக்ஷ. (1-10) - அநாச்ரமீ ந திஷ்டேத்து - இரு பிறப்புடைய அந்தணன் ஒருநாள் கூட ஆச்ரமத்தில் இல்லாத நிலையில் இருக்கக்கூடாது – என்றது.

## அதிகாரணம் -10 – தத்பூதாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** ப்ரஹ்மச்சாரி, வாநப்ரஸ்தன், ஸந்ந்யாஸி ஆகியவர்கள் தங்கள் ஆச்ரமங்களைக் கைவிட நேர்ந்தால், அவர்களுக்கு அதன் பின்னர் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் இல்லை என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-4-40 **தத்பூதஸ்ய து ந அதத்பாவ: ஜைமிநே: அபி நியமாத் தத் ரூபாபாவேப்ய:**

**பொருள் -** அந்தந்த ஆச்ரமத்திலிருந்து நழுவுவது சரியானது அல்ல, அந்த ஆச்ரமத்திலிருந்து நழுவுதல் கட்டுப்படுத்தப்படுகிறது. இதுவே ஜைமிநியின் கருத்தும் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** நைஷ்டிகம் (நைஷ்டிக ப்ரஹ்மச்சாரி – ஆசார்யனுடனேயே வாழ்ந்து, அவருடைய காலத்திற்குப் பின்னரும் தனது வாழ்நாள் முழுவதும் ப்ரஹ்மச்சாரியாக உள்ளவர்) முதலான ஆச்ரமத்தில் உள்ள ஒருவன் அதனை விட்டு நழுவுதல் கூடாது. அந்த நிலையில் உள்ளபோது இயற்றப்பட வேண்டிய கர்மங்களும் தர்மங்களும் கைவிடத்தக்கது அல்ல என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால் ஆகும். இதனை சாந். (2-22-1) – அத்யந்தம் ஆத்மாநம் ஆசார்ய குலே அவஸாதயந் – ப்ரஹ்மச்சாரி தனது ஆயுள் உள்ளவரை அந்த ஆசார்ய குலத்திலேயே கழிக்கிறான் – என்றும், அரண்யமியாத் ததோ ந புநரேயாத் – வாநப்ரஸ்தன் காட்டிற்குச் செல்லவேண்டும், மீண்டும் திரும்புதல் கூடாது – என்றும், ஸந்ந்யஸ்ய அக்நிம் ந

புநராவர்த்தயேத் – அனைத்தையும் துறந்த பின்னர், மீண்டும் அந்த அக்னியை எடுத்தல் கூடாது – என்றும் உள்ள வாக்கியங்களால் அறியலாம். இவர்களுக்கு இந்த நிலையிலிருந்து நழுவினால் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் இல்லை. இந்தக் கருத்தை ஜைமிநியும் ஒப்புக் கொள்கிறார்.

**3-4-41 ந ச ஆதிகாரிகம் அபி பதநாநுமாநாத் ததயோகாத்**

**பொருள்** – அதிகார லக்ஷணத்தில் கூறப்பட்ட ப்ராயச்சித்தம் பொருந்தாது. அவர்கள் பதிதர்கள் (ப்ரஹ்மசர்யத்தில் உள்ளபோதிலும், பெண்களின் தொடர்பு உள்ளவர்கள்) என்று ஸ்ம்ருதி கூறுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஜை. ஸூ. (6-8-24) - அவாகீர்ணி பசு: ச தத்வத் – ப்ரஹ்மச்சர்யத்திலிருந்து நழுவியவனால் அளிக்கப்படுகிறது – என்பதில் கூறப்படும் ப்ராயச்சித்தத்தைக் கைக்கொள்ள, நைஷ்டிக ப்ரஹ்மச்சர்யம் போன்ற தங்களுடைய ஆச்ரமங்களில் இருந்து நழுவியவர்களுக்கு தகுதி இல்லை. ஸ்ம்ருதியானது அத்ரி. (8-16) - ஆரூடோ நைஷ்டிகம் தர்மம் - நைஷ்டிக ப்ரஹ்மச்சர்யத்தை ஏற்றவன், அதிலிருந்து நழுவினால் – என்று தொடங்கி, அத்ரி. (8-16) - ப்ராயச்சித்தம் ந பச்யாமி - அவனுக்கான ப்ராயச்சித்தம் எதனையும் நான் காணவில்லை - என்றது.

3-4-42 **உபபூர்வம் அபி இதி ஏகே பாவம் அசநவத் தத் உக்தம்**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) நைஷ்டிக ப்ரஹ்மச்சர்ய ஆச்ரமத்திலிருந்து நழுவுதல் என்பது, கள் பருகுதல் போன்று சிறிய அளவே என்பதால், அவர்களுக்கு ப்ராயச்சித்தம் உண்டு என்றே ஒரு சிலர் கருதுகின்றனர். இதனை ஸ்ம்ருதியில் காணலாம்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - நைஷ்டிக ப்ரஹ்மசர்யத்திலிருந்து நழுவுதல் என்பது உபபாதகம் (சிறிய பாபம்) என்றே கூறுகின்றனர். எனவே இதற்கு ப்ராயச்சித்தம் உண்டு என்றே சிலர் கூறுகின்றனர். மதுவைப் பருகக்கூடாது என்றுள்ளபோது, அதனைப் பருகினால் ப்ராயச்சித்தம் உள்ளது என்பது போன்றே கொள்ளவேண்டும். கௌ. ஸூ. (1-

3-4) – உத்தரேஷாம் ச ஏதத் அவிரோதி - மற்ற ஆச்ரமத்திற்குக் கூறப்பட்ட தர்மங்கள் ப்ரஹ்மச்சர்ய ஆச்ரமத்திற்கு விரோதம் அல்ல – என்றது காண்க.

**3-4-43 பஹி: து உபயதா அபி ஸ்ம்ருதே: ஆசாராத் ச**

**பொருள் -** சிறிய பாபம், பெரிய பாபம் என்று எதுவாக இருந்தாலும், நழுவிய (நைஷ்டிக) ப்ரஹ்மச்சாரிகளுக்கு ப்ரஹ்மவித்யை அதிகாரம் இல்லை. ஸ்ம்ருதியில் கூறுவதாலும், நல்லவர்களின் ஒழுக்கத்தாலும் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சிறிய பாபமாக இருந்தாலும், பெரிய பாபமாக இருந்தாலும், இப்படிப்பட்ட பாபங்களைச் செய்தவர்களுக்கு கர்ம அதிகாரம் இல்லை. இதனை, அத்ரி. (8-16) - ப்ராயச்சித்தம் ந பச்யாமி யேந சுத்யேத் ஸ ஆத்மஹா - தனது ஆத்மாவையே கொன்ற அவனுக்கான ப்ராயச்சித்தம் எதனையும் சாஸ்த்ரங்களில் நான் காணவில்லை - என்பதன் மூலம் உணரலாம். அவர்களுடைய தொடர்பை, நல்லவர்கள் துண்டித்துக் கொள்வதைக் காணலாம்.

## அதிகரணம் – 11 – ஸ்வாம்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ருத்விக்கால் (யாகமோ அல்லது யஜ்ஞமோ போன்றவற்றைத் தலைமை தாங்கி நடத்தி வைப்பவர் எனலாம்) உத்கீத உபாஸனம் செய்யப்படவேண்டும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3-4-44 **ஸ்வாமிந: பலச்ருதே: இதி ஆத்ரேய:**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) யஜமானனால் உத்கீத உபாஸனம் செய்யப்படவேண்டும். அவனுக்கே அதன் பலன் கூறப்படுகிறது. இப்படியே ஆத்ரேயர் எண்ணுகிறார்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – உத்கீத உபாஸனையை யஜமானனே செய்யவேண்டும். யாகம் வீயம் நிறைந்ததாக ஆகிறது என்னும் பலன் அவனுக்கு கிட்டுவதால் ஆகும். இவ்விதம் ஆத்ரேயர் எண்ணுகிறார்.

3-4-45 **ஆர்த்விஜ்யம் இதி ஔடுலோமி: தஸ்மை ஹி பரிக்ரீயதே**

**பொருள்** - உத்கீத உபாஸனம் ருத்விக்கால் அனுஷ்டிக்கப்பட வேண்டியதே ஆகும். இப்படியே ஔடுலோமி எண்ணுகிறார். இதன் காரணம், யாகம் இயற்ற ஏற்கப்படுகிறார் அல்லவோ?

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - (கடந்த ஸூத்ரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) – கர்மங்களுடைய ஸ்வரூபம் போன்றே அவற்றின் அங்கங்களையும் ருத்விக்கே செய்யவேண்டும். அவை பலன் அளிக்கும்வரை ருத்விக்கே செய்தபடி உள்ளார்.

அதிகரணம் - 12 – ஸஹகார்யந்தரவித்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – பால்யம், பாண்டித்யம் மற்றும் மௌனம் ஆகியவை யஜ்ஞம் போன்றே, ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாக உள்ளன என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3-4-46 ஸஹகார்யந்தரவிதி: பக்ஷேண த்ருதீயம் தத்வதோ வித்யாதிவத்**

**பொருள்** - யஜ்ஞம் போன்றவை ப்ரஹ்மவித்யையை அநுஷ்டிப்பவனுக்கு அங்கமாக விதிக்கப்பட்டுள்ளன. இது போன்றே வேறு சிலவும் விதிக்கப்பட்டுள்ளன. இது மூன்றாவது என விதிக்கப்பட்டதுடன் கூடியதாகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரு. (3-5-1) - தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய - வேதங்கள் அனைத்தையும் பூர்ணமாக அத்யயநம் செய்த ஒருவன் -என்று தொடங்கி, ப்ரு. (3-5-1) - அத முநி: - மௌனத்துடன் கூடிய முனியாக வேண்டும் – என்று முடிக்கும் வாக்கியம் உள்ளது. இங்கு ப்ரஹ்மவித்யா நிஷ்டனுக்கு, பால்யம் (சிறு குழந்தை பருவம்) மற்றும் பாண்டித்யம் (சிறந்த கற்றறிவு) ஆகியவை போன்று, மூன்றாவதாக மௌனம் விதிக்கப்படுகிறது. மௌனம் என்பது யஜ்ஞம் முதலானவற்றைப் போன்ற விதியாகும். ஆகவே “முனி” என்ற பதமானது ப்ரஹ்மத்தை மட்டுமே இடைவிடாமல் எப்போதும் த்யானித்தபடி உள்ள ஒருவனைக் குறிப்பதாக உள்ளது.

**3-4-47 க்ருத்ஸ்ந பாவாத் து க்ருஹிணா உபஸம்ஹார:**

**பொருள்** – அனைத்து ஆச்ரமங்களுக்கும் ப்ரஹ்மவித்யை உண்டு என்பதால், க்ருஹஸ்தாச்ரமம் மட்டுமே கூறப்பட்டது என்பது, ஒரு எடுத்துக்காட்டே ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (8-15-1) – அபிஸமாவ்ருத்ய குடும்பே – ஆசார்யனின் இல்லத்திலிருந்து தனது வித்யைகளை முற்றிலுமாக முடித்து வந்த பின்னர், தனது குடும்பத்தை ஒரு தூய்மையான இடத்தில் அமைத்து – என்று தொடங்கி, சாந். (8-15-1) - ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் – ஆயுள் உள்ளவரை ப்ரஹ்மவித்யையை அநுஷ்டித்தவன் – என்று முடியும் வாக்கியமானது, "ப்ரஹ்மவித்யை அனைத்து ஆச்ரமங்களுக்கும் உண்டு" என அனைத்து ஆச்ரமங்களில் உள்ளவருக்கும் கூறப்பட்டதாகவே உள்ளது. ஸூத்ரத்தில் உள்ள "து" என்ற பதமானது, ப்ரஹ்மவித்யை க்ருஹஸ்தனுக்கு மட்டுமே உள்ளது என்னும் கருத்தைத் தள்ளுகிறது.

**3-4-48 மௌநவத் இதரேஷாம் அபி உபதேசாத்**

**பொருள்** – மற்ற ஆச்ரமங்களில் கூறப்பட்ட விதி போன்று இங்கு மௌனம் கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ப்ரு. (3-5-1) - அத முநி: - அதன் பின்னர் மௌனத்துடன் கூடிய முனியாக வேண்டும் – என்று தொடங்கி, ப்ரு. (3-5-1) – அத பிக்ஷாசர்ய சரந்தி - பிக்ஷை எடுத்து உண்கின்ற ஸந்யாஸி தர்மத்தை அடைகின்றனர் – என்று முடியும் வாக்கியம் உள்ளது. அதாவது, (அனைத்துப் பற்றுதல்களையும் விட்டு, பிக்ஷை எடுத்து வாழ்வதான ஸந்யாஸ ஆச்ரமம் என்பதை இங்கு கூறியது என்பது) அனைத்து ஆச்ரமங்களின் தர்மங்களை உணர்த்தவே ஆகும். அதாவது, யஜ்ஞம் முதலானவற்றைப் போன்றே, பாண்டித்யம் முதலானவையும் ப்ரஹ்மவித்யைக்கு உதவுபவையே ஆகும் என்று கருத்து.

## அதிகரணம் – 13 – அநாவிஷ்கராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – பால்யம் என்பது ப்ரஹ்மஞானிகளைப் பொறுத்தவரையில் தங்களது மேன்மைகளை வெளிக்காட்டாமல் உள்ளதே ஆகும் என நிரூபிக்கப்பட உள்ளது.

3-4-49 **அநாவிஷ்குர்வந் அந்வயாத்**

**பொருள்** - வெளிப்படுத்தாமல் இருப்பதே, தொடர்பு உள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரு. (3-5-1) - பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத் – வேத அத்யயனம் செய்த ப்ராஹ்மணன், வேதங்களின் அர்த்தங்களை அறிந்த பின்னர், பால்யத்துடன் (ஏதும் அறியாதவன் போன்று) இருக்கவேண்டும் – என்றது. இங்கு பால்யம் என்பதற்கு, "பாலகனின் செயல்கள்" என்றே பொருள் கொள்ளவேண்டும். ப்ரஹ்மஞானி ஒருவன் பாலகன் போன்று தன்னுடைய மேன்மைகளை வெளிப்படுத்தாமல் வாழவேண்டும் என்பதே இங்கு கூறப்பட்டது.

## அதிகரணம் -14 - ஐஹிகாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – இந்தப் பிறவியில் பலன்கள் அளிக்கவல்ல வித்யைகள், தடை இல்லாமல் இருந்தால் மட்டுமே உண்டாகும்; தடை ஏற்பட்டால் உண்டாகாது என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

3-4-50 **ஐஹிகம் அப்ரஸ்துத ப்ரதிபந்தே தத் தர்சநாத்**

**பொருள்** - உலகப் பலன்களை அடைவது குறித்துச் செய்யப்படும் உபாஸனங்கள், வலிமையான தடைகள் இல்லாமல் இருந்தால் மட்டுமே கைகூடும்; இப்படியே காணப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – உலக விஷயங்கள் என்னும் பலன் அளிக்கும் உபாஸனங்கள், அவற்றுக்கான பலன்கள் உண்டாகும்போது, உடனடியாகப் பலன்

அளிக்கவேண்டும் என்னும் அவசியம் இல்லை. வேறு ஒரு வலிமையான கர்மம் காரணமாகத் தடைகள் உண்டாகாமல் இருந்தால் மட்டுமே உடனடியாகப் பலன்களை அளிக்கின்றன. ஆனால் தடைகள் உண்டானால், தடைகள் நீங்கிய பின்னரே பலன்கள் உண்டாகும். இதனை சாந். (1-1-10) – ததேவ வீர்யவத்தரம் – தடைகளை விலக்கி வீர்யத்துடன் கூடிய பலன் தருகிறது - என்றது காண்க.

## அதிகரணம் -15 - முக்திபலாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - மோக்ஷ பலன் அளிக்கவல்ல உபாஸனங்களுக்கும் தடை ஏற்படாவிட்டால் பலன் உடனே கிட்டும்; தடை ஏற்படும் என்றால் தாமதமாகவே கிட்டும் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

3-4-51 **ஏவம் முக்தி பலாநியம: ததவஸ்தாவத்ருதே: ததஸ்தாவத்ருதே:**

**பொருள்** – கடந்த அதிகரணம் போன்றே, முக்தியைப் பலனாக உடைய ப்ரஹ்ம உபாஸனம் என்பதற்கும், அதற்கான புண்ணிய கர்மம் முடிந்தவுடன் பலன் கிட்டும் என்பது இல்லை. அதற்கும் கால நிர்ணயம் உள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** இதனைப் போன்றே (கடந்த அதிகரணத்தைப் போன்றே), முக்தி அளிக்கவல்ல உபாஸனம் என்பதற்கு (உடனே பலன் அளிக்கும் என்பதான) விதிமுறை ஏதும் இல்லை. அவற்றுக்கான இடையூறு அல்லது இடையூறு இன்மை ஆகியவற்றைப் பொறுத்தே அமையும். இடையூறு இல்லை என்றால் மட்டுமே பலன் கிட்டும்.

## வேதாந்தஸாரம் மூன்றாம் அத்யாயம் ஸம்பூர்ணம்

## அத்யாயம் – 4 – பல(ன்) அத்யாயம்

ப்ரஹ்மத்தை அடையும் ஸாதனமான வித்யாரூப உபாஸனம் கடந்த அத்யாயத்தில் விளக்கப்பட்டது. அந்த வித்யையின் ஸ்வரூபம் ஆராயப்பட்டு, அதன் பலன் இங்கு விளக்கப்படுகிறது. இதில் உள்ள ஸூத்ர எண்ணிக்கைகள்

### முதல் பாதம் – ஆவ்ருத்தி பாதம்

இந்தப் பாதத்தில் உபாஸனத்தைக் கைக்கொள்ளவேண்டிய முறை, புண்ணிய பாபங்கள் எவ்விதம் நீங்குகின்றன, நித்ய மற்றும் நைமித்திக கர்மங்களை இயற்றியே தீரவேண்டும் போன்ற பலவும் கூறப்படுகின்றன. இது தவிர, உபாஸகனுக்கு அவனுடைய இறுதியான பிறவியில் புண்ணிய பாபங்கள் அனைத்தும் அழிகின்றன என்றும், தொடர்ந்து வரும் புண்ணிய பாபங்கள் ஒட்டுவதில்லை என்றும் கூறப்பட உள்ளன.

### அதிகரணம் – 1 – ஆவ்ருத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஆயுள் முடியும்வரை உபாஸனத்தைப் பலமுறை அனுஷ்டிக்க வேண்டும் என்பது கூறப்பட உள்ளது.

**4-1-1 ஆவ்ருத்தி: அஸக்ருத் உபதேசாத்**

**பொருள் –** ப்ரஹ்மத்தைக் குறித்தே பலமுறை த்யானித்தபடி இருக்கவேண்டும். இப்படியே உபதேசிக்கப்பட்டன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – தை. (2-1) - ப்ரஹ்மவிதாப்நோதி பரம் – ப்ரஹ்மத்தை அறிந்தவன் உயர்ந்ததை அடைகிறான் – என்ற வாக்கியங்களில் கூறப்பட்டதும், மோக்ஷ ஸாதனமாக உள்ளதும் ஆகிய வேதநம் (அறிந்து கொள்ளும் செயல்) என்பதைப் பலமுறை மீண்டும் மீண்டும் செய்யவேண்டும். இதன் காரணம், தொடக்கம் மற்றும் முடிவு ஆகிய பகுதிகளில் "வேதநம், உபாஸனம்" ஆகியவை மாற்றி மாற்றிக் கூறப்பட்டுள்ளதால் ஆகும்.

**4-1-2 லிங்காத் ச**

**பொருள் -** இதனை ஸ்ம்ருதியிலும் காணலாம்

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - லிங்கம் என்பது ஸ்ம்ருதியைக் குறிக்கும். ஸ்ம்ருதிகளில் கீதை (12-6, 12-7) – மாம் த்யாயந்தே உபாஸதே || தேஷாம் அஹம் ஸமுத்தர்த்தா – யார் இடைவிடாமல் என்னை த்யானிக்கிறார்களோ அவர்களை நான் உயர்த்துகிறேன் – என்றும், ஸ்ரீவிபு. (6-7-91) தத் ரூப ப்ரத்யயே சைகா ஸந்ததிச்ச அந்ய நிஸ்ஸ்ப்ருஹா | தத் த்யாநம் - தாரணை மூலம் கிட்டுகின்ற ப்ரஹ்மத்தின் திருமேனி குறித்த ஞானத்தில், வேறு எந்தவிதமான அறிவும் கலக்காமல், ஒரே எண்ணமாக இருத்தலே த்யானம் ஆகும் – என்றும் கூறப்பட்டது.

## அதிகரணம் – 2- ஆத்மத்வோபாஸநாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - தன்னுடைய ஆத்மாவாகவே ப்ரஹ்மத்தை உபாஸகன் உபாஸிக்கவேண்டும் என்பது கூறப்பட உள்ளது.

**4-1-3 ஆத்மேதி து உபகச்சந்தி க்ராஹயந்தி ச**

**பொருள்** – ஆத்மாவாகவே; காரணம் இப்படியாகவே அறிகிறார்கள்; இப்படியே சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ப்ர. ஸூ. (2-1-22) - அதிகம் து பேத நிர்தேசாத் – வேறுபட்டது – என்றும், ப்ர. ஸூ. (3-4-8) - அதிகோபதேசாத் – அதிகமான உபதேசம் உள்ளதால் (ஜீவனைக் காட்டிலும் வேறுபட்டது) – என்றும் உள்ள ஸூத்ரங்களால் ப்ரத்யகாத்மாவைக் காட்டிலும் ப்ரஹ்மம் வேறுபட்டது என்று கூறப்பட்டது. ஆனாலும், “அஹம் ப்ரஹ்மாஸ்மி – நான் ப்ரஹ்மமாகவே உள்ளேன் (அதாவது ப்ரஹ்மத்தைத் தனது ஆத்மாவாகக் கொள்க)” என்ற எண்ணத்துடன் உபாஸிக்கவேண்டும். ஏனென்றால், பூர்வர்கள், சாந். (6-8-7) - தத் த்வம் அஸி - நீ அந்த ப்ரஹ்மம் ஆகிறாய்; த்வம் வா அஹம் அஸ்மி பகவோ தேவதே அஹம் வை த்வம் அஸி - தேவதையே! நான்தான் நீ ஆகிறாய், நீயே நான் ஆகிறேன் – என்பதை ஏற்பதால், ப்ரஹ்மத்தைத் தனது ஆத்மாவாகவே உபாஸகன் கொள்கிறான். சத. (14-16-7-30) - ய ஆத்மநி திஷ்டந் ஆத்மந: அந்தர:

யமாத்மா ந வேத யஸ்ய ஆத்மா சரீரம் ய ஆத்மநமந்தரோ யமயதி ஸ த ஆத்மா - யார் ஒருவன் ஆத்மாவின் உள்ளும் புறமும் வ்யாபித்துள்ளானோ, யாரை ஆத்மா அறியாமல் உள்ளதோ, யாருக்கு ஆத்மா சரீரமோ, யார் ஆத்மாவின் உள்ளே புகுந்து நியமனம் செய்கிறானோ – என்பதன் மூலம், ப்ரஹ்மத்தை உபாஸகனுடைய ஆத்மாவாகக் கூறுகிறது. “மநுஷ்ய: அஹம் – நான் மனிதன்” என்பதில் உள்ள “மனிதன்” என்பது பொதுவாகச் சரீரத்தைக் குறித்தபோதிலும், இங்கு ஆத்மாவைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது; இதன் மூலம் ஆத்மாவே கூறப்பட்டதாக அறியப்படுகிறது; இதன் காரணம் சரீரமானது ஆத்மாவிற்கு விசேஷணமாக உள்ளதால் ஆகும். இதனைப் போன்றே, “அஹம் – நான்” என்பது பரமாத்மாவைக் குறிக்கும்; இதன் காரணம் அனைத்து ஆத்மாக்களையும் பரமாத்மா தனது சரீரமாகக் கொண்டுள்ளதால் ஆகும். ஆகவே “அஹம் ப்ரஹ்ம – நான் ப்ரஹ்மம்” என்பதே உபாஸனையாக உள்ளது.

## அதிகரணம் – 3 - ப்ரதீகாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – மனம் முதலானவற்றை உயர்ந்த தேவதை என்று எண்ணி உபாஸனம் செய்யவேண்டும் என நிரூபிக்கப்பட்ட உள்ளது

**4-1-4 ப்ரதீகே ந ஹி ஸ:**

**பொருள் -** ப்ரதீகங்களில் (ப்ரதீகம் என்றால் சரீரம். அதாவது ப்ரஹ்மத்தின் சரீரமாகவே இந்த உலகில் உள்ள வஸ்துக்கள் இருப்பதால், அவற்றையே ப்ரஹ்மமாகக் கொண்டு உபாஸனை செய்தல் என்பதே ப்ரதீக உபாஸனம் ஆகும். உதாரணமாக, மனதையே ப்ரஹ்மம் என்று உபாஸித்தல் போன்றவை ஆகும்) ஆத்ம உபாஸனம் சரியல்ல; அவை ஆத்மா அல்ல.

**முக்கியமான குறிப்பு** (இந்தப் பகுதி வேதாந்தஸாரத்தில் உள்ளது அல்ல. இங்கு கூறப்படும் விஷயத்தை விளக்கவே எழுதப்பட்டதாகும்) – ப்ரதீகம் என்றால் ப்ரஹ்மத்தின் அவயவமான சித் மற்றும் அசித் ஆகும். இவற்றைச் சிலர் உபாஸிக்கக்கூடும். அதாவது நாமம் தொடங்கி ஆசை முடிய உள்ள பலவகையான அசித்துக்கள், ப்ராணன் என்னும் சித் ஆகியவற்றையே உபாஸிப்பவர்கள் ப்ரதீக உபாஸகர்கள் ஆவர். இவர்கள் இவற்றை ப்ரஹ்மம் என்றே எண்ணி (இதுவே ப்ரஹ்மத்ருஷ்டி எனப்படும்) உபாஸிப்பவர்கள் ஆவர்.

இது போன்று அல்லாமல், ஒரு சிலர் இவற்றை ப்ரஹ்மமாக எண்ணாமல், தாங்கள் அடையவேண்டிய பொருள் அவையே என்று உபாஸிப்பர். இது போன்ற உபாஸகர்கள் அடையும் பலன் அற்பமே ஆகும். ப்ரக்ருதியில் இருந்து விடுபட்ட ஆத்மாவை ப்ரஹ்மம் என்று எண்ணாமல், நேரடியான ப்ராப்யம் (இலக்கு) என்று உபாஸிப்பவன் ஆத்ம உபாஸகன் அல்லது கைவல்ய நிஷ்டன் ஆவான். மேலே கூறப்பட்ட பலரும் ப்ரதீகாலம்பனர் எனப்படுவர். ஒரு சிலர் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொண்ட தங்கள் ஆத்மாவை உபாஸிக்கக்கூடும். இவர்கள் ப்ரஹ்மாத்மக ஸ்வ ஆத்ம உபாஸகர்கள் அல்லது பஞ்சாக்நி வித்யா நிஷ்டர்கள் ஆவர். மேலும் சிலர் நேரடியாகவே ப்ரஹ்மத்தை இலக்காகக் கொண்டு உபாஸிப்பர்; இவர்கள் ப்ரஹ்மநிஷ்டர்கள் ஆவர். இவர்கள் நாமம் போன்ற ப்ரதீகங்களை உபாஸிக்காமல், பூர்ணமான ப்ரஹ்மத்தையே உபாஸிப்பதால் அப்ரதீகாலம்பனர்கள் என்று கூறப்படுவர்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (3-11-1) – மநோ ப்ரஹ்ம - மனதை ப்ரஹ்மம் (என உபாஸித்து) – என்பதில், மனம் முதலானவற்றை உபாஸகனுடைய ஆத்மாவாக எண்ணக் கூடாது. அந்த பரமாத்மா உபாஸிக்கப்படுவதில்லை. மனம் முதலானவற்றைப் பரமாத்மாவாக எண்ணி உபாஸிக்கிறான்.

**4-1-5 ப்ரஹ்மத்ருஷ்டி: உத்கர்ஷாத்**

**பொருள்** - மனம் முதலானவற்றில் ப்ரஹ்மத்ருஷ்டி பொருத்தமே ஆகும்; காரணம் ப்ரஹ்மம் உயர்ந்தது என்பதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரஹ்மமானது மனம் முதலானவற்றைக் காட்டிலும் உயர்ந்தது என்பதால், மனம் முதலானவற்றை ப்ரஹ்மமாக எண்ணி உபாஸிக்கலாம் (ஆனால், ப்ரஹ்மத்தை மனம் போன்றவையாக எண்ணக்கூடாது).

## அதிகரணம் – 4 - ஆதித்யாதிமத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** உத்கீதம் போன்றவற்றில் உயர்ந்தவர்களான ஆதித்யன் முதலானவர்களை த்ருஷ்டி செய்ய வேண்டும் என்பது நிருபிக்கப்பட உள்ளது.

**4-1-6 ஆதித்யாதிமதய: ச அங்கே உபபத்தே:**

**பொருள்** - உத்கீதம் போன்றவற்றில் ஆதித்யன் முதலிய த்ருஷ்டியைச் செய்யவேண்டும். காரணம், அவர்களுக்கு உயர்வு உள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (1-3-1) - ய ஏவ அஸௌ தபதி தம் உத்கீதம் உபாஸீத – யார் ஒருவன் இப்படியாக ஒளிர்கிறானோ அவனையே உத்கீதமாக உபாஸிக்கவேண்டும் – என்பது போன்ற வாக்கியங்களின் மூலம் ஆதித்யன் முதலானவர்கள் உத்கீதம் போன்றவற்றைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று அறியப்படுவதால், உத்கீதம் போன்றவற்றையே ஆதித்யன் முதலானவையாக உபாஸிக்கவேண்டும்.

## அதிகரணம் – 5 - ஆஸீநாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – அமர்ந்து கொண்டுதான் உபாஸனை செய்ய வேண்டும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**4-1-7 ஆஸீந: ஸம்பவாத்**

**பொருள்** – அமர்ந்து கொண்டு மட்டுமே, அப்போதுதான் கைகூடும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – உபாஸனத்தை ஆஸனத்தில் அமர்ந்தபடி செய்யவேண்டும். அவ்விதம் செய்தால் மட்டுமே மனம் ஒருமைப்படும் என்பதால் ஆகும்.

**4-1-8 த்யாநாத் ச**

**பொருள்** – த்யான ரூபமாக உள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரு. (2-4-5) – நிதித்யாஸிதவ்ய: - த்யானிக்கப்பட வேண்டும் – என்பதன் மூலம் உபாஸனம் என்பது த்யான ரூபமாக உள்ளது என்பது உணர்த்தப்பட்டது. ஆகவே அதனை ஆஸனத்தில் அமர்ந்தபடி செய்யவேண்டும்.

**4-1-9 அசலத்வம் ச அபேக்ஷ்ய**

**பொருள் -** அசையாமல் உள்ளதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சாந். (7-6-1) - த்யாயதீவ ப்ருதீவீ – பூமி, அந்தரிக்ஷம் - என்றது. ஆக பூமி, மலை முதலானவை போன்று அசையாமல் இருப்பதால் மட்டுமே த்யானம் கைகூடும் என்பதால், இது அமர்ந்த நிலையில் மட்டுமே கைகூடும் என்றாகிறது.

**4-1-10 ஸ்மரந்தி ச**

**பொருள் -** ஸ்ம்ருதியிலும் உள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – கீதை (6-12) - உபவிச்யாஸநே யுஞ்ஜ்யாத் யோகம் – ஆஸனத்தில் அமர்ந்து யோகத்தில் ஈடுபடுவானாக – என்றது.

**4-1-11 யத்ர ஏகாக்ரதா தத்ர அவிசேஷாத்**

**பொருள்** - எந்த இடத்தில் மனம் ஒருமைப்பாடு அடையுமோ, அந்த இடத்தில் என்று கூறப்படாத காரணத்தினால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - மனதை ஒருமுகப்படுத்த ஏதுவாக உள்ள இடம் மற்றும் காலங்கள் தவிர வேறு எந்தவிதமான குறிப்பிட்ட காலங்கள் குறித்தோ, இடங்கள் குறித்தோ உபாஸனத்திற்குக் கூறப்படவில்லை. ஆகவே மனதை ஒருமுகப்படுத்தக் கூறப்பட்ட அந்த நேரம் மற்றும் இடத்தையே, உபாஸனத்திற்கும் கொள்ளவேண்டும்.

### அதிகரணம் – 6 - ஆப்ரயாணாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – மரணம் அடையும் காலம் வரையில் உபாஸனை செய்யவேண்டும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**4-1-12 ஆப்ரயாணாத் தத்ர அபி ஹி த்ருஷ்டம்**

**பொருள்** – மரணகாலம் வரையில், காரணம் அப்படியே ச்ருதி ஓதுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – மரணம் அடையும் காலம் வரையில் உபாஸனை செய்யவேண்டும்; இதனை சாந். (8-15-1) – ஸ கல்வேவம் வர்த்தயந் யாவத் ஆயுஷம் - இப்படியாக ஆயுள் உள்ளவரை உபாஸனத்தையும் தர்மத்தையும் கடைபிடித்து – என்பதில் காணலாம்.

### அதிகரணம் – 7 - தததிகமாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ப்ரஹ்மவித்யைக்கு முன்னர் செய்த பாபங்கள், வரப்போகும் பாபங்கள் ஆகியவை அழிகின்றன என நிரூபிக்கப்பட உள்ளது.

**4-1-13 தததிகமே உத்தரபூர்வாகயோ: அச்லேஷ விநாசௌ தத் வ்யபதேசாத்**

**பொருள்** - ப்ரஹ்மவித்யை கைகூடியவுடன் முன்னர் செய்த பாபங்களும், இனி வரப்போகிற பாபங்களும் அழிகின்றன. இப்படியாகவே வேதங்கள் ஓதுகின்றன.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – உபாஸனம் செய்யத் தொடங்கியபோது, அதன் ஸாமர்த்யம் காரணமாக, முன்னர் செய்த பாபங்களின் அழிவும், இனி வரப்போகும் பாபங்கள் ஒட்டாமையும் ஏற்படுகிறது என்றே கூறவேண்டும். இதனை ச்ருதியானது சாந். (5-24-3) - ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே – இப்படியாக அனைத்து பாபங்களும் அழிகின்றன – என்றும், சாந். (4-14-3) - ஏவம் விதி பாபம் கர்ம ந ச்லிஷ்யதே - இப்படியாக அறிந்தவனைப் பாபகர்மங்கள் அண்டுவதில்லை – என்றும் கூறுகிறது.

## அதிகரணம் – 8- இதராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** முன்னர் செய்த புண்ணியங்கள் அழிந்துவிடும், இனி செய்யப்படும் புண்ணியங்கள் ஒட்டுவதில்லை என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**4-1-14 இதரஸ்ய அபி ஏவம் அஸம்ச்லேஷ: பாதே து**

**பொருள் -** புண்ணியங்களுக்கும் அதே போன்று, சரீரம் நீங்கும் நேரத்தில்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ஞானிக்கு புண்ணியங்களும் மோக்ஷ விரோதியாகவே உள்ளன. அவை அவனுடைய விருப்பத்திற்கு மாறான பலன்களை அளிக்கின்றன. அவையும் அவனிடம் சேராமல் உள்ளன அல்லது அழிகின்றன. புண்ணிய பலன்கள், மழை, உணவு போன்றவை ஞானியின் உபாஸனைக்கு உதவுபவையாக உள்ளபோதிலும், அவையும் இறுதியில் அழிகின்றன.

## அதிகரணம் – 9 - அநாரப்த கார்யாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** பலன் அளிக்கத் தொடங்காத புண்ணிய பாப பலன்கள் மட்டுமே அழிகின்றன என்பது நிருபிக்கப்பட உள்ளது.

**4-1-15 அநாரப்த கார்யே ஏவ து பூர்வே ததவதே:**

**பொருள் -** இதுவரை பலன் அளிக்கத் தொடங்காத புண்ணிய பாபங்கள் மட்டுமே அழிகின்றன; காலதாமதம் கூறப்படுவதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** "ப்ரஹ்மவித்யைக்கு முன்பு விளைந்த புண்ணிய பாபங்களில், பலன் அளிக்கத் தொடங்காத புண்ணிய பாபங்கள் மட்டுமே அழிகின்றன" என்றே கொள்ளவேண்டும். சாந். (6-14-2) – தஸ்ய தாவதேவ சிரம் – சரீரம் உள்ளவரை மட்டுமே – என்பதன் மூலம், அவை சரீரம் உள்ளவரை மட்டுமே இருப்பதாகக் கூறப்பட்டது.

அதிகரணம் - 10- அக்னிஹோத்ராத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** பலனை விரும்பாதவர்கள் கூட அக்னிஹோத்ரம் போன்ற நித்ய கர்மங்களை இயற்றியே தீர வேண்டும் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**4-1-16 அக்னிஹோத்ராதி து தத் கார்யாயைவ தத் தர்சநாத்**

**பொருள்** - அக்னிஹோத்ரம் போன்றவையும் ப்ரஹ்மவித்யைக்கே ஆகும்; இப்படியே வேதங்களில் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அக்னிஹோத்ரம் போன்றவை, வித்யை ஏற்படுவதன் பொருட்டு, சரீரம் விழும் காலம் முடிய அன்றாடம் இயற்றப்படவேண்டியவை ஆகும். ப்ரு. (4-4-22) - தமேதம் வேதாநுவசநே – வேத அத்யயனம் – என்று தொடங்கும் ச்ருதியானது, அந்தந்த ஆச்ரமத்திற்காக விதிக்கப்பட்ட தர்மங்கள் அனைத்தும் வித்யையை உற்பத்தி செய்யவே ஆகும் என்று கூறுகிறது.

**4-1-17 அத: அந்யா அபி ஹி ஏகேஷாம் உபயோ:**

**பொருள்** - அக்னிஹோத்ரம் போன்றவற்றைக் காட்டிலும் வேறு சிலவும் உள்ளன. இப்படியே கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாட்யாயந சாகையில் – தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருதஸ் ஸாதுக்ருத்யாம் - ஞானியின் செல்வத்தை அவனுடைய புத்திரர்களும் – என்றும், சாட்யாயந சாகையில் - த்விஷந்த: பாப க்ருத்யாம் ஸுஹ்ருத: ஸாது க்ருத்யாம்– நண்பர்கள் அவன் புண்ணியங்களையும், விரோதிகள் அவனது பாபங்களையும் அடைகின்றனர் – என்றும் கூறப்பட்டுள்ளது. அக்னிஹோத்ரம் போன்ற கர்மங்களைக் காட்டிலும் வேறு சில புண்ணிய கர்மங்கள் எல்லையற்ற காலமாகத் தொடர்ந்து இயற்றப்பட்டபடி உள்ளன. அவற்றைப் பலன் அளிக்கவிடாமல், அவற்றைக் காட்டிலும் வலிமையான கர்மங்களும் உள்ளன. இத்தகைய வலிமையான கர்மங்களானவை இனி செய்ய உள்ள கர்மங்கள் மூலமாகக் கிட்டவல்ல மழை, உணவு, வித்யை போன்றவற்றையும் தடுக்கின்றன. எனவேதான் மேலே கூறப்பட்ட ச்ருதியானது இரண்டுவிதமான கர்மங்களையும் கூறுகிறது.

**4-1-18 யதேவ வித்யயேதி ஹி**

**பொருள் -** வித்யையின் மூலமாக.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (1-1-10) - யதேவ வித்யயா - எந்த ஒரு கர்மத்தை உத்கீத வித்யையுடன் இயற்றுகிறானோ – என்பதன் மூலம், ஒரு சில கர்மங்கள் பலன் அளிக்க இயலாமல் தடைபட்டு நிற்கின்றன என்று அறியலாம்.

## அதிகரணம் -11 - இதரக்ஷபணாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ப்ராரப்த கர்மம் (பலன் தரத் தொடங்கிவிட்ட கர்மங்கள்) ஒரே சரீரத்தில் முடிந்துவிடும் என்னும் விதி கிடையாது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**4-1-19 போகேந த்விதரே க்ஷபயித்வா அத ஸம்பத்யதே**

**பொருள் -** பலன் அளிக்கத் தொடங்காத கர்மங்களை விட மாறுபட்டதான பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்கள் அனைத்தையும், அவற்றை அனுபவித்துக் கழிக்கிறான்; அதன் பின்னர் ப்ரஹ்மத்தை அடைகிறான்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஒரு சில பலன்கள் பலன் அளிக்கத் தொடங்குகின்றன. அவற்றின் பலன்களை ஒரு சரீரமோ அல்லது மேலும் பல சரீரங்கள் எடுத்தோ அனுபவித்த பின்னரே ப்ரஹ்மத்தை அடைகிறான்.

## இரண்டாம் பாதம் – உத்க்ராந்தி பாதம்

இந்தப் பாதத்தில் மோக்ஷத்திற்கான உபாயத்தைக் கைக்கொண்ட உபாஸகன் தனது சரீரத்திலிருந்து வெளியேறும் முறை கூறப்படுகிறது.

## அதிகரணம் -1 - வாகதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – மரணம் அடைபவனுடைய வாக்கு என்ற இந்த்ரியம், மனதுடன் இணைகிறது என்று கூறப்பட உள்ளது.

**4-2-1 வாக் மநஸி தர்சநாத் சப்தாத் ச**

**பொருள்** - வாக்கு இந்த்ரியமானது மனதில் சேர்கிறது. இதனைக் காண்கையாலும், வேதத்தில் ஓதப்படுவதாலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சாந். (6-8-6) - அஸ்ய ஸோம்ய புருஷஸ்ய ப்ரயத: வாங்மநஸி ஸம்பத்யதே – குழந்தாய்! சரீரத்தை விட்டுக் கிளம்பும் உபாஸகனின் வாக்கு இந்த்ரியம் மனதை அடைகிறது – என்று கூறுகிறது. அதாவது சரீரத்தை விட்டு மேலே கிளம்பும் ஒருவனுடைய மனம் ஓய்வதற்கு முன்பாக வாக்கு ஓய்ந்துவிடுகிறது; ஆகவே மனதில் வாக்கு சென்று சேர்வதாகிறது.

**4-2-2 அத ஏவ ஸர்வாணி அநு**

**பொருள்** - மேலே கூறப்பட்ட காரணங்களால், அதனைப் பின் தொடர்ந்து அனைத்தும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** "ஸர்வ இந்த்ரியைர் மநஸி ஸம்பத்யமாநை: - அனைத்து இந்த்ரியங்களும் மனதில் சேர்கின்றன" என்று கூறுவதாலும், மனம் தனது இயக்கத்தை நிறுத்துவதற்கு முன்பாக இவை அனைத்தும் இயக்கத்தை நிறுத்துவதாலும், வாக்கைத் தொடர்ந்து அனைத்து இந்த்ரியங்களும் மனதில் சேர்கின்றன.

## அதிகரணம் – 2 - மநோதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – மனம் ப்ராணனுடன் சேர்த்தியை அடைகிறது என நிரூபிக்கப்பட உள்ளது.

**4-2-3 தத் மந: ப்ராண உத்தராத்**

**பொருள் -** மனம் ப்ராணனுடன் சேர்கிறது, மேலே உள்ள வாக்கியத்தால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** அடுத்து சாந். (6-8-6) – மந: ப்ராணே – ப்ராணனில் மனம் – என்று கூறப்பட்டுள்ளது. ஆக, இந்த்ரியங்களுடன் சேர்ந்த மனமானது ப்ராணனுடன் சேர்கிறது.

## அதிகரணம் – 3 – அத்யக்ஷாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** ப்ராணன் ஜீவனுடன் சேர்கிறது என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**4-2-4 ஸ: அத்யக்ஷே ததுபகமாதிப்ய:**

**பொருள் -** இந்த்ரியங்களின் எஜமானனாகிய ஜீவனிடம் ப்ராணன் சேர்கிறது. இப்படிப்பட்ட தொடர்பு கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** ப்ராணன் ஜீவாத்மாவுடன் சேர்கிறது. இதனை ப்ரு. (4-3-38) – ஏவம் ஏவ இமம் ஆத்மாநம் அந்தகாலே ஸர்வே ப்ராணா அபிஸமாயந்தி – (அரசனை வேலையாட்கள் பின் தொடர்வது போன்று) அந்திம காலத்தில் அனைத்து ப்ராணன்களும் ஜீவனிடம் சேர்கின்றன - என்று கூறியது.

## அதிகரணம் - 4 - பூதாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** ஜீவனுடன் கூடிய ப்ராணன் மற்ற பூதங்களுடன் சேர்ந்த தேஜஸ்ஸில் சேர்கிறது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**4-2-5 பூதேஷு தச்ச்ருதே:**

**பொருள் -** அனைத்து பூதங்களிலும்; இப்படியே ஓதப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (6-8-6) - ப்ராணஸ் தேஜஸி - ப்ராணன் தேஜஸ்ஸில் – என்பதில், உள்ள தேஜஸ் என்பது பூதங்களுடன் சேர்ந்த தேஜஸ்ஸையே குறிக்கிறது. ஆகவே ப்ராணன் பூதங்களுடன் சேர்தல் கூறப்பட்டது.

**4-2-6 ந ஏகஸ்மிந் தர்சயதோ ஹி**

**பொருள்** – ஒவ்வொன்றிலும் எனக் கூற இயலாது. இவ்விதம் அல்ல என்பதை ச்ருதியில் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – "சாந். (6-8-6) – தேஜஸி" என்பதில் உள்ள "தேஜஸ்" என்பது தேஜஸ்ஸை மட்டுமே குறிக்கவில்லை. ச்ருதி மற்றும் ஸ்ம்ருதியில் தேஜஸ் மட்டுமே கூறப்படவில்லை, த்ரிவ்ருத்கரணம் கூறப்படுவதால் ஆகும்.

## அதிகரணம் - 5 - ஆஸ்ருத்யுபக்ரமாத் அதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – மேலே கூறப்பட்ட வெளிக்கிளம்புதல் (உத்க்ராந்தி) என்பது மோக்ஷம் பெறுபவன், மற்றவர்கள் ஆகிய இருவருக்கும் மூர்த்தந்ய நாடியில் புகுவதற்கு முன்பு, பொதுவானதே ஆகும் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**4-2-7 ஸமாநா ச ஆஸ்ருத்யுபக்ரமாத் அம்ருதத்வம் ச அநுபோஷ்ய**

**பொருள்** - ப்ரஹ்மநாடியில் புகும்வரை இருவருக்கு பொதுவானதே ஆகும். அம்ருதத்வம் என்பது இந்த்ரியங்கள் நீங்காமல் உள்ளபோது ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சரீரத்திலிருந்து வெளிக்கிளம்புதல் என்பது ப்ரஹ்மஞானி, ப்ரஹ்மஞானி அல்லாதவன் ஆகிய இருவருக்கும் அர்ச்சிராதி மார்க்கத்திற்கு முன்புவரை பொதுவானதே ஆகும். ப்ரஹ்மஞானி அர்ச்சிராதி மார்க்கமாக ப்ரஹ்மத்தை அடைகிறான் என ச்ருதி கூறுகிறது. கட. (6-14), ப்ரு. (4-4-7) – யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யே அஸ்ய ஹ்ருதி ஸ்திதா: | அத மர்த்யோ அம்ருதோ பவதி அத்ர ப்ரஹ்ம ஸமச்நுதே – எந்த நேரத்தில் இவன் மனதில் உள்ள அனைத்து ஆசைகளும் விலகுகின்றதோ அப்போது இவன் மோக்ஷம் அடைந்து ப்ரஹ்மத்தை அடைகிறான் – என்னும் வாக்கியத்தில் உள்ள

“மோக்ஷம் பெறுதல், ப்ரஹ்மத்தை அடைதல்” போன்றவை, சரீரம் மற்றும் இந்த்ரியங்களுடைய ஸம்பந்தத்தை விடாமல் உபாஸனம் தொடங்குதலைக் குறிக்கின்றன.

**4-2-8 தத் அபீதே: ஸம்ஸார வ்யபதேசாத்**

**பொருள்** - ஸம்ஸாரத்தில் உள்ளபோதே மோக்ஷம்; காரணம், ப்ரஹ்மத்தை அடையும் வரையில் ஸம்ஸாரம் கூறப்படுவதால்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அர்ச்சிராதி மார்க்கமாக ப்ரஹ்மத்தை அடையும்வரை ஜீவாத்மாவிற்கு சரீர ஸம்பந்தம் தொடர்ந்தபடியே இருக்கும். ஆகவே மோக்ஷம் அடைதல் முதலானவற்றை முன்பு கூறியபடியே கொள்ளவேண்டும்.

**4-2-9 ஸூக்ஷ்மம் ப்ரமாணத: ச ததா உபலப்தே:**

**பொருள்** - ஸூக்ஷ்ம சரீரம் உள்ளதால் அதுவரை நீங்குவதில்லை. இப்படியே ப்ரமாணத்தால் அறியப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சரீரத்தை விட்டுக் கிளம்பிய பின்னரும் ஸூக்ஷ்ம சரீரம் தொடர்ந்தபடியே உள்ளது; இல்லையென்றால் ஜீவாத்மா ஏதோ ஒரு மார்க்கத்தில் செல்வது பொருந்தாது. இந்த ஒரு காரணத்தால் மட்டுமே ஸூக்ஷ்ம சரீரம் உள்ளதாகக் கூறப்படவில்லை; சந்த்ரனுடன் நடக்கின்ற உரையாடல்கள் குறித்தும் ப்ரமாணங்கள் உள்ளதால், ஸூக்ஷ்ம சரீரம் உள்ளது பொருந்துகிறது. கௌஷீ. (1-6) - தம் ப்ரதிப்ரூயாத் … ஸத்யம் ப்ரூயாத் - அவனிடம் (சந்த்ரனிடம்) பேச வேண்டும், உண்மையை மட்டுமே கூறவேண்டும் – என்னும் ப்ரமாணங்கள் காண்க.

**4-2-10 நோபமர்த்தேந அத:**

**பொருள்** - இதன் காரணமாகவே, பந்தம் நீங்கிய பின்னரும் மோக்ஷம் கூறப்படவில்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஆகவே (அதாவது மேலே கூறப்பட்ட காரணங்களால்) கட. (6-14), ப்ரு. (4-4-7) – அத மர்த்யோ அம்ருதோ பவதி – அப்போது இவன் மோக்ஷம் அடைந்து - என்ற வாக்கியமானது, சரீரம் நீங்குவதைக் கூறவில்லை என்றாகிறது.

**4-2-11 அஸ்ய ஏவ ச உபபத்தே: ஊஷ்மா**

**பொருள்** - ஸூக்ஷ்ம சரீரம் பொருந்த வேண்டும் என்பதால், ஸ்தூல சரீரத்தில் உஷ்ணம் உள்ளது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஸ்தூல சரீரத்தை விட்டு விலகும்போது, ஸூக்ஷ்ம சரீரத்தின் குணமாகிய "உடல் உஷ்ணம்" என்பது காணப்படுகிறது. இதன் காரணமாகவும் ஸூக்ஷ்ம சரீரம் உள்ளது என்றாகிறது. இத்தகைய உஷ்ணமானது, சரீரத்தின் மற்ற இடங்களில் காணப்படுவதில்லை என்பதால், இந்த உஷ்ணம் ஸ்தூல சரீரத்தின் உஷ்ணமாகக் கொள்ள இயலாது.

**4-2-12 ப்ரதிஷேதாத் இதி சேத் ந சாரீராத் ஸ்பஷ்டோ ஹி ஏகேஷாம்**

**பொருள்** – "உத்க்ராந்தி இல்லை" எனக் கூறப்பட்டதால், "உத்க்ராந்தி உண்டு" என்று கூறுவது சரியல்ல; இவ்விதம் வாதம் செய்வது தவறு. ஜீவனிடமிருந்து ப்ராணன் கிளம்பவில்லை என்று தெளிவாக உள்ளது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ப்ரு. (4-4-6) - அத ஆகாமயமாந: ... ந தஸ்ய ப்ராணா: உத்க்ராமந்தி - பலன்களில் விருப்பம் இல்லாதவர்கள் ... என உள்ளவர்களின் ப்ராணன் வெளிக் கிளம்புவதில்லை – என்று கூறப்படுவதால் ஞானிகளுடைய ப்ராணன் நீங்குவதில்லை என்றாகிறது. ஆகவே அவர்கள் இங்கேயே ப்ரஹ்மத்தை அடைகிறார்கள்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. ஸ்தூல சரீரத்தை விட்ட ஞானி ஒருவன், அர்ச்சிராதி மார்க்கமாகச் செல்லவேண்டிய காரணத்தால், அவனை விட்டுப் ப்ராணன் விலகுவதில்லை; இதனையே ப்ரு (4-4-6) – ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி – அவனிலிருந்து ப்ராணன் வெளிக்கிளம்புவதில்லை – என்னும் வாக்கியம் கூறியது. இந்தக்

கருத்தானது மாத்யந்தின சாகையில், சத. (14-7-2-8) – யோ அகாமோ நிஷ்காம ஆப்தகாம: ஆத்மகாம: ந தஸ்மாத் ப்ராணா: உத்க்ராமந்தி – யார் விருப்பம் அற்றவனோ, யார் ஆசைகளை விலக்கியவனோ, யார் ஆத்மாவில் மட்டுமே ஆசை கொண்டுள்ளானோ, யார் அனைத்தும் அடையப்பட்டவனாக உள்ளானோ அவனிடமிருந்து ப்ராணன்கள் உத்க்ராந்தி அடைவதில்லை – என்று தெளிவாகவே கூறப்பட்டது.

**4-2-13 ஸ்மர்யதே ச**

**பொருள் -** இதனை ஸ்ம்ருதியிலும் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம்** – ப்ரஹ்மஞானிக்கு மூர்த்தந்ய நாடி வழியே வெளிக்கிளம்புதல் உண்டு என்பதை ஸ்ம்ருதியில், யாஜ். (3-167) - ஊர்த்வம் ஏக: ஸ்திதஸ் தேஷாம் யோ பித்வா ஸூர்ய மண்டலம் | ப்ரஹ்மலோகம் அதிக்ரம்ய தேந யாதி பராம் கதிம் - எந்த ஒரு நாடியானது மேல் நோக்கிச் செல்கிறதோ அதன் வழியே சூரிய மண்டலத்தையும் பிளந்து சென்று, நான்முகனின் லோகத்தையும் கடந்து, பரமபதம் செல்கிறான் – என்றது.

## அதிகரணம் – 6 - பரஸம்பத்த்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – தேஜஸ் போன்றவை பரமாத்மாவுடன் இணைகின்றன என்பது நிரூபிக்கப்பட உள்ளது

**4-2-14 தாநி பரே ததா ஹ்யாஹ**

**பொருள் -** அவை பரமாத்மாவிடம் சேர்கின்றன; இப்படியே கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம்** - சாந். (6-8-6) - தேஜ: பரஸ்யாம் தேவதாயாம் – தேஜஸ் (அதாவது ஜீவனுடன் உள்ள பூதஸூக்ஷ்மங்கள்) பரமாத்மாவிடம் சேர்கிறது - என்றது. அதாவது, ஜீவாத்மாவுடன் சேர்ந்து செல்லும் பூதஸூக்ஷ்மங்கள் அனைத்தும், உயர்ந்த தேவதையிடம் (பரமாத்மாவிடம்) சென்று சேர்கின்றன.

## அதிகரணம் – 7- அவிபாகாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - மேலே கூறப்பட்டவை பரமாத்மாவுடன் சேர்கின்றன அல்லாமல் லயம் அடைவதில்லை என்று கூறப்பட உள்ளது.

**4-2-15 அவிபாகோ வசநாத்**

**பொருள்** – பிரித்துக் கூற இயலாதபடியான சேர்க்கை மட்டுமே, இப்படியே கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம்** – பரதேவதையுடனான சேர்க்கை என்பது பிரிக்க இயலாத நிலை என்பதே ஆகும். ப்ரு. (6-8-6) - வாங்மநஸி ஸம்பத்யதே – வாக்கானது மனதில் சேர்கிறது - என்ற இடத்தில் கூறப்பட்ட "ஸம்பத்யதே - சேர்கிறது" என்னும் பதமானது இவ்விதமே கூறுகிறது. இதனை காட்டிலும் வேறுவிதமாகப் பொருள் கொள்வதற்கு ப்ரமாணம் ஏதும் இல்லை. அதாவது வாக்கானது மனதில் சேர்ந்து, முற்றிலுமாக மறைவதில்லை.

## அதிகரணம் – 8 - ததோகோதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - மூர்த்தந்ய நாடியின் மூலம் மட்டுமே முக்தி அடைபவன் தனது சரீரத்தை விட்டு வெளியே கிளம்புகிறான் என்பது நிரூபிக்கப்பட்ட உள்ளது.

**4-2-16 ததோக: அக்ரஜ்வலநம் தத் ப்ரகாசி தத்வாரோ வித்யா ஸாமர்த்யாத் தச்சேஷ கத்யநுஸ்ம்ருதியோகாச்ச ஹார்த்தாநுக்ருஹீத: சதாதிகயா**

**பொருள்** - ப்ரஹ்மவித்யையின் திறன் காரணமாகவும், அந்த வித்யைக்கு அங்கமாக உள்ள அர்ச்சிராதி மார்க்கத்தையே சிந்தனை செய்தபடி இருத்தல் என்ற யோகத்தாலும், தனது இதயம் என்ற தாமரையில் அமர்ந்துள்ள எம்பெருமானால் அருளப்படுகிறான். இதனால் பகவான் வசிக்கின்ற அந்த இதயம் ஒளி வீசுகிறது. அந்த ஒளியின் மூலம் காண்பித்துக் கொடுக்கப்பட்ட நூற்று ஒன்றாவது நாடியான ஸுஷும்நை நாடி மூலம் கிளம்புகிறான்.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம்** - ப்ரஹ்மஞானியானவன் பரமபுருஷனின் ஆராதனை ரூபமாகவே உள்ளதான ப்ரஹ்மவித்யையின் மேன்மை மற்றும் உபாஸனத்தின் அங்கமாகவே உள்ளதும், தான் அன்றாடம் த்யானித்தபடி உள்ள அர்ச்சிராதி மார்க்கத்தைக் குறித்ததும் ஆகிய சிந்தனை போன்றவற்றால் பரமபுருஷனை மகிழ்விக்கிறான். இவ்விதம் மகிழ்ந்த பரமபுருஷனால் அந்த உபாஸகன் அனுக்ரஹம் செய்யப்படுகிறான். இதன் விளைவாக, ஜீவாத்மாவின் இதயத்தில் நாடி த்வாரம் உள்ள இடம் ஒளிர்கிறது. அந்த ஒளியின் மூலம் காண்பித்துக் கொடுக்கப்பட்ட நூற்று ஒன்றாவது நாடியான மூர்த்தந்ய நாடி மூலம் கிளம்புகிறான். இதயத்தில் உள்ளவன் பரமாத்மா பரமபுருஷனே ஆவான். இதனை ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகள் மஹா. நா. (13-2) – தஸ்யா: சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித: - அக்னியின் நடுவில் பரமாத்மா உள்ளான் – என்றும், கீதை. (15-15) - ஸர்வஸ்ய ச அஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட: - அனைத்தின் இதயத்திலும் நான் உள்ளேன் – என்றும் உள்ள வரிகளில் காணலாம்.

### 4-2-17 ரச்ம்யநுஸாரீ

**பொருள்** - சூரிய கிரணங்களின் வழியாகவே செல்கிறான்.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம்** - சாந். (8-6-5) – அதி ஏதைரேவ ரச்மிபி: ஊர்த்வமாக்ரமதே – சூரியனின் கதிர்கள் மூலமாகவே மேலே செல்கிறான் – என்பதன் மூலம் ச்ருதியானது, “ப்ரஹ்மஞானி சூரியனின் கதிர்கள் மூலமாகவே செல்கிறான்” என்கிறது. இரவிலும் சூரியனின் கிரணங்கள் மூலம் செல்வது இயலும். சூரியனின் கதிர்கள் இரவிலும் உள்ளன என்பதை கோடைக்காலங்களின் இரவில் உள்ள உஷ்ணம் மூலம் அறியலாம். ஆனால் பனிக்காலங்களில் இந்த வெப்பமானது இரவில் ஏன் உணரப்படவில்லையென்றால், பனியின் காரணமாகவே ஆகும்.

## அதிகரணம் – 10 – நிசாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - இரவில் மரணம் அடையும் ப்ரஹ்மஞானி, ப்ரஹ்மத்தை அடைவான் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**4-2-18 நிசி நேதி சேத் ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹ பாவித்வாத் தர்சயதி ச**

**பொருள்** - இரவில் மரணம் அடைந்தவனுக்கு மோக்ஷம் இல்லை என்பது சரியல்ல. கர்மத்தின் சம்பந்தம் என்பது சரீரம் உள்ளவரை மட்டுமே என்பதால்; இதனை வேதமும் கூறுகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – "திவா ச சுக்லபக்ஷ: ச - மரணம் அடைபவர்களுக்கு பகல்பொழுது, சுக்லபக்ஷம்", என்று தொடங்கி, "விபரீதம் து கர்ஹிதம் - இதற்கு மாறாக உள்ள காலங்கள் தாழ்ந்தவை ஆகும்" என்று கூறப்பட்டது. இதன் மூலம் இரவில் மரணம் அடைதல் என்பது நிந்திக்கப்பட்டது; எனவே இரவில் மரண அடையும் ப்ரஹ்மஞானி, ப்ரஹ்மத்தை அடைவதில்லை என்றாகிறது.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம்** – அப்படி அல்ல. காரணம், ப்ரஹ்மஞானிக்குத் தனது சரீரத்தை விடும் காலம்வரை கர்மத்தின் ஸம்பந்தம் உள்ளதால் ஆகும். பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களும் இறுதி சரீரம் உள்ளவரை மட்டுமே இருக்கின்றன. ஆகவே அவை ப்ரஹ்மஞானி ஒருவன் ப்ரஹ்மத்தை அடைவதைத் தடுப்பதில்லை. இதனை சாந். (6-14-2) – தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே – ப்ரஹ்மஞானிக்குத் தனது சரீரத்தை விடும் காலம்வரை மட்டுமே தாமதம் ஆகிறது; சரீரத்தை விட்டவுடன் ப்ரஹ்மப்ராப்தி ஏற்படுகிறது – என்பதில் காணலாம். ஆகவே இரவில் மரணம் ஏற்படுவதை நிந்தித்தது என்பது, ப்ரஹ்மஞானி அல்லாதவர்களுக்கே ஆகும்.

## அதிகரணம் -11 - தக்ஷிணாயநாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ப்ரஹ்மஞானி தக்ஷிணாயனத்தில் மரணம் அடைந்தாலும் ப்ரஹ்மப்ராப்தி உண்டு என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**4-2-19 அத: ச அயநே அபி தக்ஷிணே**

**பொருள் –** தக்ஷிணாயனத்திலும் அது போன்றே.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம் –** (இரவில் மரணம் அடைகின்ற ப்ரஹ்ம உபாஸகனுக்கும் ப்ரஹ்மப்ராப்தி உண்டு என்பது எந்தக் காரணத்தால் கூறப்பட்டதோ) அதே காரணத்தால் ப்ரஹ்மஞானி ஒருவன், தக்ஷிணாயன காலத்தில் மரணம் அடைந்தாலும் ப்ரஹ்மப்ராப்தி உண்டு.

**4-2-20 யோகிந: ப்ரதி ஸ்மர்யேதே ஸ்மார்த்தே சைதே**

**பொருள் -** இவை யோகிகள் குறித்து ஸ்ம்ருதியில் ஓதப்பட்ட தேவயான மற்றும் பித்ருயான மார்க்கங்கள் பற்றி உணர்த்தவே கூறப்பட்டன.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம் –** கீதை (8-23) - யத்ர காலே து அநாவ்ருத்திம் ஆவ்ருத்திம் சைவ யோகிந: | ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப - அர்ஜுனா! யோகி ஒருவன் எந்தெந்த காலத்தில் மரணம் அடைந்தால் மீண்டும் திரும்புதல் என்பது இல்லையோ – என்பது, மரணத்தின் நேரத்தைக் குறிக்கவில்லை. மாறாக, வித்யாநிஷ்டனுக்கு அர்ச்சிராதி கதியும், மற்றவர்களுக்கு வேறு மார்க்கமும் கூறப்பட்டது. அந்த மார்க்கங்களை எப்போதும் எண்ணியபடி இருக்கவேண்டும் என்பதை கீதை (8-23) - யத்ர காலே து அநாவ்ருத்திம் ஆவ்ருத்திம் சைவ யோகிந: | ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப - அர்ஜுனா! யோகி ஒருவன் எந்தெந்த காலத்தில் மரணம் அடைந்தால் மீண்டும் திரும்புதல் என்பது இல்லையோ – என்று கூறியது.

## மூன்றாம் பாதம் – கதி பாதம்

இந்தப் பாதத்தில் மூர்த்தந்ய நாடி வழியாக வெளிக்கிளம்பிய ப்ரஹ்மஞானியை ஸர்வேச்வரன் ஆதிவாஹிகர்கள் (கடந்த பாதத்தின் இறுதியில் உள்ள அடிக்குறிப்பு காண்க) மூலமாக ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் செல்வது குறித்துக் கூறப்படுகிறது. இதன் மூலம் வித்யையின் பலன் உணர்த்தப்படுகிறது.

## அதிகரணம் -1- அர்ச்சிராத்யதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** அனைத்து ப்ரஹ்மவித்யை நிஷ்டர்களும் அர்ச்சிராதி மார்க்கம் என்னும் ஒரே வழி மூலமே மோக்ஷம் அடைகின்றனர் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**4-3-1 அர்ச்சிராதிநா தத்ப்ரதிதே:**

**பொருள் -** அர்ச்சிராதி மூலம் மட்டுமே; இப்படியே அனைவரும் அறிவர்.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம் –** ப்ரஹ்மஞானிகள் அர்ச்சிராதி மார்க்கமாகவே செல்கின்றனர். இந்தப் பாதையைக் குறித்த அடையாளங்களே அனைத்து சாகைகளிலும் உள்ளன.

## அதிகரணம் – 2- வாய்வதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** ஸம்வத்ஸரத்தை அர்ச்சிராதி மார்க்கமாக அடையும் முக்தன், அதன் பின்னர் ஆதித்யனை அடைவதற்கு முன்பாக வாயுவை அடைகிறான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**4-3-2 வாயும் அப்தாத் அவிசேஷ விசேஷாப்யாம்**

**பொருள் -** ஸம்வத்ஸரத்தின் பின்னர் வாயுவை அடைவான், பொதுவாகவும் சிறப்பித்தும் கூறப்பட்டதால்.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம் -** சாந். (4-15-5) – மாஸேப்ய: ஸம்வத்ஸரம் ஸம்வத்ஸராத் ஆதித்யம் – மாதத்திலிருந்து ஸம்வத்ஸரம் (வருடம்), ஸம்வத்ஸரத்திலிருந்து ஆதித்யன் - என்று தேவலோகத்தை மாதம் மற்றும் ஆதித்யன் ஆகிய இரண்டிற்கும் நடுவில் சிலர் கூறுகிறார்கள். வேறு ஓர் இடத்தில் இந்த இரண்டிற்கும் இடையே வாயு கூறப்படுகிறது. தேவலோகம் என்ற பதமானது பொதுவான ஒன்றாகும்; இது பிரிக்கப்பட்டால் "தேவாநாம் லோக:" என்றாகிறது; இதன் மூலம் வாயுவையே குறிக்கிறது. வாயு என்பது அதன் சிறப்புக் குறிப்பாகும். ஆகவே தேவலோகம் மற்றும் வாயு ஆகிய இரண்டாலும், பொதுவாகவும் குறிப்பாகவும் வாயுவே கூறப்படுகிறது. எனவே ஸம்வத்ஸரத்திற்குப் பின்னர், ஆதித்யனுக்கு முன்னர், வாயுவே கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டும்.

## அதிகரணம் – 3 – வருணாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் -** அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்லும் முக்தனால் முதலில் தடித் என்று கூறப்படும் மின்னல் அடையப்படுகிறது; அதன் பின்னர் வருணனும், இந்த்ரனும் அடையப்படுகின்றனர் என்பது நிரூபிக்கப்பட்ட உள்ளது.

**4-3-3 தடித: அதி வருண: ஸம்பந்தாத்**

**பொருள் -** மின்னலுக்குப் பின்னர் வருணன்; தொடர்பு உள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம்** – தடித் எனப்படும் மின்னலுக்குப் பின்னர் வருணனைக் கூறவேண்டும். மின்னலானது மேகத்தின் நடுவில் உள்ளதால், வருணனுக்கு மேகத்தில் உள்ள நீரின் ஸ்வரூபம் காரணமாக, லோகத்திலும் வேதத்திலும் வருணனுக்கு மின்னலுடன் ஸம்பந்தம் உள்ளது என்று கூறப்படுகிறது. அதன் பின்னர் அந்த வாக்கியத்தில் உள்ள வரிசைப்படி இந்த்ரன் மற்றும் ப்ரஜாபதியைக் கொள்ளவேண்டும். ஆக வேறு எந்தவிதமான காரணமும் இந்த வரிசை மாறுதலுக்கு இல்லை.

## அதிகரணம் – 4 - ஆதிவாஹிகாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம் –** அர்ச்சிஸ் போன்றவர்கள் ப்ரஹ்மஞானியை ப்ரஹ்மத்திடம் அழைத்துச் செல்லும் தேவதைகள் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**4-3-4 ஆதிவாஹிகா: தல்லிங்காத்**

**பொருள்** – அர்ச்சிஸ் போன்றவர்கள் (ப்ரஹ்மஞானியை ப்ரஹ்மத்திடம் அழைத்துச் செல்லும்) தேவதைகளே; அடையாளம் உள்ளதால்.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம் –** அர்ச்சிஸ் முதலான தேவதைகள், ப்ரஹ்மஞானிகளை (ப்ரஹ்மத்திடம்) அழைத்துச் செல்வதற்காக பரமபுருஷனால் நியமிக்கப்பட்டவர்கள் ஆவர் என அறியலாம். ஏனென்றால், சாந். (4-15-5, 5-10-2) – ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி –

அவர்களை ப்ரஹ்மத்திடம் அழைத்துச் செல்கிறான் – என்னும் அடையாளம் உள்ளதால் ஆகும்.

**4-3-5 வைத்யுதேந ஏவ தத: தச்ச்ருதே:**

**பொருள்** - மின்னலுக்குப் பின்னர் அமாநவனுடன் ப்ரஹ்மஞானி செல்கிறான். இப்படியே உரைக்கப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – வைத்யுத புருஷனுடன் (மின்னல் புருஷனுடன்) ப்ரஹ்மத்தை அடையும்வரை ப்ரஹ்மஞானி செல்கிறான். ஏன்? இவ்விதமே ச்ருதி கூறுகிறது; சாந். (4-15-5, 6) - சந்த்ரமஸோ வித்யுதம் தத் புருஷோ அமாநவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி – அங்கிருந்து சந்த்ரமண்டலம், ஒளி (மின்னல்) என்று செல்கிறார்கள்; பின்னர் அவர்களை மனுஷன் அல்லாத அமானுஷன் என்ற ஒரு புருஷன், ப்ரஹ்மத்திடம் அழைத்துச் செல்கிறான் – என்றுள்ளது. வருணன், இந்த்ரன் மற்றும் ப்ரஜாபதி ஆகியோர், இந்த அமாநவ புருஷனுக்கு, ப்ரஹ்மஞானியை அழைத்துச் செல்லும் பணியில் உதவுகிறார்கள்.

## அதிகரணம் – 5 - கார்யாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – ஆதிவாஹிகர்கள் யாரை ப்ரஹ்மத்திடம் அர்ச்சிராதி மார்க்கமாக அழைத்துச் செல்கின்றனர் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**4-3-6 கார்யம் பாதரி: அஸ்ய கத்யுபபத்தே:**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ஹிரண்யகர்ப்ப நான்முகனை உபாஸிப்பவர்களை அழைத்துச் செல்வதாக பாதரி கருதுகிறார்; அவனுக்கே பொருந்தும் என்பதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – அர்ச்சிஸ் தொடக்கமாக உள்ள பலரும், கார்யபூதனாக (அதாவது படைக்கப்பட்டவனாக) உள்ள நான்முகனை உபாஸிப்பவர்களை ப்ரஹ்மத்திடம் அழைத்துச் செல்கிறார்கள். அவனுக்கு மட்டுமே அந்தக் கதியானது

பொருந்துகிறது. பரப்ரஹ்மம் எங்கும் நிறைந்துள்ளதால், அவனை உபாஸிப்பவர்களுக்கு “செல்லும் வழி” என்பது பொருந்தாது என பாதரி கருதுகிறார்.

**4-3-7 விசேஷிதத்வாத் ச**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) விசேஷமாக உரைக்கப்பட்டதாலும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ப்ரு. (6-2-15) - புருஷ: மாநஸ ஏத்ய ப்ரஹ்மலோகாந் கமயதி – ப்ரஹ்மத்தின் மனதால் உண்டாக்கப்பட்ட மாநஸ புருஷன், உபாஸகனை ப்ரஹ்மலோகத்திற்கு அழைத்துச் செல்கிறான் – என்றும், சாந். (8-14-1) – ப்ரஜாபதே: ஸபாம் வேச்ம ப்ரபத்யே - ப்ரஜாபதியின் அரச சபையை அடைகிறேன் – என்றும் உள்ள வாக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதால், அர்ச்சிஸ் முதலானவர்கள் ஹிரண்யகர்ப்பனை உபாஸிப்பவர்களையே அழைத்துச் செல்கிறார்கள் என்றாகிறது.

**4-3-8 ஸாமீப்யாத் து தத் வ்யபதேச:**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) நெருக்கமாக உள்ளவன் என்பதால், இப்படியே கூறப்படுகிறது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (4-15-5, 5-10-2) – ப்ரஹ்ம கமயதி – (அந்த வித்யுத் புருஷன்) ப்ரஹ்மத்திடம் அழைத்துப் போகிறான் – என்பதில் நான்முகனே ப்ரஹ்மத்திற்கு மிகவும் அருகில் உள்ளான் என்பதால், அர்ச்சிஸ் முதலானவர்கள் ஹிரண்யகர்ப்பனை உபாஸிப்பவர்களையே அழைத்துச் செல்கிறார்கள் என்றாகிறது.

**4-3-9 கார்ய அத்யயே ததத்யக்ஷேண ஸஹாத: பரம் அபிதாநாத்**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ப்ரஹ்மலோகம் அதன் எஜமானனான நான்முகனுடன் அழியும்போது, உபாஸகன் அங்கிருந்து பரப்ரஹ்மத்தை அடைகிறான் என்று கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஹிரண்யகர்ப்பனை அடைந்தபோதிலும், "மீண்டும் திரும்புவதில்லை" என்று உரைப்பதில் விரோதம் இல்லை. மஹா. நா. (12-3 ) – தே ப்ரஹ்மலோகே து பராந்த காலே பராம்ருதாத் பரிமுச்யந்தி ஸர்வே - ப்ரஹ்மலோகத்தில் உள்ள உபாஸகர்கள் அனைவரும் "பரன்" என்பதான நான்முகனின் ஆயுள்காலத்தின் முடிவில், பரப்ரஹ்மத்தால் முக்தி அடைகிறார்கள் - என்பதன் மூலம், "நான்முகனின் லோகம் அழிந்தாலும், அவன் ப்ரஹ்மஞானியுடன் சேர்ந்து கார்யமான ப்ரஹ்மலோகத்திலிருந்து புறப்பட்டு பரப்ரஹ்மத்தை அடைகிறான்" என்று தேறுகிறது.

**4-3-10 ஸ்ம்ருதேச்ச**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ஸ்ம்ருதியிலும் இவ்விதம் கூறப்பட்டது.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – ஸ்ரீகூ. பு. (12-269) - ப்ரஹ்மணா ஸஹ தே ஸர்வே - ப்ரஹ்மலோகத்தில் உள்ள உபாஸகர்கள் அனைவரும் – என்று தொடங்கி, ஸ்ரீகூ. பு. (12-269) - ப்ரவிசந்தி பரம் பதம் - பரமபதம் அடைகின்றனர் – என்று முடியும் ஸ்ம்ருதிலும் இதனை அறியலாம்.

**4-3-11 பரம் ஜைமிநி: முக்யத்வாத்**

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) பரப்ரஹ்மத்தை உபாஸிப்பவர்களையே ஆதிவாஹிகர்கள் அழைத்துச் செல்வதாக ஜைமிநி கருதுகிறார்; முக்கியமானதாக உள்ளதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – அர்ச்சிஸ் உள்ளிட்டவர்கள், பரப்ரஹ்மத்தை உபாஸிப்பவர்களை மட்டுமே அர்ச்சிராதி மார்க்கமாக பரப்ரஹ்மத்திடமே அழைத்துச் செல்கின்றனர் என்று ஜைமிநி கருதுகிறார். "ப்ரஹ்ம" என்ற பதமானது (நான்முகனை அல்லாமல்) ப்ரஹ்மத்தையே நேரடியாகக் கூறுவதால் ஆகும்.

**4-3-12 தர்சநாத் ச**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ச்ருதியில் காணலாம்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - சாந். (8-3-4) - அஸ்மாத் சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய – சரீரத்திலிருந்து புறப்பட்டு உயர்ந்த ஜ்யோதியை அடையும் ஜீவன், தனது ஸ்வரூபம் விளங்கப் பெறுகிறான் – என்று ச்ருதி கூறுவதாலும் ஆகும்.

**4-3-13 ந ச கார்யே ப்ரத்யபிஸந்தி:**

**பொருள் -** (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) அந்தக் கருத்தும் கார்யமான நான்முகன் குறித்து அல்ல.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (8-14-1) – ப்ரஜாபதே: ஸபாம் வேச்ம ப்ரபத்யே - ப்ரஜாபதியின் அரச சபையை – என்ற வாக்கியத்திலும் உலகின் பதியே கூறப்பட்டான் அல்லாமல், கார்யபூதனான நான்முகன் அல்லன். தைத். (2-2-3) – பதிம் விச்வஸ்ய – விச்வத்தின் பதி – என்னும் ச்ருதி வாக்கியம் மூலமாக, “ப்ரஜாபதி” என்ற பதமானது உயர்ந்த ப்ரஹ்மத்தையே நேரடியான பொருளில் தருவதை அறியலாம். “ப்ரஹ்மலோகம்” என்னும் பதமானது, “ப்ரஹ்மமே லோகம்” என்று கர்மதாராய ஸமாஸத்தில் (இது தமிழில் இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும். இரண்டு சொற்கள் இணைந்து ஒரு சொல்லாக நிற்கும். இவற்றில் முதல் சொல் பெயர்ச்சொல்லாகவும், இரண்டாவது சொல் பொதுச்சொல்லாகவும் காணப்படும். உதாரணமாக “தாமரைப்பூ”; இதில் “தாமரை” என்பது பெயர்ச்சொல், “பூ” என்பது பொதுச்சொல் ஆகும். இது போன்றே “ப்ரஹ்மலோகாந்” என்பதைக் கொள்ளவேண்டும்) உள்ளதாகக் கொள்ளவேண்டும். மஹா. நா. (12-3 ) – தே ப்ரஹ்மலோகே - ப்ரஹ்மலோகத்தில் உள்ள உபாஸகர்கள் – என்ற ச்ருதியில் உள்ள “ப்ரஹ்மலோகம்” என்பது பரப்ரஹ்மத்தையே குறிப்பதாகும். ஸ்ரீகூ. பு. (12-269) - ப்ரஹ்மணா ஸஹ தே ஸர்வே - ப்ரஹ்மலோகத்தில் உள்ள உபாஸகர்கள் – என்னும் ஸ்ம்ருதியானது, கார்யபூதனாகிய நான்முகனின் லோகத்தில் உள்ளவர்களைக் கூறி, அவர்கள் “ப்ர. ஸூ. (1-3-25) - தத் உபரி அபி - ப்ரஹ்ம உபாஸனம் என்பது, மனிதர்களைக் காட்டிலும் மேம்பட்ட தேவர்களுக்கும் உண்டு” என்பதற்கு ஏற்ப உபாஸிப்பதைக் கூறுகிறது.

**4-3-14 அப்ரதீகாலம்பநாந் நயதி இதி பாதராயண: உபயதா ச தோஷாத் தத்க்ரது: ச**

**பொருள் -** ப்ரஹ்மத்தின் அவயவமான சித் மற்றும் அசித்துக்களை பேறாகக் கொண்டு உபாஸிக்காதவர்கள் தவிர உள்ள மற்றவர்களையே அர்ச்சிராதி மார்க்கமாக அழைத்துச் செல்கின்றனர் என்று பாதராயணர் கருதுகிறார். இவ்விதம் கூறாமல் உள்ள மற்ற இரண்டு வாதங்களிலும் தோஷங்கள் உள்ளன. இதனையே தத்க்ரது ந்யாயம் கூறுகிறது.

**முக்கியமான குறிப்பு** (இந்தப் பகுதி வேதாந்தஸாரத்தில் உள்ளது அல்ல. இங்கு கூறப்படும் ஸித்தாந்தத்தை விளக்கவே எழுதப்பட்டதாகும்) – இங்கு ஒரு சில முக்கியமான விஷயங்களை அறிந்து கொள்ளவேண்டும். ப்ரதீகம் என்றால் ப்ரஹ்மத்தின் அவயவமான சித் மற்றும் அசித் ஆகும். இவற்றைச் சிலர் உபாஸிக்கக்கூடும். அதாவது நாமம் தொடங்கி ஆசை முடிய உள்ள பலவகையான அசித்துக்கள், ப்ராணன் என்னும் சித் ஆகியவற்றையே உபாஸிப்பவர்கள் ப்ரதீக உபாஸகர்கள் ஆவர். இவர்கள் இவற்றை ப்ரஹ்மம் என்றே எண்ணி (இதுவே ப்ரஹ்மத்ருஷ்டி எனப்படும்) உபாஸிப்பவர்கள் ஆவர். இது போன்று அல்லாமல், ஒரு சிலர் இவற்றை ப்ரஹ்மமாக எண்ணாமல், தாங்கள் அடையவேண்டிய பொருள் அவையே என்று உபாஸிப்பர். இது போன்ற உபாஸகர்கள் அடையும் பலன் அற்பமே ஆகும். ப்ரக்ருதியில் இருந்து விடுபட்ட ஆத்மாவை ப்ரஹ்மம் என்று எண்ணாமல், நேரடியான ப்ராப்யம் (இலக்கு) என்று உபாஸிப்பவன் ஆத்ம உபாஸகன் அல்லது கைவல்ய நிஷ்டன் ஆவான். மேலே கூறப்பட்ட பலரும் ப்ரதீகாலம்பனர் எனப்படுவர். இவர்களுக்கு ப்ரஹ்மத்தை அடைதல், அர்ச்சிராதி மார்க்கம் போன்ற எதுவும் இல்லை. ஒரு சிலர் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொண்ட தங்கள் ஆத்மாவை உபாஸிக்கக்கூடும். இவர்கள் ப்ரஹ்மாத்மக ஸ்வ ஆத்ம உபாஸகர்கள் அல்லது பஞ்சாக்நி வித்யா நிஷ்டர்கள் ஆவர். மேலும் சிலர் நேரடியாகவே ப்ரஹ்மத்தை ப்ராப்யமாக உபாஸிப்பர்; இவர்கள் ப்ரஹ்மநிஷ்டர்கள் ஆவர். இவர்கள் நாமம் போன்ற ப்ரதீகங்களை உபாஸிக்காமல், பூர்ணமான ப்ரஹ்மத்தையே உபாஸிப்பதால் அப்ரதீகாலம்பனர்கள் என்று கூறப்படுவர். இவர்களுக்கு ப்ரஹ்மப்ராப்தி மற்றும் அர்ச்சிராதி மார்க்கம் உண்டு. இதுவே இங்கு கூறப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – பெயர்கள் தொடங்கி ப்ராணன் முடிய உள்ள பலவற்றாலும் குறிக்கப்படுவதும், சேதநம் மற்றும் அசேதநம் என்று ஜீவாத்மா முடிய

உள்ளதும் ஆகிய அனைத்தையும் ப்ரஹ்மம் என்ற பார்வையிலோ அல்லது அந்தந்த வஸ்துக்களுடைய ஸ்வரூபத்திலோ உபாஸிப்பவர்கள் “ப்ரதீக ஆலம்பநர்” எனப்படுவர். மற்றவர்கள் “அப்ரதீக ஆலம்பநர்கள்” ஆவர். அர்ச்சிஸ் முதலானவர்கள், பஞ்சாக்னி வித்யையுடன் கூடியவர்களையும் பரப்ரஹ்ம உபாஸகர்களையுமே அர்ச்சிராதி மார்க்கமாக அழைத்துச் செல்வதாக பாதராயணர் கூறுகிறார். கார்யபூதமான நான்முகனை மட்டுமே அவர்கள் அடையும்படிச் செய்கிறார்கள் அல்லது பரமாத்மாவை மட்டுமே அவர்கள் அடையும்படிச் செய்கிறார்கள் என்று கூறினால் மட்டுமே அனைத்துவிதமான உபநிஷத்துக்களுடனும் முரண்பாடு உண்டாகும். கார்யமான நான்முகனை உபாஸிப்பவர்களை அழைத்துச் செல்கின்றனர் என்ற கருத்து மூலம், சாந். (4-15-5, 5-10-2) – ப்ரஹ்ம கமயதி –ப்ரஹ்மத்திடம் அழைத்துச் செல்கிறான் – என்றும், சாந். (8-3-4, 8-12-3) –பரஞ்ஜோதிருபஸம்பத்ய – பரஞ்ஜோதியாக உள்ள பரமாத்மாவை அடைகிறான் – என்றும் உள்ள ச்ருதிகள் முரணாகி விடுகின்றன. பரப்ரஹ்மத்தை உபாஸிப்பவர்களை மட்டுமே அழைத்துச் செல்கின்றனர் என்னும் விதிமுறை இருந்தால், ப்ரு. (6-2-15 ) – ய ஏவம் ஏதத் விது: யே சாமீ அரண்யே ச்ரத்தாம் ஸத்யம் உபாஸதே தே அர்ச்சிஷம் அபி ஸம்பவந்தி - யார் தங்கள் ஆத்மாக்களை ப்ரஹ்மாத்மகம் என்று உபாஸனை செய்கின்றனரோ, எந்த உபாஸகர்கள் கானகத்தில் இருந்தபடி ச்ரத்தையுடன் ஸத்யம் எனப்படும் ப்ரஹ்மத்தை உபாஸிக்கின்றனரோ அவர்கள் அர்ச்சிராதி மார்க்கமாகச் செல்கின்றனர் – என்றுள்ள வாக்கியத்துடன் முரண்பாடு ஏற்படும்.

கார்யப்ரஹ்மத்தை அடைகிறான் என்று கூறினால், தத்க்ரது ந்யாயம் பாதிக்கும் (எவ்விதம் உபாஸிக்கிறானோ அப்படியே பலன் அடைகிறான் என்பதே தத்க்ரது ந்யாயம் ஆகும்). அர்ச்சிராதி மார்க்கமாகச் செல்பவர்கள் ப்ரஹ்மத்தை அடைகிறார்கள் என்றும், அவர்கள் மீண்டும் திரும்புவதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. பஞ்சாக்னிவித்யை நிஷ்டர்கள், ப்ரக்ருதியுடன் கலக்காத ஆத்மாவையே, ப்ரு. (3-7-22) – ய ஆத்மநி திஷ்டந் – அவனே ஆத்மா – என்பதற்கு ஏற்ப ப்ரஹ்மமாக எண்ணி உபாஸிக்கிறார்கள். ஆகவே அவர்கள் “அப்ரதீக ஆலம்பநர்கள்” என்றே ஆகிறார்கள். இதன் விளைவாக தத்க்ரது ந்யாயத்திற்கும் விரோதம் ஏற்படவில்லை. இருவருமே ப்ரஹ்மத்தை இரண்டுவிதமாக உபாஸிக்கிறார்கள்; ஒருவர் தன்னைச் சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மத்தையும், மற்றவர் ப்ரஹ்ம ஸ்வரூபமான தன்னையும் உபாஸிக்கிறார்.

**4-3-15 விசேஷம் ச தர்சயதி**

**பொருள்** – ச்ருதி குறிப்பிட்டு உரைப்பதைக் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (7-1-5) - யாவந் நாம்நோ - நாமங்களின் ஆதிக்கம் எந்த அளவு பரவியுள்ளதோ – என்பதன் மூலம், "கார்யபூத நான்முகனை உபாஸிப்பவர்களுக்கு ப்ரஹ்மத்தை அடைதல் என்பதை காட்டிலும் வேறான பலன்கள், குறிப்பிட்ட இடம் மற்றும் காலத்தில் மட்டுமே கிட்டுகின்றன" என்று தேறுகிறது.

## நான்காம் பாதம் – முக்தி பாதம்

இந்தப் பாதத்தில் பரப்ரஹ்மத்தை அடைந்த பின்னர் முக்தாத்மா பெறுகின்ற செல்வம் என்னும் பலன் நிரூபிக்கப்படுகிறது.

### அதிகரணம் -1- ஸம்ப்த்யாவிர்பாவாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - முக்தி பெற்ற நிலையில் முக்தாத்மா தனது இயல்பான ஸ்வரூபத்தை அடைகிறான் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**4-4-1 ஸம்பத்ய ஆவிர்பாவ: ஸ்வேந சப்தாத்**

**பொருள்** - ப்ரஹ்மத்தை அடைந்து பெறுவது ஆவிர்பாவமே (அதாவது, முன்பு மறைந்து இருப்பதே வெளிப்படுகிறது); ஸ்வேந என்ற பதம் காரணமாக ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - சாந். (8-12-3) – ஏவம் ஏவ ஏஷ ஸம்ப்ரஸாத: அஸ்மாத் சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே - இவ்விதம் உபாஸனம் செய்த ஜீவன் தனது சரீரத்தை விட்டு வெளிக்கிளம்பி, உயர்ந்த ஜ்யோதியை அடைந்து, தனது இயல்பான நிலையை (ஸ்வரூபத்தை) பெறுகிறான் – என்றது. அதாவது, எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள கர்மங்களின் காரணமாக ப்ரத்யகாத்மா தன்னுடைய ஸ்வரூபம் மறைந்து காணப்படுகிறான். உயர்ந்த

ஜ்யோதியை அடைந்த பின்னர் அவனுடைய ஸ்வரூபம் வெளிப்படுகிறது. காரணம், சாந். (8-3-4, 8-12-3) – ஸ்வேந ரூபேண - அவனுடைய ஸ்வரூபம் – என்று கூறுவதால் ஆகும்.

**4-4-2 முக்த: ப்ரதிஜ்ஞாநாத்**

**பொருள்** - விடுபட்ட ஸ்வரூபமே, இப்படியே உறுதியாகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ஆகவே ஸ்வரூபம் என்பது எப்போதும் இருப்பது என்றாலும், கர்மபந்தங்கள் நீங்கியவுடன், எல்லையற்ற ஞானத்துடன் கூடிய ஸ்வரூபமானது, முக்தி நிலையில் மட்டுமே வெளிப்படுகிறது என்று கூறப்பட்டது. அந்த ஆத்மா விழிப்பு உள்ளிட்ட நிலைகளில் இருந்தும் விடுபட்டவனாக உள்ளான் என்பதைக் கூறுவதற்காகவே, சாந். (8-9-3) - ஏதம் த்வேவ தே பூய: அநுவ்யாக்யாஸ்மி – முன்பு கூறப்பட்ட ஆத்மாவைப் பற்றி நான் மீண்டும் விரிவாகக் கூறுகிறேன் - என்று ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது.

**4-4-3 ஆத்மா ப்ரகரணாத்**

**பொருள்** - ப்ரகரணம் மூலமாக அறியலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – ப்ரகரணத்தின் காரணமாக, சாந். (8-9-3) - பூய: அநுவ்யாக்யாஸ்மி – நான் மீண்டும் விரிவாகக் கூறுகிறேன் - என்று உரைக்கப்படும் வாக்கியமானது, பாபங்கள் நீங்கிய தன்மை முதலான உயர்ந்த குணங்களுடன் கூடிய ஆத்மாவைக் குறித்தே உள்ளது என அறியலாம். சாந். (8-7-1) - ய ஆத்மா அபஹதபாப்மா, ஆத்மாவானது பாபங்கள் அற்றது – என்று தொடங்கி, சாந். (8-7-1) - ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: ஸ: அந்வேஷ்டவ்ய: - தனது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறப் பெற்றது, உறுதி கொண்டது, தேடத்தக்கது – என்று கூறி, சாந். (8-9-3) - ஏதம் த்வேவ தே பூய: அநுவ்யாக்யாஸ்மி – முன்பு கூறப்பட்ட ஆத்மாவைப் பற்றி நான் மீண்டும் விரிவாகக் கூறுகிறேன் – என்று முடித்தது.

## அதிகரணம் – 2 - அவிபாகேநத்ருஷ்டவாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – முக்தி பெற்ற ஜீவன் தனது ஆத்மாவானது பரமாத்மாவை விட்டுப் பிரியாதது என்று எண்ணியபடியே அனுபவிக்கிறான் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

**4-4-4 அவிபாகேந த்ருஷ்டத்வாத்**

**பொருள்** - வேறுபடாமல் உள்ளதாகவே, இப்படியாகவே காணப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – தன்னுடைய ஸ்வரூபம் வெளிப்பட்ட முக்தாத்மா ஒருவன், தனது ஆத்மாவைச் சரீரமாகக் கொண்ட பரப்ரஹ்மத்தை, தன்னை விட்டு வேறுபடாமல், "அஹம் ப்ரஹ்மாஸ்மி – நான் ப்ரஹ்மமாகவே உள்ளேன் (அதாவது ப்ரஹ்மத்தைத் தனது ஆத்மாவாகக் கொள்க)" என்று அனுபவித்தபடி உள்ளான். ப்ர. ஸூ. (4-1-3) - ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்தி ச - தன்னுடைய ஆத்மாவாக பரமாத்மா உள்ளதால், ஜீவனையும் உபாஸிக்கவேண்டும் – என்று கூறியவிதத்தில், அவன் ப்ரஹ்மத்தை உபாஸிக்கவேண்டும் என்றால், மேலே கூறியபடியே அவனுடைய ஸ்வரூபத்தைக் காணவேண்டும். ஸத. (14-6-7-30) – ய ஆத்மநி திஷ்டந் … யஸ்ய ஆத்மா சரீரம் … ஸ த ஆத்மா - யார் ஜீவனின் உள்ளும் புறமும் பரவி உள்ளானோ … யாருக்கு இந்த ஜீவன் சரீரமோ … அந்த ஆத்மா – என்றும், சாந். (6-8-7) – தத் த்வம் அஸி – நீயே அதுவாகிறாய் – என்றும் உள்ள சாஸ்த்ரங்கள் மூலமே உபாஸிக்கப்படும் வஸ்து கூறப்படுகிறது.

## அதிகரணம் – 3 - ப்ராஹ்மாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – முக்தி பெறுகின்ற நிலையில் தனது ஞானஸ்வரூபம் விளக்கம் பெறுவது மட்டும் அல்லாமல், ப்ரஹ்மத்தின் தன்மைகளான பாபங்கள் அற்ற தன்மை போன்றவற்றையும் முக்தாத்மா அடைகிறான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**4-4-5 ப்ராஹ்மேண ஜைமிநி: உபந்யாஸாதிப்ய:**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) ப்ரஹ்மத்தின் குணங்களால் என்று உபந்யாஸம் காணப்படுவதால், இப்படியே ஜைமிநி கருதுகிறார்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - இப்படியாக விளங்கப் பெற்ற ஜீவாத்மாவின் ஸ்வரூபமானது, ப்ரஹ்மத்தைப் போன்றே, "பாபங்கள் அற்ற தன்மை" முதலானவற்றை உள்ளடக்கியதே ஆகும். இவை அனைத்தும் ப்ரஹ்மத்தின் குணங்கள் ஆகும்; அவையே ப்ரத்யகாத்மாவின் குணங்களாகவும் உள்ளன. இதனை, சாந். (8-7-1) – ய ஆத்மா அபஹதபாப்மா - இந்த ஜீவன் பாபங்கள் அற்றவன் – என்று தொடங்கும் வாக்கியங்கள் மூலம் அறியலாம். இந்தக் கருத்தே சாந். (2-12-3) – ஜக்ஷந் க்ரீடந் ரமமாண: - உண்ணுதல், விளையாடுதல், மகிழ்தல் – என்பது போன்றவற்றிலும் கூறப்படுவதாக ஜைமிநி கருதுகிறார்.

**4-4-6 சித் இதி தந்மாத்ரேண தத் ஆத்மகத்வாத் இதி ஔடுலோமி:**

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) "ஞானமயமாக மட்டுமே"; இப்படியே ஓதப்படுவதால்; இவ்விதமே ஔடுலோமி கருதுகிறார்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - ப்ரு. (2-4-12) – விஜ்ஞாந கந ஏவ – ஆத்மா முழுவதும் ஞானமயமாகவே உள்ளது – என்பது போன்ற வாக்கியங்கள் மூலம், ஜீவாத்மாவின் ஸ்வரூபம் என்பது "ஞானம் மட்டுமே" ஆகும் என்று ஔடுலோமி கருதுகிறார்.

**4-4-7 ஏவம் அபி உபந்யாஸாத் பூர்வபாவாத் அவிரோதம் பாதராயண:**

**பொருள்** - ஞானமாத்ரம் என்பதை ஏற்றாலும் மற்ற தன்மைகள் உள்ளதாகக் கொள்வதில் முரண்பாடு இல்லை. இப்படியே பாதராயணர் எண்ணுகிறார். இதுவே வாக்கியத்தில் கூறப்பட்டதாலும், முன்னரே உள்ளதாலும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** (கடந்த இரண்டு ஸூத்ரங்களில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) – ப்ரு. (2-4-12) – விஜ்ஞாந கந ஏவ – ஆத்மா முழுவதும் ஞானமயமாகவே

உள்ளது – என்றுள்ள வாக்கியத்தின்படி ஜீவாத்மா தனக்குத்தானே ப்ரகாசிக்கும் ஞானத்தையே தனது ஸ்வரூபமாகக் கொண்டவன் என்று தேறுகிறது. ஆனாலும் சாந். (8-7-1) – ய ஆத்மா அபஹதபாப்மா - இந்த ஜீவன் பாபங்கள் அற்றவன் – என்பது போன்ற வாக்கியங்களால் முன்பு கூறப்பட்ட "பாபங்கள் அற்றவன்" முதலான குணங்களும் அவனுக்கு உள்ளன. இந்த இரண்டுவிதமான கருத்துக்களுக்குள் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. ஆகவே ஒன்று மற்றொன்றைத் தள்ளவில்லை. எனவே இந்த இரண்டுமே ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தில் உள்ளதாக பகவான் பாதராயணர் கருதுகிறார்.

## அதிகரணம் – 4 – ஸங்கல்பாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – தனது ஸங்கல்பத்தால் மட்டுமே முக்தி நிலையில் ஜீவன் தனது விருப்பங்களை அடைகிறான் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**4-4-8 ஸங்கல்பாத் ஏவ தத் ச்ருதே**

**பொருள்** - ஸங்கல்பத்தால் மட்டுமே; இப்படியே ஓதப்பட்டது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (8-2-1) - ஸ யதி பித்ருலோக காம: – முக்தன் தனது பித்ருலோகத்திற்குச் செல்லவேண்டும் என்று விரும்பியவுடன் – என்பதில், சாந். (8-2-1) - ஸங்கல்பாத் ஏவ பிதர: அஸ்ய – அவனது ஸங்கல்பத்தால் மட்டுமே பித்துக்கள் – என்று, "அவனது ஸங்கல்பம் மூலம் பித்ருக்கள் தோன்றுகிறார்கள்" என்பது கூறப்பட்டது. பரமபுருஷன் தனது லீலை காரணமாக தசரதன், வஸுதேவன் முதலானவர்களுடைய புத்திரனாக, தனது ஸங்கல்பத்தால் அவதரிக்கிறான்; இதனைப் போன்றே பரமபுருஷனுடைய லீலை காரணமாக முக்தாத்மா தனது ஸங்கல்பத்தால் பித்ருக்களை வரும்படிச் செய்யலாம்.

**4-4-9 அத ஏவ ச அநந்ய அதிபதி:**

**பொருள்** – இந்தக் காரணத்தால், முக்தன் ஸர்வேச்வரனைத் தவிர வேறு யாரையும் தனது எஜமானனாகக் கொண்டவன் அல்லன்.

**வேதாந்தஸாரம் ஸிந்தாந்தம்** – ஸூத்ரத்தில் உள்ள “அத ஏவ – இந்தக் காரணத்தால்” என்பது, சாந். (8-7-1) – அபஹதபாப்மா … ஸத்யஸங்கல்ப: - ஆத்மாவானது பாபங்கள் அற்றது … ஸங்கல்பம் கொண்டது – என்பதைக் கூறுகிறது. இந்தக் காரணத்தால், முக்தாத்மா கர்மவசப்பட்டவன் அல்லன்.

## அதிகரணம் - 5 - அபாவாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – முக்தாத்மா ஒரு சில கட்டங்களில் சரீரம் உள்ளவனாகவும், சில கட்டங்களில் சரீரம் அற்றவனாகவும் உள்ளான் என்பது கூறப்பட்டுள்ளது.

### 4-4-10 அபாவம் பாதரி: ஆஹ ஹி ஏவம்

**பொருள்** – (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) சரீரம் போன்றவை முக்தாத்மாவிற்கு இல்லை என்று பாதரி கூறுகிறார். வேதங்களும் இப்படியே ஓதுகின்றன.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - முக்தனுக்குச் சரீரம், இந்த்ரியங்கள் போன்றவை இல்லை என்றே பாதரி கருதுகிறார். இதனை சாந். (8-12-1) – ந ஹ வை ஸ சரீரஸ்ய - ஒருவன் சரீரத்துடன் உள்ளபோது (இந்த உலகில் காணப்படும் இன்பதுன்பங்கள் அவனை விட்டு விலகுவதில்லை) என்பதன் மூலம் அறியலாம்.

### 4-4-11 பாவம் ஜைமிநி: விகல்பாமநநாத்

**பொருள்** - (இது பூர்வபக்ஷம் மட்டுமே உள்ள ஸூத்ரமாகும்) முக்தாத்மாவிற்குச் சரீரம் மற்றும் இந்த்ரியங்கள் உண்டு என ஜைமிநி கருதுகிறார்; அவன் பலவிதமாக உள்ளதால்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** – சாந். (7-26-2) - ஏகதா பவதி - ஒருவிதம் ஆகிறான் – என்றுள்ள வாக்கியங்கள் மூலமாக, சரீரம் மற்றும் இந்த்ரியங்களால் முக்தாத்மா பலவிதமாக உள்ளான் என்று அறியப்படுகிறது. ஆகவே முக்தனுக்குச் சரீரம் மற்றும் இந்த்ரியங்கள் உண்டு என்றே ஜைமிநி கூறுகிறார்.

**4-4-12 த்வாதசாஹவத் உபயவிதம் பாதராயண: அத**

**பொருள்** - தனது ஸங்கல்பத்தால் சரீரத்துடன் கூடியும், இல்லாமலும் உள்ளான் என பாதராயணர் கருதுகிறார்; த்வாதசாஹம் போன்று.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – (கடந்த இரு ஸூத்ரங்களில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) – முக்தாத்மா சில நேரங்களில் சரீரம் உள்ளவனாகவும், சில நேரங்களில் சரீரம் அற்றவனாகவும் என இரண்டுவிதமாக உள்ளான் என்று ச்ருதிகள் கூறுகின்றன. த்வாதச யாகம் போன்று இருக்கலாம்; அதாவது, அந்த யாகமானது ஸத்ர யாகம் என்னும் வடிவிலோ அல்லது அஹீந யாகம் என்னும் வடிவிலோ இருக்கலாம்; அதே போன்று இங்கும் கொள்ளவேண்டும் என்று கருத்து (ஸத்ர யாகத்தில் 17 முதல் 24 யஜமானர்கள் இருப்பர். ஆனால் அஹீந யாகத்தில் ஒரே ஒரு யஜமானர் மட்டுமே இருப்பார்).

**4-4-13 தந்வபாவே ஸந்த்யவத் உபபத்தே:**

**பொருள்** - சரீரம் இல்லையென்றால், கனவு போன்று பொருந்தும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – முக்தாத்மாவிற்கு தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட சரீரம் போன்றவை இல்லை; ஆனாலும் அவனுக்கு, பரமபுருஷனால் படைக்கப்பட்ட சரீரம் போன்றவற்றால் போகங்கள் ஏற்படும்விதமான லீலாரஸத்தை அனுபவிக்கிறான். இது, ப்ரு. (4-3-10) – அத ரதாந் ரதயோகாந் பத: ஸ்ருஜதே – (கனவு நிலையில்) தேர்கள் மற்றும் அவற்றில் பூட்டப்பட்ட குதிரைகள், அந்தத் தேர்கள் செல்லும் வழிகள் ஆகியவற்றை (பரமாத்மா) படைக்கிறான் – என்பதில் கூறப்படும் "கனவில் ஏற்படும் ஸ்ருஷ்டிகளை அனுபவித்தல்" என்பது போன்று ஆகும்.

**4-4-14 பாவே ஜாக்ரத்வத்**

**பொருள்** - சரீரம் உள்ளபோது விழித்திருக்கும் ஜீவன் போன்றே.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - முக்தனுக்கு தனது ஸங்கல்பத்தின் மூலமே ஸ்ருஷ்டிக்கப்படும் சரீரம் முதலானவை மூலம், விழிப்பு நிலையில் உள்ள ஜீவன் போன்று, முக்தனும் இன்பமாக அனுபவிப்பான்.

**4-4-15 ப்ரதீபவத் ஆவேச: ததா ஹி தர்சயதி**

**பொருள்** - விளக்கு போன்று ஆத்மா பரவியிருக்கலாம். இப்படியே வேதங்களில் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் -** ஒரு விளக்கானது தான் ஒரே இடத்தில் உள்ளபோதிலும் தனது ஒளி மூலமாக அனைத்து இடங்களிலும் பரவி நிற்கிறது. இது போன்று ஆத்மாவானது ஒரு இடத்தில் உள்ளபோதிலும், தனது ஒளி (இதுவே தர்மபூத ஞானம் எனப்படும்) மூலம், அனைத்து அனுபவங்களையும் அடைகிறான். இதனை ச்வே. (5-9) - வாலாக்ர சதபாகஸ்ய - ஒரு நெல்லின் நுனியை நூறாக வெட்டி – என்று தொடங்கி, ச்வே. (5-9) - சாநந்த்யாய கல்பதே - எங்கும் பரவி உள்ளான் – என்று முடியும் வாக்கியத்தில் காணலாம்.

**4-4-16 ஸ்வாப்யய ஸம்பத்த்யோரந்யதராபேக்ஷம் ஆவிஷ்க்ருதம் ஹி**

**பொருள்** - உறக்கநிலை அல்லது மரணநிலை ஆகிய இரண்டில் ஒன்றை மட்டுமே கூறுகிறது. இதனை உபநிஷத்தில் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** - ப்ரு. (4-3-21) – ப்ராஜ்ஞேந ஆத்மநா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் கிஞ்சந வேதநாந்தரம் – அனைத்து அறிந்த பரமாத்மாவுடன் சேர்ந்தவன், உள்ளும்புறமும் உள்ள எதனையும் அறிவதில்லை – என்ற வாக்கியமானது (முக்தாத்மாவைக் குறித்து உள்ளது அல்ல; அந்த வாக்கியமானது) ஆழ்ந்த உறக்கம் அல்லது மரணம் என்பதான நிலைகளில் ஒன்றை மட்டுமே கூறுகிறது. ஆழ்ந்து உறங்கும் நிலையில் ஞானம் இன்மை குறித்து சாந். (8-11-1) – நாஹ கல்வயம் ஏவம் ஸம்ப்ரத்யாத்மாநம் ஜாநாதி அயம் அஹம் அஸ்மி - இந்த ஜீவன் உறங்கும் போது, "நான் இங்கு உள்ளேன், நான் இன்னவன்" என்று தன்னையும் அறியாமல் உள்ளான் – என்று கூறுகிறது.

## அதிகரணம் – 6 - ஜகத்வ்யாபாரவர்ஜாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – உலகைப் படைப்பது போன்ற ப்ரஹ்மத்தின் செயல்பாடுகள் முக்தாத்மாவுக்கு இல்லை. போகத்தில் மட்டுமே ஒற்றுமை காணப்படுகிறது. முக்தாத்மா ஸம்ஸாரத்திற்குத் திரும்புவதில்லை. இது போன்ற பலவும் நிரூபிக்கப்பட்ட உள்ளது.

**4-4-17ஜகத் வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாத் அஸந்நிஹிதத்வாத் ச**

**பொருள்** – ஜகத்வ்யாபாரங்கள் [அனைத்துவிதமான சேதனங்கள் மற்றும் அசேதனங்களின் ஸ்வரூபம், இருப்பு மற்றும் அவற்றின் செயல்பாடுகள் (ஸ்வரூபம், ஸ்திதி மற்றும் ப்ரவ்ருத்தி) ஆகியவற்றை நியமிப்பதாகும்] தவிர்க்கப்பட்டன; இது ப்ரகணத்தின் மூலம் காணலாம்; உலகைப் படைத்தல் போன்றவை ப்ரகரணங்களில் கூறப்படவில்லை.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – முக்தாத்மாவிற்கு "பாபங்கள் நீங்கிய தன்மை" தொடக்கமாக, "ஸத்யஸங்கல்பம்" முடிய உள்ள தன்மைகள் உள்ளன. ஆனால் இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்தல் முதலானவற்றுக்குக் காரணமாக உள்ள தன்மை இல்லை. ப்ரஹ்மத்திற்கு மட்டுமே அத்தகைய தன்மைகள் உள்ளன. இதனை தை. (3-1) – யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே – எதனிடம் இந்த பூதங்கள் உண்டாகின்றனவோ – என்று தொடங்கி, தை. (3-1) - தத் ப்ரஹ்ம – அதுவே ப்ரஹ்மம் – என்று முடியும் வாக்கியம் உள்ள பகுதி கூறுகிறது. மேலும், ஸ்ருஷ்டி குறித்துக் கூறப்படும் பகுதிகளில், முக்தாத்மா குறித்து ஏதும் கூறப்படவில்லை. முக்தனுக்கு உள்ள மாஹாத்ம்யங்கள் எதுவும் மறைக்கப்படாமல் உள்ளன. அவன் பரிபூர்ணமான ப்ரஹ்ம அனுபவத்தை அடைகிறான்; ப்ரஹ்ம ஆனந்தத்தையும் அறிகிறான். ப்ரஹ்மத்திற்குக் கூட இத்தகைய ஸ்ருஷ்டி முதலானவைகள் ஒரு லீலைக்காகவே ஆகும். இது ப்ர. ஸூ. (2-1-33) - லோகவத் து லீலா கைவல்யம் – என்பதில் கூறப்பட்டது.

**4-4-18 ப்ரத்யக்ஷோபதேசாத் இதி சேத் ந ஆதிகாரிக மண்டலஸ்தோக்தே:**

**பொருள்** - ச்ருதியில் கூறப்பட்டதால் தள்ள இயலாது என்பது சரியல்ல; அந்த வரிகளில் நான்முகன் போன்றவர்களின் உலகில் உள்ள போகங்கள் கூறப்பட்டதால் ஆகும்.

**வேதாந்தஸாரம் பூர்வபக்ஷம்** - தை. (3-10-5) – இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந் – விரும்பிய லோகங்களில் விரும்பிய உருவம் எடுத்தபடி முக்தாத்மா ஸஞ்சரிக்கிறான் – என்றும் ச்ருதி வாக்கியங்கள் மூலம், முக்தனுக்கு ஜகத்வ்யாபாரம் உபதேசிக்கப்படுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – அப்படி அல்ல. முக்தாத்மா ஒருவன், குறிப்பிட்ட கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள ஹிரண்யகர்ப்பன் முதலானவர்களுடைய லோகங்களில் உள்ள இன்பங்களை அனுபவிக்கிறான். அவன் அனைத்தையும் நியமிப்பதாகக் கூறவில்லை.

**4-4-19 விகாராவர்த்தி ச ததா ஹி ஸ்திதிமாஹ**

**பொருள்** - மாற்றங்கள் இல்லாத ப்ரஹ்மத்தையும் அனுபவிக்கிறான். இப்படியாகவே ச்ருதி கூறுகிறது.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – மாற்றங்கள் இல்லாத பரிபூர்ணமாக ப்ரஹ்ம அனுபவமே முத்தாத்மாவிற்கு இன்பம் அளிப்பதாக உள்ளது. இதனை ச்ருதியானது , தை. (2-7) - ரஸோ வை ஸ: ரஸம் ஹி ஏவ அயம் லப்த்வா ஆநந்தீ பவதி – பரமாத்மா ரஸமாகவே உள்ளான். அப்படிப்பட்ட அவனை அடைந்த ஜீவனும் ஆனந்தம் அடைகிறான் – என்று கூறியது.

**4-4-20 தர்சயத: ச ஏவம் ப்ரத்யக்ஷாநுமாநே**

**பொருள்** - ஜகத்வ்யாபரம் என்பது பரமபுருஷனுக்கே உரியவை என்று ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் கூறுவதைக் காணலாம்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம் –** இந்தக் கருத்தானது (அதாவது ஜகத்வ்யாபரம் என்பது பரமபுருஷனுக்கே உரியவை என்னும் கருத்தானது) ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டுள்ளது. ச்ருதியானது தை. (2-1-1) - தஸ்மாத் வா ஏதஸ்மாத் ஆத்மந: ஆகாச: ஸம்பூத: – இந்த ஆத்மாவிடமிருந்து ஆகாசம் உண்டானது – என்றும், ப்ரு. (3-8-9) - ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே - இந்த அக்ஷரத்தின் கட்டளையால் – என்றும் உள்ள பல வாக்கியங்கள் கூறுகின்றன. ஸ்ம்ருதியானது கீதை. (10-8) - அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வே ப்ரவர்த்ததே - நானே அனைத்திற்கும் காரணம், அனைத்தும் என்னிலிருந்தே உண்டாகின்றன – என்றது.

### 4-4-21 போகமாத்ர ஸாம்ய ஸிங்காச்ச

**பொருள்** - ப்ரஹ்ம அனுபவம் என்னும் இன்பம் மூலமாகவே முக்தனுக்கு ப்ரஹ்மத்துடனான ஒற்றுமையைக் கூறுவதால், ஜகத்வ்யாபாரம் இல்லாமல் இருத்தல் என்பதே முக்தனின் ஐச்வர்யம் ஆகும்.

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – தை. (2-1) - ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹப்ரஹ்மணா விபச்சிதா - அனைத்தும் அறிந்த ப்ரஹ்மத்துடன் முக்தன் கூடியிருந்து, அனைத்து விருப்பங்களையும் அனுபவிக்கிறான் – என்பதன் மூலம், "ப்ரஹ்ம அனுபவத்தை மட்டுமே அடைகிறான் (ஜகத்வ்யாபாரங்கள் இல்லை)" என்று கூறப்பட்டது.

### 4-4-22 அநாவ்ருத்தி: சப்தாத் அநாவ்ருத்தி: சப்தாத்

**வேதாந்தஸாரம் ஸித்தாந்தம்** – சாந். (8-12-1) –ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகம் அபி ஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே – வர்ணாச்ரம தர்மங்களைத் தனது ஆயுள் உள்ளவரை இயற்றி வந்து, அதன் பின்னர் ப்ரஹ்மலோகம் அடைகிறான்; அங்கிருந்து மீண்டும் திரும்புவதில்லை – என்று கூறியுள்ளதால், முக்தாத்மா தனது அனைத்து மறைவுகளும் நீங்கப்பெற்று, "பாபங்கள் நீங்கிய தன்மை" முதலான தனது இயல்பான குணங்கள் அடையப்பெற்று, எல்லையற்ற ஆனந்தம் கொண்ட பரப்ரஹ்மத்தை அனுபவித்தபடி உள்ளான் என்றாகிறது. அவன் மீண்டும் இங்கு திரும்புவதில்லை. இது நிச்சயமாகும். ஆக இந்த சாஸ்த்ரம் அனைத்துவிதங்களிலும் பொருத்தமாகவும், தோஷங்கள் இன்றியும் உள்ளதாகும்.

வேதாந்த ஸாரம் ஸம்பூர்ணம்

திருவரங்கத் திவ்யதம்பதிகள் திருவடிகளே தஞ்சம்

தஞ்சம் அடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே தஞ்சம்